## பிரவீணாவின்

# என் உயிரே! என் உறவே!!

### பாகம் - 2



# என் உயிரே! என் உறவே!!

## ( பாகம் - 2 )

## 38

**வி**னோத்திற்குச் சிகிச்சை அளிக்கப் பட்டிருந்தது.

கொஞ்சம் தெளிவாகத்தான் இருந்தான். கீர்த்திகா உடன் இருந்தபடியால் தான் இருந்த நிலையை உணர்ந்து அவஸ்தையாகப் புன்னகைத்தான்.

"சாரி... என்னால உங்களுக்குக் கஷ்டம்..." என்று மன்னிப்புக் கேட்டான் வினோத்.

"பரவாயில்ல. நான் பார்த்ததால உங்களை... இங்க வந்து சேர்த்துட்டேன். நீங்க வேற குடிச்சிருந்தீங்க. யாரும் பக்கத்துல கூட வரலை... ஏன் வினோத்... என்ன ஆச்சு? இப்போ நீங்க இருக்கிற நிலைமைக்கு நான்தானே காரணம்... நான் காலையில் மதுவைப் பத்தி வாய் தவறிச்

சொல்லியதுதானே இத்தனை பிரச்சனைக்கும் காரணம்..." என்று மனம் வருந்திச் சொல்ல...

"ஹ்ம்ம்..." என்று ஆயாசத்துடன் தலையசைத்தவன்... கண்களை மூடிப் பின்னால் சாய்ந்தான். இன்னும் கீர்த்தியின் வாழ்க்கையில் நடந்த விசயங்கள் அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. கீர்த்திகாவுக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை. அவன் கண்கள் மூடியிருந்தாலும்... கண்ணிமையின் அசைவு... அவன் மனம் நோகும் வண்ணம் ஏதோ நடந்திருக்கிறது அங்கு என்பது மட்டும் புரிந்தது.

சிறிது நேரம் அப்படியே இருந்தவன்... மெதுவாய்க் கண்களைத் திறந்து... கீர்த்திகாவைச் சில வினாடிகள் பார்த்தவன்... அவளிடம் தன் விசாரணையை - கேள்விக் கணைகளை ஆரம்பித்தான்.

"யாரு கீர்த்திகா... அந்த மது? அவ என்ன பெரிய இவளா என்ன... அவளுக்காக... கீர்த்தனாவோட வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்கிட்டான் இந்தப் பாலா... அவ காணாமப் போயிட்டாளா.. இல்ல, பாலாவை விட்டுட்டு வேற ஒருத்தன் பின்னால போயிட்டாளா...?" என்று... மது அவளின் உயிருக்கு உயிரான தோழி என்பதை மறந்து வார்த்தைகளில் வெறுப்பை உமிழ....

கீர்த்திகா சூடானாள். ஆனாலும் இந்த ஐந்து வருட அனுபவம் அவளுக்குக் கை கொடுக்க.. பொறுமையுடனும்... அழுத்தத்துடனும்...

"வினோத்... ப்ளீஸ். மதுவப் பத்தித் தப்பாப் பேசாதீங்க. இதுவே வேற யாராக இருந்தாலும் என்னுடைய பதில் வேறு மாதிரி இருக்கும்..." என உள்ளம் கொதித்தாலும்... இழுத்து வைத்த பொறுமையுடன் பேசினாள்.

அதெல்லாம் அவனுக்கு எட்டவில்லை. வினோத் எகிறினான். அவனுக்கிருந்த கோபத்தில் கீர்த்திகா பலிகடா ஆனாள்.



"சொன்னா என்ன பண்ணுவ? எல்லாரும் சேர்ந்து எங்க வீட்டுப் பொண்ணை உயிரோட கொன்னுட்டு... இதுக்கெல்லாம் காரணமாக இருந்த மதுவ பத்திக் கேட்டா... கோபம் வருதா உங்களுக்கு எல்லாம்... விட மாட்டேன் நான். கீர்த்திக்குக் கேட்க ஆள் இல்லைனு அவன் நெனச்சுட்டு இருக்கானா...?" என்று ஆவேசமாகக் கத்த...

கீர்த்திகாவிற்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் அவளும் வேகமாக....

"என்ன... என்ன பண்ணினோம்... மது என்ன பண்ணினா? அவளை எதுக்கு இழுத்துப் பேசறீங்க? அவ என்ன ஆனாள்னு தெரியாம... நாங்களே தவிச்சுட்டு இருக்கோம். ஏன் வினோத் இப்படி எல்லாம் பேசறீங்க?" - தளுதளுத்தாள் கீர்த்திகா.

"அவ என்ன ஆனாள்னு தெரியலேன்னா... அவ அத்தனை முக்கியம்னா.. அவ கிடைக்கிற வரைக்கும் தேட வேண்டியதுதானே... அதை விட்டுட்டுக் கஷ்டம்னு அவன்கிட்ட வந்த பொண்ணை... தன்னோட சுயநலத்துக்குப் பகடைக் காயா மாத்திட்டான். ச்சே! அவன்லாம் ஒரு மனுசன்..." என்று இளக்காரமும்... அனலும் மாறி மாறி விழுந்தன அவன் வார்த்தைகளில்.

கீர்த்திகா என்னவென்று புரியாமல் விழிக்க...

"என்ன... உனக்கும் தெரியாதா? அவங்க பண்ணி வச்சிருக்கிற திருவிளையாடல் எல்லாம்... இப்போ தெரிஞ்சுக்கோ..." என்று பாலா - கீர்த்தியின் திருமண வாழ்க்கையில் நடந்த கதைகளை எல்லாம் அம்பலமாக்க....

கீர்த்திகாவால் நம்ப முடியவில்லை. பாலாவா இப்படிச் செய்தது... காரணம் மதுவின் மேல் அவன் கொண்ட காதலா...!

"சத்தியமா வினோத்... பாலா இப்படிப் பண்ணுவார்னு என்னால் நினைக்கக் கூட முடியலை. ஆனா... அவர் மதுவ

மறந்துட்டு கீர்த்தியோட புது வாழ்க்கையைத் தொடங்கி யிருக்கார்னு நினைச்சேனே... இது தெரிந்தால் மது கூடப் பாலாவை மன்னிக்க மாட்டா... ஏன் இப்படிப் பாலா பண்ணினார்?" என்று உண்மையான கவலையோடு பேச...

வினோத் கீர்த்திகாவிடம்... "கீர்த்திக்கு இப்படி ஒரு நிலைமையா... பணத்தால கஷ்டப்பட்டிருக்கா. பாலவோட நாடகமா ஒரு கல்யாணம்... எங்க அத்தை - மாமா இறப்பு. இப்போ... தன் மனசோட போராடிட்டு இருக்கா. கிட்டத்தட்ட எட்டு மாதத்தில்... அவளுக்கு இத்தனை சோதனையா... வாழ்க்கையோட கரடு முரடுகள் எதுவும் தெரியால் வளர்ந்த அவள் எப்படித் தாங்கினாளோ?" என்று கண் கலங்கிய வனுக்கு,

"ப்ளீஸ் வினோத்... பாலாதான் தப்பை உணர்ந் துட்டாரே.... கீர்த்தியும் புரிஞ்சுக்குவா. மதுவப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க. அவ கீர்த்தி லைஃப்ல கண்டிப்பா பிரச் சனை பண்ண மாட்டா..." என்று விவாதம் நடந்து கொண் டிருந்தபோதே...

கீர்த்தியும்... பாலாவும் உள்ளே நுழைய...

வினோத்துக்கு என்ன ஆனதோ என்று படபடத்த... பரிதவித்த நெஞ்சத்துடன் நுழைந்த கீர்த்தனா... வினோத்தைப் பார்த்த பிறகே சமாதானமானாள்.

கீர்த்தனாவைப் பார்த்த வினோத் எதுவும் பேசவில்லை. பாலாவையோ பார்க்கவே பிடிக்கவில்லை அவனுக்கு.

கீர்த்திகாவைப் பார்த்து மட்டும் முறைத்தான். இவர்களை இங்கு ஏன் வரச் சொன்னாய் என்பதைப் போல...

கீர்த்திகா பாலாவைப் பார்த்த பார்வையிலேயே... தங்கள் விசயம் அவளிடமும் கடை விரிக்கப்பட்டிருந்தது புரிந்தது அவனுக்கு. அதனோடு அவள் நெற்றியில் புதிதாய் இருந்த பொட்டும் அவன் பார்வையில் சிக்காமல் இல்லை.



அங்கு இருந்த சூழ்நிலையில் யார் முதலில் பேசுவது என்றே தெரியவில்லை.

அந்த நேரத்தில் மருத்துவர் வர... அவர் வினோத்தைப் பார்த்து விட்டு... நாளைக் காலையில் கூட்டிப் போகலாம் என்று சொல்லி விட்டுப் போக... அங்கிருந்த செவிலி... அவனுக்குக் கொடுக்க வேண்டிய மருந்து விபரங்களை... கீர்த்திகாவிற்குச் சொல்லி விட்டுச் சென்றாள்.

அதில் அப்போதே கொடுக்க வேண்டிய மாத்திரை ஒன்று இருக்க... கீர்த்திகா... அதை அவனிடம் கொடுக்கப் போனாள்.

சட்டென்று கீர்த்தனா... வினோத்திடம் தானே கொடுக்க நினைத்துக் கீர்த்திகாவிடமிருந்த மாத்திரையை வாங்கக் கை நீட்ட...

"கீர்த்திகா... அவகிட்ட குடுக்காதீங்க. நீங்களே குடுங்க..." - வினோத் கோபத்துடன் சொல்ல...

கீர்த்தி... மெதுவாய் அவனருகே அமர்ந்தாள்.

"ஏன்டா... நீயும் என்னைக் கொல்ற! எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. நான்தான் எல்லாருக்கும் இப்போ பிரச்சனையா இருக்கேன். உனக்கு... அருந்ததி அத்தைக்கு... மதுவுக்கு... அப்புறம்... பாலாவுக்கு..."

பாலா என்ற வார்த்தையில் அவள் தடுமாறினாள்தான்.

பாலா தலையிலடித்துக் கொள்ளாத குறைதான். இவ எப்போ இந்தப் பல்லவியை நிறுத்தப் போகிறாளோ?

"நான் என்னைப் பெத்தவங்க போய்ச் சேர்ந்தபோதே போயிருக்க வேண்டும். ஆனா எப்படிப் போறதுன்னு தெரியலடா. தற்கொலை செய்யுற அளவுக்குத் தைரியம் இல்லடா எனக்கு... இல்லேன்னா..." - அவள் அழுது விட்டாள். அழுகையை அடக்க உதட்டைக் கடித்துக் கட்டுக்குள் கொண்டு வந்தவள்,

"நான் அன்னைக்கே போய் இருந்திருப்பேன். நான் இத்தனை பேர் வாழ்க்கையில பிரச்சனையா இருப்பேன்னு நினைக்கலை. நான்தான் எல்லாருக்கும் இப்போ பாரமா ஆகிட்டேன்."

ஏற்கெனவே - பாலாவிடம் தன் காதலைச் சொல்லி அவன் வேறு வழியில்லாமல் தன்னோடு வாழ ஆரம்பித்து விட்டானோ என்ற நினைவில் இருந்தவள்... வினோத்தைச் சமாதானப்படுத்த வேண்டுமென்று... என்னென்னவோ பேசிப் பாலாவை வேறு காயப்படுத்திக் கொண்டிருந்தாள்.

வினோத்திற்கு அதற்கு மேல் தாங்க முடியவில்லை.

"கீர்த்திடா... எங்களுக்கு நீ பாரமா... நீ வரம்டா. ஏன்டா இப்படில்லாம் பேசுற... நீ ஒரு வரம்னு தெரியாம உன்னைக் கால்ல போட்டு... மிதிக்கிறவங்க கூடலாம் இருக்க வேண்டாம். அதைப் புரிஞ்சுக்கோ..." என்று பாலாவைப் பார்த்துக் கொண்டே சொல்ல...

பாலாவின் கோபம் வேறு ஏறிக் கொண்டே இருந்தது. எப்போது எரிமலை வெடிக்கும் என்று தெரியவில்லை.

இருந்தாலும்... "வினோத், எங்களை விடு. வேற பேச்சு பேசலாம்..." என்று பாலா பேச்சை மாற்ற...

அவனோ... அவர்களையும் விடவில்லை. அதோடு மதுவையும் விடாமல் பிடித்துக் கொண்டிருந்தான்.

"ஏன் பாலா... உன் மதுவுக்காகத்தானே போராடிட்டு இருக்க நீ... கீர்த்தியை விட்டுடு. நான் கையெடுத்துக் கேட்கிறேன்... எங்க வீட்டுப் பொண்ணை எங்க கிட்ட குடுத்துரு. எங்களை விட்டுடு. நானும் எதுவும் பிரச்சனை பண்ணல. கீர்த்தியும் உன் பிரச்சனைக்கு வர மாட்டா. ப்ளீஸ்..." எனக் கெஞ்ச ஆரம்பிக்க...

பாலா நெற்றிக் கண் இருந்திருந்தால் அவனை எரித்திருப்பான்.



கீர்த்திக்கோ, "நான் பிரச்சனை பண்ண மாட்டேனு இவன் கிட்ட வந்து சொன்னேனா.. என்னையும் வேற கூட்டுச் சேர்த்துப் பேசறானே..." என்று தோன்றியது.

"என்ன வினோத்... தெரிஞ்சு பேசறியா.. இல்ல... தண்ணியடிச்ச மப்புல பேசறியா... என்ன வேணும்னாலும் பேசிக்க. எனக்கு அதைப் பத்தி எல்லாம் கவலை எல்லாம் இல்லை. ஆனா... என்னிடமே என் பொண்டாட்டியை உன்கிட்ட குடுத்துருனு கூசாமப் பேசுற. இதைப் பேச அசிங்கமா இல்ல உனக்கு... எவ்வளவு தைரியம் உனக்கு..." என்று கணவனாகக் கோபத்தில் கண் சிவந்து கத்த...

இதைச் சொல்லும்போதே பாலாவின் மனம்... தான் ஒரு நேரத்தில் இப்படிக் கூட எண்ணியிருந்தோம் என்பது நினைவுக்கு வேறு வந்து தொலைக்க... எவ்வளவு கீழ்த்தரமா எண்ணி இருந்திருக்கேன். இன்னைக்கு அவன் பேசிக் கேட்கும்போது எத்தனை கேவலமாக இருக்கிறது இந்த வார்த்தை... என்று நினைத்தான். அது வேறு அவனை ஒருபுறம் இம்சிக்க... அவன் கட்டுப்பாடுகள் எல்லாம் ஒருபுறம் கரைந்து கொண்டிருந்தன.

பெண்கள் இருவரும் என்ன சொல்வதென்று புரியாமல் விழிக்க...

"என்னடா அசிங்கமா இருக்கு... எப்ப வந்துச்சு இந்தக் காதல் உனக்கு அவ மேல... யாரும் அவளுக்கு இல்லேனு பரிதாபப்பட்டு வாழ்க்கைப் பிச்சை போடுறியா... நீயே வச்சுக்க அதை. காணாமல் போன உன் காதலிக்காக... உன் ஆயுள் முழுக்கக் காத்திரு. எங்களை விடு..." என்று நக்கலாகச் சொல்ல....

இந்த ஐந்து வருட அனுபவத்தில்... உச்ச கட்டக் கோபத்திலும் வார்த்தைகள் நிதானமாக வந்தன பாலாவுக்கு.

"வினோத்.... நான் மதுவுக்காக இந்த ஜென்மம் இல்ல... எத்தனை ஜென்மம் வேண்டுமானாலும் காத்திருக்கத்

தயாராகத்தான் இருந்தேன். ஆனா அதை எல்லாம் மீறி இவ... இதோ இங்க நிக்கிறாளே... அவ என் மனசுல வந்துட்டா... அதை அவளும் புரிஞ்சுக்க மாட்டேங்குறா... நீயும் நான் பண்ணினதிலேயே நிக்கிற. இப்போ நான் எந்த நிலைமையில இருக்கேனு புரிஞ்சுக்காம... எல்லாரும் சேர்ந்து என்னைக் கொல்லாதீங்க. எனக்கே தெரியலை. மதுவோட காதலை நான் எப்படி மறந்தேனு.. இல்லை.. அவளோட நினைவுகளைக் கீர்த்தியின் மேல் வந்த என் காதல் எப்படிப் பின்னுக்குத் தள்ளியது என்று... ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம். இனி... என் மரணம் மட்டும்தான். இவளை விட்டு என்னிடமிருந்து பிரிக்கும்..." என அவன் கூறும்போதே...

"என்ன ஒரேயடியா மது மதுனு உருகற... அவ காதலை இவளுக்காக மறந்தேனு வேற பெரிய பில்டப் கொடுக்கிற... அப்படி லவ் பண்ணவ எங்கே சொல்லாமப் போனா... காதலாம் காதல்... இப்போ எங்கே எவன் கூட..." என்று அவன் மேலே சொல்லும் முன்...

வெறி பிடித்தவன் போல் பாய்ந்தான் பாலா. காலையிலிருந்து கீர்த்தனாவுக்காக மட்டுமே இத்தனை நேரம் பொறுமையாக இருந்தான். அதற்காக... மதுவைக் கேவலமாக அவன் பேசுவதை அவனால் பொறுக்க முடியவில்லை. ஆவேசமாக மாறியவனின் கை ஒரே தாவலில் வினோத்தின் சட்டையைப் பிடித்தது.

கீர்த்திக்கு... இதுவரை அவள் பார்த்த பாலாவின் கோபம் எல்லாம்... இந்த ஆவேசத்திற்கு முன் அதெல்லாம் சாதாரணமே என்று தோன்றியது.

அவனை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தாள் கீர்த்தி.

மதுவைப் பற்றி வினோத் கூறியபோது, பாலாவின் கண்களின் ஆவேசத்தைப் பார்த்தபடி செயலற்று நிற்க...



பாலா கோபத்தில் விரைக்க... அவன் கோபத்தைப் பார்த்த கீர்த்திகா... எதுவும் ரசாபாசம் நடந்து விடாமல்... இடையே புகுந்தாள் ஆவேசமாக.

"என்ன வினோத்... பாலா பண்ணினது தப்புதான். அதுக்காக எதுக்கு மதுவ தப்பாப் பேசறீங்க... அவ பாலாவை எந்த அளவு விரும்பினாள் என்று தெரியுமா? எதுவுமே தெரியாமல் இஷ்டத்திற்குப் பேசாதீங்க..." என்று பேச,

வினோத்தோ... அதில் எல்லாம் கொஞ்சம் கூட இளகாமல்...

"ஓ... அப்படி என்ன காதல்... இவர் மேல...! ஒரு அப்பாவிப் பொண்ணோட வாழ்க்கையை அழிக்கிற அளவுக்கு வந்த காதல்... கொஞ்சம் சொல்லுங்க. நாங்களும் கேட்கிறோம். பெருசா பேச வந்துட்டான் இவன்... நீயும் வக்காலத்து வாங்க வந்துட்ட... நல்லவளா இருந்திருந்தா இவனைத் தேடி இந்நேரம் வந்திருக்க மாட்டா.. இவன் ஆளும் நல்லாத்தான் இருக்கான். பணமும் இருக்கு. வேற என்ன இவன்கிட்ட இல்லைனு..." என இன்னும் மட்டமாகப் பேச ஆரம்பிக்க...

கீர்த்திகா... தன் தோழி மதுவைப் பற்றி அவன் சொல்வதை எல்லாம் தாங்க முடியாமல்... அவனிடம் அவளைப் பற்றிச் சொல்ல ஆரம்பிக்க... தன் மனைவி தன் கடந்த காலத்தை... அதுவும் மதுவின் காதலை அறிந்தால் கண்டிப்பாகத் தாங்க முடியாமல் தவித்துப் போவாள் என்று தெரிந்திருந்தும்...வேறு வழியின்றி... கீர்த்திகாவை நிறுத்தச் சொல்ல முடியாமல் பாலாவும் அதில் மூழ்க... கீர்த்தனாவும்... வினோத்தும் அவர்கள் இருவரின் வாய் வார்த்தை மூலம் பாலா - கீர்த்திகாவின் கடந்த காலத்திற்குள் இழுத்துச் செல்லப்பட்டனர்.

அந்தப் பொறியியல் கல்லூரியின் ஆடிட்டோரியத்தில் கீர்த்திகா தனது நடன ஒத்திகையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வரும் இன்டர்-காலேஜ் காம்பெடிஷனுக்காக...

"ஏய்ய்ய்.... யாரு இங்க கீர்த்தி?" என்று அரங்கம் அதிர்ந்த பாலாவின் அதட்டலில்... அனைவரும் ஒத்திகையை நிறுத்திச் சத்தம் வந்த பக்கம் திரும்பினர்.

நடுவில் நின்றிருந்த கீர்த்தி மட்டும் சற்று நடுக்கத்துடன் அவனைப் பார்த்தாள். அதே நேரத்தில் பக்கத்தில் நின்ற ஆதியைப் பார்த்தவள்... நிம்மதி வந்து... சற்றுத் தெளிந்து... தைரியம் வந்தவளாய் முறைத்தபடி நின்றிருந்த பாலாவைப் பார்க்க...

அவள் பார்வையை... அதில் தெரிந்த அச்சத்தைத் தாங்க முடியாதவனாய் ஆதி, பாலாவிடம்,

"டேய் பாலா... எதுக்குடா இப்ப இப்படிக் கத்தி ஊரைக் கூட்டுற! ஜஸ்ட் ஒரு வார்ன் மட்டும் பண்ணிட்டுப் போயிடலாம்..." எனப் பாலாவைச் சமாதானமாக்கப் பேசப் போக... இன்னும் பாலா குதித்தான்.

"என்னடா... பொண்ணைப் பார்த்த வுடனே பம்முற... ஒரு வாரமா... நாம ரிகர்சல் பண்ற டைம்லயே வந்து ரிகர்சல் பண்ணிட்டு... இப்போ என்னமோ ஒண்ணும் தெரியாத பச்சப் பாப்பா மாதிரி முழிக்கிறா. வார்ன் பண்ணணுமா இவளுக்கு... சரி, சின்னப் பொண்ணுதானேனு ரெண்டு நாள் பொறுத்துப் போனா... ஒரு வாரம் முழுவதும் அவளே இந்த டைம் எடுத்துக்கிட்டா. நம்மகிட்ட ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. சரி, நாம பேசக் கூடாதுன்னு... ஹெச்.ஓ.டி.கிட்ட கம்ப்ளெயிண்ட் பண்ணினால்... அவரு அதுக்கு மேல... நீ அட்ஜஸ்ட் பண்ணிக்கோ. கீர்த்தி திறமையான பொண்ணு. அவ ரொம்ப அமைதியான பொண்ணுனு ஒரு பல்லவி பாடினதோட இல்லாம... இவ கண்டிப்பா கப்பு வாங்கிக் கொடுப்பானு பில்டப்போட சப்போர்ட் வேற. அப்போ நாமல்லாம்... இத்தனை நாள் வாங்கிக் கொடுத்தது என்ன... இப்போ நீயும் வார்ன் பண்ணச் சொல்றியா... கடுப்படிக்காதே!" என்று பொருமித் தீர்த்தவன் நடுவில் முழித்தபடி நின்ற கீர்த்தியைப் பார்த்து...



"நீதான் கீர்த்தியா?" என்று கோபம் குறையாத அலட்சியத்துடன் கேட்க,

"ஆமாம்!" என்று தலையை மட்டும் ஆட்டினாள். அவளைச் சற்று ஏகத்தாளமாகப் பார்த்தவன்...

"ஆள் பார்க்க நல்லா இருக்கேல்ல... அதுதான் இவ்வளவு சப்போர்ட்டா!" என்று இகழ்ச்சியாகக் கூறிக் கீர்த்திகாவை இன்னும் டென்சன் ஏற்ற...

கீர்த்தியின் விழிகள்... முத்துக்களைக் கோக்க ஆரம்பித்திருந்தன.

இவன் விட்டால் கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல்... வார்த்தைகளை விட்டு விடுவான் என்பதைத் தெரிந்திருந்த ஆதி, கீர்த்தியிடம் திரும்பி, அவளை அப்போதைக்கு அங்கிருந்து போகுமாறு சைகை செய்ய...

அவளோ கோபப்பட்டுக் கத்திக் கொண்டிருந்த பாலாவை விட்டு விட்டு... ஆதியை முறைத்தபடி கடந்து போக...

இதைக் கவனிக்காமல் இருப்பானா பாலா...

ஆதி இவளுக்குச் சப்போர்ட்டாதானே பேசினான்... பிறகு ஏன் அவனைப் பார்த்து முறைக்கிறாள் என்று தோன்றியது.

ஆதியை முறைத்தபடி போன அவளை... முன்னால் கை மறித்துத் தடுத்த பாலா...

"அவன் கிட்ட என்ன முறைப்பு... மொறைக்கிறதுக்கு அப்புறம் கண் இருக்காது. ஃபர்ஸ்ட் இயர் படிச்சுட்டு... எங்களையே மொறைக்கிற. தைரியம்தான் உனக்கு! இன்னும் ஒரு வாரத்திற்கு... நாங்கதான் இங்க பிராக்டீஸ் பண்ணுவோம். இந்தப் பக்கம் எட்டிக்கிட்டிப் பார்த்துடாதே. ஏன்னா... உனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தையும் நாங்க எடுத்துக்கப் போறோம். இவன் என்ன சொல்றது... நான் என்ன கேட்கிறதுன்னு... என் பேச்சை மீறி வந்த... என்ன

செய்வேனு எனக்கே தெரியாது. என்ன, புரிஞ்சுதா?" என்ற அதட்டலில்... வந்த கண்ணீரைக் கூட அடக்கியவள்... வேக வேகமாக வெளியேற எத்தனிக்க...

மீண்டும் நிறுத்தினான் பாலா. "என்ன... பதில் சொல்லாமப் போற... தொண்டைத் தண்ணி வறளக் கத்திட்டு நிக்கிற என்னைப் பார்த்தா கேணப்பய மாதிரித் தெரியுதா?" என்று உறும...

தலையை வேகமாக அசைத்தவளுக்கு அவமானமும்... அழுகையும் ஒருசேர வர... அந்த இடத்தைக் காலி செய்தாள்.

அவளை அதட்டி வெளியேற்றியவன்... சாவதானமாக ஆதியை இழுத்தபடி... மேடையை நோக்கிப் போக...

ஆதிக்கோ... மனம் தவித்துக் கொண்டிருந்தது. கீர்த்தியின் கோபப் பார்வையில்... அவள் கண்ணீர் வேறு அவனை அரித்துக் கொண்டிருக்க....

"ஏதோ பார்க்க மட்டும்தான் செஞ்சுட்டு இருந்தேன். புண்ணியவான் அதுக்கும் வேட்டு வச்சுட்டான்..." என்று பாலாவைத் திட்டியபடி அவன் பின் சென்றான்.

"வாடா மச்சி... நாமதான் இனி முழுக்க முழுக்க... இங்க..." என்று அவர்கள் குழு அவர்களின் ஸ்கிட்டில் மூழ்கினர்.

அதன் பிறகு அவனுக்குக் கீர்த்தியின் மேல் அத்தனை கோபம் இல்லை எனலாம்.

ஆனால்... பயிற்சி முடித்து வெளியேறிய பாலாவைக் கீர்த்தியின் வகுப்புத் தோழன் பிரதாப்... மறித்துத் தடுத்து நிறுத்த... என்னவென்று புரியாமல் பாலா விழிக்க...

அவனோ... பாலாவை மிரட்டினான். கீர்த்தியை அவன் திட்டியது தவறு என்றும், இதோடு நிறுத்திக்கச் சொல்லியும் எச்சரிக்கை செய்பவன் போல் பேச....



தன்னை விடச் சின்னவன்... அதிலும் முதலாம் ஆண்டு படிக்கும் மாணவன்... அவன் முன் எதிர்த்துப் பேச... அவன் மீது கோபம் வர... அவனெல்லாம் ஒரு ஆளா... என்று பிரதாப்பை அலட்சியப்படுத்தி வந்து விட்டான் பாலா. ஆனால் கீர்த்தியின் மேல் சற்று எரிச்சல் கூடியது போல்தான் இருந்தது.

சற்று நேரத்தில்... ஆடிட்டோரியப் பொறுப்பை ஏற்றிருந்த புரொஃபசரும் அழைத்துக் கீர்த்தியை மிரட்டியது பற்றி விசாரணை செய்ய... பாலாவின் கோபம் கீர்த்தியின் மேல் ஏற ஆரம்பித்தது.

இது எதுவும் அறியாமல் ஆதியும், 'கீர்த்திகாவைப் பாலா திட்டி விட்டானே...' என்று பாலாவின் மேல் கோபமாக இருக்க...

கடுப்பாய்க் கோபத்தில் அருகில் அமர்ந்திருந்த பாலாவை எதுவும் கண்டுகொள்ளவில்லை.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பாலா, "இங்க ஒருத்தன் இப்படி இருக்கானே... என்ன ஆச்சு, ஏது நடந்தது எனக் கேட்கக் கூட தோணலையா உனக்கு... நீ எல்லாம் ஒரு நண்பன்..." என்று அவனுக்கு இருந்த கோபத்தில் ஆதியைக் கடித்துக் குதற...

ஆதியும் பதிலுக்குக் குதற ஆரம்பித்தான். "ஆமாம்டா... பண்ணியது எல்லாம் நீ. நீ ஏன்டா மச்சி... உனக்கு ஏன்டா கோபம் வேற வரணும்? எனக்குத்தானே நீ ஆப்ப வச்சுட்டு வந்திருக்க..." என்று அவனும் எகிற...

இப்போது பாலா புரியாமல் விழிக்க... சுதாரித்து... "நாம என்ன பண்ணினோம் இவனுக்கு..." என்று அனல் பார்வையை வீச...

"என்னடா.... என்ன பண்ணினோம்னு புரியலையா... இன்னைக்கு நீ திட்டி வெளியே அனுப்புனேல்ல... கீர்த்தி...

அவளை நான் லவ் பண்றேன். அவ எங்க ஏரியாதான். ஆறு மாதமா அவளைக் காதலிக்கிறேன். முடிவு செஞ்சுட்டேன். அவதான் என் காதலி... என் மனைவினு. இன்னும் கொஞ்ச நாளில் சொல்லலாம்னு முடிவு பண்ணி வச்சுருந்தேன். நீ இப்படிப் பேசிக் காரியத்தையே சொதப்பி வச்சுட்ட. அவ வேற மொறச்சுப் பார்த்துட்டுப் போயிட்டா. எல்லாத்துக்கும் சங்கு. இனி என்ன ஆகுமோ?" என்று ஆதி காதல் வேதனையில் பிதற்ற...

பாலா தன் நண்பனைப் பார்த்து, "நீ லவ் பண்றியா...?" என்று நம்பாமல் விழி விரிக்க...

தலையை ஆட்டினான் ஆதி.

"அது எப்படிடா... காதல்னு வந்துட்டா... ஃப்ரெண்ட்ஷிப்ப உடனே கழட்டி விட்டுறீங்க?" என்று எரிச்சலும் கோபமும் சரி விகிதத்தில் பேச...

"சாரிடா... மச்சி! ஆப்போசிட் ரியாக்ஷன் என்னன்னு தெரியாம... உன்கிட்ட சொல்லத் தோணலை..." என்று அவனைச் சமாதானப்படுத்தும் விதமாகக் கெஞ்ச...

"ஒருத்தன் லவ் பண்ண ஆரம்பிச்சா... முதன் முதலில் சொல்வது அவன் நண்பனிடம்தான். அதுக்குக் கூடக் கொடுப்பினை இல்லையா பாலா உனக்கு..." என்று அலுத்து நண்பனை உரிமையாய் முறைத்தான்.

"அதுதான்... சாரி சொல்றேன்ல. விடுடா... இனிமே கீர்த்தியைத் திட்ட மாட்டேல்ல..." என்று கெஞ்சல் பார்வை பார்த்தான். அவனின் பார்வையைப் புரிந்த பாலா... "சரி சரி... உன் ஆளை ஒண்ணும் சொல்லவில்லை. அவளோட டைம்ல அவளே வந்து ப்ராக்டீஸ் பண்ணட்டும். போதுமா... பார்த்துடா. ரொம்ப உருகாதே. இந்தப் பொண்ணுங்க எல்லாம் நம்மள உருக வச்சுட்டு அவளுங்க ஸ்ட்ராங்கா ஆகிடுவாளுங்க..." என்று எச்சரிக்கையும் செய்தான்.



"அதை நான் பார்த்துக்கறேன்... தேங்க்ஸ்டா பாலா... அவளைத் திட்ட மாட்டேனு சொன்னதுக்கு... எனக்காகத் தானேடா..." என்று பாலாவைக் கட்டிப் பிடிக்க....

"டேய்... நான் பாலாடா. உன் ஃப்ரெண்டுடா. வேற யாரும் இல்லை..." என்று கல்லூரி மாணவனுக்கே உரிய நக்கல் பாணியில் கண்ணடித்தபடி கலாய்க்க.... அருகில் இருந்த சக தோழர்களும்... அவனின் சத்தத்தில் திரும்பி... என்னவென்று கேட்க... ஆதியின் காதல் பாலாவின் மூலம் அம்பலமாக... ஒரே கேலியும் கிண்டலும்... ஆதியைச் சுற்றி வளைக்க ஆரம்பித்தது.

ஒருவன், "டேய், இனிமே நம்ம ஆதிக்கு... இனி கீர்த்தி தாசன்னு பேரு வச்சுடலாம்..." என்று கூற,

இன்னொருவனோ, "டேய்... அந்தப் பொண்ணையாடா ரூட் விட்டுட்டு இருக்க. ஆள் சூப்பரா இருப்பாளே... உனக்கு ஓ.கே. சொல்வாளானு டவுட்டா இருக்கே!" என்று அவனை வெறுப்பேற்ற...

"டேய் ஆதி - கீர்த்தி... பேர் பொருத்தமே அமோகமா இருக்குடா. அப்படியே எனக்குக் கவிதை வருதுடா!" என்று கூற...

பாலா... "வினித்... நீ சொல்லுடா. உன் கவிதை மழையில நாங்க நனையுறோம்..." என்று சப்போர்ட் செய்ய... மற்றவர்களும் அதை ஆமோதிக்க...

வினித் என்பவன் சொல்ல ஆரம்பித்தான்.

"கீர்த்தி... கீர்த்தி... கீர்த்தி...
இவன்தான் உன் ஆதீ....
உன்னால் அவன்...
நெஞ்சில் காதல் தீ..."

பாலா தலையிலடித்துக் கொண்டான். "உன்னைப் போய் நம்பிக் கவிதையைக் கேட்டேனே..." என்று நொந் தவன்...

"இப்போதான் தெரியுது... உனக்கு ஏன் ஆளு அடிக்கடி மாறுதுன்னு... நீ கவிதைன்னு கண்ட கருமத்தைச் சொல்லிச் சொல்லியே விரட்டிட்ட போல..." என்று கேலி கிண்டல்... வினித் புறம் திரும்ப...

ஆதி புகுந்தான் இடையில்... "டேய், இனிமேல் யாரும் இவன்கிட்ட கவிதை கேட்டீங்க... என் நிலைமைதான் உங்களுக்கும்... உஷாரா இருந்துக்கோங்க... இவன்கிட்ட..." என்று ஓட்ட...

வினித் ரோஷமாக, "போங்கடா. டேய் பாலா... ஆனாலும் உனக்கு இருக்கிற லொள்ளு இருக்கே... என்னைக் கவிதை சொல்லச் சொல்லி ஏத்தி விட்டு விட்டு... அதைக் கேட்டுட்டு இப்போ கிண்டலும் பண்றியா?" என்றான்.

பாலாவோ, "டேய், நீ கவிதைன்னு ஒண்ணு சொல்றேனு சொன்னியே... அதை எப்போடா சொல்லப் போற?" என்று அப்பாவியாய் மாறி, அவனை அசராமல் அடிக்க... அவனின் பேச்சில் பற்களை நறநறவென்று கடித்த வினித்...

"டேய்! உனக்குல்லாம்... இந்த நக்கலுக்கெல்லாம் வருவாடா ஒருத்தி... அசராம அடிப்பா பாரு..." என்று பாலாவின் புறம் திரும்ப...

"ஆஹா... நமக்கே ஆப்பு திரும்புற மாதிரி இருக்கு. ரூட்டை மாத்துடா பாலா..." என்று ஆதியின் புறம் திருப்பினான்.

"டேய்... எனக்காடா இப்போ முக்கியம்! நண்பன் இன்னைக்குத்தான் தன் காதலை நம்மகிட்ட சொல்லி யிருக்கான். அவனை விட்டுட்டு... தனியாளா இருக்கிற என்னை ஓட்டி என்ன பண்ண...?" என்று சொல்ல... மீண்டும் ஆதி - கீர்த்தியிடம் கிண்டல் வந்து நின்றது.

அப்போது ஆதியின் அறையில் இருக்கும் இன்னொரு தோழன், "டேய்... இவன் கரெக்டா 7.30க்கெல்லாம் கிளம்பும்போதே டவுட்டுடா எனக்கு. ஆதி... உனக்கு ஒரு விசயம் தெரியாது மச்சி... அவளோட ஃப்ரெண்டா ஒருத்தி இருக்கா. எவனோ ஒருத்தன் அவகிட்ட தப்பா பேசினான்னு அறைஞ்சே போட்டுட்டாளாம். நம்ம ஏரியாவுலதான் இது நடந்துச்சு. ஞாபகம் வச்சுட்டு களத்துல இறங்கு..." என்று பேச...

"தெரியும்டா... எனக்கு. அவ அறைஞ்சா... இல்ல, நானே அவனுக்கு விட்டுருப்பேன்..." என்று ஆதி கூற...

கிண்டலும் கேலியுமாய்... ஒவ்வொருவருக்கும் அங்கு ஒருவிதச் சந்தோஷமாய்ப் போக...

கீர்த்திகா மட்டும் அழுத... சிவந்த விழிகளாய் மதுவிடம் நடந்ததைச் சொல்ல... கல்லூரி முடியும்வரை காத்திருந் தாள்... மது அன்று விடுமுறை எடுத்திருந்த காரணத்தால்...!

## 39

ஆதியை ஓட்டிக் கொண்டிருந்தவர்கள்... அந்த நேரத்திற்குரிய விரிவுரையாளர் உள்ளே நுழைய... தங்கள் கிண்டல்களுக்கு... கேலிப் பேச்சுகளுக்குத் தற்காலிகமாக விடை கொடுத்த படி வகுப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தனர்.

ஆனால்... கவனித்துக் கொண்டிருந்தபோதே... பாலாவின் மூளையில்... திடீரென்று காலையில் நடந்த சம்பவம் ஓட... மின்னல் வெட்டியது மனதில்.

வேகமாகத் திரும்பி... மெதுவாய் ஆதியிடம் காதைக் கடித்தான்.

"டேய் ஆதி... அந்தப் பொண்ணுக்கும் உன் மேல ஒரு சாஃப்ட் கார்னர் இருக்கும் போல. ஏனென்றால் திட்டியது நான். என்னைப் பார்த்து முறைக்காம... உன்னை முறைத்து விட்டுப் போனாள். என்ன அர்த்தம் இதற்கு? அதிலிருந்தே தெரியவில்லை. ஒருவேளை அவளுக்கும் உன்னைப்

பிடிக்குமோ?" என்று தனக்குத் தோன்றிய மாபெரும் சந்தேகத்தை ஆதியிடம் கேட்க,

அவனோ அதற்குப் பதிலாக, "ஆமா. நீ ருத்ர தாண்டவம் ஆடிட்டு இருந்த... அவ உன்னைப் பார்த்து முறைச்சுட்டுத்தான் மறு வேலை பார்ப்பா. நான் அவளைப் பார்த்துட்டுப் பம்மி நின்னேன். அதனால உனக்குப் பதிலா என்னை முறைச்சிட்டுப் போறா... போடா நீயும் உன் சந்தேகமும்..." என்றவனிடம்,

"டேய் லூசு... அதெல்லாம் தெரியுதுடா. ஆனா உன்னைப் பார்த்து உரிமையா..." எனும்போதே,

"பாலா... அங்க என்ன பேச்சு? பாடம் கவனிக்க இஷ்டம் இல்லைனா வெளியில போகலாம்..." என்று வகுப்பு எடுத்துக் கொண்டிருந்த விரிவுரையாளர் கடுப்புடன் கூற...

அவனுக்கும் கவனிக்க இஷ்டமில்லைதான். அது அவனுக்குப் பிடிக்காத பாடம். ஆளை விட்டால் போதும் என்று சந்தோஷமாக வெளியேறியவன்...

போகும் முன்... "உன் ஆளால... எனக்கு ஒரு நல்லது நடந்துடுச்சுடா மச்சி... பை..." என்ற ஆதியை மறக்காமல் வெறுப்பேற்றி விட்டும் வெளியேறினான்.

வெளியேறியவன்... அது கடைசி வகுப்பு என்பதால்... தன் வண்டி நிறுத்தியிருந்த இடத்திற்கு அருகாமையில் ஆதிக்காகக் காத்திருக்க... கீர்த்திகாவும்... அந்த நேரத்தில் கிளம்பியிருந்தாள், வகுப்பில் இருக்கப் பிடிக்காமல்.

வண்டி எடுக்க வந்தவள்... தொலைவிலேயே பாலா அமர்ந்திருப்பதைப் பார்க்க... வேற வினையே வேண்டாம் என்று... மதுவோடு நாளை வந்தே எடுத்துக் கொள்ளலாம் என்று அவன் இருக்கும் திசைப் பக்கம் கூடத் திரும்பாமல் ஓட்டமும் நடையுமாய் வெளியேறினாள்.

பாலாவும் அவளைக் கவனித்து விட்டான். அவள் தன்னைப் பார்த்துப் பேயைப் பார்ப்பது போல் ஓட...



பாலாவிற்குச் சிரிப்பு வந்ததுதான் மிச்சம். ரொம்பத் திட்டிட்டோமோ... பாவம், புள்ள பயந்து ஓடுது... என்று எண்ணியவன்...

'ஆதி இவளை எப்படிச் சம்மதிக்க வைப்பான்... நமக்கு மட்டும் எவ மேலயும் காதல் வந்துடக் கூடாது. கஷ்டம்டா சாமி...' என்றும் வேறு நினைத்து வைத்தான்.

அடுத்த அரை மணி நேரத்தில் ஆதி வந்து சேர...

பாலா... சற்று முன் நடந்ததைக் கூறிவிட்டு... "ஏன்டா... என்னைப் பார்த்தா பேய் மாதிரி இருக்கா...?" என பைக் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தபடியே தலையைக் கோதியபடி கேட்க...

"ரொம்ப முக்கியம். வா போகலாம். காலையில நீ மிரட்டுனதுல அரளாம என்ன பண்ணுவா..." என்றவன், அடுத்துத் தன் காதல் தொடங்கிய நாள் முதலாய்... கீர்த்தியிடம் தன் மனதைப் பறி கொடுத்த விதம்... என்று தன் காதல் மற்றும் கீர்த்தி புராணம் பாட ஆரம்பித்தவன் வாய் மூடவில்லை. அதுநாள் வரை யாரிடமும் தன் மனம் திறக்காத ஆதி... கேட்கப் பாலா கிடைக்க... திறந்த வாய் மூடாமல் பேசிக் கொண்டே வந்தான்.

பாலாவும் அவன் நிலை உணர்ந்து... அவன் உணர்வுகள் ஓரளவு புரிந்து கேட்க... அவன் தங்கியிருந்த அறைக்குப் போகாமல்... பாலா வீட்டுக்குச் சென்றவன் அங்கேயே தங்கியும் விட்டான். கீர்த்தியைப் பற்றி... அவன் காதலைப் பற்றிப் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் போல் அவனுக்கு இருக்க... தோதாய்ப் பாலா மாட்டினான்.

பாலாவின் காதில் ரத்தம் வராத குறைதான்... என்று சொல்ல வேண்டும். ஆதி சந்தோஷத்தில் பாலாவைப் பேசியே கொல்ல... கீர்த்தியின் நிலையோ அதற்கு எதிர்மாறாய் இருந்தது.

அழுத முகமும்... சிவந்த விழிகளுமாய்... மது - கீர்த்தி இருவருமாய்த் தங்கியிருந்த அந்த வீட்டினுள் நுழைந்த கீர்த்தி... ஹாலில் சோபாவில் சாய்ந்தபடி வாக்மேனில் கண்மூடிப் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்த மதுவைப் பார்க்க... இன்னும் அதிகமாக அழுகை வரும் போல் இருந்தது.

"மது..." என்று கேவியபடி உள்ளே நுழைந்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த பாடலையும் தாண்டி விழுந்த கீர்த்தியின் குரலும்... அதில் இருந்த வித்தியாசமும் மதுவைக் கீர்த்தியின் புறம் திரும்ப வைத்தது.

திரும்பித் தோழியைப் பார்த்தவளுக்கு... அவளின் தோற்றம் பகீரென்று தூக்கிப் போட... வேகமாக அவளை நோக்கி வந்தாள்.

மதுவை ஓடோடி வந்து கட்டிப் பிடித்துத் தேம்ப ஆரம்பித்தாள் கீர்த்தி.

என்னவென்று புரியவில்லை மதுவுக்கு... அவளை ஆதரவாகப் பிடித்தபடி சோபாவில் அமர்த்தி...

அவளை உடனே என்ன ஏது என்று விசாரிக்காமல்... அவளைச் சில நிமிடம் அழ விட்டவள்... பின் அவளை நிமிர்த்தி, "என்ன ஆச்சு கீர்த்தி? எதுக்கு இந்த அழுகை.. உன்னை எத்தனை தடவை சொல்றது... எதுக்கெடுத்தாலும் இப்படி அழாதேனு... தைரியமா எதையும் ஃபேஸ் பண்ணணும்னு சொல்லி இருக்கேன்ல. எப்போ நான் உன் கூட இல்லாம தனியாப் போறியோ... அப்போதெல்லாம்... நீ இப்படித்தான் அழுதுட்டு வர. போன மாசம்... நான் ஊருக்குப் போயிருந்தப்போ ஒரு பிரச்சனை. இப்போ என்ன... சரி, என்னன்னு சொல்லுங்க... என் செல்லம்ல!" என்று உரிமையுடனும்... செல்லக் கோபத்துடனும் கேட்க...

"நான் வேணும்னு ஒண்ணும் அழல... எனக்கு டைமே கிடைக்கலைனு காலையிலயும்..." என்று தலையும்



இல்லாமலும்... வாலும் இல்லாமலும் அழுத முகமாய்ப் பேச ஆரம்பித்தவளை நிறுத்திய மது,

"இரு... இரு. முதல்ல போய் இந்த அழுமூஞ்சி முகத்தைக் கழுவிட்டு வா. வசந்தி ஆன்ட்டி... இப்போதான் காபி போட்டுக் கொடுத்துட்டுப் போனாங்க. நான் உனக்கு அதை எடுத்துட்டு வருகிறேன். நீங்க காபி குடிச்சுட்டுத் தெம்பா... அக்காவுக்கு என்ன நடந்துச்சுனு சொல்வீங் களாம்... சரியா?" என்று அவள் கண்ணீரைத் துடைத்து விட...

"இல்ல மது..." என்று ஆரம்பித்தவளை...

இழுத்துக் கொண்டு போய்க் குளியலறையினுள் தள்ளியவள்... அவளுக்குக் காபி எடுத்து வர கிச்சனுக்குள் நுழைந்தாள்.

ஃப்ளாஸ்கில் இருந்த காபியை ஊற்றிக் கொண்டே... 'எதுக்கு இப்படி அழுதுருக்கா. ஆதியால இருக்குமோ...' என்று நினைக்க... சேச்சே... அவன் இவளைப் பார்க்கும் போதே காதல் ஆறா ஓடுது. அவன் எப்போ லவ் சொல்லுவான்னுதான் நம்ம ஆளும் ஏங்கிட்டு இருக்கா. அவனால பிரச்சனை வர சான்ஸ் இல்ல. வேற என்னவா இருக்கும்... என்று யோசித்தபடி காபியை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

அவர்கள் இருவருக்கும் இடையே இருக்கும் நட்பு ஆறு வயதிலிருந்து தொடங்கிய நட்பு... தன்னைப் போல அல்லாமல்... சிறுவயதில் கீர்த்தி தன் தாய் தந்தை கையைப் பிடித்துக் கொண்டு பள்ளிக்கு வரும் அழகைப் பொறாமையோடு பார்ப்பாள் மது. தனக்கு அந்தக் கொடுப்பினை இல்லை என்பதால்... ஆனால், கீர்த்தியின் தாய்... கீர்த்திக்கு அடுத்த பிள்ளையின் பிரசவசத்தில் பிரச்சனை ஏற்பட்டு இறக்க... கீர்த்தியைப் பார்த்துப் பாவமாய் ஆனாள் மது. அதன் பிறகு எப்போதும் அடம் பிடித்துப்

பள்ளிக்கு வந்த கீர்த்தியிடம் மது தோழமைக் கரங்களை நீட்டி நட்பை ஆரம்பித்தாள்.

கீர்த்தியின் தாய் இறந்த சில மாதங்களிலேயே அவளின் தந்தை அவளைக் கவனிக்க முடியாமல் மறுமணம் செய்ய... கீர்த்தி மனம் நொந்தாள். தந்தையை வெறுக்க ஆரம்பித்தாள். சித்தியாய் வந்தவரும் கொடுமையெல்லாம் செய்யவில்லை என்றாலும்... அவர்களிடமிருந்து ஒதுங்க ஆரம்பித்த கீர்த்தி... மெது மெதுவாய் மதுவின் நட்பென்னும் சிறகினுள் அடங்கினாள். மதுவும் அவள் நிலை உணர்ந்து அவளை அரவணைக்க... நாட்கள் செல்லச் செல்ல மதுவின் பாசம்... அவள் கண்டிப்பு... அவள் நட்பு... என மது கீர்த்திக்கு அவளின் அன்னையாகவே மாறிப் போனாள்.

கீர்த்தியின் தந்தையும் அதைப் புரிந்தவராய்... மதுவுடனே அவளை விட்டு விட்டார். அவருக்குக் கீர்த்தியிடம் எதுவும் சொல்லி நடக்க வேண்டுமென்றால் கூட மதுவிடம்தான் வருவார். அவரின் உணர்வுகளைப் புரிந்து... மதுவும் கீர்த்திக்குப் புரிய வைத்து அதைச் செய்ய வைப்பாள். கீர்த்தியும் மதுவுக்காக மட்டுமே செய்வாள்.

பள்ளிப் பருவத்தில் ஆரம்பித்த நட்பு... கல்லூரிவரை தொடர்கிறது.

முகம் கழுவி வந்த கீர்த்தி... மது கொடுத்த காபியை ஒரே மடக்கில் குடித்தவள்... சொல்ல ஆரம்பித்தாள்.

"அந்த பாலா இல்ல..." என்று ஆரம்பித்தாள்.

பாலா ஸ்டூடண்ட் கோ-ஆர்டினேசன் தலைமைப் பொறுப்பில் இருந்ததால்... மாணவர்கள் மத்தியில் அனைவருக்கும் பிரபலம். மதுவும் பார்த்திருக்கிறாள். அது மட்டுமில்லாமல், அவன் ஆதியின் நண்பன் என்பதாலும், அடிக்கடி கண்ணில் படுவான். ஆனால், பேசியதில்லை. அவனைத் தெரியும், அவ்வளவே.



சொல்லி முடித்த கீர்த்தி... "அவன் திட்டினதெல்லாம் வருத்தம் இல்ல மது... கூட ஆதியும் இருந்தான். பாலாவை எதிர்த்தும் ஒண்ணும் பேசலை... அதுதான் எனக்கு அழுகையைக் கண்ட்ரோல் பண்ண முடியலை..." என்று கண்ணைக் கசக்க...

கீர்த்தியின் அழுகையை மட்டும் மதுவால் தாங்க முடியாது. மனது தாளவில்லை மதுவுக்கு... இருந்தாலும், "கீர்த்தி... நீ செய்ததும் தப்புதானே. அவங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் நீ ஏன் டான்ஸ் பிராக்டீஸ் பண்ணினாய்?" என்று நியாயமாகப் பேச... அது பாலாவுக்கு சப்போர்ட் செய்யும் விதமாய்ப் போக...

பெரும்பாலும்... மது நியாயம் உணர்ந்தே பேசுவாள். அந்த இயல்பில்தான் அவள் பேசினாள். உடனே கீர்த்தி முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள... மது இப்போது... பேச்சை மாற்றினாள்.

"ஆனா என் செல்லத்த திட்டலாமா... அது தப்பாச்சே. என்ன பண்ணலாம்? அந்தப் பாலாவை... அவனை விடு. உன் ஆதியை என்ன பண்ணலாம்... நாளைக்கு இருக்கு அவனுங்க ரெண்டு பேருக்கும். நீ பிராக்டீஸ் பண்ற டைம்ல வரட்டும். இருக்கு கச்சேரி... மது இருக்கும்போதே உன்னைத் திட்டிட்டானா... நான் யார்னு அவனுக்குப் புரிய வைக்கிறேன்..." என்று தோழியை ஆறுதல் படுத்த... அவளின் வார்த்தைகளில் சமாதானமான கீர்த்தி... பின் முகத்தை அழுந்தக் கைகளால் துடைத்து...

"இப்போ ஓ.கே.வா?" குழந்தையைப் போல் மதுவிடம் கேட்க....

"இதுதான் நல்ல பிள்ளைக்கு அழகு. குட் கேர்ள்!" என்று அவள் தலையைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்த மதுவிடம்...

"நீ அந்த முசுட்டுப் பாலாவை எவ்வளவு வேண்டுமானாலும் திட்டிக்கோ. உன் திட்டுக்கெல்லாம் அந்த சிடுமூஞ்சி தாங்குவான். பாவம் ஆதி... அதனால கொஞ்சமா திட்டு..." என்று காதலியாய் மாறிப் பேச...

மது அவள் காதலில் வியந்துதான் போனாள். கிட்டத்தட்ட அவள் தாய் இறந்த பிறகு அவள் முழுவதுமாய் நேசித்த ஒரு விசயம் என்றால் அது... ஆதியின் காதல்தான்.

கீர்த்தி அழகு என்றால்... மது கம்பீரமாக இருப்பாள். ஒரு நிமிர்வு அவளிடம் எப்போதும் இருக்கும். அதனால் அவளைப் பிடித்திருந்தால் கூட அவளிடம் நெருங்கப் பயப்படுவர் யாரும். அதையும் மீறிச் சொல்லியவர்களுக்குக் கூட அவளின் முறைப்பே காத தூரம் ஓட வைக்கும். அதனால் மதுவுக்கு இந்தப் பிரச்சனை இல்லை அவ்வளவாக.

ஆனால், அவர்கள் பள்ளிப் பருவத்தில் இருந்து கீர்த்தியிடம் காதல் சொன்னவர்கள் எத்தனையோ பேர்... அவள் அழகு அப்படி. இப்படி இருந்த சூழ்நிலையில்... இதுவரை யாரிடமும் காதலை உணராத கீர்த்தி... அதை ஆதியிடமிருந்து எதிர்பார்க்க ஆரம்பித்திருக்க... அவனோ சொல்லாமல் பார்வையால் மட்டும் காதல் செய்து கொண்டிருந்தான்.

'கீர்த்தி அவன் மேல் இப்படிக் காதல் கொண்டிருக்க... அவனோ இவள் திட்டு வாங்குவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தானா?' என்று பற்றிக் கொண்டு வர... பாலாவை விட ஆதியின் மேல் கோபம் வந்தது. நாளை அந்தப் பாலாவைக் கவனிப்போம். ஆதி எப்படியும் கீர்த்தியிடம் காதல் சொல்ல வருவான். அன்று இருக்கு அவனுக்கு... என்று மனதில் திட்டம் தீட்டினாள்.

கீர்த்தியோ அது எதுவும் உணராமல்... தன் வருத்தத்தை மறந்தவளாய்...



"மது, உன் அப்பா வந்தாங்களா?" என்று கேட்க,

"ஹ்ம்ம்... வந்தாரு. வழக்கம் போலப் பணம் கொடுத்தாரு. சாப்பிட்டாரு... கொஞ்ச நேரம் என் படிப்பைப் பற்றிப் பேசினாரு. அப்புறம் கிளம்பிட்டாரு. அவ்வளவுதான்!" என்று தோளைக் குலுக்கியபடி உள்ளே போன தோழியைப் பார்த்தபடி...

மது தந்தையின் விட்டேற்றியான பாசத்தை... அவர் தங்கை பண்ணியதற்கு... மகளின் மேலும்... மனைவி மேலும் பாசம் வைக்கப் பயப்படும் தந்தையாக அவர் இருப்பதை நினைத்து வருந்தினாள் கீர்த்திகா.

**பா**லா காலையில் எழுந்தபோது... ஆதி அன்றைய தினப்பலனைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்க... அவனிடம் பேச்சுக் கொடுக்காமல் குளியலறைக்குச் செல்ல எத்தனித்தான். எங்கு... பேசினால் அவன் காதல் புராணம் மிச்சம் மீதி எதுவும் இருந்து தன் காதில் ஓதி விடுவானோ என்று நழுவப் பார்க்க...

"டேய் பாலா..." - அழைத்து நிறுத்தினான் ஆதி.

"போச்சுடா... செத்தேன்டா இன்னைக்கு..." என்று பாலா நினைக்க....

"உன் ராசி என்னடா?" என்று மட்டும் கேட்க...

அவனிடம் தன் ராசியை மட்டும் சொன்னவன்... வேகமாகக் குளியலறைக்குள் நுழைந்தான்.

ஆதி... ராசி, சகுனம், நல்ல நேரம்... எல்லாம் பார்ப்பவன். அன்றும் அவன் ராசிக்கான பலனைக் கேட்டுக் கொண்டிருந்தவன்... பாலாவும் உடன் இருந்ததால்... அவனிடம் அவனது ராசியைக் கேட்டு, அதன் பலனையும் அறிந்து கொண்டான்.

குளியலறையில் இருந்து வெளியே வந்த பாலா... "என்னடா... உன் ராசிக்கு... என் ராசிக்கு எல்லாம்... என்ன

சொன்னாங்க?" என்று நக்கலாகக் கேட்டபடி தலையைத் துவட்ட...

"ஆமா. நீதான்... நேத்தே எல்லாத்தையும் குழி தோண்டிப் புதைத்து விட்டாயே... இன்னும் என்ன... ஆனாலும், 'எனக்கு எதிர்பாராத சந்தோசமாம். நீண்ட நாள் காரியம் பலிக்குமாம்...' இவனுங்க வேற... உள்ளதும் போச்சுனு நானே இருக்கேன்..." என்று அங்கலாய்த்தவனைப் பார்த்து வாய் விட்டுச் சிரித்த பாலா... அவன் முறைப்பது தெரிந்து...

"விடுடா மாப்பிள்ளை... நான் தங்கச்சிகிட்ட பேசி... உன்னோட சேர்த்து வைக்கிறேன்..." என்று சொல்ல...

"உண்மையாவாடா...!" என நம்பி அப்பாவியாய்க் கேட்க...

"சத்தியமாடா மச்சி... உன் மனசு உடைந்து போனா... உன் நண்பன் மனசு தாங்குமா?" எனத் தன் நெஞ்சில் கை வைத்துப் போலியாகப் பேச...

அவன் கிண்டலில் முறைத்த ஆதி... ஞாபகம் வந்தவனாய்...

"டேய், உன் ராசிக்கு என்ன சொன்னாங்க தெரியுமா?" என்று கண் சிமிட்டியபடி... கொக்கி போட...

"பெருசா என்ன சொல்லப் போறாங்க... நேயர்களே! பச்சைக் கலர் பேண்ட்... சிவப்புக் கலர் சட்டை போடுங்க. வடக்கே போகாதீங்க. கிழக்கே பார்க்காதீங்க. தெற்கே பைக்ல போகாதீங்க. மேற்கே கார்ல போகாதீங்கனு சொல்லி இருப்பானுங்க. வந்துட்டான் இவனும் அதைச் சொல்ல... போடா!" என்று இழுக்க...

"உன் ராசிக்கு... இன்னைக்கு 'நீ உன் மனசுக்கு நெருக்கமான நபரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்குமாம்...' அநேகமா உன் ஆளைப் பார்க்கப் போற போலடா..." என்று பாலாவைக் கண்களைச் சிமிட்டி ஓட்ட...



"நீதான் கண்ணு மண்ணு தெரியாம தல குப்புற விழுந்துட்ட. சாரி சாரி... கண்ணு தெரியாம இல்ல... பொண்ணு சூப்பரா இருக்கால்ல... சோ கண்ணைத் திறந்துதான் விழுந்திருக்க... ஆனால்... என்னையும் கண்டதையும் பேசி மாட்டி விட்றாதடா... அறியாப் பையன். புரியா வயசு... அதுவும் ஒரே பையன் எங்க வீட்டுக்கு..." என்று பயந்தவனாய்ப் பேச... அவன் முதுகில் ஒரு அடி போட்டவன்...

"நி அறியாப் பையன். அடப் பாவி. இது உனக்கே அடுக்காது!" என்று சிரித்தபடி பேச... இருவரும் ஜாலியாய்ப் பேசியபடிதான் கீழிறங்கினர். ஆனால், கீழே இறங்கும்போதே ஜெகநாதன் பாலாவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

அவர் அமர்ந்திருந்த விதமே பாலாவுக்கு... தன்னிடம் பேசத்தான் அவர் காத்துக் கொண்டிருக்கிறார் என்பது புரிய... அவரின் அருகில் போய்ச் சாதாரணமாக அமர்ந்தான் பாலா... என்னவென்று கேட்டபடி.

ஆனால், அவரோ கோபத்தில் இருந்தார். அது அவனது ஹெச்.ஓ.டி. அவருக்குக் கால் செய்திருந்த காரணத்தால்...

"என்னடா பாலா... ஃபைனல் இயர் படிக்கிறோம். சீனியர்ங்கிற கெத்துல ஃபர்ஸ்ட் இயர் பொண்ணுகிட்ட வம்பு பண்ணினாயா? உன் ஹெச்.ஓ.டி. போன் போட்டுச் சொல்றார். கீர்த்தியாமே... நல்ல பொண்ணாம். ஏன்டா... இந்த வேலை உனக்கு... உன்னைக் காலேஜுக்குப் படிக்க அனுப்புனா... கொம்பு சீவிட்டுத் திரியறீங்களோ... எதுக்கு அனுப்பினோமோ அதை மட்டும் செய்யுங்க!" என்று மகனின் நடவடிக்கையில்... அதுவும் கல்லூரியில் இருந்து வந்த புகாரில் மிகவும் வருந்திய அவர்... தந்தையாகக் கோபத்துடன் கண்டிக்க...

முந்தின நாளோடு மறந்து போயிருந்த... கீர்த்தியின் மீதான கோபம்... திரும்பி வந்து அவனிடம் உட்கார... உச்சகட்ட நிலையை எட்டி... வெடிக்க ஆரம்பித்திருந்தது.

'அய்யோடா....' என்றிருந்தது ஆதிக்கு.

கீர்த்தியை என்ன சொல்லப் போகிறானோ என்ற கவலையில் மனம் ஆழ்ந்தது.

பாலாவுக்குக் கோபம் வந்தால் வார்த்தைகளில் நிதானம் இருக்காது என்பது அவனோடு பழகிய விதத்தில் தெரியும் அவனுக்கு. கெட்ட வார்த்தைகள் எல்லாம் இருக்காது. ஆனால், அடுத்தவர் மனதைக் குத்திக் கிழிக்கும்... அவன் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும்... அதை நினைக்கும்போதே கீர்த்தியை நினைத்துக் கலக்கமானான்.

'கீர்த்தி... உனக்கு இது தேவையா... ஒழுங்கா உன் டைம்லயே பிராக்டீஸ் பண்ணி இருந்துருக்கலாம்ல...' என்று மனதினுள்ளாக அவளிடம் பேசியவன்... பாலாவை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று யோசனையில் மூழ்கினான்.

பாலாவைத் திட்டிய ஜெகநாதன்... கோபமும் வருத்தமும் தன் மகன் மேல் கொஞ்சமும் குறையாமல்... வெறுப்பான முகத்தோடு வெளியேற...

பாலாவும்... அதே வேகத்தில் வெளியேறி... கொலைவெறி கோபத்தில் பைக்கை ஸ்டார்ட் செய்ய... உதைத்த வேகமே அவன் கோபத்தின் அளவைச் சொல்ல... ஆக்ஸிலேட்டரை உறும விட்டபடி ஆதிக்காகக் காத்திருந்தான்.

ஆதி அவனிடம்... அவனைச் சகஜமாக்கும் விதத்தில்...

"டேய்... கீர்த்தி சொல்லி..." என்று ஆரம்பித்தவனை...

அனல் தெறித்தது வார்த்தைகளில், "நிறுத்துறியா... அந்தப் பேரைக் கேட்டாலே பத்திக்கிட்டு வருது. ஊரெல்லாம் அவளுக்குச் சப்போர்ட்னா... என் வீட்டுல கூடவா... என் அப்பாகிட்டயே திட்டு வாங்க வச்சுட்டால்ல... இருக்கு அவளுக்கு... ஏய் கீர்த்தி... இருக்குடி உனக்கு... வந்துட்டே இருக்கேன்..." என்று பல்லைக் கடிக்க...



தான் அவளை விரும்புகிறோம் என்று கூறியும், இவன் இப்படிப் பேசுகிறானே... என்று கோபம் வர...

"பாலா... என் முன்னாடியே என் கீர்த்திய... இப்படிப் பேசுற.." என்று மனம் நொந்து கேட்க...

அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தபடி... புருவத்தை நெரித்தவன், "லவ்தானே பண்ற... இன்னும் அவகிட்ட அதைச் சொல்லக் கூட இல்லைல... என்னவோ இப்பவே அவ உன் பொண்டாட்டி மாதிரிப் பேசுற... துள்ளுற... அடங்குறியா... அவள்லாம் ஒரு ஆளுன்னு... இவரு கீர்த்தியாம்... உருகுறான்... பார்த்துட்டே இரு... ஒரு நாள் இல்ல ஒரு நாள் அல்வா குடுக்கத்தான் போறா அவ..." என்று ஆதியிடம் அவன் காதலைப் புரிந்து கொள்ளாமல் இழிவாகப் பேசியபடி தொடர்ந்தான்.

"இன்னொரு தடவை அவ பேரு மட்டும் என் காதுல மட்டும் விழுந்துச்சு... கொல வெறி ஆகிடுவேன்... நேத்துல இருந்து அவளால கண்டவன்கிட்டல்லாம் பேச்சு வாங்கினது பத்தாதுன்னு... இன்னைக்குமா..." என்று பிரதாப் பேசியது வேறு சேர...

"அவளை நான் திட்டுறதுல இந்த நாளை அவ என்னைக்கும் மறக்கக் கூடாது..." என்றபோது, குரோதம் நிரம்பி இருந்தது அவன் விழிகளில்...

அவன் கோபத்தை அடக்கும் வழி தெரியாமல்... திகைத்தபடி நின்ற ஆதியைப் பார்த்தவன்...

"நீ இப்போ வர்றியா... இல்லையா?" என்று உறும,

இவனைத் தனியே விட்டால் கீர்த்திக்குத்தான் ஆபத்து... என்று நினைத்து வேறு வழியின்றி ஏறினான்.

ஏறியவனைப் பார்த்து... "வாயை மூடிட்டு வரணும்... அவளுக்கு சப்போர்ட் பண்றேன்னு... இல்ல, என்

கோபத்தைக் குறைக்க வேண்டுமென்று எதுனாலும் பேசினேனு வச்சுக்க... இறக்கி விட்டுட்டுப் போய்ட்டே இருப்பேன்... நண்பன்னுல்லாம் பார்க்க மாட்டேன்..." என்றபடி வண்டியைக் கிளப்பினான்.

ஆதி மனதினுள்ளே இவன் சமாதானம் ஆகிற மாதிரி ஏதாவது அதிசயம் நடக்காதா என்று மனதில் வேண்டியபடியே வந்தான்.

'இன்னைக்கும் யார் யார் அவளுக்கு சப்போர்ட்டா வர்றாங்கனு பார்க்கிறேன்... செத்தாங்கடா அவங்களும்...' என்று மனதின் ஆவேசம் குறையாதவனாய்க் கல்லூரிக்கு விரைந்தான் பாலா...

அதே நேரத்தில்... கல்லூரியில்... அவன் வரும் போதே வழியிலேயே சந்தித்து... பாலாவிடம்... நேற்று அவன் கீர்த்தியிடம் நடந்த விதம் பற்றிப் பேச மதுவும் காத்திருந்தாள்... பாலாவின் வருகைக்காக....!

## 40

ஆதி... பாலா சொன்ன வார்த்தைக்காக... எதுவும் பேசாமல் முகத்தை உர்ரென்று வைத்தபடி பின்னே வர... பாலாவோ அவனுக்கு இன்னும் கோபம் போகவில்லை என்பதை உணர்த்துவது போல பைக்கை விரட்டினான்.

அவன் கோபத்தை இன்னும் அதிகரிப்பது போல்... இடையிலேயே... ஒரு பூ விற்கும் பாட்டி... அவர்கள் செல்லும் வழி அடைக்கப்பட்டு விட்டது என்று கூறி, அவர்களை வேறு பாதையில் செல்லச் சொல்ல... எரிச்சலுடனே பாதையை மாற்றிப் பயணம் செய்தனர்.

பாலா... சீக்கிரமாகச் செல்ல... சாலையை விட்டு... தெருக்களின் சாலையில் தன் வண்டியைவிட... அங்கும் போக முடியாமல்... போக்குவரத்து நெரிசலில் மாட்ட... வேறு வழி இல்லாமல் நின்று கொண்டிருந்தான்...



அப்போது, "ஏய்... ஏய் கீர்த்தி... கீர்த்தி ப்ரேக்கைப் புடி... இடிச்சுறப் போற..." என்ற அலறலில் இருவரும் திரும்ப... ஓட்டி வந்த பெண்ணோ... விட்டால் இவர்களின் கால் மேல் வண்டியை ஏற்றி விடுவாளோ என்ற பீதியில் இருவரும் ஊன்றியிருந்த காலைத் தூக்க...

அவளுக்குப் பின்னால் வந்த வாலிபனோ... அவள் கையைப் பிடித்து அட்ஜஸ்ட் செய்ய... இருவரின் மேல் மோதாமல்... சற்று முன்னே சென்று நிறுத்தினாள்.

"சாரி பாஸ்... இப்போதான் கத்துக்கறா..." என்று சொல்ல...

அவனின் உடனடி மன்னிப்பில்... பாலாவும் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டான்.

ஆனால்... இவ பேரும் கீர்த்தியா... கீர்த்தினு பேர் உள்ளவள்களே நமக்கு ஆப்பு வைக்கத்தான் வருவாளுங்க போல...அவ அப்பாகிட்ட ஆப்பு வச்சானா... இவ நம்ம காலுக்கே ஆப்பு வச்சுருப்பா போல... நல்ல வேளை அவ அண்ணன் ப்ரேக் புடிச்சான் என்ற மட்டில் நினைத்தான்.

ஆதியோ சும்மா இருக்காமல, "பாப்பாவைக் கூப்பிட்டு ஒரு கிரௌண்டுக்குப் போய்ச் சொல்லிக் குடுக்கறத விட்டுட்டு... இப்படியா பாஸ் பண்ணுவீங்க!" என்று வாய்விட,

இப்போது திரும்பி அவள் ஆதியைப் பார்த்து முறைக்க... அது ஹெல்மெட்டின் வழியே தெரிந்த கண்களிலேயே அப்பட்டமாகத் தெரிய... ஆதி வாயை மூடிக் கொண்டான்.

ஆதி சொன்ன பாப்பா என்ற வார்த்தையில் கோபமாக ஆனவள்... பின்னால் இருந்தவனின் மேல் பாய ஆரம்பித்தாள்.

"நான் சொன்னேன்ல... மெயின் ரோட்லயே போகலாம்னு... நீதான்டா கேக்கல... இப்போ பாரு..."

"ஏய் குறத்தி... நீ ஒழுங்கா ப்ரேக் பிடிக்காம வந்துட்டு தெருவைக் கோணல்னு சொல்லாத... யூனிஃபார்ம்ல இருந்துட்டு உனக்கு மெயின் ரோட்ல வேற போகணுமா... போலீஸ் புடிச்சான்னா தெரியும்..." எனும் போதே...

பாலாவும்... ஆதியும் தங்களைக் கவனிப்பதை உணர்ந்த கீர்த்தி... அதிலும் ஆதியின் சுவாரஸ்யமான பார்வையில் இன்னும் கோபமான கீர்த்தி, "டேய்..." என்று பல்லைக் கடித்தவள்... முன்னால் மாட்டியிருந்த தன் ஸ்கூல் பேக்கைத் திறந்து அதிலிருந்து ஸ்கேலை எடுத்து அவனை இரண்டு அடி அடித்தவள்...

"ஏன்டா இப்படி என் பேரைக் கொல்லுற... போறவன் வர்றவன் எல்லாம் என்னை ஒரு மாதிரியா பார்க்கிறான்..." என,

'சரி. நான் சொல்லல... நாளையில இருந்து நீ இப்படி என்னை ஸ்கூட்டி பழகக் கூப்பிட்டு வர மாட்டேனு சொல்லு... நானும் குறத்தினு சொல்ல மாட்டேன்..." என்று சொல்ல...

"யாரு நீ... நீயாவது அப்படியே சொல்லாம இருந்துட்டாலும்..." என அவள் பேச...

பேசிக் கொண்டிருக்கும் போதே அவர்கள் செல்லும் திசையில் வழி கிடைக்க... இருவரும் அதில் நுழைந்து பறந்து விட்டனர்.

கீர்த்தியும்... பாலாவும் ஹெல்மெட் போட்டிருந்த படியால் இருவருக்கும் தெரியவில்லை... வினோத்தும் ஹெல்மெட் போட்டிருந்தான் என்பதால் அவனும் அடையாளம் தெரியவில்லை.

"பாருடா பாலா.... இத்துனூண்டா இருந்துட்டு என்னமா கோபம் வருது அந்தப் பொண்ணுக்கு... பாப்பான்னு சொன்னா மொறைக்குதுடா..."

இப்போது பாலா, "பின்னே லெவன்த் படிக்கற பொண்ணைப் பார்த்துப் பாப்பானு சொன்னா... முறைக்க மாட்டாங்க..." என்று சொல்ல...



அதற்கு ஆதி, "அடப் பாவி... என் கண்ணுக்குப் பாப்பாவா தெரிஞ்சவ... உன் கண்ணுக்கு மட்டும் எப்படி பொண்ணா... அதுவும் லெவன்த் படிக்கிற பொண்ணா தெரிஞ்சா!" என ஆச்சரியப்பட...

இப்போது ஹெல்மெட்டைக் கழட்டிய பாலா... தலையில் அடித்தபடி...

"டேய் எருமை... அவ ஸ்கூல் பேக் ஓபன் பண்ணுனாள்ல. அப்போ அவ புக் வெளியே தெரிஞ்சது... அதிலே பார்த்தேன்... உன்னை எல்லாம் வச்சுட்டு நானும் குப்பை கொட்டுறேன்..." என்று கூறி முறைக்க...

அசடு வழிந்தான் ஆதி.

அதுவரை ஆக்ரோஷமாக இருந்த பாலா... சில்மிஷமாக, "டேய் மச்சான்... அவ பேரு என்ன தெரியுமா?" என்று ஆதியைச் சீண்ட...

"தெரியும்... தெரியும்... நீதான் அதைச் சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டியே..." என்று சலிக்க,

"அது இல்லடா மச்சி... அதைவிட சூப்பர் பேர்... குறத்தி. இன்னைக்கு இருக்குடா... கீர்த்தி... குறத்தி... வாட் எ ரைமிங்... என்னமா யோசிச்சு இருக்கான் அவன்..."

"டேய் பாலா... இது நல்லா இல்ல... நீ மட்டும் என் ஆளை அப்படிக் கூப்பிட்ட... கொலையே பண்ணிடுவேன் உன்னை..." என்று ஆதி எகிற...

பாலா சுத்தமாகக் கோபம் எல்லாம் போய் ஜாலியாய்ப் பேச ஆரம்பிக்க...

ஆதி எதிர்மாறாய் ஆனான்.

"அந்தக் குறத்திக்கு சப்போர்ட் பண்ண இன்னும் யார் வருவாங்கனு பார்ப்போம்... ஆனாலும் குறத்திக்கு நம்ம காலேஜ்ல பெரிய ரசிகர் கூட்டமே இருக்கு போல..." என்று வார்த்தைக்கு வார்த்தை குறத்தி என்று விடாமல் பேச..

ஆதி சட்டென்று வண்டியில் இருந்து இறங்கி விட்டான்.

"ஏன்... என்னடா ஆச்சு... ஏன் இறங்குற...?" என்று பாலா பதற,

"கீர்த்தியை நான் லவ் பண்றேனு சொல்லியும் கூட... நீ அவளைக் கிண்டல் பண்றது எனக்குப் பிடிக்கலடா..." என்று தீவிரமாகச் சொல்ல...,

அவனின் தீவிரத்தை உணர்ந்தவன், வேறு வழியின்றி...

"சாரிடா... நீ இந்த அளவில் சீரியஸா இருப்பேனு நான் நினைக்கல... இனிமேல் சொல்ல மாட்டேன்... போதுமா...?" என்று சமாதானப்படுத்திய பின்தான் ஆதி ஏறினான்.

ஆனால், அது ஆதிக்காக... அப்போது சமாதானப் படுத்துவதற்காக மட்டுமே சொன்னான்.

அதன் பிறகு நண்பர்கள் இருவரும் பேசியபடியே வந்து, தாங்கள் வழக்கமாக நிறுத்தும் இடத்தில் வண்டியை நிறுத்தி... இறங்க...

"ஹாய்.... அயாம் மது... மதுபாலா....!" என்று பாலாவின் முன் ஆஜரானாள் மது.

"ஆஹா.... இப்போதான் ரோட்டுல வந்த ஒருத்தி புண்ணியத்தில இவனை மலை இறக்கினேன்... இந்த ஆத்தா மறுபடியும் இவனை மலை ஏத்த வந்துருச்சா..." என நொந்தான் ஆதி.

பாலாவோ, 'இவ யாரு... இவ எதுக்கு வந்து அவ பேரை என்கிட்ட வந்து ஏலம் விடுறா...' என்று நினைத்தவன், ஹெல்மட்டைக் கழட்டியபடி, அலட்சியமான பார்வையில்... அவளை... அவள் பார்வையை நேருக்கு நேராகச் சந்தித்தான்.

அவனை என்னவெல்லாமோ திட்ட வந்தவள்... அவன் பார்வையில் அதில் இருந்த ஏதோ ஒன்று அவளை



அவன்பால் இழுக்க... எதற்கு வந்தாளோ அதை மறந்து அவனின் முகத்தையே பார்த்தபடி நிற்க...

அவள் முன்னால் விரல்களைச் சுண்டியவன்... "ஏய்... நீ யாரு...? இப்போ நான் உன் பேரைக் கேட்டேனா...? எந்த இயர்... ஃப்ர்ஸ்ட் இயரா...? எவனாச்சும் இன்னும் ராகிங் பண்றானா?" என்று அதட்ட...

ஆதியோ... 'யாரு இவளையா... ராகிங்கா... ஏன்டா டேய்... அவ உன்னைத்தான் திட்ட வந்துருக்கா, அவ ஃப்ரெண்டுக்காக!' என்று நினைக்கும் போதே...

பாலாவின் அதட்டலில் தன்னுணர்வு பெற்ற மது...

திட்ட வந்தவனைத் திட்ட முடியாமல்... ஆதியிடம் திரும்பினாள்.

"நீதானே... கீர்த்தி பின்னால் சுத்தினது... சும்மா இருந்த பொண்ணை.... பார்த்துப் பார்த்துக் காதல்ல விழ வச்சுட்டு... நேத்து இவன் திட்டினப்ப பேசாம நின்னுருக்க..." எனச் சொல்லும் போதே,

பாலா... இடையிலே குறுக்கிட்டு... "ஏய்... என்ன... அவன் இவன்னு மரியாதை இல்லாம இஷ்டத்துக்குப் பேசுற..." என எகிற... நிதானமாகத் திரும்பியவள்...

"வேணும்னா நீ என்னை வாடி... போடினு கூப்பிட்டுக்கோ. நம்ம பஞ்சாயத்தை அப்புறம் பாக்கலாம். சார்கிட்ட கொஞ்சம் பேச விடுங்க பாஸ்!" என்று சாதாரணமாகச் சொல்லியபடி, ஆதியிடம் பேச ஆரம்பித்தாள்.

'என்னது நம்ம பஞ்சாயத்தா... இவளை இப்போதானே நானே பார்க்கிறேன். ஒருவேளை அந்தக் குறத்தியைத் திட்டுனதுக்குத் திட்டவோ?' என்று அதிர்ந்த பாலா யோசிக்க ஆரம்பித்திருந்தான்.

ஆதியோ மதுவின் நேரடித் தாக்குதலில் என்ன சொல்வது என்று தெரியாமல் நிற்க...

"இங்க பாரு ஆதி... என் ஃப்ரெண்ட் உன்னை லவ் பண்றானு பார்க்கிறேன். இல்ல... நடக்கிறதே வேற. உன் ஃப்ரெண்டுகிட்ட சொல்லி வை... இனி கீர்த்திகிட்ட வம்பு பண்ணினான்னு தெரிஞ்சுச்சு... அவனைக் கூட ஒண்ணும் சொல்ல மாட்டேன்... அவளை லவ் பண்றேன்னு சுத்திட்டு திரியறேல்ல, உனக்குத்தான் கஷ்டம்!" என்று எச்சரித்தபடி... பாலாவை மட்டும் நிதானமாகப் பார்த்து விட்டுப் பின் நகர்ந்தாள்.

"டேய்! யாருடா இவ... என்கிட்ட பேச வந்தா... அப்புறம் உன்கிட்ட இஷ்டத்துக்குப் பேசுறா... ஓங்கி ஒரு அறை விடறதை விட்டுட்டு பார்த்துட்டு நிக்கிறான்..." என எரிச்சலில் பேச,

ஆனால், ஆதியோ மது பேசியவற்றையெல்லாம்... மனதில் ரீவைண்ட் செய்தவன்... சில நிமிடத்தில் உற்சாகமாகக் குதித்தான்.

"டேய்! கீர்த்தியும் என்னை லவ் பண்றாளாம்டா... அப்படித்தானே சொன்னா மது...?" என...

ஆதியின் உற்சாகம் பாலாவையும் தொற்றிக் கொள்ள... "ஆமாம்டா.... நான் நேத்தே சொன்னேன்லடா... கலக்குடா... எப்படிடா... இப்படி ஒரு பொண்ணைக் கவுத்த... அவ இருக்கிற அழகுக்கு உன்னை எப்படிடா... ஒருவேளை கண்ணு சரியிருக்காதோ..." என்றவன்...

நண்பனின் முறைப்பில்.... "சரி சரி. விடு... அதான் தெரிஞ்சு போச்சுல்ல... இன்னைக்கே சொல்லிடுடா... பார்த்தியா... நான் அவளைத் திட்டுனதுக்குப் பெருசா கோபிச்சுக்கிட்ட... என்னாலதான் உன் காதல் உறுதி ஆகியிருக்கு... கண்டிப்பா ட்ரீட் வேணும் எனக்கு... என் நண்பனை அவ லவ் பண்றானு தெரிஞ்ச ஒரே காரணத் தினால... நான் அவளுக்கு வச்சிருந்த பட்டப் பெயரை இந்த நிமிசத்தில இருந்து என் மனசில இருந்து அழிக்கிறேன்டா!"



காலையில் பேசிய பாலாவா என்று ஆச்சரியப்படும் வகையில் ஜாலி பட்டாசாய் மாற...

"அடப் பாவி... அப்போ சொன்ன இனி மேல சொல்லமாட்டேன்னு... அது பொய்யா?" என அடிக்க வர...

"டேய்... நீ சொன்னவுடனேலாம் கேட்டு விடுவோமா நாங்கள்லாம்..." என்று அவனின் கைகளுக்குள் அடங்காமல் ஓடினான்.

"டேய்! ஆக்சுவலா... மது உன்னைத்தான் திட்ட வந்தா... ஆனா நீ ஹெல்மெட் கழட்டுன கேப்ல பலியாடு மாறிப் போச்சு..." எனச் சொல்ல...

"அவ என்ன அவ்ளோ பெரிய தில்லாலங்கடியா என்ன... என்னை மட்டும் திட்டி இருந்தானு வச்சுக்க... அவ கன்னம் இன்னைக்குப் பழுத்திருக்கும்..." எனச் சொல்லியபடி இருவரும் வகுப்பறை நோக்கிச் சென்றனர்.

**வ**குப்பறையில் கீர்த்தியின் அருகில் உட்கார்ந்திருந்த மதுவிற்கு இன்னும் நெஞ்சம் படபடத்தது. அங்கு ஒருவாறு சமாளித்து வந்து விட்டாள்.

'என்ன கண்ணு... டேய் பாலா... பார்த்த நொடியிலேயே இப்படி என்னை மாத்திட்ட... பாலா... மது பாலா... வாவ்... டேய் நான் உன்னை லவ் பண்றேனா....' அதை உணர்ந்த நொடி... துள்ளிக் குதிக்க வேண்டும் போல் இருக்க...

அதற்கு மேலும் தாமதிக்காமல்.... கீர்த்தியிடம் பேச ஆரம்பித்தாள்.

"கீர்த்தி... நான் பாலாவை லவ் பண்றேன்..." என்று சொல்ல,

கீர்த்தி 'என்ன...' என்று மட்டும் பார்க்க...

அதை எல்லாம் உணராமல் அவள் தொடர்ந்தாள்.

"அவனைத் திட்டத்தான் போனேன். ஆனால், எப்போ அவன் கண்ணைப் பார்த்தேனோ, அப்பவே ஐ தின்க் அயாம் இன் லவ் வித் ஹிம்!" என்று சொல்ல..

'ஆங்...' கீர்த்தியோ திறந்த வாய் மூடாமல் அவளைப் பார்த்தபடி இருக்க...

"இப்போ நான் என்ன சொல்லிட்டேனு நீ இப்படி இருக்க..."

"அப்போ நீ அவனைத் திட்டலையா?" என,

"ம்ம்ம்ம்..." என்று தலை ஆட்டிய அவள்,

"ஆனா சாரிடி... அவனுக்குப் பதிலா... ஆதியைத் திட்டிட்டு வந்துட்டேன். இன்னொரு சாரிடி... பாலாவைப் பார்த்து ஜொள்ளு விட்டதுல உன் லவ்வையும் ஆதிகிட்ட சொல்லிட்டேன்."

கீர்த்தி அழுதே விட்டாள். "ஏன்டி இப்டி பண்ணுன...?"

"சாரிடி... செல்லம்... உன் ஆளு அநேகமா இன்னைக்கு ப்ரபோஸ் பண்ண வந்துருவான்..." என்று சொல்லியவள்... "இன்னைக்கு மட்டுந்தான் உங்க ரெண்டு பேருக்கும் டைம்... நீங்க சொன்ன அடுத்த நிமிஷம் நான் பாலாகிட்ட என் மனசைச் சொல்லிடுவேன்... அதுவும் நீங்க எங்களுக்கு சீனியர் என்பதால்... இல்லேன்னா... காலையிலேயே சொல்லிட்டு வந்துருப்பேன்... உங்களால நான் வேற வெயிட்டிங்!" என்று அலுக்க..

"ஏய் மது... என்னடி... இப்படிப் பேசுற... உங்க அப்பாவுக்குக் காதலே பிடிக்காதுனு சொல்வ... உங்க அத்தை லவ் மேரேஜ் பண்ணியதால தள்ளி வச்சுட்டார்னு சொல்லுவ..."

"அது வேற கதை... லவ் பண்றதுனு முடிவு பண்ணியாச்சு... குடும்பத்தைப் பத்திலாம் லவ் வர்றதுக்கு முன்னாடி யோசிக்கணும்... வந்த பின்னால்... நாம லவ் பண்றவங்களுக்காக மட்டும்தான் யோசிக்கணும்..." என்று பேசிய தோழியிடம்,



"அவன் வேற யாரையாவது லவ் பண்ணிக் கொண்டிருந்தால்..." என்று அவளின் தீவிரத்தில் கலக்கமாகக் கேட்க...

"யாரு அவனா... அவனைப் பார்த்தாலே தெரியல... இன்னும் யார்கிட்டயும் மாட்டலேனு... அவன் பார்வையே சொல்லிடுச்சு... பட்சி எங்கேயும் இன்னும் சிக்கலேனு..." என்று அசராமல் அடித்த தோழியிடம்,

"பார்த்தியா... பாலாவைப் பார்த்தவுடனே நீ என்னை மறந்துட்டேல்ல!" என்று கீர்த்தி சிணுங்க...

"இல்ல... கீர்த்தி... உன்னை உனக்கான இடத்தில் சேர்த்துட்டுதான் பேசுகிறேன்... கண்டிப்பா என் அனுமானம் சரினா... ஆதி இன்னைக்கு உன்கிட்ட வந்து பேசுவான்... பாரு... நான் என்னை மறந்தால்தான் கீர்த்தி உன்னை மறப்பேன்... நான் உன்னை மறந்திட்டேனு மட்டும் சொல்லாத..."

"சொல்லலம்மா... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா மது..." என்று மதுவிடம் சரணடைந்தவள்... 'ஆதி என்ன பண்ணக் காத்திருக்கிறானோ?' என்ற படபடக்க ஆரம்பித்து இருந்தது அவள் மனம்.

**க**டற்கரையின் ஒரு புறமாக ஆதி - கீர்த்திகா நின்றிருந்தனர்.

மது கடற்கரையில் உள்ள ஒரு பெஞ்சில் அவர்கள் இருவரும் கண்ணுக்குத் தெரியும்வண்ணம் உட்கார்ந்திருக்க...

பாலாவோ... இவன் வண்டி எடுத்துட்டு வராம நம்மள வேற இம்சை பண்றான்... என்றபடி வேறொரு புறம் நின்றிருந்தான்.

"தேங்க்ஸ் கீர்த்தி... நான் கூப்பிட்ட உடன் வந்ததற்கு..." என்று சொல்ல,

"நான்...நானும்..." என்று இழுத்தவள்... என்ன பேசுவது என்று தெரியாமல், தான் சொல்ல வந்ததை நிறுத்தி விட்டு,

"மது ரொம்பத் திட்டிட்டாளா... தப்பா எடுத்துக்காதீங்க ஆதி..." என்று மதுவைப் பற்றிப் பேச...

"அதெல்லாம் பரவாயில்ல... அவ அப்படித் திட்டப் போய்த்தானே உன்னோட மனசு எனக்குத் தெரிந்தது..." என்று அவளை மட்டுமே பார்த்தபடி நிற்க...

கீர்த்தி தலை குனிந்தாள்.

"ஆமா... நான் நான்னு என்ன சொல்ல வந்த...? அதைச் சொல்லு... அதை விட்டுட்டு என்னென்னவோ பேசிப் பேச்ச மாத்தாதே!" என்று கீர்த்தியிடம் விளையாட,

இப்போதும் கீர்த்தி வெட்கப்பட...

"சொல்லு கீர்த்தி... நீ என்னை லவ் பண்ணுகிறாயா...? மது சொன்னாள்தான். ஆனால், உன் வாயால அதைக் கேட்கணும்... ப்ளீஸ்!" என,

"லூசாப்பா நீங்க... கூப்பிட்டவுடனே நான் வந்து நிக்கிறேனே... பார்த்தால் எப்படித் தெரியுது..." என்று... கொஞ்சம் வேகமாகப் பேச...

அவளின் கோபம் உணர்ந்தவன், "அப்பா... என் ஆளு... சைலண்ட்னு நெனச்சா... பட்டாசா வெடிக்கிறா...!" என...

"என்னைக் கேட்டீங்கல்ல... வந்து அரை மணி நேரம் ஆச்சு... நீங்க என்னை விரும்பறேனு இன்னும் சொல்லவே இல்ல..." என்று வருந்த...

"இரு இரு. இன்னும் த்ரீ மினிட்ஸ்... அதுக்கப்புறம் தான் நல்ல நேரம் வருது..." என்று சொன்னவனை விளங்காமல் ஒரு பார்வை பார்த்து வைத்தாள் கீர்த்தி.



அவளின் பார்வை உணர்ந்தவன்...

"எனக்குக் கொஞ்சம் இதில் எல்லாம் நம்பிக்கை..." என்று சொல்லியபடி... அவன் சொன்ன மூணு நிமிடங்களை இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி கழிக்க,

"கீர்த்திகா... ஐ லவ் யூ ஃப்ரம் மை பாட்டம் ஆஃப் ஹார்ட்..." என்றவன்,

"இந்த ஆறு மாசமும் என்னைத் தவிக்க விட்டுட்ட... நெக்ஸ்ட் செம் நாங்க இருக்க மாட்டோம்... எப்படியும் இங்க இருந்து போறதுக்குள்ள நானே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்... ஆனால்..." என்று சொல்ல ஆரம்பித்தவனிடம்...

"ஒரு நிமிசம் ஆதி...!" என்று கூறிய கீர்த்திகா,

தூரத்தில் இருந்து தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மதுவை நோக்கிக் கட்டை விரலை உயர்த்த...

மதுவும் பதிலுக்குச் சந்தோசமாகத் தன் கட்டை விரலை உயர்த்தினாள்.

தன் காதலைச் சொன்ன அடுத்த நொடி... மதுவிடம் அவள் சொன்ன விதம் எரிச்சலைக் கிளப்ப... மதுவை ஏனோ அவனுக்குப் பிடிக்கவில்லை.... கீர்த்தி அவள் மேல் மிகுந்த பாசமாக இருப்பதாலா... இல்லை, காலையில் அவள் திட்டியதாலா...! காரணம் தெரியவில்லை... ஆனால் பிடிக்கவில்லை.

எரிச்சல் தோன்றிய போதும்... முதல் நாளிலேயே கீர்த்தியோடு வாக்குவாதம் வேண்டாம் என்று விட்டு விட்டான்.

அதன் பிறகு காதலர்களுக்கே உரிய உலகத்தில் இருவரும் சஞ்சரிக்க ஆரம்பித்தனர்...

இடையில்தான் கேட்டான்... அதுவும் அமைதியாக. "மது ரொம்ப க்ளோஸ் ஃப்ரெண்டோ!" என்றபடி....

"அதுவும் நான் காதலைச் சொன்ன அடுத்த வினாடியே... அவளிடம் சொல்லிட்ட!" என்று உள்ளே கோபம் இருந்தாலும் வெளியே சாதாரணமாகக் கேட்க,

அவன் உள் குத்தையெல்லாம் அவள் கவனிக்கவில்லை.

"அதுவா ஆதி... அவதான் நீங்க உங்க காதலை என்கிட்ட சொன்னவுடனே கை காமிக்கச் சொன்னா..." என்றாள் வெளிப்படையாக.

"எதுக்கு...?"

"அவ பாலாவை லவ் பண்றாளாம்... காலையில் பாலாவைத்தான் அவ திட்ட வந்தா... ஆனா அவரைப் பார்த்த வுடனே ஏதோ ஒரு உணர்வு... பாலாவைத் திட்ட முடியல. அதுதான் உங்களைத் திட்டிட்டாளாம்... அப்புறம் அதைக் காதல்னு கன்ஃபார்ம் பண்ணியவள் உடனே சொல்லலாம்னு நினைத்தாளாம்... ஆனால், நாம் அவளுக்கு இந்த விசயத்துல சீனியராம்... அதனால நாம் கன்ஃபார்ம் பண்ணின வுடனே அவளுக்குச் சொல்லச் சொன்னா... பாலாகிட்ட இந்நேரம் சொல்லி இருப்பா!" என்று வெள்ளந்தியாக அத்தனையும் கூற... மொத்தமாக ஆடிப் போனான் ஆதி.

"கடவுளே!" என்று தலையில் கைவைத்தவன்..."கீர்த்தி... அவன் கோபம் உனக்குத் தெரியாது. பொண்ணுனு கூடப் பார்க்க மாட்டான். அறை கிறை குடுக்கப் போறான்... அவ என்ன லூசா...!" என்றபடி எழ...

கீர்த்திகா... கொஞ்சம் கூடப் பதறாமல்...

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. மது சமாளிப்பா..." எனச் சொல்ல,

"உனக்கு அவனைப் பற்றித் தெரியாது. கோபம் வந்தா என்ன பண்ணுவான்னு தெரியாது. நேத்தே நீ பார்த்தேல்ல..." என்று கூறியவன், அவளையும் அழைத்துக் கொண்டு அவர்கள் இருக்கும் இடம் நோக்கிப் போக...



அங்கு பாலா தீப்பிழம்பாக நின்றான்... மதுவின் திருவிளையாடலில்...

கீர்த்தி தன் காதலை கன்ஃபார்ம் பண்ணிய அடுத்த நிமிடம் மது பாலாவின் முன் நின்றாள்.

"ஹாய்!" என்று பாலாவைப் பார்த்துச் சொல்ல...

அவனும், "வந்து அரைமணி நேரம் ஆச்சு... இப்போ திடீர்னு என்ன ஹாய்?" என்று மட்டும் கேட்க,

"இப்போதான் நான் பேசப் போறேன்... அதுதான்."

"என்கிட்ட என்ன..." என்று ஆரம்பித்தவன் நினைவு வந்து, "ஓ! உன் ஃப்ரெண்டைத் திட்டினது பற்றியா..." என்று கேட்க,

"அதைக் காலையிலேயே கேட்டிருக்க மாட்டேனா பாலா... உன்னைத்தான் திட்ட வந்தேன். ஆனா ஆதியைத் திட்டிட்டேன்... ஆமா... நான் உன்னைத் திட்ட வந்துட்டு அவனை ஏன் திட்ட வந்தேனு நினைத்துப் பார்த்தாயா இல்லையா...?" என்றாள் மது.

பாலா அவள் சொன்னதில் மற்றதை எல்லாம் விட்டு விட்டான்.

"என்ன... நானும் காலையில் இருந்து பார்க்கிறேன்... அவன் இவன்னு சொல்ற... நாங்க ரெண்டு பேரும் உன் சீனியர்ஸ். தெரியும்ல உனக்கு!" என்று சீனியர் கெத்தைக் காட்ட...

"ஆதியை வேணும்னா நான் மரியாதையாக் கூப்பிடறேன்..." என்றவள்... "ஏன்னா... அவர் கீர்த்தியோட லவ்வர்... உன்னைலாம் நோ வே..."

அவளது பதிலில் முறைத்த பாலா... "ஏன்... மேடம் சீனியருக்கெல்லாம் மரியாதை குடுக்கக் கூடாதுன்னு கொள்கை வச்சு இருக்கீங்களா...?" என்று நக்கலாகக் கேட்டான். இருந்தும் நக்கலிலும் குரலில் கடுமை தெரிய...

அவனின் கடுமையை எல்லாம் பூ என்று ஊதித் தள்ளியபடி...

"சீனியர்னு இல்ல... மனசுக்குப் புடிச்சவங்கன்னாலும் மரியாதையா கூப்பிட மாட்டா இந்த மது!" என்று அவளுக்கே புதிதான வெட்கத்துடன் சொல்ல...

"என்னது...?" பாலா அதிர்ந்தான்.

"ஆமாம் பாலா... எனக்கு உன்னைப் பிடிச்சுருக்கு... உன்னை... உன் கண்ணை நான் பார்த்த அந்த நொடியே... நீ என் மனசுக்குள்ள வந்துட்ட..." என்றவளைப் பேச விடாமலே தடுத்து விட்டான் பாலா.

"போயிடு... அடிச்சுறக் கிடிச்சுறப் போறேன்... காலையில பார்த்த... இப்போ லவ்வா... கண்ணைப் பார்த்தாளாம்... காதல் வந்திருச்சாம்... என்னைப் பற்றி உனக்கு என்ன தெரியும்னு காதல் வந்திருச்சுன்னு நிக்கிற... படிக்க வந்தியா... அதை மட்டும் பாரு..." என்று அவனுக்கு இருந்த கொஞ்சமே கொஞ்சம் பொறுமையைப் பயன்படுத்திப் பேச...

"உன்னைப் பற்றி எனக்கு ஒண்ணும் தெரியாதா...? ஒண்ணே ஒண்ணு தெரியும்... உனக்கு நல்லா கோபம் வரும்... வேற எதுவும் தெரியாது. அதுதான் பிரச்சனைனா... இனிமே தெரிஞ்சுக்கிறேன். இல்லேனா நீயே சொல்லு... தெரிஞ்சுக்கறேன். அதுக்கப்புறம் வந்து சொல்லவா... அப்போ உனக்கு ஓ.கே.வா..." என்று மிகச் சாதாரணமாக... என்னவோ இதனால்தான் அவன் வேண்டாம் என்று சொல்வதைப் போல..

"ஆக்சுவலா... உன்னைப் பார்த்த அடுத்த நிமிசமே சொல்லலாம்னு நினைத்தேன்... ஆனா இது வாழ்க்கை இல்லையா... அதுதான் ஒரு அரை மணி நேரம் யோசித்தேன்... அப்போ கூட உன்கிட்ட சொல்லலாம்னு பார்த்தேன்... ஆனா பாவம். நம்மளவிட சீனியர் அவங்க ரெண்டு பேரும்... அதுதான் அவங்களுக்கு முதல்ல சான்ஸ் குடுத்தேன்..." என்றவளிடம்,



"அடேங்கப்பா... அரை மணி நேரம் யோசிச்சியா... ரொம்ப நேரம்தான். இதுல ப்ரையாரிட்டி வேற..." என்று அவளைக் கேலியாகப் பார்த்தவன்... "சரி... நானும் சொல்றேன். கேட்டுக்கோ. எனக்கு இந்தக் காதல்... கத்தரிக்காய்லாம் பிடிக்காது. போதுமா...?" என்றவனிடம்,

"காதல் மட்டும்தான் கேட்டேன்... கத்தரிக்காய்லாம் ஏன்டா இழுக்கற!" என்று அவனிடம் காமெடி பண்ண..

"ஏய்!" என்று கையை ஓங்கியவன்... ஏதோ நினைத்து இறக்கி விட்டான்.

"உன்னைப் பிடிக்கவில்லை... இதுதான் என் பதில். போதுமா... இதுக்கும் மேல ஏதாவது பேசுன..." என்று முடித்தான் பாலா.

"சரி. விடு... நான் மட்டும் லவ் பண்றேன்!" என்றாள் கூலாக.

"நீ என்ன லூசாடி... கிளிப் பிள்ளைக்குச் சொல்ற மாதிரி சொல்லிட்டு இருக்கேன்... எதையும் காதில வாங்காம உளறிட்டு இருக்க..." எனும்போதே ஆதியும், கீர்த்தியும் அங்கு வர...

பாலா... ஆதியிடம் வள்ளென்று விழுந்தான்.

"நான் போறேன்டா ஆதி...! இருந்தா என்னை மீறி எதுனாலும் பண்ணிடப் போறேன். எங்க இருந்துடா வந்தாளுங்க ரெண்டு பேரும்... ஒருத்தி நேத்துல இருந்து டென்சன் ஆக்குனா... இவ இப்ப அவளை மிஞ்சிட்டா..." என்றவனிடம்,

"இருடா... பேசுவோம்!" என்று கூறிக் கொண்டிருக்கும் போதே நிற்காமல் கிளம்பி விட்டான் பாலா.

ஆதிக்கோ கீர்த்தியை விட்டுப் போக மனமே இல்லை... பரிதாபமாகக் கீர்த்தியைப் பார்க்க...

கீர்த்திதான், "நீ போ ஆதி. நானும் கிளம்பறேன்..." என்று சொல்ல,

ஆதிக்கு மதுவின் மேல் கோபம் இன்னும் அதிகமாக... 'ச்சே... நல்ல சூழ்நிலையை இப்படி ஆக்கிட்டாளே...' என்று நொந்தபடி பாலாவைப் பிடிக்க ஓடினான்.

கீர்த்தி, மதுவிடம்... "ரொம்பத் திட்டிட்டானா மது... அவன் சரியான முசுடு. நீ கிடைக்கவெல்லாம் அவன் குடுத்து வச்சிருக்கணும்... இடியட் மாதிரிப் பேசறான். நீ ஃபீல் பண்ணாதே!" என்று தோழிக்கு ஆறுதலாகச் சொல்ல....

"நான்லாம் ஒண்ணும் ஃபீல் பண்ணல கீர்த்தி... அடங்காத காளை ஒண்ணு அடிமாடா போனதடி...'னு ரஜினி ஒரு பாட்டுப் பாடுவார்ல. அந்தக் கேரக்டர்ல வரும் இந்த கேஸ்லாம்.. தப்பாச் சொல்லலை. என் காதலுக்கு அவன் அடிமையாகும் காலம் வரும்.... ஸ்ஸ்ஸ்.... என்னமா கோபம் வருது... சரி... வா, போகலாம். ஆளை விட்டுப் பிடிப்போம்!" என்று இப்போதும் கூலாகச் சொல்ல...

"என்னடி... இப்படி லேசா எடுத்துக்கற. அவன் திட்டிட்டுப் போயிருக்கான். அதைக் கூட விடு. அவன் உன்னை லவ் பண்ணவே மாட்டான்னா என்ன பண்ணுவ?"

"இந்த உலகத்தில எல்லாமே ரெண்டே ரெண்டு விசயம்தான். ஆம்... இல்லை. இது ரெண்டுலதான் நாம் முடிவெடுக்க முடியாம திணறிட்டு இருக்கோம். பாலா ஆமானு சொன்னா... ஹேப்பி. இல்லேன்னா ரீட்ரை. தட்ஸ் ஆல். நீ... ரொம்பக் குழம்பாத. வா... என்னாச்சு உன் விசயம். உன் ஆளு என்னை வில்லியைப் பார்க்கிற மாதிரியே டார்த்துட்டுப் போறாரு..." என்று தோழியை அணைத்தபடி அவர்கள் வண்டியை எடுக்கச் சென்றாள்.

இதுதான் மது... எதிலும் தெளிவாக இருப்பாள். அதே நேரத்தில் தான் எடுத்த முடிவில் உறுதியாகவும் இருப்பாள்.

"என்னடி... ஆதிக்கு மரியாதை எல்லாம் தூள் கிளப்புது..." என்று கேட்க,



"என் ஆள் உன் ஆளை மரியாதை இல்லாமப் பேசக் கூடாதுன்னு சொல்லிட்டான்."

"அட்லீஸ்ட் அவன் இன்னைக்குப் பேசுனதுல இதையாவது கேட்போம்னுதான் ஆதிக்கு மரியாதை!" என்று பாவம் போலச் சொல்ல... தோழியர் இருவரும் சிரிப்போடே வெளியே வந்தனர்.

**தோ**ழர்கள் நிலையோ கவலைக்கிடமாய் இருந்தது.

"நல்லா லவ் பண்ணடா. உன்னைச் சொல்லணும். இனி நீ பைக் இல்லை... அது இல்லைன்னு இந்தப் பக்கம் என்னைக் கூட்டிட்டு வந்துடாதே. அதோட ஃப்ரெண்ட்ஷிப் கட்."

"நான் என்னடா பண்ணினேன்... எனக்குக் கூடத்தான் அவளைப் பிடிக்கலை..." என்று பரிதாபமாகச் சொல்ல,

"முதல்ல அவ ஃப்ரெண்ட்ஷிப்பை கட் பண்ணச் சொல்லு. அந்தக் குற... சாரி... கீர்த்திகிட்ட..." - திட்டியபடியே வந்தான் பாலா.

கேட்டபடியே வந்தான் ஆதி.

பேருந்து நிலையத்தில் இறங்கியவன், "டேய் மச்சி... இன்னைக்குக் காலையிலதான் உனக்கு மனசுக்குப் பிடித்தவங்களைப் பார்ப்பேனு சொன்னாங்க. ஒருவேளை அது மதுவா இருக்குமோ?" என வாய்விட,

"நல்லா வாயில வந்துரும், பார்த்துக்கோ. காலையில பாட்டியில இருந்து... பாப்பா வரை பார்த்தோம்."

"ஆனா பாட்டியும் பாப்பாவும் உன்கிட்ட லவ்வைச் சொல்லவில்லையே... இவதானே சொன்னா..." என்றவனைப் பாலா கொலைவெறியில் நோக்க... அவன் பார்வையினைப் பார்த்தவன்... "பை..." என்று சொல்லி விட்டு வந்த ஏதோ ஒரு பஸ்ஸில் ஏறினான் ஆதி.

**கீ**ர்த்தி நன்றாக ஆடக் கூடியவள் என்றால், மது முறையாகச் சங்கீதம் பயின்றவள். அதிலும் அவள்

உற்சாகமாக இருந்தால் அவள் கிடாரை எடுத்துக் கொண்டு பாட ஆரம்பித்து விடுவாள். இன்று பாலாவிடம் தனக்கு வந்த காதலை எண்ணியும்... அதை அவனிடம் சொன்ன உற்சாகத்திலும்... தன் ஆருயிர்த் தோழி காதல் வெற்றி அடைந்த சந்தோஷத்திலும் பாட ஆரம்பித்தாள்.

"இது நானா இது நானா
என்னை நானே ரசித்தேனா
மெய் தானா மெய் தானா
நான் மீண்டும் பிறந்தேனே...

கண்ணாளன் வந்த நேரம்
நான் காற்றில் கரைந்தேன்
என் வாழ்வில் நிறம் இல்லை
அவன் வண்ணம் சேர்த்தானே ஹோ...
இது நானா இது நானா
என்னை நானே ரசித்தேனா...

என் வானில் மேற்கே போன மேகம் ஒன்று
மீண்டும் வந்து சேர்ந்ததே
என் காட்டில் வெள்ளம் போட்ட வெள்ளம் வந்து
வேரைத் தேடிப் பாய்ந்ததே
பார்வையில் இனிமேல் பூப் பூப்பேன்
ஸ்பரிசத்தினாலே காய் காய்ப்பேன்
என் ஆசைக் கனவே எனை ஆளும் திமிரே
உன் கையின் நீளம் காலின் உறுதி
மார்பின் ரோமம் மன்மத மச்சம்
தனித்தனியே ரசிக்கவிடு
தவணையிலே துடிக்க விடு!"

அவளின் உற்சாகம் கீர்த்தியையும் தொற்ற... அங்கு அவள் சந்தோஷம் கடல் வெள்ளம் போல் ஆர்ப்பரித்தது.



கீர்த்தியுடனான சந்திப்பு முற்றுப் பெறாமல் போன ஆதி... அவளுடன் பேச அந்த நேரத்தில் அவளுக்குப் போன் செய்ய... அவனுக்கும் மதுவின் குரல் விழ....

கீர்த்தியிடமும் விசாரித்தான்.

அவளின் குரலில் உற்சாகமே ஆதியை அசைக்க... காலையில் வந்த காதலுக்கே இத்தனை வலிமையா என்று நினைத்தான்.

அதன் பிறகு ஆதி - கீர்த்தி தங்கள் காதலில் மூழ்க... பாலாவின் நினைவுகளைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டுக் கீர்த்தியின் அருகில் வந்தாள் மது.

தான் ஆதியிடம் பேச வேண்டும் என்று சைகையால் சொல்ல....

போன் கைமாறியது.

போனை வாங்கியவள்... "கீர்த்தி... அக்கா பாடிப் பாடி சோ டயர்ட். ஒரு கப் ஸ்ட்ராங் காபி..." என்று அவளை அங்கிருந்து அப்புறப்படுத்த... தோழி தன்னைப் பற்றி ஆதியிடம் பேசத்தான் தன்னை விரட்டுகிறாள் என்று புரிந்ததால்... புன்னகையுடன் நகர்ந்தாள்.

இது எல்லாம் ஆதிக்குக் கேட்க... கீர்த்தி என்ன இவளுக்கு வேலைக்காரியா... இப்ப இவ என்கிட்ட என்ன பேசப் போறா... ஒருவேளை பாலாகிட்ட பேசச் சொல்வாளோ என்றெல்லாம் யோசித்தபடி இருக்க....

"சாரி ஆதி... என்ன இருந்தாலும் நான் காலையில அப்படிப் பேசியிருக்கக் கூடாது. எனக்கு உண்மையிலேயே உங்க மேல கோபம்தான். பாலா அவளைத் திட்டினப்ப நீங்க அமைதியா இருந்தீங்கனு அவ சொன்னப்ப... அழுதபோது எனக்குத் திட்டின பாலாவை விட உங்க மேலதான் அதிகக் கோபம். ஏன்னா... சின்ன வயசில இருந்தே அவ விரக்தியா... பாசம், பந்தம் இது மேல எல்லாம் பற்று

இல்லாம இருந்தா. உங்க பார்வைதான்... உங்க காதல் தான் ரொம்ப வருசத்துக்கு அப்புறம் அவளை நார்மல் ஆக்கியிருக்கு. அவ உங்களை அந்த அளவு நினைச்சுட்டு இருக்கா. ஆனா நீங்க அப்படி இல்லேனு எனக்குக் கோபம் வந்துருச்சு..."

இப்போது ஆதி, "இல்ல மது... அவனுக்கு என் காதல் தெரியாது. அது மட்டும் இல்ல... அவன் கோபம் வரம்புக்கு மீறித் தாண்டுறவரை நானும் பார்த்துட்டு இருந்திருக்க மாட்டேன்..." என்று சொல்ல...

"ஓ.கே. ஆதி! ஆனா, இனி இந்த மாதிரி ஒரு சூழ்நிலை வராம பார்த்துக்கறது உங்க கையிலதான் இருக்கு. என் ஃப்ரெண்டை உங்க கிட்ட ஒப்படைத்து விட்டேன். இனி அவ உங்க பொறுப்பு..." என்றவள், கீர்த்தி தாயின் மரணம்... அதன் பின் அவள் தந்தையின் திருமணம்... அதில் மனம் வெறுத்திருந்த நிலை... தங்கள் இருவரின் நட்பு எல்லாம் சொன்னாள். சொன்னவள்... "அவ எனக்கு ஃப்ரெண்ட் இல்லை. என்னோட பொண்ணு மாதிரி. அவளைப் பத்திரமா பார்த்துக்குவீங்கல்ல.... இனி நீங்கதான் அவளுக்கு எல்லாமே..." என்றபோது மது ஆதியின் மனதில் எங்கோ சென்று விட்டாள்.

காலையில் அவள் மேல் இருந்த பிம்பம் எல்லாம் விலகி விட... அவளின் வார்த்தையில் இருந்த அவளது நட்பில்... அதிலிருந்த நேசத்தில் பிரமித்தான். இதை எல்லாம் விடக் கீர்த்தியைத் தன் மகள் என்று சொன்னதில் மொத்தமாக அவளைப் புரிந்தவன்... அவளின் நட்பு கீர்த்திக்கு எத்தனை தூரம் முக்கியம் என்பதனையும் உணர்ந்தான். அதை இப்போது மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளவும் முடிந்தது.

"கண்டிப்பா மது... இனி அவள் என் பொறுப்பு. உன் பொண்ணை நினைச்சுக் கவலைப்படாதம்மா...!" என்று கிண்டலாகச் சொல்ல... மது சிரித்தாள்.



இப்போது அவனாகவே, "மது... சொல்றேனு தப்பா நினைக்காதே. பாலா... கொஞ்சம் கோபக்காரன்..." என்று ஆரம்பிக்கும் போதே,

"பாலாவைப் பத்தி எல்லாம் தெரியும்... நான் பார்த்துக்கறேன். அவன் என்ன சொன்னாலும் நான் கவலைப்பட மாட்டேன். அதே நேரத்தில என்னோட காதலையும் நான் விட மாட்டேன்..." என்றவளிடம்...

"எப்படி மது... ஒரே நாள்ல..." என்றவனிடம்,

"தெரியலயே... வேணும்னா உங்க ஃப்ரெண்ட் கிட்ட கேட்டுச் சொல்றீங்களா... ஒரே நாள்ல என்னை எப்படிக் கவுத்தான்னு..."

சிரித்தவன்... "உனக்கு ஒரு விசயம் தெரியுமா...?" என்று காலையில் பாலாவின் ராசி பலன் விபரம் சொல்ல...

"உண்மையா ஆதி..." என்று விழி விரித்தவள்... "பார்த்தீங்களா... கரெக்டா அவனைத் தேடி வந்து சேர்ந்துட்டேனு உங்க... சாரி சாரி. என் பாலாகிட்ட சொல்லிடுங்க..." என்றபடி... அருகில் அவள் எப்போது போனைத் தருவாள் என்று நகத்தைக் கடித்தபடி பேசக் காத்திருந்த தோழியிடம்... அவள் வாயிலிருந்து அவள் கையை எடுக்குமாறு சைகை செய்து போனை ஒப்படைத்தாள் மது.

மதுவுக்கும் ஆதி சொன்ன வார்த்தைகளில்... இன்னும் தன் காதலின் பிடி இறுகியது போல் தோன்ற... அது கொடுத்த சந்தோஷ நினைவுகளிலேயே அப்படியே உறங்கப் போனாள். ஆனால், மனம் உற்சாகத்தில் பறக்க... தூக்கம் கண்ணில் வரவில்லை. பாலா மட்டுமே அவளது கண்களில் நின்றான்.

ஆனால், பாலாவோ... மது சொன்ன வார்த்தைகளில் எல்லாம் கோபப்பட்டாலும்... ஆதியின் வார்த்தைகளும் ஞாபகம் வந்து இம்சைப் படுத்த... முதல் முறை ஒரு

பெண்ணால் தன் உறக்கத்தை இழந்து தவித்தான். அது இன்னும் மதுவின் மேல் கோபம் கொள்ள வைத்தது.

அதே நாளில்தான் கீர்த்தனா என்கின்ற பெண்ணும் பாலாவின் வாழ்க்கையில் தனது வரவை மதுவிற்கு முன் நிகழ்த்தியிருந்தாள்... என்பதினை அப்போது யாரும் உணர முடியவில்லை.

## 41

**நா**ட்கள் வேகமாகச் சென்றன.

கீர்த்தி - ஆதி காதல் ஆழமாக ஆரம்பிக்க... பாலாவோ மதுவைக் கொஞ்சம் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. இருந்தாலும் மது, கஜினி முகம்மது போல்தான் தொடர்ந்தாள். பலன்தான் பூச்சியமாக இருந்தது.

கீர்த்தியும் மதுவும் இரண்டாம் வருடத்தில் கால் பதித்திருந்தனர்.

ஆதி... சென்னையில் தன் தந்தையின் கன்ஸ்ட்ரக்ஷன் தொழிலின் பிரிவில் தலைமை ஏற்க... பாலாவோ... தன் தந்தையின் தொழிலில் அல்லாமல்... அவனுக்கு மென்பொருள் துறையில் இருந்த ஆர்வத்தால்... அதில் அனுபவம் பெற... தன் தந்தையின் நண்பரின் அலுவலகத்தில் சேர்ந்தான். அதுவும் மிகக் குறைந்த சம்பளத்தில்.

அவன் தந்தைக்கு இதில் இஷ்டம் இல்லைதான். இருந்தாலும்... மகனின் போக்கிலேயே விட்டு விட்டார். அது மட்டுமில்லாமல் பன்னாட்டு நிறுவனத்தில் தனக்குக் கிடைத்த வேலையையும் விட்டு விட்டுத் தந்தையின் நண்பரின் அலுவலகத்தில் சேர்ந்ததற்குக் காரணம்... நிர்வாகம், தொழில்நுட்பம் இரண்டிலும் ஒரே நேரத்தில்... மிகக் குறைந்த நாட்களிலேயே அனுபவம் வேண்டும் என்று. அதில் அவனும் வென்றான்.



கீர்த்திதான் மதுவிடம் இதைப் பற்றிச் சொன்னாள்.

"நல்லதுதான் கீர்த்தி... அவனா... அவன் கால்ல நிக்கணும்னு முடிவு பண்ணியிருக்கிறான். அது ஒண்ணும் தப்பு இல்லை. என்ன... இவனுக்குக் கொஞ்சம் பொறுமை இல்லை. அதே நேரம் பிடிவாதமும் இருக்கு. இதெல்லாம் அவனுக்குத் தடைக்கல்லா இருக்கும். இதை எல்லாம் அவன் தாண்டி வர வேண்டும்... " என்று அவனை அறிந்தவளாய்ச் சொன்னாள்.

"இன்னைக்குப் பாலாவும் உங்களைப் பார்க்க வருவானு சொன்னேல..." என்றபடி தனது அறையினுள் நுழைந்தாள்.

இடைப்பட்ட நாட்களில் எப்போதாவது ஆதியைப் பார்க்க வருவான். அப்போது கீர்த்தியும் உடனிருப்பாள்தான். மது அவர்களை எந்த விதத்திலும் தொந்தரவு செய்ய மாட்டாள். பாலாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தால் மட்டும் எப்போதாவது பாலா வரும்போது அவளும் வருவாள். தூரத்தில் இருந்தே பார்த்துக் கொள்வாள். பாலாவுக்கு மட்டும் அது தெரியாமல் மறைக்கப்பட்டிருந்தது. இல்லாவிட்டால்... அவன் அவர்களைப் பார்க்கவே வர மாட்டான் என்ற காரணத்தால்...!

அன்றும் மது முடிவு செய்தாள். பாலாவைப் பார்க்க வேண்டும் போல் இருக்க... கீர்த்தியுடன் கிளம்பினாள்... கையில் ஒரு வாழ்த்து அட்டையுடன்.

கையில் இருந்த வாழ்த்து அட்டையைக் கீர்த்தி கையில் கொடுத்து, அவனிடம் கொடுக்கச் சொல்லியபடி... தூரத்தில் அவன் தன் பார்வையில் தெரியும்படி நின்று கொள்ள... கீர்த்தி மட்டும் ஆதி - பாலாவை நோக்கிச் சென்றாள்.

மூவரும் சிறிது நேரம் பேசியபடி கழிய... பாலா மட்டும் அவர்களிடமிருந்து விடைபெற நினைத்துக் கிளம்பப் போக... கீர்த்தி அவனிடம்... உள்ளுக்குள் உதறல் எடுத்தாலும்...

அதைத் தன் தோழிக்காக என்ற நினைவில்... கையில் வைத்திருந்த வாழ்த்து அட்டையை நீட்ட...

பாலா... அதை வாங்கியபடி, "என்ன இது?" என்று மட்டும் கேட்டபடி... ஏதோ ஒரு ஞாபகத்தில் அதைப் பிரிக்க... அது மியூசிக் கார்டு என்பதால் அதுவும் மதுவே பாடி அதை அத்துடன் இணைத்திருக்க... அது பாடத் தொடங்கியது.

பாடல் வரியிலேயே அது மதுதான் எனப் புரிய... வாழ்த்து அட்டையை மூடியவன்... கோபத்துடன் கீர்த்தியைப் பார்த்து முறைத்தபடி கார்டைக் கீழே வைக்க...

இப்போது கீர்த்தி, "மது கொடுத்தாள். நீங்க வேலைக்குப் போறதுக்கு வாழ்த்துச் சொல்லி..." எனத் தயங்கியபடி நின்றாள்.

அதே நேரத்தில் அவனது போனும் அழைக்க... அது 'கீர்த்தி' என்னும் பெயரைக் காட்ட, அட்டெண்ட் பண்ணாமல்... போனைக் கட் பண்ணினான். அது மதுவிடமிருந்து வந்திருக்கிறது என்று.

ஏனென்றால் செல்போன் அப்போது ஓரளவு புழக்கத்தில் வந்து கொண்டிருந்தது. மதுவும்... கீர்த்தியும் ஒரே நம்பரைத்தான் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தனர்.

ஆதிதான்... "டேய், எடுடா பாலா! போன் பேசுறதுல என்ன இருக்கு.. அவ என்ன உன்னைக் கடிச்சா கொல்லப் போறா..." என்று மீண்டும் வந்த அழைப்பை அட்டெண்ட் பண்ணச் சொல்ல... அதை அட்டெண்ட் பண்ணியவன்... அவன் பேசுவதற்கு முன்...

மது ஆரம்பித்து விட்டாள். "என்ன பாலா... போனை அட்டெண்ட் பண்ணக் கூடப் பயமா என்ன?" என்று கேட்க,

அவனோ, 'நீ என்னமோ பேசு...' என்று பேசாமலே இருந்தான்.

அவன் கோபப்பட்டிருந்தால் கூட அவள் டென்ஷன் ஆகியிருக்க மாட்டாள். அவன் அமைதி அவளைக் கொல்ல...



"டேய்... வாயைத் திறந்து பேசித் தொலையேன்... கார்டைப் பார்த்ததுக்கே வாயடைச்சுப் போயிட்டியா... என்ன...!" என்று எகிற,

இதற்கு மேல் அவனும் சும்மா இருப்பானா... "என்னடி... நானும் பார்த்துட்டே இருக்கேன். ரொம்ப பண்ற.... சும்மா போயிட்டு இருக்கேனு நெனச்சுட்டு இருக்கியா... ஒரு நாள் இல்லை ஒரு நாள்... என்கிட்ட வாங்கிக் கட்டிக்கப் போற. அப்புறம் அவன் என்னைக் கண்டபடி திட்டினான்னு கண்ணீர் வடிக்கப் போற... பிடிக்கலேன்னு சொல்றேன்ல. விட்டுத் தொலையேன்... கார்டு குடுக்கிறாளாம்... நான் கேட்டேனா என்ன..."

"சரி. கார்டு பிடிக்கலேனா... அதைக் கிழிச்சிப் போடு. அதை விட்டுட்டு ஏன் கீழே வச்ச...?" என்று அவனை ஏற்றி விட...

அவள் இங்கேதான் இருந்து பேசிக் கொண்டிருக்கிறாள் என்ற உண்மையும் புலப்பட...

"ஓ... அப்படீங்களா மேடம்..." என்றவன், கீழிருந்த கார்டை எடுத்துக் கொஞ்சம் கூடத் தயங்காமல் அதை இரண்டாய்க் கிழித்து... கீர்த்தியின் கைகளிலேயே கொடுக்கப் போக... மது வந்து அதை வாங்கினாள்.

பாலாவின் கோபம் ஆதியின் மேல் திரும்ப.... "என்னடா... என்ஜினியரிங் படிச்சு முடிச்சுட்டு... காதலுக்குத் தூது போற வேலை பார்ட் டைம்ல ஆரம்பிச்சு இருக்கியா... என்னை வரச் சொல்லிட்டு அவளையும் வரச் சொல்லி யிருக்க. தூது போற வேலை பார்க்கலேன்னா... அவ ஃப்ரெண்ட் உன்னோட காதலை கட் பண்ணிடுவேன்னு சொல்லிட்டாளா?"

இடையில் குறுக்கிட்டாள் மது. "எதுவா இருந்தாலும் என்கிட்ட பேசு. ஆதியையும் கீர்த்தியையும் திட்டாதே."

"நான் எதுக்கு உன்கிட்ட பேசணும்மா..." என்று மூன்றாம் மனுசியாய் அவளைப் பாவித்துச் சொல்வது போல் சொல்லியபடி, ஆதியிடம், "டேய், நான் வர்றேன்..." என்றபடி கிளம்ப...

அவன் கையைப் பிடித்து நிறுத்தினாள் மது. அவள் அவன் கையைப் பிடித்த விதம் அவனுக்கு இன்னும் எகிற...

"கையை விடுடி!" என்று அவளை உறுத்துப் பார்த்த விழிகளில்... அடக்கப்பட்ட கோபம் தெரிய... அவனுக்குள் இருக்கும் கோபம் எப்போது வெடிக்கும் என்று தெரியாமல்... ஆதி - கீர்த்தி அவனையே பார்த்தபடி நிற்க...

மதுவோ அவனின் கோபம் உணர்ந்தாலும்... தைரியமாக... "நான் வந்தாலே நீ ஏன் ஓடற... மனசுல ஒண்ணும் இல்லாதவனுக்கு என்ன பயம்? உனக்குப் பயம்... எங்கே என்கிட்ட பேச ஆரம்பித்தால்.... என்னை லவ் பண்ணிடுவியோன்னு பயம். அதுதான்... நீ இந்த மாதிரில்லாம் பண்ற....

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி... நான் கார்டைக் கிழின்னு சொன்ன அடுத்த நொடி என் பேச்சைக் கேட்டு பண்ணேல்ல... அதே மாதிரி எங்கே நான் லவ் பண்ணு... லவ் பண்ணுனு சொல்ற வார்த்தையையும் ஒரு நாள் செய்யப் போற. அதுதான் எனக்குப் பயந்து... என் வார்த்தைக்குப் பயந்து ஓடுற!"

பாலா... அவளை இகழ்ச்சியாகப் பார்த்தபடி நிற்க...

"உன்னைப் பார்த்துலாம் பயந்து ஓடலம்மா... துஷ்டனைக் கண்டால் தூர விலகுனு சொல்வாங்க. அது மாதிரின்னு நினைச்சுக்கோ!" என்றபோது... மது தானாகவே அவன் கையை விட்டாள்.

அதற்கு மேல் பாலாவும் அங்கு இல்லை.

மதுவே அவன் வார்த்தைகளில் கொஞ்சம் ஆடிப் போனாலும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.



கீர்த்தி அவளை ஆறுதல் படுத்தும் விதமாய்ப் பேசப் போக... அவளோ அவன் சொன்ன வார்த்தைகளினால் ஒன்றும் அடி வாங்கவில்லை... என்பது போல் காட்டிக் கொண்டாள்.

ஆதிக்கே பாலாவின் நடவடிக்கை சுத்தமாய்ப் பிடிக்கவில்லை.

அன்று இரவு...

மது... பாலா கிழித்துக் கொடுத்த கார்டை ஒட்டிக் கொண்டிருந்தாள். தன் தோழியைப் பார்த்த கீர்த்தி அவள் அருகில் அமைதியாக அமர்ந்தாள்.

"உனக்குக் கோபமே வரலையா மது... குடுத்த கார்டைக் கிழிச்சு நீட்டினப்ப..." என்று கேட்க,

"எனக்கா? அவன் மேலயா? நானே அவனுக்குத் தேங்க்ஸ் சொல்லிட்டு இருக்கேன். நீ வேற..." என்ற தோழியிடம்...

"எதுக்கு? கிழிச்சுக் குடுத்ததுக்கா...!" எனக் கோபத்தில் முறைக்க...

ஆசை ஆசையாய்த் தன் தோழி கொடுத்த கார்டைக் கிழித்ததோடு மட்டு மல்லாமல்... அவளைத் துஷ்டன் என்று வேறு பாலா இன்று சொல்லியதில் அவளுக்கு வருத்தம்.

அவன் மேல் இவளுக்குக் கோபம் வரவில்லையாம்... என்று கோபம் மதுவின் மேல் வந்தது.

அவள் கோபம் உணர்ந்து, தோழியின் தலையில் செல்லமாய்த் தட்டியவள்...

"அவன் கிழித்தது வருத்தம்தான். ஆனா பாரு... என் செல்லம். கார்டைச் சுக்கு நூறாக் கிழிக்காம... ரெண்டா குடுத்திருக்கான். ஒட்டுறதுக்கு வசதியா... நெகடிவ்லயும் பாசிடிவ் பார்ப்பா இந்த மது... அப்போ அவனுக்குத் தேங்க்ஸ்தானே சொல்லணும்..." என்று சிரித்துக் கொண்டே கூற...

தோழியின் காதல் நிறைவேற வேண்டும் என்ற கோரிக்கையைக் கடவுளிடம் மட்டும் மானசீகமாக வைத்தாள் கீர்த்தி.

தோழிக்காக வேண்டிய கீர்த்தியின் வேண்டுதலைக் கடவுளும் நிறைவேற்றினார்... காதலில் மட்டும்.

அது ஒரு சனிக் கிழமை.

சனிக்கிழமை தோறும் தோழியர் இருவரும் அருகில் உள்ள ஆசிரமத்திற்குச் சென்று... தங்கள் இருவருக்கும் தெரிந்த நடனம் மற்றும் பாடலை அங்குள்ள குழந்தைகளுக்குக் கற்றுத் தரச் செல்வதைத் தங்கள் வழக்கமாய்க் கொண்டிருந்தனர்.

இதுவே மதுவின் ஏற்பாடே... அன்றும் வழக்கம் போல் மது கிளம்பிக் கொண்டிருக்க... கீர்த்திகா... அவளிடம் எப்படிச் சொல்லலாம் என்று கிளம்பிக் கொண்டிருந்த மதுவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளின் பார்வையை உணர்ந்தபடிதான் அவளும் தயாராகிக் கொண்டிருந்தாள்.

"என்ன கீர்த்தி... ரெடி ஆகலையா?"

இனி, அவளிடம் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று... தயங்கியவாறே, "மது... நான் ஒண்ணு சொல்வேன். திட்டக் கூடாது..." என்றாள்.

"சொல்லு நீ... திட்றதா... வேண்டாமானு நான் முடிவு பண்றேன்."

"இன்னைக்கு ஒரு நாள் மட்டும் ஆதியைப் பார்த்துட்டு வரவா... நெக்ஸ்ட் வீக்ல இருந்து ஆதி பிஸி. அதனாலதான்..." என்று யாசிக்கும் குரலில் கேட்க,

கீர்த்தியைப் பார்த்து முறைத்தாள்.

"எத்தனை தடவை சொன்னாலும் புரியாதா... உனக்கு என்ன இஷ்டமோ... அதைப் பண்ணக் கத்துக்கோ. அதனால



மத்தவங்களுக்கு ஒரு கஷ்டமும் வராமல் இருக்க வேண்டும். அது மட்டும்தான் முக்கியம். இப்போ என்ன... ஆதியைப் பார்க்க வேண்டும். அவ்வளவுதானே.. போயிட்டு வா. நான் என்ன சொல்லப் போறேன்..." என்றபடி கிளம்ப...

மொபைல் அடித்தது.

ஆதிதான்... பேசி முடித்த கீர்த்தி... மதுவிடம் வந்தாள்.

"மது, நானும் வருகிறேன். ஆதியைப் பார்க்கப் போகவில்லை..." என்றவளை...

என்னாச்சு... என்ற விதத்தில் பார்க்க...

"இல்லை... பாலாவை ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போகணுமாம். அதனால் வர வேண்டாம் என்று ஆதி சொல்லி விட்டார்..." என்க....

மது பதறி விட்டாள். "என்ன கீர்த்தி... சாதாரணமா சொல்ற... பாலாவுக்கு என்னாச்சு?" என்று கேட்க,

"ஹையோ மது... நீ நினைக்கிற மாதிரி சீரியஸாலாம் இல்ல. பாலா கம்பெனி ஓபன் பண்ணியிருக்கார்ல. அதனால ஃப்ரெண்ட்ஸ் பார்ட்டி கேட்டிருப்பாங்க போல... அதுல பாலாவும் லைட்டா ட்ரிங்க்ஸ் எடுத்திருப்பார் போல... ஆனா அது அவருக்கு ஒத்துக்காம நேத்து ஒரே வாமிட்டாம். ஆதியோட ரூம்லயே தங்கிட்டாராம்..." என்று கூற...

அதற்கு மேல் அங்கு ஒரு நொடி கூட நிற்காமல் மது கிளம்பி விட்டாள்... ஆதியின் வீட்டை நோக்கி.

"மது, வேணாம். அது பசங்க மட்டும் தங்கியிருக்கிற வீடு. ஏதாவது பிரச்சனை ஆகிறப் போகுது..." என்ற கீர்த்திகாவின் கெஞ்சலை எல்லாம் அவள் காதில் வாங்க வில்லை.

ஆதி தங்கியிருந்த வீட்டின் முன் வண்டியை நிறுத்தி... கீர்த்தியை அங்கேயே நிற்கச் சொல்லியவள்... ஆதியைப் போனில் வெளியே வருமாறு அழைத்தாள்.

அவன் அவர்கள் அருகில் வந்து கொண்டிருக்கும்போதே... கீர்த்திகாவிடம், "நீ ஆதிகிட்ட பேசிட்டு இரு. நான் பாலாவைப் பார்த்துட்டு வருகிறேன்..." என்றபடி, ஆதியிடம் கூடச் சொல்லாமல் உள்ளே புகுந்தாள். அவன், "மது... மது..." என்று அழைத்ததைக் கூடக் கவனிக்காமல்.

ஆதி... கீர்த்தியிடம், "அவன்தான் கண்டுக்க மாட்டேங்கிறான்ல... விடுறாளா இவ... அவன் ஒரு ஆள்னு தொங்கிட்டு இருக்கா. இன்னைக்கு ரெண்டும் என்ன பண்ணக் காத்துட்டு இருக்கோ... இவன் கோபத்துல எத்தனை நாள் என் கூடப் பேசாம சுத்தப் போறானோ...?"

கீர்த்தி... "பசங்க தனியா இருக்கிற ரூமுக்கு இவ போய் ஆகணுமா?" என்ற கடுப்பில் நிற்க...

தவறாமல் அங்கே ரகளைதான் நிகழ்ந்தது.

இரவு முழுவதும் தூங்க முடியாமல் தவித்த பாலா... காலையில்தான் ஓரளவு நார்மலானான். அப்போதுதான் தூங்க ஆரம்பிக்க... மதுவுக்கும் கொஞ்சம் தயக்கம்தான். இருந்தாலும் பாலாவைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே இருக்க... மற்றவற்றைப் பின் தள்ளியபடி வீட்டினுள் நுழைந்தாள்.

பாலாவைப் பார்த்தவள்... அவன் படுத்திருந்த கோலத்தில், அவன் எப்படி இருக்கிறானோ என்ற கவலையெல்லாம் மாறி மனதினுள் சிரித்தபடி அவன் அருகில் அமர்ந்தாள்.

தலைவலி போல... அவனுக்கு. கைக்குட்டையை வேறு தலையில் கட்டியிருந்தான். சட்டையின்றி வெற்று மார்போடு படுத்திருந்தான். மெதுவாய் அவன் நெற்றியில் கை வைத்துப் பார்க்க... காய்ச்சல் எல்லாம் இல்லை என்பதில் ஆறுதல் அவளுக்கு.

அவள் அமர்ந்த நொடியிலேயே... அவனும் எழுந்து விட்டான். ஏற்கெனவே முந்தின நாளில் அடித்த மதுபானம்



காரணமாகச் சிவந்திருந்த கண்கள்... இப்போது கோபத்தில் இன்னும் சிவக்க... அவளைத் திட்டப் போனவன்... சட்டென்று, தான் இருக்கும் நிலை உணர்ந்து தன் சட்டையைத் தேட... அது அவசரத்தில் அவன் கைகளில் சிக்கவில்லை.

மது அவனிடம்... அவன் தேடிய அவன் சட்டையை எடுத்து அவனிடம் நீட்ட... அதை வாங்காமல் அவளை முறைத்தவன்... ஹேங்கரில் மாட்டியிருந்த ஆதியின் டி-சர்ட்டை எடுக்கப் போக...

"நீ இதை வாங்கலேனா... டெய்லி இதை நான் போட வேண்டிய சூழ்நிலை வரும். எப்படி வசதி...?" என்று கூற,

வேகமாய் அவளிடமிருந்து பறித்தான் பாலா.

அதை வாங்கிய வேகத்திலேயே அவனது கோபத்தின் அளவு அவளுக்குத் தவறாமல் உணர்த்த... இருந்தாலும் வெளியே போகாமல் அங்கேயே நிற்க... திரும்பித் தன் சட்டையை அணிந்தவன்... அவள் இன்னும் நிற்பதை உணர்ந்து...

"வெளியில போ... என்னைக் கொலைகாரனா ஆக்கிறாத! பொண்ணாடி நீ... பேச்சுலர்ஸ் மட்டும் தங்கியிருக்கிற ரூமுக்கெல்லாம் தனியா வர்ற... என்ன தைரியம் உனக்கு..." என்றவனை...

"உனக்கு உடம்புக்குச் சரியில்லேனு சொன்னா கீர்த்தி... அதுதான் உன்னைப் பார்க்க வந்துட்டேன். நான் என் பாலாவைப் பார்க்க வந்தேன். அவன் இங்க இருக்கும்போது எனக்கு என்ன பயம்... அதுதான் தைரியமா வந்துட்டேன்..." என்று தன் போக்கில் சொல்ல...

"உன் பாலாவா... அது யாரும்மா?" என்று கேட்க...

"தெரிஞ்சுட்டேதானே கேக்குற... பரவாயில்லை. இருந்தாலும் நீ கேட்கிறாய். நானும் சொல்லாமல் இருக்க முடியாது. கேட்டுக்கோ... இதோ என் கண் முன்னால

நிக்கிறான்ல... இந்த ஸ்வீட் கோபக்காரன்தான் என் பாலா... போதுமா?" என்று கண் சிமிட்ட...

ஏற்கெனவே இருந்த உடல் அசதியும்... தன்னை இந்தக் கோலத்தில் வேறு பார்த்து விட்டாள் என்பதும்... அவளைப் பார்த்தால் எப்போதும் வரும் கோபம் இன்னும் அதிகமாக...

"எங்கே... என் உத்தமத் தோழன்... உன்னை இங்க அனுப்பிட்டு அவன் ஆளோட கடலை போட்டுட்டு இருக்கானா... இன்னையோட உனக்கு முடிவு கட்டுறேன்..." என்றவன்..., அவளது கையைப் பிடித்து இழுத்தபடி அவளோடு வெளியே வந்தான்.

அவனின் முதல் தொடுகையை அனுபவித்தபடி வந்தவள்... இருவரும் வாசலை அடைந்தவுடன்,

"என்னடா.... முடிவு கட்டுறேனு சொல்லிட்டு... தொடங்குற..." என்று அவள் கேட்டதைப் புரியாமல் பாலா முறைக்க...

"என் கையைப் பிடிச்சுருக்க. அதைத்தான் சொன்னேன். இவ்வளவு இறுக்கமா பிடிச்சிருக்கிறதைப் பார்த்தா... எனக்கு முடிவு கட்டுற மாதிரி இல்லை... என்னோட உன் வாழ்க்கையைத் தொடங்குகிற மாதிரி இருக்குன்னு சொல்ல வந்தேன்..." என்று அலுங்காமல் சொன்னவளின் கையை இன்னுமா பிடித்திருப்பான்!

"அப்பா... வலிக்குதுடா. கையே செவந்திருச்சு..." என்று கையை உதறியபடி இன்னும் அவனை வெறுப்பேற்ற...

"டேய் ஆதி..." என்ற பாலாவின் பெருங்குரலில் ஆதி கொஞ்சம் கூட அதிராமல் அவனை நோக்கிச் சாதாரணமாக வந்தான்.

அவனுக்கு மதுவால் ஆதியிடம் கோபப்படும் பாலா வழக்கமாகி விட்டான்.



ஆதியின் அலட்சியமான போக்கு பாலாவிற்கு இன்னும் கோபம் ஏற்படுத்த...

"ஏன்டா ஆதி.... நீதான் ஒண்ண லவ் பண்றேன்னு அதை இழுத்துட்டு சுத்திட்டு இருக்கேனா... எனக்கு ஒரு ஏழரைச் சனியன வேற இழுத்து விட்ருக்க... அது கூட ஏழரை வருசம்தான்... இது எப்போ என்ன விடும்னு தெரியல..." என்று மதுவைப் பார்த்து நேரடியாகத் தாக்க ,

அவன் நாக்கின் சுழன்றடித்த பேச்சில் ஆதி... கீர்த்தி இருவரும் அதிர...

எவ்வளவோ கட்டுப்படுத்த முயன்றும்... மதுவின் கண்கள்... அவளையும் மீறிக் கண்ணீரை உகுக்க...

மதுவின் கண்களில் நீரைப் பார்த்த கீர்த்திக்குக் கோபம் தலைக்கேறியது... எதற்கும் அத்தனை லேசில் அழ மாட்டாள் மது... அவளையே அழ வைத்து விட்டான் என்று தவித்தவள்...

பாலாவிடம் பேசாமல் ஆதியிடம், "ஆதி... பாலாகிட்ட சொல்லி வை. ஓவரா பண்றாரு... அவருக்குப் பிடிக்கலைனா... அதோட நிறுத்திக்கச் சொல்லுங்க. அன்னைக்கு மதுவப் பார்த்துத் துஷ்டன்னு சொன்னாரு... இன்னைக்கு இப்படி சொல்றாரு... வார்த்தைகளைப் பார்த்துப் பேசச் சொல்லு..." என்று தைரியமாகப் பேசிய கீர்த்தியிடமும் பாலா எகிறினான்.

"ஏய்... என்ன...எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்லு... முன்னாடிதானே நிற்கிறேன்... அங்கே தூபம் போடற வேலை எல்லாம் வேண்டாம்... நீ என்னைக்கு எங்க ரெண்டு பேர்க்கு இடையில வந்தியோ அப்போதே எனக்கு நிம்மதி போச்சு..."

"டேய் பாலா, நிறுத்துடா... இன்னொரு வார்த்தை கீர்த்திய பற்றி வந்தது..." என்று ஆதியும் எகிற... அங்கு சூழ்நிலை தன்னால் கலவரமாவதை உணர்ந்தாள் மது.

பாலா கட்டுப்பாடு இல்லாமல் வரம்பு மீறிப் பேசுவதையும் தடுக்க வழி தெரியாமல்,

"கீர்த்தி, வா போகலாம்..." என்ற போதே...

அவளது குரல் 'ஙஞணநமன' வாசிக்க...

எப்போதும் அவளின் துடிப்பான குரலையே கேட்டிருந்த பாலாவிற்கு அவளின் கண்ணீரில் தளுதளுத்த குரல் சற்று அசைக்க... மதுவைப் பார்க்க... அவள் கண்ணீரோடு வெளியேறிக் கொண்டிருந்தாள்.

**பா**லா தலையில் கை வைத்துப் படுத்திருக்க... ஆதி அவனுக்குத் திட்டாபிசேகம் வழங்கிக் கொண்டிருந்தான்.

"எப்படிடா... இப்படிலாம் பேசுற... ஒரு பொண்ணு உன் பின்னாடி வர்றான்னா இப்படிலாம் பேசத் தோணுமா... உன்னை எல்லாம் போய் லவ் பண்றாளே, அவளைச் சொல்லணும்.."

நினைத்துப் பார்த்தவனுக்குத் தான் பேசிய வார்த்தைகளின் தாக்கம் அவனையே கூறு போட... மனது வலித்தது. தப்பு செஞ்சிட்டோமோ... அவளை அப்படிப் பேசி இருக்கக் கூடாதோ... அழுதுட்டு வேற போனாளே... என்று மனம் படபடத்தது... என்னதான் கோபம் என்றாலும்... அவன்... அடுத்த வீட்டுப் பெண்ணை அப்படிப் பேசியது தவறுதான் என்று மனச்சாட்சி குத்தியது.

"டேய் விடுடா... அவ என் முன்னால வந்தாலே எனக்கு என்ன பேசறதுனு தெரியாம பேசிடறேன்... நான் பேசினது தப்புதான்... அதுக்காக அவகிட்ட மன்னிப்புக் கூட கேட்கிறேன். போதுமா...? என்னைப் பேசிப் பேசி நீ வேற கொல்லாத...!" என்றவன்...

"இந்தா போன்... உன் ஆள் கூடப் பேசு. ரிலாக்ஸ் ஆகிடுவ... நான் பேசினதுல உன் கீர்த்தி கூட அப்செட்... மேடத்த கூல் பண்ணு!" என்று அவனிடம் இருந்து எஸ்கேப்



ஆகியவன்... மனச்சாட்சியின் கேள்வியிலிருந்து... தப்பிக்க முடியவில்லை.

மதுவின் கலங்கிய கண்கள் அவனை விடாமல் இம்சைப்படுத்த... தாங்க முடியாமல் ஒரு கட்டத்தில் ஆதியிடம் வந்தவன்....

"டேய் ஆதி... கீர்த்திய இன்னைக்குப் பார்க்கப் போவியா...?" என்று கேட்க,

"போவேன்... அதுக்கென்ன இப்போ?" என்று வள்ளென்று விழுந்தான்.

ஆதியின் கோபம் உணர்ந்தாலும்... அமைதியாகவே, "நானும் வருகிறேன்... அவ வருவாளா?" என்று மொட்டையாகக் கேட்க,

"கீர்த்தி வராம நான் மட்டும் எதுக்குப் போறேன்..." என்று ஆதியும் விடாமல் பேச,

"கீர்த்தி இல்லடா... அவளோட ஃப்ரெண்ட்."

"யாரு சந்தியாவா... அவ வர மாட்டாளே!"

தான் சொல்வது யாரை என்று தெரிந்து கொண்டே விளையாடிய ஆதியிடம் பொய்யாய் முறைத்தவன்...

"டேய்... வேணும்னே பண்ற. சரி... உங்க அன்னை தெரசா... அதுதான் மதுபாலா வருவாளா... அவகிட்ட நான் பேசினதுக்கு சாரி கேட்கணும்."

அவனை ஒரு மாதிரியாகப் பார்த்த ஆதி... "மது என்னைக்குக் கீர்த்திய தனியா விட்டுருக்கா... வருவா... போகலாம். ஆனா ஒண்ணு அவகிட்ட பிரச்சனை ஏதும் பண்ணின... நான் பொல்லாதவன் ஆகிடுவேன்... ஞாபகம் வச்சுக்கோ. உங்க ரெண்டு பேர் பிரச்சனையில மனுசன் நிம்மதியா லவ் பண்ணக் கூட முடியல..." என்று சொன்னவனிடம்... சமாதானமாய்த் தலை ஆட்டியவன்... மேலும், "இந்த ஊர் உலகத்துல காதல் காதல்னு

சொல்றாங்களேடா... அப்படினா என்னடா... எனக்கும் கொஞ்சம் சொல்லிக் குடுடா. சுத்தமா வர மாட்டேங்குது.... எனக்கும் ஒரு பொண்ணு மேலயும் வர மாட்டேங்குது... என்னை ஒருத்தி சுத்திச் சுத்தி வந்தாலும் அவ மேலயும் வர மாட்டேங்குது... ஏதும் ஹார்மோன் ப்ராப்ளமா இருக்குமோடா!" என்று சீரியசாக நக்கலடித்தவனைப் பார்த்து ஆதி முறைக்க...

சொன்னவனோ அந்த முறைப்பையெல்லாம்... தன் தோள் குலுக்கலில் அலட்சியப்படுத்தியபடி போனான்.

**வீ**ட்டிற்கு வந்த மது அமைதியாகவே இருந்தாள். கீர்த்திக்கு மனம் குலுங்க... மது இந்த அளவுக்கு எதற்காகவும் கலங்க மாட்டாள். இன்று இப்படி இருக்கிறாளே என்று அவளின் அருகில் சென்றவள்... "மது!" என்று அழைக்க...

கவலை படிந்த முகத்தில் இருந்தவள்... அதையும் மீறிப் புன்னகையினைத் தவழ விட்டாள். கலங்கிய கண்களைப் பட்டென்று துடைத்தவள்... "ஹேய் என்ன... எனக்கு ஒண்ணும் இல்ல... என்னைப் பார்த்து ஏன் இப்படி ஒரு லுக் விடற... பாலா என்னைத் திட்டிட்டான்தான். வருத்தம்தான் எனக்கு... ஆனா இதை எல்லாம் பார்த்தா... அவன் எனக்குக் கிடைக்க மாட்டான். வழக்கம் போல அவனை டிஸ்டர்ப் பண்ற வேலையை விட மாட்டாள் இந்த மது..." என்று கூற, அதில் அவளது வழக்கமான உற்சாகமும் வந்து சேர்ந்தது.

"அவனை என்னோட பாலாவா மாத்துறவரை இந்த மது ஓய மாட்டாள். அவனோட ஒவ்வொரு அணுவும் இந்த மதுவோட பேரைச் சொல்ல வைக்கல... நான் மது... மதுபாலா இல்ல..." என்று சொன்ன அவள் குரலில் அதை நிறைவேற்றும் தீவிரமும் இருக்க...



கீர்த்தி அவளிடம்... "உனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கா மது... அவனைப் பார்த்தா எனக்கு லவ் பண்ணுவான்னு நம்பிக்கையே இல்ல!" என்று கேட்க....

"அவன் மனசுல நான் எப்பவோ வந்துட்டேன். அது அவனுக்கே தெரியல. நான் சொல்றது மட்டும் உண்மைன்னா... அவன் இன்னைக்கு என்னைப் பார்க்க வருவான் பாரு... என் கண்ணுல தண்ணிய பார்த்துட்டான்ல... நான் அவன் மனசுல ஒரு சின்ன இடத்தில இருந்தாலும் அவன் இன்னைக்கு என்னைப் பார்க்க வருவான்..." என்றவள்... அன்று கீர்த்தியை மட்டும் இறக்கி விட்டவள்... தான் மட்டும் வீடு வந்து சேர்ந்தாள்.

பாலாவும்... ஆதியும்... ஆதி - கீர்த்தி வழக்கமாகக் கீர்த்தியைப் பார்க்கும் இடத்திற்குச் செல்ல... அங்கு மது வரவில்லை என்பதை அறிந்த பாலாவுக்கு ஏமாற்றத்தில் கோபம் வர...

கீர்த்திகாவிடம் கேட்டு அவர்கள் தங்கியிருந்த வீட்டிற்கு லேண்ட் லைன் போனை அடிக்க... மது போனை எடுத்தாள்.

"ஹலோ..." என்று சொல்ல,

மறுமுனை இன்னும் அமைதியாக இருக்க...

"ஹலோ யாருங்க?" என்றவளின் குரலில் மதுவின் வழக்கமான துடிப்பு இருக்க... பாலாவின் மனம் சமாதானமடைந்தது.

"நான்தான் பேசுறேன்..." என்றவனின் குரல் மதுவிற்கும் புரிய...

"எதுக்கு... சாரி சொல்ல போன் பண்ணுனியா... எனக்கு உன் சாரிலாம் தேவை இல்லை. எனக்கு உன்னோட காதல்தான் வேணும்... நீ சாரி கேக்க வருவேனுதான் நான் வராம இருந்தேன்..." என்றவளிடம்,

பெயர் சொல்லாமலே தன் குரலை உடனே அவள் அடையாளம் கண்டு கொண்டதில் ஆச்சரியத்தில் புருவத்தை உயர்த்தினான்தான்.

"நான் வருவேன்னு தெரியுமா... எப்படி?" என்று சந்தேகமாய்க் கேட்க...

"நீ என் பாலான்னா வருவேனு நினைச்சேன். வந்துட்ட..." என்று சொல்ல...

"நீ பொய் சொல்ற. சும்மா அடிச்சு விடாத... இன்னைக்கு உன்னைக் கொஞ்சம் அதிகமா பேசிட்டேன். அதனாலதான் மனசு கேக்காம வந்தேன். போதுமா... வேற ஏதும் கற்பனை பண்ணிக்க வேண்டாம். சாரி... நான் பேசுன எல்லாவற்றிற்கும்..." என்று போனை வைக்கப் போனான்.

"பாலா... பாலா... வச்சுடாத... நான் சொல்றதை மட்டும் கொஞ்சம் பொறுமையாக் கேளு. ப்ளீஸ்..." என்றவளின் பேச்சில் ஏதோ ஒன்று மனதைத் தொட... கொஞ்சம் இறங்கி...

"சொல்லு... கேட்கிறேன்!" என்று அவள் பேசுவதைக் கேட்க அவனும் ஆயத்தமாக...

"ஓ.. காட்! என் பாலாவா இது... கோபமே இல்லாம என்கிட்ட பேசுறான். இது கனவா... நனவா..." என்று மதுவும் ஆச்சரியமாகப் பேச...

அவளின் ஒவ்வொரு வார்த்தையிலும் வந்த 'என் பாலா...' என்ற வார்த்தையில் பாலாவும் இளகித்தான் இருந்தான்.

"எல்லாம் நிஜம்தான். ஓவரா சீன் போடாத. சொல்ல வந்த விசயத்தைச் சொல்லு..."

"ஹையோ... நீ என்கிட்ட கோபமே இல்லாமப் பேசுறியா... எனக்கு அப்படியே வானத்தில பறக்கிற மாதிரி இருக்கு. நானே ஒரு நிலையில இல்லடா. நான் என்ன பேச வந்தேன்னே மறந்துட்டேனே... சரி விடு. இன்னொரு நாள் சொல்றேன்!" என்று உற்சாகமாகப் பேசியவளை....



"ஏய்... கடுப்ப கிளப்பாதே. ஏதோ சொல்ல வருவதைப் போல பில்ட் அப் மட்டும் குடுத்த... ஒழுங்காச் சொல்லு."

"சத்தியமா பாலா... மறந்துட்டேன். இன்னொரு நாள் சொல்றேன் நான்..." என்று அப்பாவியாய்ச் சொல்ல...

"இன்னொரு நாள் நீ போனை மட்டும் பார்த்துட்டு இரு. நான் இனி போன் பண்ண மாட்டேன். வைக்கிறேன்..." என்றவனிடம்,

"ஆனா... நீ எப்படியும் இன்னொரு நாள் என்னைத் திட்டுவதானே... நானும் கண்ணைக் கசக்குவேன். ஸோ நீயும் எனக்குப் போன் பண்ணுவ... அப்போ சொல்லிக்கிறேன்..." என்று திட்டமாகச் சொல்ல,

பாலா சிரித்து விட்டான்.

"ஏய் மது... நான் திட்டறதெல்லாம் உனக்கு ஏறுதா... இல்லையா! கூலா சொல்ற..."

"பாலா, சிரிச்சியா நீ... என் பேரைச் சொன்னியா நீ... என்னடா ஒரே நாள்ல அதிர்ச்சியா குடுக்கிறாய். இத்தனை அதிர்ச்சியை உன் மது தாங்க மாட்டாளே..." என்று ஏற்ற இறக்கத்தில் பேச...

"நான் என்ன ஸ்பெசிமனா... சாதாரணமா பேசுனா... கனவா... நனவாங்குற! சிரிச்சா... அதிர்ச்சி கொடுக்கிறேன்னு சொல்றே... என்ன நக்கலா?"

"பாலா... என் கண்ணீருக்கு இத்தனை தூரம் வலிமையா! இது தெரிஞ்சிருந்தா... என் காதலைச் சொன்ன அன்னைக்கே கண்ணுல நாலு சொட்ட வச்சுட்டே சொல்லி இருப்பேனே... ஒன்றரை வருசம் வேஸ்ட் பண்ணிட்டியே மது..." என்று இதுவரை விளையாட்டாகப் பேசியவள்..

"பாலா..." என்று மட்டும் சொல்லி நிறுத்த...

"சொல்லு!" என்று அவனும் நிறுத்த...

"பாலா..." என்று மீண்டும் கொஞ்சம் காதலோடும் சொல்ல...

"ம்ம்ம்..." அவனும் இளக்கமாகப் பதில் அனுப்ப...

"ஐ லவ் யூடா...!"

இம்முறை பாலா போனை எல்லாம் வைக்கவில்லை. மது மேல் கோபமும் வரவில்லை.

அமைதியாகவே இருந்தான். அவன் எந்த மாதிரியான நிலையில் இருக்கிறான் என்று அவனுக்கே தெரியவில்லை.

"என்னடா... பதில் வர மாட்டேங்குது. எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்டா... ஏன்னு கேட்டால்லாம் தெரியாது. ஆனா ஐ லவ் யூ... ஏன்டா உனக்கு என்னைப் பிடிக்கலை. எனக்கு உன் கூடவே இருக்கணும் போல இருக்குடா. கொஞ்சம் கூட நான் உன்னை இம்ப்ரெஸ் பண்ணலையாடா..." என்று அவள் கேட்டபோது அதில் உண்மையான வருத்தமும் இருக்க...

பாலாவின் மனமும் மதுவின் மேல் மெல்ல மெல்லச் சாயத்தான் ஆரம்பித்திருந்தது. அதை உடனே ஒத்துக் கொள்ளவும் முடியாமல்....

"மது... எனக்கு மூணு நாள் டைம் தருவியா? நான்.... நீ கேட்டதுக்கெல்லாம் பதில் சொல்றேன்... ப்ளீஸ்!"

"சரி..." என்றபடி மது... மனம் இல்லாமல் போனை வைக்க...

பாலாவுக்கோ... மனம் முழுவதும் மதுவின் பேச்சுகளே நிரம்பியிருக்க... புன்னகையுடன் அவளது அழைப்பைக் கட் செய்தவன்... தனது மொபைலில் அவர்களது மொபைல் நம்பரை 'கீர்த்தி' என்ற பெயரில் ஸேவ் செய்திருந்தான். அதை இப்போது 'மதுபாலா' என்று மாற்றினான். மாற்றிய பெயரைத் திரையிலே வைத்துப் பார்த்துக் கொண்டே இருந்தான்.



அவள் பெயருக்குப் பின்னால் இருந்த தன் பெயருக்குப் புது அர்த்தம் கிடைத்தது போல இருக்க...

மது பாலா...

மது பாலா...

மது பாலா...

மூன்று முறை தனக்குள் உச்சரித்துப் பார்த்தவனின் இதயம்... அவனின் சம்மதம் கேட்காமலே மதுவிடம் சரணாகதி அடைந்தது.

**பா**லா முக்கியமான டிஸ்கஷனில் இருக்க... அவனது மொபைல் இடைவிடாமல் அதிர்ந்தது. அதைப் பார்த்தவனுக்கு மதுவின் பெயர் திரையில் ஒலிக்க... அதில் தோன்றிய அவளது பெயரே அவனுக்கு உடலில் அதிர்வலைகளை ஏற்படுத்த... தனக்குள் உருவான இந்தப் புது விதமான உணர்ச்சிக்குப் பெயர்தான் காதல் என்பதை முழுவதுமாக உணர்ந்தான். இருந்தாலும் மீட்டிங் இருக்கின்ற காரணத்தால் அவளின் போனை அட்டெண்ட் செய்ய முடியவில்லை. அதே நேரத்தில் மீட்டிங்கிலும் கவனம் செலுத்த முடியவில்லை.

பாலா என்கின்ற அந்த இளைஞனுக்குள் வந்த காதல் அவனை முற்றிலும் ஆக்கிரமிக்க... ஐந்து நிமிடத்திற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல்...

இடையிடையே மற்றவர்கள் அனுமதியுடன் வெளியேறி மதுவின் போனை அட்டெண்ட் செய்தான்.

"சொல்லு மது... என்ன விசயம்?"

"என்ன விசயமா? அடப் பாவி. சுத்தம்... டேய்... நீதானடா மூணு நாள் டைம் கேட்ட. அதுதான் என்ன பதில்னு கேட்கப் போன் பண்ணினேன்..."

"நான்தான் ஈவினிங் வர்றேன்னு ஆதிகிட்ட சொல்லியிருந்தேனே... அப்புறம் என்ன அவசரம்?" என்று வீம்பாக இவனும் பேச,

"நீ என்ன சொன்ன... மூணு நாள் டைம்னு. ஆனா என்னைப் பொறுத்தவரை 72 ஹவர்ஸ். அது கூட டென் மினிட்ஸ்க்கு முன்னாடி முடிஞ்சுடுச்சு. இதுவே என்னைப் பொறுத்தவரை லேட். அதுதான் போன் பண்ணினேன்..." என்றவளின் காதலில் கரைந்துதான் போனான்.

இருந்தும், "நேர்ல சொல்றேன். இப்போ வை!" என்று தன் மனதை மறைத்துச் சாதாரணமாகச் சொல்வது போல் சொல்ல...

"யெஸ் ஆர் நோ... அதை மட்டும் சொல்லேன்டா... வேற எதுவும் சொல்ல வேண்டாம். உன் மது பாவம்டா... தாங்க மாட்டாடா ஈவினிங் வரைக்கும்லாம்..." என்று அடம் பிடிக்க,

சிரித்தவன்... "உன்னை..." என்று மட்டும் செல்லமாகக் கோபிக்க...

"சொல்லுடா. ப்ளீஸ்... சஸ்பென்ஸ்லாம் தாங்க முடியாது என்னால..." என்றவளின் கெஞ்சல் தாங்காமல்... நிதானமாக,

"உன் பாலாவா இருந்தா நான் என்ன சொல்லி யிருப்பேன் மது.... அதுதான் என்னோட பதிலும்..." சொன்ன பாலாவுக்கு அப்போதே தன் காதலியை... மதுவை... அவள் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று மனம் துள்ள...

மதுவுக்கோ... வார்த்தை எதுவும் வராமல்...

"பாலா..." என்று சந்தோஷத்தில் குரல் கம்மியது.

அதற்கு மேல் அவனை நச்சரிக்காமல் கீர்த்தியிடம் விசயத்தைச் சொல்லத் துள்ளிக் குதித்து ஓடினாள் - மது என்கின்ற அந்த மதுபாலா. தன் பெயரில் மட்டும்தான் அவன் பாதியாக இருக்கப் போகிறான். வாழ்க்கையில் அல்ல என்பதை உணராதவளாய்... அதன் உரிமை வேறொருத்திக்குப் போகப் போகிறது என்பதை அறியாதவளாய்...



## 42

அதன் பிறகு வந்த நாட்கள் எல்லாமே அந்த இரு ஜோடிப் புறாக்களுக்குமே அவர்கள் காதலின் வசந்த காலமே.

பாலா மதுவின் காதலை ஒத்துக் கொண்ட பின்னர்... இவர்கள் பற்றிய கவலை இல்லாமல் ஆதி - கீர்த்திகா தங்கள் காதலில் திளைத்தனர்.

பாலாவினுள் மதுவின் காதல்... அவள் நேசம் அவன் உயிரோடும்... அவன் உள்ளத்தோடும் சீராடியது.

அவள் காதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் போராடினான் என்றே சொல்ல வேண்டும். அவள் காதல் பாலாவின் ஒவ்வொரு செயலிலும் மதுவைப் பிரதிபலித்தது.

எதற்கெடுத்தாலும் கோபப்படும் அவன் குணம்... கொஞ்சம் கொஞ்சமாக மாறி இருந்தது. எந்த ஒரு விசயத்திலும் அடுத்தவரின் நலனைப் பார்க்கும் குணமும்... அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அவள் குணமும் அவனுள் வரத் தொடங்கியிருந்தன.

பாலா தன் அலுவலகத்தை அப்போதுதான் தொடங்கி யிருந்த காரணத்தால்... மதுவுக்கு நேரம் ஒதுக்க முடியாமல் திணற... மதுதான் தனக்காக அவன் சிரமப்பட வேண்டாம் என்று வாரம் ஒரு முறை வந்து பார்த்தாலே போதும் என்று சொல்ல... முடிந்த அளவு அவளைத் தினம் பார்ப்பான். அதுவும் பத்து நிமிடம்தான்.

மது அவனுக்காகக் காத்திருக்கும் நேரத்தையும்... அருகில் உள்ள குப்பத்தில் உள்ள சிறார்களோடு உற்சாகமாகக் கழிப்பாள்... பாலா வரும்வரை.

அன்றும் அவன் தாமதமாக வர...

ஒரு கையால் தலையைக் கோதியபடி... மறு கையை அவளின் தோள் மேல் போட்டபடி, அவளின் அருகில் வந்து அமர்ந்த அவனிடம்... மது, "என்னடா இன்னைக்கு

வருவியோ மாட்டியோனு நினைச்சேன். வந்துட்ட..." என்று காத்திருந்த தவிப்போடு கேட்க,

"கொழுப்பாடி உனக்கு... சும்மா இருந்த ஒரு நல்ல பையனைக் காதல்ல புடிச்சு இழுத்து விட்டுட்டு... இதுவும் நீ கேட்பாய்... இன்னமும் கேட்பாய்!" என்றவன்...

"யாரு... நீ நல்ல பையன்..." - நக்கலடிக்க,

"பின்ன... தம் அடிக்க மாட்டேன். தண்ணி அடிக்க மாட்டேன். மட்டன் கூடச் சாப்பிட மாட்டேன். பொண்ணுங்க விசயத்தில... உன்னைத் தவிர, சுத்தமாவே அலர்ஜி. அப்போ நான் நல்ல பையன்தானே..." என்று கண் சிமிட்ட...

"அடப் பாவி! நீ சொன்னதில பொண்ணுங்கன்னு சொன்ன விஷயத்தில வேணும்னா ஒத்துக்கறேன்... நல்ல பையன்னு... ஆனா மற்றது எல்லாம் நீ டிரை பண்ணிட்டு ஒத்து வராம விட்ட விஷயங்கள். ஓ.கே.வா இருந்திருந்தா கன்டினியூ பண்ணியிருந்திருக்க மாட்ட. என்கிட்டயேவா காதுல பூ சுத்துற. வேற எவளாச்சும் வருவா.... அவகிட்ட சுத்து உன் கதையை எல்லாம்."

"பாலா, நீ தப்பிச்ச. பொண்ணுங்க விசயத்திலனாலும் உன் மது உன்னை நம்புறாடா..." என்றவனைக் கண்களில் பெருமை பொங்கப் பார்த்தவள்,

"அது என்னோட எக்ஸ்பீரியன்ஸ்ல சொன்னேன். ஏதோ நானா இருக்கப் போய் நீ எவ்வளவு இன்சல்ட் பண்ணினாலும்... அதை எல்லாம் தொடச்சுட்டு... சுத்திச் சுத்தி வந்து உன்னை கரெக்ட் பண்ணினேன். அது மட்டும் இல்ல... என்னைத் தவிர வேறொருத்தியை உன்னை நெருங்க விடுவேனா.... உன்னைச் சுத்தி இந்த மதுவோட காதல்... நெருப்பு வளையமா எப்போதும் இருக்கும். அபிமன்யூ சக்கர வியூகத்தைப் போல... என்னைத் தவிர வேறு யாராலும் உன்னை நெருங்க முடியாது..." என்று தன் காதலின் மீதிருந்த கரை காணா நம்பிக்கையில் பேச...



பாலா அவளது காதலில் கர்வம் கொண்டான் என்பதே நிஜம்.

"சரி விடு. டாபிக் மாறுது. நம்ம ரெண்டு பேருக்கும் இடையே இன்னொருத்தினு கேட்கவே நல்லா இல்ல... எனக்கு என் மது மட்டும் போதும்..." என்று இன்னும் அருகில் அமர்ந்தவனை.. விட்டு விலகி அமர்ந்தாள் மது.

அதைப் புரிந்தவனாய்... "அப்படியே தள்ளித் தள்ளி உட்கார்ந்து... அடுத்த பெஞ்ச்ல போய் உட்கார்ந்திடாதே..." என்று கிண்டலாகக் கூறி, அவளைத் தன் புறம் இழுக்க...

"பரவாயில்லை..." என்றபடி முனகிய மதுவிடம்...

கொஞ்சம் எரிச்சலாய், "நெருப்பு வளையம்... சக்கர வியூகம்லாம்னு வாய் கிழியப் பேசுற... நீயே அதை உடைத்து வர முடியாது போல..." என்றவன்... ஞாபகம் வந்தவனாய்... அவள் விட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்தான்.

"இன்னைக்கு நான் வந்தா என்ன... வரலேன்னா என்ன... போன் வேற அடிக்கடி பண்ணியிருக்க... ஏன் இன்னைக்கு என்ன ஸ்பெஷல்?"

"எங்க நீ வராம போயிடுவியோன்னு நெனச்சுத்தான்... கண்டிப்பா வரச் சொல்லிப் போன் பண்ணினேன். நல்ல வேளை வந்துட்ட..." என்றவள், அவன் புறம் திரும்பி நேராக அமர்ந்து... "சரி, எனக்கு விஷ் பண்ணு..." என்று கேட்க...

"எதுக்கு?" என்று புரியாமல் கேட்க,

"ஹ்ம்ம்ம்... உன்னைப் படைத்த கடவுள்... உன்னை இம்சைப் படுத்துறதுக்கும் ஒரு இம்சையைப் படைத்தார். அந்த இம்சையைப் படைத்த நாள்..." என்று கூற...

உற்சாகத்துடன், "ஹேய் மதும்மா... உனக்கு இன்னைக்குப் பிறந்த நாளா?" என்றபடி வாழ்த்துக் கூறியவன்,

"ஏன் என்கிட்ட முன்னாலேயே சொல்லலை. இந்தக்கு... கீர்த்தி கூட எனக்குச் சொல்லவில்லை. இருக்கு அவளுக்கு..." என்று கீர்த்தியைத் திட்ட ஆரம்பிக்க...

"உனக்கு அவளைத் திட்டலேன்னா... தூக்கமே வராதாடா... நான்தான் சொல்ல வேண்டாம்... என்று சொன்னேன்."

இதைச் சொன்னவுடன் அவன் கண்களில் வந்த கோபத்தில், "உன் காதலியோட பிறந்த நாள் தெரியலை உனக்கு... இதுல உனக்குல்லாம் கோபம் வேறயாடா...! போடா. ஆனா உன்னை என்னைக்கு லவ் பண்ண ஆரம்பித்தேனோ... அன்னைக்கே எனக்குத் தெரியும். உன்கிட்ட எல்லாம் ரொம்ப எதிர்பார்க்கக் கூடாதுனு. ஆனா, எனக்கு ஒரு சந்தேகம்டா. என்னரோட பிறந்த நாளே தெரியலை உனக்கு. நீ எல்லாம் ஆபீஸ்ல இருக்கிற எம்ப்ளாயியோட பிறந்த நாளை ஞாபகம் வைத்து பிரமோசன் கொடுக்கப் போகிறாயா... கிழிச்ச..." என்று சொல்ல,

"ஹலோ.. அவங்க பிறந்த நாள் எல்லாம் பயோ-டேட்டால இருக்கப் போகுது. பிரமோசன் கொடுக்கும்போது அவங்களோட பயோ-டேட்டாவைப் பார்த்துக் கொடுக்கப் போகிறேன். அது வேற டீல். அவங்களும் நீயும் ஒண்ணா... நாம அப்படிப் பண்ணினா... அவங்க உற்சாகமா வேலை பார்ப்பாங்க. இது ஒரு பிசினஸ் தந்திரம். அதனால நமக்குத்தான் லாபம். அதை விடு!" என்றவன்,

"அடப் பாவி. சுயநலக்காரன்டா நீ... உன்னை எல்லாம்... டேய் லூசு... நீ நல்லதுதான் பண்ற. அதை வெறும் பிசினஸ் மைண்டோட மட்டும் பண்ணாம... மனப்பூர்வமாகப் பண்ணு. புரிந்ததா?" என்று சொல்ல,

"சரி... சரி. அட்வைஸ் பண்ணியே நேரத்தை ஓட்டிடுவியே... நேத்தே சொல்லி இருக்கலாம்ல மது..." என்று யோசித்தவன்,



"இப்போ கடைக்கும் போக முடியாது. என்ன பண்ணலாம்... ஆனா நான் கிஃப்ட் குடுக்கணுமே..." என்று யோசித்தவனிடம்,

"ஒண்ணும் வேண்டாம். நீ ஃபீல் பண்ற மாதிரில்லாம் சீன் போடாதே..."

"சத்தியமா மது..." என்று அப்பாவியாய் மாறிக் கூறியவனிடம்,

"நம்பிட்டேன்டா. முதல்ல உன் முகத்தை மாத்து..." என்று சிரிக்க,

"மது... மது டார்லிங்!" என்றபோதே குரலில் பிசிறடிக்க...

"என்னடா... திணறுற?" என்று நிமிர்ந்த அவளுக்கு அவனின் பார்வை மாற்றம் புரிய....

"அது... அது வந்து... நான் கிஃப்ட்டும் வாங்கிட்டு வரல. உனக்கு கிஃப்ட்டும் குடுக்கணும். என்ன பண்ண... அதனால... இப்போதைக்கு என்கிட்ட இருந்து கொடுக்க முடிஞ்ச விசயம்னா... அது..." என்றவன், அவள் உதட்டைப் பார்த்தபடி,

"ஒரே ஒரு முத்தம் மட்டும்..." என்றபோதே முறைத்த அவளிடம்,

"ஹேய் மதும்மா... நீ நினைக்கிற மாதிரில்லாம் இல்ல. அதெல்லாம் ரொம்பத் தப்பு. ஜஸ்ட் கன்னத்தில் மட்டும்..." இன்னும் அவள் கோபத்தில் இருக்க...

இன்னும் இறங்கி, "அதுவும் கொஞ்சம் தப்புதான். சரி. கையில மட்டும் ப்ளீஸ்..." எனச் சிறு பிள்ளையாய்க் கெஞ்ச...

"நான்தானே காதலை உன்கிட்ட சொன்னேன். அது மாதிரி நான்தான் உனக்கு முதலில் தருவேன். அதுவரை நீ காத்திரு. சும்மாவா... ஒன்றரை வருசம்... என்னை அலைய விட்ட. அது கூட ஓ.கே. ஆனால் உனக்கு லவ் வந்த பின்னாடி கூட மூணு நாள் அலைய விட்டேல்ல... அதுக்குத்தான்டா இந்தப் பனிஷ்மெண்ட்."

"படுத்துறடி... இதுக்குல்லாம் நல்லா ஒரு நாள் அனுபவிப்ப என்கிட்ட... அப்ப இருக்க உனக்கு..." என்று சொல்ல,

"ஓ! சார்க்கு அப்படில்லாம் ஒரு எண்ணம் இருக்கா?" என்று கறாரான குரலில் கேட்க,

"அம்மா தாயே... உன்கிட்ட அப்படில்லாம் நடப்பேனா! ஏதோ காதலனா கொஞ்சம் பேசிட்டேன். இதையும் ஞாபகம் வச்சுட்டு என்னைய காய விட்டுறாதே. தாங்க மாட்டான் உன் பாலா!" என்று முன்னெச்சரிக்கையாய்ப் பேசியவனைப் பார்த்து, மது வெட்கப்பட்டுச் சிரித்தபடி அடிக்க...

அவளின் வெட்கத்தை ரசித்தவனாய், "நீயும் கொஞ்சம் கன்சிடர் பண்ணலாம் மதுச் செல்லம்... காதலைத்தான் நீ முதலில் சொன்ன... ஸோ ரொமான்ஸை முதல்ல நான் ஆரம்பிக்கலாம்ல..." என்று அவனின் ஏக்கம் நிறைந்த குரலில் இழுக்க...

அவனின் ஏக்கம் நிறைந்த குரலில் மதுவும் மயங்க... பாலாவுக்கு அதுவே ஏதுவாய்ப் போக... அவளின் அருகில் நெருங்கியவன், "மது, ப்ளீஸ். கன்னத்தில் மட்டும் ஒண்ணே ஒண்ணுடி..." என்றான்.

"வேண்டாம்டா..." என்று அவள் சிணுங்கிய விதமே அவளின் சம்மதத்தைச் சொல்ல...

அவளை இழுத்துத் தன் இதழை அவள் கன்னத்தில் பதிய வைக்கப் போக...

அவன் அருகாமை ஒருபுறம் தயக்கமும்... மறுபுறம் மயக்கமும் ஏற்படுத்த... தன்னை மறந்தவளாய் மது மாறிக் கொண்டிருக்க...

இருவருக்கும் இடையில் இருந்த மதுவின் மொபைல் திடீரென அலற... சட்டென்று தன்னிலை அடைந்து விலகிய மது... மொபைலைப் பார்க்க, அது 'கீர்த்தி...' என்று ஒளிர்ந்தது.



தோழியர் இருவரும் தனித் தனியே இப்போது மொபைல் வைத்திருந்தனர்.

அவள் விலகியது அவனுக்கு எரிச்சலைத் தர... அந்தக் கடுப்பிலேயே... போனைப் பார்க்க... அதில் இருந்த கீர்த்தியின் பெயரில் இன்னும் எரிச்சலானான்.

வந்த எரிச்சலில்... "குறத்தி... எனக்கு ஆப்பு வைக்கிறதுனா... கரெக்டா வந்துடுவாளே..." என்று சத்தமாக அலுக்க...

தன் மொபைலை அட்டெண்ட் செய்து கீர்த்தியிடம் பேசியவள்...

"இதோ வந்துட்டே இருக்கோம்..." என்று கட் செய்தவள்...

"வா பாலா... போகலாம். கீர்த்தியும் ஆதியும் வெயிட் பண்றாங்களாம்."

"இருக்கட்டும். நாம அப்புறம் போகலாம்..." என்று மீண்டும் அருகில் நெருங்க...

"ஆள விடுடா. கிளம்பு..." எனும்போதே கீர்த்தியும் ஆதியும் அருகே வர... வேறு வழியின்றி எழுந்தான் பாலா.

முன்னால் ஆதி - கீர்த்திகா நடக்க... பின்னால் சற்றுத் தள்ளி அவர்கள் இருவரையும் தொடர்ந்தனர், மதுவும் - பாலாவும்.

"ஏன்டா... யாரைக் குறத்தினு சொன்ன.... கீர்த்தியவா?" என்று கேட்க,

"ஆமாம். அவ மட்டும் போன் பண்ணலேன்னா... ச்சே!" என்று புலம்பியவனைப் பார்த்துச் சிரிக்காமல்...

"அது என்ன குறத்தினு சொல்ற அவளை... அதுவும் என்கிட்டயே... ஏன் அப்படிச் சொல்ற?" என்று கொஞ்சம் கோபமாய்க் கேட்க...

"ஆதிகிட்ட சொல்லிடாதே. அவ்வளவுதான் தாளிச்சுடுவான்..." என்றபடி... அன்று நடந்த கதையைக் கூற...

"யாரோ ஒருத்திக்கு வச்சுருக்கிற பட்டப் பேர்லாம் வச்சுக் கூப்பிட என் ஃப்ரெண்ட்தான் கிடைச்சாளா உனக்கு..." என்று முறைக்க...

"தெரியாம சொல்லிட்டேன்மா... ஆதியை விட நீ தாளிப்ப போல..." என்று அவளைச் சமாதானப்படுத்தியவாறே போனான் பாலா.

பின் ஆதியும், பாலாவும்... கீர்த்தியும், மதுவுமாய்த் தங்கள் திசைகளை நோக்கிப் பிரிந்தனர்.

பாலாவின் முகத்தைப் பார்த்தே ஆதி கண்டு கொண்டு... "என்னடா... பெரிய பல்பா இன்னைக்கு. இதுக்கே உம்முன்னு வந்தேனா... ஒன்றரை வருசம் நான் எத்தனை பல்பு கீர்த்திகிட்ட வாங்கியிருப்பேன். வா... வா... நாம குடுத்து வைத்தது அவ்வளவுதான்..." என்று தன் நிலைமையையும் சேர்த்துச் சொல்லி... வருந்த... பாலா உனக்கும் அதுதான் நிலைமையா என்பது போல் பார்த்து வைத்தான்.

ஆனால் மதுவோ... புலம்பியபடி வந்தாள்.

"பாலா ஆசை ஆசையா வந்தான் கீர்த்தி... பாவம்ல பையன்..." என்று வருந்த...

கீர்த்தியோ முறைக்க...

"சரி... சரி. முறைக்காதே. உனக்கு அட்வைஸ் பண்ணிட்டு நான் மட்டும் எல்லை மீற விடுவேனா... ஆனாலும் என் பாலா முகம் வாடினா... இந்த மதுவுக்கு மனசு தாங்க மாட்டேங்குதே!" என்று கூறியபடி, அன்றைய இரவை உறங்கா இரவாய்க் கழித்தாள்.

**ம**து - கீர்த்திகா மூன்றாம் வருடம் காலடி எடுத்து வைக்க...

பாலாவும் ஆதியும் தங்கள் தொழிலில் ஒவ்வொரு அடியும் வெற்றிகரமாய் எடுத்து வைக்க... அதே நேரத்தில்



தங்கள் காதலிலும் எந்த ஒரு பிரச்சனையும் இல்லாமல் சந்தோசமாக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்க... விதி... பாலா - மது காதலில் முதலில் தனது விளையாட்டைத் தொடங்கியது... மதுவின் தந்தை மூலம்.

பாலா... அன்றும் வழக்கம் போல் தாமதமாகத்தான் வந்தான். மது... முக்கியமான விசயம். கண்டிப்பாகப் பேச வேண்டும் என்று சொல்லியும் கூட.

மது சற்று எரிச்சலில், "அவ்ளோ சொல்லியும் கூட லேட்டாத்தான் வருவியாடா..." என்று கொஞ்சமே கொஞ்சம் கோபம் கூட ஆனாள்.

"என்ன மது... கொஞ்சம் அப்நார்மலா இருக்க... என்ன பிரச்சனை... சொல்லு!" என்று அவளது கோபம் கலந்த குரலில் கலக்காய்க் கேட்க...

"அப்பா... போன் பண்ணினாங்க..." என்றாள்.

"சரி... அதில் என் மதுக் குட்டிக்கு என்ன ப்ராப்ளம்?"

"வந்தது லேட்டு. மதுக் குட்டி... மாட்டுக் குட்டினு மட்டும் கொஞ்சு..." என்று சலித்தவள்,

"அப்பா எனக்கு ஜாதகம் பார்த்தாங்களாம்..." என்று நிறுத்த...

"படிச்சுட்டு இருக்கிற உனக்கு இப்போ எதுக்கு ஜாதகம் பார்த்தாங்க?" என்று சுள்ளென்று விழுந்தான் பாலா.

"இந்தக் கோபத்துக்கு ஒண்ணும் குறைச்சல் இல்ல. தெரியல... குடும்பத்தில் இருக்கிற எல்லோரோட ஜாதகமும் பார்க்கும்போது என்னோடதும் பார்த்திருப்பாரு போல..." என்று நிறுத்த...

"ஓ... அப்போ உன் கல்யாணத்துக்கான ப்ராசஸ்ல இல்லையா...? பயந்தே போயிட்டேன்மா. ஒரு நிமிசம் ஹார்ட் அப்படியே நின்னுடுச்சு தெரியுமா!" என்றவனின் பாவனையில்,

அவனைக் கையால் நாலு போடு போட்டவள்... "அப்படி இருந்தால் கூடப் பரவாயில்ல. இது அதை விட சீரியஸ். எனக்கு இன்னும் மூணு மாதத்திற்குள் தாலி ஏறணுமாம். இல்லேன்னா..."

"இல்லேன்னா..." என்று சாதாரணமாய்ப் பாலா கேட்க....

"நீ காலம் பூரா பிரமசாரியாம்..." என்று அதிரடியாய்ப் போடு போட்டவளைப் பார்த்து...

"என்னது?" என்று வாய் பிளந்தான் பாலா.

"உன் ஜாதகம் பார்த்து என்னைப் பற்றிக் கூடச் சொல்வாங்களா மது...?" என்று சத்தியமாகவே வாய் விட்டு, பாவம் போல் கேட்க...

மதுவோ அடக்க மாட்டாமல் சிரிக்க ஆரம்பித்தாள்.

"பேய் லூசு... அப்படினு டைரக்டா அவங்க சொல்லலை. எனக்குக் கல்யாணமே நடக்காதாம். அதைத்தான் இப்படி மாற்றிச் சொன்னேன். சூப்பர்டா. அதையும் நம்பிக் கேட்கிறாய் நீ... என் அறிவுக் களஞ்சியமே!" என்று கண்களில் நீர் கசியச் சிரித்தவளைப் பார்த்து,

"ரணகளத்திலயும் குதூகலம் பார்க்கிறவடி நீ...நான் பிரம்மசாரியாய் இருக்கிறது அவ்ளோ சந்தோஷமா என்ன.. உன் கழுத்துல தாலி ஏறலேனா கூட... நான் உன்னைக் கடத்திட்டுப் போய் என் பிரம்மசரிய விரதத்தை முடிச்சுட மாட்டேன்...." என்று கண் சிமிட்ட,

"உடனே சைக்கிள் கேப்ல ஃப்ளைட்டே ஓட்டப் பார்ப்பியே..." என்றவள்... தீவிரமாக, "அப்பா நேற்றுப் பேசினார் பாலா... இதைச் சொல்லி எனக்கு மாப்பிள்ளை பார்க்கப் போறேன்னு சொன்னார்."

"நீ என்ன சொன்ன அதுக்கு?" என்ற அவன் குரலில் அனலடிக்க...



"நான் சொல்லிட்டேன். மாப்பிள்ளை எல்லாம் தேட வேண்டாம். நானே பார்த்துட்டேன்... இன்னைக்கே அவனைத் தாலி கட்டச் சொன்னாலும் ஓ.கே.ன்னு..." என்று அவனைப் பார்த்துக் கண்ணடிக்க...

"உண்மையாவா மது! சொல்லிட்டியா உங்க அப்பாகிட்ட... அவருக்குக் காதல்னாலே பிடிக்காதுன்னு சொன்ன... அதனால உங்க அத்தையைக் கூடத் தள்ளி வச்சுட்டார்னு. எப்படி... இத்தனை தைரியமா... அவர் என்ன சொன்னார்?" என்றான், அவள் கைகளைப் பிடித்தபடி.

"அப்பாவுக்குக் காதல் பிடிக்காதுன்னு இல்லை. ஆனா அத்தை அப்பாகிட்ட லவ் பண்றேன்னு ஒரு வார்த்தை கூடச் சொல்லாம... பத்திரிகை எல்லாம் வச்ச பின்னாடி அவங்க லவ் பண்ண பையன் கூடப் போயிட்டாங்க. அதனால அப்பாவுக்கு நேர்ந்த அவமானம்... அதுதான் அப்பாவுக்கு மிகவும் கோபம். அதுல பாதிக்கப்பட்டது யாரு தெரியுமா? நானும் எங்க அம்மாவும்தான். அத்தை மேல அத்தனை பாசமா இருந்தாராம் அப்பா... எனக்கு என் அத்தை பெயர் கூடத் தெரியாது பாலா... அப்பாவுக்கு அதற்கப்புறம்தான் திருமணம் நடந்ததாம்.

"அவங்க அப்படிப் பண்ணிட்டுப் போனதுல... அவருக்கு மனைவிகிட்ட... அவர் பொண்ணுகிட்ட கூடப் பாசத்தைக் காண்பிக்க முடியாமப் போச்சு பாலா... அப்பா நல்லவர்தான். ஆனா எங்களை அவர்கிட்ட நெருங்க விட மாட்டார். அம்மாவுக்கு, அப்பாவுக்குப் பயந்தே வாழ்க்கை... அம்மாவும் பாசம்தான் காட்டுவாங்க. ஆனாலும் எனக்கு ஏதோ குறையுற மாதிரி ஃபீல் இருக்கும். எனக்கு அப்பா, அம்மா பாசம் சம அளவில கிடைக்கல. சில பொண்ணுங்களாம் அப்பா... அம்மா கூட எவ்வளவு ஃப்ரீயா இருப்பாங்க தெரியுமா!

"சின்ன வயசுல இருந்தே எனக்கு ஏக்கம். அப்போதான் கீர்த்தியோட பழக்கம் ஏற்பட்டுச்சு... என்னை

மாதிரி இல்லாம எல்லாம் கிடைத்திருந்தும்... அவங்க அம்மா இறந்ததில அத்தனையும் பறிபோன ஏக்கம் அவளுக்கு. அப்போ நான் காட்டுன பாசத்தில... அவங்க அம்மா மாதிரி நான்னு சொல்லிச் சொல்லி சந்தோசப்படுவா. அப்போதான் நான் ஒண்ணு புரிஞ்சுக்கிட்டேன். நமக்குக் கிடைக்காத ஒண்ணை அடுத்தவங்களுக்குக் கொடுத்து அவங்க சந்தோஷப்பட்டா... அது நமக்குக் கிடைக்கிறதை விட மிகப் பெரிய சந்தோஷம்னு. சோ எனக்குக் கிடைக்காத பாசத்தைக் கீர்த்திகிட்ட நான் காமிச்சேன். அவள் இழந்த பாசத்தை என் மூலம் பார்த்தா... அப்படியே இது நாள்வரை வந்துட்டோம். இப்போ உன்னோட காதல்தான்டா எனக்குக் கிடைச்ச மிகப் பெரிய வரம். எனக்கு நீ எப்படியோ அதே மாதிரி கீர்த்திக்கு ஆதி..." என்று கண் கலங்க முடித்தவளை...

அவளின் மன ஏக்கங்களைப் புரிந்து தன்னோடு இழுத்து அணைத்த பாலா... "என் மதுக் குட்டிக்கு... இவ்ளோ ஏக்கமா! நம்ம கல்யாணம் முடியட்டும். அதுக்கப்புறம் பாரு... என் செல்லம் ஏங்குன ஏக்கத்தை எல்லாம் போக்கடிக்கிறேன்..." என்றவன், ஞாபகம் வந்தவனாய்... "உங்க அப்பா என்ன சொன்னார்? அதைச் சொல்லு முதல்ல!" என்று கேட்க,

"அப்பாகிட்ட அவர் வழியில போயே மடக்கிட்டேன் நான்... அத்தை சொல்லலைனுதானே உங்களுக்குக் கோபம். நான் சொல்லிட்டேன்ல. அது மட்டும் இல்லாம உன்னைத் தவிர வேற யாரையும் திருமணமும் செய்ய மாட்டேன். உங்களுக்குப் பிடிக்கலேன்னா கூட பரவாயில்லை. என்னைப் பாலாவுக்கு மேரேஜ் பண்ணிக் குடுத்துடுங்க. இல்லேன்னா அத்தை வழிதான் என் வழின்னு சொல்லிட்டேன். முதல்ல ஒரு பத்து நிமிசம் அர்ச்சனைதான். அதெல்லாம் கேட்பாளா மது... போனை ஒரு அங்குலம் காதை விட்டுத் தள்ளி வச்சுட்டா.. ஆனாலும் எங்க அப்பா



நல்லவர்ப்பா... அப்புறம் அவராவே இறங்கி வந்து உன் அட்ரஸ் கேட்டார். நானும் உன் கம்பெனி அட்ரஸ் குடுத்துட்டேன். நாளைக்கு உன்னைப் பார்க்க வருவார்னு நினைக்கிறேன்..." என்று மிகப் பெரிய விசயத்தைச் சாதாரணமாகச் சொல்லி முடிக்க...

"அடிப் பாவி... எவ்ளோ பெரிய விசயத்தைச் சாதாரணமா சொல்ற... உன்னை..." என்றவன்... "எதுக்கு ஆபீஸ் அட்ரஸ் குடுத்த?" என்று யோசனையுடன் கேட்க...

"அப்போதைக்கு அதுதான் ஞாபகம் வந்துச்சு. இது ரொம்ப முக்கியமாடா...?" என்றவளிடம்,

அதுவரை இருந்த விளையாட்டுத்தனம் எல்லாம் நீங்கியவனாய், "மாமா நம்பர் குடு," என்றான்.

"எதுக்குடா... எதுனாலும் பேசிக் காரியத்தைக் கெடுத்துடாதடா..." என்றவளைக் கண்டு கொள்ளாமல் அவள் மொபைலைப் பிடுங்கியவன்... அதில் இருந்த அவள் தந்தையின் எண்ணைத் தனது மொபைலில் இருந்து அடிக்க...

"டேய்... என்னடா பண்ற?" என்று மது பதற...

"இருடி..." என்று அலட்சியப்படுத்தியபடி எதிர்முனையின் பதிலுக்காகக் காத்திருக்க....

மதுவின் தந்தை போனை எடுத்தார்.

"ஹலோ செல்வா அங்கிளா?" என்று கேட்க...

அவனது நம்பரை மதுவிடம் பேசிய போதே வாங்கி வைத்திருந்தார் அவர். அதனால்... "ஹ்ம்ம்ம்... சொல்லுங்க தம்பி. அதுக்குள்ளயும் விசயம் அங்க வந்துருச்சா! இந்தக் காலத்துப் பொண்ணுங்களாம்... ஹ்ம்ம்... நாளைக்கு நான் உங்களைப் பார்க்க வருகிறேன். அங்க மத்த விசயம் எல்லாம் பேசிக்கலாம்..." என்று போனை வைப்பதிலேயே குறியாக இருக்க...

"பொறுங்க மாமா..." என்றவனின் வார்த்தையில் அவரும் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்க...

"நாளைக்கு நீங்க என் ஆஃபீஸ் வர வேண்டாம்..." என்றவன், தன் வீட்டு அட்ரஸினைக் கொடுத்து...

"நீங்க நாளைக்கு என் வீட்டுக்கு வாங்க மாமா... அங்க அப்பா... அம்மா எல்லாரிடமும் சேர்ந்து பேசலாம்!" என்றவனை...

மருமகனாக ஏற்க அவரும் தயங்குவாரா... என்ன! "தம்பி..." என்றவர்,

"என் பொண்ணு... தப்பான ஆளைத் தேர்ந்தெடுத்திருக்க மாட்டான்னு நினைத்தேன். அது மாதிரியே நடந்திருச்சு..." என்று மறைமுகமாகத் தன் சம்மதத்தைச் சொல்லியபடி போனை வைத்தார்.

அவரது பதிலில் துள்ளிக் குதித்தான் பாலா.

"ஹேய் மதுக் குட்டிமா... உங்க அப்பா கிட்டத்தட்ட ஓ.கே.ன்னு சொல்லிட்டார்."

"எப்படிடா... எங்க அப்பாவை வீட்டு அட்ரஸ் குடுத்து இப்படி கார்னர் பண்ணிட்ட?" என்று விழி விரித்தவளிடம்,

"எல்லாம் என் செல்லம் குடுத்த ப்ராக்டிஸ்தான். உன்கூட இத்தனை நாள் பழகியிருக்கேன். யாரை எங்க அடிச்சா எங்க விழுவாங்கனு கத்துக்கலேன்னா எப்படி?" என்று அவளையே கலாய்க்க...

சற்று நேரத்திலேயே ஆதி - கீர்த்திக்கும் விசயம் போக....

ஆதி, கீர்த்தியிடம்... "பாரு கீர்த்தி... என்ன ஆட்டம் போடுறான்... இன்னும் மூணு மாசத்தில கல்யாணமாம். கடுப்படிக்கிறான்... வா. நாமும் மேரேஜ் பண்ணிக்குவோம். இப்போ லவ் பண்ணவன்லாம் ஆடுறான்..." என்று பாலாவின் சந்தோஷத்தில் தன் ஏக்கத்தையும் வெளியிட,



கீர்த்திகா சிரித்தபடி... "அவங்க மேரேஜ் பண்ணிக்கிறதுல உனக்கு என்ன பொறாமை..." என்று கேட்க,

"பொறாமையா... எனக்கா... சும்மா சொன்னேன் கீர்த்தி டார்லிங்... நம்ம மேரேஜ் பெரிய அளவில நடக்கணும். நம்மைப் பார்த்து இந்த ஊரே வியக்கணும். அதுவும் உன்னைப் பார்த்து. இப்படி ஒரு அழகியை இவன் மடக்கிட்டானேனு அத்தனை பேரும் என்னைப் பார்த்துப் பொறாமைப்படணும். அழகுடி நீ... ஐ லவ் யூ டி.. என் ஏஞ்சல்டி... என் பட்டுடி... என் அம்முடி..." - வாயில் வந்த அத்தனை வார்த்தைகளிலும் கொஞ்சியபடி கனவில் மிதக்க...

"ஹலோ பாஸ்... கனவில மிதக்காதீங்க. கொஞ்சம் கீழ இறங்குங்க..." என்று சொல்ல,

"என் ஏஞ்சல் மேடம்... கொஞ்ச நேரம் கூட கனவுல கூட டூயட் பாட விட மாட்டாளே... மது பாலாவோட மிஸஸ் ஆகப் போறா. நீ எப்ப இந்த ஆதியோட மிஸஸ் ஆகப் போற?" என்றெல்லாம் பேசியவனுக்கு... அப்போது தெரியவில்லை விதியின் கோர விளையாட்டைப் பற்றி.

இதற்கிடையே அன்றிரவே பாலா தன் தாய் தந்தையரிடம் மதுவை... அவளின் ஜாதகம்... தற்போதுள்ள நிலைமை பற்றிக் கூற... அவர்களே காதல் திருமணம் என்பதால் பெரிய எதிர்ப்பெல்லாம் இல்லை.

மதுவின் தந்தை பெயர் செல்வா என்று மட்டும் சொல்ல... அருந்ததிக்கும் தன் அண்ணன் ராஜன்தான் அது என்ற சந்தேகம் எல்லாம் வரவில்லை.

மதுவும், பாலாவும் அடுத்த நாளை ஒரு விதப் பதட்டத்துடன் எதிர் கொண்டனர். அதிலும் பாலாவுக்குக் கொஞ்சம் அதிகமாகவே இருக்க... மதுவின் தந்தையும் பாலாவின் வீட்டிற்கு வந்தார். வந்தவர்... தன்னை வரவேற்க நின்றிருந்த அருந்ததியைப் பார்க்க... அருந்ததிக்கும் ஜெகநாதனுக்கும் மயக்கம் வராத குறைதான்.

அதன் பிறகென்ன... நன்றாகவா போய் இருக்கும்... வாசல்வரை வந்தவர் வாசலுடனே திரும்பி விட்டார்.

பாலா ஒன்றும் புரியாமல் விழிக்க... ஜெகநாதன் அவர் யார் என்று விளக்க... மது தன் 'மாமா மகளா...!' என்று வியந்தான்.

அங்கிருந்து நேராக மது தங்கியிருந்த வீட்டிற்கு ஆவேசத்துடன் சென்ற மதுவின் தந்தை, மதுவிடம்... பாலாவை மறக்கும்படி சொல்ல... அவளோ அவர் சொல்வதைக் கேட்காமல் பிடிவாதம் பிடித்தாள்... தந்தையிடம் இருந்து அறை வாங்கியும் கூட!

அவளுக்கும் அதிர்ச்சிதான். பாலா தன் அத்தை மகன் என்று விசயம் தெரிந்து.

தன் உயிர் இருக்கும்வரை பாலா - மது திருமணத்திற்கு ஒத்துக் கொள்ள மாட்டேன் என்றும், மது பிடிவாதம் பிடித்தால்... அவள் தன் மகளாக மட்டுமே இருக்க முடியும். அதற்காக வருந்தவும் மாட்டேன். அதற்கு மேல் அவள் இஷ்டம்.... என்று முடிவை அவளிடம் விட்டு விட்டுக் கிளம்பி விட்டார். தங்கையைப் போல் மகளையும் தள்ளி வைக்க முடிவெடுத்தார் செல்வராஜன் கனத்த மனதோடு.

மதுவுக்கு அவரின் வார்த்தையில் வருத்தம்தான். என்ன செய்வது? அதற்காக எல்லாம் பாலாவை அவள் விட முடியுமா என்ன? தந்தையின் பிடிவாதமும் அவள் அறிவாள். பாசமாய் வளர்த்த தங்கையையே இத்தனை வருடமாகத் தள்ளி வைத்திருப்பவர்... தன்னை மட்டும் என்ன மன்னிக்கவா போகிறார்?

அந்தச் சூழ்நிலையில் கீர்த்திதான் அவளுக்கு ஆறுதலாய் இருந்தாள்.

ஆதியிடம் பாலா புலம்பிக் கொண்டிருந்தான்.

'தன் மாமா மகள் என்ற காரணமே தங்கள் காதலுக்கு எதிரியாக மாறியதை நினைத்து... என்ன ஆனாலும் சரி.



மதுவை அவள் சொன்ன மூன்று மாதம்... இல்லை, அதற்குள்ளாகத் தன்னவள் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்த அதே நேரத்தில்... மதுவின் அப்பா... பெரிய எதிர்ப்பெல்லாம் செய்யாமல் மதுவை... அவள் முடிவில் விட்டுச் சென்றதும் உறுத்தியது. 'அவர் ஏதாவது திட்டம் வகுத்து வைத்திருக்கிறாரோ...!' என்றும் நினைத்தான்.

மதுவுக்கோ ஏதோ தவறாகத் தங்களைச் சுற்றி நடக்கிறதோ என்ற சஞ்சலம் உண்டாக... அந்தச் சஞ்சலம் அவளது நடவடிக்கையிலும் தெரிய வர... பாலாவும் கீர்த்திகாவும் கவலையுற்றனர்.

வழக்கமான உற்சாகம் இல்லாமல் இருந்த மதுவைப் பார்த்த பாலா...

"என்ன மது... அன்னைக்கு அத்தனை தைரியமாய்ப் பேசினாய்... அத்தை வழிதான் உனக்கும் என்று... உங்க அப்பாவுக்கு இஷ்டமில்லாம நம்ம திருமணம் நடக்கப் பிடிக்கவில்லையா...? நான் வேறு அடுத்த வாரம் யு.எஸ். போகப் போறேன். அம்மா வேற உன்னைப் பார்க்கணும் கிறாங்க. நீ இப்படி டல்லா இருந்தேனா... நான் எப்படி என் வேலையில கான்சன்ட்ரேட் பண்ண முடியும்மா... உங்க அப்பாவோட சம்மதம் வேணும்னா... நாம போராடிக் கூட மேரேஜ் பண்ணிக்கலாம்டா... நீ மட்டும் இப்படி இருக்காதடா... எனக்கு மனசு வலிக்குது. என் சிந்தனை யெல்லாம் நீ... நீ மட்டும்தான் இருக்க. ப்ளீஸ்டா!" என்றவனைக் கண்ணில் வலியுடன் பார்த்தாள் மது.

"எனக்குப் பயமா இருக்குடா... ஏதோ சரியில்லாதது போல் இருக்குடா. நான்... நான் உன்னை மிஸ் பண்ணிடுவேனோன்னு..." இதைச் சொல்லும்போதே, அவள் கண்ணில் கரகரவென்று கண்ணீர் வடிய... பதறி விட்டான் பாலா.

"என்னடா... உன் மனசுல என்ன வச்சுட்டு இப்படித் தவிக்கிற, சொல்லுடா. எவ்வளவு தைரியமான பொண்ணுனு

நினைத்தேன். இவ்வளவுதானா உன் தைரியமெல்லாம்?" என்று பாலா அவளைக் கெஞ்சியும்... உசுப்பேற்றியும் பேச....

"இல்ல பாலா... எங்க அப்பா சம்மதம் சொல்லாததுக்கெல்லாம் வருத்தப்படல. சொல்லப் போனா நான் அதையும் எதிர்பார்த்திருந்தேன். ஆனால்... நீ என் அத்தை பையன் என்ற உறவே நம் காதலுக்கு வில்லங்கமாக வந்து விட்டது. சொல்லப் போனால் நம் உறவே நமக்குச் சாதகமாக அமையாமல் இப்படி நமக்குப் பாதகமாகப் போய் விட்டது என்றால்... ஏதோ தவறு நடக்கப் போவது போல் தோன்றுகிறது. எனக்கு இப்பவே உன் மதுவா எல்லா விதத்திலேயும் மாறணும் போல இருக்கு. உன் கூடவே இருக்கணும் போல இருக்குடா..." என்று மன்றாடியவளிடம்...

"சரி. கண்ணைத் துடை!" என்று தன் கைக்குட்டையில் துடைத்து விட்டவன்...

"ஒரு வாரம் பொறுத்துக்கோ. நானும் யு.எஸ். ட்ரிப் முடிச்சுட்டு வந்துடறேன். அந்த வீக்லயே நம்ம மேரேஜை வைத்துக் கொள்வோம்..." என்று தீர்மானமாகச் சொல்ல...

"உண்மையாவா... பாலா!" - அப்போதும் நம்பாதவளாய்க் கேட்க,

"ஆமாம்... எனக்கு இப்படி அழுது வடியுற மதுபாலா பிடிக்கலை. அதுக்காகவே..." என்றவனை அடிக்கக் கைகளைத் தூக்கியவள்... முடியாமல் அவன் தோளிலே சாய்ந்தாள் மதுபாலா.

"நான் உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்துறேனா பாலா... எனக்கும் உன்னை இப்படில்லாம் கார்னர் பண்ணப் பிடிக்கவில்லைதான். ஆனாலும் முடியவில்லை..." என்று கண்கள் கசியப் போக...

அவள் மூடை மாற்ற... "மது, நான் நேற்று ஒரு சாங் கேட்டேன். நீயும் கேளு. கேட்டதில இருந்து இதுதான் என் சுப்ரபாதம் தெரியுமா! நம்ம மேரேஜ் முடிந்த பின்னால்...



நமக்கே நமக்கான தனிமையான நேரத்தில்... அதை உனக்குப் போட்டுக் காட்டி... அப்படியே!" என்றபோதே....

அவளின் அக்னிப் பார்வையில்,

"பேசக் கூட விட மாட்டியே... சரி கேளு. எனக்கு ஏன் இந்தப் பாட்டு பிடிக்கும்..." என்று சொல்லித் தனது மொபைலில் இருந்து பாடலைப் போட்டான் பாலா.

ஓ... ஓ... மதுபாலா... இதுதான்... சுக நாளா
ஓ... ஓ... மதுபாலா... இதுதான்... சுக நாளா

இனி மாதம் பன்னிரண்டுமே
மலர் காலம் தொடர்ந்திடுமே
இளம் காதல் சபையினிலே
புது வேதம் மலர்ந்திடுமே
மதுபாலா... ஆ...ஆ...ஆ...
தாயாக மாறவா... தாலாட்டுப் பாடவா...

ஓ... ஓ... மதுபாலா... இதுதான்... சுக நாளா

ஊரெங்குமே ஓர் வெண்ணிலா நீதானே தேவி
ஏழை மகன் என் வீட்டில் செந்தூர ஜோதி
இளமைக் காலங்கள் ஒளி வீசும்
இன்ப வசந்தங்கள் நாமல்லவா!
எளிமைக் கோலத்தில் இருந்தாலும்
உந்தன் இதயம் நானல்லவா!
மதுபாலா... என் மதுபாலா
உன்னை மனதுக்குள் வரைந்தேன் வெகு நாளா...!

ஓ... ஓ... மதுபாலா... இதுதான்... சுக நாளா

ஸ்ரீராமனின் சீதை மனம் பூப் பூக்கும் நேரம்
ஊடல்களில் மாதங்களும் நாளாக மாறும்
திசைகள் எல்லாமே தடுமாறும்

இந்தத் திருமகள் பாதம் பட்டால்
உதயம் சொல்லாமல் இடம் மாறும்
உந்தன் விழி மலர் ஜாடை கண்டால்
மதுபாலா... என் மதுபாலா
உன்னை மனதுக்குள் வரைந்தேன் வெகு நாளா...!

ஓ... ஓ... மதுபாலா... இதுதான்... சுக நாளா
ஓ... ஓ... மதுபாலா... இதுதான்... சுக நாளா

இனி மாதம் பன்னிரண்டுமே
மலர் காலம் தொடர்ந்திடுமே
இளம் காதல் சபையினிலே
புது வேதம் மலர்ந்திடுமே
மதுபாலா... ஆ...ஆ...ஆ...

ஓ... ஓ... மதுபாலா... இதுதான்... சுக நாளா!

மதுவைத் தன் தோளில் அணைத்தபடி இருவரும் சேர்ந்து ஒன்றாகக் கேட்டபடி காதலில் கரைந்திருந்தனர்.

"மது!"

"ஹ்ம்ம்ம்...."

"மதுபாலா!"

"சொல்லுடா."

"மதுபாலா... என் மதுபாலா

உன்னை மனதுக்குள் வரைந்தேன் வெகு நாளா!

இதுதான் எனக்கு ரொம்பப் பிடிச்ச லைன். உன்னை நான் என் மனசுக்குள்ள வரைந்து வைத்திருக்கிறேன் மது. அதை அழிக்க யாராலேயும் முடியாது..." என்று உருக்கமாகச் சொன்னான்.

ஆனால்... தானே அவளை வலிக்க வலிக்க அழித்து விட்டு... கீர்த்தனாவின் உருவத்தை அதில் பதிக்கப் போவதை



உணராமல்... வரைந்தவளை அழித்து விட்டான் வலித்த போதிலும்... பதிய வைத்தவளை அழிக்க முடியுமா?

அவனின் சீரியஸான பேச்சினில் தன்னிலைக்கு வந்தவள்...

"டேய், என்னடா செமயா உருகற... தமிழ்ப் படம் அதிலும் காதல் படம் எதுவும் பார்த்துட்டு வந்துட்டியா என்ன... என்னை சிஸ்டம் ஆன் பண்ணும்போது பாஸ்வேர்ட்ல மட்டும்தான் வச்சுருக்கேனு பார்த்தா... மனசுல வேற வரைஞ்சு வச்சிருக்கியா...?" என்று கிண்டல் செய்ய...

"அடிப் பாவி. நான் புலம்பறது உனக்குக் கிண்டலா இருக்கா?" என்றவனைக் கட்டிக் கொண்டாள் மது.

அதன் பிறகு அவளுக்கு ஆறுதல் பல சொல்லியபடி அவனும் யு.எஸ். கிளம்பிப் போக...

விதி... ஆதி - கீர்த்திகாவின் காதலில் தன் வேலையைக் காட்ட ஆயத்தமாகியது பிரதாப் ரூபத்தில்.

பிரதாப்... கீர்த்திகாவின் அழகில் மயங்கிய அவன்... அதனால் வந்த காதல்... ஆதி - கீர்த்திகா வாழ்க்கையை மட்டுமின்றி... அவர்களின் தோழமைகளான பாலா - மது வாழ்க்கையிலும் கோரமாக விளையாடி எங்கோ இருந்த கீர்த்தனா - வினோத் வாழ்க்கையையும் மாற்றியது.

## 43

கடற்கரையின் அலைகள் கால்களை ஈரமாக்க... சிறிது நேரம் நின்ற கீர்த்திகா... பின் ஆதியின் அருகில் அமர்ந்தாள்.

"என்ன... விளையாடி முடிச்சாச்சா?" என்று புன்னகைக்க...

"நீ ஏன் வர மாட்டேங்கிற... வா..." என்று அவனையும் இழுத்து அலையில் நனைய வைக்க... மது இவர்களைத்

தூரத்தில் இருந்து பார்த்தபடி... பாலாவுடன் போனில் கலந்திருந்தாள்.

"என்னடா பண்ற?" என்று கேட்க,

"இந்த மரியாதை மரியாதைன்னு ஒண்ணு சொல்வாங்கல்ல... அப்படின்னா என்ன மது... அது நமக்கு வரவே வராதா! உன்னை விட மூணு வருசம் பெரியவன்தானே நான்... அட்லீஸ்ட் அத்தான் என்றாவது சொல்லலாமே... என் மாமன் மகளே...!" என்று கிண்டலடிக்க...

"சரிடா அத்தான்... இப்போ என்னடா பண்ற அத்தான்?" என்று பதிலுக்குத் தாக்க...

"சகிக்கலை.. அம்மா தாயே, நீ அத்தானும் போட வேண்டாம். ஒண்ணும் போட வேண்டாம். என்னை டேமேஜ் பண்றதையே பொழப்பா வச்சிருப்ப நீ...! என்ன பண்ணிட்டு இருக்கேன்னா கேட்ட... ஒரு கையில சிகரெட். ஒரு கையில தண்ணி. என்னைச் சுத்தி ஒரு நாலே நாலு வெள்ளைக்காரிங்க. இதை யெல்லாம் வச்சுட்டு என்ன பண்ண முடியுமோ அதைப் பண்ணிட்டு இருக்கேன்..." என்று கடுப்பேற்ற முயல...

அவளோ, "அப்போ நான் ஒரு மணி நேரம் கழிச்சுப் போன் பண்ணவா...! சார் முக்கியமான வேலையில இருக்கீங்க போல!" என்று போனை வைக்கப் போக...

பாலா மதுவிடம் சரணடைந்தான்.

அதன் பிறகு அங்கு அவர்களின் காதல் சாம்ராஜ்யம் போனிலேயே நடக்க ஆரம்பித்தது.

**கை**யில் பாதி பிரித்திருந்த நிலையில் பெரிய சாக்லேட்டைக் கீர்த்திகா ஆதிக்கு நீட்ட...

ஏதென்று கேட்க...



அவனது சக வகுப்புத் தோழன் பிரதாப் பிறந்த நாள் என்றும்... அவன் தனக்குக் கொடுத்ததாகவும் கூறியவள்... அவனிடம் மது செய்த கலாட்டாவையும் கூறினாள்.

"எனக்குக் கொடுத்ததை மது பறிச்சுச் சாப்பிடப் போனாளா ஆதி... அவன் அழவே ஆரம்பிச்சுட்டான். கீர்த்திக்குத்தான் வாங்கிட்டு வந்தேன். கீர்த்திதான் சாப்பிடணும்னு... மது அவனோட மல்லுக் கட்டுனா. ஏன் நாங்கள்லாம் உன் ஃப்ரெண்ட்ஸ் இல்லையா... எங்களுக்கு எல்லாம் கிடையாதான்லாம் சொல்லிக் கலாய்க்க ஆரம்பிச்சுட்டா... அவனைப் பார்த்தாலும் பாவமாத்தான் இருந்துச்சு. அதுக்கப்புறம் நான் இடையில் புகுந்து..." என்றவளை இடைமறித்து,

"மதுவுக்கு இல்லாத எதுவும் எனக்கும் வேண்டாம்னு சொல்லி இருப்ப... கரெக்ட்டா!" என்று சொன்னவனைப் பார்த்து வியந்த கீர்த்திகா,

"எப்படி ஆதி... இப்படி நேரில் பார்த்தது மாதிரி சொல்ற!" என்றவளை,

"பின்ன... அங்க உன் புராணம் ஓடும். இங்க அவ புராணம் ஓடும். இதுதானே வழக்கமா நடக்குது..." என்றவனை முறைத்தாள் கீர்த்தி.

அங்கு அப்படி நடக்க...

கீர்த்தியைப் பற்றித்தான் மதுவும் பாலாவிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

இப்போதும் அவள் பேச்சுதானா என்று பாலா மனதினுள் நினைத்தாலும்... வெளியில் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

காலையில் நடந்ததைக் கூறியவள்... "பாலா... அவனோட பிஹேவியர் வித்தியாசமா இருந்துச்சு. கீர்த்தி கையில இருந்த சாக்லேட்டை நான் வாங்கியவுடனே அவன்

முகம் ஒரு மாதிரி... எப்படிச் சொல்றது? டோட்டலா வேற மாதிரி ஆகியிருச்சு... அதை எனக்குச் சரியா சொல்லத் தெரியலை... பயங்கரமா என்னை முறைத்தான். அவன் என்னதான் பண்றானு பார்ப்போம்னு நானும் அவனிடம் விளையாண்டேன். நான் மட்டும் சாப்பிட்டு இருந்தா என்னை அடித்தே போட்டிருப்பான் போல்... கீர்த்தி வந்து இடையில பேசின பின்னாடிதான் நார்மல் ஆனான். அவன் கொஞ்சம் சாதுவான டைப் பாலா... ஆனா அந்த நிமிசம் அவனை அப்படி நினைக்கத் தோணலை. சம்திங் இஸ் ராங் இன் ஹிஸ் பிஹேவியர்... அவன் கீர்த்தியை லவ் பண்றானோனு தோணுது..." என்றபோது,

பாலாவும், "ஆமாம் மது... கீர்த்தியை நான் அன்னைக்கு ஆடிட்டோரியத்தில திட்டும் போது கூட அவன்தான் என்கிட்ட கீர்த்திக்குப் பரிந்து பேசினான்னு நினைக்கிறேன். அவன்லாம் ஒரு ஆளுன்னு நீ பயப்படுறியா... புள்ளப் பூச்சி அவன்லாம்..." என்று அவளைத் தேற்றியவன்...

"எப்போ பாரு கீர்த்தி... கீர்த்தினு... எரிச்சலா வருது."

"ஏன்டா உனக்கும் அவளுக்கும் ஒத்தே வர மாட்டேங்குது..." என்க,

"சேச்சே! அப்படில்லாம் இல்லை. அவளைப் பார்த்த முதல் சம்பவமே கொஞ்சம் எனக்குச் சரியா இல்ல. எல்லாரும் அவளுக்கு சப்போர்ட் பண்ணி என்கிட்ட கோபமாப் பேசினாங்களா... அது வேற... என்னதான் அவ உனக்கு முக்கியம் என்று தோணினாலும்... சில நேரம் இப்படிப் பேசி விடுகிறேன்... சாரி!" என்றவனிடம்,

"சரி. விடு. நீ என்னைக்குத்தான் மாறப் போறியோ... கொஞ்சம் சுயநலமா இருக்கியோனு தோணுதுடா... உனக்கு நீ... உன் சம்பந்தப்பட்ட விசயம்னா என்ன வேணும்னாலும் பண்ற... அடுத்தவங்க விசயத்தில அதை யோசிக்க



மாட்டேங்கிற... இதுதான் எனக்கு உன்கிட்ட பிடிக்காத விசயம்..." என்று சலிப்பாகச் சொல்ல...

"ஒரே பையனா வளர்ந்திட்டேன் மது... இப்போதான் உன்னைப் பார்த்த பின்னாடி... உன் குணத்தைப் பார்த்த பின்னாடிதான் நானே கொஞ்சமா மாத்திக்க ட்ரை பண்ணிட்டு இருக்கேன்மா..." என்று தன் குணம் புரிந்து பணிந்து... அன்று சொன்னவன்தான்... பின் வரும் தன் வாழ்க்கையில்... கீர்த்தனா என்ற பெண்ணிடம் தன் சுயநலத்தைத் தப்பிதம் இல்லாமல் நிறைவேற்றினான்.

கல்லூரி வளாகத்தில் கீர்த்திகாவும் மதுவும் அளவளாவிக் கொண்டிருக்க... அவர்களின் முன் பிரதாப் வந்து நின்றான்.

கீர்த்திகா அவனைச் சாதாரணமாகப் பார்த்து, ஹாய் சொல்ல....

மதுவோ அவனை... அவன் பார்வை மாற்றங்களை நோட்டம் விட ஆரம்பித்தாள்.

"கீர்த்தி... நான் உன்கிட்ட தனியாப் பேசணும். மதுவ போகச் சொல்லு..." என்றவன், மதுவிடம், "நீ கொஞ்சம் போறியா?" என்று தைரியமாகச் சொன்னான்.

"எப்போ பாரு அவ கூடவே ஒட்டிக்கிட்டு..." என்று சற்று மெல்ல முணுமுணுக்க...

"நான் போக மாட்டேன். என்ன பண்ணுவ?" என்ற அவள் குரலில் இன்றோடு அவனுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று உறுதி இருக்க...

கீர்த்தியும் அவனிடம், "ஆமா, பிரதாப்! அவ இல்லாம எனக்குனு ரகசியம் எதுவும் இல்லை..." என்றவளைக் கடுமையாகப் பார்த்தவன்...

"அப்போ அந்த ஆதிகூட இருக்கும்போது மட்டும் உனக்கு இவ ஞாபகம் வராதா... இவளும் அவன் கூட

மட்டும்தான் உன்னைத் தனியா விடுவாளா... நல்லா மாமா வேலை பார்க்கிறியா! நேத்துதானே பார்த்தேன். உன்னை அந்த ஆதி கூட..." என்று வேக வேகமாகப் பேசியவனை... ஆச்சரியமாகப் பார்த்தனர், தோழியர் இருவரும்.

அமைதியாகக் கல்லூரிக்கு வருவான், போவான். அவனுக்குள் இத்தனை ஆவேசமா.... என்று தோன்ற,

மதுவுக்குக் கீர்த்திகாவின் மீதான அவன் காதல் புரிய.... அவனைச் சமாதானப்படுத்தும் விதமாக... முதலில் தன்மையாகத்தான் பேசினாள்.

"பிரதாப்... உனக்குத்தான் தெரியுதுல்ல... அவ ஆதியை லவ் பண்றானு... அது தெரிந்தும் நீ இப்படிப் பேசுறது நல்லா இல்ல..."

"என்ன நல்லா இல்ல.... என்ன நல்லா இல்ல... இவ என் கீர்த்தி.. எனக்கு மட்டும்... எனக்கு மட்டும்தான். எனக்கு இவ இல்லேனா... முடியாது. இவளை நான் வேற யாருக்கும் விட்டுத் தர மாட்டேன். விட்டுத் தர மாட்டேன்..." என்று அவன் சொன்ன வார்த்தைகளையே சொன்னபடி படபடத்தவனை....

கீர்த்தி பயந்த விழிகளால் நோக்க... மதுவுக்கோ சுர்ரென்று ஏறியது.

"லூசாடா நீ... அவ இன்னொருத்தனை லவ் பண்றானு தெரிஞ்சும்... இப்படிப் பேசுற. அறிவு இருக்கா... இல்லையா உனக்கு... இன்னொருத்தனை நினைக்கிற அவ உன்னை எப்படி... கண்டபடி உளர்ற... கீர்த்தி, வா... நாம போகலாம்..." என்று கோபமாகப் பேசியவள் கீர்த்தியை இழுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர முயல...

நகர்ந்த கீர்த்திகாவின் கைகளைப் பிடித்து அவனும் இழுக்க...

"மது... இவன் கையை விட மாட்டேங்கிறான்..." என்றவளிடம், வார்த்தைகளை விட கண்ணீரே நர்த்தனமாட... மது கீர்த்தியின் கண்ணீரைத் தாங்குபவளா என்ன?



காளி அவதாரமானாள் மது.

"அவ கையை விடுடா!" என்று சொன்னவளின் கோப விழிகளை... அலட்சியம் செய்தவனாய்த் தான் பிடித்த நிலையிலேயே இருக்க...

எவ்வளவு சொல்லியும் அவன் ஒரு கல்லூரி மாணவன் போல் இல்லாமல்... கையை விடாமல் கீர்த்திகாவை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தவனை... ஒரு கட்டத்திற்கு மேல் தாங்காமல்...

மது... கோபத்தில் தன் காலில் இருந்த செருப்பைக் கழட்டியவள்... "நீ இப்போ விடலைன்னா... இதுதான் பிய்யும்... ஒழுங்கா விடுடா அவளை!" என்றபோதும், அவன் அவள் கையை விடாமல் கீர்த்தியை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தான்.

கூட்டம் வேறு கூட... அதை எல்லாம் அலட்சியம் செய்தவனாய்ப் பேசிக் கொண்டிருந்தான் பிரதாப்.

"கீர்த்தி கண்ணம்மா... நீ என்னை லவ் பண்றேனு சொல்லுடா. நான் உன்னை எவ்வளவு விரும்பறேனு தெரியுமா.... இவ என்னைப் போய் உன்னை விடச் சொல்றாடா... நீ நல்ல பொண்ணுதான். உன்னை இவதான் மாத்தி இருப்பா. ஐ லவ் யூடா..." என்று கொஞ்சல் மொழிகளை எடுத்து விட...

கொண்டவனின் கொஞ்சல் மொழிகள் காதில் தேனூற்றும்... கொண்டவன் இல்லாத மற்றவனின் வார்த்தைகள் தேனையா ஊற்றும்... தீயைப் பாய்ச்சின.

அதுவும் தங்களைச் சுற்றிக் கூட்டம் கூட... அதைத் தாங்க முடியாதவளாய்....

"மதுஊஊ... என்னை விடச் சொல்லுடி... இவன் பேசுறத எல்லாம் கேக்க முடியல!" என்று பரிதவித்த தன் தோழியின் வார்த்தைகளில் தன் நிதானத்தை இழந்த

மதுவின் கைகளில் இருந்த செருப்பு அவனை நோக்கிப் பாயப் போக...

மற்ற மாணவர்களும் கொஞ்சம் நிலைமை புரிந்து... மதுவைத் தடுத்து... பிரதாப்பை அப்புறப்படுத்த... விசயம் கல்லூரி சேர்மன் வரை போக... பிரதாப் கல்லூரியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டான்.

ஆதியிடம் புலம்பிக் கொண்டிருந்தாள் கீர்த்தி.

"ராஸ்கல்... கையப் பிடிக்கிறான் ஆதி... அதுவும் காலேஜ் கேம்பஸ்க்குள்ளேயே... அவனா அப்படினு தோணுது... என் கீர்த்தியாம்... கண்ணம்மாவாம்... எனக்குத் தெரியவே இல்லடா... இப்படிலாம் அவன் மனசுல இருக்கும்னு..." - அவன் பேசிய விதத்தில் ஆற்றாமையுடன் பேச...

ஆதிக்கு எரிந்தது... கையில் மட்டும் அவன் கிடைத்தால்... அவனை அடித்தே கொன்றிருப்பான் போல். அந்த அளவில் கோபத்தில் அவனும் இருக்க...

"ஒருத்தன் எந்த நோக்கத்தில் உன்கிட்ட பேசுறான்னு கூட தெரியாம இருந்தியா கீர்த்தி... உனக்குத்தான் தெரியல... மதுவுக்குமா தெரியல... சரி. விடு... போனது போகட்டும். அவன் இனிமே பிரச்சனை பண்ண மாட்டானு நினைக்கிறேன்... அதுக்கு மேல எதுனாலும் தொந்தரவு பண்ணினால்... எனக்கு உடனே போன் பண்ணு.... பார்க்க அம்மாஞ்சி மாதிரி இருந்துட்டு என்னவெல்லாம் பண்றானுங்க.." என்றபடி... கோபத்திலும் அவளைச் சமாதானப் படுத்தியவன்... மதுவிடம் அவளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லும்படி சொல்லிச் சென்றான்.

மதுவுக்குப் பெரிய பயமெல்லாம் இல்லை பிரதாப் மேல்... அதனால் கீர்த்தியைத் தேற்றினாள்.

"நம்மை மீறி அவன் என்ன பண்ணப் போறான்... உன்னை விரும்பியிருப்பான் போல... அதை அவன்



எக்ஸ்பிரஸ் பண்ண விதம் சரி இல்ல... மத்தப்படி அவன் நிதானமா இனி யோசிச்சுப் பார்த்தா... அவன் பண்ணின தப்பு அவனுக்குப் புரியும் கீர்த்தி...." என்று பிரதாப்பின் நிலையில் இருந்தும் யோசித்துப் பேச... ஓரளவு சமாதானம் ஆனாள் கீர்த்தி.

**ஆ**னால் பிரதாப்போ வேறு மாதிரி யோசித்துக் கொண்டிருந்தான்... முந்தின நாள் அவளை ஆதியுடன் சேர்ந்து பார்த்ததில்... அவனோடு சிரித்துக் கடற்கரையில் அலைகளில் ஆட்டம் போட்டவளை நினைத்து நொந்தும் வெந்தும் போனான்... தனக்கு முன் அவன் சொல்லியதால் தான் கீர்த்தி அவனைக் காதலித்து விட்டாளோ என்று எண்ணியவன் எதையும் யோசிக்காமல் தன் மனதைச் சொல்லிக் கீர்த்திகாவின் காதலைப் பெற அவளிடம் பேசப் போக...

அதற்குத் தண்டனையாய்க் கல்லூரி நிர்வாகமும் அவனை நீக்கி இருந்தது... காதலைச் சொன்னதற்கு இவ்வளவு பெரிய தண்டனையா என்று யோசிக்கும் போதே... மதுபாலா அதிகப்பிரசங்கியாகப் பண்ணிய வேலையே... கல்லூரி நிர்வாகம் தனக்குக் கொடுத்த தண்டனைக்குக் காரணம் என்று நினைத்தான்.

கீர்த்தி... கீர்த்தி மட்டும்தான் அவன் நினைவில் இருக்க... அவள் இன்னொருவனை விரும்புகிறாள் என்ற நிலையில் கூட அவனால் அதை ஏற்க முடியவில்லை...

வசதியானவன்தான் அவன்... ஆனால் சிறு வயதிலேயே தாய் வேறொருவனுடன் போய் விட... தந்தையும் கண்டு கொள்ளாமல்... வேலைக்காரர்களின் கவனிப்பில் வளர... ஒழுங்கான தாய் தந்தை வளர்ப்பிலே ஆயிரம் ஓட்டைகள் இருக்க... இவன் எப்படி இருப்பான்... நல்லவனாகவா இருப்பான்... தறுதலையாக மட்டுமே

இருந்தான். அவனுக்கு அவன் தனிமை போக்க பள்ளி வயதிலேயே சிகரெட். தண்ணி... போதை மருந்துவரை அத்தனையும் துணையாக இருந்தன... மாது மட்டும்தான் அவனுக்குப் பாக்கியாக இருக்க... அதில் அவனுக்கு விருப்பம் இல்லை... தன் அன்னை செய்த தவறில் பெண் மோகம் மட்டும் அவனுக்கு இல்லை.

தன் கல்லூரிப் பருவத்தில் அடியெடுத்து வைக்க... அங்குதான் கீர்த்தியிடம் அவன் மனதைப் பறி கொடுத்தான்... அவளின் அழகில்... அவளின் அமைதியான நடவடிக்கை களில்... அவளைத் தன் மனதில் மனைவியாகவே பாவிக்கத் தொடங்கி இருந்தான்... தன் அத்தனை கெட்ட பழக்கங் களையும் மறக்கத் தொடங்கி இருந்தான்.

வெளியில் அவன் தோற்றம் எளிமையாக... பார்த்தால் அப்பாவியாக இருந்தாலும்... மனதில் அவன் குரூரங்களின் ஒட்டுமொத்த உருவமாக இருந்தது யாருக்கும் புரியாமல்... தெரியாமல் போனது என்பதே உண்மை.

ஆனால், கீர்த்திகாவை அவன் நேசித்தது உண்மையாகத்தான்... அதில் எந்த விகல்பமும் இல்லை. அதெல்லாம் நேற்றுவரை... என்றைக்கு ஆதியுடன் அவளைப் பார்த்தானோ அப்போதே அவன் மனதின் குரூரம் அவனை ஆட்கொண்டது...

அவள் தனக்கு வேண்டும்... தன் காதலைச் சொல்ல ஆன தாமதத்தால் அவள் இன்னொருத்தனைக் காதலித்த விபரீதம்... இனித் தொடர்ந்து நடக்கக் கூடாது என்று அவளைத் தன்னவள் ஆக்க அவசரம் கொண்டது.

**கா**லமும்... நேரமும் கெட்டதாக ஆனால்... நடக்கும் அத்தனையும் கெட்டதாகத்தான் நடக்கும். அதை நிரூபிப்பது போல்... மது - கீர்த்தியின் வீட்டில் அவர்களுக்குத் துணை யாக இருந்த... வசந்தி அம்மாவும்... அவர்கள் வீட்டில்



காவலுக்கு வேலை செய்து வந்த அவர் கணவரும்... அன்று காலையில்தான் கிளம்பி இருந்தனர். அவர்கள் மகளுக்குத் திடீரென்று பிரசவ வலி ஏற்பட்டு விட்டது என்ற காரணத்தால்.

வழக்கம் போல... மது முன்னால் இருந்த தோட்டத்தில் நின்று தன் தாயுடன் பேசிக் கொண்டிருக்க... கீர்த்தி உள்ளே படித்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா... அப்பா இன்னும் என் மேல கோபமாத்தான் இருக்காரா என்ன..." என்கின்ற போதே முகம் வெளிர பார்வை... அவள் முன் நின்ற பிரதாப்பின் மீது நிலைக்க... அவசர அவசரமாக போனைக் கட் செய்தவள்... அவனிடம் எகிற ஆரம்பித்தாள்.

பாலா.. ஆதியே வீட்டிற்குள் வந்ததில்லை... விட மாட்டார்கள் இருவரும்... வாசல் வரைதான் இருவருக்கும் அனுமதி என்றிருக்க... பிரதாப் அநாகரிகமாக நுழைந்ததை அவள் பொறுப்பாளா என்ன...

மது - கீர்த்திகா... இருவரும் இரவு உடையில் வேறு இருந்தனர்.

"டேய்... எங்க வந்த...?" என்ற அவளின் கேள்வியை எல்லாம் சட்டை செய்யாதவனாய்...

கீர்த்தியைப் பார்க்க உள்ளே போக முனைவதிலேயே குறியாக இருந்தான்... அவன் இங்கு வருவான் என்றெல்லாம் நினைத்துக் கூடப் பார்க்க வில்லை... எப்போதும் போல் கதவு வேறு திறந்துதான் இருந்தது... அவளைத் தாண்டி உள்ளே சென்றவனைத் தடுத்து நிறுத்த முடியாமல் மதுவும் அவன் பின்னாலேயே ஓட ஆரம்பித்தாள். போகும் போதே ஆதிக்கும் போன் செய்து நிலைமையைச் சொல்லி உடனே வரும்படியும் சொல்ல மறக்கவில்லை அவள்.

மது உள்ளே வந்த போது... பிரதாப்பைப் பார்த்தபடியே திக்பிரமை பிடித்து நின்ற கீர்த்திதான் கண்ணில் பட...

நிலைமை... முன்னால் நின்றவனைப் கீர்த்தியின் அந்த பார்த்து மட்டும் அல்ல... அவன் கைகளில் இருந்த தாலியையும் பார்த்துதான்.

"மது!" என்று மட்டும்தான் வார்த்தைகள் வந்தன...

"பிரதாப்! என்ன பண்ற... நீ... வெளில போ... இதெல்லாம் ஓவர்டா... போலீஸ்க்கு போன் பண்ணினேன்... அவ்வளவுதான். உன் வாழ்நாளே போய்டும்..." என்று அவன் கைகளைப் பிடித்து அவனை முன்னேறாமல் செய்யப் பார்க்க... அவனின் வலிமையின் முன் மதுவின் வலிமை எம் மாத்திரம்!

மதுவை உதறிவிட்டுக் கீர்த்தியின் அருகில் சென்றான்.

மது வாசலிலும் பார்வை வைத்துக் கொண்டே... ஆதி எப்படியும் வந்து விடுவான்... அதுவரை இவனைச் சமாளித்தால் போதும் என்று முடிவுக்கு வந்தவளாய் அவனோடு பிடித்தபடி... போராட ஆரம்பித்தாள்.

"கீர்த்தி, நீ வெளிய போ... ஆதிக்குப் போன் பண்ணிட்டேன்... இவன் என்னை ஒண்ணும் பண்ண மாட்டான்... நீ போ!" என்றவளை விட்டுப் போக மனம் இல்லாமல் அங்கேயே நின்றாள் கீர்த்தி...

"கீர்த்தி, நான் சொல்றேன்ல. நீ போ..." என்று மது பிரதாப்பைப் பிடித்தபடி கத்த...

கீர்த்தியோ... "இல்ல. நான் போக மாட்டேன்... நீயும் வா!" என்ற போதே பிரதாப்பின் கைகள் கீர்த்தியைச் சுற்றி வளைத்தன.

"விடுடா அவள..." என்றவளைச் சுவரோரமாய்த் தள்ளியவன் கையோடு கொண்டு வந்திருந்த தாலியைக் கீர்த்திக்குக் கட்ட... வெற்றிச் சிரிப்போடு ஆயத்தமானான் பிரதாப்.



கீர்த்தியின் நிலைமையைச் சொல்வதென்றால்... என்ன நடக்கிறது... என்று உணரவே அவளால் முடியவில்லை... மூளை வேலை நிறுத்தம் செய்து விட்டது போல இருக்க... நாக்கு மேல் அன்னத்தில் ஒட்டிக் கொள்ள... வெளிறிய முகத்துடன் மதுவைப் பார்க்க...

அவன் தள்ளி விட்டதில் நெற்றியில் இருந்து ரத்தம் வேறு மதுவுக்கு வந்து கொண்டிருந்தது...

எழவே முடியவில்லை... ஆதி இப்போதைக்கு வர மாட்டான் போல... என்று தோன்ற... கீர்த்தியிடம்... "சொல்லித் தொலையுறேன்ல... அவனைத் தள்ளி விட்டுட்டு வெளில போ... கீர்த்தி... ஏன் கீர்த்தி இப்படி நிக்கிற...?" என்று அவள் கோபத்தில் கக்கிய வார்த்தை எல்லாம் கீர்த்தியின் காதில் விழுந்தாலும், அவளுக்கு அதிர்ச்சியில் எதுவும் செய்ய இயலவில்லை... நின்ற இடத்திலேயே நின்றாள் அவள்.

கீர்த்தியின் அதிர்ச்சியை உணர்ந்த மது... இதற்கு மேலும் தான் எதுவும் செய்யாமல் இருந்தால்... விபரீதம் தன் தோழியின் வாழ்வில் நடந்தே விடும் என்பதை உணர்ந்தவளாய்... தன் உடல் பலம் அத்தனையையும் திரட்டி... எழுந்தவள்... ஆவேசத்துடன் அவர்கள் அருகில் சென்றாள்.

அவள் எழுந்து வந்ததை எதிர்பார்க்காத பிரதாப் சற்றுத் தடுமாற... அதைப் பயன்படுத்தி... அவன் கையில் இருந்த தாலியை வேகமாகப் பறித்து வெளியே எறிய அது அவர்கள் அடுக்கி வைத்திருந்த செருப்பின் மேல் விழுந்தது.

அவனின் தாலியைப் பறித்துக் கீழே போட்ட உத்வேகத்தில் மது அவனை எகத்தாளமாகப் பார்க்க... பிரதாப்பின் கோபம் தாறுமாறாக ஓட... கீர்த்தியை விட்டு விட்டு... மதுவின் கழுத்தைத் தன் கைகளால் நெரிக்க ஆரம்பித்தான்.

மது ஒன்று முடிவு செய்தாள்... தனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை... கீர்த்தி இவனிடம் இருந்து இப்போதைக்குத் தப்பிக்க வேண்டும் என்று நினைக்க... நினைக்கும் போதே பாலாவின் நினைவு வேறு வர... இனி பாலாவைப் பார்ப்போமோ என்று கூட நினைத்து விட்டாள்.

கைகளால் கீர்த்திக்குச் சைகை செய்தாள்... போகச் சொல்லி...

கீர்த்திக்கு இப்போதுதான் உணர்வு வர... மதுவை அவன் கைகளில் இருந்து மீட்கப் போராட ஆரம்பித்தாள்...

இரு பெண்களின் போராட்டமும் அவனிடம் எடுபடாமல் போக... மது ஒரு கட்டத்தில் மயங்கிப் போனாள்...

அதே நேரம் ஆதியும் வர... தோழியர் இருவருக்கும் நிம்மதி வர... ஆதி வந்து மதுவை வலுக்கட்டாயமாகப் பறிக்க... மது அப்போது காப்பாற்றப்பட்டாள்.

கீர்த்தி ஆதியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழ...

"நான் வந்துட்டேன்லமா... இவனை இன்னைக்கு என்ன பண்றேன்னு பாரு..." என்று பிரதாப்பை நோக்கிச் சென்றான்.

ஆதியைக் கட்டிப் பிடித்து அழுத கீர்த்தியைப் பார்த்த பிரதாப்புக்கு உடலெல்லாம் எரிய... அவனை நோக்கி வெறியோடு வர...

மது இப்போது தன்னை ஆசுவாசப்படுத்தியவள்... ஒன்றை யோசித்தாள்.... கீர்த்தி ஆதியின் மனைவி ஆகினால் மட்டுமே பிரதாப் அடங்குவான் என்று தோன்ற...

உடனே ஆதியிடம், "ஆதி வெளியில... இவன் கொண்டு வந்த தாலி கிடக்கிறது. அதை எடுத்துக் கீர்த்தி கழுத்துல கட்டிடுங்க. அப்போதான் இந்தப் பொறுக்கி ராஸ்கல் அடங்குவான்.." என்று சொல்ல...



ஆதி அதிர்ந்து விட்டான்.

என்ன தாலி கட்ட வந்தானா... நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது அவனுக்கு.

ஆனாலும் மனம் மது சொன்ன வார்த்தையைக் கேட்க மறுத்தது. தன் திருமணம் எப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்று நினைத்திருந்தான் அவன் ... இப்படியா நடக்க வேண்டும் என்று தோன்ற...

கீர்த்தியும் கட்டாயப் படுத்த ஆரம்பிக்க... வேறு வழியின்றி வெளியே வந்து பார்க்க... அது செருப்பின் மேல் கிடந்தது.

மாங்கல்யம்... அது செய்யப் பொன் உருக்கும் போதே அத்தனை சடங்கு சாங்கியம் பார்ப்பார்கள்... அப்படிப்பட்ட தாலி செருப்பின் மேல் கிடக்க அதை எடுக்கவே பிடிக்கவில்லை அவனுக்கு... கீர்த்தியும் மதுவும் கூட அதை நினைத்துப் பார்த்தனர்.

ஆனாலும் வேறு வழி இல்லை என்று உணர்ந்த மது...

பிரதாப்பை உள்ளே வைத்துப் பூட்டியபடி கீர்த்தியை வெளியே இழுத்து வந்து ஆதியின் அருகில் நிறுத்தி, தன் கைகளில் அந்தத் தாலியை எடுத்து ஆதியிடம் நீட்டி,

"கட்டுங்க ஆதி...." என்று கூற...

வாங்கத் தயங்கினான் ஆதி... அவன் எதிலும் நல்ல நேரம்... நல்ல சகுனம் பார்ப்பவன்... இப்படிப்பட்ட தாலியைக் கட்ட வேண்டுமா என்று நினைக்க...

அதனால் தயங்க... மது படபடத்தாள்.

"என்ன ஆதி தயங்குறீங்க... கீர்த்திய லவ் பண்றீங்கதானே... சொல்லுங்க... இல்லேனா... நாங்க வேற வழிய பார்த்துக்குறோம்!" என்று கூற,

மதுவின் வார்த்தைகளில் கீர்த்தியும் அவனைப் பரிதாபமாகப் பார்க்க... வேறு வழி இன்றி மனதில் சஞ்சலத்துடன் மாங்கல்யத்தை அணிவித்தான்.

அதைச் சன்னல் வழியே பார்த்த பிரதாப் உக்கிரமானான்...

கீர்த்திக்குத் தாலியைக் கட்டியவன்... அதே வேகத்தில், இதற்கெல்லாம்... காரணமான பிரதாப்பை வெளியே இழுத்து... கோபத்தில் அடிகளை இறக்க... அடிபட்ட பாம்பாய் வெளியேறினான் பிரதாப்... அப்போது ஒரு பிரச்சனையும் செய்யாமல் நகர்ந்தான்... ஆனால், கீர்த்தியைப் பார்த்தபடி.

அவனின் பார்வையில் இன்னும் ஆதியோடு ஒன்றினாள் கீர்த்தி.

மது பிரதாப்பை வெற்றியின் எக்களிப்போடு பார்க்க... இது அத்தனைக்கும் காரணமான மதுவின் மேல் ஆறாப் பகை கொண்டான் அவன்...

ஆதியைப் பார்த்த... அவன் கைகளில் அடங்கியிருந்த கீர்த்தியைப் பார்த்து... அவர்கள் ஜோடியாக நின்றதைப் பார்த்து... வஞ்சினம் கொண்டான்...

அவன் ஒன்றும் சொல்லாமல் போனதைப் பார்த்தவர்கள்... சிறிது நேரம் அப்படியே நின்றனர்.... நடந்த சம்பவம் தந்த தாக்கத்தில்.

அதன் பிறகு மதுதான் சகஜ நிலைக்குத் திரும்பியவளாய், "கீர்த்தி!" என்று சந்தோசமாகத் தோழியைக் கட்டிப் பிடித்தவள்... ஆதியிடமும் மன்னிப்புக் கேட்கத் தவறவில்லை.

இருவரையும் பத்திரமாக இருக்கச் சொன்னவன்... அவர்களை வீட்டின் உள்ளே படுக்க வைத்து விட்டு அங்கேயே வெளியே படுத்து உறங்க ஆரம்பித்தான். ஆனால், தூக்கம்தான் வரவில்லை... பாலாவுக்குக் கால் செய்து... நடந்ததை எல்லாம் சொன்னான்.



பாலாவும் அதற்கடுத்த மறு நாளில் இந்தியாவில் இருந்தான்.

## 44

கீர்த்திகாவின் கழுத்தில் தாலி ஏறிய போதும், யாருக்கும் அங்கு நிம்மதி இல்லை...

பாலாவிடம் ஆதி புலம்பியபடி இருக்க...

பாலாவுக்குக் கூட கோபம்... இவ்வளவு அவசரமாக இந்தத் திருமணம் அவசியமா என்று.

அது மதுவின் மேல் திரும்பியது. வீட்டிற்குக் கூடப் போகவில்லை அவன்... நேராக வந்தது மது - கீர்த்தி தங்கியிருந்த வீட்டிற்கு.

கோபத்தில்தான் நுழைந்தான் பாலா... ஆனால், தலையில் கட்டுப் போட்டபடி அமர்ந்திருந்த மதுவைப் பார்த்தவன் தவித்துப் போய் விட்டான்.

பாலாவைப் பார்த்த மது ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

அன்று... ஒரு நொடியே நினைத்த... இனிப் பாலாவைப் பார்ப்போமோ மாட்டோமோ என்ற தாக்கத்தில் வந்த தவிப்பில்... "பாலா!" என்று இறுகக் கட்டியணைத்தவளைப் பார்த்தவன், கீர்த்திகாவும் அங்கிருப்பதை உணர்ந்து... அவளை மெல்ல விலக்கினான்.

கீர்த்திகா மட்டும் அங்கு இல்லை யென்றால்... அவளின் தயக்கமற்ற காதலில் அவனும் கொஞ்சம் முன்னேறி இருப்பான்தான்...

அவளை விலக்கி நிறுத்தியவன், "என்ன ஆச்சு மது... நான் போன ஒரு வாரத்தில் ... ராஸ்கல்! உனக்கு வேற தலையில அடிபட்டிருக்கு... அவன்லாம் ஒரு ஆளுன்னு..." என்றபடி கீர்த்தியை பார்த்தவன்... அவள் கழுத்தில் இருந்த தாலியைப் பார்த்தபடி...

"எதுக்கு மது அந்த அயோக்கிய ராஸ்கல் கொண்டு வந்த தாலிய கீர்த்தி கழுத்தில் கட்டச் சொன்ன...? ஆதி கொஞ்சம் நல்ல நேரம்... கெட்ட நேரம் அதெல்லாம் பார்ப்பான்... அதனால்தான் அவனால் ஏத்துக்க முடியாம தயங்குறான்..." என்று ஆதியின் நிலையை விவரிக்க,

அன்று நடந்த நினைவுகள் அவளை வருத்த... அவன் மார்பின் மேல் மறுபடியும் சாய்ந்தாள் மது...

அவன் மீண்டும் விலக்கப் போக... அவனிடம் முறைத்தவளாய், "கீர்த்திதானே இருக்கா... அவ ஒண்ணும் தப்பா எடுத்துக்க மாட்டா..." என்றவளைச் சிரித்தபடி... அணைத்தவன்,

"சரி சரி... கொஞ்சம் நல்லவனா இருக்க ட்ரை பண்ணினேன்... கரும்பு தின்னக் கூலியா மது...!" என்ற போது கீர்த்தியே அவர்களுக்குத் தனிமை கொடுத்தபடி அவனுக்குக் காபி கலக்க உள்ளே போனாள்.

அவளைத் தன்னோடு சாய்த்து... அவள் நெற்றியின் காயத்தைத் தடவியவன்... பின் முறைத்தான் பாலா...

"உனக்கு ஏதாவது ஆகி இருந்தா... பெரிய இவனு நினைப்பு...."

"நான் என்னடா பண்ணட்டும்... இப்போ கூட ஆதி - கீர்த்தி விசயத்திலே தப்பு பண்ணிட்டோம்னு பயமா இருக்கு..." என்றபோதே, கீர்த்தியும் வர, பேச்சை மாற்றினர்.

சிறிது நேரத்தில் ஆதியும் வர... நால்வரும் பேசி ஒரு முடிவெடுத்தனர்.

வரும் முகூர்த்தத்தில் அந்தத் தாலியைக் கழற்றிக் கோவில் உண்டியலில் போட்டு விட்டு... கீர்த்தி கழுத்தில் ஆதி வேறொரு தாலியைக் கட்ட முடிவு எடுக்கப்பட... ஓரளவு நிம்மதி யானான் ஆதி...



அது மட்டும் இல்லாமல் அவர்கள் இருவரும் இனி இந்த வீட்டில் தங்க வேண்டாம் என்றும்... ஹாஸ்டல்தான் இனி அவர்களுக்குப் பாதுகாப்பு... அது போக மதுவையும் பாலா திருமணம் செய்ய இருந்ததால் தற்காலிகமாக ஹாஸ்டலில் தங்கச் சொல்ல, மதுவும் கீர்த்தியும் தங்கள் நிலைமை உணர்ந்து மனப் பூர்வமாகச் சம்மதித்தனர்.

"சரிடா பாலா... உங்க வீட்டில் உன்ன தேடப் போறாங்க... கிளம்பு... போகும்போது மதுவையும் கூட்டிட்டு போ... உங்க அம்மா பார்க்கணும்னு சொன்னாங்க..." என்று அவர்களை விரட்டுவதிலேயே ஆதி குறியாக இருக்க,

"டேய் மச்சி... தனியா விடுங்கன்னு.... சொல்லாம சொல்லி விரட்டி அடிக்கறியா... விட மாட்டோம் மச்சி..." எனப் பாலா சொல்ல,

"முடியாதா... நேரடியாவே சொல்றேன்... நான் என் பொண்டாட்டி கூட இருக்கப் போறேன்... நீங்க கிளம்புங்க..." என்று கீர்த்தியின் மேல் உரிமையாய்க் கை போட்டபடி அவளை அணைக்க... அதில் கீர்த்தி முகம் சிவக்க...

"ஹலோ... இது செல்லாது செல்லாது... அவ கழுத்தில் கிடக்கிற தாலியத்தான் நீங்க ஏத்துக்கலேல்ல... சோ இது கள்ளாட்டம்... முதல்ல இடத்த காலி பண்ணுங்க ரெண்டு பேரும்...." என்று மது விரட்ட...

கீர்த்தியும் அவளுடன் சேர்ந்து கொள்ள... வேறு வழியின்றி வெளியேறினர் நண்பர்கள் இருவரும்.

**அ**ன்றிரவே அவர்களுடைய வாழ்வில் உச்சகட்டக் கொடூரம் அரங்கேறியது... பிரதாப்பின் கைகளினால் ஆதிக்கு...

முடிவு எடுத்த பின்னர்... சகஜமான சூழ்நிலை நிலவ... தோழியர் இருவரும் ஒருவரை ஒருவர் வாரியபடி அன்றைய பொழுதைக் கழிக்க... இரவும் வந்தது.

கிட்டத்தட்ட பத்து மணி அளவில்... பாலா அன்றுதான் வந்திறங்கியதால் வந்த களைப்பில் உறங்கிவிட்டதால் மது வேறு வழி இன்றி உறங்கச் செல்ல... கீர்த்தி ஆதியின் போனில் பேசிக் கொண்டிருந்தாள்.

"கீர்த்தி செல்லம்! என் மேல கோபமா... உண்மை யிலேயே சொல்லனும்னா எனக்கு அந்த மாதிரி இரு சூழ்நிலையில தாலி கட்டவே பிடிக்கவில்லை... ஊர் உலகம் முன்னாடி... அம்மி மிதித்து அருந்ததி பார்த்து உங்க அப்பா... எனக்குக் கன்னிகா தானம் பண்ணிக் கொடுத்து உன்னை என் உரிமை ஆக்க வேண்டுமென்று நினைத் தேன்... அத்தனையும் கனவா போச்சு கீர்த்தி... கோவில்ல உன் கழுத்தில் தாலி கட்டிட்டு இப்ப கிடக்கிற தாலிய கழட்டினாத்தான் எனக்கு நிம்மதி...." என்று இன்னும் மிச்சம் இருந்த வருத்தத்தில் பேச...

"சரி ஆதி... வேற எதுனாலும் பேசு... புதுசா கல்யாணம் பண்ணினா பொண்டாட்டிட்ட பேசுற புருஷன் மாதிரியா பேசறீங்க!" என்று சலிக்க...

"ஆமாடி... காலையில் உன் ஃப்ரெண்டோட சேர்ந்துட்டு விரட்டினவ இப்போ போன்ல பெருசா பேசுற... காலையில் மட்டும் நம்மள தனியா விட்டுட்டுப் போயிருக்கணும்..." என்று கொஞ்சியவனை

"கிழிச்ச... நீ அதுக்கும் நல்ல நேரம் பார்த்துக் காலத்த ஓட்டுவ..." என்று அவன் காதில் விழாதபடி மெதுவாகச் சொல்ல...

"ஏய்... என்ன சொன்ன, காதில விழல... நேர்ல இருந்தா கூட வாயசைவில் கண்டுபிடிக்கலாம்... ஏதோ கெட்ட வார்த்தை மாதிரி இருக்கு... என்னத் திட்டறியா..." என்று ஆரம்பித்தவனை

"ஆதி! கதவ யாரோ தட்டுற மாதிரி இருக்கு... இரு பார்க்கிறேன்... " என்று தடை செய்தாள் கீர்த்திகா.



"கதவைத் திறக்காத... மது எங்க?" என்று எச்சரிக்கை உணர்வில் கேட்க

"அவ அப்பவே தூங்கப் போய்ட்டா..." என்றவள், சன்னல் கதவைத் திறந்து பார்க்க... அங்கு பிரதாப் கண்களில் வெறியுடன் நின்று கொண்டிருந்தான்...

கலக்கமும்... பயமும்...படபடப்பும் ஒன்றாகச் சேர, சட்டென்று சன்னல் கதவை மூடியவளுக்கு... அவனின் குரோதம் கலந்த விழிகள் என்னவென்று புரியாத உணர்வை அடி வயிற்றில் கிளப்ப...

"ஆதி! அவன்தான் ஆதி ..." என்று தவித்தவளின் வார்த்தைகளில்,

"கீர்த்தி... நீ... நீ பயப்படாத.... இப்போ வந்துடறேன்... அடங்க மாட்டேங்குறானே... அந்தப் பொறுக்கி ராஸ்கல்... நீ கதவ மட்டும் திறக்காத..." என்றவன், தனக்கு நடக்கப் போகும் விபரீதம் உணராதவனாய், அவள் வீட்டை நோக்கிக் கிளம்பினான்.

போனைக் கட் செய்தவள்... மதுவை வேக வேகமாக எழுப்ப... திகில் நிறைந்த விழிகளாய்க் கீர்த்தி நிற்பதை பார்த்து என்னவென்று கேட்க... கையை வெளியே நீட்டினாள்.

அவளும் சன்னல் கதவைத் திறந்து பார்க்க... அவளுக்கும் பயம் திரண்டது... அவள் பாலாவுக்கு போன் செய்ய,

ஆதி கூறியது போலவே, அவனும் கதவை மட்டும் திறக்காதீர்கள் என்று எச்சரித்த வண்ணம் கிளம்பி யிருந்தான்.

என்ன அன்று போல் இன்று அஜாக்கிரதையாய் இல்லை... அவர்கள்... எல்லாக் கதவு சன்னல்களையும் மூடியபடி படபடத்த இதயத்தோடு இருவரும் உள்ளே இருந்தனர்.

அவன் போன முறை வந்த அன்றே வீட்டைக் காலி செய்திருக்க வேண்டுமோ என்று தோன்றியது இருவருக்கும்...

காலம் கடந்த ஞானோதயம்தான்...

அதை இனி மேலாவது நிறைவேற்றியிருந்தால் கூட ஆதியின் உயிர் போனதோடு போயிருக்கும்... அதைச் செய்யாத மதுவுக்குப் பாலாவோடான வாழ்க்கையும்... காதலும் அல்லவா அநியாயமாகப் பறி போனது.

ஆதி அவர்கள் வீட்டருகே நெருங்கியவுடன் அவர்களுக்கு கால் செய்து தைரியம் சொல்ல...

இருவரும் பெருத்த நிம்மதியுடன் சன்னல் கதவைத் திறந்தனர்... ஆதியின் வருகையை எதிர்பார்த்து...

அவர்கள் சன்னலைத் திறந்தவுடன் சன்னலருகே வந்தவன்... "கீர்த்தி! வெளில வாடி... நான் கொண்டு வந்த தாலிய கட்டினா... அவன் உன் புருசனா ஆகிடுவானா...? யார் கட்டுனா என்ன... அது நான் கொண்டு வந்தது... அதுக்கு உரிமை எனக்குதான்..." என்றான்.

கீர்த்தியோ... "நான் என்னடா பண்ணினேன் உனக்கு... இப்படி என்ன சுத்திச் சுத்தி வந்து உயிர எடுக்கிற... நான் என் ஆதிய விரும்பறேன்... அவர் கூடத்தான் வாழுவேன்... இத உன்னால தடுக்க முடியாது... ஐ லவ் ஆதி... ஐ லவ் ஆதி...!" என்று அவளும் வெறி பிடித்தவள் போல் கத்த

மதுவுக்கு என்ன செய்வதென்று புரியாமல் நின்றாள்.

"ஓ அப்படியா... இன்னும் கொஞ்ச நேரத்தில் உனக்கு யார்னு புரியும்... அவன் இருந்தால்தானே அவனோட வாழுவ... அவன் இல்லேன்னா என்ன பண்ணுவ...?" என்று கேட்டவனின் வார்த்தைகள் மதுவுக்குப் புரிய, ஸ்தம்பித்து நின்றாள்.



அவசரப்பட்டு ஆதியை வரவழைத்து விட்டோமோ... போலீஸுக்கு போன் செய்திருக்கலாமோ என்று நினைத்தவள் உடனடியாகக் காவல் நிலையத்துக்கும் போன் செய்தாள்... ஆனால், கீர்த்தியோ எதுவும் உணராமல் அவனோடு வார்த்தைக்கு வார்த்தை மல்லுக் கட்டிக் கொண்டிருந்தாள்.

"அவன் இருந்தாலும் இல்லேனாலும் அவனோட மட்டும்தான் என்னோட வாழ்க்கை... முடிஞ்சத பார்த் துக்கடா..." என்று கூறும் போதே, ஆதி பிரதாப்பின் அருகில் நிற்க...

வந்த வேகத்திலேயே அவனை அடித்துக் கீழே தள்ள... கீர்த்தியும் மதுவும் கதவைத் திறந்து வெளியே வர முயற்சிக்க... வர வேண்டாம் என்று தடுத்து விட்டான்.

ஆதியின் அடியில் கீழே விழுந்தவன்... அவனைப் பார்த்து விகாரமாகச் சிரிக்க... ஒரு முறை கீர்த்தியைத் திரும்பிப் பார்த்தான்.

எதுவுமே சொல்லாமல்... கொண்டு வந்திருந்த கத்தியை... ஆதியின் வயிற்றில் செருகினான். ஆதியும் உணர்ந்து சுதாரிப்பதற்குள் மீண்டும் செருக....

மதுவும், கீர்த்தியும் பதறியபடி ஓடி வந்தனர்.

பிரதாப் கையில் கத்தியுடன் வெறி பிடித்தவன் போல் கத்தினான்.

"ஒழிடா... எங்க ரெண்டு பேருக்கு இடையில் யார் வந்தாலும் இந்தக் கதிதான்..." என்றவன், கண்ணீர் மல்க... "ஆதி..." என்று கதறி ஓடி வந்த கீர்த்தியைப் பிடித்துக் கொண்டான்.

மதுவுக்கு யாரைக் காப்பாற்ற... என்ன செய்ய என்று புரியாமல்... கீர்த்தியையும் கொன்று விடுவானோ என்று தடுமாற...

பாலாவும் வந்து சேர்ந்தான்.

அவனைப் பார்த்த ஆதி, "பா...லா...." என்று கதறித் துடிக்க...

"ஆதிஈஈஇ..." என்று அவனருகில் வந்தான்.

"என்னை விடுடா.... என் கீர்த்தியைக் காப்பாத்துடா. அவன் என்ன வேணும்னாலும் பண்ணுவான் போல. நாம் தப்புக் கணக்குப் போட்டுட்டோம்டா..." என்றவனை விட்டுவிட்டு வேறு வழியில்லாமல் பிரதாப்பின் அருகில் போனான்.

"பிரதாப், தப்பு மேல தப்பு பண்ற.... கீர்த்தியை விடு..." என்று அவனிடம் பேசியபடி முன்னேற...

பிரதாப்... இவன் வேற எதுக்கு இங்கே வந்தான்... என்று எண்ணியபடி,

"இங்க பாரு.... உனக்கு இது தேவையில்லாத விசயம். நான் எதுக்கு என் பொண்டாட்டியை விடணும்... விட மாட்டேன். இது நான் கொண்டு வந்த தாலி. அவ கழுத்துல இருக்கு... இது என் கீர்த்தி... எனக்கு மட்டும்தான் சொந்தம். நான் போறேன் என் கீர்த்தி கூட.... நீ போய் உன் ஃப்ரெண்டைப் பாரு. அவன் செத்தானா பொழச்சானா போய்ப் பாரு..." என்று பைத்தியக்காரன் மாதிரியே பேச...

பாலா அசராமல்... முன்னே போக....

"வராதே. இவளைக் குத்திட்டு... நானும் செத்துப் போயிடுவேன்..." என்று கையில் வைத்திருந்த ஆதியின் ரத்தம் தோய்ந்த கத்தியைக் கீர்த்தியின் கழுத்தில் வைத்து அழுத்த...

"என்னையும் கொன்னுருடா... என் ஆதி இல்லாத உலகத்தில நானும் இருக்க விரும்பலை..." என்று கதறிக் கொண்டிருந்தாள் கீர்த்தி.

மது.. ஆதியின் அருகில் இருந்தாள்.



பாலா... பிரதாப்பைக் கலவரத்துடன் பார்த்துக் கொண்டே....

கையில் கிடைத்த துணியில் ஆதிக்கு வேகமாகக் கட்டுப் போட்டவள்...

"ஆதி, மெதுவா எழுந்திருக்க ட்ரை பண்ணுங்க ஆதி... நாம ஹாஸ்பிடலுக்குப் போயிடலாம். கீர்த்தியைப் பாலா கூட்டிட்டு வந்திடுவான்..." கண்ணீர் பாதி வார்த்தை பாதியாகக் கூறியவளை....

ஆதி கேட்டான். "பார்த்தியா மது... இதனாலதான்... இந்த மாதிரில்லாம் நடந்துடக் கூடாதுனுதான்... நான் அந்தத் தாலியைக் கட்ட மறுத்தேன். இனி கீர்த்தி நிலைமை.... எனக்குத் தாங்க முடியலை. சும்மா நான் போனாலும் பரவாயில்லை. தாலியை வேற கட்டி... என் கீர்த்தி இனி அமங்கலமா இருக்கப் போறாளா... அய்யோ!" என்று தலையிலடித்தான்.

"ஆதி, ப்ளீஸ்... நம்பிக்கையை விட்டுராதீங்க. உங்களுக்கு ஒண்ணும் ஆகாது..." என்று சொல்லும்போதே, போலீஸ் சைரனும் அடிக்க....

பிரதாப் அந்தச் சத்தத்தில் தடுமாற... பாலா கீர்த்தியை அவனிடமிருந்து பிரித்தவன்... அவன் கத்தியைப் பிடுங்கிக் கீழே போட்டவன்... அவன் கைகளைப் பிடித்து முறுக்கி அங்கிருந்த மரத்தில் கட்டினான். பாலாவின் பலத்திற்கு முன் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

பிரதாப்பிடமிருந்து விடுதலையான கீர்த்தி ஆதியிடம் ஓடோடி வந்தாள்.

அவனைக் கட்டியணைத்து, "மது, என் ஆதியை எனக்குக் காப்பாத்திக் கொடு. இல்ல... என்னை அவரோட சேர்த்துக் கொன்னுடு..." என்று கதறிய தோழியோடு மதுவும் சேர்ந்து அழ...

அவர்கள் அருகே வந்த பாலா...

ஆதியைக் கைத்தாங்கலாகத் தூக்கியவன்.. தன் காருக்குள் போட்டுக் கீர்த்தி.... மதுவோடு மருத்துவமனை நோக்கி விரைந்தான்.

சம்பவ இடத்திற்குக் காவலர்கள் வந்தபோது கட்டப் பட்டிருந்த பிரதாப் மட்டுமே அவர்கள் கண்ணில் பட்டான்.

நடுங்கிய கைகளோடு காரை ஓட்டிக் கொண்டிருந்த பாலாவை... மதுதான் பின்னால் இருந்து கூப்பிட்டாள்.

"பாலா... காரை நிறுத்துடா. ஆதி ஸ்டாப் பண்ணச் சொல்றார்!" என்றவளின் பதற்ற வார்த்தையில் காரை நிறுத்தியவன்... பின்னால் திரும்பி,

"ஆதி, இன்னும் கொஞ்ச நேரம்தான்டா. ஹாஸ்பிடல் வந்துடும். தைரியத்தை விடாதடா!" என்று கெஞ்சலாய்க் கூற,

மனம் நொந்தவனாய்ச் சிரித்தான் ஆதி.

"இல்லடா... நான் ரொம்ப நேரம் உயிரோட இருக்க மாட்டேனு தோணுது. என் கீர்த்தியை இப்படி விட்டுட்டுப் போறேனுதான் எனக்கு வருத்தம்டா..." என்று சொன்னவனின் வார்த்தையில் கீர்த்தி குலுங்கி அழ... அவள் மடியில் தலை வைத்திருந்த ஆதியின் முகத்தின் முன் அவன் கட்டிய தாலி தொங்கியது.

அதை வெறித்துப் பார்த்த ஆதி... என்ன நினைத்தானோ தெரியவில்லை. அதைத் தன் கையாலே பலம் கொண்ட மட்டும் இழுக்க... கீர்த்தி பதறியவளாய்த் துடித்து... அதைத் தடுக்கப் போராட...

அதை எல்லாம் அலட்சியம் செய்தவனாய்... அறுத்து வெளியே எறிந்தான்.

அவனது நடவடிக்கையில் பாலாவும்... மதுவும் உச்ச கட்ட அதிர்ச்சியில் இருக்க... கீர்த்தியோ தலையில் அடித்துக் கொண்டு கதறி அழ ஆரம்பித்தாள்.



ஆதி... மதுவைத் தன் அருகே வருமாறு சைகை செய்ய... அவளும் போனாள். ஆனால் அவன் மதுவிடம் ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைக்கப் போவதை உணராமல்.

"மது, நீ எனக்காக... என் கீர்த்திக்காக ஒரு ப்ராமிஸ் பண்ணிக் கொடு. இவளுக்கு நீதான் இன்னொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும். உன் ஃப்ரெண்ட் நான் சொன்னா பண்ண மாட்டா... செய்ய மாட்டா. ஆனால், நீ சொன்னால் அவள் உன் வார்த்தையை மீற மாட்டாள். அதனால்தான் அவளிடம் கூடக் கேட்காமல் உன்னிடம் நம்பிக்கை வைத்துக் கேட்கிறேன்..." என்று கேட்டவனைக் கீர்த்தி முறைத்தபடி வெறித்து நோக்க...

மதுவுக்கோ என்ன செய்வது... என்ன சொல்வது என்று புரியாமல், கலங்கி நின்ற தோழியைப் பார்த்தவள்...

"என்ன செய்ய?" என்பது போல் பாலாவையும் பார்த்தாள்.

பாலாதான், "டேய், என்னடா இப்படில்லாம் பேசுற... வாடா ஹாஸ்பிடல் போகலாம். லூசு மாதிரி இப்படிப் பண்ணிட்டு இருக்க..." என்று கோபமும் துக்கமுமாய்ப் பேச....

"மது... எனக்கு ப்ராமிஸ்..." எனும்போதே வார்த்தைகள் தடுமாறின ஆதிக்கு.

மது வேறு வழியில்லாமல் அழுதபடி அவனுக்கு வாக்குறுதி கொடுக்கப் போக...

கீர்த்தியின் வார்த்தைகள் அவளைத் தடுத்து நிறுத்தின.

"மது... நீ... நீ மட்டும் ஆதிக்குச் சத்தியம் பண்ணிக் குடுத்த... உனக்கும் எனக்கும் உள்ள அத்தனையும் இந்த நிமிசத்தோட முடிஞ்சுடும். ஞாபகம் வச்சுக்கோ!" என்று சொன்னவளின் விழிகள்.... ஆதியின் மேல் கோபத்தோடு நிலைத்திருந்தன.

அவளிடமிருந்து வந்து விழுந்த வார்த்தைகளில் ஆடிப் போனாள் மது.

ஆதிதான்.... "கீர்த்தி, என்னைப் புரிஞ்சுக்கோ. என்னோட காதல் அந்தப் பொறுக்கியோடது மாதிரி இல்ல. நான் இருந்தாலும்... இல்லேனாலும் நீ... நீ சந்தோஷமா வாழணும். என்னால் உனக்கு இனிமேல் சந்தோஷம் இல்லை. உனக்குச் சந்தோஷம் தராத... உன்னைச் சமுதாயத்தில இருந்து தள்ளி நிறுத்தப் போற என் நினைவும்... என் காதலும்... என் உறவும் இனி உனக்கு வேண்டாம். அதை அழிச்சுடு. பிரதாப்போட கேவலமான காதல் நான் சாகக் காரணமாக இருக்கலாம். ஆனால், என் தூய்மையான காதல் உனக்கு நல்ல வாழ்க்கையை மட்டுமே தரும். கண்டிப்பா ஒரு நல்லவனை என் காதல் உனக்குக் கொண்டு வந்து சேர்க்கும்..." எனும்போதே, அவன் நினைவுகள் அவனை விட்டுப் போய்க் கொண்டிருக்க...

"கீர்த்தி, ஐ லவ் யூ..." என்று கண் கலங்கியவனாய்... நலுங்கிய விழிகளாய்.... சொன்னவன்... தன் கடைசி நிமிடத்தில் மதுவிடம் தன் கையை நீட்ட... அனிச்சையாய் மதுவின் கைகள் அவனைச் சேர்ந்தன. அது கொடுத்த நம்பிக்கையில் ஆதி.... பாலாவையும் மதுவையும் ஒருமுறை நம்பிக்கையோடு பார்த்துக் கீர்த்தியின் கண்களோடு கண் சேர்ந்து தன் கடைசி மூச்சை விட்டான்.

கீர்த்தி மது கொடுத்த வாக்குறுதியில் பத்ரகாளியாய் மாறியிருக்க... அவள் கணவன் கூறிய வார்த்தைகளில் உக்கிரமாய் மாறியிருக்க... அவனோ எதுவும் அறியாமல்... அவளை விட்டு விண்ணுலகம் அடைந்தான்.

கீர்த்தியின் கண்ணீரில்... ஆதியின் மறைவில்... மது - பாலா அடைந்த துக்கத்திற்கும் அளவே இல்லை.

**அ**தன் பிறகு பிரதாப் சிறையில் தள்ளப்பட்டான். கீர்த்தி... படிப்பை நிறுத்தினாள். ஊருக்கே திரும்பினாள்.



மதுவோடும் தன் தொடர்பை நிறுத்தினாள். பாலாவுடன் மட்டும் பேசிக் கொண்டிருந்தாள். அதுவும் கூட ஆதி கொலை விசாரணைக்காக மட்டுமே.

பிரதாப்புக்குத் தண்டனை கிடைக்க... அவள் எந்த எல்லைக்கும் போகத் தயாராக இருந்தாள்.

மதுதான் தாங்க முடியாதவளாய்ப் பாலாவிடம் அழுது கொண்டிருந்தாள்.

மது மட்டும் என்றாவது கீர்த்தி தன் மேல் உள்ள கோபம் மறந்து தன்னைப் பார்க்க வருவாள் என்று அதே வீட்டில் இருந்தாள். அதுதான் மது தன் வாழ்நாளில் செய்த மிகப் பெரிய தவறாகப் போனது.

பாலா.... எவ்வளவு சொல்லியும்... கேட்கவில்லை அவள். அருந்ததி கூட வந்து சொல்லிப் பார்த்தாள். கேட்கவில்லை அவள்.

மதுவின் தந்தையும் போராடிப் பார்த்தார். முடியவில்லை. துக்கத்தில் பாலா வீட்டில் கூட வந்து சண்டை போட்டு விட்டு வந்தார்.

இவ்வாறு மூன்று மாதம் கழிந்தது.

அன்று கோர்ட்டில் ஹியரிங் இருந்ததால் மதுவும் பாலாவுடன் வந்திருக்க.... கீர்த்தியும் தன் தந்தையுடன் வந்திருந்தாள். ஆதியின் பெற்றோர் கூட வந்திருந்தனர். அவர்கள் தன் பங்குக்கு மகன் இறந்த துக்கம் தாளாமல் கீர்த்தியைக் கரித்துக் கொட்ட... மதுவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

அவளுடைய விதவைக் கோலம் அவளைப் பரிதவிக்க வைத்தது. அவள் பேசாதது கூட அத்தனை வருத்தம் இல்லை. அவளின் கோலம் அவளை அலைக்கழிக்க வைத்தது.

கீர்த்தியின் அருகில் நெருங்கிய மதுவைத் தீப்பார்வை பார்த்தாள்.

"கீர்த்தி..." என்று சொன்னவளை...

"பாலா... நான் போறேன்!" என்று போக எத்தனிக்க...

கையைப் பிடித்தவள், "நீ என்கிட்ட பேசக் கூட வேணாம் கீர்த்தி.... இது என்ன கோலம்! ப்ளீஸ்... சாதாரணமாச்சும் இரு..." என்றவளைப் பார்க்காமல்,

"என் அழகுதானே... இந்தப் பாழாப் போன அழகுதானே என்னை என் ஆதிகிட்ட இருந்து பிரிச்சுடுச்சு. அதனாலதான். அப்புறம்... நான் உன்கிட்ட பேசாம ஏன் இருக்கேனு தெரியணுமா உனக்கு? உன் மேல இருக்கிற கோபம் மட்டுமில்லை. நான் உன்கிட்ட பேசுனா... நீ என் மனசை மாத்திடுவ. அப்படி ஒரு பவர் உன்கிட்ட இருக்கு. இத்தனை வருசம் பழகுன எனக்கு மட்டும்தான் அது தெரியும். எப்படிப்பட்டவங்களையும் நீ மாத்திடுவ, உன் வார்த்தையால... உன் பாசத்தால.... அதுதான். போதுமா! இன்னும் எதுனாலும் நீ என்கிட்ட பேசுன.... பேச இல்லை... என்னை மாத்த முயற்சி பண்ணுன... நான் என்னை மொத்தமா அழிச்சுக்குவேன். என்னை விட்டுடு!" என்று விரக்தியின் எல்லையில் பேசிய தோழியை அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

அவள் கோப வார்த்தைகளில்... நொந்த மதுவை... பாலா தேற்ற வழியில்லாமல் ஆற்றாமையுடன் பார்த்தான்.

தாயின் நினைவுகளில் இருந்து... மாற்றிய தன் தோழியை ஆதியின் நினைவுகளில் இருந்து மாற்ற வழியில்லாமல் அதற்கு வழி கொடுக்காமல் தவிர்த்த தன் தோழியை நினைத்துத் தத்தளித்தாள். தான் அவசரத்தில் ஆதியைத் திருமணம் செய்யச் சொன்ன நிர்பந்தமே கீர்த்தியின் இந்த நிலைமைக்குக் காரணமோ... என்று கீர்த்தியின் வாழ்க்கையின் மீதான கவலை மதுவை உருக் குலைக்க ஆரம்பித்தது.



பாலாவால் மதுவைத் தேற்றவே முடியவில்லை.

"ஏன்டி... என்னைப் படுத்தற? இப்போ என்னை என்ன பண்ணச் சொல்ற... அவ முறைச்சுட்டுப் போனாள்னா நான் என்ன பண்ணுவேன்... எப்போ பாரு, எனக்கு எந்த ரூபத்திலாவது ஆப்பு வச்சுறா..."

"பாலா... இப்போ கூட இப்படிப் பேசுற..." என்று நொந்து போய்ப் பேசியவளிடம்,

"என்ன நொப்படி பேசுறேன். வாடி கல்யாணம் பண்ணிக்கலாம்னா... முறைக்கிற. உங்க அப்பா சொன்னதுதான் நடக்கப் போகுது எனக்கு... நடந்ததை யாராலேயும் மாத்த முடியாது. அதுக்காக நீ இப்படியே இருக்கப் போறியா...?" என்றவனிடம்,

"அட்லீஸ்ட் அவ என்கிட்ட பேசினால் கூடப் பரவா யில்லை பாலா... மனசு தாங்கல எனக்கு. எத்தனை வருசப் பழக்கம்... அவ பிடிவாதக்காரி. எனக்குப் பயமா இருக்கு. என் கூடப் பேசாமலே போயிடுவாளோன்னு..."

"இப்போ அவ உன்கூடப் பேசணும்... அவ்வளவுதானே...?"

"ஆமாம்..." என்று பரிதாபமாகத் தலையாட்டினாள்.

"அவதான் உன்கிட்ட ஏன் பேச மாட்டேங்கிறானு காரணம் சொன்னாளே... ஆனா, அது நூத்துக்கு நூறு உண்மைடி. உன்னைப் பார்க்காதவரைக்கும் தான் நான் கூட என்னோட சிந்தனையில இருக்கேன். எப்போ இந்த ரெண்டு முட்டைக் கண்ணையும் பார்க்கிறேனோ... அந்த நிமிசத்திலிருந்து உன்னோட பாலாவா மாறிடறேன்டி... சுத்தி இருக்கிறது அத்தனையும் மறந்து போயிருதுடி... சகலமும் நீயா ஆகிப் போறடி!" என்றவனை நக்கலாகப் பார்த்தாள்.

"ப்ராமிஸ்டி..." என்று உண்மையாகச் சொன்னவனைப் பார்த்து...

"அதுதான் ஒன்றரை வருசம் சுத்த வச்சியாடா நீ... சும்மா டயலாக்கெல்லாம் விடாதே..."

அசடு வழிந்தவன்... "அது... அது... நீ என் மனசுக்குள்ள வர்றதுக்கு முன்னால... இது என் மனசுக்குள்ள வந்த பின்னால... எப்புடி?" என்று டி-சர்ட்டின் காலரைத் தூக்கி விட்டவனிடம் ஓரளவு சகஜமானாள்.

"ஆனா, ஆதி கேட்டது தப்புதானடா... அதுக்கு நான் ஒத்துக்கிட்டு சத்தியம் பண்ணினதும் தப்புதானே பாலா..." என்றவளை...

"தெரியலை... கீர்த்தி அவன் சூழ்நிலையில இருந்து பார்க்கும்போது அது சரிதான்னு தோணுது. கீர்த்தி நிலைமையில இருந்து பார்க்கும்போது அது தப்பு மாதிரியும் தோணுது. என்ன பண்ணச் சொல்ற... ஒவ்வொருத்தர் சூழ்நிலையும் ஒவ்வொரு மாதிரி முடிவெடுக்க வைக்குது..." என்று வெட்டவெளியை வெறித்தவனாய்ச் சொன்னான்.

"அது எப்படிடா அப்படிச் சொல்ல முடியும்... நமக்குப் பிடிச்சவங்களை அடுத்தவங்களுக்கு விட்டுக் கொடுக்க முடியுமா என்ன?" என்று புரியாமல் கேட்டாள் மது.

"தெரியலை மது... விட்டுக் கொடுக்க முடியாமத்தானே பிரதாப் கூட இந்த அளவிற்குப் போயிருக்கான்..." என்று பாலா கூற,

"ச்சே! அந்தப் பொறுக்கியைப் பத்திப் பேசாதே. அவன் பண்ணினதுக்கெல்லாம் பேரு லவ் இல்லை. அவன் ஒரு சைக்கோடா..." என்று சொன்னவள்.... பாலாவையே பார்த்தபடி இருக்க...

"என்னம்மா... எதுவா இருந்தாலும் கேளு...." என்ற பார்வையின் யோசனையில் பாலா கேட்க...

கேட்கப் பிடிக்கவில்லைதான். இருந்தாலும் கேட்டாள்.



"நீ என்னை விட்டுக் கொடுத்துடுவியாடா... சொல்லுடா!"

"ஏன்டி இப்படில்லாம் பினாத்துற...." என்று மட்டும் சொன்னவனிடம்,

"பதில்..." என்று அவள் வழியிலேயே நிற்க...

பெருமூச்சை விட்டவன்... கண்களை நேராகப் பார்த்துச் சொன்னான். "உனக்கு அதனால நல்லது நடந்தா... கண்டிப்பா விட்டுக் கொடுப்பேன்... போதுமா?" என்றவனின் நெஞ்சத்தில் சரணடைந்தவள்...

"ஆனா... நான் மாட்டேன்பா..." என்று குறும்பாகக் கூறியவளிடம்,

"நம்பிட்டேன்மா... நம்பிட்டேன். நீதான் மதர் தெரசா ஆச்சே... அடுத்தவங்களுக்கே நல்லது பண்ணுவ. எனக்குப் பண்ண மாட்டியா?" என்று சிரிக்க...

"அது மத்தவங்க விசயத்துல... உன் விசயத்துல எல்லாம் கிடையாது பாஸ். இப்படில்லாம் ஒரு எண்ணம் இருக்கா உனக்கு...." என்று பொய்யாக முறைத்து அடித்தவளை... உரிமையாய் அள்ளிக் கொள்ளும் நாளை எதிர்பார்த்துக் காத்திருந்தான் பாலா.

மதுவின் கவலையைப் போக்க... கீர்த்தியிடம் அவளைப் பேச வைப்பதே அவனது முதல் கடமையாய் இருக்க.... கீர்த்திகாவிற்கும் அவன் போன் பண்ணத் தவறவில்லை.

அப்போதுதான்... பாலாவின் போனை அட்டெண்ட் செய்து கீழே வைத்திருந்தாள் கீர்த்திகா. அவன் பேசியதை எல்லாம் நினைத்துப் பார்த்தாள்.

மதுவின் நிலையைச் சொல்லி... அவளுக்கும் அதில் இஷ்டம் இல்லையென்றும்... ஆதியின் கடைசி நிமிட வேண்டுகோள் என்பதாலே அவளால் மறுக்க முடியவில்லை

என்றும்... எவ்வளவு தன்னால் இயன்ற அளவு அவளுக்கு எடுத்துச் சொல்ல முடியுமோ அவ்வளவு சொல்லிக் கடைசியாக... வேறு வழியின்றித் தங்கள் இருவரின் மண வாழ்க்கையே அவள் மதுவோடு பேசுவதில்தான் உள்ளது... என்றும் உணர்த்தி போனை வைத்தான்.

மதுவின் மேல் இருந்த வருத்தம் ஓரளவு குறைந்துதான் இருந்தது. தனக்காக ஒவ்வொன்றும் பார்த்துப் பார்த்துச் செய்தவளை... தன் சுய நலத்துக்காக வருந்த விடலாமா என்று ஒருவாறாக முடிவெடுத்தவள்... ஒன்றில் மட்டும் தீர்மானமாக இருந்தாள். ஆதியின் வாக்குறுதியைப் பற்றி மட்டும் அவள் இனித் தன்னிடம் பேசக் கூடாது... என்று.

அதன் பிறகு மதுவுக்குப் போன் செய்ய... மதுவுக்குத் தலை கால் புரியவில்லை. தன் தோழி தன்னிடம் பேசி விட்டாளா என்று நம்பவே முடியவில்லை. எங்கு அவள் அப்பாவைப் போல் தன்னையும் ஒதுக்கி வைத்து விடுவாளோ என்று நினைத்திருந்தாள் அவள். தன் தந்தை பேசாமல் இருப்பதைக் கூடத் தாங்கிக் கொண்ட மதுவுக்குக் கீர்த்தி பேசாமல் இருப்பதைத் தாங்க முடியவில்லை.

கீர்த்தியும்... மது தன்னை வேறு எந்த விதத்திலும் வற்புறுத்தக் கூடாது என்று சொல்ல... மதுவுக்கு வேறு வழியில்லாமல்... அவள் பேசினால் போதும் என்று நினைத்தவளாய்.... ஆதியின் சத்தியத்தை எல்லாம் காற்றில் விட்டாள். ஆதியின் காதல் உண்மை என்றால் அவளுக்கு அவனே ஒருவனைக் காண்பிப்பான்... என்று நினைத்தவள்... தோழியின் விருப்பப்படியே அவளை விட நினைத்தாள்.

கீர்த்தியும் அடுத்த வாரமே அங்கு வருவதாகக் கூறி இருவருக்கும் நல்ல ஒரு ஹாஸ்டலைப் பார்க்கச் சொல்ல... மதுவும் அதற்கான வேலைகளில் உற்சாகமாகப் பாலாவுடன் இறங்க ஆரம்பித்தாள்.



ஆனால்... கீர்த்தியுடன் பேசிய அடுத்த மூன்று நாட்களில் மது என்கின்ற மது பாலா... காணாமல் போனாள்.

அவர்கள் இருந்த வீட்டில் இருந்தே கடத்தப்பட்டிருந்தாள்.

யார் என்றுதான் தெரியாமல் பாலா... இன்றுவரை போராடிக் கொண்டிருக்கிறான். பிரதாப்பும் அப்போது ஜெயிலில்தான் இருந்தான். வேறு யாராக இருக்கும்... பணத்துக்காக என்றால் தொடர்பு கொண்டிருப்பார்கள். அதுவும் இல்லை என்றால் எந்த நோக்கத்திற்காக... தெரியவில்லை. மதுவின் தந்தையைக் கூடச் சந்தேகித்தான் பாலா. ஆனால், அவரும் இல்லை. ஏனெனில் அவர்... பாலாவின் மேலேயே கம்ப்ளெயிண்ட் செய்ய... யார் யார்... என்ற கேள்வி இன்றுவரை தொடர்கிறது.

உற்சாகத்தின் மொத்த உருவமாய்... அன்பின் நிழலாய்... நட்பின் இலக்கணமாய்... காதலின் சின்னமாய் இருந்தவள்... இருக்கும் இடம் தெரியாமல் மறைய...

அது கீர்த்திக்கு... ஆதியின் மறைவுக்கு அடுத்த மரண அடியாய் விழ... மீளும் வழி தெரியாமல் துவண்டு போனாள்.

மதுவின் பாலாவோ சுத்தமாய் மடிந்து போனான். எங்கும் எதிலும் மதுவின் நினைவே... தன் ஒவ்வொரு செயலிலும் காதலை மட்டுமே காட்டி அவனையும் அதில் பழக்கியிருந்தாள் மது. அவளின் காதலுக்கு அடிமையாகி இருந்த பாலாவுக்குச் செயல்களும்... நினைவுகளும் மறந்து பைத்தியக்காரன் போல் ஆனான்.

தொழிலில் கவனம் சிதற... மதுவின் நினைவுகளுக்கு அடிமையானவனுக்கு வேறொன்றுக்கும் அடிமையாக மனமும் இல்லை. ஒருமுறை குடித்துக் கூடப் பார்த்தான். அதுதான் அவனுக்கு ஒத்தும் வராதே... அருந்ததிக்குத்தான் வேலை வைத்தான்.

மது ஒருவேளை ஆதி போல இறந்து போய்... இறந்து போயிருந்தால் கூடப் பரவாயில்லை. காலம் துக்கத்தை ஆற்றியிருக்கும். ஆனால் அவள் காணாமல் போய் விட்டாளே... அவளை நினைத்து... என்ன ஆனதோ... எப்படி இருக்கிறாளோ... என்ன அவலம் அவளுக்கு நடந்ததோ... ஒவ்வொரு நிமிடமும் அனலில் விழுந்த புழுவாய்த் துடித்தான் பாலா.

காலம் அப்படியே விட்டு விடுமா என்ன... கொஞ்சம் கொஞ்சமாய் நடைமுறை வாழ்க்கைக்குப் பழக ஆரம்பித்தவன்... அவளின் நினைவுகளோடு மனதோடு போராட ஆரம்பித்து... காதல் மனதை... இளமை உணர்வுகளை எல்லாம் தனக்குள் பொசுக்கியவன்... வெளியுலக வாழ்க்கைக்காகச் சாமான்ய மனிதனின் முகமூடி அணிந்து.... முடங்கிப் போன தனது தொழிலை மீட்க... வெறியோடு போராட ஆரம்பித்தான். தன் கவனத்தை எல்லாம் அதில் திருப்ப... அதன் விளைவு நான்கு வருடங்களில் இந்த அளவு அவனது குளோபல் நெட் அலுவலகம் அசுர வளர்ச்சி அடைந்திருந்தது.

மது பாசம் வைத்திருந்த கீர்த்திகாவிற்காக... பிரதாப்புக்குத் தண்டனை கிடைக்க அவன் போராட... அவனோ சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி... வெளியே வந்தான். ஆனால், கீர்த்திகாவிடம் பிரச்சனை பண்ண வில்லை. ஏனென்றும் தெரியவில்லை.

"இதற்கிடையே ஒரு நாள்..." என்று பாலா ஆரம்பித்தபோது,

நர்ஸ் வந்து கதவைத் தட்ட... பாலா... கீர்த்திகா... வினோத்... மற்றும் கீர்த்தனா நிகழ்காலத்திற்கு வந்தனர்.

பாலா தன் கடந்த காலத்தை... மதுவைப் பற்றிச் சொல்லும்போது... கீர்த்தனாவின் பக்கம் திரும்பக்



கூடவில்லை. ஆனால் கீர்த்தனாவோ தன் கணவனின் ஒவ்வொரு பாவனையையும் விழி மாற்றாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் சொன்னதில் தன்னைப் பார்த்ததாய்ச் சொன்ன நாளும்... அந்த விசயமும் கூட அவளுக்கு ஞாபகம் இல்லை. அடிக்கடி இதே போல் வினோத்தோடு அவள் போயிருக்கிறாள். இரண்டு மூன்று பேர் மேல் மோதிக் கூட இருக்கிறாள். அதனால் ஆதி - பாலாவைப் பார்த்த விசயம் நினைத்துப் பார்க்கும் அளவுக்குப் பெரிய விசயமாய் அவள் வாழ்க்கையில் மாறவில்லை. அவன் சொன்னதில் ஒன்று மட்டும் அவளுக்கு ஆறுதல்... தன்னவனைத் தான்தான் முதலில் சந்தித்திருக்கிறோம் என்பதுதான் அது. மற்றது எல்லாம்ம்ம்.... - நெஞ்சம் விம்மியது. கணவனின் கடந்த காலம் நினைத்து மட்டும் அல்ல... மதுவுக்காக... கீர்த்திகா - ஆதிக்காகவும்தான்.

இப்போது பாலா மெதுவாய்க் கொஞ்சம் பயத்தோடு கீர்த்தியை நிமிர்ந்து பார்க்க... அவளோ எதுவுமே நடக்காதது போல... அவளைப் பார்க்காதது போல் மனதை மறைத்து அவன் விழிகளைச் சாதாரணமாய் எதிர்கொண்டாள்.

அந்தப் பார்வைக்கே வீரியம் தாங்காமல்... அவளைப் பார்க்க முடியாமல் பாலாதான் திணறினான்... என்று சொல்ல வேண்டும்.

வந்த செவிலி, கீர்த்திகாவிடம், "இன்னும் கொஞ்ச நேரத்தில் டாக்டர் ரவுண்ட்ஸ் வருவாங்க. அட்டெண்டன்ட் மட்டும்தான் இருக்க வேண்டும்..." என்று சொல்லிக் கீர்த்திகாவை மட்டும் ரிப்போர்ட் வாங்க வருமாறு அழைக்க...

பாலா, கீர்த்தனாவிடம்... "கீர்த்தி... நீயும் அவளோட போயிட்டு வா!" என்று சொல்ல...

கணவன் வார்த்தையைத் தட்டாமல்... கீர்த்திகாவோடு சென்றாள் கீர்த்தனா.

அவர்கள் இருவரும் போகும்வரை காத்திருந்தவன்... வினோத்தின் அருகில் சென்று அமர்ந்தான்.

## 45

வினோத் அருகில் சென்று அமர்ந்தவன்...

"வினோத்... உனக்கு என் மேல இருக்கிற கோபம் நியாயமானதுதான். சத்தியமா அது தப்புனு சொல்ல மாட்டேன். உண்மையைச் சொல்லப் போனா... நீ கீர்த்திக்கு இந்த அளவு சப்போர்ட்டா இருக்கிறது... உரிமை எடுத்துக்கறது... எல்லாம் எனக்குப் பிடிச்சிருக்குதான். ஆனா, அது என் எல்லை கிட்ட வரும்போதுதான் எனக்குக் கோபம் வருது. உனக்கு ஒண்ணு தெரியுமா... நீ இன்னைக்குக் கேட்டேல... கீர்த்தியை என்னோட அனுப்பிடுனு... நீ... மனதில் வேறு எண்ணம் இல்லாம அவ மேல் இருக்கிற பாசத்துல மட்டும் சொன்ன... அதையே என்னால தாங்க முடியலை. ஆனா, நான் இதை விடக் கேவலமா... கீர்த்தியை..." எனும்போது வாசலைப் பார்த்தான்.

அவள் வேறு வந்து கேட்டு விட்டால்... இருக்கிற நிலைமையில் கீர்த்தியை எப்படி எதிர் கொள்வது என்று தெரியவில்லை. இவன் இப்போது பேசப் போவதைக் கேட்டு... இதற்கு மேலும் மோசம் ஆகக் கூடாது என்று எச்சரிக்கையாக இருந்தான். தொடர்ந்தவன்...

"என்னால் வீணாக வாழ்க்கையைத் தொலைத்த அவளுக்கு நல்லது பண்ண வேண்டுமென்று நினைத்து... உன்கிட்ட பேசி... எங்களோட திருமணம் நடந்த விதத்தைப் பற்றிச் சொல்லி... அவளை உன்னோடு..." என்று சொல்ல வந்ததை முடிக்க முடியாமல் தடுமாறினான் பாலா.

தன் கேவலமான புத்தியை நினைத்து வருந்தியவன்... அது தந்த வலியில்... சிறிது நேரம் வேறு புறம் வெறித்துப் பார்க்க...



வினோத்துக்கும் இப்போது அவனைப் பார்க்கப் பாவமாய்த்தான் இருந்தது. ஒருபுறம் மது... மறுபுறம் கீர்த்தி... கொஞ்சம் சிக்கலான நிலைதான். இருந்தும் கீர்த்திக்காக மனதை மாற்றிக் கொண்டிருக்கிறான்... என்று சந்தோசம்தான். ஆனாலும் மது என்பவள் இல்லாத நிலையில் சந்தேகம் இல்லை. அவள் வந்து விட்டால்... கீர்த்தியின் நிலை... அது மட்டுமில்லாமல்... அவனுக்குத் தற்போது வந்திருக்கும் கீர்த்தியின் மீதான அவன் காதலில் முழு நம்பிக்கையும் வைக்க முடியவில்லை.

அவன் பார்வையை உணர்ந்த பாலா... விரக்தியாய்ப் புன்னகைத்தான்.

"உன் அத்தை மகளுக்கு இருக்கிற டவுட்தானே உனக்கு... ஒரே குட்டையில ஊறின மட்டைதானே ரெண்டு பேரும். அவ புத்திதானே உனக்கும் இருக்கும்..." என்று பாலா சிறிது நக்கலாய்ச் சொல்ல...

"ஏய்..." - விரலை உயர்த்திய வினோத்திடம் அந்த அளவு கோபம் இல்லை என்பதுதான் உண்மை. ஏற்கெனவே பட்டுட்டு இருக்கான். நாமும் படுத்த வேண்டாம் என்று நினைத்து விட்டான் போல...

"என்ன என் அத்தை மக... நக்கலா உனக்கு... ஒழுங்கா உன் பொண்டாட்டினு சொல்லு..." என்றவனின் வார்த்தைகளில்... பாலா நெகிழ்ந்தான்.

"தேங்க்ஸ் வினோத்... இப்போவாவது ஓரளவு புரிஞ்சுக்கிட்டியே...." என்றபோது,

"பாலா... விடு. நடந்தது நடந்து போச்சு. இனி எதையும் நம்மால் மாத்த முடியாது. ஆனால்... கீர்த்திக்கு யாரும் இல்லைன்னு மட்டும் தப்புக் கணக்குப் போட்டுராத... நான் சாகிறவரை அவளுக்கு ஆதரவா இருப்பேன். அதை மட்டும் மனசுல வச்சுக்கோ. அவளுக்கு உன்னோட வாழப்

பிடிக்கலைனு சொல்லி என்கிட்ட வந்தா... நான் அவ சொல்றபடிதான் கேட்பேன். அவளுக்குப் பிடிக்காத எதற்காகவும் வற்புறுத்த மாட்டேன்..." என்று கறாராகப் பேச....

அவளை உன்கிட்ட வர்றவரை நான் விட்டுட்டு இருப்பேன்னு நினைப்புதான்டா உனக்கு... என்று மனதிற்குள் நினைத்தவன்,

"வினோத்... அவ என்னைத் தன் உயிருக்கும் மேலா நேசிக்கிறாள். ஆனா வெளிப்படுத்த மாட்டேன் என்கிறாள். நீ இன்று சொல்லித்தான் அவ அன்னைக்கு என்ன சொல்லி அழுதானு அவளுக்குத் தெரிய வந்தது. அதுவரை... நான்தான் அவள் மேல பரிதாபப்பட்டு விரும்பறேனு நினைத்துக் கொண்டிருந்தாள்." இதைச் சொல்லும்போதே இன்றைய இரவை நினைக்கவே அவனுக்குக் கண் முன் பூதாகரமாகத் தோன்றியது... என்ன ஆட்டம் ஆடப் போகிறாளோ... என்று.

வினோத் ஆச்சரியமாக, "என்னது... அவளுக்கே தெரியாதா... நான் சொல்லித்தான் தெரியுமா?" என்று கேட்க,

"ஹ்ம்ம்.... அது மட்டும் இல்ல... இன்னொரு பெரிய விசயமும் இன்னும் அவளுக்குத் தெரியாது. அவளுக்கு என்ன... யாருக்குமே தெரியாது. உன்கிட்ட மட்டும்தான் இதை இப்போ சொல்கிறேன்..." என்றவன், ராகவனும் மைதிலியும் அவனிடம் பணத்தைத் திருப்பித் தந்த விபரத்தைச் சொல்ல... வினோத் சந்தோஷமாக அதிர்ந்தான்.

"உண்மையா பாலா..." என்று தழுதழுத்தவன்...

"அத்தைக்கும் - மாமாக்கும் பொண்ணுனா அவ்வளவு இஷ்டம்... கீர்த்தி முகத்தில் ஒரு சுணக்கம் வரக் கூடாது... அதை மாற்றிச் சந்தோசமாக்கினால்தான் ரெண்டு பேருக்கும் திருப்தி..." என்று சிலாகிக்க,



"அப்போ எனக்கு மட்டும் என்ன வினோத்... இன்னைக்கு நீ அவளை அடிச்ச அடியில எனக்கு உயிரே போய்டுச்சு தெரியுமா!" என்றவனை நம்ப முடியாமல் பார்க்க...

"என்னடா... இவனுக்கு இப்போ வந்த கீர்த்தி மேல இத்தனை காதலா... அப்படினுதானே நினைக்கிற... மதுவோட... காதல் எனக்குக் கிடைத்தது மிகப் பெரிய பாக்கியம்தான்... அதை மறுக்க முடியாதுதான்... ஆனா அவ என்னைய லவ் பண்ணினால் என்றால்... அதற்கு அத்தனை தகுதியும் எனக்கு இருந்தது. என்ன... கொஞ்சம் கோபக்காரனா இருந்தேன். அதைத் தவிர என் மேல் எந்தக் குறையுமில்லை. ஆனால்... கீர்த்திக்கு என் மேல் வந்த காதல்... அது எந்தத் தகுதியுமில்லாத ஒருவன் மேல் வந்த ஒன்று... அவளின் வாழ்க்கையைப் பணயமாக்கினேன். அவளை என் மனைவி ஆக்கிய அந்த நிமிடத்தில் கூட மதுவின் நினைவில்தான் இருந்தேன். பெண்ணாய் அவளுக்குண்டான உணர்வுகளை... உணர்ச்சிகளற்ற எனது நடவடிக்கைகளில் கூறு போட்டேன். நான் இன்னொருத்தியின் உரிமை என்பதை என் ஒவ்வொரு செயலிலும் காட்டிக் கொண்டிருக்க... என்னை... நான் கட்டிய தாலியை... அதற்கு மட்டுமே மதிப்பளித்து... என் முதல் காதலை உணர்ந்து... வெறுமையான என் நினைவுகளோடு மட்டும் வாழ முடிவெடுத்து... அவள் காதலை எனக்கு உணர வைக்காமலே... என்னை விட்டுப் போகத் தீர்மானித்திருந்த அவள் காதல் எனக்குப் பெரிதுதான்...

"நேற்றுவரை அவள் காதல் எனக்குத் தெரியாது என்ற நினைவில் என்னை மனதோடு பூட்டி வைத்து... தன் மண வாழ்க்கையோடு மன்றாடிக் கொண்டிருக்கும் என் மனைவியோட காதல் எனக்கு... மதுவோட காதலை விட உயர்ந்ததுதான்... இதை யார் கேட்டாலும் சொல்வேன்..." என்று உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசியவனை...

அவனின் உணர்வுகள் புரிந்து வினோத் அவன் கைகளை ஆதரவாகப் பிடித்தான்.

அவனின் ஆதரவு தந்த நம்பிக்கையில் இன்னும் மனம் திறந்தான் பாலா.

"ப்ளீஸ்... பண விசயத்த மட்டும் அவளுக்குச் சொல்லிடாதே... என்னால முடியாத நிலையில... அதை வச்சுதான் அவளை என்கிட்ட இருந்து பிரிய முடியாம பண்ணனும்..." என்றபோதே வினோத் கேள்வியான பார்வையில்... மனம் முழுவதும் பாரத்துடன்,

"கீர்த்திகிட்ட சொல்லாம மறச்சுட்டேனு கோபமா வருதா... எனக்கு வேறு வழி இல்லை. என்னால முடியல வினோத்... ஒரு பொண்ணுக்கு நம்மள பிடிக்கவில்லை என்று சொன்னால் கூட... அவளுக்குப் பிடிக்கும் ஏதாவது செய்தாவது நம் பக்கம் இழுக்கலாம்... ஆனா என்னைப் பிடிச்சுருக்கு இவளுக்கு... அவளோட உயிரா நினைக்கிறா என்னை... இருந்தாலும் அதைத் தனக்குள்ளேயே அடக்கி வச்சு... எதையும் வெளிப்படுத்தக் கூடாதுன்னு பிடிவாதம் பிடிக்கிறா. அவளை எதை வச்சு... என்ன பண்ணி என்னோட வாழ வைக்கிறதுனே தெரியல வினோத்... போராடிட்டு இருக்கேன்... பிடிவாதக்காரி... தன்னையும் அழிச்சுக்கிட்டு... என்னையும் கொல்றா..." என்ற போதே,

கீர்த்தனாவும் - கீர்த்திகாவும்... உள்ளே நுழைந்தனர்.

உள்ளே நுழைந்த கீர்த்தனா... பாலாவிடம்...

"பாலா... நான் வினோத்தோட இங்க ஹாஸ்பிட்டலிலே இருக்கேன்... நீங்க கீர்த்தியோட கிளம்புங்க. அவங்க வீட்டில தேடப் போறாங்க..." எனக் கூற,

கீர்த்திகா உள்ளம் பதறக் கீர்த்தனாவைப் பார்க்க....

'நான் போகல... நீ போ... வினோத்தை நான் பார்த்துக் கொள்வேன்!' என்று கத்த வேண்டும் போல் இருந்தது... ஆனால் முடியாமல் நிற்க...



பாலா கீர்த்திகாவின் சூழ்நிலையினை உணர்ந்தவன் போல்....

"இல்ல கீது... கீர்த்திகா... இங்கேயே இருக்கட்டும். அவதான் வினோத்தை அட்மிட் பண்ணினாள். அவளுக்குத் தான் எல்லாம் தெரியும். ஒரு நாள்தானே. ஒண்ணும் ஆகாது... நீ கிளம்பு... நாம போகலாம்..." என்று கூற,

கீர்த்தனா... 'நீ என்ன லூசா!' என்பது போல் பார்த்தாள். ஒரு திருமணம் ஆகாத பையனுடன்... அவனோடு உறவில்லா ஒரு பெண்ணைத் தங்க வைக்கச் சொல்கிறானே என்று தோன்ற...

அதைச் சொல்ல வாயெடுத்தவளை....

"இன்னும் கிளம்பலையா சார்... சீக்கிரம். என்னைத்தான் டாக்டர் திட்டுவாங்க!" என்று அந்த ஹாலின் ரோந்துப் பணியில் இருந்த காவலாளி அவர்களிடம் வந்து சொல்ல...

அதுதான் சாக்கு என்று வினோத்திடமும்... கீர்த்திகா விடமும் சொல்லியபடி கீர்த்தனாவை வெளியே இழுத்து வந்து விட்டான் பாலா.

"கையை விடுங்க பாலா... லூசா நீங்க... வினோத்தோட கீர்த்திகாவை விட்டுட்டு வந்துட்டீங்க. நாளைக்குக் கீர்த்தி வீட்டில யாராவது தப்பாப் பேசுனா என்ன பண்றது...?" என்று முறைத்தாள்.

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது... நிச்சயம் இதுனால நல்லதுதான் நடக்கும்.." என்று அழுத்தமாகச் சொன்னவனை விழி விரியப் புரியாமல் பார்த்தாள் கீர்த்தனா.

"முழிக்காத... கீர்த்திகாவை நோட் செய்தாயா... எதுனாலும் வித்தியாசம் தெரிந்ததா...?" என்று கேட்க,

அவள் இருந்த நிலையில் அவளுக்குக் கீர்த்திகாவின் நெற்றியின் மீதிருந்த பொட்டின் மேல் எல்லாம் கவனம் இல்லை.

"தெரியவில்லையே..." என்று உதட்டைப் பிதுக்கினாள்.

'அது சரி... நீ இன்னைக்கு இருக்கிற நிலையில் அது உன் கண்ணுக்குத் தெரிஞ்சாத்தான் ஆச்சரியம்!' என்று நினைத்தவன், அதை வெளியில் சொல்லாமல்...

கீர்த்திகாவைப் பற்றிச் சொல்ல...

"அய்யோ! நான் பார்க்கவில்லையே... வினோத்துக்கு அது புரியுமா பாலா... கீர்த்தி பாவம்ல... அவ மனசுல மறுபடியும் காதல்... ஆனா இந்த லூசுக்கு அது புரியுமா.... அவளை ஏத்துக்கிடுவானான்னு தெரியலயே... கீர்த்திய மட்டும் அவன் வேண்டாம்னு சொல்லட்டும்... மண்டையிலே ஒண்ணு போட்டு... கட்டுடா தாலியன்னு சொல்லணும்..." என்று கீர்த்தி சொல்ல...

"அடேங்கப்பா... தாலியக் கட்டிட்டு..." என்று பாலா கொக்கி போட்டு நிறுத்த,

"வேற என்ன பண்ணலாம் பாலா... கீர்த்தியும் சொல்ல மாட்டாங்க... வினோத் சுத்தம்... கீர்த்தி மனசில அவன் இருப்பான்னு ஒரு துளி கூட சந்தேகம் வராது..." என்று கீர்த்திகா - வினோத் இருவரின் நிலையிலும் கவலை கொண்டு பேச...

பாலாவோ, 'நம்ம வாழ்க்கையில என்ன பண்ணலாம்னு யோசிச்சிடாத... மத்ததெல்லாம் யோசி!' இதுவும் மனதில் மட்டுமே நினைத்தான் பாலா... வெளியிலோ,

"நீ ஒண்ணும் பண்ண வேண்டாம். அதை அவங்க பார்த்துப்பாங்க... இப்போ அவங்களுக்கு நம்மளால கொடுக்க முடிந்தது... தனிமை மட்டும்தான். பார்ப்போம்..." என்றபடி, காரைக் கிளப்பினான்.

**கீ**ர்த்தியின் முகத்தில் சிறிதும் குழப்பம் இல்லை. அவளைப் பார்த்த பாலாதான் குழம்பினான். ஆனால்,



தானாக வாய் விட்டு எதிலும் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை பாலா... பேசாமலே வந்தான்.

கீர்த்தி ஒன்றும் எண்ணாமல் எல்லாம் வரவில்லை... மதுவைப் பற்றிதான் யோசித்துக் கொண்டே வந்தாள். அவள் பாலாவின் மேல் வைத்திருந்த காதலை... தான் பாலாவின் மேல் வைத்திருக்கிறோமா... என்ற எண்ண ஓட்டத்தில் வர...

மது அவனுக்காக ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்தாள் என்றால்... தான் அவனைப் படுத்தி எடுப்பதைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை என்றே தோன்றியது... இப்படி நினைத்துக் கொண்டு வரும்போதே....

கீர்த்திக்கு... மதுவும்... ஊட்டியில் தான் பார்த்த பொண்ணும் ஒன்றோ என்று ஒரு எண்ணம் தோன்ற... மனம் பரபரவென்று ஆனது. ஆனாலும் பாலாவின் மதுவோடு... அந்தப் பெண்ணைச் சுத்தமாய் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இருவரும் ஒருவராய் இருக்குமோ என்ற எண்ணமே கசந்தது. அப்படிப்பட்ட பெண் மதுவாக இருக்காது... என்று தனக்குள்ளாகச் சமாதானம் செய் தாலும்... உள்ளே சந்தேகம் என்று ஒன்று வந்துவிட்ட பின்னர்... அதை நிவர்த்தி செய்யத் தோன்றியது.

உடனே, "பாலா!" என்றாள்.

அவள் கூப்பிட்டவுடன் திரும்பிய பாலாவிடம்... ஏனோ ஊட்டி சம்பவத்தை சொல்ல மனம் வராமல்... பட்டென்று மாற்றினாள்.

"மது போட்டோ இருக்கா பாலா... நான்... பார்க்கணுமே!" என்று தயங்கிக் கேட்க...

அவளை உற்று நோக்கினான் பாலா.

"எதுக்கு... " என்றவனின் கேள்வியில் தொனித்த கடுமையில் முகம் வாடியவளாய்,

'சரி... கீர்த்திகாவிடம் வாங்கிக் கொள்ளலாம்!' என்று விட்டு விட்டாள்.

அவளின் முகம் கூம்பியதைத் தாங்காமல்... எல்லாம் தெரிந்து விட்டது... இனி ஜாண் போனால் என்ன... முழம் போனால் என்ன... என்று நினைத்தவன்... தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு...

"உடனே மூஞ்சிய தூக்கி வச்சுக்கிடுவியே... லேப்டாப்பை எடு... அதில் இருக்கு!" என்று சொல்ல, வேகவேகமாக லேப்டாப்பை எடுக்க... அவளின் படபடப்பில்... வேகத்தில்

"என்னாச்சு இவளுக்கு... வித்தியாசமா ரியாக்ட் பண்றா... இன்னும் போட்டோலாம் வச்சுருக்கோமான்னு டெஸ்ட் பண்றாளா... இவ மேல வந்த காதலால் மனசுல இருந்துதான் எடுத்தாச்சே... இந்தப் போட்டோவெல்லாம் இருந்தா என்ன... இல்லைனா என்ன..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

தன் எண்ண ஓட்டத்தில் இருந்தவன்.. அவள் அவனையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிய,

"என்ன... என்னையே பார்த்துட்டு இருக்க. ஓபன் பண்ணு. ஃபோல்டர் நேம் சொல்றேன்!" என்று சற்று அதட்டலுடன் கூற,

"ஓபன் பண்ணு... ஓபன் பண்ணுனா... பாஸ்வோர்ட் என்னன்னு தெரியாம.... எப்படிப் பண்றது?" என்றபோது, அவள் குரலும் உயர்ந்துதான் இருந்தது.

இப்போது இன்னொரு ஆவல் அவளுக்கு... அவனின் பாஸ்வேர்ட் என்னவாக இருக்கும் என்று. அது அவளை இன்னும் கொஞ்சம் படபடப்பாக மாற்றியது.

பாலா நிதானமாகச் சொன்னான் அவளைப் பார்த்தபடியே... ஒவ்வொரு எழுத்தாக.



அவளும் டைப் செய்ய ஆரம்பித்தாள்.

"keedhumylife" என்று சொல்ல... அகமும்... முகமும் ஒரு சேர மலர... கண்களில் ஆனந்த அலை அடிக்க... முகமெங்கும் பரவசத்துடன் அவனைப் பார்த்தாள்.

அது எல்லாம் ஒரு நொடிதான்... மீண்டும் தன் முகத்தைச் சாதாரணமாக்கியவள்...

இப்போது நக்கலாக, "ஸ்ட்ராங் பாஸ்வேர்ட் இல்ல போல பாலா.... ஸ்பெஷல் கேரக்டர்... நியூமரிக் எதுவும் இல்லாம வீக்கா இருக்கு... நீங்களாம் சாஃப்ட்வேர் கம்பெனி வச்சு... என்னத்த சொல்ல..." என்றபடி அவனை வாரியவளிடம்,

"ஆடுடி... நீயும் எவ்வளவு தூரம் போவேனு பார்க்கிறேன்..." என்றபடி பார்க்க...

"கீதுமைலைஃப். நல்லாதான் இருக்கு... ஹ்ம்ம்ம்..." என்று யோசிப்பது போல் பாவனை செய்தவள்...

"ஏற்கெனவே இருந்த உங்க பாஸ்வேர்ட் 'மதுமைலவ்' கரெக்டா..." என்று குறுக்கெழுத்துப் போட்டியில் பதில் கண்டுபிடித்த மாணவி போல சொல்லிப் பாலாவைப் பெருமையாகப் பார்த்த கீர்த்தனாவை விழி தெறிக்க அப்பாவியாய்ப் பார்த்தான்....

"ஆனா அப்பொழுதும் ஸ்ட்ராங் இல்ல... இப்போதும் ஸ்ட்ராங் இல்ல..." என்றவள்...

அவனின் கோபப் பார்வையைச் சளைக்காமல் எதிர்கொண்டு, "சாரி... நான் பாஸ்வேர்ட் சொன்னேன்... பாலா. தப்பா நினைக்காதீங்க..." என்றபடி,

"சரி சரி... ஃபோல்டர் நேம் சொல்லுங்க!" என்று அவனை விரட்டுவது போல் கேட்க...

இன்னும் என்னவெல்லாம் பேசுவாளோ என்று தோன்றியது அவனுக்கு.

அவனின் பார்வை மாற்றங்களில்... கீர்த்தியும், 'ரொம்ப படுத்தறமோ... பாவம் பையனை விட்டுடலாம்...' என்று நினைத்தவள், புகைப்படத்தில் மட்டும் கவனம் செலுத்த ஆரம்பித்தாள். முதலில் இருந்த புகைப்படத்தில் மது... கீர்த்தி...ஆதி... பாலா என்று நால்வரும் இருக்க...

அதில் இருந்த மதுவைப் பார்த்தவளுக்கு.... அவள் அழகு... கம்பீரம்... நிமிர்வு என்று எதுவும் அன்று பார்த்த போதை மருந்துகளின் தாக்கத்தோடு இருந்த மதுவோடு சுத்தமாய்ப் பொருந்தவில்லை. அடுத்த புகைப்படம்... மது - பாலா... மட்டும் இருந்த படம்... அந்தப் புகைப்படத்தைக் கொஞ்சம் உற்றுப் பார்த்திருந்தால் அதில் உள்ள மதுவின் கண்களில் தெரிந்த காதல்... கண்டிப்பாக அது மது என்று சொல்லியிருக்கும். ஆனால், இருவரும் சேர்ந்து இருந்த புகைப்படத்தைப் பார்க்க... அதில் உரிமையோடு மதுவின் தோள் மேல் கை போட்டு அணைத்தபடி நின்ற பாலாவைப் பார்த்தவள்... எந்த ஒரு பெண்ணும் தன் கணவன் இன்னொரு பெண்ணை உரிமையோடு அணைத்திருக்கும் ஒரு காட்சியைப் பார்க்க விரும்புவாளா என்ன?

சட்டென்று மூடி விட்டாள்... என்னதான் அவன் மதுவின் காதலன்... மதுவுக்குச் சொந்தமானவன் என்று மனதும்... வாயும்... செயலும் சொன்னாலும்... அப்போதுதான் ஒன்று உணர்ந்தாள். அவளால் அவனோடு அவளை இணைத்துப் பார்க்கவே முடியவில்லை எனும்போது... மதுவுக்கு அவனை விட்டுக் கொடுக்க முடியுமா என்று...

கணினியை மூடி வைத்தவள்... பாலாவிடம் எதுவும் பேசாமல் அமைதியாகவே வந்தாள்.



அதே நேரம்... அந்தப் பெண் மது இல்லை என்று தோன்றியதில் ஒரு பெருத்த நிம்மதியும் இருந்தது அவளுக்கு...

அவளின் முகம் மாறிய விதத்தைப் பார்த்தவனுக்கு, 'தேவையா இது... இவளுக்கு...' என்று கோபம் வந்தாலும்,

தன்னை மதுவோடு சேர்த்துப் போட்டோவில் கூடப் பார்க்க முடியாமல் வருந்துகிறாளே... இவ்வளவு நேரம் தானும்... கீர்த்திகாவும் சொல்லும்போது, என்ன பாடு பட்டாளோ... இனி எதை எல்லாம் நினைத்து அவள் மனதைக் கஷ்டப்படுத்திக் கொள்ளப் போகிறாளோ... என்று இவன் துடிக்க ஆரம்பித்திருந்தான்.

**கா**ரை விட்டு இறங்கிய கீர்த்தனாவைச் சிந்து வழி மறிக்க... பாலாவோ நிற்காமல் உள்ளே போய் விட்டான்..

"அக்கா... வினோத் அண்ணாக்கு எப்படி இருக்கு...? ஆன்ட்டி ஆக்சிடென்ட்னு சொன்னாங்க. நல்லா இருக்காங்களா?" என்று கேட்க,

அவளிடம், வினோத்துக்கு ஒன்றுமில்லை... நன்றாக இருப்பதாகச் சொல்லியவள்...

"மணி 11 ஆகப் போகுது... இன்னும் தூங்கப் போகாம... என்ன பண்ற... இதை போன்லயே கேட்டிருக்கலாம்ல..." என்று கூற...

"இல்லக்கா... நாளைக்கு நான் ஆறரைக்கெல்லாம் ஸ்கூல் போய்டுவேன்... ஸ்பெஷல் கிளாஸ் ஸ்டார்ட் பண்ணிட்டாங்க... அதனாலதான்... நாளைக்கு உங்கள சாயங்காலம்தான் பார்க்க முடியும்," என்றவளை....

"அதுனால என்ன?" என்று கீர்த்தி கேட்க,

கையில் இருந்த பரிசினை அவளிடம் நீட்ட... கீர்த்திக்கு ஏனென்று புரிய... கண்களில் கண்ணீரே வந்து விட்டது...

ஆனால் அது வெகு நாட்களுக்குப் பிறகு அவள் கண்களில் வந்த ஆனந்தக் கண்ணீர்...

"சிந்து...." என்று நெகிழ,

"இதுக்குத்தான்... வெயிட் பண்ணினேன்..." கிஃப்டைக் கொடுத்து விட்டு... "அட்வான்ஸ் ஹேப்பி பர்த் டே மை டியர் கீர்த்தி அக்கா..." என்று சொல்லியபடி.... அவள் கன்னங்களில் தன் முத்தத்தைப் பதித்தவள்... தன் குறும்பை விடாமல், "நல்ல வேளை இங்கே பாலா அண்ணா இல்லை..." என்று ஆரம்பித்தவளை,

வாயைப் பொத்தியவள்... "கவியோட சேர்ந்து உனக்கு வாய் சாஸ்தி ஆகி விட்டது... அப்படியே அவ டிட்டோவா ஆகிட்டு வர்ற!" என்று கத்த ஆரம்பிக்க,

"உங்களைக் கேலி பண்றதில வேணும்னா அவங்க டிட்டோவா இருக்கலாம்.. ஆனா நான் மத்த விசயத்தில எல்லாம் உங்க மாதிரிதான்!" என்று கூறியபடி தன் வீட்டிற்கு ஓடினாள்.

அவள் கொடுத்த பரிசினையே பார்த்தபடி சில நிமிடம் நின்றவள்...

"சிந்து... உன் அக்கா நிலை எல்லாம் உனக்கு வரக் கூடாது... நீ இப்போ இருக்கிற மாதிரி எப்போதும் சந்தோசமா இருக்கணும்..." என்று எண்ணியவளுக்கு,

இத்தனை வருடமும் தங்கள் வீடு இருந்த நிலையும்... இன்று இருக்கும் நிலையும் மனதில் ஓட.... அங்கே போக வேண்டும் போல் தோன்றியது.

'ச்சே... வினோத் பண்ணிய வேலையில் எதுவும் நினைவில்லை... தனது பிறந்த நாள் என்று தெரிந்துதான் வினோத்தோடு கூடத் தங்க விடாமல் கூட்டி வந்து விட்டான்...' என்று கணவனை நினைத்தபடி மாடிக்குச் சென்றாள்.

அங்கே... பாலா.... 'எங்கே கீர்த்தனா வந்தால் அவனோடு ஏதாவது பேசிப் பிரச்சனை பண்ணுவாளோ..'



என்று நினைத்து... விளக்கை அணைத்துவிட்டு அவள் வருவதற்கு முன் படுத்து விட்டிருந்தான்.

ஆனால், அதைப் பார்த்த கீர்த்திக்குச் சிரிப்பு வந்தது... தனக்குப் பயந்துதான்... அவனோடு சண்டை போட்டாலும் போடுவோம் என்று நினைத்துத்தான் அவனின் இந்த ஏற்பாடு... என்று தெரியாதவளா என்ன...!

வந்த இருபது நிமிசத்தில் அவன் என்ன தூங்கி யிருக்கவா போகிறான்... என்று விளக்கைப் போட்டவள்...

அவனை எழுப்பினாள் சாப்பிடுவதற்கு...

"கீர்த்தி! எனக்குத் தூக்கம் வருது... எனக்குச் சாப்பாடு வேண்டாம்... " என்று நழுவப் பார்க்க... விடாமல், "ஆனா... எனக்குப் பசிக்குது... வாங்க பாலா... அட்லீஸ்ட் கம்பெனி குடுங்க பாலா!" என்று அழைத்தவளிடம்...

"தெனாவெட்டுதான் உனக்கு... சாப்பிட உனக்கு கம்பெனி வேணுமா... போடி... நீ என்னை ஒரு வழி பண்ணாம விட மாட்ட இன்னைக்கு... என்ன விட்டுடு. என்னால முடியாது இன்னைக்கு... எதுவா இருந்தாலும் நாளைக்குப் பேசறேன்..." என்று மீண்டும் கண்களை மூடப் போக...

"சத்தியமா பாலா... உங்க கூடச் சண்டைலாம் போட மாட்டேன்.... நம்புங்க ப்ளீஸ்... பசிக்குது... இல்லேனா... உங்க பொண்டாட்டி வெறும் வயிறோடதான் படுக்கணும்..." என்றவளை அதிர்ந்து நோக்கினான்.

'பொண்டாட்டியா...!'

பூகம்பம் வெடிக்கும் என்று பார்த்தால்... பூமாரியாய்ப் பொழிகிறாள் என்று யோசித்தவன்... இன்னும் அவளை நம்ப முடியாமல்...

"சரி. உனக்காக வருகிறேன்... எனக்கு ஊட்டி விடறியா!" என்று நப்பாசையோடு அச்சாரம் இட்டவனைப் பார்த்து...

"அப்போ சரி... நான் தூங்கவே போகிறேன்," என்றவளை அப்படியே விட மனசில்லாமல்...

"வாடி... நீ நினைச்சதுதான் நடக்கணும்... இல்லேனா அதுல இருந்து இறங்கி வர மாட்ட. இத்தனை வருஷம் உன்னை வச்சு எப்படித்தான் குப்பை கொட்டுனாங்களோ...!" அலுத்தபடி சாப்பிட இறங்கினான்.

'அதுதான் பாதியிலயே போய்ட்டாங்களா... என்னோட குப்பை கொட்றதுக்குச் சரியான ஆளா கிடச்சுட்டான்னு...' என்று முறைத்தபடி... கீழே இறங்கியவளைப் பார்த்து வாய் பிளந்து நின்றவன் பாலாதான்.

இருவரும் சாப்பிடும்போது கேட்டான். "கீர்த்தி, உனக்கு என் மேல கோபம் இல்லையே... என்னை மீறி நடந்துடுச்சு... எனக்குச் சொல்ல இஷ்டம் இல்லதான்...." என்றவனிடம்...

"சாப்பிடுங்க... பாலா!" என்றபடி எழுந்து போனவளின் மனம் என்ன நினைக்கிறது என்று தெரியாமல் பாலாவின் மனம் தவித்தது.

பெண்ணென்பவள் புரியாத புதிர் என்றும்... பெண் மனது கடலின் ஆழத்தை விட அதிகம் என்பதையும் அவனுக்குப் புரிய வைத்தாள் அவனது மனைவி.

பாலாவுக்கு அந்தச் சூழ்நிலையை மாற்ற விருப்பமில்லை

தான் கொஞ்சம் ஓவராக ஏதாவது செய்ய ஆரம்பித்து... அவள் பொங்கி விட்டால் என்று தோன்ற... நல்ல பிள்ளையாய்ப் படுத்து உறங்க ஆரம்பித்தான்.

கீர்த்தனா மணி எப்போது 12 ஆகும் என்றபடி படுக்கையில் புரண்டு கொண்டிருக்க...

இன்று அவனது வாழ்த்து வேண்டும் என்று அவள் மனம் ஏங்கித் தவித்தது... கண்டிப்பாகச் சொல்லுவான் என்றுதான் நம்பினாள். தனக்காக ஒவ்வொன்றும் பார்த்துப் பார்த்துச் செய்யும் தன்னவன்... கண்டிப்பாகத் தன் பிறந்த நாளை மறக்க மாட்டான் என்றே நினைத்தாள்.



அவன் மனைவி ஆன பின் வரும் முதல் பிறந்த நாள் இது... தாய் தந்தை வாழ்த்துக்கள் இந்த வருடம் இல்லை என்னும் வருத்தம் எல்லாம்... அவன் ஒருவனின் வாழ்த்து மறக்கடித்து விடும் என்று நினைத்து அவன் வாழ்த்தைச் சொல்லும் அந்த நொடிக்காக ஏங்க ஆரம்பித்தாள்.

ஆனாலும்... அதே நேரத்தில் வாழ்த்துச் சொல்லி விட்டு வம்பு வளர்ப்பானோ என்று தோன்ற... அப்படிச் செய்தால் என்ன செய்வது... தான் மறுத்துச் சண்டை வந்து விடுமோ என்று மனம் கலங்க... கணவனோ அது எதற்கும் வாய்ப்பு வைக்காமல் நித்திரையில் ஆழ்ந்திருந்தான்.

12... 12.10... 1... 3... கடிகார முள் நகர்ந்தது... கட்டிய கணவனிடமிருந்து அசைவில்லை.

கீர்த்தி உறங்கவே இல்லை... நடை பயின்றாள்... சோபாவில் அமர்ந்தாள்... பால்கனியில் நின்றாள்... ஒரு நிலையில் இருக்க முடியவில்லை அவளால்... நித்திரையில் ஆழ்ந்திருந்தவனைப் பார்த்துப் பார்த்துக் கோபம் அழுகை... ஆத்திரம் எல்லாம் ஒரு சேர இருந்தவளை... அறியாமல் பாலா தூங்கிக் கொண்டிருக்க...

பேசாமல் அவனை எழுப்பி விடுவோமோ... எழுப்பியாவது வாழ்த்தை வாங்கி விடலாமா என்று தோன்ற... அவளுக்குத்தான் தன்மானம் கொஞ்சம் அதிகமாயிற்றே.. அப்படிச் செய்யவும் பிடிக்கவில்லை... அவனாகச் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள்.

தாய்... தந்தை நினைவில் இந்தப் பிறந்த நாள் எதற்கு வருகிறது... என்று அதைக் கொண்டாடவெல்லாம் பிடிக்காமல் இருந்தாலும்... கணவனின் வாழ்த்துக்காகக் காத்திருந்தாள்தான்.

ஆனால் ஏமாந்ததுதான் மிச்சம்.

'போன வருடம் மட்டும் பல்லைக் காமிச்சுட்டு பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லி... ஆர்டரைக் கொடுத்தான். இந்த

வருஷம் உரிமையானவளா பக்கத்தில் இருந்தும் தூங்கித் தொலையுறானே.... படுபாவி... வேணுமனே பண்றானா...!' என்றெல்லாம் யோசித்தவள்...

இன்று இருந்த சூழ்நிலையில் எனக்கே என் பிறந்த நாள் மறந்து போச்சு... எனச் சமாதானமாகப் பார்க்க...

எனக்கு மறக்கலாம்.... அவனுக்கு மறக்கலாமா என்று வேறு நினைத்து மனம் துடிக்க...

'சரி. மறந்துட்டான்... விட்டுத் தொலைவோம்... அட்லீஸ்ட் நாளைக்குப் புடவை கட்டுவோம்... அப்படியாவது... ஞாபகம் வருதான்னு பார்ப்போம்....' என்று முடிவெடுத்தவள் நான்கு மணி அளவில்தான் கண் உறங்கினாள், கண்களில் கண்ணீரோடு!

இங்கு கீர்த்தனா - பாலா நிலை இப்படி இருக்க...

மருத்துவ மனையிலோ... கீர்த்திகா - வினோத் நிலை... பாலா - கீர்த்தி போல் அல்லாமல் சந்தோச அலையில் மிதந்தது.

## 46

**ம**ருத்துவ மனையில்...

வினோத்... நல்ல உறக்கத்தில் இருக்க... கீர்த்திகா அப்போதுதான் உறங்கியிருந்தாள்.

கிட்டத்தட்ட 12.30 மணி அளவில் வினோத் கண் விழித்தான்... விழித்தவன் அறையைச் சுற்றி நோட்டமிட... கீர்த்திகா... அருகில் இருந்த மேசையில் தலை வைத்துப் படுத்திருக்க... அவளையே சிறிது நேரம் பார்த்தபடி இருந்தான்.

இந்தச் சின்ன வயதில் இவளுக்கு எவ்வளவு பெரிய வேதனை... என்று நினைத்தவன்... அவளையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து... அது தவறென்று புரிந்து



பார்வையை மாற்றினான். மாற்றியவனின் கண்களில்... சுவர்க் கடிகாரம் கண்ணில் பட... அதிர்ந்தான்...

மணி 12.30. அவனுக்குக் கீர்த்தியின் பிறந்த நாள் அனிச்சைச் செயலாய் ஒவ்வொரு வருடமும் ஞாபகம் வந்துவிடும் என்பதால்... ஆச்சரியம் இல்லைதான்... மனதினுள்ளே,

'ஓ காட்!' என்று தனக்குள் பேசிக் கொண்டே மொபைலைத் தேட... அது அருகில் இல்லை.

கீர்த்தனாவுக்கு எப்போதும்... 12 மணி அளவில் அவன் வாழ்த்தைச் சொல்லி இருக்க வேண்டும். இல்லை... சொல்ல முடியவில்லை என்றால்... முந்தின நாளாவது சொல்ல முடியாத காரணத்தைச் சொல்ல வேண்டும்... இல்லை என்றால் வேப்பிலை இல்லாத குறைதான்... சாமியாட்டம் ஆடுவாள்... கோபம் அவள் மேல் இருந்தாலும் வாழ்த்தைச் சொல்ல வேண்டும்... என்று நினைத்தவன் கையில் மொபைல் சிக்கவே இல்லை... எழவும் முடியவில்லை... கையில் ட்ரிப்ஸ் வேறு ஏறிக் கொண்டிருந்தது.

அன்று அவள் ராகவன் - மைதிலி மகளாய் இருந்தாள். இன்றோ அவள் திருமணம் செய்தவள். இன்னொருவனின் மனைவி... இந்த நேரத்தில் போன் செய்யலாமா என்றெல்லாம் அவனுக்கு உறைக்கவில்லை.

அவனின் அசைவில் கீர்த்திகாவிற்கும் உறக்கம் கலைய...

"என்ன வினோத்..." என்று கேட்க,

"போன் வேணும் கீர்த்திகா..." என்றவுடன்... தனதருகில் இருந்த அவனின் போனை எடுத்துக் கொடுக்க...

"கீர்த்திக்கு இன்னைக்குப் பிறந்த நாள்... லேட்டாகி விட்டது. அவ அப்பா... அம்மாவும் இல்லை இப்போ... ஏங்கிப் போய்டுவா..." என்றபடி, அவளது நம்பரை அழுத்தியவனின் போனை அருகில் வந்து கட் செய்தாள் கீர்த்திகா.

அவளின் இந்தச் செய்கையில் கோபமானான்தான் வினோத்... இருந்தாலும் அவளிடம் கோபப்படுவது முறையில்லை என்பதை உணர்ந்து... அமைதியாகவே... "என்னங்க போனைக் கட் பண்றீங்க...?" என்றபடி மீண்டும் கால் செய்ய...

போனைப் பறித்தபடி...

"என்ன வினோத், தெரிஞ்சுதான் பண்றீங்களா... இல்லை... தெரியாமத்தான் பண்றீங்களா... இந்த நேரத்தில கீர்த்திக்கு போன் பண்ணலாமா?" என்றவளிடம்...

"ஏன்... பண்ணினால் என்ன...?" என்று கேட்க,

"போன வருடம் வரை நீங்க பண்ணியிருந்தால் தப்பில்லை... ஆனா... இப்போ அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டது... இப்போ பண்றது தப்பில்லையா...?" என்று கேட்க.

"ச்சேய்..." என்று தன்னைத் தானே திட்டியவனின் மனதில் இன்னொன்றும் உலா வந்தது. ஆமா... இவன் ஒரு மூலையில... அவ ஒரு மூலையிலனு தூங்கிட்டு இருப்பாங்க... இதுல நான் போன் பண்றது வேற தப்பா போயிருமா... என்றும் நொந்தவன்...

"இல்ல கீர்த்தி... போனைக் குடு... எனக்குப் போன் பண்ணனும்... அவங்களுக்கு இது டிஸ்டர்ப்லாம் இல்லை... எல்லாம் உனக்குத் தெரிந்ததுதானே!" என்று கேட்டபடி கை நீட்டியவனிடம் தயக்கமாகவே சொன்னாள் கீர்த்தி...

"வினோத்... என்னதான் இருந்தாலும்... அவங்களுக்குரிய ப்ரைவசியான இந்த நேரத்தில பண்றது தப்பு!" என்று அவனுக்குப் புரிய வைக்க முயன்றாள்.

வினோத் பொங்கி விட்டான்.

"என்னங்க பிரைவசியான நேரம்... அப்படிப் பார்த்தா... உங்களுக்கும் எனக்கும் என்ன பல வருடப் பழக்கமா



என்ன... ரெண்டு இல்ல மூணு தடவை பார்த்திருப்போம்... இப்போ இந்த டைம்ல நீங்க கூடத்தான் என் பக்கத்தில இருக்கீங்க.. அது தப்பு இல்லையா...?

"நான் கீர்த்திகிட்ட பழகுறதுல உங்களுக்கு என்ன பிரச்சனை... காலையில என்னன்னா... பாலா அவளுக்குத் தேவையானத வாங்கிக் கொடுக்கமாட்டாரானு கேட்டீங்க... இப்போ என்னடாவென்றால் இப்படிச் சொல்றீங்க..." என்று எரிச்சலாய்ப் பேசியவன்...

"ஆமா, நீங்க எதுக்கு இங்கே தங்கறேனு ஒத்துக்கிட்டீங்க... அந்தப் பாலா வேற... கீர்த்தனாவ விட்டுட்டுப் போகாம உங்கள விட்டுட்டுப் போயிருக்கான் மடையன்... சரி. கீர்த்திக்குப் பிறந்த நாள்... அவனோட போகட்டும்னு விட்டேன்..." என்ற போதே அவன் மனதில் கீர்த்திகாவுக்கு உரிய இடம் தெளிவாய்ப் புரிய... கண் கலங்கிவிடும் போல் தோன்ற... வேகமாய் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்... அப்படி இருந்தும் கண்ணில் இருந்து நீர் வெளியேறி விட... வேகமாக முகம் கழுவி வரச் சென்றாள்.

வினோத்துக்குக் கீர்த்திக்கு போன் செய்யும் மூடே போய்விட்டது. கீர்த்திகாவிடம் வேறு கோபமாய்ப் பேசியது வருத்தம் தர, போனை எரிச்சலுடன் கீழே வைத்தான் வினோத்.

முகம் கழுவித் திரும்பி வந்தவளைப் பார்த்துப் பேசப் பிடிக்காமல் கண்களை மூடப் போக... அவள் நெற்றியின் வெறுமை பளிரென இவன் மனதில் மின்னல் அடிக்க... மீண்டும் கண்களைத் திறந்து அவளைப் பார்க்க... கீர்த்திகா எதுவும் சொல்லாமல் பழையபடி அவள் இருந்த இடத்திலேயே அமர்ந்தாள்...

அவளின் அந்தத் தோற்றம்... மனதைத் தாக்க... முகம் கழுவும் போது விழுந்திருக்கும்... சொன்னால் வேறு வைத்துக் கொள்வாள் என்று தோன்ற...

"கீர்த்தி..." என்று அழைத்தான்.

"நர்சைக் கூப்பிடணுமா வினோத்?" என்று கேட்டபடி, அவனருகில் சென்றாள் அவள்.

"இல்லை... உன் நெத்தில இருந்த பொட்டு முகம் கழுவும் போது விழுந்து விட்டது போல... நல்லா இல்ல... வேற இருந்தா எடுத்து வச்சுக்கோ!" என்று சொன்ன போது ஏனோ ஒருமையில் பேச...

"பரவாயில்ல. விடுங்க... நாளைக்கு வச்சுக்கிறேன்... எனக்கும் அதுக்கும் ராசி இல்லை போல..." என்று குரலில் பிசிறடிக்கக் கூறியவளை மனதில் பாரத்துடன் பார்த்தான் வினோத்... அப்போதுதான் அவனுக்கும் ஞாபகம் வந்தது... மனதினுள் வைக்காமல் கேட்டும் விட்டான்.

"புக் ஸ்டால்ல பார்க்கும் போதே கேக்கணும்னு இருந்தேன். திடீர்னு பொட்டு வச்சுருக்கீங்கன்னு... நான் அன்னைக்குச் சொன்னதினாலா..." என்று கேட்ட போது அவள் ஆமாம் என்று சொல்வாள் என்றெல்லாம் நினைக்க வில்லை அவன்.

தலையை மட்டும் ஆட்டினாள் அவள்... வினோத்தின் விழிகள் அவளிடமே நின்றுவிட்டன.

மறுபடியும் கேட்டான்... நம்ப முடியாமல்...

"நான் சொன்னதுனாலயா...?" என்ற போது, அவன் வார்த்தைகள் அவனுக்கே கேட்காதது போல் இருக்க...

ஆமாம் என்று வாய் வார்த்தையால் பதில் சொன்னாள் கீர்த்திகா... கண்களில் அவள் மறைக்க நினைத்த போதும்... இமைகள் படபடத்தன.

அது வினோத்துக்கு ஏதேதோ கதை சொல்ல... அவளையே பார்த்தபடி இருந்தான்... அவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த கீர்த்திகா... அவனை விட்டு நகரப்



போக... வினோத்தின் கரம் அவனையு மறியாமல் அவள் கரத்தைப் பற்றியது - அவளைப் போகவிடாமல்...

கீர்த்திகா அப்படியே நின்றாள்... கண்களில் கண்ணீர் பெருகியது. உணர்வுகளின் தாக்கத்தில்... வார்த்தைகள் வரவில்லை...

வினோத்துக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை... ஏனோ அவளை நகர விடாமல் தடுக்க வேண்டும் என்று மனம் சொல்லக் கையைப் பற்றி விட்டான்... ஆனால், அவள் கண்ணீர்... அவனுக்கு அவளின் மனதைச் சொல்லாமல் சொல்லி விட்டது.

தன் மீது அவளுக்கு எப்படி... நினைக்கவே தடுமாறினான் வினோத்... மனம் அலை பாய்ந்தது.. சட்டென்று மனம் முடிவெடுக்கத் திணறியது... இருந்தாலும்,

"கீர்த்தி... நான் உன்கிட்ட பேசணும்..." என்றபோது, கீர்த்தி அவனை நிமிர்ந்து பார்க்க...

அவளின் தீர்க்கமான பார்வையில் முடிவெடுக்கத் திணறிக் கொண்டிருந்த மனம்... அவளிடம் சரணடைந்தது... அதன் பிறகு அவன் யோசிக்க எதுவும் இல்லாமல் போயிருந்தது.

அவன் எதுவும் சொல்லவில்லை... அவளிடம்... கையில் போட்டிருந்த ட்ரிப்ஸைப் பிய்த்து எறிந்தவன்... அறையை விட்டு வேகமாக வெளியேறி... அந்த மருத்துவ மனையில் கோவில் எங்கு உள்ளது என விசாரித்தவன்... போன வேகத்திலேயே திரும்பி வந்தான்.

வந்தவனின் கைகளில் குங்குமம் இருக்க... கீர்த்திகா முன் போய் நின்றான்.

"கீர்த்தி! என்னைப் பாரு... நான் சொன்னதுனால தான் பொட்டு வச்ச... அப்படித்தானே...?" என்று கேட்க,

அவள் இப்போதும் மேலும் கீழுமாய்த் தலையை மட்டும் ஆட்ட...

"அதை வேற யாரும் சொல்லி இருந்தா வச்சுருப்பியா...?" என்று கேட்க...

"மாட்டேன்..." எனும்படி தலையை இடமும் வலமும் ஆட்டியவள்... வினோத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வினோத்துக்கு அதுவே போதும் என்று தோன்ற... அவளைத் தன் கைகளால் தொட்டு நிமிர்த்தியவன்... அவளிடம் தன் மனதைச் சொல்லவில்லை... அவள் மனதையும் கேட்கவில்லை... அவள் மனம் சொன்ன செய்தியைக் கண்கள் ஒளிபரப்ப... அதை அவன் கண்கள் வாங்கி மனதுக்கு அனுப்ப... அந்த நொடி அவளின் நெற்றியில் தன் விரல்களால் குங்குமத்தை வைத்தான்... அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட கீர்த்திகா அந்த நொடியில் தன் சாபம் எல்லாம் நீங்கியவளாய் அவனோடு கலந்தாள்.

அவளின் மனம் புரியத் தன்னோடு அணைத்துக் கொண்டான்... அப்படியே சிறிது நேரம் இருந்த இருவரில் கீர்த்திகாதான் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு விலகினாள்.

அவனும் தடுக்கவில்லை... அதே நேரத்தில் முற்றிலும் விலக விடவில்லை அவளை...

"கீர்த்தி..." சொன்னபோது, அவன் குரலே அவனுக்குப் புதியதாக இருந்தது... தன் மன வீட்டிற்குள் வாசம் செய்யப் போவது இந்தக் கீர்த்திகாவே என்பதைப் பரிபூரணமாக உணர்ந்தான் வினோத்.

கீர்த்திகா இப்போது தன் வாய் திறந்தாள்...

"வினோத், என் ஆதியோட காதல் என்னை வாழ வச்சுடுச்சு!" என்ற போது அவள் கண்களில் மாலை மாலையாக நீர் வடிந்தது...



"என்னை யாரும் நிர்பந்தப்படுத்தல... கட்டாயப் படுத்தல... ஆனால் நீங்க... உங்களை முதல் முறை பார்த்த அன்று அத்தனை முறை சொன்ன கீர்த்தி என்ற வார்த்தை என்னைச் சலனப்படுத்தியது உண்மை... அதன் பிறகு கவியோடு சேர்ந்து பார்த்த பிறகுதான் என் மனம் உங்களை விரும்ப ஆரம்பித்து இருந்தது புரிய வந்தது... அன்றே நீங்க சொன்னபடி பொட்டு வைக்க ஆரம்பித்து விட்டேன்... ஆனால் உங்களுக்குத் தகுதி ஆனவள்தானா..." என்றவளை நிறுத்தியவன்...

"நீயும் ஆதியை விரும்பி இருக்கிறாய்... நானும் கீர்த்தியை விரும்பி இருக்கிறேன்... ஆம். அதுதான் உண்மை. கீர்த்தி... என் மனசுல இருந்தாள்ன்றது உண்மை தான்... காதலை விட அதிகமாக அவள் மேல் பாசமும் இருந்ததுதான் என்னை அவகிட்ட நெருங்க விடாமல் பண்ணி விட்டது...

"சத்தியமாய்ச் சொல்கிறேன்... பாலா மட்டும் இடையில் வராமல் இருந்திருந்தால்... கீர்த்திக்கும் எனக்குமான பந்தம் திருமண பந்தம்தான்... அது நிச்சயம்... ஆனால் பாலா வந்துவிட்டானே... அவள் சந்தோசமாக இருந்தால், அது போதும் என்று விட்டுவிட்டேன்... ஆனால் இன்று..." சோகமானவன்.., கீர்த்தியின் முகம் மாறியதை உணர்ந்து,

"ஹேய்... இப்போ எதுக்கு இப்படி இருக்க... நான் என்ன சொல்ல வரேன்னா..." என்றபோது, பழைய உற்சாக வினோத்தாக மாறி இருந்தான்.

"இந்தத் தகுதி... விகுதி எல்லாம் தூக்கிப் போட்டுட்டு... நாம நம்ம வாழ்க்கைக்கான அடுத்த பகுதிய பார்க்கலாமா...?" என்று கண்ணடித்தவன்...

"இங்க ஒரு பொண்ணு எனக்காக ஏங்கிட்டு இருக்குதுனு தெரியாம... சுத்திட்டு இருந்திருக்கேனே..." என்றவனை...

"அப்படிலாம் இல்ல... ரொம்ப கனவு காணாதீங்க..." என்று பொய்யாய்க் கீர்த்தி சொல்ல...

"சரி. விடு... இனிமே சுத்த வச்சுரலாம்..." என்றவனின் கரம் அவள் இடையில் ஆழமாகப் பதிய...

பதறி விலகினாள் கீர்த்தி...

"வினோத்... இது ஹாஸ்பிட்டல்... நம்ம ரெண்டு பேரையும் நம்பி விட்டுட்டுப் போயிருக்காங்க... பாலாவும், கீர்த்தியும்..." என்றவளை...

"நம்மள என்ன அவங்க ரெண்டு பேர் மாதிரியும் நெனச்சுட்டாங்களா... பத்திக்கிட்டு வருது... ஆம்பளயா நாலு அறைய விட்டு குடும்பம் நடத்துற வழியப் பார்ப்பானா... அவ சம்மதம் வேணுமாம் இவருக்கு... தொங்கிட்டு இருக்கான்... கீர்த்தியப் பத்தி தெரியாம இருக்கான்..." என்றவன்... பேச்சு மீண்டும் மீண்டும் அவர்களிடமே வருவது போல் தோன்ற,

"இந்த நேரத்துல அவங்க ரெண்டு பேரையும் எதுக்கு இழுக்கிற... இப்போதான் பிரைவசி... டைம் அப்படில்லாம் பெருசா பேசுன..." என்றவன், அவளை அருகில் இழுக்க...

"கழுத்தில தாலி... அப்புறம்தான் மத்தது எல்லாம்... மது சொல்லி இருக்கா... நான் என்னைக்கும் அவ பேச்சை மீற மாட்டேன்..." என்று சொன்னபோது,

இப்போது வினோத்தின் மனம் கனத்தது...

அதுவரை இருந்த உல்லாசம் போய்...

"மது... பாலா வாழ்க்கைல குறுக்க வரமாட்டா தானே கீர்த்தி..." என்று கேட்டவனை வலியோடு பார்த்தாள் கீர்த்திகா...

"அவளுக்குப் பாலான்னா ரொம்ப இஷ்டம் வினோத்... பாலா எவ்வளவோ இன்சல்ட் பண்ணி இருந்தாலும் துரத்தித் துரத்தி லவ் பண்ணி... எல்லாம் வேஸ்ட்... இன்னைக்குப் பாலா அவள விட்டு வெகு தூரமாய்ப் போய்ட்டார்... இப்போ



பார்க்கிற பாலா... சத்தியமா மதுவோட பாலா இல்லை... கீர்த்தனாகிட்ட மொத்தமா தன்னை இழந்துட்டார்னுதான் நினைக்கிறேன்..." என்றபோது வினோத் கொஞ்சம் சமாதானம் ஆனான்.

அதன் பிறகு... அங்கு திசை மாறிச் சேர்ந்த இரு காதல் பறவைகளின் கீதம் கானம் பாட ஆரம்பித்தது.

**நா**ன்கு மணி அளவில் படுத்த கீர்த்திக்கு 6 மணிக்கெல்லாம் வினோத்திடம் இருந்து கால் வர... தூக்கக் கலக்கத்திலேயே எடுத்தாள்...

"கீர்த்திடா..." என்று வழக்கம் போல் விளித்துக் கூப்பிட... வினோத்துக்குத் தன் மேல் இருந்த கோபம் போய்விட்டதை உணர்ந்து சந்தோசமாகப் பேச ஆரம்பித்தாள்.

அவனது வாழ்த்தை ஏற்றவள்...

"என் மேல கோபம் இல்லேல வினோத்..." என்று தயக்கத்தோட பேச...

"இருந்துச்சு... இப்போ இல்லேன்னும் சொல்ல முடியாது... ஆனா அதுக்காக உனக்கு விஷ் பண்ணாம எல்லாம் இருக்கமாட்டேன்... நானும் கீர்த்தியும் வீட்டுக்குக் கிளம்பிட்டோம்... நீங்க ரெண்டு பேரும் இங்க வர வேண்டாம்... அதச் சொல்லவும்தான் போன் பண்ணினேன்... அப்புறம் அப்பாவும் அம்மாவும் போன் பண்ணினால்... என்னைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாம்..." நினைவு படுத்தவும் மறக்கவில்லை...

அதன் பிறகு வினோத்திடமிருந்து போனைப் பறித்த கீர்த்திகாவும்... கீர்த்திக்கு வாழ்த்துச் சொல்ல... கீர்த்தியிடம் சிறிது நேரம் பேசிவிட்டு போனைக் கட் செய்தாள்.

அடுத்தடுத்து கவி... மோகனா... விஸ்வம் என வாழ்த்துக்களை வழங்க... பெற்றவர்களின் வாழ்த்துதான்

இனி இல்லை என்று ஆகிவிட்ட நிலையில்... உற்றவனின் வாழ்த்தும் இன்னும் கிடைக்கவில்லை எனக் கண்கள் விழி நீரை வெளியேற்றியவண்ணம் இருந்தன...

அழகிய இளம் கிளிப்பச்சை மற்றும் நாவல் பழம் சேர்ந்த சில்க் காட்டன் புடவையில்.... தன் முன் வந்து நின்ற தங்கள் மருமகளைப் பார்த்த ஜெகநாதன் - அருந்ததிக்கு முகமும், உள்ளமும் நிறைந்தது...

சந்தோசமாக இருவரும் அவளை ஆசிர்வதித்தனர்.

அவர்களும் எங்கோ கிளம்பிக் கொண்டிருப்பதை உணர்ந்த கீர்த்தி...

"அத்தை... கேட்கக் கூடாது... வெளில கிளம்புறீங்க போல. அதுவும்... இத்தனை சீக்கிரமா..." என்று தயங்கிக் கேட்க...

அருந்ததி சிரித்தபடி....

"இன்னைக்கு எங்க வீட்டுப் பொண்ணோட பிறந்தநாள் இல்லையா... அதுதான் கோவிலுக்குக் கிளம்பி இருக்கிறோம்... உன்னையும்... பாலாவையும் கூட்டிட்டுப் போகலாம்னு பார்த்தால்... வினோத்துக்கு அடிபட்டுடுச்சு... நேற்றும் லேட்டாத்தான் வந்தீங்க ரெண்டு பேரும்... சரி, நீங்க வருவீங்களோ இல்லையோனு... நாங்க மட்டும் கிளம்பிட்டோம்... நீங்க ரெண்டு பேரும் தனியாப் போயிட்டு வாங்க..." என்றபடி கிளம்பினர்.

வழக்கம் போல் அருந்ததியின் பாசத்தில் நெகிழ்ந்தாள் கீர்த்தி.

மகனும்... மருமகளும் தனியே போக வேண்டுமென்ற ஒரே காரணத்தால் இப்படிச் செய்திருந்தாள் அருந்ததி... அவள் மகன்... இப்படித் தன் மனைவியின் பிறந்த நாள் அறியாமல் இருக்கிறான் என்று தெரிந்திருந்தால்... ஏதாவது செய்திருப்பாள்... பாவம்... அது அவளுக்குத் தெரியவில்லை...



மகன் எப்படி நினைவில் வைக்காமல் இருப்பான் என்று நினைத்துவிட்டாள் போல்.

அவர்கள் போன பிறகு மேலே ஏறினாள் கீர்த்தி.

பாலா உறங்கிக் கொண்டிருக்க... சுருசுரு வென்று கோபம் ஏறியது... வேகமாகக் குளியலறையினுள் நுழைந்தவள்... ஒரு கப் தண்ணீரை எடுத்து வந்தாள்... அவன் முகத்தில் ஊற்ற... ஊற்றப் போகும் போது திரும்பிப் படுத்த பாலாவின் முகம் பார்த்தவள்... மனம் இல்லாமல்... கைகளில் மட்டும் நீரை எடுத்து... அவன் முகத்தில் தெளிக்க...

திடீரென்று நீர் தன் முகத்தில் பட... கோபத்திலும்... பதற்றத்திலும் எழ... கோபமாய்ப் பேச வந்தவன்... முன்னால் தேவதை போல் நின்ற மனைவியின் அழகில்... வார்த்தைகள் எல்லாம் உள்ளே போய்... விழித்தான்...

"என்ன... இன்னைக்கு இப்படி ஜொலிக்கிறா... லேசுல புடவை கட்டமாட்டாளே...!" என்று அவன் உள்ளம் ஆயிரம் கேள்வி கேட்க...

"ஓ இன்னைக்கு அவ டீம் பார்ட்டிக்கா..." என்று அதுவே பதிலும் வைத்தது...

எழுந்து உட்கார்ந்தவன்...

"என்ன கீது... இப்படித் தண்ணிய தெளிக்கிற..." என்று அவள் கைகளைப் பிடித்து வளையல்களை அளந்தவனிடம்... வெடுக்கென்று கையைப் பறித்தவள்...

"இதுக்கொண்ணும் குறைச்சல் இல்லை!" என்று முனகியபடி... அருகில் இருந்த கப்பைக் காட்டி...

"இது எல்லாத்தையும் ஊத்தலாம்னு இருந்தேன்... போனா போகுதுன்னு... ஜஸ்ட் கையால தெளிச்சேன்..." என்று சூடாகச் சொல்ல...

வழக்கம் போலக் கோபம் என்றுதான் நினைத்தான் பாலா.

"இன்னைக்கு லேட்டா போகலாம்னுதான் தூங்குனேன்... ஏன் இப்போ எழுப்பற...? நீயும் ரெடியா இருக்க... என்ன விசயம்...?" என்று கேட்க.

பொறுமை இழந்தாள் கீர்த்தி.

"லூசு மாக்கானே.." என்று நொந்தவள்...

"நான் இன்னைக்குச் சீக்கிரம் போகணும்... கார்த்திக்கோட மீட்டிங் இருக்கு... அவன் சீக்கிரம் வரச் சொன்னான்..." என்று கூற...

பாலாவோ பட்டென்று, "இன்னைக்கு கார்த்திக் லீவ் தானே... நேற்றே மெயில் அனுப்பி இருந்தாரே..." என்று அலுவலக எம்.டி.யாகப் பேச...

இப்போது விழித்தாள் கீர்த்தி.

"உனக்கு என் பிறந்தநாள் தெரியவில்லை... ஆனால், இதெல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கும்..." என்று பொருமித் தீர்த்தவளாய்...

"ஏன் கார்த்திகூட பெர்சனலா பேசக் கூடாதா... அவன் என்னோட சீனியர்... இங்க ஜாயின் பண்றதுக்கு முன்னாடியே தெரியும் எனக்கு... ஏதோ பேசணும்னு சொன்னான்... அவ்வளவுதான் தெரியும்... ஏன் நீங்க படிச்ச காலேஜ்ல மட்டும் தான் சீனியர் - ஜூனியர் ரிலேஷன்ஷிப் இருக்குமா என்ன...?" என்று தான் மாட்டிக் கொண்ட காரணத்தால்... வாய்க்கு வந்ததை உளற...

பாலாதான்... மொத்தமாய் அடி வாங்கினான்... ஒன்று தெரிந்து விட்டது அவனுக்கு... கீர்த்தனா இனி எது நடந்தாலும்... அதைத் தன் கடந்த காலத்தோடு ஒப்பிட்டுத் தன் மனதைக் கூறாக்கப் போகிறாள் என்று...



உணர்ந்த அவன் ஒன்று மட்டும் வேண்டினான்... அது தன் மனைவி எவ்வளவு எல்லை மீறிப் போனாலும் பொறுமை ஒன்றைத் தான் கைவிடாமல் இருக்க வேண்டும் என்று... ஆனால், இன்று இரவே அது முடியாமல் போகிறதென்று உணராதவனாய்...

**ம**னைவி சீக்கிரமாகக் கிளம்பச் சொன்னதால் வேறு வழி இன்றி... வேகமாகக் கிளம்பிக் கீழே வந்தவன்... தாயைக் காணாமல் எங்கே என்று கேட்க...

அருந்ததியோடு பேசினால்... தன் பிறந்த நாள் அவனுக்குத் தெரிந்துவிடும் என்று உணர்ந்து... கோவிலுக்குப் போயிருப்பதாகவும்... தன்னிடம் சொல்லித்தான் சென்றார்கள் என்றும் சொல்லி அவனைப் போன் செய்ய விடாமல் தடுத்து விட்டாள்... பாலாவும் விட்டுவிட்டான்...

"காலையிலேயே என்ன... இத்தனை சீக்கிரமா கோவிலுக்கு... ஏதோ விசேஷமா?" என்று மட்டும் தோன்ற... அதைக் கீர்த்தியிடமே கேட்க...

"அதைக் கோவிலுக்குப் போயிருக்கறவங்ககிட்ட கேளுங்க... என்கிட்ட கேட்டால் எனக்கு என்ன தெரியும்..." என்று சிவகாசி வெடியை வெடிக்க ஆரம்பிக்க...

"என்ன ஆச்சு இவளுக்கு... சரி. இவகிட்ட கேள்வியே கேட்க வேண்டாம்!" என்று முடிவுக்கு வந்து பேச்சை வினோத் பக்கமாக மாற்ற ஆரம்பித்தான்.

"கீர்த்தி... ஹாஸ்பிட்டல் போகணுமே... அங்க போய்ட்டு... போலாமா... இல்ல, உன் சீனியரோட மீட்டிங் தான் மேடமுக்கு முக்கியமா...?" நக்கலாய்க் கேட்க...

அக்னிப் பார்வையை வீசியபடி... வினோத் காலையில் பேசியதைச் சொன்னாள்...

"அப்படியா... அப்போ அவன் வீட்டுக்குப் போய்ட்டுப் போவோமா...?" என்று கேட்க.

அப்போதுதான்... கீர்த்திகாவும் அவனுடன் வீட்டுக்குச் சென்றிருப்பது மூளையில் உறைக்க... தலையில் கை வைத்தவளாய்...

"அய்யோ... பாலா... கீர்த்தியும் அவனோட போயிருக்கா... யாரும் எதுவும் தப்பா பேசிறப் போறாங்க... ஹாஸ்பிட்டல்ல இருக்கறது வேற... வீட்டுல அவனோட தனியா இருந்தா அது தப்பாகி விடும்..." என்று பெண்ணாய் அடுத்த பெண்ணின் மானத்திற்கு ஒரு பங்கமும் வரக்கூடாது என்று பேசியபடி... வேகமாய் போனை எடுத்து வினோத்துக்குப் பேச ஆரம்பித்தாள்...

"ஹலோ" என்று கூடச் சொல்லாமல்...

"வினோத்... கீர்த்திய வீட்டுல விட்டுட்டு வந்துருக்க வேண்டியதுதானே..." என்று படபடக்க...

"எதுக்கு..." என்று மறுமுனையில் வினோத் கேட்க...

"அவங்க வீட்டில விட்டுட்டு வராம... என்னடா இது கேள்வி... யாராவது தப்பா பேசிட்டா..." என்று இழுத்தவளை...

"யார் பேசுவா... என்ன பேசுவாங்க... அவளுக்கு உரிமையான வீட்ல இருக்கும் போது..." என்று எதிர்க் கேள்வி கேட்க... சாப்பிட்டுக் கொண்டிருந்த சாப்பாடு தொண்டை யிலேயே விக்கிக் கீர்த்திக்குப் புரை ஏற...

புருவத்தை நெரித்த பாலா... என்ன என்பது போல் பார்க்க...

கீர்த்தி தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு...

"டேய் வினோத்... நீ என்ன பேசுறேன்னு தெரிந்துதான் பேசுகிறாயா... கீர்த்தி... கீர்த்திய... உனக்குப் பிடிச்சிருக்கா...?" என்று தடுமாறிக் கேட்க...

பாலா கண்களில் ஆர்வத்துடனும்... கேள்வியுடனும் கீர்த்தியை நோக்க... கீர்த்தி மகிழ்ச்சியோடு பாலாவின்



கைவிரலை உயர்த்திச் சைகை செய்தவள்... போனை ஸ்பீக்கரில் போட்டாள்.

"பிடிக்காமத்தான் சொல்லிட்டு இருக்கேனா... நாங்க ரெண்டு பேரும் நேத்தே பேசி முடிவுக்கு வந்துட்டோம்... நீ இப்போ வந்து கேள்வி கேட்கிற!" என்றபோது பாலாவே வியந்து போனான்.

"டேய், ஒரே நைட்லயா... நல்லா யோசிச்சிட்டியா... அத்தை மாமாவை எல்லாம் கன்வின்ஸ் பண்ணிடுவியா...?" என்று விடாமல் கேட்டவளிடம்...

"ஏன்... மனச சொல்றதுக்கு ஒரு நைட் என்ன, ஒரு நிமிசம் போதும்... ஊர் உலகத்துல ரொம்ப பேர் அது தெரியாமத்தான் சுத்திட்டு இருக்காங்க கீர்த்தி..." என்று அவளையும் குட்டியவன்...

"நான் எல்லாரையும் கன்வின்ஸ் பண்ணிடுவேன்... நான் என்ன உன் புருசனா... கட்டின பொண்டாட்டியக்கூட கன்வின்ஸ் பண்ணத் தெரியாம தவிக்கிறதுக்கு.." என்று பாலாவைத் தாக்க... இது வேண்டுமென்று தான் சொன்னான்... பாலாவைத் தாக்க இல்லை... கீர்த்தியின் மனதை அவளுக்குப் புரிய வைக்க...

அது பாலாவுக்கும் புரிய, விரக்தியாய் உதட்டைச் சுழித்தான்.

"என்னடா ரொம்பப் பேசுற... வந்தேன்னு வெச்சுக்கோ..." என்று எகிற...

"ஹலோ... உன் ரவுடியிசம்லாம் பாலாகிட்ட செல்லும் கீர்த்தி செல்லம்... என்கிட்டலாம் நடக்காது... சரி சரி... எனக்கு முக்கியமான வேலை இருக்கு... எனக்கு என் வருங்கால மனைவிகிட்ட பேச வேண்டியது நிறைய இருக்கு... என்னை டிஸ்டர்ப் பண்ணாம சீக்கிரம் பேசி விட்டு வை..." என்று முறுக்க...

தன் நிலையை நொந்து கொண்டவனாய்... போனை வாங்கிய பாலா...

"வினோத்... என்னை மொத்தமா டேமேஜ் பண்ணிட்ட... ரொம்ப நாள் ஆசை நிறைவேறிருச்சா..." என்று சொல்லியவன்...

"இல்ல பாலா... அது கீர்த்திய கிண்டல் பண்றதுக்காக..." என்று வினோத் சங்கடமாகப் பேச ஆரம்பித்ததை நிறுத்தியவன் பொறுப்பாகப் பேச ஆரம்பித்தான்.

"வினோத்... நீ விளையாண்டதெல்லாம் போதும்... என்ன நடந்தது... கீர்த்திகா... எங்க... அவளோட வாழ்க்கைல ஏற்கெனவே அடிபட்டிருக்கா... புரியும்னு நினைக்கிறேன்... அது மட்டும் இல்லை... பிரதாப்... இப்போ வெளில வந்துட்டான்... அவன் இப்போ அடிபட்ட பாம்பு... அவன்கிட்ட எச்சரிக்கையா இருக்க வேண்டும்... விளையாட்டா அவனை நினைத்துத்தான் கீர்த்தி இந்த நிலைமைல இருக்கக் காரணம்..." என்றவனிடம்...

"தெரியும் பாலா... கீர்த்தியப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம்... அந்த பிரதாப் விசயத்திலே நானும் எச்சரிக்கையா இருப்பேன்..." என்று பேச...

பிரதாப் என்று சொன்னவுடன் கீர்த்தனா பாலாவைச் சற்றுக் கலவரத்துடன் பார்க்க...

மனைவியின் கலக்கத்தைக் கண்டவன்... அவளுக்குக் கண்களாலேயே... வினோத்துக்கு ஒன்றும் ஆகாது என்று சமாதானம் சொன்னவன்...

"சரி. நான் போனை வைக்கிறேன்... ஒரு நல்ல நாளா பார்த்துக் கீர்த்தி அப்பாகிட்ட பேசலாம்..." என்று சந்தோசமாகவும் நிம்மதியாகவும் பேசியவன்...

சற்றுத் தொண்டையைக் கனைத்தபடி...



"கீர்த்தி ரொம்ப நேரம் உன் வீட்டில இருக்க வேண்டாம்... நான் சொல்றது உனக்குப் புரியும்னு நினைக்கிறேன்..." என்றபோது...

"சரி பாலா..." என்று வினோத் சற்று நிறுத்தி...

"கட்டிக்கப் போறவன்... அவளுக்கும் விருப்பம் என்று தெரிந்த போதும் உனக்கு அவள... தனியா என்கிட்ட விட மனசு இல்லைல... ஏன்னா அவ மானம் மரியாதை அவ்வளவு முக்கியம்னு நினைக்கிற... உன்னோட பாது காப்பில இருக்கிற பொண்ணு... உங்க வீட்டுப் பொண்ணுனா மட்டும் துடிக்குதா பாலா..." என்று மனதில் நினைத்ததைக் கேட்டே விட்டான்.

அடுத்த அடி வினோத்திடம் வாங்கினான் பாலா... கீர்த்திக்கோ வினோத் பேசுவது கோபம் வருவது போல் இருக்க...

பாலாதான் தன்னைச் சமாளித்தபடி... "நல்லாத்தான் பேசுற வினோத்... ஆனா ஒண்ண மறந்துட்ட... நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறத சொல்றதுக்கும் முன்னாடியே... நான் அவள உன் கூட எந்த நம்பிக்கைல விட்டுட்டு வந்தேனு கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டும்..." என்று கூற...

வினோத் இதற்குப் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துப் போனான்.

அந்தப் பக்கமும் போன் ஸ்பீக்கர் மோடில் இருந்தது போல்... கீர்த்திகாதான் இப்போது பேசினாள்...

"பாலா... உங்களுக்கு முன்னமே தெரியுமா?" என்று தயங்கிக் கேட்க...

"ஹ்ம்ம்ம்ம்... கீர்த்திதான் சொன்னா... அதன் பிறகுதான் எனக்குக் கூடத் தெரியும்... உனக்கு வினோத்தைப்

பிடிச்சுருக்கா கீர்த்தி..." எனும் போதே அவன் மனது ஆதியின் அல்ப ஆயுளை நினைத்து வருந்தாமல் இல்லை...

முடிந்து போன எதையும் நினைத்து இனிப் பிரயோசனம் இல்லை என்று தெரிய...

"பிடிச்சுருக்கு பாலா... ஆனால் எனக்குப் பயமா இருக்கு!" எனும்போது,

"கீர்த்தி... எதை நினைத்தும் கவலைப்படாதம்மா... மோகனா ஆன்ட்டியும்... விஸ்வம் அங்கிளும் கண்டிப்பா ஒத்துக்குவாங்க... அவங்கள நினைத்துக் கவலைப்படாத... இந்த நிமிசத்திலிருந்து நீ இழந்த இந்த 5 வருச சந்தோசத்தையும் வினோத்தோட சேர்ந்து அனுபவி... அதுமட்டும் இல்ல... ஆதி..." என்று நிறுத்தியவன்...

"இன்னைக்குத்தான் அவன் ஆத்மா நிம்மதியா உறங்கியிருக்கும்!" என்று கூறிச் சிறிது நேரம் அவளிடம் சாதாரணமாகப் பேசியபடி கீர்த்தியிடம் கேட்காமலே போனை வைக்க...

"அய்யோ பாலா! ஏன் போனை வைச்சீங்க..." என்று பதற

"ஏன் என்னாச்சு..." என்று கூறும்போதே வினோத்திற்கு மீண்டும் அழைக்க –

அவளின் குரலில் கடுப்பாய் வினோத், "ஏய்... என்ன குற..." என்று சொல்ல வந்ததைச் சொல்லாமல் நிறுத்த...

"டேய், உன் ஆள் பேரும் அதுதான். அடக்கி வாசி... இல்ல எனக்கும் ஆள் இருக்கு... உன் ஆள கூப்பிட வைத்து விடுவேன்..." என்று சந்தோசமாக மிரட்டியவள்...

"ஆல் த பெஸ்டுடா!" என்று சொல்லியபடி அவன் பதிலை எதிர்பாராமல் போனை வைத்தவளைப் பாலா முறைக்க...



"என்ன... என்னயவே பார்த்துட்டு இருக்கீங்க... கிளம்புங்க..."

ஒரே நாளில்... இல்லையில்லை... ஒரே இரவில்... வினோத் – கீர்த்தி வாழ்வில் ஏற்பட்ட மாற்றம்... ஏன் தங்கள் இருவரின் வாழ்க்கையிலும் வரவில்லை... என்று தோன்ற வலித்த மனதை வேறு திசையில் மாற்ற முடியாமல் தவித்தன அந்த இரு உள்ளங்களும்...

பாலாதான் ஆரம்பித்தான்.

"ஊர்ல இருக்கிறவனுக்கெல்லாம் ஆல் த பெஸ்ட் சொல்லு... இங்க ஒருத்தன் நிலை வொர்ஸ்டா இருக்கிறது உனக்குத் தெரியுதா இல்லையா...?" என்றவனிடம், சட்டென்று திரும்பி, உடனே,

"ஆல் த பெஸ்ட்!" என்றாள்.

பாலா புரியாமல் விழிக்க...

"கேட்டீங்க... சொல்லிட்டேன்... போதுமா... வாங்க!" என்று சொன்னவள் காரை நோக்கிப் போனாள்.

"அப்படியே நான் கேட்டது எல்லாம் தந்துட்டாலும்..." என்று சத்தமாகத்தான் சொன்னான்.

அவள் வெளியே செல்வதை உணர்ந்தவன்,

"ஏய் எதுக்குடி இப்போ சொன்ன... சொல்லிட்டு போய்ட்டே இருக்க..." என்றவனின் வார்த்தைகள்... ஹாலில் மட்டும் எதிரொலிக்க... கேட்க வேண்டியவளோ வெளியே காரின் அருகில் இருக்க... வேறு வழி இன்றிக் காரை எடுத்தான் பாலா.

மனைவியை ரசித்தபடியே காரை ஓட்டிச் சென்ற பாலாவுக்கு... கீர்த்தியின் நடவடிக்கையில் ஏதோ ஒன்று புதியதாய் உணர்ந்தான்... அது என்னவென்று உணர முடியவில்லை அவனுக்கு.

லிஃப்டினுள் இருவரும் ஒன்றாகச் செல்ல... கைக்கெட்டும் தூரத்தில்... கண்ணுக்கு அழகாய் மனைவி... ரசிக்க மட்டும்தான் முடிந்தது அவனுக்கு... கண்களுக்கு மட்டும் கிடைத்த வாய்ப்பைப் பாலாவும் முடிந்த அளவு பயன்படுத்திக் கொள்ள...

அவளை அணு அணுவாய்... உரிமையுடன் தன் பார்வையை அவள் உடலோடு உறவாட விட்டான்.

கீர்த்தனாவோ உரிமையோடு தன் மேல் படிந்த அவனது பார்வையைத் தடுக்கும் உரிமை அற்றவளாய்... அவஸ்தையோடு கீழே குனிய... தன் தேகத்தில் அவனின் பார்வை தீண்டிய இடங்கள் எல்லாம் அனல் மேல் பனி போல அவளைச் சிலிர்க்க வைக்க, சுவரோடு ஒன்றினாள்...

இரு நிமிடத்திற்கும் குறைவான அந்த லிஃப்ட் பயணம்... பாலாவுக்குக் கண நேர உற்சாகம் கொடுக்க...

கீர்த்தனாவிற்கு யுக நேர அவதியைக் கொடுக்க...

ஒருவாறாக... அவர்களுக்குக் காமன் வைத்த சோதனையை முறியடித்து... அலுவலகத்தினுள் நுழைந்த போது மணி 8.30...

காவலாளியைத் தவிர யாரும் வந்திருக்கவில்லை... தனது அறைக்குப் பாலா செல்ல...

கீர்த்தி தன் இருப்பிடத்தில் அமர்ந்து தன் கணினியை உயிர்ப்பித்தாள்.

அரை மணி நேரம் கழிய... பாலாவுக்கு போரடிக்க... மனைவியை எட்டிப் பார்த்தான்... அவளோ முன்னால் இருந்த திரையை வெறித்தபடி சோகமே உருவாக அமர்ந்திருந்தாள். கார்த்திக் ஞாபகம் வர... அவனை ஆன்லைனில் இருக்கிறானோ என்று எதிர்பார்க்க... அவன் அலுவலக சாட் ஐடியில் ஆன்லைனில் இல்லை... ப்ரைவேட் ஐடி அவர்கள் அலுவலகத்தில் பயன்படுத்த முடியாது



என்பதால்... அவனோடு பேசவில்லை என்றால்... வேறு என்ன பண்ணுகிறாள்.

இத்தனை சீக்கிரம் வந்து... என்று யோசித்தபடி... கீர்த்தியின் ஐடி காட்டிய அவெய்லபில் பச்சை நிறமும்... அவள் அணிந்திருந்த புடவையின் நிறமும்... அவன் காதலுக்கும் பச்சைக் கொடி காட்டுவதைப் போல் தோன்றி அவனைக் கணவனாக உசுப்பேற்ற...

அலுவலக ஐடி என்று தெரிந்து முதலில் எம்.டி.யாகத் தயங்கி, பின்... என்ன ஆனாலும் பரவாயில்லை என்று கணவனாக வென்று... ஹாய் என்று அனுப்பினான்.

பதில் இல்லை.

மீண்டும் அதையே அனுப்ப ரிப்ளை இல்லை...

"சேலையில் அழகா இருக்கடி... என்னைக் கொல்லுற..." என்று அனுப்ப...

இதைப் பார்த்த கீர்த்தி மனம் மயங்கியது... ரொம்ம்ப சீக்கரமா சொல்லிட்டான்... என்று மனதில் நினைத்தாள்.

ஆனாலும்... தன் கோபம் குறையாமல் ஸ்மைலியை மட்டும் அனுப்பினாள்... கோபத்தைக் குறிக்கும் வகையில்...

அப்போது பாலா... சிரித்தபடி... காதலைத் தெரிவிக்கும் வகையில் ஒரு ஸ்மைலியை அனுப்ப...

இவள் அவனை அடிப்பது போல ஸ்மைலி அனுப்ப...

அவனோ பதிலுக்குச் சமாதானக் கொடி பறப்பது போல ஸ்மைலி அனுப்ப... இருவரும் அதற்கடுத்த 20 நிமிடமும் ஸ்மைலியை அனுப்பிச் சிறு குழந்தைகள் போல் விளையாண்டு கொண்டிருக்க... அலுவலகத்திலும் ஆட்கள் கொஞ்சம் கொஞ்சமாக வர ஆரம்பித்து இருந்தனர்... பாலாதான் முதலில் விளையாட்டை நிறுத்தி...

"பை..." என்று சொல்லிவிட்டு, எம்.டி.யாகத் தனது வேலைகளில் மூழ்கினான்.

அதற்கடுத்து அவள் அனுப்பிய பதிலைப் படிக்காமல் இன்னொரு கணினியில் தனக்கு வந்த மெயில்களுக்குப் பதில் அனுப்பும் வேலையில் மூழ்கினான்...

அவள் அனுப்பிய பதிலில்...

"எம்.டி.யா இருக்க மட்டும்தான் லாயக்கு... கம்பெனிய கட்டிட்டே அழு..." என்று முடித்திருந்தாள்... அவனிடமிருந்து அதற்குப் பதில் வராமல் போக ஸ்மைலிகளின் சரமாரியான ஊர்வலம் அவனது ஐடிக்குச் சென்று கொண்டிருந்தது.

10 மணி ஆக... அவளின் பிறந்த நாள் வாழ்த்தை அவன் அவனாக யோசித்துச் சொல்லப் போவதில்லை என உணர்ந்தவளுக்குக் கண்கள் கலங்கின... இதுதானா, இவ்வளவுதான் அவன் தன் மீது வைத்துள்ள காதல் என்று நினைக்கப் பொருமியது மனம்... அந்த நேரம் கவி வர... வந்தவள்... தன் வாழ்த்தைச் சொல்ல... கவியை அடிக்காத குறைதான்...

"போடி... எனக்கு விஷும் வேண்டாம்... ஒண்ணும் வேண்டாம்... இருக்குற கடுப்புல..." என்றவளைப் பார்த்துத் திகைத்த கவி... சற்று யோசிக்க...

கீர்த்தி கட்டியிருந்த புடவையைப் பார்த்தவள்,

"ஹ்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம் கலக்குற கீர்த்தி... நம்ம..." என்று சொல்ல, கீர்த்தி நெற்றிக் கண்ணைத் திறக்க,

"அம்மா! தாயே! முறைக்காத. நம்ம எம்.டி.ன்னு சொல்ல வந்தேன்... எனக்கு எதுக்குப்பா வம்பு... உன் ஆளு... பெரிய பெர்த் டே ட்ரீட் குடுத்துட்டாரு போல... நீ சூடா இருக்கறதப் பார்த்தாலே தெரியுது..." என்று கண்ணடிக்க...

"மண்ணாங்கட்டி... இவனுக்கெல்லாம் எதுக்குடி கல்யாணம்... பொண்டாட்டி... குடும்பம்னு... பெரிய ட்ரீட்டாம்... விஷ்ஷே இன்னும் பண்ணல... என் பிறந்த நாளே ஞாபகம் இல்லை... இவருதான் எனக்கு ட்ரீட் தரப் போறாரு...



போய்டு... உன் எம்.டி. மேல இருக்கிற கோபத்தில உன்னை அடிச்சுறப் போறேன்..." என்று வெடித்தவளைப் பார்த்த கவி...

பாலா... இவளது பிறந்த நாளை மறந்து விட்டாரா... என்று அதிர்ச்சியில் நிற்க...

"இன்னைக்கு 10.30 வரைக்குத்தான் டைம்... அதுக்குள்ள வந்து சொன்னான்னா தப்பிச்சான்... இல்ல..." என்று மரியாதை எல்லாம் மறந்தவளாய்ப் பேசியவளைப் பார்த்துப் பிரமித்தபடி நின்ற கவிக்கு, அது என்ன 10.30 டைம் என்று யோசிக்க... அது அலுவலக மெயிலில் வரும் பிறந்த நாள் வாழ்த்தைக் கீர்த்தி சொல்லுகிறாள் என்று உணர... உடனே மணியைப் பார்க்க...

10.15 எனக் காட்ட...

"ஒன்று பாலாவிடம் சொல்ல வேண்டும்... இல்லை, மெயில் அனுப்பாமல் தடுக்க வேண்டும்... இதில் ஒன்று நடக்காமல் போனாலும் பாலாவை இவள் படுத்தி எடுக்கப் போவது திண்ணம் என்று உணர்ந்து... கீர்த்தியிடம் இருந்து... கிளம்பப் பார்க்க... அவள் எண்ண ஓட்டத்தை உணராதவளா கீர்த்தி...

கவியை இழுத்துத் தன் அருகில் அமர வைத்தவள்...

"மவளே... இங்க இருந்து ஒரு அடி எடுத்து வைக்கக்கூடாது... உன்னைப் பற்றி எனக்குத் தெரியாது... சப்போர்ட் வேற அவருக்கு..." என்று சிறை வைத்தாள் அவளை... போனைக் கூடப் பறித்து வைத்துக் கொண்டாள்.

சற்று நேரத்தில் அவளின் பிறந்த நாள் வாழ்த்து தாங்கி வந்த மெயில்...... புதியதாய் வந்த மெயில் பகுதியில் அவளைப் பார்த்துச் சிரிக்க...

அங்கு பாலாவோ...

தங்கள் திருமண நாளை வைத்துத் திட்டம் தீட்டியிருந்தவன்... அவள் பிறந்த நாளை நினைவில் வைக்கக் கோட்டை விட்டிருந்தான்.

உச்சகட்ட அதிர்ச்சியில் உறைந்திருந்தான்... தன்னை நிலைப்படுத்திக் கொள்ளவே அவனுக்குச் சில நிமிடங்கள் தேவைப்பட்டன... நா வறண்டது போல் இருக்க... ஒரு பாட்டில் தண்ணீரை ஒரே மடக்கில் குடித்தான்... ஆனாலும் அவனால் முடியவில்லை...

வேகமாக வெளியே வந்தவன்... கீர்த்தியைச் சுற்றி இருந்த மற்ற ஸ்டாப்ஸின் மத்தியில் நிற்க மனம் இல்லாமல் மீண்டும் அறைக்குள் வந்தவன் இருக்கையிலேயே தொப்பென உட்கார்ந்து விட்டான்.

அந்த நேரம் கார்த்திக் வேறு ஆன்லைனில் வந்து அவனுக்கு அழைப்பு விடுக்க...

வேறு வழி இன்றி அவனுக்கு ரிப்ளை செய்ய...

அங்கு ஏதோ வேலையில் பிரச்சனை என்று 10 நிமிடம் அவனோடு பேசிவிட்டு... கட் செய்யப் போக...

பாலா கேட்டான்...

"கார்த்திக் இன்னைக்கு நீங்க லீவ்தான சொன்னீங்க..." என்றபோது...

"இப்போதும் லீவில்தான் இருக்கிறேன்... கொஞ்ச நேரம் முன்னால் கீர்த்திக்குப் பேசினேன்... இன்னைக்கு அவளோட பிறந்த நாள் என்று... சரி. அப்படியே உங்களுக்கும்... ரெக்குயர்மெண்ட் ப்ராப்ளம் பற்றி க்ளைண்ட் சொன்னதையும் சொல்லிவிட்டுப் போகலாம் என்று ஆன்லைனில் வந்தேன்..." என்று நோகாமல் பாலாவின் தலையில் இடியை இறக்கினான் கார்த்திக்...

அடுத்து அருந்ததி வேறு போன் செய்து... இருவரும் கோவிலுக்குப் போய் வந்தனரா என்று விசாரிக்க...

தலையில் கைவைத்துப் படுத்து விட்டான் பாலா...

காலையிலிருந்து நடந்த ஒவ்வொன்றையும் யோசித்துப் பார்த்தான் பாலா...



அப்போது அவன் படிக்காமல் விட்ட அவளின் மெசேஜ் இருக்க, அதைப் படித்தவனுக்கு மின்னலாய்... ஒன்று வெட்ட... கண்களில் மகிழ்ச்சி ஆனந்தத் தாண்டவம் ஆடியது... கீர்த்தனாவின் நடவடிக்கைகளை நினைத்துப் பார்த்தவனுக்கு அது எல்லாம் அவளின் தன் மீதான உரிமை கலந்த ஊடல் என்பது புரிய... இதயம் ஆனந்தக் கூத்தாடியது...

கீர்த்தனா இதுவரை அவனிடம் தானாய் வலிய வந்து அவனிடம் எந்த உரிமையையும் எதிர்பார்த்ததில்லை... எதிலும் ஒரு தயக்கம் இருக்கும்... இல்லை, தனக்குள்ளாக ஒளிந்து கொள்ளும் இயல்பு இருக்கும்... இது இரண்டும் இல்லை என்றால் தன்னை மறந்து அவளின் உணர்வுகள் வெடித்தவளாய்க் காட்சி தருவாள்... ஆனால், இன்று... அவள் செய்தது எல்லாமே தன் உணர்வுடன்... அவனிடம் உரிமையுடன் போட்ட சண்டைகளை நினைத்தவன்... தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் கீர்த்திக்கு போன் செய்ய... அவளோ அதைக் கட் செய்து கொண்டே இருந்தாள்.

வேறு வழி இன்றிக் கவிக்கு போன் செய்து அவளிடம் கொண்டு போய்க் கொடுக்கச் சொல்ல...

அவளோ, "அடப் போங்க சார்... அவ சுனாமியும், சூறாவளியும் கலந்த கலவைல இருக்கா... என் மொபைல குடுத்தேன்... அவ்வளவுதான்... 20,000 ஹோகயா..." என்று அவனின் நேரம்... காலம் தெரியாமல் பேச...

"கவி! உனக்குப் போன்தானே... அவ ஒடச்சா நான் வேற ஒரு போன்... ஏன், ஐ போனே வாங்கித் தருகிறேன்... கொண்டு போய்க் குடு... ப்ளீஸ்..." என்று கெஞ்ச.

"எப்படி சார் இப்படி மறந்தீங்க... கஷ்டம்தான்..." என்றபடி போனை ஓய்வறையில் தலைசாய்த்துப் படுத்திருந்த அவளிடம் கொடுக்க... மொபைலை வாங்கியவள்...

பார்த்துவிட்டு... அலட்சியமாக அதை அப்படியே வைத்து விட்டு... மீண்டும் தலை சாய்த்துப் படுக்க ஆரம்பிக்க...

கவிக்குக் கோபம் ஏறியது.

"ஏய்... என்னடி... ரொம்பத்தான் பிகு பண்ற... இப்போ பாலா என்ன பண்ணனும்னு நீ நினைக்கிற... உன் கால்ல விழுந்து மறந்துட்டேன், என்ன மன்னிச்சுடுனு கெஞ்சச் சொல்றியா... ஒரு மனுசன் இறங்கி வந்தா... நீ இப்படித்தான் தூக்கிப் போட்டு மிதிப்பியா... நானும் இங்க வந்ததுல இருந்து பார்த்துட்டுத்தான் இருக்கேன்... ஒண்ணு அவர்கூடச் சேர்ந்து வாழு... இல்ல, அவரை விட்டுத் தொலை... ரெண்டும் பண்ணாம ஏன்டி உன்னையும் கஷ்டப்படுத்திக் கொண்டு அவரையும் இந்தப் பாடு படுத்தற... பார்க்கவே பரிதாபமா இருக்கு... என்கிட்ட கூட கெஞ்சறாரு..." என்றவளின் ஆவேசப் பேச்சில் கீர்த்தியும் ஆவேசமானாள்.

"ஓ... அவர் மேல பரிதாபம் வருதா மேடத்துக்கு... ஏன் வராது உனக்கு... இந்த வருசம் நான் என் பிறந்த நாளைக் கொண்டாடக் கூடாது... என் அப்பா... அம்மா இறந்த வருசம்... இன்னைக்கு அவங்க ரெண்டு பேரோட கல்யாண நாளும்... இத்தனை துக்கம் எனக்கு... எனக்கு எப்படி இருந்திருக்கும்...

"இருந்தாலும்... இவன் எனக்கு ஒரு விஷ் பண்ணுவான்னு... நைட் 12 மணில இருந்து காத்துட்டு இருக்கேன்... என்னைப் பார்த்தா உனக்குப் பரிதாபம் இல்ல... அவனப் பார்த்தா உனக்குப் பரிதாபம் பொத்துக்கிட்டு வருதோ...

"சரி. நைட்டுதான் மறந்துட்டான்... மனசு எல்லாம் துக்கம்... போன வருசம் எப்படி இருந்தோம்... இந்த வருசம் எப்படினு... இருந்தாலும்... இவன் கண்டுபிடிக்க வேண்டு மென்று மனச கல்லாக்கிட்டு... புடவையைக் கட்டி... அலங்காரம் பண்ணிட்டு... இவன் முன்னால போய்



நின்னா... எதுக்கு இவ சேலை கட்டி இருக்கானு தெரியாம முழிக்கிறான்... இவன் என்னை உயிரா நினைக்கிறானாம்... சும்மாடி... இவன் மனசுல நான் இல்ல... எப்போதுமே இல்ல... அவனுக்கு அவன் ம..." என்ற போதே பாலாவின் கரங்கள் அவளது வாயைப் பொத்திவிட்டன...

கவி... என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தபடி நிற்க...

போனின் வழியே அவள் பேசுவதை எல்லாம் கேட்டவன் அங்கு வந்திருந்தான்.

"ப்ளீஸ்... கீர்த்தி... இதுக்கு மேல எதுவும் பேசாத... நான் மன்னிப்புக் கேட்கக் கூட அருகதை இல்லாதவன் தான்... ஆனா என்ன வேண்டும்னாலும் பேசு... ஆனா என் மனசுல நீ இல்லைனு மட்டும் சொல்லாத... அதுல நீ..." என்கின்ற போதே இகழ்ச்சியாகச் சிரித்தாள் கீர்த்தி.

"பாலா... இங்க நான் எதுவும் பேச விரும்பவில்லை... பேசினால் நம்ம இரண்டு பேரோட வாழ்க்கையும்தான் இங்கு கேலிப் பொருளாகும். ப்ளீஸ் இந்த இடத்தை விட்டுப் போங்க... கவி கேட்டா... அதில ஏதோ நான் என் ஆதங்கத்தைக் கொட்டிட்டு இருக்கேன்..." என்றவளிடம்,

"சரி... நான் எதுவும் பேசலை... வா... நாம் ஷாப்பிங் போய்ட்டு வரலாம்..." என்று அவளை அழைக்க...

கையெடுத்துக் கும்பிட்டு விட்டாள் கீர்த்தி.

"பாலா... என்னைக் கொல்லாதீங்க... நான் என்ன நீங்க கிஃப்ட் வாங்கிக் கொடுக்கவில்லை யென்று இப்படி இருக்கிறேன் என்று நினைத்து விட்டீர்களா... பணத்துக்காகத்தான் உங்களைத் திருமணம் செய்தேன்... அதற்காக இப்படியெல்லாம் நினைக்கிறீர்களா... ச்சேய்... போய்டுங்க... இதுக்கு மேல இங்க ஒரு நிமிசம் நீங்க இருந்தீங்கன்னா... நான் வீட்டுக்குப் போய்ட்டே இருப்பேன்...

"இன்னைக்கு என் டீம் ட்ரீட் இருக்கு... நான் இல்லாமப் போனா... எனக்கு ஆயிரம் கேள்வி வரும் என்றுதான் இங்கு இருக்கிறேன்... இல்லை... என்னைத் தொந்தரவு செய்வேன் என்று நினைத்தால்... எதையும் பார்க்க மாட்டேன்... போய்ட்டே இருப்பேன்!" என்று... உதடுகள் துடிக்கப் பேசியவளிடம்... பாலா எதையும் சொல்ல முடியாமல்... பேச முடியாமல் மனம் வலிக்க வெளியேறினான்.

கவியோ... யாருக்கு ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் மௌனமாய் இருவரையும் திகிலுடன் பார்த்தபடி இருந்தாள்... அதிலும் தோழியின் கோபமும்... பாலாவின் அமைதியும்... வாழ்க்கைப் பயணம்... காலம் எனும் மந்திரக் கோல் சுழற்றும் சக்கரம் என்பதை உணர்ந்தாள்.

கீர்த்தியோ இறுகிய முகத்தோடு அங்கிருந்து தன் இருப்பிடத்திற்குச் சென்றாள்...

கிட்டத்தட்ட 4 மணி அளவில் கீர்த்தி மற்றும் கேசவன் டீமில் உள்ள அனைவரும் கிளம்ப... கீர்த்தனாவும் அவர்களுடனே கிளம்பி விட்டாள்... கவி அவள் டீம் இல்லை என்பதால் அலுவலகத்திலே தங்க... பாலாவும் அவர்களோடு கலந்துகொள்ள... கீர்த்தனா கிளம்பிய 10 நிமிடத்தில் கிளம்பிச் சென்றான்...

கிட்டத்தட்ட 8 மணி அளவில் அனைவரும் பார்ட்டி முடிந்து வெளியேற... கீர்த்தனா... பாலாவிற்குக் கோபத்தை வரவழைக்கும் ஒரு காரியத்தைச் செய்தாள்.

அது பாலாவுடன் காரில் சென்று ஏறாமல்... ஆட்டோவை அழைக்க... அவளின் செயலில் ருத்ரனாய் ஆனான்.

"கீர்த்தி... என்ன விளையாட்டு இது... என்ன கோபம் என்றாலும்... வா, வீட்டில் போய்ப் பேசிக் கொள்ளலாம்..."

"முடியாது... நான் வரமாட்டேன்..." என்று அழுத்தமான முகத்தோடு பிடிவாதம் பிடிக்க... அவன் பிடியை



விலக்கியவள்... ஆட்டோவில் ஏறியபடி பாலா வீட்டு முகவரியினை வேண்டுமென்றே அவன் முன் சொன்னாள்.

அதில் ஓரளவு கோபம் தணிந்த பாலா... அவள் பின்னே காரை எடுத்து வர... ஆட்டோ ஒரு சிக்னலில் அவன் கண் பார்வையில் இருந்து மறைய... வேறு வழி இன்றித் தன் வீட்டை அடைந்தான்.

ஆனால், கீர்த்தி இன்னும் வரவில்லை என்ற அருந்ததியின் பதிலில் அதிர்ச்சியுற்ற பாலா...

மனம் முழுதும் பதற்றத்துடன்... உடனே கீர்த்தனாவிற்கு போன் செய்ய... அவள் அதனைக் கட் செய்தபடி இருக்க... அருந்ததியோ பதற்றம் நிறைந்த விழியோடு என்ன ஆயிற்று என்று விசாரிக்க...

நடந்ததைக் கூறியவன்... மனம் படபடத்தவனாய்...

"போனை எடுக்க மாட்டேங்கிறாம்மா... பயமா இருக்கு!" என்று தளுதளுக்க...

அருந்ததிக்கு மகனின் நிலையைப் பார்த்துப் பெற்ற வயிறு பரிதவித்தது. இருந்தாலும் ஆறுதல் படுத்தும் விதமாக...

"என்னடா நீ... ஏன் இப்படிப் பண்ணினாய்... அவ எங்க போகப் போறா... வினோத் வீட்டுல இருக்கணும்... இல்ல, அவ வீட்ல இருப்பா..." என்றபடி தன் மொபைலில் இருந்து அழைக்க... இப்போது போனை எடுத்தாள் கீர்த்தி...

"கீர்த்தி!" என்று அருந்ததி ஆரம்பிக்க, பட்டென்று போனைப் பறித்த பாலா.

"கீர்த்தி! இப்போ... எங்க இருக்க...? ஏன் இப்படிப் பண்ணுகிறாய்?" என்று பேச...

"எதுக்கு இப்போ... இப்படி சீன் போடறீங்க... நான் எங்க வீட்லதான் இருக்கேன்... எனக்கு எது நிரந்தரமான

இடமோ அங்குதான் இருக்கேன்... போதுமா... இங்க வந்தீங்க, அப்புறம் நான் பொல்லா..." என்றபோதே போனைக் கட் செய்தவன்... காரில் ஏறிப் பறந்தான்.

அருந்ததியோ இது எல்லாம் என்ன சோதனை... என்று மறுகினாள்.

கீர்த்திக்கு அழுதழுது கண்கள் சிவந்து... முகமெல்லாம் வீங்கி இருக்க... மனம் முழுக்கக் கோபம் கோபம் கோபம் தான்... தன் பிறந்த நாளைக் கூடத் தெரியவில்லையே... அவளுக்குத் தன்னவன் மனதில் தான் இருக்கிறோமா இல்லையா... இதுவே இப்போது மிகப் பெரிய சந்தேகத்திற்கு வந்துவிட்டது... அதை நினைக்கும் போதே கீர்த்தி... நீ செய்வது எல்லாம் சரியே இல்லை... மிகவும் சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொண்டிருக்கிறாய் என்ற மனச்சாட்சியின் அறிவுரையையும் கணவன் மேல் கொண்ட காதலால் புறம் தள்ளினாள்...

அப்படியே புடவையைக் கூட மாற்றாமல்... வெற்றுத் தரையில் படுத்திருந்தாள் கீர்த்தி... ஆனால், விழிகளோ... திறந்திருந்த நிலையில் நீரை வடிக்க... உதடுகள் துடித்த நிலையில்... கிட்டத்தட்ட ஒரு பைத்தியக்காரியின் நிலைமையில் இருந்தாள்.

மனமெங்கும் பாலாவே வியாபித்து இருந்தான்... கூடவே அவனின் கடந்த காலமும் அவளை நோக வைக்க... நேற்று இரவிலிருந்து அவனுக்காக... அவன் ஒரு வாழ்த்துக்காகத் தவித்த தன் வெட்கம் கெட்ட மனதை வெறுத்தாள் அவள்...

வினோத் சொன்னது போல் தான் அவனிடம் மயங்கிக் கிடக்கிறோமோ... என்று நினைத்தவளுக்கு... வினோத் நேற்றுக் கூறிய வார்த்தைகள்... இன்று அமிலத்தை ஊற்றியது போல் இருந்தன...



மனைவி பைத்தியக்காரி போல் மன்றாடிக் கொண் டிருக்க... கணவனோ... கண் மண் தெரியாமல் காரை ஓட்டி வந்து கொண்டிருக்கிறான்... கீர்த்தி செய்து கொண்டிருக்கும் வேலைகளில்... அவள் மீது கோபம் இருந்தாலும்... நேற்று இரவிலிருந்து தன் வாழ்த்துக்காகப் பரிதவித்த தன்னவளின் நிலைமை அவனுக்குப் புரிய... தன் தவறு புரிந்து கோபத்தை அடக்கிக் கொண்டான். காரை நிறுத்தியவன்... லிப்டினில் கூட நுழையாமல்... இரண்டு இரண்டு படிகளாய்த் தாவி ஏறினான்... மனைவி எந்த நிலையில் இப்போது இருப்பாள் என்பதை அறிந்து...

தாழ் போட்டிருந்த கதவைத் தட்ட... அவளோ திறக்காமல் அடம் பிடிக்க... போனில் இருந்து கால் செய்ய... அதை எடுக்காமல் பிடிவாதம் பிடிக்க... பாலா கொஞ்சம் கொஞ்சமாய்ப் பொறுமையை இழந்து கொண்டிருந்தான்... அவள் மீதுள்ள கோபத்தைக் கதவின் மேலாவது காட்டிக் கதவை உடைப்போம் என்று முடிவிற்கு வந்து அதைச் செயல்படுத்த நினைக்கப் போக...

நல்ல வேளை... கீர்த்தி என்ன நினைத்தாளோ தெரியவில்லை... கதவை வந்து திறந்தாள்... இருவரின் விழிகளும் ஒன்றையொன்று சந்திக்க... கீர்த்தியின் விழிகள் அவனைப் பார்த்த வுடன் இன்னும் கோபமாய் மாற... அவள் கணவனின் விழிகளோ கோபத்தை மறந்து நிம்மதியில் சாந்தமாகின...

அழுதழுது சிவந்திருந்த முகமும்... நலுங்கிய சேலையும்... கலைந்த கூந்தலும்... அவனை அவள் அவமதித்துக் கொண்டிருந்த போதும்... அவள் மேல் கோபம் இருந்த போதும்... அவள் நிலை அவனை அதை எல்லாம் மறக்கச் செய்ய... உணர்ச்சிக் குவியலாய் மாறினான்.

கதவைத் திறந்தவளை... பார்த்த நொடியிலேயே அப்படியே தன்னோடு தன் மார்போடு சேர்த்து இறுக்க

அணைத்தான்... அதில் காமமில்லை... காதல் மட்டும்தான் இருந்தது... உனக்காக நான் இருக்கிறேன் என்ற செய்தி இருந்தது... அவள் காதருகே ஒலித்த அவனது இதயத் துடிப்பு அவளுக்காக மட்டுமே அவன் என்று சொல்லத் துடித்தது... கீர்த்தியும் அதை அனுபவித்தாள்...

எதுவும் சொல்லாமல் அவனிடமிருந்து விலகாமல்... அவனுக்குள் அவள் அப்படியே அடங்கினாள்... நேற்றிலிருந்து அவள் அனுபவித்த மனப் போராட்டம் முடிவுக்கு வருவதைப் போல் இருக்க... பாலா மீண்டும் மீண்டும் தவறு செய்தான்...

அது... "எங்கே மீண்டும் கோபப்பட்டு விடுவாளோ" என்ற பதற்றத்தில் அவளை அவனாகவே விலக்கியவன்... பேசாமல் உள்ளே சென்றான்.

அவன் விலக்கிய நொடியிலேயே மீண்டும் கீர்த்தியின் மனம் சண்டித்தனம் பண்ண ஆரம்பித்தது...

இத்தனை கோபம் இருந்தும் அவன் அணைத்தவுடன் அவனிடம் சரணாகதி அடையத் துடிக்கும் தன் கேவலமான நிலையினை எண்ணி மீண்டும் பழைய நிலைக்கே போக...

"இங்க ஏன் வந்தீங்க?" என்று முன்னால் சென்ற கணவனின் முதுகை வெறித்தபடி அழுத்தமாய்க் கேட்க...

நிதானமாய்த் திரும்பியவன்...

"நீ இங்கே இருக்கிறாய்... அதுனால, போதுமா...?" என்று மட்டும் சொன்னான்.

"நான் நிம்மதியா இருக்க வேண்டுமென்று இங்கு வந்தேன்... தயவு செய்து என்னைத் தனியா விடுங்க... எனக்குத் தேவை இப்போ தனிமை... தனிமை... அது மட்டும் தான்," என்று பொறுமையாகப் பேசினாள்.

"என்னை நீங்கித்தான் உனக்கு நிம்மதி இருக்குமென்றால்... அந்த நிம்மதி உனக்கு என்னைக்குமே கிடைக்காது கீர்த்தி... ஐ யம் சாரி!" என்றவன்...



"உன்கிட்ட இப்போ... பேசற... இல்லை... சண்டை போடுகிற நிலையில் எல்லாம் நான் இல்லை... ஏற்கெனவே உடலாலயும் உள்ளத்தாலயும்... களைத்துப் போயிருக்கிறேன்... ப்ளீஸ்... என்னைய பேசி பேசிக் கொல்லாத..." என்று அவளைக் கடந்து செல்வதிலேயே குறியாக இருந்தான் பாலா...

அதற்கு இரண்டு காரணம்... ஒன்று... அவள் ஏதாவது பேசப் போய்.. அவள் மேல் தன்னை மீறிக் கோபப்பட்டு விடுவோமோ... இன்னொன்று... அவன் முன் அவள் நின்று கொண்டிருந்த நிலையும்... அதுவும் புடவையில்... கலைந்த ஓவியமாய் நிற்கும் அவளின் அழகில் தன்னை மீறி அத்துமீறி விடுவோமோ என்று பயந்ததே காரணம்.

இது எதுவும் உணராமல்...

"ஓ... உங்களுக்குக் களைப்பு வேறு வருகிறதா பாலா... அட, ஆமால்ல... இன்னைக்கு உங்க பொண்டாட்டிக்குப் பிறந்த நாள்... நீங்களும் அவள கூப்பிட்டுப் போய் ஊரெல்லாம் சுத்தி... நாலு கடை ஏறி இறங்கி... அவளுக்குப் பிடித்ததெல்லாம் வாங்கிக் கொடுத்துட்டு வந்துருக்கீங்க... உங்களுக்குக் கண்டிப்பா களைப்புத்தான் வரும்... போங்க... போய்ப் படுத்துத் தூங்குங்க..." என்று எக்காளமிட்டாள் கீர்த்தி.

பாலா நின்றான்... திரும்பி வந்தான் அவளிடம்...

"இப்போ என்னடி வேணும் உனக்கு... காலையில வந்து கூப்பிட்டேன்ல... நீதானே வரமாட்டேன்னு சொன்ன... உனக்கு கிஃப்ட் என்னடி கிஃப்ட்... வா, கடையையே வாங்கித் தருகிறேன்..." என்று பேசியதில் மீண்டும் மாபெரும் தவறு செய்ய... அங்கே கீர்த்தியின் மனதில் எரிமலை வெடித்தது.

"ஓஓஓஓஓஓ... கடையையே வாங்கித் தருவீங்களா... பாலா... பொண்டாட்டிக்கு கிஃப்ட்னா கடை... காதலிக்கு

கிஃப்ட்னா... முத்தமா..." என்று மூக்கு விடைக்க அவன் முன் நின்றாள்...

பாலா அப்படியே நின்றான்... தரையில் உயிருக்குத் துள்ளிய மீனாகத் துடித்தான்... தன் கடந்த காலத்தைச் சொல்லி வாழ்வில் மிகப் பெரிய தவறு செய்து விட்டோமோ என்று துடித்தான்.

ஆனால், அன்று அவன் மனைவி இன்னும் பல வார்த்தை அம்புகளை விஷம் தோய்த்து அவனை எறியக் காத்திருந்தாள் என்பதை அவன் அப்போது அறியவில்லை.

இருந்தும் துடித்த மனதை அடக்கினான்...

"ஏய்... நானே உனக்குத்தானடி... ஏன் இப்படிப் பைத்தியக்காரி மாதிரி பேசுற..." என்று அவளை... அமைதிப்படுத்தும் விதமாய்ப் பேச... மனைவியோ... வீறு கொண்ட பெண் சிங்கமாய்ப் பேசிக் கொண்டிருந்தாள்.

"இல்ல... இல்ல... நீங்க என்னைக்குமே என்னோட பாலா இல்ல... எனக்கும் இல்ல... நீங்க அந்த மதுவோட பாலாதான்..." அவள் பேசிய விதத்தில்... இல்லை இல்லை என்று கத்திய விதத்தில் பாலாவே அதிர்ந்து போனான்.

புள்ளி மானாய்... மகிழ்ச்சியோடு சுற்றிக் கொண்டிருந்தவளை... இப்படி ஆக்கிவிட்டோமே என்று மனம் அவனைக் கூறு போட...

"கீதும்மா... இங்க பாரு. நீ தூங்கு... நேத்துல இருந்து நீ தூங்கல போல... கொஞ்சம் ரெஸ்ட் எடு... காலையில பேசலாம்... நீ குழப்பத்தில் இருக்க..." என்று அருகில் போக...

அவன் சட்டையைப் பிடித்தாள் கீர்த்தி.

"ஏன்டா. என்னப் பார்த்தா பைத்தியக்காரி மாதிரி தெரியுதா...?" அவன் கண்களைப் பார்த்துச் சொல்ல...

"ஆனா... அது உனக்கு வசதிதான்... ஈசியா டைவர்ஸ் கிடச்சிடும் உனக்கு... அப்புறம் இன்னொரு கீர்த்தனா இல்ல



சந்தனா கிடைக்க மாட்டாளா என்ன... ச்சேய்! வேண்டாம்... மது பாவம்... எல்லாரும் என்னை மாதிரி இருக்க மாட்டாங்க... மதுவுக்கு நீங்க அவளோட பாலாவா கிடைக்கணும்..."

"கீர்த்தனா... இதோட நிறுத்திக்க... வரம்பு மீறிப் பேசுற..."

"நான் அப்படித்தான் பேசுவேன்... உனக்குப் பிடித்த மாதிரிலாம் பேச நான் என்ன உன் மதுவா...?" என்றவளை நோக்கி... இழுத்து வைத்த பொறுமை எல்லாம் வேண்டிய வேண்டுதல் எல்லாம் காற்றில் பறக்க அருகில் நெருங்க... அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை ஊகித்தவளாய்... ஆனால் நகராமல்...

"என்னடா... என் வாய மூடப் போறியா... வா..." என்று அதிரடியாய்த் தாக்க நின்றுவிட்டான் பாலா...

சளைக்காமல் தன்னைச் சுழன்று அடிப்பவளை என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்க...

"என்ன... இப்போ சொல்றேன். கேட்டுக்கோ... நீங்க மதுவோட பாலாதான்... என் பாலா இல்ல... அவ உங்க மது... உங்க மது... மதுதான்... நான் சொல்லிட்டேதான் இருப்பேன்... உங்க மது... உங்க மது..." என்றவளை, இதற்கு மேலும் விட அவன் என்ன முட்டாளா...!

"என்னடி உன் பாலா இல்ல... நானும் போனாப் போகுது... சின்னப் பொண்ணு... புரிஞ்சுக்குவ... இன்னைக்கு மனசு மாறுவ... நாளைக்கு மாறுவ... என்னோட வாழ ஆரம்பிப்ப...ன்னு பொறுமையா போனா... இந்த ஆட்டம் ஆடுற...

"இப்போ என்ன நான் யாரோட பாலா... அதுதான் உன் பிரச்சனை... இன்னைக்கு அதுக்கு உனக்குப் பதில் சொல்றேன்... உன்னை என் கீர்த்தியாவும்... என்னை உன் பாலாவாகவும் மாத்திறலாம். அதுக்கப்புறம் எவ வந்தாலும்

அவளும் அவ பாலானு சொல்ல முடியாது... நீயும் இப்படி ஆட முடியாது!" என்றபடி ஆவேசமாக அறையினுள் இழுத்து வந்து அவளைக் கட்டிலில் தள்ளியவன் தான் அணிந்திருந்த சட்டையின் பட்டன்களை விடுவித்தவனாய் அவளை நெருங்கினான்... கோப முகமாய்...

ஆனால், என்றும் அவனின் அருகாமையில் திணறும்... தவிக்கும் கீர்த்தி... இன்று சுவரில் அடித்த பந்து போல அவன் தள்ளிய வேகத்தில் துள்ளி எழுந்து அமர்ந்தவள்... சிலிர்த்து எழுந்த பெண் சிங்கமாய் நிற்க...

எப்போதும் மருண்ட மானின் விழியாய் நோக்கும் மனைவியின் பார்வையில் தன்னைத் திருப்பி எடுப்பவன்... இன்று அவனோடு மல்லுக்கட்ட நிற்கும் சிங்கம் போல் நின்ற மனைவியைப் பார்த்து... இன்னும் வேகத்தோடு அருகில் வர... ஏதோ ஒரு தீர்மானம் எடுத்தவளாய்... வெறியோடு வரும் கணவனைச் சளைக்காமல் எதிர் கொண்டாள்...

தன்னை மூர்க்கத்தனமாய் அணைத்தவனிடம் கீர்த்தனா... கொஞ்சம் கூட யோசிக்காமல் விஷம் தோய்ந்த வார்த்தைகளைத் தடவிக் கடைசிப் பாணத்தை... பாலா என்னும் அந்த ஆண் சிங்கம் மேல் தயவு தாட்சண்யம் இன்றி வீசினாள்...

அதில் பாலா... குற்றுயிரும் குலை உயிருமாய் ஆனான்... அவள் வீசிய வார்த்தைகளின் வலி தாங்காமல் அவளை விட்டு விலகியவனை... செத்த பாம்பாய் நின்றவனை... அதை உணராமல் வார்த்தைகளால் அடித்துக்கொண்டே இருந்தாள்...

## 47

**பா**லா தன்னிலை மறந்தெல்லாம் அவளை அணைக்கவில்லை... தன் மனைவிக்கு அவன் மீது உள்ள உரிமையை அவளுக்கு



உணர்த்தத்தான் எல்லை மீறினான் அவளிடம்... தொட்ட நிமிடமே மூர்க்கம் மறைந்ததுதான் உண்மை...

கீர்த்தியோ.. வன்மையான கரங்களால் தன்னிடம் எல்லைகளை மீறி அவன் உரிமையை நிலைநாட்ட முயன்ற கணவனிடம்... முரண்டு பிடிக்கவில்லை... இரும்பாய் நின்றிருந்தாள்...

எப்போதும் தன் கரம் பட்டாலே நெகிழ்வதை உணர்பவன்... இன்று மரக்கட்டை போல் வீம்பாக நின்று கொண்டிருந்த அவளை உணர்ந்தாலும்... அணைத்தபடியே... தன் இதழ்களால் அவள் இதழ்களைச் சிறை செய்ய அவள் முகத்தை நோக்கிக் குனிய...

கண்களில் உணர்ச்சியின்றி அவனைப் பார்த்தாள்... அவனும் அதில் கலந்தான்...

முத்தமிடப் போனவனிடம், "மூன்று!" என்றாள் அவன் கண்களைப் பார்த்தபடி...

"என்னடி மூணு..." கேட்கும் போதே அவன் குரல் கொஞ்சியது.

"நீங்க எனக்குக் கொடுத்த முத்தத்தோட கணக்கு..." என்றாள்.

மோகம் சரசமாட... அவள் இதழ்கள் பேசியதால்... மாற்றி அவள் கன்னங்களில் தன் முத்தத்தை அழுத்தமாய்ப் பதிக்க... அதன் விளைவு கீர்த்தனாவுக்கு உடல் சிலிர்த்தது... இருந்தும் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு விரைப்பாக நின்றாள்.

"கீது... இனிமே உன் எண்ணிக்கையில அது அடங்காது... சோ விட்டுடு!" என்று மனைவியின் வார்த்தைகளில் உள் நோக்கம் அறியாமல் தன் வேலையைத் தொடர...

"ஒன்று," என்றாள்.

"என்னடி தப்புத் தப்பா எண்ணுற... மூணுக்கடுத்து நாலு... இதுக்கே கணக்கெல்லாம் மறந்து போச்சா?" கிசுகிசுப்பாய் வந்தது அவன் குரல்.

"அது இதழ் முத்தம்... இது... என் கன்னத்தில் நீங்க வைக்கும் முதல் முத்தம்... கணக்கு கரெக்டா இருக்கணும் பாலா..." என்றவளின் பேச்சில் சட்டென்று கொஞ்சம் சுதாரித்தான் தான் பாலா...

"ஏய்... என்ன பேச்செல்லாம் ஒரு மாதிரியா இருக்கு... இது என்ன அசிங்கமா... இதைக் கணக்கெடுத்து நீ இப்போ என்ன பண்ணப் போற... உளறிட்டு இருக்காத!" என்றான் விபரீதம் புரியாதவனாக...

சிரித்தாள் கீர்த்தி... அதில் அவனை வெற்றி கொள்ளப் போகும் கர்வம் தெரிந்தது... கடித்துக் குதறப் போகும் ஆணவம் தெரிந்தது.

"கணக்கெடுத்து என்ன பண்ணப் போறனா...?" என்று சிலிர்க்க...

"என்னமோ நீ பண்ணு... இப்போ என்னைப் பண்ண விடு." கிறக்கமாகப் பேசியபடி... மோன நிலையில் இருந்தவன்... மேலும் பேச்சை வளர்க்காமல்... தனக்கு வந்த மோகத்தை அவளுக்குள் ஏற்றும் வேகத்தில் குறியாய் ஆனான்... அவன் கைகள் சேலை அணிந்திருந்த வெற்றிடையில் சுதந்திரமாய் உலவ ஆரம்பிக்க...

தன் இடையில் ஊர்ந்த அவன் கைகளின் மேல் தன் கையையும் வைத்தவள்...

"இதுக்கெல்லாம் எப்படி பாலா வசூல் செய்வது?" என்று கேட்க...

கேட்ட பாலாவின் கிளர்ச்சியடைந்த உடலெங்கும் குப்பென்று வியர்க்க... அவளை அணைத்ததில் சூடான ரத்தம் சட்டென்று அடங்க... அவள் சொல்லிக் கொண்டிருந்த



கணக்குப் பாடம் அப்போதுதான் அவன் நடு மண்டையில் நச்சென உறைத்தது.

அவள் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் கொஞ்ச நஞ்சம் புரிந்தவனுக்குக் கைகள் தளர்ந்தன... அது அவன் கைகளோடு சேர்ந்திருந்த கீர்த்தியின் கைகளுக்கும் புரிய... அவனின் தளர்ந்த கைகளை விடாமல் இறுக்கமாகப் பற்றினாள்.

"சொல்லுங்க பாலா... முன்ன பின்ன நான் இந்தத் தொழில் பண்ணினது இல்லை... எப்படி வசூல் பண்ணுவாங்க... தொடுறதுக்கெல்லாம் பண்ணுவாங்களா... இல்லை, நேரக் கணக்கா... இல்லை... எப்படி பாலா...?" அப்பாவி போல் கேட்டாள். பார்வை பாலாவிடம் மட்டுமே இருந்தது... தொடர்ந்தாள்.

"அவங்க எப்படியோ பண்ணட்டும்... நாம ரெண்டு பேரும் சேர்ந்து இதுக்கு டீல் பேசிக்கலாம்... ஏன்னா என்னோட ஒரே கஸ்டமர் நீங்கதான் பாலா..." என்றபோது சுத்தமாய்ச் செத்துப் போனவன் அவளது கணவன்தான்.

கோபமும் ஆற்றாமையும் துக்கமும் வலியுமாய் அவன் அவளிடமிருந்து விலக எத்தனிக்க... அவள் விடவில்லை.

"ஹலோ... என் அப்பா கடனை அடைக்கிறதுக்கு எனக்கு நல்ல பிஸினஸ் கிடச்சிருக்கு பாஸ்... கொஞ்சம் கோ-ஆபரேட் பண்ணுங்க..." என்று முற்றிலுமாய் உயர்ந்த குரலில் தன்னையே தரம் தாழ்த்திப் பேசி... மேலும் மேலும் அவனைத் துடிக்க வைத்தாள் அவன் மனைவி.

சொன்னவள் அவள் சொன்னதை நிறைவேற்றும் வகையில்... அவனைத் தன்னோடு இறுக்கமாக அணைக்க...

"ச்சீசீ... விடுடி... நீ... உன் மனசுல... இத்தனை கேவலமான எண்ணமா... உன்னைய போய்... இதுக்கு நீ உன்னையவே நினைச்சுட்டு இருக்கிற என் நெஞ்சில கத்திய

இறக்கி இருக்கலாம்..." என்று வார்த்தைகள் கூடக் கோவையாய்ப் பேச முடியாமல் தடுமாறினான் பாலா... மனமெங்கும் மரண வலி...

"அது முடியாது பாலா... ஏன்னா அங்க நான் மட்டும் இல்லையே... எனக்கு அதுக்குக் கூட முழு உரிமை இல்லை பாலா!" என்றவளை நச்சுப் பாம்பினைப் பார்ப்பது போல் பார்த்தான்.

"அசிங்கமா இருக்கா... என்னைய பார்த்தா... அதெல்லாம் பார்த்தா இனி பிரயோஜனமில்லை..." எனும் போதே, அவன் அவளைத் தள்ளி விட்டு... அவளிடமிருந்து விலகி இருந்தான்...

அவளைக் கன்னம் கன்னமாக அறைய வேண்டும் போல்தான் இருந்தது... ஆனால், அவன் இருந்த நிலையில்... அவனால் அந்த அறைக்குள் நிற்கவே தள்ளாடினான்... பின் அவளை எங்கு அறைவது...?

சட்டென்று ஹாலுக்கே வந்துவிட்டான்... அவனால் கீர்த்தனாவின் வார்த்தைகளை சீரணிக்கவே முடியவில்லை... மூச்சுவிடக் கூடத் திணறினான்... அவனுக்கும் அவளுக்குமான வாழ்க்கையில் அத்தனை வழிகளும் மூடி இருள் சூழ்ந்தது போன்ற உணர்வில்... சர்வ நாடியும் அடங்கியது போல் தோன்ற...

சற்று முன் தோன்றிய அத்தனை உணர்ச்சிகளும் அடங்கித் தலையில் கை வைத்து அமர்ந்து விட்டான். அவனின் ஆட்டமெல்லாம் அடங்கியது போல் இருக்க, அவன் மனைவியோ இன்னும் ஆடிக் கொண்டிருந்தாள்.

10 நிமிடம் கழித்துக் கையில் ஒரு டைரியுடன் வந்தாள் கீர்த்தனா...

"பாலா... என்னைப் பாருங்க... நாம் பேசி ஒரு முடிவுக்கு வந்துரலாம்..."



நிமிர்ந்து பார்த்தான் பாலா... அவளை... அவனின் கண்களில் இருந்து வந்த அடிபட்ட பார்வை... 'இதற்கு மேலும் என்ன?' என்பது போன்ற செய்தி தாங்கி இருந்தது.

"இதுல எல்லாம் எழுதி இருக்கேன்... நான் பேங்க் மேனேஜர் ராகவோட பொண்ணு... கணக்கெல்லாம் கரெக்டா இருக்கும்!" என்றாள் நிமிர்த்தலாக.

ஆனால், ஒன்றை மறந்துவிட்டாள்... அவர் கணக்கைக் கோட்டை விட்டதால்தான் இன்று இவள் தாம்பத்திய பந்தத்திற்கே கணக்கு எழுத வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறாள் என்று...

உள்ளே எழுந்த சூறாவளியில்... கண்கள் சிவக்க எழுந்தவன்... எதுவும் பேசவில்லை. கையில் வைத்திருந்த டைரியை வாங்கி விசிறி அடிக்க... அது இருவரும் திருமணக் கோலத்தில் இருக்கும் போட்டோவின் மேல் பட்டுக் கீழே விழ... டைரி பட்ட வேகத்தில் புகைப்படம் வேகமாய் ஆடிக் கீழே விழப் போக... அந்த நிலையிலும் அது கீழே விழும் முன் பிடித்து நிறுத்தினான் பாலா.

அதில் இருந்த கீர்த்தனாவின் கலங்கிய முகமும்... உணர்ச்சிகள் அற்று மதுவின் நினைவுகளை மட்டுமே கண்களில் தேக்கி இருந்த தன் முகமும் அவனைப் பார்த்துச் சிரிக்க...

தன் உருவத்தில் ஓங்கிக் குத்து விட்டான் பாலா... நல்ல வேளை அது கண்ணாடியில் லேமினேட் செய்யப்படாமல்... ஃபைபரில் செய்யப்பட்டிருந்தது. உடையவில்லை...

சற்று நேரம் அந்தப் புகைப்படத்தையே வெறித்துப் பார்த்தபடி இருந்தான்...

அவனுக்கு அங்கு இருக்கவே பிடிக்கவில்லை... முக்கியமாகக் கீர்த்தனாவைப் பார்க்கவே பிடிக்கவில்லை...

இருந்தால் அவளையும் அசிங்கப்படுத்திக் கொண்டு... திருமண பந்தத்தையும்... அதன் நூலான தாம்பத்திய பந்தத்தையும்... சத்தியமாய் அசிங்கப்படுத்தி விடுவாள் என்று தோன்ற...

மூச்சை அடைத்தது அவனுக்கு... இங்கிருந்து போனால்தான் மூச்சே விட முடியும் போல் என்று தோன்ற வேகமாய்க் கார் கீயை எடுக்கப் போக... அதற்குள் கீர்த்தனா... கதவைப் பூட்டிக் கையில் சாவியை வைத்துக் கொண்டாள்...

கோபம் அவன் முகத்தில் தாண்டவம் ஆடியது...

"எங்க போறீங்க... இங்க ஒருத்தி பேசிட்டு இருக்கறதப் பார்த்தா எப்படித் தெரியுது...?"

"சாவியைக் கொடு கீர்த்தனா..." என்று பல்லைக் கடிக்க...

"முடியாது... என்ன இவ்வளவுதானா நீங்க... என்னமோ டெய்லி மிரட்டுவீங்க... பூச்சாண்டி காட்டுவீங்க... இன்னைக்கு என்ன ஆச்சு... ஓ... கணக்கு மேட்டரா... ஓட்டாண்டியாலாம் ஆக்கிற மாட்டேன்... என் அப்பா வாங்கின தொகைக்கு மட்டும்தான்... பாலா... என்னை நம்பலாம்..." என்று அவனை அணைக்க...

திமிறினான் பாலா.

அவன் கையை எடுத்து உடம்பில் படர விட்டவள்... "உங்களுக்கு ஒரு சந்தேகம் வந்துச்சே பாலா... நான் பேபியா... இல்ல பொண்ணானு... இன்னைக்கு போக்கிற லாமா?" என்று அவன் கையை அதை நிவர்த்தி செய்யும் வண்ணம் கொண்டு செல்ல, தீப் பட்டாற் போலக் கையை இழுத்தவன்...

அவளைக் கதவோடு சாத்தி... கண்ணில் வெறியோடு கழுத்தில் கை வைத்து நெரிக்கப் போவது போல் போனவன்... அது முடியாமல் அவளைத் தள்ளி விட்டான்.



"என்னைக் கொன்னுடுடி... நிம்மதியா போய்ச் சேருகிறேன்... எங்க நிம்மதியா... உன்னைய விட்டுட்டு என்னால போகக் கூட முடியாது... நீ இப்டினா... அவ எங்க இருக்கானு தெரியாம... நான் செத்தா கூட நிம்மதி இல்லடி எனக்கு... உங்க ரெண்டு பேராலயும்... நான் யாருக்கு என்ன பாவம் பண்ணினேன்... எனக்கும் காதலுக்கும் ஏழாம் பொருத்தம் போல... அவ மேலயும் வந்துருக்கக் கூடாது... உன் மேலயும்!" என்று நிறுத்தியவன்... அவள் கண்களைப் பார்த்தபடி...

"ஒரு தடவதான் பட்டேன்... அதுக்கப்புறம்னாலும் நான் சுதாரிச்சுருந்துருக்கணும்... எனக்கு இது தேவைதான்... நீ சாவியைக் குடு... முதல்ல... என்னால் இங்க இருக்க முடியாது..." என்று வெளியே போக எத்தனிக்க...

கீர்த்தனா அதற்கெல்லாம் அடங்கவில்லை... பத்ர காளியாக நின்றிருந்தாள்... 10 மாதமாக அவள் பூட்டி வைத்திருந்த உணர்வுகள்... கணவன் முன்னிலையில் வெளி வந்து கொண்டிருந்தன... அன்று போல் இல்லாமல்... சுய நினைவில்...

"ஏன்... ஏன்... இருக்க முடியாது..." ஒற்றையாய்க் கிடந்த முந்தானையை அள்ளிப் போட்டவள்... அவன் முன்னால் பேயாய் மாறி நின்றாள்.

"உங்களுக்கு இப்போ என்ன ஆச்சுனு... இத்தனை கோபம்... நீங்க விரும்பினதுதானே... எடுத்துக்கங்க..." என்று மீண்டும் அவன் முன்னால் போய் நிற்க...

அவள் அள்ளிப் போட்ட முந்தானை அதன் வேலையைச் சரியாய்ச் செய்யாமல் கோணல் மாணலாய்க் கலைந்து கிடக்க... பாலாவுக்கு அவள் கோலம் மோகம் தராமல் இன்னும் கோபம் தந்தது...

"எனக்கு... நீங்க வேணும்... இன்னைக்கு... இப்போ... எனக்குப் பிறந்த நாள் பரிசா..." என்றாள் ஆங்காரமாக...

"விடு என்னை... பேசுறதெல்லாம் பேசிட்டு... பரிசு வேணுமாம்... அதுதான் மொத்தமா என்னைக் கொன்னுட்டியே... இன்னும் என்ன... பொணத்த வச்சுட்டு என்ன பண்ணப் போற..." என்றான் - அவள் வார்த்தைகளின் கனம் தாங்காமல்...

ஆனால், அவளோ அவன் வார்த்தைகளில் எல்லாம் கவனம் கொள்ளாதவளாய்... தன் பிடிவாதத்தில் நின்றிருந் தவளாய்...

"சும்மா நடிக்காதீங்க... என்னைய உங்களுக்குப் பிடிக்கலை... இத்தனை நாளும்... பிடித்திருக்கிற மாதிரி நடிச்சுருக்கீங்க... என்னோட வம்பிழுக்கிற மாதிரி சீன் போட்ருக்கீங்க... இன்னைக்கு நானே வரும்போது உங்க ளால என்னை ஏத்துக்க முடியல... ஏன்னா... மதுவைத் தான் உங்க மனசும்..." என்று நிறுத்திப் பின் சொன்னாள்.

"உடம்பும் தேடுது..."

இதற்கு மேல் அவளைப் பேசவிட்டால்... அவர்கள் வாழ்க்கை சந்தி சிரிக்கப் போவது நிச்சயம் என்று உணர்ந்தவன்...

என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறினான்...

அவள் வாயை அடைக்கும் வழியைத்தான் அவள் அடைத்து விட்டாளே...

இப்படியெல்லாம் இவள் பேசுவாள் என்று கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை... அவன் மனதை... கொத்திக் கொத்திக் கூறாக்கியிருந்தாள்...

எங்கும் ரண வேதனை... அவளை அவனோடு பிரிய விடாமல் வைக்க தான் மறைத்த பண விவகாரம்... இன்று அவள் தன்னைத் தானே தரம் தாழ்த்திப் பேசக் காரணமாகி விட்டதை எண்ணிச் சித்தம் கலங்கினான்...



அவள் பேசுவதை எல்லாம் அவனால் கேட்க முடியவில்லை... அவளின் இந்த நிலைக்கு... இப்படிக் கீழான நிலைக்கு இறங்கிப் பேசும் அளவுக்கு... அவளின் குண இயல்பு மாறியதற்கு... இத்தனைக்கும் காரணமான தன்னை முதலில் வெறுத்தான்...

அவள் தன் மனதைக் குதறும் நிலையைத் தடுத்து நிறுத்த... தன்னைச் சித்திரவதைச் செய்து கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை என்று முடிவெடுத்தவன், பேசிக்கொண்டே இருந்தவளைத் தன்னிடமிருந்து வலுக் கட்டாயமாகப் பிரித்துத் தள்ளியவன்... நுழைந்தது... அந்த வீட்டின் அடுப்பங்கரையினுள்... ஆத்திரத்துடன் அடுப்பைப் பற்ற வைத்தவன்... மேலே தொங்கிக் கொண்டிருந்த கரண்டியை அதில் வைத்தான்...

அவன் பின்னாலே அவனை விடாமலே வந்த கீர்த்தனா... அதிர்ந்து விட்டாள்... என்ன செய்யப் போகிறான் என்று... ஒரு நிமிடம்... தனக்கோ என்று அதிர்ந்தவள்... அவளை அறையக் கூட யோசிப்பவன் இதைச் செய்வானா என்று தோன்ற... தோன்றிய நொடியே... அது அவனுக்காக என்று உணர... அதுவரை பேயாட்டம் ஆடிய மனது கணவனுக்காகத் துடிக்க ஆரம்பித்தது... அவன் செய்யப் போகும் காரியத்தைத் தடுத்து நிறுத்த அவனருகில் ஓடினாள்.

ஆனால், அவள் வரும் முன்னே பாலா... தன் கைகளில் சூடு நிறைந்த அந்த கரண்டியின் பின்முனையைத் தன் கைகளில் வைத்துவிட்டான்... வைத்தவன் மனதின் வலி மறையும்வரை எடுக்கத் தோன்றாமல் நிற்க...

"பாலாஆஆஆ!" அலறி ஓடி வந்தாள் கீர்த்தனா.

சூடில்லாத மறுமுனையை இழுக்க... அவன் இறுகிய முகத்துடன் அதைப் பிடுங்கவே முடியாதவாறு பல்லைக் கடித்துக் கொண்டு பிடித்திருக்க...

கெஞ்சினாள் கீர்த்தி... கண்களில் நீர் தாரை தாரையாக வடிந்தது.

"விடுங்க பாலா... நான் பேசினது தப்புதான்... எனக்கு வேண்ணா தண்டனை கொடுங்க..." என்று துடித்தாள்...

இகழ்ச்சியாகச் சிரித்தான் பாலா...

"உனக்குத் தண்டனையா... நீ இப்படிப் பேசுறதுக்கெல்லாம் நான்தானே... நான் மட்டும்தானே காரணம்... இனி... இதுதான்டி உனக்குத் தண்டனை... உன்னைத் தொட விடாம பண்ணிட்டேல்ல... சந்தோசம் தானே உனக்கு..." என்றவனிடம்... எதுவும் பேசாமல்...

சட்டென்று தன் கைகளால் சூட்டோடு இருந்த முனையைப் பிடிக்க... இப்போது வேறு வழியின்றி ஆத்திரத்தோடு பாலா கரண்டியைக் கீழே போட்டான். போட்டவன் வெளியேறியும் விட்டான்.

கீர்த்திக்குத் தீக்காயம் இல்லை... நான்கு விரல்களின் முனையும் லேசாகத் தடித்திருந்தன. கொஞ்சம் வலிதான் அவளுக்கு... வேகமாக அடுப்பை அணைத்தவள்... கணவனின் காயத்தை எண்ணி... தன் வாய் விட்டதால் தான் இத்தனை துன்பம் என்று வலியோடு வெளியே வர... பாலாவோ அவள் தாய் தந்தை புகைப்படத்தின் கீழே வெற்றுத் தரையில் பித்துப் பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான்... மனம் வாங்கிய அடியிலிருந்து வெளிவர முடியாமல்...

அவன் இருந்த நிலையைப் பார்த்தவளுக்கு... அவன் கம்பீரம் எல்லாம் போய் உருக் குலைந்து நின்றவனைப் பார்த்தவளுக்கு... உயிர் நாளம் அனைத்தும் கருகியது.

அலமாரியில் இருந்து மருந்தை எடுத்தவள் அவன் முன் மண்டியிட்டு அமர்ந்தாள்... அவனிடம் எதுவும் பேச வில்லை... தீப்பட்ட அவன் கையைப் பற்றி... எடுத்து.. மருந்தை இடப் போனாள்... கண்ணில் இருந்து நீர்



வழிந்துகொண்டே இருந்தது... அவனோ... அவளிடம் எதுவும் பேசாமல்... அவள் கையில் இருந்த மருந்தைப் பறித்துத் தூர எறிந்தான்... அது போன தூரம் அவன் கோபத்தை உணர்த்த... கையெடுத்துக் கும்பிட்டாள் கீர்த்தி.

உதடுகள் துடித்தபடி... கண்களில் வழிந்த நீர்... கழுத்து வரை இறங்கியிருக்க...

"நான் சத்தியமா இனி இப்படிப் பேசமாட்டேன் பாலா... என்னைப் பாருங்க பாலா... நான் எனக்கு நீங்க விஷ் பண்ணலேனு... கோபத்தில முட்டாள் தனமா... கேவலமா நடந்துட்டேன் பாலா... என்கிட்ட பேசுங்க பாலா... என் மேல இப்படிக் கோபப்பட மாட்டீங்களே பாலா... பாவி... என் மேலேயே கோபப்பட வச்சுட்டேனே..." என்று அவன் மேலேயே விழுந்து அழுதாள் கீர்த்தி.

பாலாவோ அதில் எல்லாம் இளகவில்லை.

"மருந்தைப் போட்டுக்கங்க ப்ளீஸ்..." என்று கண்களில் வலியோடு மீண்டும் கெஞ்ச... அதில் கொஞ்சம் கூட வருந்தவில்லை... அப்படியே அமர்ந்திருந்தான்...

அவனைச் சமாதானப்படுத்தும் வழி தெரியாமல் முன் இரண்டு பட்டன்கள் திறந்திருந்த அவன் சட்டையைப் பிடித்தபடி அவன் மார்போடு துஞ்சினாள்.. அவளுக்கு ஆறுதல் அங்குதான் உள்ளது என்பது போல் சாய்ந்தாள்.

குலுங்கி அழ ஆரம்பித்தாள்... அன்றொரு நாள் அழுதது போல... பாலா அவள் செய்த எதையும் தடுக்கவே இல்ல... கல்லாய் அமர்ந்திருந்தான்.

எத்தனை நிமிடம் இருந்தாள் என்று தெரியவில்லை அவளுக்கு... நிமிர்ந்த போது கணவன் அதே நிலையில்தான் இருந்தான்...

கண்களில் வடிந்திருந்த நீரைத் துடைத்தவள்...

தன் மனதினை அவனிடம் புரிய வைக்க ஆரம்பித்தாள்... அப்படியாவது அவன் பேசுவான் என்று... ஆனால், அது எல்லாம் அவள் ஏற்கெனவே அவள் அவனிடம் சொல்லி அழுத விசயங்கள்தான்... அவன் ஞாபகத்தில் தான் அது இல்லை... பாலா அதற்குப் பின்னால் தான் மதுவை மறக்க ஆரம்பித்து... அவளை விரும்ப ஆரம்பித்தான்... என்ற உண்மை உணராதவளாய்...

"எனக்கு உங்க மேல கோபம்தான் பாலா... அதுகூடப் பெரிய அளவில் எல்லாம் இல்லை... உங்களால கொடுக்க முடிந்த பணத்தைக் கொடுக்க நினைக்கவில்லையே என்று மட்டும்தான்... மற்றப்படி... என் அப்பாவோட தன்மானத்தைக் காப்பாற்றியதற்காக சந்தோசம்தான் பட்டேன்...

"அப்போல்லாம் நான் உங்களால் சிறிதளவு கூடச் சஞ்சலப்படவில்லை... ஆனா எப்போ நீங்க என் கழுத்துல மூணு முடிச்சு போட்டீங்களோ, அப்போதே நான்... கீர்த்தனா ராகவனா இருந்த நான் கீர்த்தனா பாலாவா மாறிட்டேன்... அப்போ அந்த நிமிசத்துல இருந்து... நான் பைத்தியக்காரியா மாறிட்டேன் பாலா..." என்றவளின் மேல் பாலாவின் பார்வை நிலைத்தது.

"ஆனா... அந்த நிமிடம் உங்க முகத்தைப் பார்த்தேன் பாலா... உங்களுக்கும் என்னைப் போல உணர்வுகள் வந்திருக்குமா என்று... ஆனால் நீங்க உங்க..." என்றவள் -

"சாரி சாரி..." என்று மீண்டும் தொடர்ந்தாள்.

"மதுவோட நினைவுகளில்தான் இருந்தீங்க... அங்கதான் அதுதான் என் மனசில விழுந்த முதல் அடி... அதன் பிறகு நம்ம ஃபர்ஸ்ட் நைட்... கண்ணியமா என்னைப் பார்த்த உங்க பார்வை... நீங்க என்னிடம் நடந்த விதம்... மனைவியா எனக்கு விழுந்த இரண்டாவது அடி...

"என்னோட பெட்ல படுக்க விரும்பாத... என்னை மூன்றாம் ஆளாய்த் தள்ளி நிறுத்திய விதம்... இப்படி



சொல்லிட்டே போகலாம்... ஆனா இது எல்லாத்தையும் மீறி என் பெண்மைக்கே நீங்க கொடுத்த அடி எனும்போது..."

அவள் கணவன் தொடர்ந்தான்.

"என்னோட பிறந்த நாள்ல... நீ தடுமாறி விழுந்த போது... உன்னில் நான் மயங்காத விதம்... அதுதானே?" என்ற போது, கீர்த்தி அவனை ஆச்சரியம் கலந்து பார்த்தாள்... அவளைப் பார்க்காமலேதான் அவன் பேசிக் கொண்டிருந்தான்.

"ஆனால்... என் அம்மாவிடம்... உனக்காகப் பரிந்து பேசியது... அந்த சௌந்தர்யா முன்னிலையில் விட்டுக் கொடுக்காமல் பேசியது... மனதில் வலி இருந்தும்... உனக்காக என் பிறந்தநாளை உன் வீட்டில் கொண்டாடியது... இது மட்டும் உன் நெஞ்சோடு கலந்த என் ஞாபகங்கள்...

"என் துணை இல்லாமல் உன் இறுதிவரை உன்னோடு கொண்டு போக நினைத்த நம் திருமண வாழ்க்கையின்... தடங்கள்... இதுதானே கீர்த்தனா... நீ சொல்ல வந்தது...

"இன்னும் கூடச் சொன்னாய்... உனக்கு ஏன் சிந்துவை மிகவும் பிடிக்கும் என்று... சிந்துவைப் பற்றிப் பேசும் போதுதான் நான் என் வாய் மூலம் எந்த நிர்பந்தமும் இல்லாமல்... நம் உறவை... அதாவது கணவன் - மனைவி என்று சொன்னேனாம்... கரெக்ட் தான கீர்த்தனா... இது எல்லாம் தெரிந்த விசயம்தானே கீர்த்தி... புதிதாய் நீ சொல்ல ஒண்ணுமே இல்லையே!" என்றவனை விழி உயர்த்திப் பார்த்தாள் அவனவள்.

"எனக்கு எப்போ தெரியும் என்று பார்க்கிறாயா...? இதெல்லாம் அன்று நீ என் மீது விழுந்து சொல்லி அழுது மயங்கியபோது... உன் சுய நினைவின்றி... உன் அடி மனதில் இருந்து வெளிவந்தவை... அதன் பின்னர்தான்... உனை உணர்ந்து நான் உன்னில் பைத்தியமானேன்..." என்றவன், இன்னும் கோபம் அடங்காமல்தான் இருந்தான்.

அவன் சொன்ன விதத்தில் அவனோடு இன்னும் ஒன்றியவள்... இப்போது தொடர்ந்தாள்.

"பாலா..." என்று நெகிழ்ந்தவள்...

"நேத்து நீங்க கேட்டீங்கல்ல... என் கடந்த காலம் கேட்டுக் கஷ்டமாக இருக்கிறதா என்று...

"உண்மையைச் சொல்லப் போனா... அதில் எனக்கு மகிழ்ச்சிதான்... ஏன்னா... உங்க வாழ்க்கையில நான் தான்... மதுவுக்கு முன்னால் வந்திருக்கிறேன் என்ற உண்மை தெரிந்து... மதுவுக்கு உங்க மேல இருக்கிற காதல் மட்டும்தான்... உங்க கடந்த காலத்தில என்னைக் கஷ்டப்படுத்திய விசயம்... நீங்க அவங்க மேல வைத்திருந்த காதல் எல்லாம் இல்லை!" என்றபோது,

"ஏன் அதுலயும் உனக்கு என் மேல் நம்பிக்கை இல்லையா?" என்று கசப்போடு கேட்டவனைப் பார்த்து...

"இல்ல... அப்படிச் சொல்ல வரல நான்... மது உங்க மேல வச்சுருந்த காதல்... எனக்குப் புதிதாய்த் தெரிய வந்தது... அதனால் மனசு கொஞ்சம் கஷ்டம் ஆகிவிட்டது... ஆனா அவங்க மேல உங்களுக்கு இருந்த காதல்... அது எனக்கு உங்க கடந்த காலத்தில் எனக்குப் பழைய விசயம்... தெரிந்த ஒன்றுதான்... புதிதாக ஒன்றுமில்லை...

"சொல்லப் போனா... மதுவைக் காதலிக்கும் போது கூட பெரிதாக ஒன்றும் செய்யவில்லை... மது உங்கள விட்டுப் பிரிந்த பின்னால்தான் உங்க காதலின் ஆழம் அதிகமாயிருக்குன்னு சொல்லலாம்... இத்தனை வருசம் காத்திருந்தது... அத்தை - மாமா கூட சண்டை போட்டது... அந்தக் காதல இழந்துரக்கூடாதுனு... நெருக்கடில... வேற வழி இன்றி... என் சூழ்நிலையினைப் பயன்படுத்தி என்னை மணந்தது... திருமணம் செய்தும் மதுவோட காதலனாவே இருந்தது.." என்றவள்... அவன் கண்களில் கலந்து,



"தொட்டுத் தாலி கட்டிய மனைவியிடம் சிறு சலனம் கூட இல்லாம கண்ணியமாக நடந்தது," என்று சொல்லி முடித்தவள்...

"சோ. அதனால பெருசா வருத்தம்லாம் இல்லை... சொல்லப் போனா... மதுவுக்குக்கூடத் தெரியாது... இந்த அளவுக்கு நீங்க அவங்க மேல நேசம் வச்சுறீக்கீங்களானு... அவங்க மீதான உங்க காதலின் வலிமை தெரிந்த ஒரே ஆள் நான் மட்டும்தான்..." என்று அவனைப் பார்த்தவள்... கண்களில் குறும்புடன்...

"ஆனா உங்களப் போய்த் துரத்தித் துரத்தி லவ் பண்ணியிருக்காங்களேனுதான் நினைத்துச் சிரிப்புத்தான் வந்தது," என்றவள்,

"சிரிப்பு வரும்டி உனக்கு... உன் பின்னால் நாயா அலையுறேன்ல... நீ சொல்லுவ... இதுக்கு மேலயும் சொல்லுவ!" என்ற போது ஓரளவு நார்மல் ஆகி இருந்தான் பாலா.

"ஆனாலும் உங்ககிட்ட என்ன இருக்குனு உங்களையும் துரத்தி... துரத்தி லவ் பண்ணாங்கனுதான் ஒரு டவுட்... இது மதுவால மட்டும் இல்ல... சௌந்தர்யா... அப்புறம்... க..." என்று வாய் தவறி விடப் போனவள் தன் தோழியின் பெயரைச் சொல்லாமல்... இனி வரும் சந்திப்புகளில் சங்கடம் ஏற்படும் என்று தவிர்த்தாள்.

"அப்புறம் வேற யாரு...?" என்று விடாமல் பாலா கேட்க,

அசடு வழிந்தவளாய், "வேற யாரு... ராகவன் - மைதிலியோட ஸ்மார்ட் பொண்ணு... குளோபல் நெட் எம்.டி., பாலுவோட லூசுப் பொண்டாட்டி..." என்று அவள் சொன்ன விதத்தில் அவள் மேல் இருந்த கோபம் எல்லாம் வடிய அவளைப் பொய்யாய் முறைத்து... அது முடியாமல்... அவளை இறுக்கமாகத் தன் நெஞ்சோடு அணைக்கப் போக... கையில் இருந்த தீக்காயம் உரசி வலியைக் கொடுக்க...

"ஸ்ஸ்ஸ்ஸ்!" என்று உதறினான் பாலா.

"இப்போவாவது மருந்து போட்டுக்கங்க பாலா..." என்றவளிடம்... அதற்குக் காரணமாக அவள் பேச்சு ஞாபகம் வர... உடல் விரைத்தான்...

அதை உணர்ந்தவள்... "சாரி..." என்று மனதாரக் கூறியவள்,

தூரக் கிடந்த மருந்தைப் போய் எடுத்து வந்து அவன் கைகளில் போட்டுக்கொண்டே, "எனக்கு ஊர்ல இருக்கிறவங்க அத்தனை பேரும் விஷ் பண்றாங்க... சிந்து... முந்தின நாள் ஞாபகம் வச்சு சொல்லிட்டுப் போறா... வினோத்... புதுசா வந்த காதல்ல கூட என் மேல கோபம் இருந்தும்கூட மறக்காம பண்றான்... கார்த்திக் எங்கோ இருந்து போன் பண்றான்... கவி... அத்தை... மாமா... விஸ்வம் மாமா... மோகனா அத்தை எல்லாரும் சொல்லியாச்சு...

"உருகி உருகி லவ் பண்ணுவாராம். வாழ்க்கையே நீதான்னு டயலாக் விடுவாராம்... ஆனா அவளோட பிறந்த நாளை மட்டும் மறந்துருவாராம்..." என்றவள் நிறுத்தி... கண்களில் நீர் மல்க...

"அதுமட்டும் இல்லை. இத்தனை வருசம் இந்த வீட்ல... எப்படிலாம் இருந்திருப்போம்... தெரியுமா... 12 மணிக்கு ஒவ்வொரு வருசமும்... சந்தோசம் மட்டும்தான் பொங்கி வழியும்... அந்த வருத்தம் வேறு... ரொம்பப் பேசிட்டேன்..." என்று கூறியபடி அமைதியாக இருந்தாள்... ஞாபகங்கள் தந்தை வேதனையில்... பின் அதிலிருந்து மீண்டவளாய்,

"கட்டின புருசன் மட்டும் சொல்லலைனா... கோபம் வருமா வராதா, சொல்லுங்க..." என்று மீண்டும் சண்டைக் கோழியாய்ச் சிலிர்க்க...

"தப்புதான்... இனி சாகிற வரைக்கும் மறக்கமாட்டேன் கீது... போதுமா...? மொத்தமா பட்டுட்டேன்..."



"ச்சேய்... என்ன இது... எப்போ பார்த்தாலும்... சாகிற வரை... உயிரோடு இருக்கிறவரை... அபசகுனமா..." என்று கைகளால் பொத்தினாள் கீர்த்தி...

"அடிப்பாவி... இன்னுமா கையால மூடுற!" என்றவன் மெதுவாய் அவளை நிமிர்த்தித் தன் இதழ்களை அவளோடு சேர்க்கப் போக... அதில் உடல் சிலிர்க்க... மகிழ்வோடு ஒன்றப் போனவளுக்கு... அவன் இன்னொருத்தியின் உடைமை என்று... ஆணியடித்துப் பதிய வைத்திருந்த அவளின் மனம் அதன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது... அதிர்ந்தாள் கீர்த்தி...

ஆம்... கணவனோடு கலந்து... அவனோடு ஒன்றப் போனவளின் மனதில் மது எங்கிருந்துதான் ஞாபகத்தில் வந்தாளோ... சட்டென்று விலகினாள்... நீர் மல்க...

தற்போது தன் நிலை என்ன... இனி கணவன் நிலை என்ன... என்பதை உணர்ந்தவள்... விதிர்விதிர்த்து மனம் குன்றிக் கணவனை நோக்கினாள்... உள்ளம் துடிக்க...

"கீர்த்தி... இன்னும் என்னம்மா... என்னை நீ புரிஞ்சுக்கவே இல்லையா...?" என்றவன்... கைகளில் இருந்த சூட்டைக் காட்டி,

"கிட்டத்தட்ட 29 வயது எனக்கு... ஆனா 18 வயசுப் பையன்... ஒரு டீன் ஏஜ் பையன் மாதிரி வேலை பண்ணியிருக்கேனே... அப்போ கூட நீ என்னோட நிலைய புரிஞ்சுக்கலயா...?" என்று பாலா... கண்ணில் வலியோடு பார்க்க...

கண்களில் வழிந்த நீரைத் துடைக்கக் கூட மறந்தவளாய்... வெற்றுப் புன்னகையினை உதடுகளில் தவழ விட்டவள்... அவன் சொன்ன காதலின் அளவை விட்டு விட்டாள்.

"மது சொன்ன மாதிரி... நெருப்பு வளையம்தான் போல பாலா... நெருங்க முடியல!" என்று சொன்னவளின் வாய்

சிரித்தாலும், உதடுகள் துடித்தன... கண்ணில் கண்ணீர் காட்சியை மறைத்தது.

அவனைப் பிடித்திருந்தும்... உடலும், உள்ளமும் அவனுக்காக... அவன் தொடுகைக்காக ஏங்கியபோதும்... அவளுக்கும்... அவனுக்குமான உறவில் அவள் போட்டு வைத்திருந்த வேலி இன்றும் அவளைத் தள்ளி நிறுத்தியது.

"பாலா... ஐ லவ் யூ..." என்று அவன் சட்டையை இறுக்கியவள்...

"எனக்கு உங்கள... உங்கள மட்டும்தான் பிடிச்சுருக்கு... ஆனா... இதுக்கு மேல என்னால் முடியலயே பாலா... என்னால என் மனச மாத்த முடியல... உங்களோட கூடத்தான் நினைக்கிறேன்... ஆனா ஏதோ தடுக்குது... என்னை மன்னிச்சுடுங்க!" என்று கதற ஆரம்பித்தவளைப் பார்த்து...

அவள் சொன்ன வார்த்தை தந்த அதிர்ச்சியில் பிரமை பிடித்தவன் போல் அமர்ந்திருந்தான் பாலா... யோசிக்கக்கூட முடியாமல்...

கதறியவளைப் பார்த்தபடி இருந்தான் பாலா... என்ன சொல்வது... என்ன செய்வது... காதலையும் சொல்லிவிட்டாள்... ஆனால் வாழவும் முடியாதென்றால்... திணறித்தான் போனான் பாலா... அவளுக்கு ஆறுதல் சொல்லும் வகையில் அவள் தலையைத் தடவியபடி அமர்ந்திருந்தவனின் மனதில் மீண்டும்... பூமாரியைப் பொழிகிறேன் என்று அமில மழையைப் பொழிந்தாள் கீர்த்தி.

சில நிமிடங்களில் அழுகையை நிறுத்தியவள்... முகத்தை நன்றாக அழுந்தத் துடைத்தாள்.

எதுவும் சொல்லாமல் அமர்ந்திருந்த கணவனைப் பார்த்தவள்... அவன் முகம் பற்றித் தன்னிடம் திருப்பினாள்... தீர்மானம் செய்தவளாய்...



"நான் எதுக்கு இதுக்குப் போய் அழணும்... எனக்கு உங்க கூட வாழணும்... நான் முடிவு பண்ணிட்டேன்... பாலா... என்னை நாளைக்கே... ஒரு சைக்காலஜிஸ்ட்ட கூட்டிட்டுப் போங்க... அவங்க எனக்குக் கண்டிப்பா கவுன்சிலிங் கொடுப்பாங்க...

"கவுன்ஸ்லிங்ல கூட என்னால் முடியலேன்னா... ஹாஸ்பிட்டல்ல தங்கி ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிறேன் பாலா. கண்டிப்பா மனசு மாறும்னு நினைக்கிறேன்... பைத்தியத்துக்கு வைத்தியம் தேவைதான் இல்லையா...?" என்று நோகாமல் இடியை இறக்கியவளைக் கட்டியணைத்துக் கதறும் முறை பாலாவாய் ஆனது...

கீர்த்தி இம்முறை அழவில்லை.

அவனோடு வாழ முடியாதோ... அவனின் தேவைகளைத் தீர்க்க முடியாதோ என்ற ஏக்கம் தான் அவள் விழிகளில் இருந்தது.

கம்பீரமாய் மட்டும் இருந்தவன்... ஆண்மகனாய் எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் கண்ணீரைத் தனக்குள் அடக்கும் வித்தை அறிந்தவன்... தன் மனைவியின் மனநிலை அறிந்து... அத்தனையும் மறந்து கதறினான்.

கதறியவனைத் தடுக்கும் வழி தெரியாமல்,

"பாலா... 10 நாள், இல்லை... ஒரு மாசம்... எல்லாம் சரி ஆகிடும் பாலா... நாம நாளைக்கே நல்ல டாக்டர்கிட்ட கவுன்சிலிங் போகலாமா...?" என்றவளைப் பார்த்து... அழுகையை நிறுத்தியவன்... அவளைத் தன்னிடமிருந்து விலக்கி... அவள் முகத்தைத் தன் கைகளால் தாங்கியவன்,

"ஏய்ய்ய்ய்ய்... இப்போ என்ன ஆகிருச்சுனு... இந்த மாதிரிலாம் உளர்ற... எவ்வளவோ நாளிருக்கு... உனக்கும் எனக்கும்... அப்படி என்ன வயசாகிப் போச்சு... பார்க்கலாம்... கண்டிப்பா... நீ மாறுவடா... நீ இந்த அளவுக்கு இறங்கி

வந்துருக்க... அதுவே போதும்... சீக்கிரம் என்னோட வாழ ஆரம்பிப்ப... எனக்கு நம்பிக்கை இருக்கு கீது!" என்று தீர்மானமாகச் சொன்னவனிடம் பிடிவாதம் பிடித்தாள் கீர்த்தி...

"எனக்குச் சுத்தமா நம்பிக்கை இல்லை பாலா... ப்ளீஸ்... அட்லீஸ்ட் ஒரு ட்ரையாவது பண்ணலாம்..." என்று கெஞ்ச... மனைவியிடம் என்று அவன் பேச்சு வென்றிருக்கிறது...?

"சரி," என்று தாங்க முடியாத பாரத்துடன் தலை ஆட்டினான் பாலா.

அவனிடம் பேசி ஜெயித்தவள், எல்லாம் பேசி முடித்து விட்டோம் என்று நினைத்தவள் போல் அவனைப் பார்த்துச் சிரித்து...

"பாலா... இந்த வினோத் இருக்கான்ல... அவன் எனக்குத் தப்பா பேர் வச்சுட்டான்... கீர்த்தி - குறத்திய விட கீர்த்தி-கிறுக்கினு வச்சுருந்துருக்கலாம்... இதுதான் எனக்குப் பொருத்தமா இருக்கு இப்போ...!" என்று சொல்ல...

கணவனோ அவனுக்குள் இறுகிக் கொண்டிருந்தான்... அவளின் ஒவ்வொரு வார்த்தையிலும்...

ஒரு வழியாக... கோபம், துக்கம், வருத்தம், ஏக்கம், தவிப்பு, மகிழ்ச்சி, சஞ்சலம் எனத் தன் உணர்வுகளை எல்லாம் அன்றோடு வடித்தவள்...

தன் பாரம் எல்லாம் இறக்கி வைத்தவளாய்... நீண்ட நாள்களுக்குப் பிறகு நிம்மதியாகத் தன்னவன் மடியிலேயே துயில...

கலைந்திருந்த அவள் சேலையை எல்லா விதத்திலும் சரி செய்து... வாகாய் அவளை உறங்கச் செய்தவனுக்கு... அலங்கோலமாய்க் கலைந்து போயிருக்கும் தங்கள் வாழ்வைச் சரி செய்யும் வழி தெரியவில்லை.



பட்டாம் பூச்சியாய்ப் பறந்து கொண்டிருந்தவளை... சிறகுகளைப் பிய்த்துப் புழுவாய்த் துடிக்க விட்டுவிட்டோமோ என்று மருகினான்.

இருள் நிறைந்த தன் வாழ்க்கையை... மனைவியோடு அதைக் கடக்கும் வழி தெரியாமல் தடுமாறினான்.

தங்களைச் சுற்றித் துக்கம் என்னும் கடல் சூழ... அதை அவளோடு நீந்திக் கரை ஏறும் முறை தெரியாமல் மூச்சுத் திணறினான் பாலா...

மதுவின் காதலனாய் அவன் செய்த செயல்கள் எல்லாம்... கீர்த்தனாவின் கணவனாக மாறியபோது திரும்பி வந்து அவனையே குத்திக் கூறாக்கின.

பல திட்டங்கள் போட்டுக் கீர்த்தனாவின் வாழ்க்கையை நாசமாக்கியவனுக்கு... அதை நேராக்க நினைக்கும் போது... அவனை விட்டுத் திட்டங்கள் ஓடி மறைந்து கொண்டன... அவன் மூளை செயலிழந்தது போல் இருந்தது. எதை வரமென்று... பூரித்திருந்தானோ... அது... நினைக்கும் போதே கலங்கினான்.

ஆம்... மதுவின் காதல் தனக்குக் கிடைத்த சாபம் என்று தன் மனைவியின் நிலைமையில் மனம் புழுங்கினான் பாலா.

கடைசியில் அவளுக்குத் தன்னால் கிடைத்தது பைத்தியக்காரப் பட்டமா என்ற பாரம் அவனைத் தாக்க... தூக்கம் மறந்து... துக்கம் கலங்கடிக்க... துடிக்க ஆரம்பித்தான் பாலா...

எப்போது உறங்கினான் என்று அவனுக்கே தெரியவில்லை...

அவர்கள் இருவருக்கும் மேலே... நேசம் மட்டுமே தவழ்ந்த மைதிலி-ராகவன் முகமோ... நல்லவேளை... காலம்

தங்களை... தங்கள் மகளின் இந்தக் கோலத்தைப் பார்ப்பதிலிருந்து காப்பாற்றி விட்டது என்று சிரித்தபடி இருந்தது.

# 48

உட்கார்ந்த நிலையிலேயே உறங்கியிருந்த பாலாவின் மேல் எதுவோ விழ, சட்டென்று பாலா விழித்துப் பார்த்தான்.

அது மைதிலி - ராகவன் புகைப்படத்தில் இருந்த மாலை அறுந்து அவர்கள் மேலே விழுந்திருந்தது.

பாலாவுக்கு ஒரு நிமிடம் புரியவில்லை... மூளை சிந்திக்கும் திறனைத்தான் நேற்றே இழந்துவிட்டதே...

ஆனாலும்... அடுத்த நிமிடமே அவர்கள் ஆசிர்வாதம் கொடுத்தது போல் அது தோன்ற... மனதுக்குள் தன்னை எண்ணி ஏளனமாகச் சிரித்தான்.

"உங்க பொண்ணத்தான் நான் கொன்னுட்டு இருக்கேனே... எனக்கு இந்த ஆசிர்வாதம் எதுக்கு... நீங்க உயிரோட மட்டும் இருந்திருந்தா... உங்க பொண்ணு நிலைமையப் பார்த்திருந்தா... கடவுளே..." என்றவனுக்கு... ஒரே நிலையிலேயே உட்கார்ந்திருந்த நிலை... இப்போது வலிப்பது போல் தோன்ற... எழுந்தான்.

தன் மேல் சாய்ந்து படுத்திருந்த மனைவியைத் தூக்கியவனுக்கு... கைகளின் நேற்றைய காயம் வேறு விண்ணென்று தெறிக்க... தன் முகத்தின் அருகில் தெரிந்த மனைவியின் முகத்தில் தெரிந்த அமைதி... அதன் பின்னே இருக்கும் எரிமலை உணர்ந்தவனுக்கு... கைக் காய வலி பின் செல்ல... மனம் வலிக்க ஆரம்பித்தது.

சிறு அசைவில்கூட எழுந்துவிடுபவள் கீர்த்தனா... அது பாலாவுக்கும் தெரியும்... ஆனால் இன்று... உறக்கம் சற்றுக்



கலைந்த போதும்... எழாமலே... அவன் மேலேயே மீண்டும் ஒன்றியவளை... குழந்தையைப் போல் துஞ்சியவளை... பார்த்தவனுக்கு... தன்னை... அவனை மறந்து... அவளின் நெற்றியில் முத்தம் வைக்க...

அவளோ விலகாமல் இன்னும் அவனோடு ஒன்றினாள்... 'பாலா' என்ற சிணுங்கலோடு...

அவள் மனம் உறக்கத்திலும் தன்னைத் தேடுகிறது... தன் தொடுதலைப் புரிந்து அதற்குச் சம்மதம் சொல்கிறது... இதை உணராமல் இருக்கிறாளே என்று கோபம் வேறு வந்து தொலைத்தது.

நெற்றியில் முத்தமிட்டவனின் மனம் அடங்காமல்... அவள் கன்னங்களைக் குறி வைக்க... அதற்கும் இசைந்து கொடுத்தாள் - உறக்கத்தில் அவன் மனைவி...

அவன் உணர்வுகள் ஆட்டிப் படைக்க ஆரம்பிக்க... அடுத்து இதழ் என்று அவனையுமறியாமல்... அவளை நோக்கிக் குனிந்தான் பாலா...

ஆனாலும்... தன் உணர்வில் இல்லாமல் உறக்கத்தில் இருக்கும் மனைவியிடம்... அவன் ஆண்மையைக் காட்ட விரும்பாமல்... அவளுக்காகக் காத்திருப்போம் என்று முடிவு செய்தபடி... அவளைக் கட்டிலில் கிடத்தியவன்... அந்த அறையைப் பார்க்க... அங்கிருந்த அலமாரியில் பொருள்கள் கலைந்து கிடந்தன. டைரியை எடுத்தால் என்ன என்று நினைத்தான்.

எல்லாவற்றையும் சரி செய்து அதை அதை அந்தந்த இடத்தில் வைத்தவனுக்குத் தூக்கம் சுத்தமாகத் தொலைந்திருந்தது... மணி 5 தான் ஆகி இருந்தது.

வெளியே வந்தவன்... சிறிது நேரம் அமர்ந்திருந்தான்... உலாவினான்... டிவி பார்த்தான்... ஆனால் மனம் எதிலும் அடங்கவில்லை... காரை எடுத்துக்கொண்டு

வெளியே போகலாம் என்றால் கீர்த்தியைத் தனியே விட்டுச் செல்ல மனம் வரவில்லை... கண்களைச் சுழல விட்டு... பார்வையை ஹாலுக்குள் ஓட்டியபடி இருக்க... அவன் தூக்கி எறிந்த டைரியின் மீது பார்வை பட... அவள் என்ன கணக்குப் போட்டாள்... என்று தெரியத் துடித்தது.

கோபம் வேறு வந்து தொலைக்க... வலித்த மனதை அடக்கியபடி... அதைச் சென்று எடுத்தவன்... அதைப் பிரித்துப் பார்க்க ஆரம்பித்தான்... எந்தப் பக்கமும் எழுதப்படவில்லை... மீண்டும் ஒருமுறை வேகமாக முழுமையாகப் பார்த்தவன்... சும்மா அவனை மிரட்டி இருக்கிறாள் என்ற உண்மை புரிய...

"ராட்சசி... வெறும் டைரிய கொண்டு வந்து நீட்டிவிட்டு... பேங்க் மேனேஜர் பொண்ணாம்... கணக்கைத் தப்பா போட மாட்டாங்களாம்... அப்பா... என்ன மாதிரி பேசுறா... துடிக்க வச்சுட்டா..." என்று நினைத்தவனுக்கு,

அவள் பேசியது எல்லாம் கொஞ்சம் அதிகப்படி என்று தோன்ற... தன் அலுவலகத்தில் பணிபுரிந்த கீர்த்தனாவாக அவளை நினைத்துப் பார்த்த பாலா...

"அப்படியே சாந்த சொரூபி போல் சீன் போடுவா... மத்தவங்க முன்னாடி... என் பொண்டாட்டி... தொட்டா சிணுங்கி..." என்று மனதுக்குள் சிரித்தான்.

அவளின் தற்போதைய நிலை அவனுக்குக் கவலையைக் கொடுக்கவில்லை... காலம் அவளை மாற்றும் என்று நினைத்தான்... தன் காதல் அவளை மாற்றும்... அவள் மனம் கண்டிப்பாக மாறும் என்றே தோன்றியது...

உறக்கம் மறந்த நிலையில் அவனுக்கு அவள் இசைந்து கொடுத்தது ஞாபகம் வர அவள் மனமும்... உடலும்... அவனிடம் மட்டுமே சரணடையும் எந்தச் சூழ் நிலையிலும் என்பதைப் புரிந்தவனுக்கு இதழில் குறுநகை வந்தது.



அதே நேரம்... நினைவு வராமல் தடுக்க முடியவில்லை... அவனால் தன் மனைவியின் உணர்வுகளை எண்ணி... அலசி ஆராய்ந்து கொண்டிருந்தவனின் மனது, 'மது' என்று அதிர்ந்தது... அவளுக்கு ஏதாவது... நினைக்கும் போதே சத்தியமாய் அப்படி ஏதாவது நடந்திருந்தால் அவள் உயிரோடிருக்கமாட்டாள் என்று தோன்ற, நடந்திருக்காது... அவள் உயிருடன் இருந்தால் அவள் மானத்திற்கும் பங்கம் வந்திருக்காது. அந்தயும் மீறி...

"நினைக்காதே... அவளுக்கு ஒன்றும் ஆகி இருக்காது... அவளை வேறு யாராலும் அணுக முடியாது..." என்று மனதிற்குள் கடந்த பல வருடங்களாய்ச் சொல்லிய ஆறுதலை மீண்டும் சொல்லித் தேற்றப் பார்க்க... வெகு நாட்களுக்குப் பிறகு... மதுவின் நினைவுகளும் அவனை ஆட்டுவிக்க ஆரம்பித்தன...

தான் கீர்த்தனாவுடன் பரிபூரணமாக வாழ வேண்டு மென்றால்... மது திரும்பக் கிடைக்க வேண்டும் என்று மனம் வேண்ட ஆரம்பித்தது...

தான் எப்படிக் கீர்த்தனாவின் மேல் இத்தனை காதல் கொண்டேன் என்று அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது... மதுவின் காதலின் வலிமை அவன் உணர்ந்தவன்... அவளையே மறக்கடிக்கும் அளவுக்கு இவளிடம் என்ன உள்ளது... யோசித்தவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை...

மது போல் இவள் ஒன்றும் அவனைத் துரத்தித் துரத்திக் காதலிக்கவில்லை... காதலைக் கூட மனதுக்குள் வைத்திருந்தாள்... ஆனாலும் எதுவோ ஒன்று அவர்களைப் பிணைத்து வைத்திருக்கிறது... இருவரும் விலகி எத்தனை தூரம் இருந்தாலும்... இல்லை... சென்றாலும்... பிடித்து இழுத்துச் சேர்க்கும் அது எது என்று யோசித்துக் கொண்டேதான் இருக்கிறான்... மூன்று முடிச்சில் அமைந்த திருமண பந்தமா... பதில்தான் கிடைக்கவில்லை.

அவன் இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்போதே, தூக்கம் விழித்தாள் கீர்த்தனா... விழித்தவள்... கணவனை அருகில் காணாமல் எழுந்து வெளியே வந்தாள்...

கையில் நேற்று அவள் கொடுத்த டைரியுடன் அவன் இருப்பதைப் பார்த்த அவள்... லேசாய்ப் புன்னகைக்க, அவனோ முறைத்தான்.

அவன் அருகில் வந்து அமர்ந்தவள்... அவன் காயம்பட்ட அவன் கையில் நிலையைச் சரிபார்த்தபடியே...

"டைரிய கொடுத்தப்பவே பிரித்துப் பார்த்திருக்க வேண்டும்... இல்ல, என்னை நாலு அறை விட்டிருக்க வேண்டும்... அத விட்டுட்டு... கைல சுட்டுக்கிட்டு... சின்னப் புள்ள மாதிரி..." என்றவளை,

"நான் சின்னப் புள்ளத் தனமா... ஆனா நீ பேசின பேச்சுக்கெல்லாம்... அப்படியே இழுத்துக்கிட்டு விடணும் போலத்தான் இருந்தது..." என்று கேட்க,

"அப்படியா... அப்போ இப்போ விடுங்க... ஆனா வலிக்காம..." என்று கன்னத்தைக் காட்ட...

"படுத்துறடி... ஆனாலும்... ஐ லவ் யூ டி... இப்படிலாம் எங்க இருந்து பேசக் கத்துக்கிட்ட... பேசாம வக்கீலா போயிருந்துருக்கலாம்... நீ நடந்துகிட்டதெல்லாம் சத்தியமா உன்கிட்ட இருந்து எதிர்பார்க்கல!" என்று கூறியபடி கணவனாய் அவளைத் தன்னோடு சாய்த்தான்.

"ஆனா நாம பேசுகிற வார்த்தை எப்படி ஒருத்தவங்களக் கொல்லும்னு எனக்கு நல்லா புரிய வச்சுட்ட கீது... நான் எத்தனையோ தடவை எத்தனையோ பேர குதறியிருக்கேன்... அதுக்குத்தான் கடவுளா பார்த்து நல்லா திருப்பிக் கொடுத்துருக்கான்..." என்றான் மதுவின் நினைவில்.

தான் நேற்று நடந்து கொண்ட முறை எண்ணித் தலை குனிந்தாள் அவள்.



"என்னைய ரொம்ப செல்லம் கொடுத்து வளர்த்துட்டாங்க பாலா. அம்மா... அப்பா... வினோத்... அத்தை மாமானு... நான் என்ன சொன்னாலும் கேட்டு... எனக்கு எந்த ஒரு கஷ்டமும் வரக்கூடாதுன்னு பார்த்துப் பார்த்துச் செஞ்சு... எனக்குக் கஷ்டம் வரும் போது அதைத் தாங்கிக்க மனப் பக்குவம் வராம பண்ணிட்டாங்க பாலா...

"ஒருவேளை அப்படி என்னைப் பழக்கி இருந்தாங்கன்னா... நான் பணத்துக்காக இந்த வழிய தேர்ந்தெடுத்திருக்காமல் இருந்திருப்பேன் என்று நினைக்கிறேன் பாலா... நான் நேற்றுப் பேசியது எவ்வளவு அசிங்கமோ... அதேபோலத்தான் பணத்துக்காக உங்களைத் திருமணம் செய்ததும்... கொஞ்சம் யோசித்து இருந்தால் கண்டிப்பா வழி கிடைத்திருக்கும்...

"அவசரம்... அப்பாவைக் காப்பாற்ற வேண்டும்... அதுதான்... அதிலிருந்து மீளுவது எப்படி... வேறு வழி என்ன என்று நான் யோசிக்கவே இல்லை பாலா... வேற யார்கிட்டேயாவது மாட்டியிருந்தா... என்ன பண்ணி யிருந்திருப்பேன்... லேசுல கோபம் வராது எனக்கு... இல்ல, பிடிவாதம் பிடிக்கமாட்டேன்... வந்தா... இந்த மாதிரி எல்லை மீறிருவேன்...

"அம்மா கொஞ்சம் கண்டிப்பானவங்க... அப்பா சுத்தம்... அது போறதுக்காக என்ன டைவர்ட் பண்ணத்தான் பார்ப்பாரே தவிர, அது தப்புனு சொல்லமாட்டார்... வினோத், அத்தை மாமாவ யூ.எஸ்.க்கு கூட்டிட்டுப் போன பின்னால நான் ஆடுன ஆட்டம் இருக்கே... என் பேச்சைக் கேக்காம விட்டுட்டுப் போய்ட்டாங்கன்னு நான் பண்ணின அலம்பல் இருக்கே... அதுக்கப்புறமா என் மனச மாத்த டிரிப் ஒண்ணு போட்டு... அங்க..." என்றவளிடம்,

தலை சாய்த்து, "உனக்குக் கோபம் வராது... வந்தா இப்படி ஆகிடுவ... இதுதானே சொல்ல வருகிறாய்... உனக்கு

அப்படி... ஆனா எனக்கு அடிக்கடி கோபம் வருமே... என்ன பண்றது..." என்று கண் சிமிட்ட

"அடிச்சிடுங்க..." என்றாள் சாதாரணமாக.

"உன்னையவா... நேத்தே உன்னைப் பின்னி பெடல எடுத்துருக்கணும்... என்னால முடியல கீது... எப்டிடி ராட்சசி இப்படி ஆக்குன... மாமா விட்ட வேலையத்தான் நான் பார்த்துட்டு இருக்கேன்... அதாவது நானும் செல்லம் கொடுத்துக் கெடுத்து வச்சுருக்கேன்!" என்று கொஞ்சியவனிடம், அதுவரை இருந்த நிலையை மாற்றுவது போல்,

"பாலா... என்னைக்கு ஹாஸ்பிட்டல் போகலாம்?" என்று கேட்க, முகம் மாறினான் பாலா... இறுகிய மனதோடு...

"கீர்த்தி! ஹாஸ்பிட்டல்லாம் வேண்டாம்... நீ மாறிருவ... அது எனக்கே தெரியுது... உனக்குப் புரியுதா... இந்த அளவுக்கு நெருங்கி வருகிற உன்னால முடியும் கீது!" என்று சொல்ல...

"ப்ளீஸ் பாலா... என்னால முடியாதுனு எனக்குத் தோணுது," என்றவள், உம்மென்று முகத்தைத் தூக்கி வைத்துக்கொள்ள...

யாரோ ஒரு மூன்றாம் மனதரின் வார்த்தையில் மனம் மாறும் என்று நம்புபவள்... ஏன் அவன் காதலில் நம்பிக்கை வைக்கவில்லை என்று மனம் வலித்தது.

"சரி... சரி, போகலாம்..." என்று அவளுக்காகச் சொன்னான்.

"ஆனா அதுக்கும் முன்னால இன்னொரு இடத்துக்குப் போகலாம்..."

"எங்க...?" என்று கேட்டவளை...

"எங்கேனு சொன்னாத்தான் வருவியா...?" என்று முறைக்க,



எதுவும் கேட்காமல்... தயாராகப் போனாள் கீர்த்தனா.

பாலாவின் மனமோ ஊமையாய் அழுது கொண்டிருந்தது... மனைவியின் முடிவில் சுத்தமாய் விருப்பம் இல்லை.

தன் எண்ண ஓட்டத்திலே இருந்தவனுக்கு அவனது மொபைலில் அழைப்பு வர... எடுத்தான்.

"ஹலோ" என்று சொல்லும் முன்...

"என்ன பாலா... எங்க இருக்கீங்க ரெண்டு பேரும்... ஒருத்தன் இங்க அடிபட்டுக் கிடந்தானே... என்ன ஆச்சு... ஏது ஆச்சு... சரி, அதை விடு... கீர்த்தியப் பத்தி நான் சொன்னேனே... அதுக்காகவாவது வந்து என்ன... ஏதுனு பார்க்க வந்தீங்களா... புருசனும் பொண்டாட்டியும். நாங்க ரெண்டு பேரும் உங்களுக்காக நேற்றிலிருந்து வெயிட்டிங்..." என்ற போதே...

"சாரி சாரி வினோத்... ஆக்சுவலா... நானும் கீர்த்தியும்... உன்னைப் பார்க்க வரலாம்னுதான் இருந்தோம்... கீர்த்தி அப்பாகிட்ட வேற பேசலாம்னு இருந்தேன்... ஆனா நேத்து என்னால வர முடியல..." என்றவனிடம்,

"ரொம்ப ஃபீல் பண்ணாத... நானே கீர்த்தி அப்பாகிட்ட பேசிட்டேன்... எங்க வீட்லயும் சொல்லிட்டேன்... அது உங்க அப்பா - அம்மா வரைக்கும் தெரியும்," என்ற போது,

"ஆ" என்று வாய் பிளந்து அமர்ந்திருந்தான் பாலா.

"எப்படி வினோத்... கீர்த்திய வீட்ல விட்டுட்டு. ஆன்ட்டியும்... அங்கிளும் கீர்த்தியப் பற்றி எதுவும் கேட்கலயா...?" என்று கேட்க.

"எனக்குக் கூட ஆச்சரியம் தான் பாலா... அப்பாவும் அம்மாவும்... சந்தோசம்தான் பட்டார்கள்... என்னவோ

எதிர்பார்த்திருந்ததைப் போல..." என்று கூறியவனுக்குத் தெரியவில்லை. அவன் பெற்றோர் தான் ஏற்கெனவே ஓரளவு அறிந்ததுதானே... கொஞ்சம் நம்பிக்கை இல்லாமல் இருந்திருந்தனர். அவ்வளவுதான்...

"வினோத்! சான்ஸே இல்லை... எப்படிடா?" என்று இன்னும் நம்பாமலே கேட்டான்.

"ஒரு தடவ தான் பாலா விழ முடியும்... அதுக்கப்புறம் சுதாரிச்சுக்க வேண்டும்... இந்த தடவை காலம் எனக்குக் கொடுத்த வாய்ப்பை இழக்கக் கூடாதுன்னு முடிவெடுத்து விட்டேன். முடிவெடுத்த பின்னால யாருக்காகவும் எதற்காகவும் கீர்த்தியை விட்டுக் கொடுக்கக்கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன்... அதுதான்... உன்னைக் கூட எதிர் பார்க்காமல் நானே பேசிவிட்டேன்... கீர்த்தி வீட்ல ஒரே சந்தோசம் தான் பாலா... அவ அப்பாவோட கூட பேசிட்டா பாலா... நான் அவள... சந்தோசமா வைத்துக் கொள்ள வேண்டும்!" என்று சொன்னவனிடம்,

"தேங்க்ஸ் வினோத்... கீர்த்திய நீ இந்த அளவு நேசிக்கிறதுக்கு நான் நேற்றே வந்து பார்த்திருக்கணும்... கீர்த்திகிட்ட வேற இன்னும் பேசல... நேற்றுக் கொஞ்சம்..." என்று தடுமாறி... "பிஸி" என்றவனிடம்,

"கவி போன் பண்ணினா... எனக்கு..." என்றான் எல்லாம் தெரியும் என்பது போல...

லேசான வருத்தத்தோடு... "நேத்து ஆபீஸ்ல நடந்தத கவி சொல்லிட்டா... ஆனா... வீட்டுல கீர்த்தி என்ன பேசி யிருப்பான்னெல்லாம் தெரியாது... ஆனா கண்டிப்பா ஆட்டம் ஆடியிருப்பான்னு மட்டும் எனக்குத் தெரியும் பாலா...

"அவ கோபம் வந்தா அவகிட்ட நெருக்கமானவங்க கிட்ட மட்டும்தான் காண்பிப்பா... அப்படிப் பார்த்தா... உன்னை எந்த அளவுக்கு விரும்பி இருப்பாளோ அந்த அளவுக்கு



ஆடியிருப்பா... ஆனா எதை வச்சு மலை இறக்குன பாலா அந்த மாரியாத்தாவ!" என்ற அவன் குரலில் உண்மையிலேயே கேலியை விட வருத்தம்தான் இருந்தது.

தொடர்ந்தான்.

"சாரி பாலா... உனக்கு இது புதுசுன்னு நினைக்கிறேன்..."

"என் கீர்த்திக்காக நீ சாரி கேட்பாயா... அவ என்னை எவ்வளவு வேணும்னாலும் பேசலாம்... அது அவளோட உரிமை!" என்று பாலா கோபத்துடன் அதே நேரத்தில் சிறு குழந்தை போல் பேச...

சிரித்தான் வினோத்.

"சரிப்பா. உங்க புருசன் பொண்டாட்டி விவகாரத்துல இனி நான் வரல... எனக்கே இனி நேரம் பத்தாது...' என்றவன்.

"மீண்டும் சாரி... இது அவ நேத்து பேசினதுக்காக இல்லை... அவள நாங்க வளர்த்த முறைக்காக... கண்டிப்பா... அவ உன்னைக் குத்திக் கிழிச்சுருப்பா பாலா... நான் எத்தனை முறை உனக்குப் போன் பண்ணி இருக்கிறேன்... ஆனா அதை எல்லாம் எடுக்கவே இல்லை எனும் போதே தெரியுது... நீ எந்த நிலையில் இருந்திருப்பாய்?" என்ற போது,

பாலா... என்றபடி கீர்த்தி கிளம்பி வெளியே வர...

உடனே வினோத்...

"பாலா... இப்போ நான்தான் பேசுறேனு சொல்லி... உடனே என்கிட்ட பேசாம உன்கிட்ட பேச்சு என்னன்னு குதிப்பா பாரு!" என்று சொல்ல... அவன் சொன்னது போலவே,

"யார்கிட்ட பேசிட்டு இருக்கீங்க...?"

"வினோத்!" என்றான் அவளையே பார்த்தபடி...

"வினோத்தா... அவனுக்கு உங்ககி..." என்று ஆரம்பித்தவள்... கணவனின் அடக்கிய சிரிப்பு தெரிய...

அவர்கள் இருவரும் தன்னை ஏதோ கேலி செய்கிறார்கள் என்று புரிய...

போனைப் பறித்தவள்...

"டேய்... இவருகிட்ட என்ன காலையிலேயே... போய் உன் ஆளுகிட்ட போய்ப் பேசு..." என்றபடி பேச ஆரம்பிக்க, அவளிடம் சிரித்தபடியே தன் விசயங்களைச் சொல்ல... கீர்த்தனா மிகவும் சந்தோசமானாள்... பேசி முடித்து இருவரும் தயாராகி வீட்டை விட்டு வெளியேறி இருந்தனர்.

பாலா வெளியில்தான் பேசினான்... சிரித்துக் கொண்டிருந்தான்... மனமெங்கும் அவளை கவுன்சிலிங் கூட்டிப் போகாமல் எப்படித் தடுப்பது என்ற யோசனை தான் இருந்தது... அங்கு கூட்டிப் போய்த்தான் அவள் தன்னோடு வாழ்வாள் என்றால் அப்படி ஒரு வாழ்க்கை வேண்டவே வேண்டாம் என்றுதான் நினைத்தான்... ஏனோ அது அவனுக்குப் பிடிக்கவில்லை... அது மட்டுமே அவனை ஆட்கொண்டிருக்க, தன்னிலை மறந்தவனாய் ஆனான்.

அதன் விளைவு... அவன் ஒவ்வொரு செயலிலும் பிரதிபலிக்க ஆரம்பித்தது. கார் கீயை வீட்டிலேயே விட்டுவிட்டு இறங்கி வந்து பின் மீண்டும் எடுத்து வந்ததில் இருந்து... இடது பக்க இண்டிகேட்டர் போட்டு... வலது பக்கம் காரைத் திருப்பித் திட்டு வாங்கியதில் என்று தன் நிலை மறந்திருந்தான்... கொஞ்சம் தாமதமாகத்தான் கணவனைக் கவனிக்க ஆரம்பித்தாள் கீர்த்தி... அவளுக்கும் அது ஏனென்று புரிய...

"பாலா... ப்ளீஸ் இப்படி முகத்தை வச்சுருக்காதீங்க... நீங்க இவ்வளவு ஃபீல் பண்ணுவீங்கனு தெரிந்திருந்தால்... உங்ககிட்ட சொல்லாம நான் தனியாவே போய் இருந்திருக்கலாம்," என்றவளிடம்,



"அம்மா... தாயே... எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்லிட்டுச் செய்... நான் வருத்தப்படுவேன்... ஃபீல் பண்ணுவேன்னு சொல்லிட்டு நீயே முடிவு பண்ணிக்கிட்டு எதுவும் செய்து வைக்காதே... துக்கமோ... சந்தோசமோ... எதுவா இருந்தாலும் என்னிடம் சொல்லிவிடு..." என்றவனிடம் தலையை வேகமாக ஆட்டியவள்...

பின்னொரு நாளில் அவன் சொன்னதை மறந்து ஆபத்தில் மாட்டிக் கொண்டாள்... அவன் கோபத்திற்கும் ஆளானாள்.

அவன் நிறுத்திய இடம்... பிரபல நகைக் கடையின் முன்... காரைப் பார்க் செய்யச் சற்று சுற்ற வேண்டியிருக்க... அவளை இறக்கி விட்டு அவன் மட்டும் சென்றான்...

கீர்த்தனா அவன் வரவை எதிர்பார்த்துக் கடையின் உள்ளே செல்லாமல் வெளியிலேயே நின்று கொண்டிருந்தாள்... அப்போது,

"அம்மா... என்னால அவனோட வாழ முடியாது... எனக்கு நரகம்தான் அது," என்று சத்தமாகப் பேசிக் கொண்டிருந்தாள் ஒரு பெண்.

அங்கு நின்று கொண்டிருந்த அத்தனை பேருக்கும் அது கேட்கிறது என்ற உணர்வே இல்லாமல் உணர்ச்சி மயமாய்ப் பேசிக் கொண்டிருக்க... கீர்த்தியின் காதிலும் அது விழுந்தது.

ஏதோ பிரச்சனை போல... காதலித்து மணந்தவன் போல அவளது கணவன்... அவள் பேசிய விதத்திலேயே கீர்த்திக்குப் புரிந்தது...

"இல்லமா... அவன் எவ்வளவுதான் எனக்குப் பார்த்துப் பார்த்துச் செஞ்சாலும் எனக்கு மறக்க முடியல... ஆற மாட்டேங்குது... நான் உங்க கூடவே வந்து விடுகிறேன்..." என்று அந்தப் பெண் இன்னும் ஏதேதோ பேசிக் கொண்டிருக்க...

எல்லாருடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒரு பிரச்சனை... என்று கீர்த்தி நினைத்தபடி, பாலா கண்ணில் படுகிறானா என்று சாலலையை நோக்க...

திடீரெனச் சாலையில் ஒரே பதற்றம்... யாருக்கோ விபத்து... அனைவரும் பதறி ஓட... கீர்த்தனாவுக்கும் பதறியது...

"பாலா வேறு போனாரே... ரெஸ்ட்லெஸ்ஸா இருந்தாரே... ஆக்ஸிடெண்டை நினைத்தாலே தலை சுற்றும் அவளுக்கு... அவள் பெற்றோர் நினைவில்... இருந்தும் பாலாவின் நினைவில் பதற்றமுடன் போக... அங்கு சற்று முன் பேசிய பெண்ணின் கணவன் போல்... தலையில் அடிபட்டிருக்க... கொஞ்சம் பெரிய அடிதான்... ஆனால் உயிர் இருந்தது... காப்பாற்றி விடலாம் என்று தோன்றியது கீர்த்திக்கு...

அவனைக் கட்டிப் பிடித்துக் கதறிய அவளைப் பார்த்தவளுக்கு... சற்று முன் அவள் பேசிய விதமும்... இப்போது அவள் நிலைமையும் தோன்ற வருத்தமாகவும் பதற்றமாகவும் அவளையே பார்த்தபடி நின்றிருந்தாள் கீர்த்தி.

அதன் பின் உடனடியாகக் காவல்துறை வந்து அடிபட்ட அந்தப் பெண்ணின் கணவனையும், அவளையும் மருத்துவமனைக்கு அனுப்பியது... கூட்டத்தையும் கலைத்து விட்டது.

எல்லாம் சில நிமிடத்தில் நடந்து முடிக்க... இப்போது மீண்டும் அனைவரும் தங்கள் இயல்பு நிலைக்கு மீள... ஆனாலும் ஒவ்வொருவர் மனதிலும் அந்த விபத்தே இருக்க... அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது கீர்த்தியின் அருகில் இருந்த பெண்மணி சொன்னார்... அருகில் இருந்த இன்னொரு பெண்ணிடம்...

"என்ன பேச்சு பேசிகிட்டு இருந்துச்சு அந்தப் பொண்ணு... அவ்வளவு ஆக்ரோசமா, வாழ மாட்டேன்னு...



ஆனா பாரு அவனுக்கு ஆக்சிடெண்ட் ஆன வுடனே கதறுது..."

"இப்போ இருக்கற பொண்ணுங்க எல்லாம் வாழ வழி பல இருந்தும்... அத தெரிந்து வாழத் தெரியல... ஈகோதான்... எல்லாம் முடிஞ்ச பின்னால வருந்துதுங்க... இப்போ அந்தப் பையனுக்கு ஏதாவது ஆகி இருந்தா... வாழ்க்கைய இருக்கும் போது அனுபவிக்காம... அப்புறம் அய்யோ அம்மானு கதறி என்ன பிரயோசனம்?" என்று அவள் பேசப் பேச...

கீர்த்தியின் மனதில் சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது. அந்தப் பெண்மணி அவளுக்குத் தன் மனதைப் புரிய வைத்த கடவுள் போல் தோன்றினாள்.

தன் பிடிவாதம் எல்லாம் எங்கோ பறந்து போவது போல், அவளை விட்டு விலகுவது போல் இருந்தது... மதுவைக் காதலித்த பாலாவே அனைத்தையும் மறந்து அவளோடு வாழக் காத்திருக்கும் போது... எங்கோ இருக்கும் மதுவுக்காக... பிடித்திருந்தும் வாழ முடியாமல் வீம்பு பிடித்த அவள் மனதில்...

அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாத வாழ்க்கையில்... இருக்கும் நிமிடத்திலாவது மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று தோன்ற... அந்த நிமிடம்... அவள் மனக்கதவு அவள் கணவனுக்காகத் திறந்தது... அந்தப் பெண்மணியின் ஒவ்வொரு வார்த்தையுமே அவளுக்குப் போதுமானதாய் இருக்க... மனதை மாற்ற அவளுக்கு வேறு எதுவும் தேவைப்படவில்லை. அவளுக்கு வேறு எதுவும் இப்போது தடையாக இருக்கவில்லை...

அப்போதே... அந்த நிமிடமே... அந்தக் கணமே... பாலாவுடன் எந்த நிர்பந்தமுமில்லாமல் வாழ முடிவெடுத்திருந்தாள் கீர்த்தனா.

நாளை என்ன வேண்டும் என்றாலும் நடக்கலாம்.

மது வரலாம்... ஏன், பாலாவே மாறலாம்... அப்போது கூட பாலாவின் காதலில் நம்பிக்கை வைக்க முடியவில்லை அவளால் என்பதே உண்மை... ஆனால் இந்த நிமிடம்... இந்த வாழ்க்கை அவர்களுடையது... அவனும் அவளை விரும்புகிறான்... தானும் வாழ வேண்டும்... அவனையும் வாழ வைக்க வேண்டும்...

நான் அவனை விரும்புகிறேன்... தன் காதல் தன் கணவனைச் சந்தோசப்படுத்த வேண்டும் என்று நினைத் தவள்... அவனோடு முற்றிலும் கலக்கத் தீர்மானித்தாள்... தன் காதலை முழுமையாக்க...

அவளுக்கு உடனே பாலாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது... தன் மனது முற்றிலும் உணர ஆரம் பித்தவளுக்கு... கணவன் கண்ணில் படாமல் ஆட்டம் காட்ட... உடனே போன் செய்தாள்...

அவனும் எடுத்தான்...

"இதோ வந்துட்டேன் கீது... ஏதோ ஆக்சிடெண்ட்டாம் கொஞ்சம் லேட் ஆகிவிட்டது. நீ உள்ளே போ... செலெக்ட் பண்ணு, நான் வந்துட்டே இருக்கேன்," என்று சொல்ல...

"இல்ல, நீங்க வாங்க... வெயிட் பண்ணுகிறேன்..." என்றபடி அவனுக்காகக் காத்திருக்க... அவள் கணவனும் காட்சி தந்தான்.

சாலையின் எதிர்ப்புறமாய் நின்று கொண்டிருந்த... கணவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மனைவி.

அவன் முகம் எதையோ பறி கொடுத்தது போல் இருந்தது... மதுவினாலும் அவள் கவலை கொண்டிருந்தான் தான்... ஆனால் அப்படிப்பட்ட ஒரு சோகம் அவனுக்குப் பின்னால் உள்ளது என்று யாருக்கும் தெரியாது... அந்த



அளவு அவன் முகம் உணர்ச்சிகளைத் துடைத்து வைத்திருக்கும்.

ஆனால் இப்போது அவன் முகம்... அதில் பல எண்ண ஓட்டங்கள்... அவன் எதையோ நினைத்து மருகிக் கொண்டிருக்கிறான் என்று அப்பட்டமாகப் பார்ப்பவர்களுக்கு உணர்த்துவது போல் தோன்றியது கீர்த்திக்கு. அது தன்னால் தான் என்றும் புரிந்தது.

தன்னையே பார்த்தபடி நின்று கொண்டிருந்த மனைவியையே பார்த்தபடியே பாலா வர... தான் நிற்கும் இடத்திலிருந்தே... சாலையைப் பார்த்து வரும்படி எச்சரிக்கை செய்ய... அதைக் கணவனும் நிறைவேற்றி அவளின் அருகே வந்தான்.

கீர்த்தனாவிற்கு உடனே வீட்டுக்குப் போக வேண்டும் போல் இருக்க... வீட்டுக்குப் போகலாம் என்று சொன்னால் கணவன் மனம் வருந்துவான் என்று தோன்ற... அவனோடு கடையினுள் நுழைந்தாள்.

தன் கணவனிடம் தன் மனதைத் திறக்க வேண்டும்... அவனோடு தன் வாழ்க்கையை வாழ வேண்டும்... என்று அவள் மனம் பரவசத்தோடு போராடிக் கொண்டிருக்க...

கணவனோ அதற்கு எதிர்மாறான நிலையில் இருந்தான்... மனம் எங்கும் வருத்தமுடன்... அவளை எப்படி... அவள் மனதுக்குப் புரிய வைப்பது... தன் காதல் அவளுக்குப் புரியவே இல்லையா... இல்லை, தன் மனைவிக்குத் தன் காதலைப் புரியவே வைக்க முடியாதோ என்று.

இருவரும் அவரவர் மனநிலையில் இருக்க, ஏதோ பெயருக்கு வாங்கி வெளியே வந்திருந்தனர்... ஆனாலும் கீர்த்தனாவுக்கு, புத்தருக்கு போதி மரத்தின் அடியில் ஞானம்

வந்தது போல்... தனக்கு அந்த இடம் வாழ்க்கையைப் புரிய வைத்திருக்கிறது என்று தோன்றியது...

இருவரும் அலுவலகம் நோக்கிப் பயணிக்க...

கீர்த்தனாவுக்கு அலுவலகம் செல்லவே பிடிக்கவில்லை... பாலா அமைதியாகக் காரை ஓட்டி வர...

கீர்த்தனா தான் ஆரம்பித்தாள்.

"பாலா... என்னை வீட்டுல கொண்டு போய் விட்டுட்டு அதன் பிறகு ஆபீஸ் போறீங்களா...?" என்று கேட்க...

நேற்றும் அவள் தாமதமாகத்தான் உறங்கினாள்... முந்தின நாள் சுத்தம்... அவளை உணர்ந்தவனாய்... எதுவும் பேசாமல்... தலையை மட்டும் ஆட்டி விட்டு... வீட்டை நோக்கிச் செலுத்தினான் காரை.

மீண்டும் மௌனம் அங்கு அமர்ந்து கொள்ள...

கீர்த்தனாவே மீண்டும் மௌனத்தை உடைத்தாள்... பாலாவிடம் பேசவில்லை... அவளுக்குள் பேசுவது போல் தான் பேசினாள்... ஆனால் சத்தமாக,.

"ச்சேய்... எங்க அம்மா... 4ஆவ்து படிக்கும் போதே பாட்டு கிளாஸ்க்கு அனுப்புனாங்க... ஒழுங்கா போய் இருந்திருக்கலாம்... இந்த வினோத் கெடுத்துட்டான்..." என்று அலுக்க...

பாலா அவளைப் புரியாமல் ஒரு பார்வை பார்க்க.

அவன் பார்வை புரிந்தவளாய்...

"அங்கேயும் ஒருநாள் வந்து என்னைக் குறத்தின்னு கூப்பிட்டானா... எல்லாருக்கும் தெரிந்து போய்விட்டது... சோ பாட்டு கிளாஸையே நிறுத்திவிட்டேன்!" என்று பாவம் போல் சொல்ல...

"எதற்கெடுத்தாலும் அவன் ஒருத்தன் உனக்கு மாட்டினான்... உண்மையிலேயே உனக்கு அங்கு போகப் பிடித்திருக்காது... தட்டிக் கழிக்க காத்திருந்திருப்பாய்... பாவம்! வினோத் மாட்டிக்கிட்டான்!" என்று மனைவியின் போகாததின் உண்மையான காரணத்தைச் சொல்ல...



"கண்டுபிடிச்சுட்டீங்களே!" என்று சொன்னவள்...

"இதெல்லாம் கரெக்டா கண்டுபிடி... இப்போ என் முகத்தைப் பார்த்து ஒண்ணுமே தோணலையாடா உனக்கு... எனக்கு வேற என்ன பேசறதுனே தெரியலையே... நீ போடற மாதிரி பாட்டு போடலாம்னா... எனக்கு அது வராது... அப்படியே வந்தாலும் திடீர்னு எங்க இருந்து போடறது... அதுக்கும் டைம் இல்லையே... ச்சேய்! என்ன ஒரு அவஸ்தை..." என்று மனதினுள் நினைத்தபடி வர...

பாலாவோ வேறு ஒன்று நினைத்தான்.

கீர்த்தி மதுவோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டு வருகிறாளோ என்று தோன்ற... இன்னும் மனம் வலிக்க ஆரம்பித்தது.

அப்போது இன்னொன்றும் ஞாபகம் வந்தது... அது... மதுவே பாடி... அவனுக்குப் பல சிடிக்களைக் கொடுத்திருந்தாள்... அவன் அவளைக் காதலிக்காத போது... அவளைக் காதலிக்க ஆரம்பித்த பின்தான் கேட்டான் அவற்றையெல்லாம்...

அவள் அவனை விட்டு மறைந்த போது... அவைதான் அவனுக்கு எல்லாமாக இருந்தது... அவை எல்லாம் இன்னும் வீட்டில் தான் இருந்தன... முதலில் அதை எல்லாம் தூக்கிப் போட வேண்டும்... இல்லை... எங்காவது மறைத்து வைக்க வேண்டும்... அதை எல்லாம் மறைக்க வேண்டும் என்று எண்ணமில்லை அவனுக்கு... அவை எல்லாம் தன் மனைவியை வருத்தும் என்று கலங்கி அவ்வாறு நினைத்தான்.

இருவரும் அவரவர் உணர்ச்சிகளிலேயே வர, மீண்டும் மௌனம் ஆட்சி செய்ய ஆரம்பித்து இருந்தது.

கீர்த்திக்கு மீண்டும் பேசப் பிடிக்காமல்... எஃப் எம்மைப் போட... கடவுளுக்கு இருவரின் மேலும் கருணை வந்துவிட்டதோ என்னவோ... கீர்த்தியின் மன நிலையை அதில் ஒலித்த பாடல் பிரதிபலித்தது...

மஞ்சள் பூசும் மஞ்சள் பூசும் வஞ்சிப்பூங்கொடி
கொஞ்சிப்பேசி கொஞ்சிப்பேசி கொஞ்சும் பைங்கிளி
வாசப்பூவில் தேனே வண்ண நிலாவே மானே
காவல் ஏது கட்டுக்கள் ஏது காட்டாறு பாயும்போது
(மஞ்சள் பூசும் மஞ்சள் பூசும்)
நீயில்லாது நித்திரை ஏது பாயில் வாடும் பைங்கிளி
நீயிருந்தால் சித்திரை கூட வாடைவீசும் மார்கழி
நீயில்லாது நித்திரை ஏது பாயில் வாடும் பைங்கிளி
நீயிருந்தால் சித்திரை கூட வாடைவீசும் மார்கழி
மாதம் தேதி பார்த்துக் காதல் பூக்காது
நீரை மீனும் சேர ஊரைக் கேட்காது
பருவ ராகம் பாட புதிய கோலம் போட
ஆதியந்தம் அனைத்தும் சொந்தம் நீங்காது கூடும்போது
(மஞ்சள் பூசும் மஞ்சள் பூசும்)
நாலு பேர்கள் கண்படக்கூடும் நீயும் நானும் கூடினால்
ராஜயோகம் கைவரும் இன்று தோளில் தோகை ஆடினால்
நாலு பேர்கள் கண்படக்கூடும் நீயும் நானும் கூடினால்
ராஜயோகம் கைவரும் இன்று தோளில் தோகை ஆடினால்
தேவன் எந்தன் ஜீவன் தேவி உன்னோடு
மானின் கால்கள் போகும் மாமன் பின்னோடு
வாழும் நாட்கள் யாவும் உன்னுடன் வாழ வேண்டும்
சொந்தம் என்று பந்தங்கள் என்று நீயின்றி யாருமில்லை
(மஞ்சள் பூசும் மஞ்சள் பூசும்)

பாடலின் கடைசி வரியில் கீர்த்தனா அதன் வார்த்தை வீச்சின் வேகம் தாங்காமல் அவன் தோளிலே சாய்ந்து தன்னை அவனுக்கு முழுமையாய்க் கொடுக்க நினைத்ததைத்



தன் பார்வையாலே அவனுக்கு உணர்த்த... பாடலும் அது சொல்லிய மனைவியின் நிலையும் கணவன் மனதிற்குத் தப்பிதம் இல்லாமல் சரியாகப் புரிய... அதனால் கீர்த்தனாவின் பார்வை சொன்ன சம்மதமும் புரிய... பாலா மொத்தமாய்த் தன்னை அவளிடம் இழந்தான்...

மனைவியோடு எப்படித் தன் அறைக்கு வந்தானோ... அவனுக்கே தெரியவில்லை... அப்படி ஒரு நிலையில் இருந்தான் அவன்.

உள்ளே அவளை அழைத்து வந்தவன்... கதவைத் தாழ் போட்டான்.

"கீர்த்தி... கீது... நீ நீ..." என்று உணர்ச்சி வயமாக ஆரம்பிக்க... அவளோ அவனை விட உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்தாள்.

"ஆமாம் பாலா... நான் உங்களைக் காதலிக்கிறேன்... காதலிப்பேன்... காதலித்துக்கொண்டே இருப்பேன்... ஐ லவ் யூ... ஐ லவ் மை பாலா... ஐ லவ் மை ஹஸ்பண்ட்!" என்று அவனைப் பார்த்தபடியே மூச்சு விடாமல் சொன்னவளின் குரலில் உணர்ச்சி வழிந்தது.

"நான் நேற்றும் சொன்னேன்... ஆனா இப்போ சொல்றது... எல்லாவிதத்திலும் நான் உங்ககிட்ட என்னை ஒப்படைக்க வேண்டும் பாலா... எல்லா விதத்திலும் தயாரா இருக்கேன் பாலா... நாம ரெண்டு பேரும் இனியும் துன்பப்பட வேண்டாம்..." என்றவளைக் கட்டியணைத்தவன்,

"தேங்க்ஸ் கீர்த்தி... இது என்னோட வாழத் தயாராகி விட்டாய் என்று சொன்னதற்காக மட்டும் இல்லை... யாரோ ஒருவரிடம் போய்... நம் வாழ்க்கையைச் சொல்லி... அவர் அதற்குத் தீர்வு சொல்லி... அப்படி ஒரு வாழ்க்கையா வாழ வேண்டும் என்று மருகித் துடித்துக் கொண்டு இருந்தேன் கீர்த்தி...

"என் துடிப்பை... என் கலக்கத்தை எல்லாம் போக்கிட்டடி... இப்போதான் நான் சந்தோசமா இருக்கேன் கீர்த்தி... இல்லேனா... வாழ்நாள் முழுக்க இதுவும் என்னைக் குத்திக் கொண்டிருக்கும் முள்ளாகி விடும்..." இதுவும் என்று சொன்ன போதே அந்த இன்னொன்று மதுவின் நினைவும் என்று கீர்த்திக்குத் தோன்றாமல் இல்லை... ஆனால் அது அவளைப் பாதிக்கவில்லை...

அவனோடு சாய்ந்தபடியே... எப்படி... எங்கு... மனம் மாறினாள் என்று சொல்ல...

"அப்போ கூட என் காதல்னால இல்ல... எங்க இவன் செத்துகித்துப் போய்த் தொலஞ்சுருவானோ... போனாப் போகுதுனு வாழ ஆரம்பிச்சு இருக்க. அப்படித்தானே?" என்று சொல்ல...

கண்ணில் வலியோடு அவனைப் பார்த்தவள்,

"ஹேய்... இப்டினு சொன்னவுடனே ரியாக்ஷன மாத்துற... மாத்திடலாம்... கொஞ்சம்.. நான்வெஜ் கலந் தாத்தான் நீயும் அடங்குவ... இன்னும் கொஞ்ச நாள்ல பாரு உனக்கு... என் காதலுக்கு முன்னால தோத்துப் போகப் போற..." என்றவன், சற்று நேரம் அவளை அணைத்தபடியே நின்றான்... அவளுக்கான அவனின் போராட்டமெல்லாம் ஓய்ந்தது போல் தோன்ற, மன நிம்மதியுடன் அவளுடன் லயித்திருந்தான்.

பின் சிறிது நேரம் கழித்து அவளை விலக்கி நிமிர்த்தினான்.

"கீர்த்தி... டைம் ஆகிருச்சு ஆபீஸுக்குப் போகணும்..." என்றவனை நிமிர்ந்து முறைத்தாள்.

"என்ன பாலா... ஆபீசுக்கா? இன்னைக்கா...?" என்றவளிடம் -



"ஆமாம்மா... ரெண்டு நாளா ஒண்ணுமே பார்க்கலை... முடிச்சுட்டு வந்துடறேன்..." என்றவனிடம் அவனை விட மாட்டாதவள் போல் மீண்டும் ஒன்றினாள்.

"போகலைனா... கால் பண்ணியே கொல்லுவாங்கடி... எல்லாத்தையும் முடிச்சுட்டு ஈவ்னிங் வந்து... என் கீதுவ..." என்றவனிடம்,

"பேச்சுதான்... ஓகேனு சொல்லு. ஆபீஸாவது மண்ணாங்கட்டியாவதுனு... செயல்ல ஒண்ணும் காணோம்!" என்று கீர்த்தி அவனிடம் துடுக்காய்ப் பேச...

"ஏய்ய்ய்ய்ய்ய்..." என்று மிரட்டியவன்.

"என் செயல பத்தி அப்புறம் பேசலாம்," என்று அவளிடம் சரசமாட ஆரம்பிக்க...

"சரி... சரி... கிளம்புங்க... இங்க ஒருத்தி உங்களுக்காகக் காத்துட்டு இருப்பேனு... மனசுல வச்சுக்கிட்டே வேலை பாருங்க..." என்றபடி அவனை விட்டு விலகவே மனம் வராமல் இன்னும் அவனுள் அடங்க...

"கீது... உன் லவ்வ எனக்கு ப்ரூஃப் பண்ணவே இல்லை... என்னை நெருங்கத்தான் முடியலேனு சொன்னதுதான் ஞாபகம்... உன்னை நம்ப முடியலேயே..." என்று சீண்ட...

அவனிடமிருந்து விலகியவள்...

நக்கலாகவும், கோபமாகவும், "வேணும்னா நானும் சூடு போட்டுக் காட்டவா?" என்று கேட்க.

"பச்ச்ச்... அதையே சொல்லாத... எனக்கே அசிங்கமா இருக்கு... ஏதோ ஒரு வேகத்துல உன் வாயை அடக்கணும்னு..." என்றவன்,

"உனக்கு 5 மினிட்ஸ் டைம் தருகிறேன்... ப்ரூஃப் பண்ணு..."

"5 நிமிசமா? இதுலாம் ஓவர் பாலா!" என்றவள்,

"பேப்பர்ல எழுதித் தரவா..."

"என்னனு..." கேட்ட அவனின் பார்வையே நக்கலாக அவள் மேல் பதிந்தது.

"வேற என்ன. பாலா ஐ லவ் யூனுதான்..." என்றவளிடம், கடவுளே என்று தலையிலடித்தான் பாலா...

"லூசுப் பொண்டாட்டிதான்... உனக்கு லவ் பண்ணத் தெரியாதுதான்... அதுக்காக இப்படிலாம் ப்ரூஃப் பண்ணுவியா நீ!" என்று ஒற்றைக் காலைச் சுவரில் வைத்து, விலகி நின்றிருந்தவளை தனக்குள் மீண்டும் கொண்டு வந்தவன்,

"சீக்கிரம் கீர்த்தி... டைம் போய்ட்டே இருக்கு..." எனப் பாலா அவளை அவசரப்படுத்த...

"ப்ராமிஸ் பண்ணவா - எங்க அப்பா அம்மா மேல?" என்றவளுக்கு முறைப்பைப் பதிலாய்க் கொடுக்க...

"வேற என்ன பண்ணுவது பாலா!" என்று கொஞ்சினாள் அவனது பைங்கிளி...

கொஞ்சிப் பேசிய வஞ்சியினை யோசிக்க விடாமல்... அவனது பார்வை அவளது உதட்டில் நிலைக்க...

அது புரிந்தவள்... "கேடி" என்றபடி... நாணம் தடுக்க நினைத்தாலும்... அவள் காதலை அவனிடம் உணர்த்தும் முனைப்பே இருக்க...

அவள் கணவனைப் போல் முதல் முத்தத்தைத் தனது இதழ் முத்தமாகவே அவனுக்குத் திருப்பிக் கொடுத்தாள் மனைவி...

இருவருக்கும் யுகமாய்க் கழிந்த நிமிடங்கள் முடிவுக்கு வர... கீர்த்தி அவனை நிமிர்ந்து பார்க்க அவன் கண்களை மூடி அந்த நிமிடங்களை அனுபவித்துக் கொண்டிருந்தான்.



"பாலா!" என்று மெல்ல அவனைக் கூப்பிட...

"கீர்த்தி... எம்.டி.யா இருந்த என்னை கேடியா மாத்திட்டடி!" என்று கண்களை மூடி அவன் பரவச நிலையில் சொன்னதை வேறு எந்த அர்த்தத்திலும் கீர்த்தி எடுக்க வில்லை.

அதன் பிறகு... அவன் அலுவலகத்திற்குக் கிளம்பினான்... மனைவியின் முதல் முத்தத்தில் மயங்கி இருந்த அவன்... தன் காரில் நினைத்த மதுவின் சிடிக்களை அப்புறப்படுத்தாமலேயே அவளை விட்டுப் போனான்.

கீர்த்தனாவிற்கு அவன் வரும்வரை நிமிடங்கள் யுகங்களாய் நீள்வது போல் இருந்தது...

"ஆணின் தவிப்பு அடங்கிவிடும்... பெண்ணின் தவிப்பு தொடங்கிவிடும்!" என்று ஒரு பாடல் வரி கீர்த்திக்கு ஞாபகம் வர...

"ஹேய் கீர்த்தி! பரவாயில்லையே... உனக்குக்கூட சிசுவேசன் சாங்லாம் வருது!" என்று பெருமை வேறு பட்டுக் கொண்டாள்.

என்னவெல்லாமோ செய்து பார்த்தாள்... நேரமே போகவில்லை...

அருந்ததியும் மருமகள் மேலும் ஒரு கண் வைத்துத்தான் இருந்தார்.

மகன் கீழே இறங்கியபோது... அவனின் மலர்ந்த முகம் அருந்ததிக்கு நிம்மதியை வரவழைத்திருந்தது. வீட்டிலே தங்கிவிட்ட மருமகளோ... கனவிலேயே மிதந்ததும் அவள் பார்வையில் சிக்காமல் இல்லை.

மதியம் 3 மணிக்கு மேல் அவளால் பொறுக்க முடியாமல் பாலாவுக்கு கால் செய்ய, அவனோ... மனைவியின் அவஸ்தை தெரியாமல் கட் செய்துகொண்டே இருக்க... இவள் குறுஞ் செய்தி அனுப்ப... அவனோ...

"தொந்தரவு செய்யாதே... நான் மிகவும் பிஸி!" என்று பதில் அனுப்பி இருந்தான்.

இந்த மெஸேஜ் செய்வதற்கு ஒரு ஹலோ சொல்லலாம்ல என்று அலுத்துக் கொண்டாள்.

போரடிக்க... தனது அறையைச் சுத்தம் செய்தவள்... அவனது படுக்கை இனி அவர்களின் மஞ்சமாகப் போவதை எண்ணியபடி நாணத்துடன் அதைத் தயார் செய்தாள்.

திடீரென்று அவளுக்குத் தங்கள் திருமணப் புகைப்படத்தைப் பார்க்க வேண்டும் போல் இருக்க... அது அவளுக்கு எட்டாத உயரத்தில் இருந்தது... நாற்காலியைப் போட்டு ஏறி அதை எடுக்கத் தயாரான போது, ஒரு திரைப்படத்தில் கதாநாயகி இப்படித்தான் கணவன் வரவிற்காக ஏங்கி... கடைசியில் இறந்து போன காட்சி அவள் மனதில் வர அவளது மனச்சாட்சி ஆஜரானது.

"கீர்த்தி... கையக் கால வச்சுக்கிட்டு சும்மா இரு... எதையாவது பண்றேன்னு சொல்லி... கீழ மேல விழுந்து தொலைக்காதே!" என்று சொல்ல...

ஆல்பம் பார்க்கும் ஆசையையே விட்டபடி பேசாமல் கட்டிலிலே வந்து அமர்ந்துவிட்டாள்.

அதன் பின்னும் அவளுக்கு... அந்தப் பாடல் காட்சியே மனதில் ஓடிக் கொண்டிருக்க...

அவளுக்கு இருந்த மோன நிலை சுத்தமாய் வடிந்து போனது போல் இருக்க... மனம் எதை எதையோ நினைத்து... அலை பாய்ந்தது... ஓடிய எண்ணங்கள் எல்லாம்... நல்லபடியாகவே இல்லை... தங்களுக்கு மீண்டும் ஏதாவது பிரச்சனை வருமோ என்று கலங்கியவள்...

"கடவுளே! என்னை இன்னைக்கு ஒருநாள் மட்டும் என் பாலாவோட வாழ வச்சுடு!" என்று வேண்டினாள்.



பின் உடனே, "இல்ல இல்ல... ஒருநாள்லாம் வேண்டாம்... அவர் கூட வாழ்நாள் முழுசும்... நான் வாழணும்!" என்று மீண்டும் கடவுளிடம் வேண்டுதலை மாற்றினாள்.

மறுபடியும்... "அட்லீஸ்ட் மது கிடைக்கிற வரைக்குமாவது... அதுக்கப்புறம் எனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை!" என்று மதுவையும் இழுத்துத் தன் வேண்டுதலை மாற்றியபடி இருந்தவளுக்கு...

அந்த திரைப்பட பாடல் மனதினை விட்டுப் போகவே மாட்டேன் என்றது.

அது அந்த நேரத்திற்கான மூடை அவளுக்குக் கெடுப்பது போல் இருக்க... சரி, வேறு ஏதாவது பாடல் கேட்டுத் தன் மனதை மாற்றலாம் என்று முடிவு செய்து... சிடியை எடுக்கப் போக... அங்கிருந்த சிடிகளில் ஒரு ஓரமாய் 'மது (ர) கானங்கள்' என்ற தலைப்பில் அடுக்கப்பட்டிருந்த தகடுகளின் மேல் அவளின் கவனம் பதிந்தது...

மது மற்றும் கானங்களுக்கு இடையில் வந்த 'ர' காதலின் அடையாளமாக இதய வடிவத்திலும் தோன்றுவது போல் எழுதப்பட்டிருக்க... அதை எடுக்கவே... கீர்த்திக்குக் கைகள் நடுங்கின... அதேபோல் ஒரு 7 அல்லது 8 குறுந்தகடுகள் இருக்க... கண்டிப்பாக... அதற்கும் மதுவுக்கும் ஏதோ சம்பந்தம் உண்டு என்று மனம் சொல்ல...

இப்போது எடுப்போமா... வேண்டாமா என்று மனம் அடித்துக் கொள்ளத் தொடங்கியது... என்னதான் இருக்கும்... பாலாவுக்கும்... மதுவுக்கும் பிடித்த பாடல்களாக இருக்கும் கேட்டுத்தான் பார்ப்போம் என்று அவற்றில் இருந்து ஒரு சிடியை எடுத்து வந்து மடிக்கணினியில் போடப் போனாள்.

சிடியைப் பார்த்தவளுக்கு கணவன் பலமுறை கேட்டிருப்பான் போல... தேய்ந்திருந்த அதன் நிலையே

சொல்லியது... மனதில் சிரித்தபடி போட்டு ஆன் செய்தவள்... காதில் ஹெட் செட்டை மாட்டினாள்... பாடலைக் கேட்க... ஆனால் அதிலோ "ஹாய் பாலா..." என்று மதுவின் உரிமை கலந்த குரலில் கேட்ட கீர்த்தியின் மனம் படபடவென்று அடிக்கத் தொடங்கியது.

அவள் சொன்ன பாலா என்ற வார்த்தையே அவள் காதலைச் சொல்லியது போல் இருந்தது... அத்தனை உரிமை... அத்தனை காதல்... அது அவளை என்னவோ செய்ய... வேகமாக அணைக்கப் போனவளின் மனது,

"கீர்த்தி... நீ பாலாவை விரும்புகிறாய்... அவன் உன் கணவன்... நீ எந்தச் சூழ்நிலையிலும் தெளிவாக இருக்க வேண்டும்... இது உனக்கு ஒரு பரிட்சை போல்... எதுவாகிலும் பாலாவுடன் நீ வாழ வேண்டும்... இதைக் கேட்கவே பயப்படுகிறாய் என்றால் நாளை மது வந்தால்.." என்று அவளை அவள் வாழ்க்கைக்கான தெளிவான முடிவை எடுக்கச் சொல்லி மனம் சொல்ல... அதைக் கேட்டுத் தொடர்ந்து கேட்க ஆரம்பித்தாள்.

"ஹாய் பாலா..."

இது நான் உனக்குக் கொடுக்கிற 6ஆவது சிடி.

நீ இதுவரை நான் கொடுத்து அனுப்பினது எதுவுமே கேட்கவில்லை என்று தெரியும்... ஆனாலும் நான் ஆதிகிட்ட கொடுத்து அனுப்பிக்கிட்டே இருப்பேன்.

ஓ.கே... போன தடவை நான் அனுப்பின பாட்டோட முதல் வரி இதுதான்..

'ஏதேதோ எண்ணம் வளர்த்தேன்' பாடல்... திரும்பப் போய்க் கேட்டுக்கோ...

இன்னைக்கு நான் கோபத்துல இதை அனுப்பி இருக்கேன்... நீ என்னை ஆதிகிட்ட ரொம்ப திட்டினியாமே...



அதனால இந்த முறை தயவு தாட்சண்யமின்றி... உனக்கு ரொமான்ஸ் பாட்டுதான்டா... கேளு...

"எப்போதும் போல இடையில இருந்துதான்டா... இதுக்கும். திட்டித் தொலைக்காத..."

இப்போது கீர்த்தி இதழ்கள் புன்னகையில் விரிந்தன... இடையில் பாட்டுப் போடும் பழக்கம் கணவனுக்கு எங்கிருந்து வந்திருக்கிறது என்று... கணவனுக்குக் காதலிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறாள்... மனம் குறுக்காக யோசிக்காமல் நேர் கோட்டில் சென்று கொண்டிருந்தது அவளுக்கு.

பாடல் வரி அவள் குரலில் ஒலித்தது.

'கன்னிப் பூவும் உன்னைப் பின்னிக் கொள்ள வேண்டும்
முத்தம் போடும் போது எண்ணிக் கொள்ள வேண்டும்
முத்தங்கள் சங்கீதம் பாடாதோ
என் கூந்தல் பாயொன்று போடாதோ
கண்ணா கண்ணா உன் பாடு
என்னைத் தந்தேன் வேரோடு
உன் தேகம் என் மீது
உன்னைப் போன்ற ஆணைக் கண்ணால் பார்த்ததில்லை
உன்னை அன்றி யாரும் ஆணாய்த் தோன்றவில்லை
பூவொன்று தள்ளாடும் தேனோடு
மஞ்சத்தில் எப்போது மாநாடு
பூவின் உள்ளே தேரோட்டம்
நாளை தானே வெள்ளோட்டம்
என்னோடு பண்பாடு!'

கீர்த்தனா கலங்கி விட்டாள் பாடல் வரிகளில்... சில வார்த்தைகளை மது மாற்றி இருந்தாள்...

மதுவின் குரல் தொடர்ந்து ஒலித்தது.

"என்ன பாலா, பாட்டு எப்படி இருக்குடா..."

"ஒருவேளை நீ கேட்கிற முதல் சிடி இதுதான் என்றால்... உனக்கு இன்னைக்குத் தூக்கம் ஹோகயாதான்.. இந்த மதுதான் உன் கனவுல வருவா...

அய்யோ... நீ ரொமான்ஸ் மூடை மூட்டை கட்டி வச்சுட்டு... பாடலோட முதல் வரிய யோசிச்சுட்டு இருக்கியா...

இந்தப் பாட்டுக்கு மட்டும் உனக்காக முதல் வரி பாடறேன்... சமத்தா கேட்டுட்டு... கனவில் என் பாலாவா எந்தச் சேட்டையும் பண்ணாமல் எல்லை மீறாம ரொமான்ஸ் பண்ணனும். சரியா...?

சரி சரி. நீ திட்டுறது கேக்குது... நான் என் திருவாயை மூடிக்கிறேன்... பாய்... பாட்டைக் கேளு..."

அணைத்து விட்டாள்.

கீர்த்தனாவின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது... என்ன ஒரு காதல்... எதையும் எதிர்பார்க்காத காதல்... என்னவெல்லாம் கனவுகள்... என்னவெல்லாம் கற்பனைகள்... எல்லாம் வீணாகப் போனது ஏன்...? என்ன தவறு செய்தனர் இருவரும்...? ஒருவேளை தான் இந்தப் பூமியில் பிறந்திருக்காமல் இருந்திருந்தால்... இருவரும் ஒன்று சேர்ந்திருப்பார்களோ...?

மதுவுக்காகக் கணவனின் 4 வருடக் காத்திருப்பு தவறில்லை... அதற்காகத் தன்னைத் திருமணம் செய்து தன்னிடம் சலனப் படாதது கூடத் தவறே இல்லை... இப்படிப்பட்ட காதலியை விட... தன்னை எப்படி நினைத்திருப்பான் அவன்... அவளை எப்படி விட்டுக் கொடுப்பான் என்று துடித்த போதே,

விட்டு விட்டானே உனக்காக... இன்று உன் பார்வைக்காக... உன் காதலுக்காக... உன் சம்மதத்துக்காக... உன் ஒருத்திக்காக எப்பேர்ப்பட்ட காதலை மறந்திருக்கிறான்... அவனுக்காக நீ என்ன செய்திருக்கிறாய்... வலியும்,



வேதனையும்... குத்திக்காட்டும் வார்த்தைகளும்தான்... என்ற போதே,

"மதுவை மறந்துவிட்டானா?" என்ற சந்தேகமும் அவளுக்கு வந்து தொலைக்க... இப்போது அவன் மனதில் இருப்பது நாம்தான் என்ற நினைவில் மனம் அமைதி ஆகியது.

மது - பாலா காதல் இப்போது அவளை இம்சிக்கவில்லை... கணவன் அவன் காதலில் தொலைத்த சந்தோசத்தை எல்லாம் தன் மூலம், தன் காதல் மூலம் அவனுக்கு மீட்டுக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் அளவு அவள் தெளிந்திருந்தாள்.

சற்று நேரம் கண்களை மூடியபடி இருக்க... அப்போதுதான் அந்தப் பாடலின் முதல் வரி பற்றி ஞாபகம் வந்தது.

நல்ல வேளை, மதுவே சொல்லிட்டாங்க... இல்லை, அதை வேற தேடணும்... தேங்க்ஸ் மது என்று மீண்டும் போட்டாள்.

அதுவே பாலாவுக்கும் கீர்த்திக்குமான வாழ்க்கையை ஆரம்பித்து வைக்க மதுவின் வாய் வார்த்தை மூலம் சம்மதமாகத் தோன்றும்படி ஆகிப் போனது. மது பாடிய அந்தப் பாடலின் ஒவ்வொரு வரியும் கீர்த்திக்காகவே பாடியது போல் இருந்தது... கீர்த்தியைப் பாலாவோடு சேர்ந்து வாழ அவளே சொன்னது போல் இருந்தது.

ஒரு காதல் என்பது
உன் நெஞ்சில் உள்ளது
உன் நெஞ்சில் உள்ளது கண்ணில் வந்ததடி
பெண் பூவே வாய் பேசு
பூங்காற்றாய் நீ வீசு
காதல் கீதம் நீ பாடு

கீர்த்தியின் கண்களில் இப்போது ஆனந்தக் கண்ணீர் வழிந்தது... அவளையுமறியாமல் அதைத் திரும்பத் திரும்பக் கேட்டாள்.

"காதல் கீதம் நீ பாடு!" என்ற கடைசி வரியில்... மது பாலாவை மொத்தமாய் அவளிடம் தந்து சொல்லியது போல் இருக்க... கீர்த்தனா... கொஞ்ச நஞ்சம் இருந்த தன் மனச் சலனம் எல்லாம் நீங்கி... பாலாவிடம் தன் காதல் கீதத்தை எந்தத் தடங்கலும் இல்லாமல் பாட ஆரம்பித்து இருந்தாள்... மனம் லேசாய் ஆனது...

மது பாடிய பாடலையே அவள் உதடுகளும் முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

கன்னிப் பூவும் உன்னைப் பின்னிக் கொள்ள வேண்டும்

முத்தம் போடும் போது எண்ணிக் கொள்ள வேண்டும்

பாடியபோதே நேற்று... அவள் எண்ணிய அவன் முத்தங்களின் ஞாபகம் வர, முகம் சிவந்தாள் கீர்த்தனா.

பூவொன்று தள்ளாடும் தேனோடு

மஞ்சத்தில் எப்போது மாநாடு

என்ற வரிகளைப் பாடியபடி அவர்களின் மஞ்சத்தை மல்லிகையால் பரப்பினாள்... ஆனால் இன்று அந்த மஞ்சத்திற்கு அதன் தவப் பலனான அவர்கள் இருவரின் சங்கமம் கிடைக்கப் போவதில்லை என்று அறியாமல்.

சிந்து கிட்டத்தட்ட 6 மணி அளவில் வர... சிந்துவும் அவளும் அருகில் இருந்த கோவிலுக்குக் கிளம்பினர்.

கீர்த்தனா கோவிலுக்குக் கிளம்பி வரும் போதே... அருந்ததியும், ஜெகநாதனும் ஹாலில் அமர்ந்திருக்க, அவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கவும் மறக்கவில்லை... புடவையுடனும், மல்லிகைப் பூவைத் தலையில் சூடி... மிதமான அலங்காரத்துடனும் இருந்த கீர்த்தனாவைப் பார்த்து... அருந்ததிக்கு ஏதோ விளங்கியது போல் இருக்க...



மனம் பூரிப்போடு ஆசிர்வாதம் செய்ய, ஜெகநாதன் வழக்கம் போல் என்ன நடக்கிறது என்று தெரியாமலே ஆசிர்வாதம் செய்தார்.

கீர்த்தனா கோவிலுக்குக் கிளம்பிச் சென்ற சிறிது நேரத்தில் பாலாவும் வீட்டினுள் நுழைய... அருந்ததி அவள் கோவிலுக்குப் போயிருப்பதாகச் சொல்ல... பாலா அவர்களின் அறைக்குள் போகாமல்... கீழே திரும்பி வந்தவன், அருந்ததியிடம்,

"அம்மா... நான் கீர்த்திய கூட்டிட்டு அவங்க வீட்டுக்கு அப்படியே போகிறேன்.." என்றவன், பாதி தூரம் சென்று ஏதோ நினைவு வந்தவனாய்... திரும்பி வந்து தாய் தந்தை இருவரிடமும் ஆசிர்வாதம் வாங்க...

"என்னடா... ரெண்டு பேரும் இப்படித் தனித்தனியா வாங்குறீங்க..." என்று ஜெகநாதன் மனம் சஞ்சலப்பட்டுச் சொல்ல...

"இன்னொரு நாள் சேர்ந்து வாங்கிக்கிறோம் அப்பா... இப்போ டைம் இல்லப்பா..." என்று கூறியபடி... போன மகனைப் பார்த்த அருந்ததிக்கு இப்போது அனைத்தும் விளங்க...

அவன் போன வுடனேயே பூஜை அறையினுள் நுழைந்தார். அவர் மகன் மற்றும் மருமகள் வாழ்க்கையில் ஒளி ஏற்றிய ஆண்டவனுக்கு நன்றி சொல்ல...

கோவில் வாசலில் காரை நிறுத்தியவன்... மனைவியைத் தேடி உள்ளே செல்ல... அவன் தேவதையும் அவனுக்குக் காட்சி தந்தாள்.

சிந்து வழக்கம் போல் பேசிக் கொண்டிருக்க... அவளுக்குப் பதில் சொல்லவோ இல்லை... அவள் சொல்வதைக் கேட்கவோ இயலாமல்... கீர்த்தனா - பாலா

இருவரின் பார்வையுமே இன்று வேறு மொழி பேசிக் கொண்டிருந்தது, சிந்துவை இடையில் வைத்துக்கொண்டே.

அதன் பிறகு சிந்துவை வீட்டின் வாசலில் இறக்கிவிட்டு விட்டு... கார் சென்றது கீர்த்தியின் வீட்டுக்கு.

"எங்க பாலா போறீங்க...?"

"வேற எங்க, நம்ம வசந்த மாளிகைக்குத்தான்!" என்றவனின் பதிலில் திகைப்புற்ற கீர்த்தி...

"நம்ம ரூம்ல... வேண்டாமா... நான் வேற அங்க பூ..." என்று திணற...

"அங்க இனி தினம் கச்சேரிதான்... போனாப் போகுது விடு!" என்று கண் சிமிட்டியவனின் கண்களில் காதலோடு தாபமும் வழிந்தோடியது.

அபார்ட்மெண்டிற்குள் நுழைந்தவர்கள் காரை நிறுத்தி லிஃப்டினுள் நுழைந்தனர்...

தன் மனைவியின் அழகில் தன் நிதானத்தை மெல்ல மெல்ல இழந்து கொண்டிருந்த பாலா யாருமில்லாத அந்த லிஃப்டினுள் அவள் அருகே நெருங்க முயல...

"அய்யோ பாலா... யாராவது வந்துறப் போறாங்க!" என்று விலக

அப்போதுதான் ஞாபகம் வந்து பாலா கேட்டான்.

"ஒருநாள் லிஃப்ட்ல என்னோட மாட்டினது நீதானே கீர்த்தி!" என்று. அதுகூட சந்தேகமாய்த் தான் கேட்டான்.

"ஹ்ம்ம்ம்ம்..." என்று சொன்னவளிடம் இன்னும் நெருக்கமாகப் போனவன்...

"இன்னைக்கு அது மாதிரி நிக்காதாடி... 15 மினிட்ஸ் என் வாழ்க்கையில அநியாயமா இழந்துட்டேனே..." என்று அவள் காதில் ஏக்கமாய் ரகசியம் பேசியவனை விசித்திரமாகப் பார்த்த மனைவியிடம்...



"என்ன?" என்று பாலா கேட்க,

"10 மாசம் நம்ம ரூம்ல வேஸ்ட் பண்ணியிருக்கோம்... அது உங்களுக்குத் தெரியல... என்னமோ அந்த லிஃப்ட்ல வந்த 15 நிமிசம் மட்டும் தான் வேஸ்ட் பண்ணின மாதிரி... ஃபீல் பண்றீங்க!" என்ற போது சிறிது ஏமாற்றமும், வருத்தமும் இருந்தது அவள் குரலில்...

"சரிடி. ரொம்ப அலுத்துக்காத... என்னால பாதி... உன்னால பாதி... வேஸ்ட்!" என்று பேசியபடியே வீட்டினுள் நுழைந்தனர்.

"கீர்த்தி... நான் குளிச்சிட்டு வந்துடறேன்," என்றபடி பாலா குளியலறையினுள் நுழைய... கீர்த்தனா... தங்கள் அறையைச் சுத்தம் செய்யலாம் என்று எண்ணிக் கதவைத் திறக்க... அது பூட்டப்பட்டிருந்தது... வழக்கமாக அது பூட்டப்பட்டிருக்காதே என்று நினைத்தபடி கிச்சனுக்குள் நுழைந்தாள் கீர்த்தி. அவர்கள் இருவருக்கும் பால் காய்ச்ச...

பால் காய்ச்சிக் கொண்டிருக்கும் போதே கணவனின் வருகையை... அவனின் வாசனை மூலம் உணர்ந்தவளுக்கு... அப்போதே ஒரு பரவசம் தோன்றி... உடலெங்கும் பரவி அவளைச் சிலிர்க்க வைக்க... அவனைத் திரும்பிப் பார்க்கவே முடியாதவளாய்... பால் காய்ச்சுவதிலேயே குறியாக இருந்தாள்...

அவளின் நிலை உணர்ந்த பாலா... சிரித்தபடி அவளைப் பின்னால் வந்து அணைக்க... கீர்த்தனாவுக்கு அவன் அணைத்த போது அவன் உடையில் ஏதோ வித்தியாசம் தோன்ற, திரும்பிப் பார்க்க...

அவள் உணர்ந்ததைப் போலவே... அவனும் பட்டு வேஷ்டி சட்டையில் இருக்க, விழி விரியப் பார்த்தாள் மனைவி.

தன்னைப் பார்த்தபடியே நின்றிருந்த மனைவியைப் பார்த்தபடியே அடுப்பை அணைத்தவன்... அவளையும் அணைத்து அவள் இடையைப் பற்றித் தூக்க,

"பா...லா... 'பா...ல்!" என்று வார்த்தைகள் குழறின கீர்த்தனாவுக்கு.

"பாலா... இல்ல பாலாவா... உனக்கு எது வேணும் இப்போ?" என்று மோகமாய் வார்த்தைகளை விட, அவளையுமறியாமல் வார்த்தைகள் வெளிவந்தன.

"எனக்கு என் பாலாதான் வேண்டும்!" என்று அவள் திணறிய அழகில் அவன் சொக்கித்தான் போனான்.

போகும் வழியிலேயே அவளைத் தூக்கியிருந்தபடியே ராகவன் - மைதிலியின் புகைப்படம் முன் வேண்ட.

"பாலா! இறக்கி விடுங்க!" என்ற போது,

"என் மாமனாரே ரொமான்ஸ் மன்னன்தான்டி... அவருக்கு முன்னால நான்லாம் ஜுஜுபி," என்றவனைப் பார்த்து முறைத்தாள் கீர்த்தி.

"உங்க அப்பாவைச் சொன்னா உனக்கு வந்துருமே!" என்றபடி,

"அத்தை... மாமா... உங்க பொண்ணு... கீர்த்தனா ராகவன்... கீர்த்தனா பாலாவா இன்னைல இருந்து மாறப்போறா... அதுக்கு நீங்க எங்க இருந்தாலும் ஆசிர்வாதம் பண்ண வேண்டும்..." என்று மனப்பூர்வமாகவும் கொஞ்சம் குறும்புடனும் கூற...

பரிசாக மனைவியின் கையில் இரண்டு அடியும் இலவசமாகக் கிடைத்தது.

பூட்டிய அவளது அறைக் கதவைத் தன் சட்டைப் பாக்கெட்டில் உள்ள சாவியை எடுத்துத் திறக்கச் சொல்ல, திறந்த அவளால் நம்பவே முடியவில்லை.

நாயகி அவனது படுக்கையை மலர்களைத் தூவி மஞ்சமாய் அலங்கரித்து இருக்க... அவள் நாயகனோ இங்கு மலர்களாலே மஞ்சத்தை அமைத்திருந்தான்.



அவன் போனைக்கூட எடுக்காமல் எந்த வேலையில் பிஸியாய் இருந்தான் என்று உணர்ந்து, "பாலா..." என்று நெகிழ்ந்த போது,

அவளைத் தூக்கியிருந்தபடியே பேசினான் பாலா...

"என் பொண்டாட்டிக்கு... அவ புருசன்... தாலி கட்டும் போது அவள பார்க்கலைனு ஏக்கமாம்... முதலிரவுல அவள கண்ணியமா பார்த்தேனு வருத்தமாம்... அவ படுக்கைல படுக்காம தள்ளிப் போனேன்னு கோபமாம்.. முதன் முதல்ல அவளத் தொட்டப்போ அவ அழகுல மயங்கலயாம்!" என்ற போது அவள் கண்கள் பனித்திருந்தன.

"இப்போ அவ புருசன் அவ அழகுல மயங்கிக் கிடக்கிறான்... அவளோட படுக்கைலதான் அவங்களோட முதல் சங்கமம் நடக்கணும்னு காத்துட்டு இருக்கான்... இப்போ அவள மோசமாகக் காமப் பார்வை பார்த்துட்டு இருக்கான்!" என்றபடி

பாலா, கீர்த்தனாவை மோகப் பார்வை பார்க்க... அந்தப் பார்வையிலேயே உணர்ச்சிகள் அவளைத் தாக்க... தவித்துப் போனாள் பெண்ணவள்...

"ஆனா அவளோட ஒரே ஒரு ஏக்கத்தை மட்டும் என்னால் போக்க முடியாது..." என்ற போது, கீர்த்தனா -

"அந்த ஏக்கமெல்லாம் இப்போ இந்த நிமிசத்துல போய்டுச்சு பாலா... நீங்க எனக்குத் தாலி கட்டும் போது பார்க்காம இருந்திருக்கலாம்... ஆனா வாழ்நாள் முழுக்க உங்க பார்வை என்னைத் தழுவுற வரம் கிடைச்சுருக்கு பாலா!" எனும் போதே அவன் காயம் அவளுக்கு ஞாபகம் வர... அவள் இறங்க எத்தனிக்க...

"வாவ்! சூப்பர்டி கே.பி.!" என்று கூறியபடி

பாலாவும் தன் கைகளில் இருந்து அவளை விட்டான்.

அவளைக் கீழே இறக்கிவிடும் போதே தன் உணர்வுகளை அவளுக்குள் இட மாற்றம் செய்திருந்தான் பாலா.

"அது என்ன கே.பி.?"

"கீர்த்தனா பாலா!" என்று முழுப் பெயரையும் அவன் சொல்லிய விதமே அவளைக் கிறங்கடிக்க... அவனை இறுக்க அணைத்தாள்.

அதைப் புரிந்தவன்... அவளின் காது மடல்களில் கவிதை படைத்தபடி...

"கீர்த்தனா பாலாவா ஆக உனக்கு ஓகே வா?" என்று கிசுகிசுப்பாய்க் கூற, கோபப் பார்வை பார்த்தவளிடம்...

"இல்லடி. உனக்கு உங்க அப்பான்னா உயிர் ஆச்சே... கீர்த்தனா ராகவன்... கீர்த்தனா ராகவன்னு சொல்லிச் சொல்லி மாய்வியே! அதுதான் கேட்டேன். " என்று வம்பிழுக்க...

"டேய் கேடி... இப்ப எனக்கு ஓகே இல்லேனா விட்ருவியா என்ன?" என்று இவள் கொஞ்ச...

அவள் சொன்னதில் இருந்த கேடியை எடுத்துக் கொண்டு,

"கீது... கேடினா நீ என்ன அர்த்தம் பண்ற..." என்று அவன் கிறங்க...

"கேடினா என்ன அர்த்தமோ அந்த அர்த்தத்தில் தான்... இதுல என்ன புதுசா இருக்கு...?"

"ஆனால் நான் அதுக்கு ஒரு அர்த்தம் வச்சுருக்கேன்... கே ஃபார் கீர்த்தி டி ஃபார் தாசன்" என்று சொல்ல கீர்த்திக்கு அவன் காலையில் சொன்ன எம்டி - கேடி புரிய அவளை ஆறுதலாய் அணைத்தபடி

"10 மாசம் வேஸ்ட் பண்ணிட்டு இன்னும் பேசிட்டு... இன்னும்..." என்று சொன்னவளின் இதழ்களை வேகத்தோடு



அன்போடு சரணடைய வைத்தவன்... அதற்கு மேலும் விடுவானா பாலா...

அதன் பின் அவளோடு சேர்ந்து அந்த மலர் மஞ்சத்தில் சரிந்தவன்... தாம்பத்தியக் கடலில் இல்லறம் என்னும் முத்தை எடுக்க மனைவியோடு சேர்ந்து பயணிக்கத் தொடங்கினான் பாலா. ஆரம்பத்தில் அந்தக் கடலில் சுகமாகப் பயணிக்க ஆரம்பித்த கீர்த்தனா... அதன் ஆழம் நோக்கிப் பயணிக்கையில்... கொஞ்சம் தடுமாற... அதன் ஆழம் பார்த்துத் தயங்கி அவளை... தான் இருக்கிறேன் என்று கணவன் தன்னோடு இழுக்க...

முதலில் பிடிவாதம் பிடித்தவள்... பின் தன் கணவன் இருக்கும் நம்பிக்கையில் அவனை மட்டுமே நம்பி வேறு எதையும் யோசிக்காமல் அவனோடு சேர்ந்து மூழ்க... பயணம் மீண்டும் சுகமானது. ஒரு வழியாய் நிரம்ப இஷ்டமும் கொஞ்சம் கஷ்டமுமாய் இல்லறம் என்னும் முத்தைக் கணவன் எடுக்கத் துணை புரிந்து கரை ஏறினாள். கரை ஏற வைத்தான் கணவன்...

முத்தெடுத்து வெளியேறிய போது... அவள் 'கீர்த்தனா பாலா'வாக மாறியிருக்க... அவனோ கீர்த்தனாவின் பாலாவாக மாறியிருந்தான்.

## 49

கிட்டத்தட்ட ஒரு வாரம் முடிந்த நிலையில் பாலாவின் வீட்டில்... வினோத்தின் பெற்றோரும்... கீர்த்திகாவின் பெற்றோரும் குழுமியிருந்தனர்... வினோத் - கீர்த்திகா திருமணத்தை முடிவு செய்ய... பாலா வீட்டினர் இருவருக்கும் மத்தியமாய் இருந்ததால் அவர்கள் வீட்டிலேயே... கலந்தாலோசிக்க முடிவு செய்தனர் இரு வீட்டினரும்...

கீர்த்தனாவும்... சிந்துவும்... கிச்சனில் மஞ்சுவுடன் இருக்க, மற்ற அனைவரும் ஹாலில் இருந்தனர்...

கீர்த்திக்குத் தான் இதில் மிகவும் சந்தோசம்... கால்கள் தரையில் இல்லை... அந்த வீட்டு மருமகளாய்... அங்கும் இங்கும் ஓடி... வந்தவர்களைக் கவனித்துக் கொண்டு... அவளைக் கையில் பிடிக்க முடியவில்லை...

ஹாலில் அவர்கள் பேசுவதை எல்லாம் கேட்டபடியேதான்... கீர்த்தனா தன் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பாலாவோடு அவள் வாழத் தொடங்கி இன்றோடு ஒரு வாரம் ஆகிறது... ஒவ்வொரு நாளும் அவன் அவளிடம் புதிய கோலம்தான் போடுகிறான்...

ஒவ்வொரு விசயத்தையும் அவளுக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்கிறான்... உனக்காக நான் இருக்கிறேன் என்று ஒவ்வொன்றிலும் நிரூபித்துதான் காட்டுகிறான்... ஆனாலும்... அவனது காதலில் இவளால் முற்றிலும் திளைக்க முடியவில்லை... ஏனோ முழுவதும் அவன் மேல் நம்பிக்கை வைக்க முடியவில்லை...

காலம் இதையும் மாற்றும் என்ற நம்பிக்கையில்... இந்த வாழ்க்கைக்குத் தன்னைப் பழக்கிக் கொண்டாள்... பழகியும் கொண்டாள்... அதைச் சந்தோசமாகவும் ஏற்றுக்கொண்டு கணவனைத் தன்னால் முடிந்த அளவு சந்தோசமாகவும் வைத்துக் கொண்டாள்.

தன் நினைவில் இருந்தவள்... மீண்டும் அவர்கள் பேசுவதில் கவனம் வைக்க ஆரம்பித்தாள்.

ஆளாளுக்குப் பேசிக் கடைசியாக முடிவுக்கு வந்த போது, வினோத்தின் தலையில் தான் இடியை இறக்கினர்... அதாவது திருமணம் இன்னும் 4 மாதம் கழித்து எனவும்... ஒன்றரை மாதம் கழித்துக் கீர்த்திகாவின் கிராமத்தில் நிச்சயம் எனவும் முடிவு செய்ய... வினோத்துக்கு மழை விட்டும் தூவானம் முடியாத கதையாகப் போய்விட்டது...



இப்போ ஏன் இத்தனை நாள் தள்ளிப் போடுகிறார்கள் என்று வருத்தமும் கோபமும் வர, எதிரே உட்கார்ந்திருந்த கீர்த்திகாவை இயலாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இருவரின் சாதகப்படி 4 மாதம் கழித்துதான் செய்ய வேண்டும்... அப்போதுதான் எல்லாம் நன்றாக அமையும் என்று சொல்லப்பட்டதால் மீண்டும் கீர்த்திகா வாழ்க்கையில் எந்த வித ரிஸ்க்கும் எடுக்க வேண்டாம் என்றே எல்லோருக்கும் தோன்ற...

அனைவரும் அதற்கு உடன்பட்டனர்... பாலா உட்பட...

நிச்சயம் மட்டும் இரண்டாம் மாத இறுதியில் பண்ணிக் கொள்ளலாம் என்று முடிவு செய்து... அதற்காக இரண்டு நாட்களை முடிவு செய்தனர்...

அனைவரும் இரண்டாவது முகூர்த்த நாளை முடிவு செய்து ஓகே செய்யப் போக...

கீர்த்தனா மட்டும் அதற்கு மறுப்புத் தெரிவித்து முதல் முகூர்த்த நாளையே நிச்சயத்திற்குப் பார்க்கலாமே என்று சொல்ல...

வினோத்...

"என் கீர்த்தி செல்லத்துக்கு என்னைக்குமே என் மேல பாசம் அதிகம்தான்... அப்படியே கல்யாணத் தேதியையும் கொஞ்சம் முன்னால் வைக்கச் சொல்லுடா!" என்று கொஞ்ச -

"அங்க ஒருத்தி அவன் முன்னால அவனையே பார்த்துட்டு இருக்கால்ல... அவள கொஞ்ச வேண்டியது தானே... இன்னும் என்ன இவளையே... செல்லம்... னொல்லம்னு கொஞ்சிட்டு இருக்கான்... கீர்த்திகா வீட்ல இருந்து வேற அவ அப்பா இருக்காரு... லூசு மாதிரி பேசிட்டு இருக்கானே!" என்று தலையிலடிக்காத குறையாக இருக்க...

கீர்த்தியோ வினோத்துக்கு ஒரு பெரிய பல்பைக் கொடுத்தாள்.

"வினோத்! சாரிடா... என்னைத் திட்டாத... ஆனாலும் நீ ரொம்ப நல்லவன்டா... இன்னும் என் மேல நம்பிக்கை வச்சுருக்கியே..." என்று கீர்த்தி சிரிக்க...

வினோத் முழித்தபடி...

"அப்போ எதுக்கு இப்போ மாத்தச் சொன்ன..." என்று முறைத்தான்.

"அது... அது..." என்று தயங்க...

"பாலாதான்..."

"என்ன கீர்த்தி... இங்க எல்லாரும் என்ன பேசிட்டு இருக்கோம்... நீ என்ன விளையாடுறியா... அவன்கூட!" என்று அதட்ட -

"இல்ல பாலா... நீங்க எல்லோரும் குறிச்ச நாள்... நம்ம திருமண நாளுக்கு முந்தைய தினம்... அதுதான் அப்படிச் சொன்னேன்... அதற்கும் முன் முகூர்த்தம் 3 நாளைக்கு முன் வருகிறது... கீர்த்திகா கிராமத்திற்குப் போய்த் திரும்புவதற்கு அதுதான் வசதியாக இருக்கும்!" என்று சொல்ல...

பாலா... அசடு வழிய... கீர்த்தியிடம் பார்வையாலே மன்னிப்புக் கேட்டவனாய் இருக்க... கீர்த்தனா.. பதிலாய் அவனுக்குப் பார்வையாலே நெருப்பை உமிழ... வினோத்தோ,

"அதுதானே... சோழியன் குடுமி சும்மா ஆடுமா என்ன..." என்று அப்போது இருந்த கடுப்பிலும் அவளைக் கிண்டலடிக்க...

மோகனா... விஸ்வம்... கீர்த்திக்கு சப்போர்ட்டுக்கு வந்து விட்டனர்.

"எப்போ பாரு, அவ கூட வம்பிழுத்துட்டே இரு... என் மருமக சொல்லிட்டா நோ அப்பீல்..." என்று கீர்த்தனா சொன்ன தேதியையே முடிவு செய்தனர்.



அவர்களிடம் சிரித்துக் கொண்டிருந்த கீர்த்தனாவுக்கு... திடீரென்று... அங்கு ஒவ்வொருவரும் அவரவர் பெற்றோருடன் இருப்பதைப் பார்த்தவுடன்... கீர்த்திகாவிற்கு கூட அது சித்திதான்... இருந்தும்... அவளையுமறியாமல்... தன் தாய் - தந்தை நினைவில் கண் கலங்க ஆரம்பிக்க... சட்டென்று எழுந்து விட்டாள். அவர்கள் அனைவருக்கும் சிற்றுண்டி எடுத்து வரும் சாக்கில்...

அவள் முகம் மாறியதை யார் கவனித்தார்களோ... இல்லையோ... அவள் கணவன் கண்ணுக்கு அது தப்பவில்லை.

அனைவரும் பேசிக் கொண்டிருக்க... அவன் மட்டும் நழுவினான்...

கிச்சனுக்குள் அவன் நுழைந்த வுடனே மஞ்சு சிந்துவைக் கூட்டிக்கொண்டு வெளியே வந்துவிட்டாள்...

பாலா வந்ததை உணர்ந்த கீர்த்தி... ஈரமாய் இருந்த தன் கண்களைத் துடைத்தபடி...

"என்ன பாலா... என்ன வேண்டும்...?" என்று படபடவென்று கேட்டாள்.

பாலா... வெளியில் கண்களை வைத்துக்கொண்டே...

"இங்க வா..." என்று அவளைத் தன் கைவளைவில் கொண்டு வந்து,

"என்னைப் பாரு... எதுக்கு இப்போ... டேமைத் திறக்கிற?" என்று கேட்க.

"அழக் கூடாதுன்னுதான் பார்க்கிறேன். முடியல... என்னை ஏன் பாலா விட்டுட்டுப் போனாங்க அவங்க ரெண்டு பேரும்..." என்ற போது கண்கள் அவளையுமறியாமல் முத்துக்களை உதிர்க்க ஆரம்பித்தன.

அவள் கண்களில் வழிந்த நீரைத் துடைத்தவனாய்,

"கீது... கண்ட்ரோல் யுவர்செல்ஃப்... நடந்த எதையும் மாத்த முடியாது... அதைப் புரிஞ்சுக்கோடா... எல்லோரும் வந்துருக்காங்கள்ல... என்ன நினைப்பாங்க... கண்ணைத் தொட..." என்று பல சமாதானம் சொல்லி... அவள் முகம் தெளிய... அதன் பின் தான்... அங்கிருந்து வெளியேறினான்.

பேச்சுவார்த்தையின் முடிவில் வினோத் ஏகக் கடுப்பில் இருக்க... கீர்த்திகா... அவனைப் பரிதாபமாய்ப் பார்க்க... இருவரின் நிலைமை புரியாமல்... அவர்கள் வீட்டினர் அவர்கள் திருமணத் தேதியைக் குறித்தனர்.

வினோத்தும் ஒரு வழியாய் மனதைத் தேற்றிச் சமாதானம் ஆன போது, பாலா ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

கீர்த்திகாவின் தந்தையிடம்...

"அங்கிள்... திருமணம் நடக்கும்வரை கீர்த்திகா ஊரிலேயே இருக்கட்டும்... இங்கு இருக்க வேண்டாம்... அதுதான் வினோத்துக்கும் கீர்த்திக்கும் நல்லது... பிரதாப் இது நாள்வரை ஏன் அமைதியாக இருக்கிறான் என்று தெரியவில்லை... திருந்தி விட்டான் என்றெல்லாம் நினைக்க முடியவில்லை... மீண்டும் வினோத்தோடு எங்கேயாவது பார்த்து... ஏதாவது பிரச்சனை என்று நாமே இழுத்து வைத்துக் கொள்ள வேண்டாம்," என்று சொல்ல... அவன் சொல்வதில் உள்ள உண்மை புரிந்து அவர் அதற்கு ஆமோதிக்க...

வினோத்திற்குப் பாலாவின் மேல் கடும் எரிச்சல் வந்தது... அவனோ கீர்த்திகாவைத் தினம் சந்திப்பதையும் தடுத்து விட்டானே என்றே மனம் குமுறிக் கொண்டிருந்தான்.

பெரியவர்கள் அனைவரும் கிளம்ப...

சற்று நேரம் கழித்து வருவதாகக் கூறி... கீர்த்திகாவுடன் அவன் மட்டும் பாலா வீட்டிலேயே தங்கினான்...



மொட்டை மாடியில்...

சலங்கை மாட்டாத குறைதான் வினோத்திற்கு

"உனக்கு எத்தனை நாள் பாலா... என் மேல கோபம்... சந்தர்ப்பம் கிடைச்சவுடனே பழி வாங்கிட்ட..." என்று அவன் பாலாவிடம் முறைக்க...

"லூசு மாதிரி பேசாத வினோத்... எனக்கு மட்டும்தான் தெரியும் என்னோட அவஸ்தை... அந்தக் கிறுக்கன நினைத்து... அவன் என்ன செய்வான்... என்ன செய்யப் போறான்னு கூட தெரியாம தவிச்சுட்டு இருக்கேன்..." என்ற போதே பழைய நினைவுகளில் கீர்த்திகா கண் கலங்கி விட்டாள்.

"என்ன அவன் பெரிய இவனா... இந்த 4 மாசம் ஓகே... அதுக்கப்புறம்... அவனுக்குப் பயந்துட்டு என்னை இவளக் கூட்டிட்டு இந்தியாவ விட்டே போகச் சொல்லப் போறாயா...? பெருசா சொல்ல வந்துட்டான்!" என்று தன் கோபத்திலேயே நிற்க...

இரு பெண்களுக்கும் வினோத் சொல்வதும் சரிதான் என்று தோன்ற...

கீர்த்தனா பாலாவிடம்,

"வினோத் சொல்வது சரிதானே பாலா... எத்தனை நாள்தான் இப்படி ஓடி ஒளிவது..." என்று கேட்க.

அவள் கேட்டதுதான் தாமதம்...

"திருமணம் முடியும் வரை வேறு எந்தப் பிரச்சனையிலும் மாட்ட வேண்டாம் என்று நான் நினைக்கிறேன்... அதன் பிறகு அவரவர் விருப்பம்..." என்று கல் போன்ற இறுகிய முகத்தோடு கீழே இறங்கிப் போக முயல...

வினோத்தோ... அதற்கு மேல் நிற்க.

கீர்த்தனா... யாருக்கு சப்போர்ட் செய்வது என்று புரியாமல் தடுமாறியபடி நிற்க....

கீர்த்திகாதான்...

"நில்லுங்க பாலா... நீங்க எது சொன்னாலும்... என் மேல இருக்கிற அக்கறைலதான்னு எனக்குத் தெரியும்... நீங்க சொன்னபடியே... நான் ஊருக்குப் போகிறேன்," என்று பாலாவிடம் கூற... வினோத் அவளை முறைத்தபடி நின்றான்.

"தேங்க்ஸ் கீர்த்திகா!" என்றபடி பாலா இறங்கிப் போக... கீர்த்தனாவும் அவன் பின்னே சென்று விட்டாள்.

முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு நின்ற வினோத்தின் அருகில் போனாள் கீர்த்திகா.

"வினோ... என்ன இவ்வளவு டென்சன் ஆகுறீங்க...?" என்று அவன் தோள் சாய...

"கீர்த்தி... 4 மாசம்... அதுவே எப்படிடா போகும்னு நான் தவிச்சுட்டு இருக்கேன்... ப்ரதாப்... அமிதாப்புனு கடுப்பை ஏத்துறாங்க எல்லோரும்... அவன் மட்டும் என் கைல மாட்டட்டும்..." என்று கடுப்பாய்க் கூற...

கொஞ்சம் நிலைமை புரிந்து சமாதானமானான்...

"ஆமா... உனக்கு... என்ன... சரி. 4 மாசம்னு குண்டைத் தூக்கிப் போட்டாங்க... உன்னைப் பார்த்துட்டே... உன்னோட பேசிட்டே ஓட்டலாம்னு பார்த்தா... இந்தப் பாலா அதுக்கும் வழி இல்லாம பண்ணிட்டான்..." என்றவன், கிண்டலாக -

"ஒருவேளை என் மேல் பயபுள்ளைக்கு ரொம்ப நாள் காண்டா இருந்திருக்கும் போல... கீர்த்தனாவோட பாசமா இருக்கேனு... அதுதான் தீர்த்துக்கிட்டானோ?" என்று கூற.

சிரித்து விட்டாள் கீர்த்திகா.

"சிரிக்காத கீர்த்தி... அவனுக்குப் பொறாமை... அவன் பொண்டாட்டி என்கிட்ட உரிமையா பேசறாள்னு..." என்று கூற...



"எனக்கே பொறாமையாத்தான் இருந்தது... ஆனா இப்போ இல்ல..." என்று அவன் முகம் பார்த்துச் சொல்ல...

காதலனாய் மாறினான் வினோத்...

"அப்டியா... என் செல்லத்துக்கு என்ன பொறாமை... அவ அப்பா... அம்மா இல்லாத பொண்ணு... அவளுக்குனு யாருமே இல்ல கீர்த்தி. இப்போ நாங்கதான், இல்ல... நாம மட்டும் தான் அவளுக்கு இனி பிறந்த வீட்டுப் பந்தம்... கண்டிப்பா அவ மேல எனக்குப் பாசம் இருக்கும்மா... அத நீ புரிஞ்சுக்கணும்... புரிஞ்சுக்குவேன்னு நினைக்கிறேன்..." என்றவனிடம்...

"கண்டிப்பா வினோ... அவ மேல எனக்குப் பொறாமை எல்லாம் கிடையாது... உங்க செல்லம் இனிமே எனக்கும் செல்லம். போதுமா..." என்று சொல்ல -

"அடேங்கப்பா... அவ்ளோ பெரிய ஆளாகிட்டியா நீ... உன் மது மட்டும் இதைக் கேட்டா... நான் வளர்த்த கீர்த்தி... இந்த அளவுக்கு வளர்ந்துட்டாளானு பூரிச்சுப் போய்டுவா!" என்று விளையாட்டாய்ச் சொல்ல.

கீர்த்தி முகம் மாறியவளாய்,

"மது திரும்ப வருவாளா வினோ... என்னைப் பார்த்தா அவ எவ்ளோ சந்தோசப்படுவா தெரியுமா... அதிலும் ஆதி அவளிடம் கேட்டது போல நான் மாறிவிட்டேனு தெரிஞ்சா... ஏன் வினோ அவளுக்கு இப்படி ஆனது... அவ என்ன பாவம் பண்ணினாள்... என்னதான் இருந்தாலும் அவ பாலாவை மிஸ் பண்ணிட்டாதானே..." என்று வருந்திக் கூற...

"அவளுக்கு யாரும் விரோதிங்க இருந்தாங்களா கீர்த்தி...? இல்ல... பாலாவை லவ் பண்ணியதால்... இந்த நிலையா...? இத்தனை வருசம் அவளைப் பற்றி ஒரு தகவல் கூட கிடைக்கவில்லை என்றால்... எனக்கு ஒண்ணும் புரியலை... பாலா எப்படித் தவறவிட்டான்...? இன்னைக்கு

எனக்கு மட்டும் புத்திமதி கூற வந்துட்டான்... அந்த வீட்டில் அவள எப்படித் தனியா விட்டான்...?"

"தனியானு சொல்ல முடியாது... வசந்தி ஆன்ட்டியும் கூட இருந்தாங்க..." என்று கூற...

"ஹ்ம்ம்ம்ம்ம்... இன்னார்க்கு இன்னாரென்று எழுதி வைத்தான் இறைவன்... அதுதான் நடக்குது போல..." என்றபடி, அவளிடம் அருகில் நெருங்கி...

"மேடம் ஊருக்குப் போறீங்க... கொஞ்சம் இந்த சின்னப் பையன பார்த்துக் கவனிச்சிட்டுப் போனா நல்லா இருக்கும்... 2 மாதத்துக்கு தாங்குற மாதிரி!" என்று ஏக்கப் பார்வை பார்க்க...

"சின்னப் பையன்... நீங்க... ஓ! கவனிக்கலாமே!" என அவனவள் கூற

வினோத் முகம் பிரகாசமாக...

"கீர்த்தி டார்லிங்... நிஜமாகவே..." என்று நம்பாமல் கேட்க...

"ஆமாம். இப்படித்தான்..." என்று அவன் கன்னத்தில் செல்லமாய் இரண்டு அடி போட்டபடி... அவனிடம் மாட்டாமல்... துள்ளியபடி இறங்கி ஓட... அவளைத் துரத்தியபடி கீழே இறங்கினான் வினோத்...

அதன் பிறகு... பாலா வீட்டில் இரவு உணவையும் முடித்து அவர்கள் இருவரும் கிளம்பிச் சென்றனர்... கூடவே ஆயிரம் பத்திரங்களையும்.... அறிவுரைகளையும் பாலாவிடம் வாங்கிக்கொண்டே...

அன்று இரவு...

கீர்த்தனா, பாலாவிடம்...

"வினோத்த பார்க்கவே பாவமாய்ப் போச்சு பாலா... நீங்க ஏன் அப்படிச் சொன்னீங்க... பாவம்! அவன் ரொம்ப



ஃபீல் பண்றான்!" என்று வினோத்தின் மேல் அக்கறையாகக் கணவனிடம் கேட்க.

"நல்லா பாவம் பார்ப்படி நீ... இப்போ என்ன நடந்திருச்சுனு... அவன் பாவமா போய்ட்டான்... என்னை விடலாம் கம்மிதான்... அது எப்படி கீர்த்தி... உனக்கு என்னப் பார்த்தா மட்டும் பாவம் வர மாட்டேங்குது... என்னைத் தவிர மத்த எல்லார்க்காகவும் பரிந்து பேச முன்னால வந்து நிக்கிற..." என்றவனிடம்,

"இந்த முகத்தைப் பார்த்தால் காதல்தான் வரணும்... பாவம் எதுக்கு வரணும் பாலா?" என்று அப்பாவியாய் அவன் மீசையைப் பிடித்துத் திருகினாள் கீர்த்தி.

"ஏய்... வலிக்குதுடி..." என்றவாறே...

"அப்படியே காதல் வந்து உடனே சொல்லிட்ட பாரு..." என்று அவளை வம்பிழுக்க...

"நான் சொன்னவுடன் அப்படியே உருகியிருப்பீங்க பாருங்க!" என்று கணவனுக்குப் பதிலடி கொடுக்க...

"இந்த வாய எல்லாம் இத்தனை நாள் எங்கதான் ஒளிச்சு வச்சுருந்தியோ!" என்று கெஞ்சியவாறே, அவள் இடையில் கைபோட... அவன் போட்ட விதமே அவனின் அடுத்த கட்ட நடவடிக்கையைக் கீர்த்தனாவுக்குத் தெளிவாக விளக்க.

"பாலா... எனக்குத் தூக்கம் வருது..." என்றாள் தயக்கமாக.

அவள் தயங்கிய அழகிலேயே மயங்கியவன்... ஒரு வாரமாய் அவள் ஒழுங்காக உறங்கவில்லை... அவனும் விடவில்லை... என்பதால்.

"சரி, தூங்கு... ஆனா இப்படியே!" என்றபடி தன்னோடு அணைத்தபடி உறங்கப் போக...

மெதுவாய் நிமிர்ந்து கேட்டாள்.

"கோபமில்லைல..."

சிரித்தான் கணவன்.

"உன் மேல எனக்கு எதுக்குக் கோபம்... ஒரு வாரம் ஆபீஸ் வராமல் கூட செமையா எனக்காக வேலை பார்க்கிற... என்னை மாதிரியா... ஆபீஸ் ஒரு பக்கம்... நீ ஒரு பக்கமுனு... ஆனாலும் எனக்கே தூக்கம் வரல... உனக்கு எப்படி... பகல்ல தூங்கத்தானே உனக்கு லீவே கொடுத்துருக்கேன்!" என்று கண்ணடிக்க...

"கவி வேற... அன்னைக்கு வேற கோபமா போனீங்க ரெண்டு பேரும்... நீ வேற வரலே... என்ன ஆச்சுனு என் மானத்தை வாங்கிட்டு இருக்கா... வினோத் மேரேஜ் அப்படி இப்படின்னு சொல்லி... ஏதோ சமாளிச்சிட்டு இருக்கேன்... நாளைக்கு என்ன கேள்விலாம் கேக்கப் போறாளோ... அவள சமாளிக்கிறதுதான் எனக்குப் பெரிய பாடு!" என்று அலுத்தவளை...

"நீ இப்படியே பேசிட்டு இருந்த என்னைக் கன்ட்ரோல் பண்றது கஷ்டம்... முன்னால் கூட அது கஷ்டம் இல்லை... இப்போ அது முடியாது... எப்படி வசதி?" என்று சொல்லி முடிக்கும் முன் கீர்த்தனா கண்களை மூடி இருக்க...

"அடிப்பாவி!" என்றவன் அவளைப் பார்த்தபடியே இருக்க... ஆசையோடு மனைவியைத் தழுவியிருந்த அவனை... சில கணங்களில்... உறக்கம் வந்து ஆசையோடு தழுவ ஆரம்பித்தது.

கீர்த்திகா அடுத்த இரண்டு நாட்களில் தனது ஊருக்குக் கிளம்பினாள். அவளைப் பயணம் அனுப்ப வந்த வினோத் பண்ணிய அலம்பலைப் பார்த்த கவியும், கீர்த்தியும் அவனை ஓட்டுவதையே பொழுதுபோக்காக்கி விட்டிருந்தனர்.



இப்போது அதுமட்டுமில்லாமல்... கீர்த்தியிடம் ஏதும் விசாரிக்காமலே பாலா - கீர்த்தனாவின் நடவடிக்கைகளிலே... அவர்கள் இருவரும் பழகும் விதம் பார்த்தே... கவி மற்றும் வினோத்துக்கு அனைத்தும் புரிய... அவர்களும் தங்களுக்குள் சந்தோசப்பட்டுக் கொண்டனர்.

இப்படி இங்கு ஒவ்வொருவரும் சந்தோசத்தில் இருக்க... கீர்த்திகா ஓரளவு தன் பார்வை வட்டத்தில் வைத்திருந்த பிரதாப்புக்கு... அவள் தோற்ற மாற்றம்... அவனுக்குள் இருந்த அவள் மீதான வெறியை மீண்டும் கிளப்ப... அவளை மீண்டும் தொடர ஆரம்பித்து இருக்க... அத்துடன் அவளை வினோத்தோடு சேர்ந்து சில இடங்களில் பார்க்க... வெறிபிடித்தவனாய் மீண்டும் தன் வேலையை ஆரம்பிக்கத் தொடங்கியிருந்தான்.

நாட்கள் வேகமாகச் செல்ல, கீர்த்திகா - வினோத் நிச்சய நாளும் நெருங்கியது... கீர்த்தனா, சிந்து என இளைய பட்டாளங்களும், பெரியவர்கள் என அனைவரும் ஒரு வாரத்திற்கு முன் கிளம்ப...

வினோத்தும், பாலாவும் குறித்த நாளுக்கு ஒரு நாள் முன்னதாகக் கிளம்புவதாக இருந்தனர்.

இருவரும் அவரவர் வேலை நிமித்தமாக... கவி திருமணத்தில் கலந்து கொள்வதாகக் கூறி... இந்த விழாவிற்கு வரவில்லை.

கீர்த்தனா மற்றும் பாலா வருவதால், கீர்த்திகா அவளது அறையில் இருக்கும் அவளும், மதுவும் சேர்ந்து இருக்கும் புகைப்படத்தைக் கூடக் கழற்றி விட்டிருந்தாள்.

முந்தின நாள்... அனைவரும் அந்தக் கிராமத்தில் உள்ள கோவிலுக்குக் கிளம்ப ஆயத்தமாக... சிந்து மட்டும் வீட்டிற்குத் தூரமாக இருக்க... கீர்த்தனாவும் அவளுடனே தங்க, மற்ற அனைவரும் கிளம்பினர்...

அப்போதுதான் கீர்த்தனாவுக்குத் தனக்கு ஏன் இன்னும் வரவில்லை என்ற ஞாபகம் வர... உள்ளம் படபடத்தது... நாள் கணக்கை எண்ணிப் பார்க்க கிட்டத்தட்ட 10 நாட்கள் தள்ளியிருந்தது... அவளையும் அறியாமல் கண்கள் கலங்கியது...

தனக்கும் பாலாவுக்கும் உறவின் அத்தாட்சியாய்... அவளோடு கலந்த அவன் உயிர் அவளுக்குள் ஒரு ஜீவனாய் உருவாகிக் கொண்டிருப்பதை அவள் உணர... உணர்ந்த நொடியே இரண்டு எண்ணம் தோன்றியது... ஒன்று தாய் மடி... அது கிடைக்காது... மற்றொன்று... அப்போதே பாலாவைப் பார்க்க வேண்டும்... அவனோடு பேச வேண்டும் போல் இருக்க... அவனுக்கு உடனே போன் செய்யப் போனாள் கீர்த்தனா.

போனை எடுத்தவளுக்கு இன்னும் 3 நாட்கள் கழித்து வரும் திருமண நாள் நினைவுக்கு வர... தங்கள் திருமண நாளுக்கு இந்தச் செய்தியையே அவனுக்குப் பரிசாகக் கொடுக்க வேண்டும் என்ற முடிவில்... சொல்ல வந்த விசயத்தைச் சொல்லாமல் ஏதேதோ பேசியபடி வைத்தாள் போனை.

மனமெங்கும் உற்சாகமாய் வளைய வந்தாள் கீர்த்தனா... அது அவளுக்கு முகத்திலும் பரவ... புதிய தேஜசைக் கொடுத்து... அன்று இரவே பாலாவும், வினோத்தும் அங்கு வந்து சேர்ந்தனர்.

இருவரும் வந்து வீட்டினுள் நுழையும் போது, கீர்த்தனா வெளி வராண்டாவில் உட்கார்ந்து கீர்த்திகாவின் கையில் மருதாணி போட்டுக் கொண்டிருக்க... சிந்து உள்ளே டிவியில் ஐக்கியமாகி இருந்தாள்.

பாலாவைப் பார்த்த வுடனே கீர்த்தனாவின் மனம் தன் நிலையை உடனே சொல்லத் துடிக்க... துடித்த மனதை



அடக்கியபடி அவனைப் பார்க்க... மனைவியின் கண்கள் அவனிடம் ஏதோ சொல்ல வருவதை உணர்ந்த பாலா.. என்ன என்பது போல் புருவம் உயர்த்த... ஒன்றுமில்லை என்று அப்போது சமாளித்தாள் கீர்த்தி.

வினோத்தைப் பார்த்த கீர்த்திகாவுக்கு நாணம் மேலிட, அவனைப் பார்க்காமல் தவிர்க்க... வினோத் அவள் பார்வை வரம் கிடைத்தால் தான் உள்ளே போவேன் என்று அங்கேயே அமர... பாலா மட்டும் வீட்டிற்குள் நுழைந்தான்.

கீர்த்தனா போட்டுக் கொண்டிருந்த மருதாணியைப் பாதியில் விட்டு விட்டுப் போக முடியாமல் அதைத் தொடர ஆரம்பித்தாள்... பாலா உள்ளே சென்ற பின்னாலும் அவனோடு போகாமல் கீர்த்தனா மட்டுமே இருந்ததால், கீர்த்திகாவிடம் வினோத் தன் சில்மிசத்தைக் காட்ட ஆரம்பித்தான்.

"கீர்த்தி...!" என்று அவன் அழைக்க...

இரண்டு கீர்த்தியும் திரும்பிப் பார்க்க...

விழித்தான் வினோத்... பின் சுதாரித்துக் கொண்டு,

"கீர்த்தி செல்லம்... நீ மருதாணி போடுறதுல மட்டும் கவனமா இரு... இப்போதைக்கு வேற எங்கேயும் கவனம் வைக்காதே..." என்று கூற,

"அவனிடம் உனக்கு என்னடா இங்க வேலை... உள்ளே போ..." என்றபடி,

கணவனைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில்... வினோத் பேச்சின் அர்த்தம் எல்லாம் அவளுக்கு உறைக்கவில்லை. கீர்த்திகாவுக்கு வேகவேகமாக மருதாணி வரைய ஆரம்பித்தாள்.

வினோத்திடம் என்ன வித்தியாசமும் தோன்றாமல் போக... கீர்த்தனா தன் வேலையில் மீண்டும் கவனமாக ஆரம்பித்தாள்.

வினோத் கீர்த்திகாவின் அருகில் நெருங்கி அமர்ந்து... அவளது இடையின் பின்னால் இருந்து மெதுவாய் அணைக்க... கீர்த்திகா நெளிய ஆரம்பித்தாள்.

"ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்... கீர்த்தி... ஆட்டாதீங்க!" என்றபடி நிமிர்ந்து கூடப் பார்க்காமல் கீர்த்தனா தன் வேலையிலே கருத்தாக இருந்தாள். கணவனைக் காணும் அவசரத்தில்...

இரண்டு முறை தன்னைக் கட்டுப்படுத்திய கீர்த்திகா, மூன்றாம் முறை வினோத் என்று கத்தியே விட்டாள்.

"வினோத்தா..."

"மானத்த வாங்கிவிட்டாளே குறத்தி முன்னால்..." என்று அசடு வழிய...

கீர்த்தனாவுக்கும் வினோத்தின் திருவிளையாடல் புரிய... வினோத்தை முறைத்தாள்.

வினோத் கொஞ்சம் தைரியம் வந்தவனாய்...

"என்ன முறைக்கிற... உன் ஆளு வந்துட்டான்ல... அவனப் போய் என்ன ஏதுன்னு பார்ப்பியா... மருதாணி வைக்கிறாளாம்... போ போ. இடத்தைக் காலி பண்ணு... சின்னப் பசங்களுக்கெல்லாம் இங்க வேலை இல்ல... சிந்துவோட போய் சமத்தா உட்கார்ந்து டிவி பாரு... இல்ல பாலாவைப் போய்ப் பார்... இப்போ என் ஆளை விடு!" என்று மிரட்டுவதைப் போல் கூற,

"கீர்த்தி! நான் அப்புறம் வர்றேன்... இல்ல... இவன உங்க முன்னாலேயே நாலு அடி போட்டாலும் போட்ருவேன்... அப்புறம் பாலாகிட்ட திட்டு வாங்கணும்... எல்லாரும் இருக்கும் போது இவன அடிக்கக் கூடாதாம்... சப்போர்ட் வேற இவனுக்கு...

"பேய்! நான் உனக்குச் சின்னப் புள்ளையா... உன்னைப் போய் நம்பி உட்கார்ந்திருந்தேன் பாரு... என்னைச்



சொல்லணும்... நடத்து நடத்து... ரொம்ப நாள் கழிச்சு கீர்த்திகாவ பார்க்கிறாய் என்பதால் விட்டுட்டுப் போறேன்!" என்றபோது, வினோத்,

"ஆமா... நீ சின்னப் பப்பாதான்... பாலா என்னை அடிக்கக் கூடாதுன்னு எதுக்குச் சொல்லியிருப்பான்னு எனக்கு மட்டும் தான் தெரியும்... எனக்கு சப்போர்ட்டெல்லாம் இல்ல... அத விடு... நான் கீர்த்தி பக்கத்துல உட்கார்ந்த போதே.. நீ எழுந்து போயிருக்க வேண்டும்... உள்ள உக்காந்துருக்காளே சிந்து, அவகூட அத பண்ணியிருப்பா... போ போ. நீ இன்னும் வளரணும்..." என்று கூற,

கீர்த்திகா இருவரையும் பார்த்துச் சிரிக்க...

"ச்சேய்... அவன் உட்கார்ந்த வுடனே நான் இடத்தைக் காலி பண்ணியிருக்கணும்... ராஸ்கல்... என் முன்னாடியே..." என்றபடி பாலா சொன்னதை எல்லாம் காற்றில் விட்டவளாய்... அவனை இரண்டு அடி வைத்துவிட்டு அவர்களுக்குத் தனிமை தந்தபடி... பாலாவை நோக்கிப் போனாள்.

பாலா குளியலறையில் இருக்க... திரும்பி வந்தவள், சிந்துவோடு படம் பார்ப்பதில் ஐக்கியமானாள்.

பாலா வெளியே வரும்போது கீர்த்தனா... சிந்துவோடு ஏதோ பேசிக் கொண்டிருக்க... அவளையே பார்த்தபடியே அவன் வந்தான்... அவள் முகத்தில் ஏதோ புதுப் பொலிவு வந்தது போல் தோன்றியது அவனுக்கு.

அவன் அவளை நோக்கி வரும்போதே கீர்த்திகாவின் சித்தி, அவனைச் சாப்பிட வருமாறு அழைக்க... வேறு வழி இல்லாமல் அவர் பின்னால் போய் விட்டான்.

கீர்த்திகாவின் தங்கை, அவள் கணவன் என்று எங்கும் இளமைக் கூட்டமாக வழிய... அன்று இரவு அனைவருக்கும் உறங்கா இரவாகப் போக... ஒரு வழியாக இரவு 2 மணிக்கு மேல் தான் அனைவரும் உறங்கினர்.

ஆண்கள் அனைவரும் மாடியில் உறங்க...

பெண்கள் அனைவரும் கீழே உறங்கினர்.

ஆக மொத்தம் பாலாவால் கீர்த்தனாவை நெருங்கவே முடியவில்லை... பொறுக்க முடியாமல் கீர்த்தனாவிற்கு மெசேஜ் அனுப்பி அவளை மொட்டை மாடிக்கு வரச் சொல்ல...

கீர்த்தனாவும் கிளம்ப... இருவரும் யாருக்கும் தெரியாமல் மேலே போக...

அங்கு அவர்களுக்கு முன்னே...

வினோத் - கீர்த்திகா இருவரும் பேசிக் கொண்டிருக்க... தலையிலடித்துக் கொண்டாள் கீர்த்தனா.

"அடப்பாவி... இப்படித் தூள் கிளப்புறானே..." என்று பெருமூச்சு விட்டவளாய்...

"சரி, வாங்க... 2 மாசம் போன்லயே பேசித் தவிச்சுப் போயிருப்பான் போல... அவங்க என்ஜாய் பண்ணட்டும்..." என்றவள்,

வினோத் வந்த போது கீர்த்திகாவிடம் அவன் நடந்து கொண்ட முறையைச் சொல்லி

"என்ன சின்னப் புள்ளைனு சொல்றான் பாலா..." என்று குற்றப் பத்திரிகை வாசித்துக் குமுற ஆரம்பித்தாள்.

"சரி, விடுடி. தெரியாம சொல்லிட்டான்... நீ நான் வந்தப்பவே உள்ள வந்திருக்கணும்... என்னைப் பார்த்தவுடனே உள்ள வராம இருந்தேல்ல. உனக்கு நல்லா வேணும்... ஆனா நீ சின்னப் புள்ளைனு சொல்லிட்டானே... எனக்கு மட்டும்தானே தெரியும் நீ..." என்று மாடிப்படிகளிலே வைத்து அவளைத் தன்னோடு சேர்க்க...

அவன் வாயைக் கைகளால் மூடியவள்...

"கேடி... உன்னை..." என்றபடி,



"போடா... நான் போறேன்... உனக்காக மேலே ஏறி வந்தேன் பாரு... என்னைச் சொல்லணும்..." என்று வெட்கத்தில் சிட்டாய்ப் பறந்துவிட்டாள் கீர்த்தனா.

அவள் வெட்கத்தில் ஓடிப் பறந்ததைப் பார்த்தவனின் மனமும் சிறகை விரித்துப் பறக்க ஆரம்பிக்க... அவளின் வெட்கத்திற்கான நினைவுகளைச் சுகித்தவனாய்க் கீழே இறங்கினான்.

அடுத்த நாள் எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் வினோத் - கீர்த்திகா இருவரின் திருமணமும் உறுதி செய்யப் பட்டது.

வினோத் - கீர்த்திகா இருவரும் மோதிரம் மாற்றித் தங்களது நிச்சய அடையாளத்தையும் வெளிப்படுத்தினர்.

சிந்து... கீர்த்தனா என்று அவர்கள் இருவரையும் ஒட்டியே நாளைக் கழிக்க... எல்லாம் முடிந்து அனைவரும் அன்று மாலையே கிளம்ப... வினோத்... கீர்த்திகா இருவர் முகமும் வாடிவிட்டது.

கீர்த்திகாவிடம் சொல்லிவிட்டு வர அவள் அறைக்குப் போன கீர்த்தனாவுக்கு... அவள் கலங்கிய கண்களே அவள் நிலைமையைச் சொல்ல... கணவன் மேல் கோபம் கோபமாக வந்தது...

யோசித்தவள், வினோத்துக்கு போன் போட்டு மேலே வரச் சொன்னாள்.

அறையின் வெளியே நின்றிருந்த கீர்த்தனாவிடம்,

"என்ன கீர்த்தி, எதுக்கு வரச் சொன்ன... கீழ கிளம்பிட்டு இருக்காங்க... வா... தேடப் போறாங்க..." என்றவனிடம்,

"டேய் லூசு... கீர்த்தி அழறாங்க போலடா... எதுனாலும் பேசிச் சமாதானம் பண்ணிட்டு வா... நான் இங்கேயே வெயிட் பண்றேன்..."

"10 நிமிசம்தான்டா... அதுக்குள்ள வந்துறணும்..." என்றவளின் வார்த்தைகளைக் கேட்க அவன் அங்கு இல்லை.

உள்ளே நுழைந்தவன், அறைக் கதவை மூட... கீர்த்திகா யாரென்று திரும்பிப் பார்க்க... வினோத் என்றவுடன் ஓடோடி வந்து அவனைக் கட்டிக் கொண்டாள்.

"கீர்த்தி! என்ன இது... எதுக்கு இந்த அழுகை..."

"தெரியல வினோ... என்னையவும் உங்ககூட கூட்டிட்டுப் போய்டுங்க வினோ... எனக்குத் தனியா இருக்கவே பிடிக்கல... ஏதேதோ ஞாபகங்கள்... உங்களோட அருகாமையிலதான்... எனக்கு நிம்மதியா இருக்கு வினோ..." என்று கலங்க.

"நான் என்னடா பண்றது... இந்தப் பாலாதான் இப்படிப் பண்ணி வச்சுட்டானே... அன்னைக்கு அவன் சொன்னதுக்கு ஓகேனுதான சொன்ன... இப்போ என்ன..."

பேசிக் கொண்டிருக்கும் போதே கீர்த்தி அவனுக்கு மிஸ்டு கால் செய்து வெளியே வரச் சொல்ல... அவனோ அதை எல்லாம் கவனிக்கும் நிலையில் இல்லை...

கீர்த்தனா யாரும் வந்து விடப் போகிறார்களோ என்று பதட்டத்துடன் பார்த்தபடி நின்று கொண்டிருக்க...

அதை அதிகமாக்குவது போல் யாரோ வரும் அரவம் கேட்க... திரும்பிப் பார்க்க... நல்ல வேளை, பாலாதான் மேலே ஏறி வந்து கொண்டிருந்தான்...

நிம்மதியாக மூச்சை இழுத்து விட்டாள் கீர்த்தனா.

"சரி... சரி... அழாத... வா, உன்ன நான் என் கூட கூட்டிட்டுப் போறேன்..." என்றவனை,

"எப்படி வினோ... பாலா ஓகேனு சொல்ல மாட்டாரே?" என்று வருந்த,



"எதுக்குக் கீர்த்தி இருக்கா... அவ மூஞ்சியத் தூக்கி வச்சா... பையன் தானா கீழ இறங்கி வந்துருவான்... கீர்த்திக்கு கூட அவன் மேல இதில கோபம்தான்!" என்றபடி பேசிக் கொண்டிருக்க...

வெளியே... படபடப்பும் அச்சமுமாய் நின்ற மனைவியைப் பாலாவுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை.

"என்ன பண்ணிட்டு இருக்க நீ இங்க... அங்க கீழ வா..." என்று கைகளைப் பிடித்தபடி அவளைக் கீழே கூட்டிச் செல்ல முயல...

'பாலா...' என்ற போது, அவளுக்கு வார்த்தையே வரவில்லை

"என்னடி?" என்று புரியாமல் கேட்டான். அவள் பாலா என்று சொன்ன அழகில்.

"கீர்த்தி... வினோத் ரூம்ல..." திக்கித் திணறி வார்த்தைகள் வெளிவந்தன.

பாலாவுக்குப் புரிய...

"அவங்கள உள்ள விட்டுட்டு நீ என்ன காவலா... அப்டியே அறஞ்சேனு வச்சுக்க... கீர்த்திகா வீட்ல யாராவதுனா கூட பரவாயில்ல... வேற யாராவது பார்த்தாங்கன்னா என்ன ஆகும்... இது கிராமம் வேற... அவன வெளில கூப்பிடு..." என்று கத்த ஆரம்பிக்க...

வினோத்துக்கு கால் பண்ண ஆரம்பிக்க... அவனே கீர்த்திகாவோடு வெளியே வர... கீர்த்திகாவைப் பார்த்த பாலாவுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

அழுதழுது சிவந்திருந்தது அவள் முகம்,

"ஏன் பாலா இப்படிப் பண்றீங்க... கீர்த்திய ஏன் இப்படி அழ விடுறீங்க... அவளையும் நாம கூட்டிட்டுப் போகலாம் பாலா... ப்ளீஸ்... நம்ம வீட்லயே அவ இருக்கட்டும்... வெளில கூட அவ போக வேண்டாம்... வினோத் நம்ம வீட்லயே வந்து பார்த்துக்குவான்!" என்று கீர்த்தி கெஞ்ச...

கீர்த்திகாவின் முகம் பார்த்தே கொஞ்சம் இளகியவன்... மனைவியின் கெஞ்சலும் சேர்ந்து கொள்ள... வேறு வழி இன்றி... கீர்த்திகாவையும் அவர்களோடு கூட்டிப் போகச் சம்மதித்துக் கீர்த்தியின் தந்தையிடமும் அனுமதி வாங்கினான் பாலா.

கீர்த்திகா முகத்தில் சந்தோசம் வர, அது அனைவரிடமும் தொற்ற... அனைவரும் சென்னை நோக்கிய பயணம்.

இரயிலில் பாலா அருகில் அமர்ந்திருந்த கீர்த்தனாவைப் பார்த்து, "இப்போ மேடமுக்கு ஓகேவா..." என்று கேட்க.

அவனையே பார்த்தபடி... "அவங்க அழுதாங்க பாலா... பார்க்கவே கஷ்டமா போய்விட்டது... ஒரு பொண்ணு மனசு பொண்ணுக்கு மட்டும் தான் தெரியும்..." என்றவள் உற்சாகமாக -

"கீர்த்திகா இப்போ ஹேப்பியா ஆகிட்டாங்க... சோ எனக்கும் ஓகே..." என்று கூற.

"அப்போ எனக்கும் கணக்குப்படி வட்டியும் முதலும் கரெக்டா வந்து சேருமா...? ஏன்னா... ஒரு வாரப் பாக்கி இருக்கு!" என்று தாபமாய்ப் பேச... மலங்க மலங்க விழித்தாள் கீர்த்தனா.

இன்னும் இரண்டு நாட்கள் வரை அவனிடம் எப்படி சஸ்பென்ஸ் வைத்துச் சொல்வது என்று... 40 நாட்கள் மட்டுமே ஆன கருவுக்கு அவர்கள் கூடலினால் ஏதாவது ஆகிவிட்டால்...

கணவனிடம் சொன்னால் புரிந்து கொள்வான்... சொல்லாமல் இருந்தால் அவளை அவன் விடமாட்டான்... என்று தோன்ற ஏதாவது சொல்லிச் சமாளிப்போம்... இல்லை என்றால்... சஸ்பென்சும் வேண்டாம்... ஒண்ணும் வேண் டாம்... எனக்கு என் குழந்தை முக்கியம்... என்றபடி மன திற்குள் சொல்லிக் கொண்டாள் - நாளை நடக்கப் போவதை அறியாமல்...



4 மணி அளவில் சென்னை வந்து இறங்கியவர்கள், அந்த நாள் அவரவர் வழக்கமான பணிகளை ஆரம்பிக்கும் முன் கிடைத்த சிறிது நேரத்தில் உறங்க முயன்றனர் - அவரவர் இல்லங்களில்.

கீர்த்தனாவுக்கு மட்டும் தூக்கமே வரவில்லை. 6 மணி எப்போதடா ஆகும் என்றிருந்தது. கர்ப்பத்தை உறுதி செய்யும் அட்டையை யாருக்கும் தெரியாமல் வாங்கி வைத்திருந்தாள். அதில் சோதனை செய்து உறுதி செய்யக் காத்திருந்தவளுக்கு உறக்கம் எங்கு வருவது... அவள் உறங்காமல் புரண்டு கொண்டிருப்பது அவளை அணைத்தபடி படுத்திருந்தவனுக்குத் தொந்தரவாக இருக்க... எரிச்சலுடன்,

"கீது... என்ன பண்ணிட்டு இருக்க... தூக்கம் வரலயா...?" என்று கேட்க,

அவளோ வரவில்லை என்று தலையை ஆட்ட...

"ஒரு வாரம் மாமாவ பிரிந்து ஏக்கமா... சரி பண்ணிடலாமா..." என்று வழக்கமான வேலையைக் காட்ட ஆரம்பிக்கப் போக...

"பாலா..." என்று பல்லைக் கடித்தவளின் கோபம் புரிய... பேசாமல் படுத்தான். இரவில் தன் உரிமையை நிலை நாட்டுவோம் என்று...

எப்படியோ 6 மணி வரை நேரத்தை ஓட்டியவள்... பரிசோதனை செய்ய... அது அவளை ஏமாற்றவில்லை... சிறிது நேரம் சந்தோசத்தில்... கீர்த்தனா அந்த அட்டை காட்டிய நிறமாற்றத்தைப் பார்த்தபடியே இருந்தாள்... அதன் பின் அதனை... ஒரு கவரில் வைத்துப் பத்திரப்படுத்தித் தன் கைப்பையில் வைத்தாள்... மருத்துவரிடம் போகும்போது காட்டலாம் என்று.

அவளும் அன்று அலுவலகம் செல்ல முடிவு செய்திருந்ததால் அப்போதே கிளம்ப ஆரம்பித்து விட்டாள்.

ஆனால்... கிட்டத்தட்ட 7.30 மணி போல் சிந்துவின் குரல் கீழே கேட்க... இறங்கி வந்தாள்.

அவளோ... அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

அருந்ததி தான்... சிந்து... கீர்த்தி கீழே வரட்டும் பேசுவோம் என்று ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்க... மஞ்சு அவளைத் திட்டியபடி இருந்தாள்... கீர்த்திகாவும் அருகில் இருந்தாள்.

"என்ன விசயம் மஞ்சு அக்கா... ஏன் அவள திட்டிட்டு இருக்கீங்க?" என்று சிந்துவின் அருகில் அமர...

சிந்து அழுதுகொண்டே...

"அக்கா... இன்னைக்கு எங்க ஸ்கூல்ல ஆனுவல் டே ஃபங்சன்... நான் மறந்தே போய்ட்டேன்... நான் டான்ஸ்ல கலந்துருக்கேன்... இப்போதான் மிஸ் போன் பண்ணினாங்க... நான் எதுவுமே அரேஞ்ச் பண்ணல என்று... நீங்க சொல்லித்தானே நான் ஜாயின் பண்ணினேன்... திங்ஸ் எதுவுமே வாங்கல... நாம பாண்டி பஜார் போகலாம்னு நீங்க போனவாரம் சொன்னீங்கல்ல... மறந்துட்டீங்க!" என்று கீர்த்தி மேல் வேறு குற்றப் பத்திரிகை வாசித்தபடி அழ...

மஞ்சுவோ, "உனக்கு ஞாபகம் இல்ல... அடுத்தவங்க மேல எல்லாம் என்ன புகார்... உனக்கு ரொம்ப இடம் கொடுத்துருக்காங்க இல்ல... நீ இதுவும் பேசுவ... இன்னமும் பேசுவ!" என்று அவளைத் திட்டிக்கொண்டே இருக்க...

அருந்ததி தான்... "சிந்து... இப்போ என்ன... மதியம் 3 மணிக்கு மேலதான ஃபங்சன்... உன் அக்காவை இப்போ கூட்டிட்டுப் போ..." என்ற போது,

கவி அக்காவும் வரணுமே... அவங்களுக்குத்தான் கடை அட்ரஸ் எல்லாம் தெரியும் என்று மீண்டும் அழ...



கீர்த்தி, "கவிக்கு போன் பண்றேன். அவ உன்னைக் கூட்டிட்டுப் போவா... ஏற்கெனவே நான் ஒரு வாரம் லீவ்... உங்க அண்ணாகிட்ட லீவ் கேட்டேன்... என்னை ஆபீஸ விட்டே துரத்திருவாரு... இந்த ஒரு வாரத்துக்கே அழுதுட்டே கொடுத்தாரு..." என்று சொல்ல...

சிந்து அவளும் வர வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்க...

அருந்ததி, "சரி கீர்த்தி, போய்ட்டு வா... ஒரு நாள்ல உன் புருசன் கோட்டைய இழந்துற மாட்டான்!" என்று சிந்துவுக்கு சப்போர்ட் செய்ய... கீர்த்தியும் தலை ஆட்ட, சிந்து அப்போதுதான் சகஜமானாள்.

கீர்த்தி அங்குதான் தலை ஆட்டினாள்... பாலா என்ன சொல்வானோ என்றிருந்தது... பெரும்பாலும் அவன் எதற்காகவும் அலுவலக வேலைகளை விட்டுக் கொடுக்க மாட்டான். நேற்றே சொல்லி இருந்தான் - இவளுக்காகச் சில வேலைகள் காத்துக் கொண்டிருக்கிறது என்று... என்ன ஆடுவானோ என்று தோன்றியது.

நினைத்தவாறே ஆடத்தான் செய்தான்.

"ஏற்கெனவே ஒரு வாரம் லீவ்... இன்னைக்குமா... என்ன நினச்சுட்டு இருக்க நீ... இல்ல பேசாம வீட்லயே இருன்னாலும் கேட்காம வர்ற... அப்போ அங்கேயும் ஒழுங்கா பார்க்கணும் இல்ல..." என்று அலுவலக எம்.டி.யாக மாறிக் குதிக்க...

"இல்ல பாலா, சிந்துனாலதான்..." என்று இழுக்க...

"என்ன சிந்து... அவங்க அம்மாகூட போய் வாங்கமாட்டாளா... லீவ்லாம் கிடையாது... ஒழுங்கா ஆபீஸ் வந்து சேரு!" என்றபடி எரிச்சலில் வழக்கமான அவனின் சிறு சுயநலம் வெளிப்பட... குளியலறைக்குள் சென்று விட்டான்.

சிறிய கிளைதான்... இருந்தாலும் நல்ல வேலை என்று மனதிற்குள் நிம்மதி அடைந்தவள்... தன்னைக் காப்பாற்றியவனுக்கு நன்றி சொல்லப் போனவள் அப்படியே அதிர்ந்து விட்டாள்...

அவன்... அவள் ஊட்டியில் அந்தப் பெண்ணுடன் பார்த்தவன்...

அவள் மிரட்சியுடன் இருப்பதைப் பார்த்தவன்... அவளை அவனுக்கு அடையாளம் தெரியவில்லை போல...

"பார்த்து..." என்றபடி அவளைக் கடந்து செல்ல... சற்று நேரம் அப்படியே நின்றவளுக்கு... மனதில் வெகு நாளாய் உறுத்திய ஒன்று மாறியது போல் இருந்தது... அது...

"தன்னைக் காப்பாற்றுகிறான் என்றால் இவன் நல்லவனாய் இருக்க வேண்டும்... இவன் நல்லவன் என்றால்... அந்தப் பெண் தான் மோசம்..." என்று சந்தோசமாக அவன் போவதையே பார்த்தபடி நடந்து சென்றவள்... மனதினுள்ளே தன் குழந்தையுடன் பேசிக் கொண்டாள்.

"ஏய் செல்லக் குட்டி... உங்க பாட்டி கரெக்டாத்தான் சொல்லி இருக்காங்கடா... அம்மாவுக்கு ரொம்ப நாளா உறுத்திட்டு இருந்த விசயம்... இன்னைக்கு மறஞ்சுருச்சுடா... எல்லாம் நீ எனக்குக் கிடைத்த நேரம் டா..." என்று தனக்குள் பேசியபடி வந்தவள் சந்தோச மிகுதியில் தன்னை மறந்தவளாய் தனக்கு முன்னால் வந்தவரின் மேல் தெரியாமல் மோத...

"ச்சேய்! இன்னைக்கு ரொம்ப கவனக் குறைவா இருக்கிறோம்!" என்றபடி நிமிர்ந்து பார்க்க...

அது அவளின் அப்பாவோடு பணிபுரிந்த மதன்... சந்தோசமாக விழி விரித்து,

"அங்கிள்!" என்று சொல்லியவள்.



"நல்லா இருக்கியாமா கீர்த்தி... பாலா எப்படி இருக்கார்?" என்று விசாரித்தார் அவர்.

"நல்லா இருக்கோம் அங்கிள்!" என்றபோதே அவளுக்கு எதிர்ப் பக்கம் ஊட்டியில் பார்த்த அந்த இளைஞன்... பெண்களுக்கான... பிரத்யேகமான கடையினுள் நுழைவதையும் பார்த்தாள்.

பின் மதனுடன் பேச ஆரம்பித்தாள்... சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தவள்...

"ஏன் அங்கிள்... வி.ஆர்.எஸ். வாங்கிட்டீங்க...?" என்று கேட்க,

"இல்லமா... அப்பாவுக்கு வந்த நிலைமைய பார்த்தே கொஞ்சம் பயந்துட்டேன்... அதோட ராகவன் சார் பிராப்ளமும் சால்வ் ஆகிற வரை இருக்கலாம் என்று இருந்தேன்... உன் பேர்ல எல்லாத்தையும் மாற்றிப் பாலாகிட்ட பணத்தை ஒப்படைச்சதோட நானும் வேலைய ரிசைன் பண்ணிட்டு இப்போ நிம்மதியா என் பையனோட செட்டில் ஆகிவிட்டேன்!" என்று கூற...

அன்றைய அடுத்தடுத்த மகிழ்ச்சியில் சந்தோசப்படக் கூட முடியாமல் திணறினாள் கீர்த்தி... அவள் அப்பாவின் பணம் கிடைத்த மகிழ்ச்சி... இன்னொன்று... கணவனுக்குத் தெரிந்தும் சொல்லாமல் விட்டிருக்கிறான்... அது ஏனென்பது அவள் உணராமல் இல்லை...

கணவனின் அன்பில் கண் கலங்கிவிட்டது அவளுக்கு.

கேடி... எங்க பணம் கிடைத்ததைச் சொன்னால் அவனை விட்டுப் போய் விடுவேன் என்று மறைத்துவிட்டான்... ஆனால் இப்போ வரைக்கும் ஏன் சொல்லலை... எப்போ கிடைத்தது? சரி. கேட்டுக்கலாம்... அவன் எது செய்தாலும் என் நலன் கருதித்தான் செய்வான் என்று முடிவு செய்தவளுக்கு... அவனை அப்போதே பார்க்க வேண்டும் என்று தோன்ற...

சிந்து வருத்தப் படுவாள் என்றெல்லாம் நினைக்க வில்லை...

மதனிடம் அவள் அதற்கு மேல் அந்த விசயத்தைப் பேசாமல் முடித்தவள்... எப்போதடா அவர் போவார் என்று இருந்தவள்... அவர் போனவுடன் கணவனுக்கு வேக வேகமாக ஒரு மெசேஜ் செய்தாள்.

"ஐ லவ் யூ டா கேடி!" என்று...

அதை அனுப்பியவள், கவியிடம் சொல்லி விட்டுக் கிளம்பலாம் என்று அவளுக்கு போன் செய்யப் போக...

அப்போது சற்று முன் நல்லவன் என்று நம்பியவன் செய்த காரியத்தில் உடலெங்கும் நடுக்கம் சூழ... போனைக் காதிலிருந்து எடுத்தாள்...

அவனைப் பார்த்தபடியே இருந்தாள்... அவனின் முகம் மாறிய விதம்... அவன் சற்று முன் பார்த்தபோது இருந்த அமைதியான முகமும்... இதுவும் ஒன்றா என்று தோன்றியது... அந்தப் பெண்ணுடன் பார்த்த போது இப்படித்தான் இருந்ததோ என்று தோன்ற... அப்படியே நின்றாள்.

அவன் ப்ரதாப் என்று கீர்த்திக்கு அப்போது தெரிய வில்லை... தெரிந்திருந்தால் பாலாவின் துணையை நாடி யிருப்பாள்.

தெரியாததால் அசட்டுத் தைரியத்தில் அவள் செய்த காரியத்தை என்னவென்று சொல்வது...

கீர்த்திகாவிற்காகப் பிரதாப் விரித்த வலையில்... பாலாவின் காதலி தெரியாமல் மாட்டினாள் என்றால்... கீர்த்திகாவிற்காக அவன் மீண்டும் வலையை விரிக்க ஆரம்பிக்கும் முன்னே... தானாகவே அதில் போய் விழுந் தாள் பாலாவின் மனைவி...



பாலாவோ மனைவிக்கு நேரப் போகும் எதையும் உணராமல்... அதிலும் கர்ப்பமாக அவள் இருக்கிற சூழ்நிலையில் அவளாகவே தனக்கு ஏற்படுத்திக் கொண்ட ஆபத்தை உணராமல்... மனைவி அனுப்பிய மெசேஜை மீண்டும் மீண்டும் படித்தபடி இருந்தான்.

என் பொண்டாட்டி... அவ்வளவு ஈசியா இந்த வார்த்தைய சொல்ல மாட்டாளே... திடீர்னு என்ன... என்ற யோசனையில் மனம் மனைவியை நினைத்தபடி குதூகலத்துடன் சுற்றிக் கொண்டிருந்தது.

## 50

கீர்த்தனா ப்ரதாப்பையே பார்த்தபடி நின்றிருந்தாள்... அந்த பொட்டிக் ஷாப்பில் இருந்து வெளியேறியவனைச் சினேகமாய்ப் பார்த்தபடியே போனை அழுத்தத் தொடங்கினாள். அவன் கீர்த்தனாவை எல்லாம் கவனிக்கவே இல்லை...

கீர்த்திதான் பார்த்துக் கொண்டிருந்தாள்... ஆனால் அவன் முகம் திடீரென எதையோ பார்த்து மாற... கீர்த்தியும் அவன் பார்வை போன திசையை நோக்க... அங்கு ஒரு காதல் ஜோடி நின்று கொண்டிருந்தது... அவள் தோள் மேல் கை போட்டிருந்தபடி அந்தக் கடையில் நின்று பொருட்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர்...

இவள் நல்லவன் என்று நினைத்துக் கொண்டி ருந்தவன் என்ன செய்தான் என்றால்... ஜோடியாய்... சந்தோசமாய் நின்ற அவர்களைப் பார்த்தவனுக்கு... என்ன ஆனதோ தெரியவில்லை... அவர்களின் இடதுபுறமாக இருந்த அந்தக் கடையின் பலகையில் வைத்திருந்த பொருட்களை எல்லாம் தட்டி விட... அது அந்தப் பெண்ணின் காதலனோ... கணவனோ அவன் மேல் விழ... சட்டென்று

நகர்ந்தான் அந்தப் பெண்ணை விட்டு... பார்த்தால் தெரியாமல் தள்ளி விட்டது போல் தோன்ற... கீர்த்தனாவுக்கு மட்டும் அவனையே பார்த்துக் கொண்டிருந்ததால் அது அவன் வேண்டுமென்றே செய்த செயல் என்று புரிய...

சற்று முன் அவனைப் பற்றி மனம் நினைத்த நினைவுகளை எல்லாம் வாபஸ் வாங்கியவளாய், விழிகள் அதிர்ச்சியில் நிலைத்திருந்தன... அவனிடம் ஏதோ தவறு உள்ளது என்பதை உறுதி செய்தவளுக்கு வேறு என்ன செய்வது என்றே தோன்றவில்லை...

அவளாகப் போய் அவனிடம்... அன்று உன் கூட இருந்த பெண் யார் என்றா கேட்க முடியும்... என்ன செய்வது... என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தவளுக்கு அந்தப் பெண்ணின் காயங்கள் நிறைந்த, கண்ணீர்க் கறை படிந்த முகமுமே மனதில் நிற்க...

ஒருவேளை கடவுள் அவளுக்குக் கொடுத்த அடுத்த வாய்ப்போ... ஒரு மகளாய்... அன்று தாயின் பேச்சைக் கேட்கப் போய்... அவர்களை இழந்த நிலை மனதில் வருத்தம் தர... இன்று தாயாய் அவள் மாறி இருந்த நிலையில்... இப்போதைய சூழ்நிலையில்... இது தேவையா என்று யோசிக்க... அவள் மனமோ... கீர்த்தி மறுபடியும் தவறு செய்யாதே... ஒருமுறை நீ செய்த காரணத்தால் உன் தாய் தந்தையை இழந்தாய்... மறுமுறை கிடைத்த வாய்ப்பை விடாதே... உனக்கு ஒன்றும் ஆகாது... உன் குழந்தைக்கு ஒன்றும் ஆகாது... மனம் அடித்துச் சொல்ல...

பாலாவை மனம் நினைத்துத் துணுக்குற்றது... ஏற்கெனவே ஒருமுறை அடிபட்டவன்... தனக்கு ஏதாவது ஆகிவிட்டால்... அவனால் தாங்க முடியுமா... என்று தயங்க...

அந்த நல்லவனோ காரில் ஏறிக் கிளம்ப...

அவ்வளவுதான்... பாலாவையும் மறந்தாள்... தன் நிலையையும் மறந்தாள்...



காலையில் ஆட்டோவில் போகச் சொன்ன பாலாவிடம் பிடிவாதம் பிடித்து... காரில் கிளம்பியவள்... இப்போது அருகில் நின்ற ஆட்டோவில் ஏறி அவனது காரைத் தொடரச் சொன்னாள்.

ஆட்டோவில் போய்க் கொண்டிருந்தவளுக்குப் பலவித எண்ணப் போராட்டங்கள்... காலையில் இருந்து நடந்த நிகழ்வுகள்... இப்போது செய்து கொண்டிருக்கும் வேலை... அவனை விட மனதில்லை அவளுக்கு...

அவன் மூலம் மட்டுமாவது தெரிந்து கொள்வோம்... அதன் பிறகு பாலாவை விசாரணை செய்து கொள்வோம் என்று முடிவு செய்தவள்... சற்று நிம்மதி ஆகி... கவிக்கு போன் செய்து... தான் வழியில் ஒரு முக்கியமான நீண்ட நாள் தோழியைச் சந்தித்ததாகவும்... அவளுடன் தற்போது போய்க் கொண்டிருப்பதாகவும்... சிந்துவுக்குத் தேவையான பொருட்களை வாங்கிப் போகுமாறும் சொன்னாள்... முடிந்தால் அவளது பள்ளிக்கே வருவதாகக் கூறி முடித்தாள்...

அடுத்து பாலாவுக்கு போன் செய்யப் போனவள்... அவன் ஏதாவது கண்டுபிடித்து விட்டால்... தன்னை அனுமதிக்க மாட்டான் என்று பேசாமல் விட்டுவிட்டாள்... இவன் இருப்பிடம் மட்டும் பார்த்து வந்து விடுவோம் என்ற நினைவில்...

அப்போதே இன்னொரு எண்ணமும் வந்து... அவன் வேறு எங்காவது போனால்... என்று யோசித்தவள்...

கொஞ்சம் அசட்டுத் தைரியமோ... பாலாவிடம் கண்டிப்பாகத் திட்டு விழும் என்று தெரியும்... பார்த்துக்கலாம்... நம்ம கிட்ட பேசாம எத்தனை நாள் இருப்பார்... என்று தோன்றும் போதே... அவள் அவனிடம் பணம் கிடைத்ததை மறைத்ததை நினைத்துச் சிரிப்பு வந்தது...

அப்பா அம்மாவுக்கு இது தெரிந்திருந்தால் எவ்வளவு சந்தோசப் பட்டிருப்பார்கள்... தன் தந்தை இந்தப்

பிரச்சனையில் மாட்டியிருக்கா விட்டால் தனக்கும், பாலாவுக்கும் இடையே எந்தவொரு உறவும் ஏற்பட்டிருக் காதோ... என்னென்னவோ எண்ணங்கள்... ஆனால் மனம் பாலாவைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது.

கீர்த்தியின் நல்ல நேரமா... இல்லை கெட்ட நேரமா என்று தெரியவில்லை.

அடுத்த அரை மணி நேரத்தில் அண்ணா நகரின் ஒரு வீட்டினுள் கார் நுழைய... கீர்த்தனா சற்றுப் பெருமூச்சு விட்டவளாய்... ஆட்டோவை விட்டு இறங்கியபடி...

"அப்பா... வீட்டுக்குத் தான் வந்திருக்கிறான் என்று கண் பார்வையைச் சுழல விட்டாள்... அந்த இடத்தின் அடையாளங்களை மனதில் பதிக்க... ஓரளவு மனதில் பதித்த பின், சரி... வீட்டிற்குக் கிளம்புவோம்... பிறகு பாலாவிடம் சொல்லி விசாரிக்கச் சொல்வோம்...

இதற்கே என்ன பேச்சு பேசுவானோ என்று நினைத்தபடி ஆட்டோவில் ஏறப் போனவளுக்கு வயிற்றைப் பிரட்டிக்கொண்டு வருவது போல் இருக்க... சட்டென்று நின்று எடுக்க ஆரம்பிக்க... எதுவுமே வரவில்லை... ஆனாலும் வயிற்றைப் புரட்ட... மயக்கமே வரும் போலிருந்தது... ஆட்டோ டிரைவர் கிளம்பலாமா என்று அவசரப்படுத்த... வேறு வழி இன்றி வேறு ஆட்டோ எடுத்துக் கொள்வோம் என்று அவனை அனுப்பிவிட்டாள்.

வயிற்றில் ஒன்றுமில்லை போல... ஆனால் காலையில் நல்லா தானே சாப்பிட்டோம் என்று தோன்ற... இப்போது தனக்குள் இன்னொரு உயிரும் இருப்பதால் அது இனி பத்தாது போல் என்று மனதில் நினைத்தபடி...

அருகில் இருந்த கடையில் இரண்டு பிஸ்கட் பாக்கெட்களை வாங்கியவள்... இருந்த பசியில் அங்கேயே பிரித்துச் சாப்பிட ஆரம்பித்தபடி... அடுத்த ஆட்டோ கிடைக் குமா என்று பார்த்துக் கொண்டிருக்க...



பிரதாப் வீட்டிலிருந்து ஒரு பெண் வெளியேறினாள்... ஆனால் அவளது கையில் வரும்போது பிரதாப் கையில் இருந்த கவர்கள்... அந்தக் கடையின் அடையாளத்துடன் இருக்க... அவள் கீர்த்தனாவைக் கடந்து சென்றாள்.

கீர்த்தனாவுக்குப் பகீரென்று இருந்தது... இப்போது இவளைத் தொடர வேண்டுமா... அது பெண்களுக்கான பிரத்தியேக ஆடைகள் விற்கும் கடை... அப்படியென்றால் அந்தப் பெண்ணிற்குத்தானா... தங்கை என்றுதானே சொன்னான்... மனம் குழம்பியது... பேசாமல் இன்று வீட்டிலேயே இருந்திருக்கலாமோ... ஆனாலும் அன்று போல் விட்டுப் போக மனம் வரவில்லை...

தன்னையுமறியாமல்... அந்தப் பெண்ணின் பின்னாலே போக ஆரம்பித்தாள் கீர்த்தனா.

இரண்டு தெரு தள்ளி... ஒரு இஸ்திரி போடும் கடையில் அந்தப் பைகளை வைத்தவள்... அந்தக் கடைக்காரரிடம் ஏதோ சொல்லியபடி கிளம்பிவிட்டாள்.

கீர்த்தனா இதைக் கவனித்தாள்தான்... இப்போது அவளைத் தொடர்வதா... இல்லை இங்கேயே நிற்பதா...?

அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே... அவளை மிகவும் குழப்பாமல்... ஒரு நடுத்தர வயதுப் பெண் வந்து அந்தப் பைகளை எடுத்துக்கொண்டு சிறிது நேரம் பேசியபடி அங்கிருந்து கிளம்ப...

இந்தப் பை இன்னும் எத்தனை கை மாறப் போகிறதோ... என்று நினைத்தவள்... இரண்டாவது பாக் கெட்டில் பாதி சாப்பிட்டபடி... மீதியைக் கைப்பையில் வைத்து அவளையும் பின் தொடர்ந்தாள். இம்முறை பை தன் பயணத்தை நிறுத்தி விட்டது... அந்தத் தெருவே மிகவும் நிசப்தமாய் இருக்க...

அந்த நிமிடம் வரை கீர்த்தனா ஆபத்தின் கையில் மாட்டவில்லை...

அதன் பிறகு... அவள் எடுத்த முடிவுதான் அவளை ஆபத்தில் தள்ளியது...

கீர்த்தனா சிறிது நேரம் பார்த்தவள்... அந்த வீட்டில் நுழைந்தாள்... கதவைத் தட்ட ஆரம்பித்தாள்...

கொஞ்சம் தாமதமாகத்தான் அந்தப் பெண்மணி திறந்தாள்... திறந்தவள்... வெளியே வந்து பேச ஆரம்பித்தாள்...

கீர்த்தனாவின் பார்வையோ அந்த வீட்டினுள் இருக்க... அந்தப் பெண்மணி அதட்ட ஆரம்பித்தாள்.

"என்னமா வேணும்...?"

கீர்த்தனாவுக்கு என்ன பதில் சொல்ல என்று தெரியாமல் விழித்தாள்.

"இல்ல... நான் கவர்ன்மெண்ட் எம்ப்ளாயி... மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு ஒவ்வொரு வீட்லயும் போய்க் கணக்கெடுத்துட்டு இருக்கோம்..." என்று வாய்க்கு வந்ததைக் கூற...

அவள் கூறிய விதமே நம்ப முடியாமல் இருக்க... அந்தப் பெண்மணி... "வீட்டு வேலைக்காரிமா நான்... நான் மட்டும் தான் இருக்கேன்... வீட்டு ஆளுங்க இல்ல... போய்ட்டு நாளைக்கு வாங்க..". என்றபடி அவளது பதிலை எதிர்பாராமல் கதவையும் அடைத்து விட்டாள்.

அவளது படபடப்பான பதிலில்...

கண்டிப்பா தவறு இருக்கு... என்று நிச்சயமாய் உறுதி செய்தவள்... இவள் மட்டும்தான் இருக்கிறாள் என்றால் இவளைச் சமாளிப்பது பெரிய விசயமாய் இருக்காது என்றே நினைத்தாள்.

கீர்த்தனா போன ஜென்மத்தில் போலீசாய்ப் பிறந்திருப்பாள் போல... இல்லை துப்பறியும் பணியில் இருந்திருப்பாள் போல...



வேக வேகமாக அந்தத் தெருவில் ஏதேனும் சூப்பர் மார்க்கெட் கடை இருக்கிறதா என்று தேடிப்பிடித்து... கத்தி... ஸ்பிரே... மிளகாய்த் தூள்... என்று தன் தற்காப்புக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வாங்கி வைத்தவள்... காவல்துறைக்கு, இல்லை... பாலாவிடம் சொல்லி இருக்கலாமே... எதையும் உறுதி செய்யாமல் யாரையும் அழைக்க அவளுக்கு விருப்பமில்லை... அவர்களை எல்லாம் தொந்தரவு செய்ய விரும்பவில்லை...

ஆபத்தின் ஆழத்தை அவள் அலட்சியப்படுத்தினாள் என்றே சொல்ல வேண்டும்... தன் உயிர் தன்னைக் காட்டிலும் தன் கணவனுக்கு முக்கியம் என்பதை மறந்தவளாய்... மீண்டும் வீட்டின் அருகே வந்தாள்... வந்தவள்... ஒரு நிமிடம் தயங்கி... அந்த வீட்டின் தெரு... எண் உட்பட அனைத்தையும் டைப் செய்தவள்... அதைப் பாலாவுக்கு அனுப்பினாள்... அவன் போன் பண்ணி ஏதாவது தடுத்து விடுவான் என்று எண்ணியவள்... அனுப்பிய அடுத்த நொடியே தனது மொபைலையும் அணைத்து விட்டாள்.. ஆனால் கணவனுக்குத் தான் இருக்கும் இடத்தைச் சொல்லிவிட்டோம் என்ற திருப்தியில் கதவைத் தட்ட ஆரம்பித்தாள்.

முக்கியமான காலில் இருந்தவன்... கீர்த்தனா விடமிருந்து மீண்டும் குறுஞ்செய்தி வர... ஒரு துள்ளலோடு எடுத்துப் படிக்க ஆரம்பிக்க... அது ஏதோ ஒரு முகவரி போல் இருக்க... வேற யாருக்கும் அனுப்ப வேண்டிய செய்தியை எனக்கு அனுப்பிட்டாளா... கீதுவுக்கு செண்டெர் லிஸ்ட் ல கைய வச்சாலே என் பேருதான் வருதா என்றபடி அதை அப்படியே விட்டுவிட்டுத் தன் காலைத் தொடர்ந்தான்.

ஒரு நிமிடம்தான்... கீர்த்தனா அனுப்பி இருந்த மெசேஜில் இருந்த ஸ்பெல் மிஸ்டேக்ஸ் (வார்த்தைப் பிழைகள்) அவன் கருத்தில் உலா வர... அவனுக்குச் சரியாய்ப் படவில்லை. காலைக் கட் செய்தவன் கீர்த்தனாவுக்கு போன் செய்ய அது அணைக்கப்பட்டிருந்தது.

கவியும் அவளுடன்தானே இருக்கிறாள் என்று கவிக்கு போன் செய்ய...

அவளோ கீர்த்தனா... யாரோ ஒரு தோழியைப் பார்த்ததாகக் கூறி அப்போதே அவளுடன் சென்று விட்டதாகக் கூறியவள், தான் மட்டுமே சிந்துவோடு... சிந்துவின் பள்ளியில் இருப்பதாகக் கூற...

பாலா மனம் சற்றுக் கலவரமானது...

போனை வைத்தவன்... ஒருவேளை அவள் போன அந்தத் தோழியின் வீட்டு முகவரியாக இருக்குமோ என்று சந்தேகித்தவன்... மீண்டும் கீர்த்தனாவுக்கு போன் செய்ய, அது அணைக்கப்பட்டிருந்த செய்தியைத்தான் சொல்லியது மீண்டும்...

"என்ன ஆச்சு இவளுக்கு... ஏன் இப்படிப் பண்றா... ஒரு வார்த்தை என்கிட்ட சொல்லிட்டுப் போனாளா... அப்படி எந்த ஃப்ரெண்டப் பார்த்தா இவ... மதிக்கிறதே இல்லை... இந்த லட்சணத்துல ஐ லவ் யூனு மெசேஜ் வேற... மனசு வேற கிடந்து அடிச்சுக்குது..." என்றபடி காரைக் கிளப்பினான் அவளைப் பார்க்க... அவள் சொன்ன முகவரிக்கே போவதற்கு... ஏதோ ஒரு உந்துதலில் கிளம்பி விட்டான்... ஆனாலும் அவன் கீர்த்தனா மேல் கொஞ்சம் கோபமாகவும் இருந்தான் என்பதே உண்மை...

இந்த முறை கீர்த்தனாவுக்குப் பயம் எல்லாம் இல்லை.. தைரியமாகக் கதவைத் தட்டினாள்.

திறந்தவள்... இவளை எதிர்பார்க்கவில்லை போல... முறைத்தபடி கதவை மூடப் போக...

"இங்க பாருங்க... நீங்க என்கூட ஒத்துழைக்கவில்லை என்றால்... எங்க வேலையக் கெடுக்கறீங்கனு ரிப்போர்ட் பண்ண வேண்டியிருக்கும்... அதன் பிறகு போலீஸ் துணையோட வந்துதான் டீடெயில்ஸ் கலெக்ட் பண்ண வேண்டும்!" என்று சொல்ல...



பயந்து விட்டாள் அந்தப் பெண்மணி...

"இருங்க... நான் போன் பண்றேன்... அவர் கிட்டயே பேசுங்க..." என்று தடுமாற ஆரம்பிக்க...

போன் செய்து காரியத்தையே கெடுத்து விடுவாள் போல... என்று நினைத்த கீர்த்தனா...

அவளின் தடுமாற்றத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டாள்.

அவளைத் தள்ளியபடி உள்ளே நுழைந்தவள்... அவள் கையில் இருந்த போனைப் பறித்துவிட்டாள்...

"ஏய் என்ன பண்ற... நீ யாரு...?" என்று கேட்க...

"நான் யாருன்றது இருக்கட்டும்... இந்த பேக் எல்லாம் எங்க போகப் போகுது... அது எனக்குத் தெரியணும்... இப்போ உண்மையச் சொல்லல... போலீஸ் இன்னும் அரை மணி நேரத்துல வந்துரும்..." என மிரட்ட ஆரம்பித்தாள்.

"என்ன மிரட்டறியா... ஏற்கெனவே ஒருத்தி இங்க படாத பாடு பட்டுட்டு இருக்கா... நீ வேற அவன்கிட்ட மாட்டிக்காத... உன் நன்மைக்குத்தான் சொல்றேன்... போலீஸ் அரை மணி நேரத்துலதான் வரும்... அவன் இன்னும் கொஞ்ச நேரத்துல இங்க வந்துருவான்... சென்னை வந்ததில் இருந்து அவள் பத்து நிமிடத்திற்கு ஒரு முறை அவனால் செக் செய்யப்படுகிறாள்" என்பதால் அவளும் விடாமல் பேச...

அவள் பேசியதில் தனக்குக் கிடைத்த தகவலில் கீர்த்தனா அதிர்ந்தாள்... அப்போ அந்தப் பெண் தான் இன்னும் இருக்காளா... இல்லை இது வேற பொண்ணா...?

"ஒழுங்கா சொல்லு... அந்தப் பொண்ணு எங்க...?"

அந்தப் பெண்ணும் விடாமல் பேசி நேரத்தை வீணடிக்க... இவளிடம் பேசி நேரத்தை வீணாக்குவதை விட...

அவளைத் தேடுவோம் என்றபடி... ஸ்ப்ரேயை எடுத்து அவள் முகத்தில் அடிக்க, மயங்கி விழுந்தாள் அவள்...

கீர்த்தனா... வேகமாக ஒவ்வொரு அறையையும் தேட... யாரும் இல்லை... ஹால் முழுக்க ஒன்றுமே கிடைக்க வில்லை... அத்தனை சுத்தமாக இருக்க... வேகவேகமாக மாடி யில் ஏறினாள்... கீர்த்தனா... தன் கைப்பையைக் கீழேயே மறந்தும் விட்டாள்...

மாடியில் அவள் அதிகம் தேடவில்லை... அங்கு இரண்டாவதாய் இருந்த அறையில்... அவள் நினைத்தது போல் ஒரு பெண் தரையில் கிடந்தாள்... அன்று பார்த்ததை விட மோசமாய்..

கீர்த்தனாவுக்கு இதயம் நின்றுவிட்டது... அவள் இருந்த கோலத்தில்...

"கடவுளே!" என்று துடித்தது இதயம்.

அந்தப் பெண்ணின் அருகில் சென்றாள்.

இவளின் அரவம் கேட்டு நிமிர்ந்து பார்க்காமலே அந்தப் பெண் புலம்பினாள்.. வார்த்தைகள் தெளிவில்லை. ஆனால்,

"ப்ளீஸ் எனக்கு ஊசி போடாதீங்க... அந்த ஊசி போடறதுக்குப் பதிலா... விஷ ஊசி போடுங்க... நான் போறேன்... என்னைச் சாகடிச்சுடுங்க...." என்று புலம்ப...

கீர்த்தனா அப்படியே நின்றுவிட்டாள்...

தெளிவில்லா விட்டாலும் வார்த்தைகள் அவளுக்கு விளங்கின.

கண்ணில் இருந்து நீர் வழிந்து விட்டது... அவளாக விரும்பிப் போதை ஏற்றிக் கொள்ளவில்லை... என்று அவள் மனம் உணர்ந்த போது... மனம் எங்கும் குற்ற உணர்ச்சி அவளை எல்லாப் புறமும் வந்து அவளை வதைத்தது.



"இங்க பாருங்க... என்னைப் பாருங்க..." என்றபடி அவளைத் தாங்க...

குரலில் வித்தியாசம் அவளும் உணர்ந்தாள் போல... நிமிர்ந்து பார்த்தாள்...

முன்னே நின்றிருந்த கீர்த்தனாவை சாதாரணமாய்ப் பார்த்தாள்... மீண்டும் தலை சாய்த்துப் படுத்துவிட்டாள்...

கீர்த்தனா அவளின் முன் மண்டியிட்டு அமர்ந்தவள்,

"ஏன்... என்னைத் தெரியலையா... உங்களுக்கு... ஊட்டியில..." அவள் தான் மது என்று தெரியாமல் கீர்த்தனா பதற...

மதுவுக்கோ அவளுக்கு அடையாளம் எல்லாம் ஞாபகம் இல்லை... ஆனால் அந்தப் பெண்ணா இத்தனை நாள் கழித்தா... என்று மட்டும் தோன்றியது.

அவள் மனதின் வேகம் உடலில் இல்லை.

அவளின் கண்கள் உணர்ச்சிகள் அற்ற நிலையில், வெறுமையில் உதடுகள் மட்டும் சுழிந்தன.

"ப்ளீஸ் எழுந்திருங்க... நாம இந்த இடத்தை விட்டுப் போய்டலாம்... அன்னைக்கே இந்தப் பாவிக்குத் தெரியல... இல்லேனா... நான் கண்டிப்பா எதுனாலும் பண்ணி யிருப்பேன்... எனக்கு அப்போ ஒண்ணும் புரியல... என்னை மன்னிச்சுடுங்க..." என்று கைகளைக் கூப்பியபடி கதறினாள்.

அவளிடம் பேசும் நிலையில் மது இல்லை... அதனால் அவள் கைகளை மட்டும் பிடித்து விடுவித்தாள்.

தன் நிலைமை இப்படித்தான் என்று எழுதப்பட்டிருக்க அவள் என்ன பண்ணுவாள்...

மதுவின் நிலைமையை உணர்ந்தவள்... அவளைத் தன் முயற்சி கொண்டு தூக்க ஆரம்பிக்க... கீர்த்தனாவால்

முடியவில்லை... அவளுக்கும் மயக்கம் வருவது போல் இருந்தது.

"என்னால முடியலம்மா... நீ போ இங்கிருந்து!" என்று தட்டுத் தடுமாறி மது சொல்ல...

"ட்ரை பண்ணுங்க... நாம இந்த வீட்டை விட்டு வெளில போய்ட்டா... போதும்... அதுக்கப்புறம் ஒரு பிரச்சனையும் இல்லை..." என்று நம்பிக்கையூட்டும் விதமாய்ப் பேச...

"நாம... எங்க... எந்த ஊரில்... இருக்கோம்?" என்று கேட்டாள் அவள்.

துடித்துப் போனாள் கீர்த்தி... இருக்கும் இடம் கூட உணராதவளாய்... இப்படிப் பண்ணியிருக்கிறானே அந்தப் பாவி... அவன் நல்லாவே இருக்க மாட்டான்... என்று அவனுக்குச் சாபம் விட்டவளாய்...

"சென்னைல..." என்று சொன்னாள்.

மதுவின் கண்கள் கலங்கின.

சென்னை... எத்தனை வருடங்களுக்குப் பிறகு... சென்னை... என்று மனதில் நினைத்தவள்...

"பாலாவுக்கு என் ஞாபகம் இன்னும் இருக்குமா... இங்கதான் இன்னும் இருப்பானா... நான் தப்பிச்சுருவேனா... இந்த பாவிக்கிட்ட இருந்து..." என்று நினைவுகள் சிறகடித்துக் கிளம்பின.

சிறகடிக்க ஆரம்பித்த மனதை அடக்கியவளாய்... கீர்த்தனாவால் அவளைத் தாங்க முடியவில்லை என்பதை உணர்ந்து... தன்னைச் சமன் படுத்த முயன்றாள்... முடியவில்லை... இருந்தாலும் ஓரளவு அவளை நிலைப்படுத்திக் கீர்த்தனாவோடு சேர்ந்து வர முயன்றாள்.

மாடிப் படிவரை வந்துவிட்டனர் இருவரும்... அவளைப் பற்றியபடியே மதுவும் வந்தாள்.. அங்கு வந்த இருவரும் அப்படியே அரண்டு நின்றனர்.



கீழே அங்கு இருந்த நாற்காலியில் பிரதாப் அமர்ந்திருந்தான்.

"கீர்த்தனா தான் செய்த முட்டாள் தனத்தை அப்போதுதான் உணர்ந்தாள். கதவை உள்பக்கம் மூடாமலே மாடி ஏறியது எத்தனை பெரிய முட்டாள்தனம்... மதுவுக்கோ... ஐயோ இவளும் இவனிடம் மாட்டி விடுவாளே என்று பதறியது...

"இறங்கி வாங்க ரெண்டு பேரும்..." என்றவன், மதுவைப் பார்த்து,

"என்னடி, தப்பிச்சு போகப் போறோம்னு சந்தோசப் பட்டியா... உன்னை அப்புறம் கவனிச்சுக்கிறேன்..." என்றவன்.

கீர்த்தனாவைப் பார்த்து...

"காலையிலதானே காப்பாற்றினேன்... யாருடி நீ...? ஊட்டில பார்த்த ஞாபகம் இன்னும் உனக்கு இருக்கா...? அது தப்பாச்சே..." என்றான்.

கீர்த்தனா கண்கள் விரிந்தன பயத்தில்... எச்சிலைக் கூட முழுங்க முடியவில்லை... தான் மாடி ஏறிய போதே வந்துவிட்டான் போல... மதுவிடம் பேசியதை எல்லாம் கேட்டிருக்கிறான் என்று நினைத்தாள்.

மனதில் பயம் இருந்தாலும், மதுவோடு எப்படியோ இறங்கி விட்டாள்.

அந்தப் பெண்மணியும் ஓரளவு மயக்கம் தெளிந்திருந்தாள்... தெளிய வைக்கப்பட்டிருந்தாள்.

கீர்த்தனா மாடிப்படியின் கடைசிப் படியில் இறங்கும் போதே ப்ரதாப் அவளருகில் வந்து மதுவை அவளிடமிருந்து பிரித்துக் கீழே தள்ளி விட...

"ஏய்... நீ பண்றது தப்பு... யாரு இந்தப் பொண்ணு...? அண்ணானு சொன்ன அன்னைக்கு... அவள விட்டுடு..." என்று கொஞ்சம் கடுமையாகப் பேச...

சிரித்தான் அவன்...

"என்னது, அவள விடவா...? முதல்ல நீ இங்க இருந்து எப்படிப் போகப் போறேனு யோசிடீ..." என்றபடி அவள் அருகில் வர, சட்டென்று நகர்ந்தாள் கீர்த்தி.

இப்போது மது... அவன் காலைப் பிடித்துக் கெஞ்சினாள்... அவளை விட்டு விடச் சொல்லி...

அவளை லட்சியம் செய்யாதவனாய்... கோப முகத்தோடு கீர்த்தனா அருகில் நெருங்க...

இப்போது கீர்த்தனா,

"டேய்! பக்கத்துல வராத... என் மேல சின்னக் கீறல் விழுந்தா கூட... என் புருசன் உன்னைக் கூறாக்கிருவாரு..." என்று ப்ரதாப்பிடம் எதைச் சொல்லக் கூடாதோ அதைச் சொல்லி மிகப் பெரிய தவறைச் செய்தாள்.

மது அவளின் வார்த்தைகளைக் கேட்டு...

"ஐயோ... இவன்கிட்ட போய் இந்த வார்த்தையைச் சொல்லிட்டாளே..." என்று கைகளைத் தரையில் அடித்து அழுதாள்.

"இதே இதே போல்தான் தான் சொல்லி... இன்று இந்த நிலைமையில் இருக்கிறோம்..." என்று மனம் குமைந்தாள்.

"என் பாலா வைப்பான்டா ஆப்பு..." என்று சொல்லிய வார்த்தை தான் அவளின் இன்றைய இத்தகைய நிலைக்குக் காரணம்... இவனிடம் போய் அவள் கணவனைப் பற்றிச் சொல்கிறாளே என்று தவித்தாள்.

"ஓஓஓஓஓ உன்னை உன் புருசனுக்கு ரொம்பப் பிடிக்குமா... சந்தோசமா அவன் கூட வாழுறியா... அப்போ நீ



கண்டிப்பா உயிரோட இருக்கக்கூடாதே... உன் மேல சின்னக் கீறல் விழுந்தா கூட அவன் தாங்க மாட்டானா..." சுற்றும் முற்றும் தேடியவன் திரை மாட்டியிருந்த இரும்புக் கம்பி சுவரோரமாய்ச் சாய்த்து வைக்கப்பட்டிருக்க... "அப்போ உனக்கு இதுதான் சரி... ஒரே அடி. போய்ச் சேர்ந்துடுவ... உன்னை முடிச்சுட்டு... இவளையும் அனுப்ப வேண்டிய இடத்துக்கு அனுப்புறேன்..." என்றவன்,

மதுவின் புறம் திரும்பி...

"உன்னை அத்தனை சீக்கிரம் சாகடிக்கமாட்டேன்... உன்ன வச்சுதான் என் காதலிய நான் மடக்கணும்... அவ எனக்குக் கிடைத்த பின்னால்... உன்னை அனுப்பறேன் - இவ கூட!" என்றபடி கீர்த்தனாவை நோக்கி வந்தான்.

மதுவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. "வேண்டாம்... அவள விட்டுடு!" என்று சொல்லத்தான் முடிந்தது... அது கூட அவளால் முடியவில்லை...

கீர்த்தனாவுக்கோ அவன் கையில் இருந்த இரும்புக் கம்பி... நெருங்கி வரும் அவனின் பயங்கரமான முகம்... மரண பயம் என்ன என்பதை அந்த நொடியில் உணர்த்தியது... அவள் இதயம் பயங்கரமாகத் துடிக்க ஆரம்பித்தது... கை தானாக வயிற்றினில் கை வைத்தது... அனிச்சையாகவே பின் வாங்கினாள்.

அவள் என்ன நிறை மாத கர்ப்பிணியா என்ன... அவள் உயிர் போனாலும் குழந்தையைக் காப்பாற்ற... இருந்தும் தன் வயிற்றினில் மட்டும் அடி விழக்கூடாது என்று அவள் நினைத்தாள்... மனம் ஒளி வேகத்தில் பலவற்றை நினைக்க ஆரம்பித்தது.

கணவன் தான் சுமக்கும் தங்கள் இருவரின் உயிர்... தாய், தந்தை, வினோத், கீழே கிடந்த பெண் என்று எண்ண ஓட்டங்கள் அவள் இதய ஓட்டம் போல் தாறுமாறாக ஓடின...

கால்கள் தளர்ந்தன... இனி அவ்வளவுதானா... என்று நொடியில் உணர்ந்தவளுக்கு...

நரகத்தில் இருந்தவனுக்கு மீண்டும் சொர்க்கத்தைக் காட்டி மறுபடியும் நரகத்திலே தள்ளப் போகிறோமோ...?

அன்று வேண்டினோமே... இன்று ஒரு நாள் மட்டுமாவது கணவனோடு வாழ விடு என்று... அது மட்டும்தான் கடவுள் காதில் விழுந்ததா... அடுத்துத் தான் வேண்டியதெல்லாம் அவருக்கு விழவில்லையா...? மனம் அரற்றியது...

அவனும் அவளை வெறியோடு நெருங்கி இருந்தான்...

திடீரென்று விழுந்த ரெட் சிக்னலில் பாலா சட்டென்று பிரேக் பிடிக்க... அதனால் கார் ஓர் ஆட்டத்துடன்... கிரீச் என்று சத்தத்துடன் நின்றது... சேய்ய் என்றபடி... பச்சை விளக்குக்காகக் காத்திருக்க ஆரம்பிக்க...

அவனது மொபைலில் அழைப்பு... கீர்த்தனாவாக இருக்குமோ என்று எடுத்தான்... இப்படி அலைய விடுகிறாளே... என்று கோபமாய் எடுக்கப் போனான்... ஆனால் போனில் ரகு...

இவன் என்ன திடீர்னு... மதுவைப் பற்றி ஏதாவது தெரிந்து விட்டதா... மனம் சற்றுப் பரபரத்தது... போனை அட்டெண்ட் செய்ய...

"பாலா, ஃப்ரீயா இருக்கியாடா?" என்று ஹலோ கூடச் சொல்லாமல் பேச ஆரம்பித்தான் ரகு... மதுவைப் பற்றி விசாரிக்கும் அவன் தோழன் ரகு.

"சொல்லுடா..." என்று பேச ஆரம்பித்தான்.

"என்ன பாலா... ஒரு மாதிரி பேசுற... ஏதாவது பிரச்சனை..." என்று துப்பறியும் நிபுணனாய் அவன் கேட்க...

"இல்லைடா.. இது வேற பிரச்சனை... என்ன போன் பண்ணியிருக்க... மதுவைப் பற்றி... ஏதாவது..." என்று இழுத்தான்.



"ஆமாடா... ஒரு குட் நியூஸ்!" என்றபோது,

பாலா சந்தோசமாக...

"மது... மது இருக்கிற இடம் தெரிந்து விட்டதா...? இல்ல, ஏதாவது நமக்குச் சாதகமா விசயம்..." என்று வேக வேகமாகக் கேட்டான்.

"ஆமாடா... ஊட்டில ஒரு நம்பர்ல இருந்து பேசி இருந்தாங்கன்னு சொன்னேல... அந்த நம்பர்... அது இப்போ திரும்ப வேண்டும் என்று ரிக்வெஸ்ட் போட்ருக்காங்க... யூஎஸ்ல இருந்தானாம்... இப்போ இங்க செட்டில் ஆகிட்டானாம். திரும்பவும்... அவனோட பிஸ்னஸுக்கு அவன் ஏற்கெனவே வச்சிருந்த நம்பர் வேண்டும் என்று... ஸோ நாம அத விசாரிச்சா... அந்தப் பொண்ணு யாருனு தெரியும்... அத வைத்து மதுவையும் ட்ரேஸ் பண்ணலாம் டா..."

"ப்ச்ச்... இப்போ கூட மதுவைப் பற்றிக் கிடைக்கவில்லை எதுவும்... சரி. பார்க்கலாம்..." என்று சொன்ன பாலாவிடம்,

"டேய், என்ன பார்க்கலாம்.. கிளம்பி வா... அந்த அட்ரெஸில் உடனே போய் விசாரிக்கலாம்..." என்று அவசரப் படுத்தினான் ரகு.

"ஹ்ம்ம்ம்... ஆனா கீர்த்தனா... என் மனைவி... ஃப்ரண்ட் வீட்ல இருக்கா... அவள பிக் அப் பண்ண போய்ட்டு இருக்கேன்... அவள வீட்ல விட்டுட்டு வருகிறேன்," என்று சொல்ல...

"சரிடா... நீ கால் பண்ணு... இப்போ எந்த ஏரியால இருக்க...?"

"அண்ணா நகர் டா.. என்று சொன்னவன், "இந்த ஏரியா தெரியுமாடா உனக்கு... கொஞ்சம் லேண்ட் மார்க் சொல்லுடா... சீக்கிரம் போகணும்..." கீர்த்தி அனுப்பிய முகவரியின் ஏரியாவைச் சொல்ல...

"தெரியுமே... என்று லேண்ட்மார்க் எல்லாம் சொன்னான் ரகு... ஓகேடா... நானும் பக்கத்துலதான் இருக்கேன்..." என்றவன்... துப்பறியும் மூளை அல்லவா?

"டேய்... அது பிரதாப் வீடு இருக்கிற பக்கத்துத் தெருடா..." என்றான்.

"ஆமாடா... அவன வேற எதுக்கு.. இப்போ ஞாபகப் படுத்துற..."

"சொன்னேன்டா..." என்றபடி போனை வைத்தான்.

மீண்டும் கீர்த்தனாவுக்கு போன் செய்தான்... பதிலில்லை.. கீர்த்தனா மேல் உள்ள கோபம் இன்னும் இன்னும் அதிகமாகிக் கொண்டிருந்தது அவனுக்கு.

மதுவைப் பற்றித் தகவல் தெரிந்தும் உடனடியாகப் போக முடியவில்லை... எல்லாம் இவளால்... போனை எடுத்தாலாவது ரகுவோடு போய் விசாரிக்கலாம் என்றால்... இன்னைக்கு இருக்கு இவளுக்கு...

என்னை மட்டும் போன் எடுக்கவில்லை என்றால்... அம்மா... அப்பா ஆக்ஸிடெண்ட்... அது முதல் போன் ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தாலோ... இல்லை போன் எடுக்காமல் இருந்தாலோ பயம் வருகிறது... அட்லீஸ்ட் ஹலோனு ஒரு வார்த்தை... இல்லை, மெசேஜ் போடணும்னு அதிகாரம் பண்ணத் தெரியுது... அதே மாதிரிதான் எனக்கும் இருக்கும்னு இவளுக்குத் தெரியாதா...? அவ வச்சதுதான் சட்டம்... எனக்கு வருகிற ஆத்திரத்துக்கு..." என்று கொதி நிலையில் வந்து கொண்டிருந்தான்.

கையில் வைத்திருந்த ரத்தக் கறை படிந்திருந்த அந்தக் கம்பியைச் சில நிமிடங்கள் பார்த்தபடி இருந்த பிரதீப்... அதைக் கீழே போட்டு விட்டு... மதுவின் அருகில் வந்தான்.

அழக்கூட முடியாமல் இருந்த மதுவை நிமிர்த்தினான்.



"ஏன்டி... என்னைத் திரும்பத் திரும்பக் கொலை பண்ண வைக்கிற... நான் என் கீர்த்திகூட வாழணும்தானே நினைத்தேன்... அப்போ அவளுக்கு ஆதி கையால தாலி கட்ட வைத்து... அவனைக் கொலை பண்ண வச்ச... இப்போ பாரு... இன்னொரு கொலை... மறுபடி ஜெயிலா... என்னை என் கீர்த்தியோட வாழவே விடமாட்டியா...?

"இனி நான் எப்படி கீர்த்தியோட வாழ்வேன்...? ஆனா விட மாட்டேன்டி... முதலில் கூட... அவ தனியா இருந்தா... ஆனா அவ இப்போ இன்னொருத்தனோட சுத்திட்டு இருக்கா... அவளுக்காக ஒருத்தன் உயிர விட்டிருக்கான்... ஆனா அவ இப்போ... பாவம் ஆதி... இவ காதல நம்பி செத்துப் போய்ட்டான்..." என்று வருத்தம் வேறு பட்டான்.

கீர்த்தியைப் பற்றி அவன் சொன்னதில் சந்தோசம் தான் மதுவுக்கு... ஆனால், தற்போது உள்ள சூழ்நிலையில் சந்தோசப்படக் கூட முடியவில்லை...

"அவ மேல இருந்த காதல்ல... இனி அவ இன்னொருவனைப் பார்க்க மாட்டாள்... அது போதும்னு நினைத்து அவள விட்டுடேன்டி... என் கூட வாழலேனா கூடப் பரவாயில்ல... வேற யாரும் அவள நெருங்க முடியாதுன்னு...

"ப்ச்ச்... ஆனா இப்போதானே தெரியுது... ஆதி இல்லேனா இன்னொருத்தன்... அவன் இல்லேனா இன்னொருத்தன்னு போற ஆளுன்னு... இனி அவ எவன கல்யாணம் பண்ணினாலும் பண்ணி இருந்தாலும்... அவள அனுபவிச்சுட்டுதான்டி ஜெயிலுக்குக் கூடப் போவேன்...

"நான் கூட நினைத்தேன்... உன் ஆளு பாலா அவ கூடவே சுத்துறானே... நீயும் வேறு இல்லை... உன்னைக் கழட்டி விட்டுட்டு அவ கூட ஜாயின் அடிக்கப் போறானோனு நினைத்தேன்... பரவாயில்லை... உன் மேல பெரிய காதல்தான் அவனுக்கு...

"என்ன... உன்னைத்தான் காப்பாற்ற வரவில்லை... அதனால அவன பெருசா கண்டுக்கலை... ஆனா அவன் கீர்த்திக்கு ஆள் சேர்த்து விட்ருக்கான்டி... அவனுக்கே வழி இல்லையாம்... அதைப் பார்ப்பானா... என் கீர்த்திக்கு எதுக்குடி மாமா வேலை பார்த்துட்டு இருக்கான்..." என்றவன், அருகில் கிடந்த கீர்த்தனாவின் அருகில் வந்தான்.

"பாவம்... யார் பெத்த பொண்ணோ... காலையிலதான் காப்பாற்றினேன்... இப்படி என்கிட்ட வந்து மாட்டிகிட்டாளே... ஏன்டி... இப்படி யார் யாரோவெல்லாம் என்கிட்ட மாட்டறீங்க... என் கீர்த்தியைத் தவிர..."

கீர்த்தனாவின் முகத்தைக் கையில் ஏந்தியவன் அவளையே பார்த்தான்.

"மாசமா இருக்கியா நீ... எல்லாம் போச்சா... இந்த நிலைமையில... என்கிட்ட... பாவமாத்தான் இருக்கு உன்னை நினைத்து... பாவம் உன் புருசன்... ஆனா என்னை விட பாவம் இல்லை... என் மேல என் கீர்த்திக்குக் காதலே வரல... ஆனா உனக்கு... உன் புருசன் மேல அவ்வளவு காதல்...

"உன் காதல் கிடைச்சிருக்குனா அப்போ அவன் அதிர்ஷ்டக்காரன்தானே... இதோ இந்த மது... இவ காதலன் கூட அதிர்ஷ்டம்தான் பண்ணியிருக்கான்... ஆனா நான் தான் அதிர்ஷ்டம் இல்லாதவன்..." என்றவன்,

"எனக்கு ஏன் என் கீர்த்தி காதல் கிடைக்கவே இல்லை...?" என்று வெறி பிடித்தவன் போலக் கத்தி அவளை உலுக்க...

கீர்த்தனா தான் பதில் சொல்லும் நிலைமையில் இல்லையே...

"சொல்லுடி... சொல்லுடி..." என்று அவளை ஆட்டினான்...

"ஓ உனக்கு என்னைப் பத்தித் தெரியாதுல்ல... நான் என்னைப் பற்றி... என் காதலைப் பற்றிச் சொல்றேன்...



கேட்டுட்டு சொல்றியா..." என்று கீர்த்தனாவிடம் கதை சொல்ல ஆரம்பித்தான் அந்த சைக்கோ.

மதுவின் கண்களில் இருந்த கண்ணீர் கரை புரண்டு வந்து கொண்டிருந்தது.

"என் பேரு பிரதாப்... என் செல்லக் கண்ணம்மா பேரு கீர்த்திகா... அவ மேல எனக்கு எவ்ளோ காதல் தெரியுமா... அவ உடம்பு மேல எல்லாம்... அவ மனசு எனக்கு மட்டும் தான் வேணும்னு நினைத்தேன்... ஆனா அவ என்ன பண்ணுனா தெரியுமா... ஆதியை லவ் பண்ணிட்டா... அதுக்கு இதோ இங்க இருக்காளே இவதான்... அதுக்குக் காரணம்...

"வேகவேகமா கல்யாணம் பண்ணி வச்சுட்டா பாவி... நான் கொண்டு போன தாலிய வச்சே... அப்புறம் என்ன... ஆதிய போட்டுத் தள்ளிட்டேன்... ஜெயிலுக்குப் போயிட்டேன்... அந்தப் பாலா - மது... என் கண்ணம்மா... 3 பேரும் சேர்ந்து எனக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்துட்டாங்க...

"பாலா யாருனு யோசிக்கிறியா... இதோ இங்க இருக்காளே, இவளோட காதலன்... எனக்கும் அப்போ தெரியாது... ஆதியோட ஃப்ரெண்ட் அப்படினுதான் நினைத்தேன்... இவங்கள விடு... ஜெயில்ல இருந்த எனக்கு... அங்க இருந்து வெளியேறப் போன ஒருத்தனோட நட்புக் கிடைத்தது. அவன வச்சு என் கீர்த்திய கடத்தச் சொன்னேன்... எனக்குத் தெரியாமப் போச்சு... என் கீர்த்தி சென்னைலயே இல்லைனு... நான் அனுப்புன நாயி... பணத்துக்கு ஆசைப்பட்டு... இவள கடத்திட்டு என் கண்ணம்மாவைக் கடத்திட்டேன்னு சொல்லிட்டான்...

"இந்தச் சமயத்துல... என் கேசுல இருந்து பாலா இன்வால்வ் ஆகாம போக... அப்போ தெரியல எனக்கு, பாலா ஏன் வரலேன்னு... இவ காணாமல் போனதில் அவன் பைத்தியக்காரன் ஆகிவிட்டான் என்று... எனக்கும் அந்த சமயத்தில் ஈசியா பெயில் கிடைத்தது..." என்றவன் நிறுத்தி,

"அப்போதான் ஊட்டிக்கு வந்தேன்... என் கண்ணம்மாவை என் கீர்த்திய பார்க்க வந்தா... அங்க இவ இருக்கா... நீயே சொல்லு... நாம ஆசை ஆசையா தேடி வந்தவங்க இல்லாம... வேற யாராவது இருந்தா எப்படி இருக்கும்...

"எனக்கும் அப்படித்தான் இருந்துச்சு... ஆனாலும் இவ மேலயும் எனக்குக் கோபம் இருந்துச்சா... ஆனாலும் இவ 4 மாதமா அனுபவித்ததே போதும்னு எனக்குத் தோணுச்சு... விட்ரலாம்னுதான் நினைத்தேன். அப்போதான் இவ சொன்னா...

"என் பாலா உன்னைச் சும்மா விடமாட்டான்டா...ன்னு. அப்போதான் தெரிஞ்சது பாலாவுக்கும் இவளுக்கும் உள்ள சம்பந்தம் என்னவென்று... எனக்குக் கிடைக்காத காதல் இவங்களுக்குக் கிடைக்கக் கூடாதுன்னு முடிவு செய்தேன்...

"நான்... கீர்த்தி தனியா வாழ முடியாம இருக்கும் போது... இவங்களுக்கு மட்டும் என்ன வாழ்க்கைனு... இவள விடல... அப்படியும் இவ தப்பிச்சுப் போக ரெண்டு தடவை ட்ரை பண்ணினா... இவ கொஞ்சம் ஷார்ப்... சோ இவ சுய நினைவுல இருக்கக்கூடாதுன்னு... போதை ஊசிக்கு அடிமை ஆக்கினேன்... அப்போதான் இவ உன் கண்ணுல மாட்டுனா... அவ காதலனுக்கு போன் செய்தா... அதுவும் முடியாம போச்சு...

"அதுக்கப்புறம் என்ன யோசித்தாள்னு தெரியல... தப்பிக்க ட்ரை பண்ணல... அந்தப் பாலா கொஞ்சம் சரி ஆகி வந்து... கேசில் இன்வால்வ் ஆகி... நான் மறுபடியும் ஜெயிலுக்குப் போனேன்... என்னைக் கூட இவ கடத்தல்ல சந்தேகப் பட்டான்... நான் இவள இதோ இங்க இருக்காங்கல்ல... இவங்க பாதுகாப்புல விட்டுட்டுப் போனேன்... பெங்களூர்ல தான் இருந்தாங்க, ரெண்டு பேரும். ஒன்றரை வருடம் முன்பு நான் விடுதலை ஆகினேன்.



"நான் போய் இவள அடிக்கடிலாம் பார்க்கமாட்டேன். ஆனா என் கஸ்டடிலதான் வச்சுருந்தேன்... எனக்கு அதுல ஒரு திருப்தி... அப்போலாம் எனக்கு சப்போர்ட் பண்ணிட்டு இருந்த சுமதி ஆன்ட்டி... உன்ன கொல்ல வர்றப்ப மட்டும் உனக்கு மட்டும் ஏன்டி சப்போர்ட் பண்ணினாங்க... ப்ச்ச்... போய்ச் சேர்ந்துட்டாங்க... என்ன பண்றது... அவங்க விதி அவ்ளோதான்..." என்றவன்...

"சரி. விடு... எல்லாம் நல்லாத்தான் போய்ட்டு இருந்துச்சு... கீர்த்தி தனியா இருக்கா... நாமளும் அவளப் பார்த்துட்டே இருப்போம்னு இருந்தா... அவ சென்னைக்கே வரல... தவிச்சுப் போயிருந்தேன்... நானும் சென்னை வராம இருந்தேன்...

"ஆறு மாசத்துக்கு முன்னால சென்னை வந்தப்ப அவள மறுபடியும் பார்த்தேன்... அப்போதெல்லாம் அவகிட்ட வித்தியாசம் இல்ல... ஆனா கொஞ்ச நாளைக்கு முன்னால... ஒருநாள் மறுபடியும் தேவதை மாதிரி காட்சி தந்தா... அதுவும் தனியா இல்லை... இன்னொருத்தனோட... இனி அவள விடக்கூடாதுன்னு முடிவு பண்ணி இவளையும் இங்க கூட்டிட்டு வந்தேன்... ஏன் தெரியுமா... இவள வச்சு என் கீர்த்திகாவை இங்க வர வைக்கப் போறேன்..." என்று முடித்தவன்...

கீர்த்தனாவைத் தரையில் விட்டான்.. மேலும் தொடர்ந்தான்... அவளைப் பார்த்தபடியே,

"இடையில் நீ வந்து மாட்டிக்கிட்ட... இதுக்கு மேலயும் என்னால போராட முடியாது... கீர்த்தியை அடைய எனக்கு இதுதான் கடைசி வாய்ப்பு... இவள இங்க வச்சுருக்கேன்னு சொல்லி, அவள மிரட்டி வர வைக்கப் போறேன்... மதுனா என் கீர்த்திக்கு ரொம்ப இஷ்டம்..." என்று மதுவை நக்கலாகப் பார்த்தவன்...

மீண்டும் கீர்த்தனாவிடம் திரும்பினான்.

"என் கதை கேட்டுட்டியா... சரி... பதில் சொல்லு... ஏன் என் கீர்த்திக்கு என் மேல் காதல் வரவில்லை...?" என்று அவளிடம் கேட்டவன்... பதில் வரவில்லை என்பதை உணர்ந்து...

"அதுக்கும் முன்னாடி ஒண்ணு பண்ணணுமே... என் வீட்டுக்குப் போய்... உங்களை மண்ணோடு மண்ணாக்க... தேவையானதை எல்லாம் எடுத்து வருகிறேன்..." என்றபடி கீர்த்தனாவையும் அவளருகில் இருந்த சுமதி ஆன்ட்டி என்று சொன்ன அந்தப் பெண்மணியையும் இழுத்துக்கொண்டு போய் இன்னொரு ரூமில் தள்ளியவன்... சிறிது நேரத்தில் வெளியேறியும் இருந்தான்...

கதவைப் பூட்டியபடி அவன் வெளியேறிப் பத்து நிமிடங்கள் ஆகி இருக்கும்... பாலாவும் வந்து சேர்ந்தான்... அந்த வீட்டின் முன் காரை நிறுத்தி இறங்கியவனுக்கு அந்த வீட்டின் நிசப்தமே பகீர் என்றிருந்தது...

கீர்த்தனா அனுப்பிய முகவரி இதுதானா என்று மீண்டும் ஒருமுறை சரி பார்த்தபடி கேட்டைத் தாண்டி வீட்டை அடைந்தான். அழைப்பு மணி இல்லாததால் கதவைத் தட்டினான். மறுபடியும்... மறுபடியும் தட்டியவன்... இப்போது கீர்த்தனா... கீர்த்தி... கீது என்று பலமுறை கூப்பிட்டும் பதில் இல்லாமல் போக... மீண்டும் தனது மொபைலில் இருந்து அழைத்துப் பார்க்க... மனம் என்னென்னவோ நினைக்க ஆரம்பித்தது...

முதலில் தடுமாறிய பாலா தன்னை நிதானத்திற்குக் கொண்டு வந்து... தறிகெட்டு ஓடிய தேவை இல்லாத எண்ணங்களை அடக்கினான்... தன்னவளுக்கு ஒன்றும் ஆகி இருக்காது என்று..

கதவைத் தட்டி... ஒன்றும் பிரயோசனமில்லை என்று யோசித்தவன்... கதவை உடைக்கலாமா என்று அதனைக்



கை வைத்துப் பார்க்க... அதெல்லாம் அத்தனை சாதாரணமாய் இல்லை... கனமான தேக்கு மரத்தால் இழைத்திருந்தனர்... அப்போது சற்றுத் தள்ளிக் கிடந்த கீர்த்தனாவின் காலணி கண்ணில் பட... கீர்த்தனா அந்தப் பெண்ணைத் தள்ளி உள்ளே போனபோது ஒன்று இங்கேயும் மற்றொன்று உள்ளேயும் போய் இருந்தது...

பாலாவுக்கு மூச்சே நின்று விடும் போல் இருந்தது... செருப்பைக் கூட ஒழுங்காகக் கழற்றி விட முடியாத சூழ்நிலை என்றால்... வேகமாய்... சுற்றிலும் பார்த்தவனுக்கு அவளின் இன்னொரு காலணி கண்ணில் படவே இல்லை...

கீர்த்தனா இங்குதான் எங்கோ இருக்கிறாள்... அவளுக்கு என்னவோ நடந்திருக்கிறது... அடுத்த கணமே மனம் சொல்ல... பாலா ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்றான்... அவனையுமறியாமல் அவளுக்கு நடுங்கிய கையோடு மீண்டும் போன் செய்ய... இம்முறை கோபம் வரவில்லை... மனம் எங்கும் தவிப்பும்... நடுக்கமும் வர ஆரம்பித்தது... ஆனாலும் அவன் மனம் அவளுக்கு ஒன்றும் ஆகி இருக்காது என்ற செய்தியை மூளைக்கு அனுப்பியபடியே இருந்தது.

வேகமாய்... ரகுவுக்கு போன் செய்து விபரத்தைச் சொல்லி அவனை உதவிக்கு அழைத்தவன்... வீட்டின் பக்கவாட்டில் போய்ப் பார்க்க... அவனது நேரத்திற்கு அதில் ஒரு சன்னல் கதவு மட்டும் மூடப்படாமல் இருக்க... திறந்து பார்த்தான்... முதலில் அவன் கண்ணுக்குத் தெரிந்தது கீர்த்தனாவின் கைப்பைதான்... அது கிடந்த கோலமே கீர்த்தனாவின் நிலையைத் தப்பாமல் சொல்ல...

'கீர்த்தி' என்று அலறினான் பாலா...

கணகளைச் சுழல விட்டபடி கீர்த்தி... கீர்த்தி என்று கத்தினான்.

இப்போது அருகில் இன்னொரு பெண் கிடந்தது அவனுக்குத் தெரிய வந்தது... தலை சாய்த்துக் கிடந்த அந்தப் பெண் கீர்த்தனா இல்லை என்பது தெரிய... உள்ளே நன்றாகத் தேட... இரும்புக் கம்பி... ரத்தம் வடிந்த தரை... அது இழுக்கப்பட்டிருந்த கோலம்... எல்லாம் அவனின் உயிரைக் குடிக்க...

'கீர்த்தி...!" என்றவனின் வார்த்தைகள் வாயோடே நின்றன.

"அய்யோ... என் கீர்த்தி... என்னாச்சு... யாரு... அவளுக்கு எதிரி... இல்லை... என்னைச் சுத்தி இருக்கிற எதிரி தெரியாம நான் இருக்கிறேனா..." மனம் பிதற்ற... அவனுக்கு மூளை எந்தவொரு கட்டளையும் பிறப்பிக்காமல் நிறுத்த ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

அப்போது...

"கீர்த்தி... கீர்த்தி!" என்ற அவனது அலறலில்... மது மெதுவாய் உணர்வுக்கு வந்தாள்... போகும் போது பிரதாப் அவளுக்கு ஊசியைப் போட்டு விட்டுத்தான் போயிருந்தான்... அதையும் மீறி... 'கீர்த்தி' என்ற வார்த்தையில் தன் நினைவுக்கு வர ஆரம்பித்தாள் மது.

"கீர்த்தியும் இங்க இருக்காளா... அவ எப்போ இங்க வந்தா... கடைசியில் அவளும் வந்து மாட்டி விட்டாளா...?" என்று மனம் துடிக்க ஆரம்பித்தவளுக்குப் போதையில் இருந்ததாலோ என்னவோ... மூளை இன்னொரு விசயத்தைத் தாமதமாக அனுப்பியது.

அது... கீர்த்தி என்று அழைப்பு வந்த குரல் பாலாவின் குரல் என்பது...

எந்த நொடி அவனின் குரலை உணர்ந்தாளோ... அந்த நொடி... அவள் உடம்பில் புது ரத்தம் பாய ஆரம்பித்தது...



பாலா வந்துட்டானா... நினைத்த போதே கண்ணீர் கண்ணில் வழிந்தது...

பெரு முயற்சி செய்து... தன் தலையை அவன் குரல் வந்த பக்கம் பார்க்க... அது பாலாவேதான்...

"பாலா..." கத்த முயற்சி செய்தாள்.. வார்த்தை வெளியே வரவில்லை... கைகளை அவனை நோக்கி ஆட்ட... அதைக் கண்டுகொள்ள முடியாதவன் போல நின்று கொண்டிருந்தான்... பாலா... ரத்தக் கறை இருந்த இடத்தையே பார்த்தபடி...

"மது... இம்முறை பாஆஆஅலாஆஆ..." என்று சத்தமாக அழைக்க, கீழே கிடந்த பெண்ணைப் பார்த் தான்... அவள் ஏதோ சொல்ல வருவது போல் தோன்றியது அவனுக்கு... ஆனால் அவள் மது என்று அவனுக்கே தெரியவில்லை.

மது அருகில் இருந்த சுவரைப் பிடித்தபடி எழ... முதலில் விழுந்தாள்... பின் தன்னை தன் மனதின் நம்பிக்கை எல்லாம் உடலில் கொண்டு வந்து... எழுந்து பாலாவை நோக்கிச் சென்றாள்... தடுமாறியபடி... சந்தோசமும், துக்கமும் அவள் முகத்தில் இருந்தன...

பாதி தூரம் வருகிறவரை அது யாரோ ஒரு பெண் தான் என்று நின்று கொண்டிருந்தான் பாலா... உணர்ச்சியின்றி... மனைவியையே நினைத்தபடி... மூளை மரத்தவனாய்...

ஆனால் மது அவனை நெருங்கி வரும்போது... அவன் மூளை அதிர்ச்சியில் மீண்டும் செயல்பட ஆரம்பித்தது.

வாய் தானாகவே... "மது..." என்று குழறி... கண்களில் இருந்து கண்ணீர் அருவி போல் வழிய...

"மதுமா..." என்று அவள் அருகில் வந்து கீழே விழப் போனவளின் கைகளைப் பிடித்துத் தன்னருகில் கொண்டு வந்தான்.

இருவருக்கும் என்ன பேசுவது என்று புரியவில்லை... தெரியவில்லை...

பாலா, "என்னடா... இப்படி இந்தக் கோலத்துலதான் நான் உன்னைப் பார்க்கணுமா... ஏன்?" என்று தட்டுத் தடுமாறிப் பேச...

மதுவோ... பேச முடியாமல் மயங்கினாள்.

"மது... என்னைப் பாரு... மது..." என்று கத்தியவன்... வெறி பிடித்தவன் போல் பின்னால் ஓடினான்... ஏதாவது வழி கிடைக்குமா என்று...

மனைவியின் நிலை அவனை யோசிக்க விடாமல் மறந்திருக்க ஆரம்பிக்க... மதுவைப் பார்த்துத் தன் நிலைக்கு வந்தான்.

பின் பக்கக் கதவினை வெறி பிடித்தவன் போல உடைக்க... அது... அவனின் சில பல முயற்சிகளுக்குப் பின் திறக்க... வேகமாய் மது இருந்த இடத்தை அடைந்தான்.

உள்ளே நுழைந்தவனின் கண்கள் முதலில் மனைவியைத்தான் நிராசையுடன் தேடின... மதுவின் அருகில் போகாமல்... அவளைச் சில வினாடிகள் பார்த்தபடி நின்றவனின் கண்கள்... கீர்த்தனாவின் கைப்பை கண்ணில் பட நடுங்கியபடி எடுத்தான்..

அடுத்து கதவின் அருகில் கிடந்த மற்றொரு செருப்பைப் பார்த்தவனுக்கு... பைத்தியக்காரன் போல் அதை ஓடிப் போய் எடுத்தான்... இப்போது அருகில் கிடந்த ரத்தக் கறை படிந்த கம்பி கண்ணில் பட... அது தந்த நினைவின் வேதனையில்... வலியில்...

"கீர்த்தி!" என்று பெருங் குரலெடுத்து அழ ஆரம்பித்தான்... அவளின் கைப்பையையும் காலணியையும் அணைத்தபடி... ரத்தக் கறை அந்த ஹாலில் இருந்து இழுக்கப்பட்டிருந்தது... அதைத் தொடரவே பாலா பயந்தான்.



நீண்ட நாள் தேடிய காதலி கிடைத்தும் அவளை நினைக்க முடியாமல் மனம் மனைவியை எண்ணிக் கீர்த்தி... கீர்த்தி என்று அரற்ற ஆரம்பித்தது... தன் உயிராய் - தன் வாழ்க்கையாய்... மாறியவள்... தன்னை விட்டுப் போய் விட்டாளோ... அவளில்லாத உலகத்தில் இனி என்ன... அவனோடு... அவன் உயிரோடும்... உடலோடும் மனைவி என்ற உறவால்... கலந்தவள்... அவனைத் தவிக்க விட்டுப் போய்விட்டாளா...?

இங்கு எதற்கு வந்தாள்... மதுவுக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்... மதுவைப் பார்த்துதான் அவளைக் காப்பாற்றப் போய்... இப்படி ஆகிவிட்டதா இவளுக்கு... மனம் மறுகினான்... துடித்தான்... வேரோடு சாய்ந்த மரம் போல் விழுந்தான் பாலா...

மனைவியை மட்டுமே சுமந்திருந்த அவன் காதல் மனம்... தன் துடிப்பை... அதன் பணியை மேலும் பார்க்க ஆசையில்லாமல்... தவிக்க ஆரம்பித்தது... தன் துணை அதன் துடிப்பை நிறுத்தி விட்டதோ என்று...

## 51

**சி**த்தம் கலங்கி இருந்த பாலா... மெதுவாய் நகர்ந்தான்... தன்னவளைத் தேடி... ரத்தக் கறையைத் தொட்டுப் பார்த்தவன்... அதன் ஈரம்... இப்போதுதான் நடந்திருக்கிறது என்ற உண்மையைச் சொல்ல... கீழே விழுந்து அழ ஆரம்பித்தான்...

ஆண்மகன் என்ற அடையாளம் எல்லாம் அவனை விட்டு எப்போதோ போய் இருந்தது... மனைவியைக் காப்பாற்ற முடியாதவன்... ஆண்மகனாய் இருந்து என்ன பிரயோஜனம்...? கைகளில் ஒட்டிய ரத்தக் கறையைப் பார்த்தபடியே இருந்தான்... ரத்தக் கறையைத் தொடர

ஆரம்பிக்க... அது அவனை ஒரு அறையின் வாயிலில் நிறுத்த... மனம் அழுதது... தன்னவளை எந்த நிலையில் பார்க்கப் போகிறோமோ என்று...

கதவைத் திறக்கவே கை நடுங்கியது அவனுக்கு... கீர்த்தி... என் கீது என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாளா... நம்பவே மனம் மறுத்தது... நடக்காமல் இருப்பதற்கு வாய்ப்பை எல்லாம் அவன் மனம் யோசித்தது...

ஆனால் அவன் பார்த்த எதுவுமே அவனுக்கு அவளின் நல்ல நிலையைச் சொல்லவில்லை... ஆனாலும் மனைவியின் உயிர்... தன்னை விட்டு அத்தனை சீக்கிரம் போகாது என்றே நினைத்தான்... நினைக்கும் போதே... தன்னைப் பார்ப்பதற்காக இழுத்து வைத்துக் கொண்டு இருந்தால்... தன்னைப் பார்த்தவுடன் போய் விடுவாளோ என்று அஞ்சினான்... தயங்கினான்... அந்த அறைக் கதவைத் திறக்கவே...

எல்லாம் முடிந்து விட்டது... இனி எதையும் மாற்ற அவன் என்ன கடவுளா...! தன்னை நொந்தபடி... மொத்தமாய் அவன் வாழ்க்கை முடிந்து விட்டது... இனி என்ன... யாருக்காகக் கீர்த்தனாவைத் துன்பத்தில் சுழல விட்டோமோ அவள் கூட கிடைத்து விட்டாள்...

தன்னவள் கூட அதை மறந்து மன்னித்துவிட்டாள்... ஆனால், மேலே இருக்கும் ஒருவன் தன்னை மன்னிக்க வில்லையா... தனக்குத் தன்னவளைப் பிரித்து... நினைக்கும் போதே தன்னை நினைத்துச் சிரித்தான்... இதைத்தான் தண்டனையாக அளித்து விட்டானா... அவன் மனம் துக்கத்தையும் கடந்து அடுத்த நிலைக்குச் செல்ல ஆரம்பித்து இருந்தது...

கண்ணில் கண்ணீர் நின்றது... இந்த நிலைக்கு வந்த போதே தன் கீர்த்தியைப் பார்க்க வேண்டும்.. அவளின் முகத்தைப் பார்க்க வேண்டும் என்ற உந்துதல் மட்டுமே



அவனுள் இருந்தது... உடனே கையும் கதவின் தாழ்ப் பாளைத் திறக்க...

அங்கு... ஒரு நடுத்தர வயதுப் பெண்... தலையில் அடிபட்ட கோலத்தில் கிடக்க... அருகில் தன்னவள்... கீழே கிடந்தாள்... மனம் பதறி அவளை ஓடிப் போய்த் தன் மடியில் தாங்கியவன்... அவன் இருந்த நிலையில் அவளை ஆராயவெல்லாம் இல்லை... அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கட்டிக்கொண்டு கதற ஆரம்பித்தான் பாலா.

கணவனின் கதறல் எல்லாம் அவன் கண்மணியின் காதில் விழவில்லை...

அதே நேரம்... அவளின் இதயம் அவள் துணைவனுக்காக... அவனுக்காக மட்டுமே துடித்துக் கொண்டிருப்பது தெரியாமல்... தெரியும் நிலையிலும் இல்லாமல்... அவளால்... அவன் மனைவியால்... அவள் காதலினால்... அவன் கீர்த்தனாவினால்... முற்றிலும் கிறுக்கனாய் மாறியிருந்த பாலா அதை உணராமல் கதறிக் கொண்டிருந்தான்.

தன் துடிப்போடு தன்னவளின் துடிப்பும் இணைந்து ஒருங்கே கேட்பதைச் சில நிமிடங்கள் கழித்துத்தான் உணர்ந்தான் பாலா.

உணர்ந்த நொடியிலேயே மனமெங்கும் சந்தோச அலை... மின்சாரம் போல உடலெங்கும் பரவ... அதே வேகத்தில் அவளைப் பிரித்தவன்... அவளை முழுவதும் ஆராய்ச்சி செய்ய... அவளுக்குச் சிறு கீறல் கூட இல்லை... வேக வேகமாய் மூக்கின் மேல் கை வைத்துப் பார்க்க... அது சீராக எந்த தடுமாற்றமும் இல்லாமல் வந்து கொண்டிருந்தது...

அவளுக்கு ஒன்றுமில்லை... என்று உணர்ந்த அந்த நொடி... முதன்முதலில் அவளோடு அவன் கலந்த நொடியை விட இன்பத்தை அளித்தது அவனுக்கு... வேகவேகமாய் அந்த வீட்டில் தண்ணீர் இருக்கிறதா என்று தேடியவன்

ஹாலுக்கு வர... அப்போதுதான் மதுவும் அங்கு இருக்கிறாள் என்று ஞாபகம் வர... இருந்தும் தன் மனைவியின் மயக்கத்தை முதலில் போக்குவோம் என்று நினைக்கும் போதே... அவள் மேல் எவ்வளவு காதல் இருந்ததோ... அவ்வளவு கோபமும் வந்திருந்தது அவனுக்கு...

இருந்தும் அவள் சூழ்நிலை என்னவோ என்று யோசித்தபடி தண்ணீரோடு வந்தவன்... கண்ணில் அவளின் கைப்பையில் இருந்து சிதறிய பொருட்கள் கவனம் பதிய... அதில் இருந்த மிளகாய்ப் பொடி... கத்தி... சற்றுத் தொலைவில் கிடந்த ஸ்ப்ரே... என்று ஸ்தம்பித்தான். அருகில் இன்னொரு கவர் கூட கிடந்தது... அது என்னவோ என்று விட்டுவிட்டான்...

ஆக... அவன் மனைவி தெரியாமல் மாட்டவில்லை... தானாகவே மாட்டிக்கொண்டாள் என்ற உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்க...

சற்று முன் காதலில் அவளுக்காகத் துடித்த இதயம்... இப்போது அதே அளவு கரை காணாத கோபத்தில் எகிறியது... அவன் உள்ளம் துடித்தது... தன்னை நினைக்கவே இல்லை... அவளுக்காக நான் இங்கே பைத்தியக்காரனை விட... மோசமான நிலையில் இருக்க... என்னை மறந்து... அவள் காப்பாற்றியது மது என்று கூட நினைக்கத் தோணவில்லை அவனுக்கு...

மனைவி தன்னை நினைக்கவில்லை... தன் நிலையை யோசிக்கவில்லை என்று சினம் தான் அவனைச் சூழ...

அதே கோபத்தில் சென்று... அவளைப் பிடித்துத் தன்னருகே கொண்டு வந்து தண்ணீரைத் தெளிக்க... அவனை இத்தனை நிமிடங்களாய் பாடாய்ப்படுத்தி... கொல்லாமல் கொன்று கொண்டிருந்தவள்... மரண வேதனையை விட அதிகமான வேதனையை அவனுக்கு அறிமுகம் செய்த அவனது மனையாள் கண் விழித்துப்



பார்க்க... முதலில் அசௌகரியமாகத் திறந்த விழி... தன் மனையாளனைக் கண்டவுடன்... உயிர் மீண்டு விட்டோம் என்பதை விட...

தன்னவனை மீண்டும் பார்த்துவிட்டோம் என்ற ஒரே நினைவில்... சந்தோசத்தில் விரிந்து மலர... அவனைப் பார்த்த சந்தோசம் உடலெங்கும் விரவி வாய் வார்த்தையில்... பாலா என்று விகசித்து வார்த்தைகள் வர எழுந்து நின்றாள்.

"அந்தப் பொண்ணு... ஊட்டியில பார்த்த..." என்று தட்டுத் தடுமாறி அவள் சொற்களைச் சேர்க்க...

அதே நிமிடத்திலே... கணவனின் கை அவள் கன்னத்தில் மாறி மாறி விழுந்தது... அதிர்ச்சியில் கீர்த்தனா உறைந்து நின்றாள்...

அவளைத் தள்ளி விட்டவன்...

"என்னையும் நம்ப மாட்ட... என் காதலயும் நம்பமாட்ட... நீ என்னைக் காதலிக்கவே இல்லடி... இவன் நம்ம இல்லேனா கூட இன்னொருத்தி பின்னால போய்டுவான்ற உன் எண்ணம் மாறவே இல்லைல... போடி... ஒண்ணு தெரிஞ்சுக்கோ... என் உயிர் என்கிட்ட இல்லடி... அது..." என்றவன் கண் கலங்கியபடி அவளின் இதயத்தைத் தொட்டுக் காட்டி...

"இங்கே எப்பவோ கூடு மாறிருச்சு... இங்க நின்னுடுச்சுனா... உன் புருசனும் போய்டுவான்!" என்றபடி அவளை விட்டகன்றவன் மதுவைத் தேடிச் சென்றான்... தளர்ந்த நடையோடு...

கீர்த்தனாவுக்குத் தான் இன்னும் உயிரோடு இருக்கிறோமா என்று அதிர்ச்சி வேறு... கணவன் அறைந்த அறை வேறு... அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் தந்த வலிகள் வேறு... அப்படியே கன்னத்தைப் பிடித்தபடி நின்றவள்...

பக்கத்தில் உயிரற்றுக் கிடந்த அந்தப் பெண்ணைப் பார்த்து இன்னும் அதிர்ந்தாள்...

இவள் எப்படி இறந்தாள் என்று தெரியவில்லையே... என்று அவள் நடந்ததை மீண்டும் ஓட்ட...

பிரதாப்... அவனருகில் அவளைக் கொல்லும் வெறியோடு வர... கீர்த்தனா... இனி அவ்வளவுதான் என்று நினைத்து முடித்திருந்தாள்... வயிற்றில் கை வைத்தபடி... ஆனால்... அவளைக் காப்பாற்ற அவள் கணவன் தான் வர வேண்டுமா என்ன... அவன் தன் உயிரைத் தங்கள் குலம் தழைக்கும் குழந்தையாகத்தான் அவளோடு அனுப்பி இருந்தானே...

அது அவளைக் காப்பாற்றியது... காலையிலிருந்து குமட்டியபடி இருந்தவளுக்கு... வெளிவராத வாந்தி... பயத்திலும்... அவளின் மசக்கையான நிலையும்... ஒரு சேர... பிரதாப்பின் மேலேயே அத்தனையையும் எடுத்து விட... அவன் அருவருப்பில் பின்வாங்கினான்... ஆனால் கீர்த்தனாவோ அதோடு மயங்க... சுமதியின் மேலேயே விழுந்தாள்...

இதுதான் அவளுக்கு ஞாபகம் இருந்தது...

ஆனால்... அவளுக்குத் தெரியாத ஒன்றும் நடந்திருந்தது... அது... தன் மேல் விழுந்த கீர்த்தனாவைத் தாங்கிய சுமதி... செவிலியருக்கான பட்டயப் படிப்பு படித்திருந்தாள்... அதனால்தான் மதுவைக் கவனிக்கும் பொறுப்பைப் பிரதாப் அவளிடம் விட்டிருந்தான்...

பணத்துக்காகத்தான் அவள் வேலை பார்த்தாள்... நாளாக... நாளாக அவளுக்கே மதுவின் நிலை பரிதாபமாகத் தோன்ற... பிரதாப்பிடமிருந்து தப்பிக்கலாம் என்று நினைத்தாள்... மதுவோடு சேர்ந்து... ஆனால்... அவள் மகள் திருமணமாகி... கணவனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாள்...



சுமதியின் மன நிலை உணர்ந்தவன்... அதை வைத்துத்தான் அவளை மிரட்டிக் கொண்டிருந்தான்... தான் ஏதாவது செய்யப் போய்... அது தன் மகள் வாழ்க்கையைப் பாதித்து விடுமோ என்று அடங்கிவிட்டாள் சுமதி... ஆனால், இன்று தன் மேல் மயங்கி விழுந்த கீர்த்தனாவின்.. கையைப் பிடித்துப் பார்க்க... அது அவளோடு இன்னொரு உயிரும் உள்ளதைச் சொல்ல... மதுவின் மேல் வராத... கீர்த்தனாவின் மேல வராத பரிவு... அவள் குழந்தை மேல் வர... கீர்த்தனாவுக்காகக் கெஞ்ச ஆரம்பித்தாள் சுமதி... பிரதாப்பிடம்...

"தம்பி... இந்தப் பொண்ணு புள்ளத்தாச்சியா இருக்குப்பா... இந்த நிலைமைல... இது பெரிய பாவம்..." என்று கெஞ்ச...

மது அதிர்ந்தாள்... இந்தப் பெண்ணுக்கு இது தெரியுமா... தெரியாதா... தெரிந்திருந்தால் கண்டிப்பாக இங்கு வந்திருக்கமாட்டாள் என்றே தோன்றியது... கடவுளே! இந்தப் பெண்ணுக்கு எதுவும் ஆகக்கூடாது... என்று மனம் கீர்த்தனாவுக்காக வேண்ட ஆரம்பிக்க...

ப்ரதாப் அதற்கெல்லாம் மசியவில்லை...

"மயக்கத்தில் இருந்த கீர்த்தனாவினைக் கொல்லும் வெறியில் வந்தவன்... அவளை அடிக்கப் போக... சுமதி இடையில் பாய்ந்தாள்..."

இத்தனை நாள்... மது என்னும் இளம் பெண்ணிற்குத் தான் செய்த மாபெரும் தவறுக்கெல்லாம் பரிகாரம் தேடும் விதத்தில்... தண்டனையாக... கீர்த்தனாவைக் காப்பாற்றித் தன்னை மாய்த்துக் கொள்ள...

ப்ரதாப் அதிர்ந்தான்... சுமதியையே பார்த்துக் கொண் டிருந்தவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை... சுத்தமாய்... அப்போதைக்குக் கொலை வெறி அடங்க...

அதன் பின் தான் மயக்கத்தில் இருந்த கீர்த்தனாவிடம் பேச ஆரம்பித்தான்... அது கீர்த்தனாவுக்கும் தெரியவில்லை.

கணவனின் கோபம்... மண்டையில் உறைக்க... அது ஏன் என்றும் விளங்க... அவனைத் தேடி வந்தாள்... தள்ளாடியபடி... தனக்கு அவன் மேல் காதல் இல்லையா... நான் அவனை நம்பவில்லையா... என்ற போது அவளின் மனச்சாட்சி... நீ அவன் மேல் அளவு கடந்த காதல் தான் வைத்திருக்கிறாய்... ஆனால், அவனை நம்பினாயா என்று கேட்க... மனம் அடி வாங்கியது...

ஆனால் அவள் மனம்... அவளறியாமல் என்றோ அவனை முழுமையாக நம்பத் தொடங்கி விட்டதுதான் உண்மை... இன்று அவன் பேசிய வார்த்தைகளில்...

"இல்லை... இல்லை... உன்னை நான் முழுசா நம்புகிறேன்... நீ எனக்காக மட்டும்தான் வாழ்கிறாய்... எனக்கு அது தெரியும்..." என்று கத்த வேண்டும் போல் இருந்தது.

கணவனிடம்... தன் மேல் அவன் எவ்வளவு கோபப்பட்டாலும் சமாதானம் செய்யும் வேகத்தில் வந்தவள்... வந்த வேகத்திலேயே நின்றாள்... தான் காப்பாற்ற வந்த பெண்ணைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தான்... கணவன். இவளை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை...

"மது... மது... என்னைப் பாருடா..." அவளைத் தட்டி எழுப்பினாலும் தண்ணீர் தெளித்தாலும் அவள் எழவில்லை.

கீர்த்தனாவுக்கு ஓரளவு புரிய... கணவனின் நிலை அறிந்து... அவனருகில் போக...

இப்போது மது மெதுவாக விழித்துப் பார்த்தாள்...

அருகில் இருந்த கீர்த்தனாவைப் பார்த்துச் சினேகமாய்ப் புன்னகைத்தாள்.



பாலாவிடம் வாய் திறந்து பேசவில்லை அவள்... ஆனால், கண்கள் பேசின... பாலா கண்களில் கண்ணீர் வர... தன் கையால் அதைத் துடைக்க... வழக்கம் போல் அவளது அன்பில் கரைந்தவன்... அவளை அணைத்தபடி அழ ஆரம்பித்தான்... மனைவி அருகில் இருந்தும் அவளின் பரிதாப நிலையில்...

கீர்த்தியும் அவனோடு அழ ஆரம்பித்தாள்... கணவனின் துன்பம் தாங்காமல்...

"என்னை இங்க இருந்து கூட்டிட்டுப் போடா... எனக்கு என் அப்பா... அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு..." என்று தடுமாறின வார்த்தைகள்.

"கண்டிப்பா மது... நாம போகலாம்... யாருடா உன்னை இப்படிப் பண்ணியது... அதச் சொல்லு... முதலில்..." என்ற போது...

கீர்த்தனா ஓரளவு ஊகித்திருக்க...

வாய் தானாகவே சொல்லியது.

"ப்ரதாப்!" என்று சொல்ல...

பாலா அதிர்ந்து கீர்த்தனாவைப் பார்க்க...

மதுவோ... "ஆமாடா... அந்த சைக்கோதான்டா... என்னை இப்படி ஆக்கிட்டான்டா..." என்று தன் முயற்சி எல்லாம் திரட்டிக் கதறிய போதே அவள் மீண்டும் மயக்கத்திற்குப் போக ஆரம்பிக்க...

பாலா மதுவின் கன்னத்தைத் தட்டினான் அவளை நினைவுக்குக் கொண்டு வர...

"ஏய் ஏய் மது... இங்க பாரு... என்னைப் பாரும்மா... ஏன் இப்டி மயங்குற...?"

விழித்தாள்... பின் உதடுகள் மட்டும் இகழ்ச்சியாய் வளைந்தன.

மது... அருகில் கிடந்த மருந்து பாட்டிலைக் காட்ட...

"மது..." என்று அலறினான் பாலா...

"உன் மதுவுக்கு இப்போ இதுதான்டா எல்லாம்..." என்று கசப்பாய்ச் சொல்ல...

பாலாவின் கதறல் மட்டும்தான் அறை எங்கும் எதிரொலித்தது.

அப்போது ரகுவும் அங்கு வந்து சேர்ந்தான்.

அங்கு நிலவிய சூழ்நிலையில் எல்லாம் விளங்க... அங்கு நடந்தவற்றைக் கீர்த்தியும் சொல்ல... அவன் அதை வாங்கி... உடனே காவல் துறைக்கு போன் செய்ய... காவல்துறை பிரதாப்பின் வீட்டைச் சுற்றி வளைக்க... அடுத்த இருபது நிமிடத்தில் அவன் கைது செய்யப்பட்டான்... அவன் எதிர்பாராத வகையில் மாட்டிக்கொண்டான்...

சென்னைக்கு மதுவைக் கூட்டி வந்து தவறு செய்து விட்டோமே என்று ஆத்திரம் கொண்டான்.

பாலாவுக்கு ஆத்திரம் அடங்கவில்லை... தன் வாழ்க்கையையே திசை மாற்றியவனை... அவன் முன் வந்திருந்தால் கொலையே பண்ணி இருப்பான் போல... வெறி பிடித்தவன் போல் இருந்தான்... கீர்த்தனாவுக்குப் பாலா அருகில் போகவே பயமாய் இருந்தது... ஒன்று... அவன் கோபம்... இன்னொன்று மது என்ன நினைப்பாளோ என்று... பாலாவை விட்டுத் தள்ளியே இருந்தாள்...

ரகுதான் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்.

"இனி என்ன பண்ணப் போறடா அவன... அவன் ஒரு முறை குற்றம் செய்து தண்டனை அனுபவித்தவன்... இப்போ... இனி கண்டிப்பா வெளிய வர முடியாதுடா... எல்லாம் சேர்ந்து அவனுக்குப் பெரிய தண்டனைதான் கிடைக்கும்!" என்று சொல்ல...



"போங்கடா, நீங்களும் உங்க சட்டமும்... ஜெயில்ல பாதி... வெளில பாதினே அவன் தன் வேலையை எல்லாம் முடிச்சுட்டான்டா... இனியும் அதைத்தான் செய்வான்... அவன்லாம் உயிரோட இருக்கக் கூடாது... என் கையாலேயே... மதுவைப் பாருடா... எப்படி இருந்தவ தெரியுமா... அவள பார்த்தாலே... அவ கூட பேசினாலே போதும்டா... உற்சாகம் நம்மளையும் வந்து ஒட்டிக்கிடும்... இப்போ அவ நிலைமையப் பாருடா...

"என்னடா பாவம் செய்தா... என்னைக் காதலித்ததா... இல்ல, கீர்த்தியோட தோழியா இருந்ததா... அவளுக்கு ஏன்டா இந்த நிலைமை..." புலம்பிக் கொண்டிருந்தான் ரகுவிடம்.

மது அவனருகில் தோளில் சாய்ந்தபடி இருக்க...

ரகு கேட்டான்... "பாலா... மது பேர்... கீர்த்தனா... கீர்த்திகா என எல்லோருடைய பெயரும்... பேப்பரில்... மீடியாவில வருமே டா... இப்போ என்ன பண்ண...?" என்று கேட்க...

மது சொன்னாள். இம்முறை அவள் தடுமாறவில்லை... பாலாவின் தோள் சேர்ந்ததே அவளுக்குப் பலம் தர... பாலாவிடம் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்து...

"ஏற்கெனவேதான் கீர்த்திகாவின் மானம் கப்பல் ஏறி இருந்ததே... ஆதி இறந்த போது...

"அவனுக்குத் தண்டனை கிடைக்கணும் பாலா... பேர் வெளில போனால் கூடப் பரவாயில்லை பாலா... அவன் அனுபவிக்கணும் பாலா... இல்ல, கீர்த்திக்கு வாழ்நாள் முழுக்க அவன் தொல்லைதான்டா... அவள இவன் விடமாட்டான்டா... இனி..." என்று ஆவேசமும்... ஆத்திரமும் அடங்காமல் பேசினாள்...

சற்றுத் தள்ளிக் கீர்த்தனா அருகில் இருந்த காவலாளியிடம் எல்லா விபரமும் சொல்லிக் கொண்டிருந்தாள்... மதுவை ஊட்டியில் பார்த்ததில் இருந்து

தற்போது நடந்தது வரை... அவளுக்கும் சொல்ல முடியவில்லைதான்... திக்கித் திணறிச் சொல்லிக் கொண்டிருந்தாள்... மயக்கம் இப்போ வருமா இல்லை பிறகு வருமா என்று தள்ளாடிக் கொண்டிருந்தாள்... பசி வேறு கண்ணைக் கட்டியது.

அவள் தடுமாறுவதைப் பார்த்தபடி இருந்தான் பாலா... காவலாளியிடம் பயப்படுகிறாள் போல் என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மதுவைச் சற்றுச் சாய்த்து அமர வைத்தவன், கீர்த்தனா அருகில் வந்து நின்றான்... அவள் சொல்லிக் கொண்டிருந்த விபரங்களை எல்லாம் அவனும் கேட்க ஆரம்பித்தான்.

அவளை முறைத்தபடியே கேட்டுக் கொண்டிருந்தான்... அன்று தன்னிடம் பேசிய பெண் தன் மனைவிதான் என்று தெரிந்தது... ரகு சொன்ன அந்த யூஎஸ் ரிட்டர்ன் வினோத் என்பதும் புரிந்தது அவனுக்கு... அவள் மயங்கியவரை சொல்ல... அதற்கு மேல் காவலாளிக்கு மதுவின் வாக்கு மூலமும் தேவைப்பட...

பாலா... "அவ இப்போ சொல்ல முடியாதுன்னு நினைக்கிறேன்... இந்த மேடம்கிட்ட வாங்கிற வரைக்கும் வாங்கிக்குங்க... மதுகிட்ட... அவ கொஞ்சம் நார்மலான பின்னால் வ்ாங்கிக்கலாம்..."

என்று மேடம் என்ற வார்த்தையில் அழுத்தம் காட்ட... அவன் சொன்ன மேடம் என்று அழுத்திய வார்த்தையில் அழுகையே வந்துவிடும் போல் இருக்க... கணவனைப் பார்க்க... அவனோ அவளை விட்டு மறுபடியும் மதுவின் அருகில் அமர்ந்து அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான்... அவளுக்கு இப்போது தன்னால் கொடுக்க முடிந்தது இதுதான்... இது மட்டும்தான் என்பது போல...

கீர்த்தனா தனது ஹேண்ட் பேகை எடுத்தவள்... சிதறிக் கிடந்த எல்லாவற்றையும் சேர்க்க ஆரம்பித்தாள்...



அப்போது கீர்த்தனாவின் பையில் இருந்த ஒரு பொருளான... அவளது கர்ப்பத்தை உறுதி செய்த அட்டை... அவன் காலின் அருகில் இருக்க... அது கீர்த்தியினுடையது என்பதை உணர்ந்த பாலா... குனிந்து எடுத்து... அதை அவளின் அருகில் வீசினான், கடுப்போடு... உள்ளிருந்த கோபம் எல்லாம் அடக்கிய வேதனையோடு...

"பாவி... என்னை விட்டுட்டுப் போகத் துணிஞ்சுட்டு... இப்போ அமைதியா வேசம் போடறியா..." அவள் மட்டும் அந்த இரும்புக் கம்பியால் அடி வாங்கி இருந்தால்... நினைக்கவே... அவனுக்கு உயிரின் ஆழம்வரை... தூக்கிப் போட்டது... கொஞ்சம் கையை அழுத்திப் பிடித்தாலே துடித்துப் போவாள்... அவன் மனைவி... அப்படிப் பட்டவளுக்கு ஏதாவது நேர்ந் திருந்தால்... துடித்துக் கொண்டிருந்தான் உள்ளே...

அவன் எறிந்ததை உணர்ந்த கீர்த்தி... அவன் எறிந்தது என்னவென்று பார்க்க... அதைப் பார்த்தவளின் கண்ணில் நீர் கரிக்க ஆரம்பித்தது... கணவனின் கோபம் உணர்ந்த போதிலும்... கண்ணீரை அடக்க முடியவில்லை...

தன்னைத் தன் வயிற்றில் உள்ள கருதான் காப்பாற்றி இருக்கிறது... இல்லாவிட்டால்... நினைக்கவே பயமாய் இருந்தது... அந்த நிமிடங்களை... பாலாவின் கோபத்தை மானசீகமாக ஏற்றுக்கொண்டாள்...

இதற்கிடையே... மது கிடைத்த விபரம்... அவளின் தற்போதைய நிலை எல்லாம்... அனைவருக்கும் தெரிவிக்கப் பட்டிருந்தது... மதுவின் தந்தை உட்பட...

வினோத்... கீர்த்திகா... அருந்ததி... ஜெகநாதனும் மதுவுக்காக மருத்துவமனையில் காத்திருந்தனர்.

கீர்த்திகா, வினோத்திடம் மாலை மாலையாகக் கண்ணீர் விட்டுப் புலம்பிக் கொண்டிருந்தாள்... என்னால்... தன்னால் தான் என்று...

கவி மற்றும் சிந்து வீட்டிலேயே இருந்தனர்... இருவரும் வர வேண்டாம் என்று சொல்லி விட்டனர்... சிந்துவுக்கு மதுவைப் பற்றி எல்லாம் தெரியவில்லை... ஆனால், தன் கீர்த்தி அக்கா... சாவின் விளிம்பினைத் தொட்டு வந்திருக்கிறாள் என்று மனம் பதறினாள்...

எல்லாம் தன்னால்தான்.. வர மாட்டேன் என்று சொன்ன கீர்த்தி தன்னால்தான் தன் பிடிவாதத்தினால்தான் வந்து இப்படி ஒரு பெரிய இக்கட்டில் மாட்டிக் கொண்டாள் என்று அழுது கொண்டிருந்தாள்...

கவிதான் அவளுக்கு ஆறுதல் சொல்லியபடி இருந்தாள்.

கவிக்குக் கீர்த்தனா மேல் பயங்கரக் கோபம்... கொஞ்சம் கூட அறிவில்லைதான் அவளுக்கு... ஏன் இவளுக்குப் புத்தி இப்டிலாம் போகுது... பெரிய துப்பறியும் புலினு நினைப்பு அவளுக்கு... வரட்டும் இருக்கு..." என்று மனதுக்குள் தோழியை வைதவள்... தோழி எந்தச் சேதாரமும் இல்லாமல் வந்ததில் பெரும் மன நிம்மதியிலும் இருந்தாள்.

மதுவின் நிலை கொஞ்சம் மோசமாவதைப் போல் இருக்க... உடனடியாக அவளை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று முடிவு செய்த பாலா... மேற்கொண்டு என்ன விசாரணை என்றாலும்... மருத்துவ மனையில் தொடரலாம் என்று மதுவைக் கையில் ஏந்தியவன்... ரகுவிடம் திரும்பி...

"அவகிட்ட சொல்லி... மதுவுக்குப் போடப்படும் போதை மருந்து எல்லாவற்றையும் எடுத்து வரச் சொல்லு... டாக்டர்ஸ் கிட்ட காட்ட அதெல்லாம் வேண்டும்... அவங்களுக்கும் அது உதவியா இருக்கும்!" என்று கீர்த்தனா அருகில் இருந்தும், அவளிடம் பேசாமல்... ரகுவிடம் சொல்ல...

கீர்த்தனா மேலே மது இருந்த அறைக்கு ஓடினாள்... எல்லாவற்றையும் எடுக்க... எடுத்தபடி கீழே இறங்கியவள்...



ஏனோ சுமதியைப் பார்க்க வேண்டும் போல் தோன்ற... அவளையும் பார்த்து விட்டுக் கிளம்பினாள்.

இதற்கிடையே... கணவன் அங்கு இல்லாததை உணர்ந்தவள்... தன்னை விட்டு விட்டுப் போய் விட்டானோ என்று ரகுவை நோக்க...

"கீர்த்தனா... அவன்கிட்ட சொல்லிட்டு அவன் துணையோட பண்ணி இருந்திருக்கலாம்... யோசிச்சுப் பாருங்க... அவனோட நிலைமையை... ஏற்கெனவே வேதனையில் இருந்தவன்.. உங்களுக்கு ஏதாவது ஆகி இருந்தா.." என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே... பாலா காரில் இருந்து ஒலி எழுப்ப...

"நான் செய்தது மிகப்பெரிய தவறுதான்... ஏதோ ஒரு வேகத்தில..." என்று இவள் பேசி முடிக்கும் முன், பாலா மீண்டும் ஹார்ன் அடிக்க...

"சரி, வருகிறேன் ரகு..." என்றபடி வெளியேறினாள்...

காரின் அருகில் போகும் போதே பின்னால் உட்காருவதா... கணவனின் அருகில் உட்காருவதா... ஒற்றையா... இரட்டையா போட்டுக் கொண்டு வந்தாள்.

பின்னால் மது படுக்க வைக்கப்பட்டிருந்தாள்.

"பக்கத்துல உட்கார்ந்தோம்... முறைத்தே கொன்னுடுவான்..." என்று பின்னால் போக...

முன் கதவைப் படாரெனத் திறந்தான் பாலா... முன் பக்கம் ஏறுமாறு உணர்த்தும் விதமாய்...

கணவனை நிமிர்ந்து பார்க்க... அவனோ சாலையையே பார்த்துக் கொண்டிருந்தான்... கண்ணில் கோபம் மட்டும் மாறவில்லை... பேசாமல் உள்ளே அமர்ந்தவளுக்கு... உட்கார்ந்தவுடனேயே மயக்கமும் வரத் தொடங்க... காரில் இருந்த பாட்டிலில் இருந்த தண்ணீரால் முகம் அலம்பி... குடிக்க.. சிறிதளவு சரி ஆகி இருக்க... சீட்டில் சாய்ந்தாள் கீர்த்தனா...

பத்து நிமிடம் ஆகி இருந்திருக்கும்... மது... பாலாவை அழைக்க ஆரம்பித்தாள்... அவனுக்குக் கேட்கவில்லை... ஆனால், கீர்த்தனாவுக்குப் புரிந்து பாலாவை அழைக்க...

"பாலா..." என்று சொன்னதுதான் தாமதம்.

"என்ன?" எரிந்து விழுந்தான் பாலா அவளிடம்.

"இல்ல... ம...மது கூப்பிடறாங்க!" என்று அவன் கோபத்தில் பயந்து தயங்கிச் சொல்ல... அவன் உடனே மாறினான்...

கண்ணில் இருந்த கோபம் மாறிக் கனிவு வந்திருந்தது.

அதையும் கவனித்தாள் தான் கீர்த்தனா... ஆனால்... மனம் அதிரவில்லை... கணவனைச் சந்தேகிக்கவில்லை... யார் வந்தால் என்ன நடக்குமோ... தன் நிலை என்ன ஆகுமோ என்று நினைக்கும் போதெல்லாம் பதறும்... பரிதவிக்கும் மனம் இன்று... அந்த மதுவே வந்த போது... பதறவில்லை... தடுமாறவில்லை... பரிதவிக்கவில்லை... அவளுக்காகப் பரிதாபம்தான் வந்தது...

அது மட்டும் இல்லை... பாலா... மதுவின் காதலனாய் அவளுக்குத் தெரியவில்லை... தன் கணவனாய் மட்டுமே தோன்றினான்... அதாவது கீர்த்தனா தன் கணவனை முழுவதும் தன்னவனாகவே பார்த்தாள்... அவன் கோபம் முதற்கொண்டு... ஆனால், அது எப்போது இருந்து மனதில் வந்தது என்றுதான் தெரியவில்லை... மதுவின் அருகாமையில் மனம் அவளை அவளுக்கு உணர்த்தியது...

கணவனின் காதலை... இன்றல்ல... நேற்றல்ல... மது அருகில் இருந்ததால் என்றில்லை... என்றோ முழுமையாக ஏற்றுக் கொண்டாள் என்பதை அவள் உணர்ந்தாள்... இல்லையென்றால் அவள் மனம்... கணவன் காதலியின் அருகில் இருக்கும் போது பரிதவிக்க அல்லவா ஆரம்பித்திருக்கும்.



பாலாவின் குரலில் தன்னை மீட்டாள்.

மதுவிடம் பேசிக் கொண்டிருந்தான் பாலா...

"என்ன மது... இன்னும் கொஞ்ச நேரம்தான்... போயிரலாம்..." என்று சொல்ல...

"இல்லடா... காரை நிறுத்துடா... எனக்கு உன் பக்கத்துல வரணும்... எனக்கு நடுக்கமா இருக்கு... உன் கையப் பிடிச்சுட்டே வரணும் போல் இருக்கு..." என்று சொல்ல...

கீர்த்தனா கணவனை, 'என்ன செய்ய?' என்று அவஸ்தையோடு நோக்க... அவனும் காரை நிறுத்தி இருந்தான்... ஆனால், அவளைப் பார்க்காமலே...

காரை நிறுத்தியதோடு இல்லாமல்... அவனும் கீழே இறங்கி இருந்தான்...

கீர்த்தனா... அவனின் மனம் புரிந்தவளாய், அவளும் இறங்க ஆரம்பித்தாள்... தான் பின்னால் போக... மது முன்னால் வர முடிவு செய்தவளாய்...

அதற்கும் முன் அவள் மனம் அடித்துக் கொண்டதுதான்... இருந்தும்... பின் அவளாகவே... கேவலம் இந்த சீட்டின் உரிமைதான் எனக்குப் பெரிதா... என்னவனின் மனதிலே இருக்கும் இடமே எனக்குப் போதும் என்று மனம் தெளிந்து காரின் கதவில் கை வைக்க...

அலள் கண்ணாளனோ... அவளுக்கான மனதின் இடத்தை மட்டுமல்ல... அவனருகே அமரும் அந்த சீட்டின் உரிமையைக் கூட... வேறு யாருக்கும் விட்டுக் கொடுக்க மனமில்லாத கஞ்சனாக என்றோ மாறி இருந்தான்.

"எங்க இறங்குற...? நீ டிரைவ் பண்ணு... நான் பின்னால போறேன்," என்று அவளிடம் குனிந்து பல்லைக் கடித்தபடி மெதுவாய்ச் சொன்னான்... மதுவுக்குக் கேட்காமல்...

"இல்ல... எனக்கு மயக்கம் வருகிற மாதிரி இருக்கு... என்னால ட்ரைவ் பண்ண முடியுமானு தெரியல... நீங்களே ஓட்டுங்க..." என்று தயங்கிச் சொல்ல...

"நீ ஓட்டு... எதுலயாவது மோதி 3 பேரும் செத்தா கூட பரவாயில்லை..." என்றபடி, அவளின் பதிலைக் கூட எதிர்பாராமல், பின்னால் அமர்ந்தான் பாலா...

அவன் வார்த்தை... அவன் மனம்... அந்த நிமிடம் அவளுக்கு முற்றிலும் விளங்க, தன் கணவனுக்குத் தன் மேல் இருக்கும் காதல்... அவன் மேல் தனக்கு இருக்கும் காதலை விடப் பெரியதாகத் தோன்ற... பொறாமை கூட வந்துவிட்டது - தன் மீது அவனுக்கு இருக்கும் அவன் காதல் மீதே...

காரில் அவன் அருகில் உட்காரும் உரிமையைக் கூட மறுக்கிறான் என்றால்... நினைக்கும் போதே மனம் ஆகாயத்தில் பறந்தது...

மதுவின் நிலை மனதில் வர... அடங்கியவளாய்... மனதை அடக்கியவளாய்... காரைக் கிளப்பினாள் கீர்த்தனா.

எப்படி ஓட்டி வந்தாள் என்று தெரியவில்லை... ஆனால், மருத்துவமனைக்கு வந்து சேர்ந்து விட்டாள்...

கீர்த்தனா காரை விட்டு இறங்கவில்லை... அப்படியே சாய்ந்து அமர்ந்து விட்டாள்...

பாலா அவளைக் கவனிக்கவே இல்லை... தன்னோடு சாய்ந்திருந்த மதுவை... இறங்கித் தூக்கியவன்... மருத்துவ மனைக்குள் நுழைய... அவன் வருவதைச் சொல்லி இருந்த காரணத்தால்... வினோத்தும் கீர்த்திகாவும்... வாயிலிலேயே காத்திருந்தனர்.

பாலாவின் கைகளில் இருந்த மதுவைப் பார்த்து உள்ளம் பதற...

"ம...து..." என்று கதற ஆரம்பித்து விட்டாள் கீர்த்திகா.



தன் தோழியின் தோற்றத்தைக் கண்களால் நிரப்பிய மது... அது கொடுத்த பரவசத்தை சந்தோசத்தைக் கண் களாலே அலை பரப்பினாள்.

"கீர்த்தி..." என்று மட்டும் வாய் சொல்ல... மதுவுக்குப் பேச்சு அடைத்தது... மேலும் வினோத்தைப் பார்த்து... கண்களாலே நன்றி சொல்ல... அதற்கு மேல் பாலா நிற்கவில்லை...

வினோத் மதுவைப் பார்த்த பிறகு... கீர்த்தனாவைத் தேட... அவள் காணவில்லை... பாலாவைத் திரும்பிப் பார்த்தால்... அவன் அங்கேயே இல்லை... கீர்த்திகாவும் அவனோடே சென்று விட்டிருந்தாள்...

கீர்த்தனாவும்... பாலாவும் வருகிறான் என்றுதானே சொன்னாள்... என்று கார்களை நிறுத்துமிடத்திற்குச் செல்ல... அங்கு ஸ்டீயரிங்கில் தலை சாய்த்தபடி படுத்திருந்தாள் கீர்த்தனா.

வினோத்...

"கீர்த்தி... கீர்த்தி..." என்று அழைக்க, பதிலே இல்லை...

"கீர்த்திடா..." என்று சத்தமாக அழைக்க...

நிமிர்ந்து பார்த்தாள்... வினோத்தைப் பார்த்தவுடனே ஏனோ அழுகை அழுகையாக வர...

"வினோத்!" என்றபடி இறங்கியவள், அவன் மேல் சாய்ந்து அழ ஆரம்பித்தாள்.

"ஏன்டா... இப்படிப் பண்ணினாய்... மனசெல்லாம் பதறுது... உனக்கு ஏன்டா இந்த தேவையில்லாத வேலை... உனக்கு ஏதாவது ஆகியிருந்தா... நாங்கள்லாம் எதுக்கு இருக்கோம்... எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாம்ல..." என்றவனிடம் -

வேறு எதுவும் பேசாமல்...

"எனக்குப் பசிக்குதுடா... மயக்கமா வருதுடா... சாப்பாடு வாங்கிக் கொடுடா... அதுக்கப்புறம் எதுவா இருந்தாலும் பேசு... இல்ல கேளு..." என்று பரிதாபமாய் அவனிடம் சொன்னபோதே அவள் பாதி மயக்கத்திற்குப் போக ஆரம்பித்தாள்.

வினோத்துக்குப் பாலா மேல் கோபம் கோபமாக வந்தது...

மது ஆபத்தில் இருக்கிறாள்தான்... அதற்காக... இவளை இப்படியா விடுவது... இங்கு வந்த பின்னராவது... என்னிடமாவது கீர்த்தனாவைப் பார்க்கச் சொல்லி இருக்கலாமே என்று மனமெங்கும் எரிய ஆரம்பித்தது...

மதுவுக்குச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட... கீர்த்திகாவும்... அருந்ததியும்... அருகில் இருக்க...

மதுவையே பார்த்தபடி அமர்ந்திருந்தவன்... சிறிது நேரம் கழித்து வெளியேறினான்...

மருத்துவரிடம்... அவளைப் பற்றி விசாரிக்கச் சென்றான்...

அவர்களும் ஒன்றும் ஆபத்தில்லை... போதை மருந்துப் பழக்கத்தில் இருந்து அவளை மாற்றினால்... மட்டும் போதும்... கொஞ்சம் மன ரீதியாகவும் ஆறுதல் மற்றும் சப்போர்ட் தேவை... என்று அவனுக்கு மன நிம்மதியை அளிக்கும் பதிலைச் சொல்ல... பெருத்த மன ஆறுதலுடன் வெளியேறினான்.

வரும்போதே பிரதாப்பை பற்றி ரகுவிடம் விசாரிக்கவும் மறக்கவில்லை...

எல்லாம் ஓரளவு சரியான பின்னர்... மீண்டும் கீர்த்தனா ஞாபகம் வர... கூடவே கோபமும் வர... அவளைத் தேடிச் சென்றான்...

அங்கோ, வினோத் எதிரே அமர்ந்திருக்க... கீர்த்தனா ஏதோ பேசியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.



ஏதோவெல்லாம் பேசிக் கொண்டிருக்கவில்லை...

கீர்த்திகாவிடம்... அருந்ததியிடமும் மதுவின் நிலை பற்றி கேட்டு அறிந்த வினோத்... கீர்த்தனா மதுவைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தனர்... தவிர கீர்த்தனாவும் இப்போது நார்மல் ஆகி இருந்தாள்... அருந்ததியும் கீர்த்தனாவைப் பார்த்துவிட்டு அவளின் நிலை தெரிந்த பின்னர் தான் சமாதானமானாள்...

அவர்கள் இருவரின் அருகில் சென்ற பாலா...

"வினோத்... ஜான்சிராணிக்கு... இன்னும் நாலு இட்லி... பூரி... இன்னும் என்னென்ன வகை இங்கு இருக்கோ அதையெல்லாம் வாங்கிக் கொடுத்துக் கொட்டிக்கச் சொல்லு... ஏன்னா... மேடம் இன்னும் என்னென்ன சாகசம் செய்யணுமோ... யாரைக் காப்பாத்தணுமோ... தெம்பு வேண்டாம்... தென்... சாப்பிட்டுவிட்டு... இப்போ அடுத்து எங்க போகப் போறாங்களாம்...?" என்ற கணவன் கோபத்திலும் அவளைப் பற்றி நக்கலாகப் பேச அவளுக்குப் புரை ஏறியது.

வினோத்துக்குப் பாலாவின் கோபம் புரிய... இப்போது... அவனுக்குக் கீர்த்தனாவைப் பார்த்தபடி மெல்லிய புன்னகை வர...

"என்னடா சிரிப்பு... ஆனா ஒண்ணு... இனி எங்க போறதா இருந்தாலும்... அங்க போய் மாட்டிக்கிட்டு எஸ்.எம்.எஸ். பண்ணி என் உயிரை எடுக்கிறதை விட... போறதுக்கு முன்னாடி எனக்கு அனுப்பி விட்டுப் போகச் சொல்லு... நான் முன்னாடி போய் இருந்து தொலைவேன்ல...

"ஏன்னா... எனக்கு அவள நினைச்சுட்டு ட்ரெஸ்ஸக் கிழிச்சுட்டு... கீது... கீர்த்தினு... சொல்லிக் கொண்டு பைத்தியக்காரனாலாம் அலையலாம் ஆசை இல்ல... அவளோட வாழனும்னுதான் ஆசை... அதுனால எதுவா

இருந்தாலும் முன்னாடியே சொல்லச் சொல்லு... எனக்கும் போக வசதியா இருக்கும்!" என்று சொல்ல...

வினோத் அவன் கோபம் நியாயமாய்ப் பட... இப்போது அமைதியாய் இருந்தான்.

ஆனால், கீர்த்தனாவோ... வினோத்திடம்...

"போற இடம் தெரிஞ்சா சொல்லாம போவாங்களா... பெருசா... பேச வந்துட்டாரு... நீயும் கேட்டுட்டு இருக்க..." என்று அவனுக்கு மட்டும் கேட்கும்படி சொல்ல...

வினோத்துக்கு இப்போது சிரிப்பை அடக்க முடிய வில்லை... ஆனாலும் அவன் அடக்க முயல... அது பாலாவுக்குப் புரிய...

"ஏய்... என்ன சொல்றா... என்னைப் பற்றி... எதுக்கு சிரிப்பை அடக்குற? அவ பேசுவா... ஏன் ஆடக்கூட செய்வா... ஏன்னா... என்னைத்தான் அவ கைப்பிடிக்குள்ள வச்சுருக்கால்ல... இன்னும் பேசுவா... இதற்கு மேலயும் பேசுவா..." என்றவனுக்கு அவளின் மேல் பைத்தியமாய் இருக்கும் தன் நிலை பிடிக்காமல்...

"நான் வீட்டுக்குப் போறேன்... அவ வந்தா கூட்டிட்டுப் போவேன்... இல்லை, நீயே கூட்டிட்டு வா..." என்றபடி நகர...

"பாலா... நானும் வருகிறேன்..." எனச் சொல்ல... பாலா அவளுக்காக நின்றான்...

"ஆனா... இன்னும் ஒரே ஒரு தோசை மட்டும் சாப்பிட்டு வந்துடறேன்... ப்ளீஸ்..." என...

சத்தியமாய்... பாலா கோபத்தை எப்படி அடக்கினான் என்று அவனுக்கே தெரியவில்லை.

"வினோத்... நீயே கூட்டிட்டு வா... உன் செல்ல குறத்திய... இங்க நின்னேன்... என்னாலேயே கன்ட்ரோல் பண்ண முடியாம... அடிச்சுறப் போறேன்..." என்று கிளம்பி விட்டான்.



வினோத்துக்கே அவன் கோபம் கொஞ்சம் அச்சம் தர...

"ஏன் கீர்த்தனா... அவன இந்தப் பாடு படுத்தற... நான் சாப்பாடை பார்சலா கூட வாங்கித் தருகிறேன்... நீ முதலில் இடத்தைக் காலி பண்ணு..." என்று பாலாவின் கோபத்தில் பயந்து சொல்ல...

"ப்ச்... சும்மா இரு... தோசை ஆர்டர் பண்ணு... அவர் இருப்பாரு... நான் வர்றேன்னு சொல்லியும் விட்டுட்டுப் போய்டுவாரா என்ன..." என்றபடி சாப்பிட ஆரம்பிக்க...

"தைரியம்தான் உனக்கு!" என்றபடி, தோசை வாங்கி வர...

அதைச் சாப்பிட்டபடியே...

"எனக்குப் பசி அடங்கிருச்சு வினோத்... ஆனா இப்போ சாப்பிடற தோசை எதுக்கு தெரியுமா... கார்ல வச்சு என் புருசன்... சில பல... மண்டகப்படி... அட்வைஸ்...ன்னு என் காதில் ரத்தம் வழியற மாதிரி லெக்சர் கொடுப்பாரு... அதுக்குத்தான் எக்ஸ்ட்ரா எனர்ஜி..." என்றபோதே...

வினோத்தை ஹாஸ்பிட்டலிலே இருக்கும்படி சொல்ல வந்தவன்...

அவள் பேசுவதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான்.

வினோத்தும் கவனிக்கவில்லை... கீர்த்தியும் கவனிக்க வில்லை... வினோத் அவள் பேசுவதைச் சிரிப்புடன் ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்ததால்... பக்கவாட்டில் சற்றுத் தள்ளி நின்ற பாலாவைக் கவனிக்கவில்லை...

"உனக்கு தெரியுமா வினோத்... ஆபீஸ்ல... இவரு செமினார் செஸன் வச்சார்னு வச்சுக்கோ... அழுதுட்டேதான் போவேன்... ஆனாலும் வெளில... நல்ல புள்ளைனு பேர் இருக்கா நமக்கு... அப்டியே இவர் சொல்றதைக் கவனிக்கிற மாதிரி சீன் போட்ருவேன்... இதுல ஒரு வேடிக்கை

என்னன்னா... நான் அழுதுட்டே போனா... கவி மட்டும் சந்தோசமா வருவா.." என்று நிறுத்த...

அப்போதுதான் வினோத் பாலாவைக் கவனிக்க...

"கீர்த்தி... கவி பற்றி இப்போ எதுக்கு?" என்று அவளை அடக்க முயல...

"உனக்குத்தான்... கவி பாலாவை சைட் அடிப்பான்னு தெரியும்ல... அதுதான் மேடம் ஹேப்பியா வருவா... வந்து நோட்ஸ்லாம் எடுக்கமாட்டா... அவ பாலாவைப் பார்க்க, நான் கவியப் பார்க்க... செமினார் செமையாத்தான் போகும்... இப்போதும் நான் கவியத்தான் பார்ப்பேன்...

"கண்ணை என் ஆளு மேல வச்சேன்னு சொல்லி... அவள மிரட்டியே பார்க்கவே விட மாட்டேன்ல... ஆக மொத்தம்... இவர் எடுத்த செமினாரையே கவனித்ததே இல்லை... இன்னைக்கு மொத்தமா மாட்டிக்கிட்டேன்!" என்று போலியாக வருத்தப்பட்டவள்...

திடீரென... "ஆனா வினோத்... இப்போதான் மைதிலியோட ஃபீலிங்ஸ்லாம் புரியுது... ராகவ் ஜாகிங் போனாலே ஏன் டென்சன் ஆவாங்கன்னு... எனக்குனு வரும்போதுதான்டா தெரியுது..." என்று சந்தோசமாக இருக்கும் போது மட்டுமே தன் தாய் தந்தையைப் பெயர் சொல்லி அழைக்கும் பழக்கத்தில் பேச ஆரம்பித்தாள்..

நீண்ட நாள் கழித்து... தாய் தந்தை நினைவுகளில் முடங்காமல்... அவர்களைப் பற்றி மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

மனம் முழுவதும் சந்தோசம் மட்டுமே இருக்க... படபட பட்டாசாய்... குறும்புத்தனமே நிறைந்த தன் உண்மை உருவுக்கு முற்றிலுமாய் மாறி இருந்தாள் கீர்த்தனா.

அதற்கு மேல் பாலாவும் அவளைப் பேச விடவில்லை... அவர்கள் முன்னே வந்து நின்றான்.



கீர்த்தனாவுக்கு அவனைப் பார்த்ததில் பேச்சே நின்றுவிட்டது... கவியைப் பற்றிக் கேட்டிருப்பானோ என்று...

"வினோத்... எப்டிடா... இவ என்ன பேசினாலும் ரசிச்சு ரசிச்சுக் கேட்பீங்களா... நீ... உங்க வீட்ல... இவ வீட்லனு... நல்லா வளர்த்து விட்டு... என் தலையில கட்டி விட்ருக்கீங்க..." எனக் கத்த ஆரம்பித்தவனிடம்...

வினோத்துக்கும் கோபம் வந்துவிட்டது.

"யாருடா கட்டிவிட்டது... நீயேதான் தலையக் குடுத்துட்ட..." என்று கீர்த்தனாவுக்கு சப்போர்ட் செய்ய... நினைத்துப் போக... அதுவே தப்பான வார்த்தையாக வர...

கீர்த்தனா முறைத்தாள்... பாலாவை விட்டு விட்டாள்... வினோத்தைப் பிடித்துக் கொண்டாள்...

"என்னடா... அவர் தலையில கட்டி விட்டுட்டீங்கன்னு சொல்கிறார்... நீ என்னடாவென்றால்... தலைய அவரே குடுத்துட்டார்னு சொல்ற... உன்னை..." என்று அவனை அடிக்கப் போக...

பாலா... வினோத்தை அடிப்பதற்கு முன் அவளை இழுத்துக்கொண்டு... அந்த இடத்தை விட்டு நகர்ந்தவனாய்... வினோத்திடம்... அவனை அங்கேயே தங்குமாறு சொல்ல...

"அய்யோ! விடுங்க பாலா... கையைக் கூட கழுவல..." என்று சொல்ல... அவனும் விட... கை கழுவச் சென்றாள்.

பாலா வினோத் அருகில் தான் நின்று கொண்டிருந்தான்.

வந்தவள் வினோத்திடம்...

"உனக்கும் ஹாஸ்பிட்டலுக்கும் செம ராசி போல... ஹாஸ்பிட்டல் தான் உன்னோட ரொமான்ஸ் ஸ்பாட்டாடா?" என்று வம்பும் இழுத்தவளிடம்...

வினோத் கண்களால் முறைக்க...

பாலா தன் தலையிலடித்தபடி அவளைக் கூட்டிச் சென்றான்.

ஆக மொத்தம்... பட்டாம் பூச்சியாய் இருந்தவள்... தனது சிறகுகளை எல்லாம் ஒடுக்கி... கூட்டுப் புழுவாய்த் தன்னை மாற்றிக்கொண்ட நிலையில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் மாறி வெளியே வந்தவள்... இன்று மீண்டும் சிறகுகளை எல்லாம் விரித்துப் பறக்கவும் ஆரம்பித்து இருந்தாள்... முன்னால் கூட சாதாரணச் சிறகுதான்... ஆனால் அது இப்போது கணவரின் காதலில் முளைத்த புதிய காதல் சிறகுகள் அல்லவா...? வேகமும்... துள்ளலும்... குறும்பும் அதிகமாய்த்தான் இருந்தது...

என்ன... பாலாவின் நிலைதான் பாவம்... அவளின் குறும்புத்தனத்தில் இனி என்ன செய்யப் போகிறானோ... ஆனாலும் தலைவியை அடக்கும் வழி தெரியாத தலைவனும் உண்டா என்ன... இந்தத் தலைவனும் சமாளிப்பான்... என்று நம்புவோம்...

## 52

கீர்த்தனா... காரில் வரும் போது... கெஞ்சினாள்... மிஞ்சினாள்... கோபம் கூடப் பட்டாள்... பாலா வாயைத் திறக்கவே இல்லை... கோபமும் குறையவே இல்லை... அவனுடைய இந்தக் கோபம்... அவளுக்குப் புதிது... எப்போதும் இவள் கோபமாய் இருப்பாள்... அவன் கெஞ்சிக் கொண்டிருப்பான்...

இல்லை. சில நேரம் அவனும் கோபப்படுவான் பதிலுக்கு... ஆனால், பேசாமல் இருந்ததே இல்லை... அவளைச் சீண்டியாவது தன் கோபத்தைத் தீர்த்துக் கொள்வான்...

கல் போல் இறுகியிருந்த அவன் முகமே அவளுக்குப் புதியதாய் இருந்தது... பயமாய் வேறு இருந்தது... இருந் தாலும் அவன் காதல் தான் அவளுக்குத் தெரியுமே... அதனால் அவனிடம் பேசிக்கொண்டே வந்தாள்... பலன் பூச்சியம்தான்...



காரில் எஃப்.எம்.கூட அவளைக் கைவிட்டு விட்டது.

ஒருவழியாய் வீடு வந்து சேர... அங்கு கவி, சிந்து குடும்பம், விஸ்வம் மற்றும் மோகனா இவளுக்காகக் காத்திருந்தனர்.

கீர்த்தனாவைப் பார்த்ததும் சிந்து ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

“என்னாலதான் அக்கா... உங்களுக்கு...” என்று தேம்பி அழ ஆரம்பித்தவளை... கீர்த்திதான் சமாதானப் படுத்தினாள்.

“நீ எப்போதுமே உன் அக்காக்கு நல்லதுதான்டா பண்ணுவ... இன்னைக்கு உன் கூட வரவில்லை என்றால்... அக்கா மனசுல இருந்து அறுத்துட்டு இருந்த பல விசயங்களுக்குப் பதில் கிடைக்காமல் போயிருக்கும்... சரி. அத விடு... ஃபங்க்ஷன் எப்படிப் போனது?” என்று கேட்க...

தேம்பியதை நிறுத்தாமல்,

“நானும் கவி அக்காவும் பாதியிலேயே வந்து விட்டோம்... பார்டிசிபேட் பண்ணவே இல்லை...” என்று சொல்ல... அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டாள் கீர்த்தி.

அடுத்து விஸ்வம். மோகனா அவளைத் திட்டியும்... அதன் பிறகு, அவளைக் கொஞ்சியும் தங்கள் வீட்டிற்குச் செல்ல...

பாலா பேசாமல் அவளை விட்டுவிட்டான்.

கவி... அவளைத் திட்டிய திட்டலில் கீர்த்தனா அழுதே விட்டாள்.

“ஏன்டி... இப்படித் திட்டற... அந்த மனுசன் கூட பரவா யில்லடி... பேசாம கொல்றாரு... நீ இப்டி பேசியே கொல் றியே...”

"பின்ன உன்னைக் கொஞ்சுவாங்களா... உனக்கு... வர வரக் கொழுப்பு ஜாஸ்தியாத்தான் போச்சு... பெரிய இவள்ன்னு நினைப்பு... நான் உன் கூடத் தான இருந்தேன்... ஒரு வார்த்தை சொல்லி இருந்தா நானும் கூட வந்திருப்பேன்ல... இப்போ நான் எப்படி பாலா சார் முகத்தில விழிக்கிறது?" என்று சொல்ல...

கீர்த்தனா விழித்தாள்... இது எதற்காக என்றால்...

"பாலாவுக்கு வேற இவளைப் பற்றித் தெரிந்து விட்டதே!" என்று நினைக்கும் போதே...

பாலா கீழே இறங்கி வந்திருந்தான்... சாப்பிடுவதற்காக...

ஹாலில்... கவியும் கீர்த்தனாவும் மட்டும் தான் இருந்தனர்...

வந்தவன் கவியிடம்...

"நீ சாப்பிட்டாயா கவி...?" என்று கேட்க...

"இல்லை," என்று அவள் தலையாட்ட...

"சரி, வா... நாம சேர்ந்து சாப்பிடலாம்..." என்று கூறியபடி முன்னே செல்ல...

கவி, கீர்த்தியைப் பார்க்க...

"போன... மவளே! கொன்னுடுவேன்!" என்ற தொனியில் கீர்த்தி கவியைப் பார்த்து நிற்க,

கவி தயங்கி, "இல்ல சார்... நானும் கீர்த்தியும் பிறகு சாப்பிடுகிறோம்... நீங்க முதலில் சாப்பிடுங்க..." என்று கீர்த்தியின் கோபத்துக்கு பயந்து ஜகா வாங்க...

"அவள்லாம் கொட்டிகிட்டா... நீ வா," என்றவன், போகாமல் கவிக்காக நிற்க...

கவி வேறு வழி இன்றி... கீர்த்தியைப் பார்க்க... அவளிடம்,

"போ... போ... எனக்குச் சாப்பாடு போடற வேலை மிச்சம்..." என்றபடி மாடி ஏறிவிட்டாள்.



பாலா கவியைப் பற்றிக் கீர்த்தி சொல்லியது எல்லாவற்றையும் இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டிருந்தான்.

சாப்பிட்ட பின், பாலா கவியிடம்...

"இனிமேல் ஹாஸ்டல் எல்லாம் போக வேண்டாம்... இங்கேயே தங்கிவிட்டுக் காலையில் போகலாம்..." என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்தான்.

கீர்த்தனா... கணவனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தவள் போல்...

உள்ளே வந்தவனை வந்ததும் வராததுமாய்க் கட்டிப்பிடித்து அவனைக் குளிர்விக்க நினைக்க. அவனோ அவளைத் தள்ளிவிட்டுப் படுக்கையில் ஏறிப் படுத்தும் விட்டான்.

பண்ணியது தவறு என்று தெரிந்து இறங்கிப் போனால்... ரொம்பத்தான் படுத்தறான் என்று எண்ணியபடி... அவனருகே சென்று அமர்ந்தவள்...

"பாலா... இப்போ என் கூடப் பேசல... நான் பழைய படி என் இடத்துக்கே போயிருவேன்!" என்று அவள் சொல்லி... இல்லை யில்லை.. மிரட்டி முடிக்கவில்லை... அவள் தலையணை கீழே பறந்தது... அவள் மிரட்டலுக்குப் பதில் சொல்லும் விதமாய்...

இப்போது கீர்த்தனாவுக்கும் கோபம் வர... கடுப்பில் கீழே படுத்தும் விட்டாள்... அதுகூடச் சிறிது நேரம் தான்... கணவனின் கை அணைவில் படுத்து உறங்கியவளுக்குப் பாழாய்ப் போன தூக்கம் கூட வராமல்... அவள் கணவனோடு சேர்ந்து அவளுக்கு எதிராய்க் கூட்டுச் சதி செய்ய...

வேறு வழியின்றி வெட்கத்தை விட்டு கணவனின் அருகில் போய்த் தானாகவே படுத்தாள்...

பாலாவும் நேரம் ஆக ஆக அவள் மேல் உள்ள கோபத்தை இழுத்துப் பிடிக்க முடியாமல் தடுமாற ஆரம்பித்து இருந்தான்.

ஆனாலும், "டேய்... அட்லீஸ்ட்... ஒரு நாள் இல்லை... இன்னைக்கு நைட் மட்டுமாவது அவளோடு பேசித் தொலையாத... அதன் பிறகாவது... உன் கோபத்திற்குப் பயந்தாவது இன்று செய்த மாதிரி லூசுத்தனம் எல்லாம் இனி பண்ணாமல் இருப்பாள்!" என்று கோபத்தினை நிலைநிறுத்தி வைக்கப் போராடிக் கொண்டிருக்க...

அப்போது, அவளது மொபைலில் ஏதோ ஒரு பாடலின் இசை ஒலிக்க ஆரம்பிக்க... அந்த இசையில் அதிர்ந்தான் பாலா... ஏனென்றால்... அவன் போடுவதெல்லாம் இசைஞானி பாடல்கள்தான்... இவள் போட்டதோ... கொஞ்சம் துள்ளலுடன் ஆரம்பிக்க...

அதிர்ந்து... சட்டென்று பாலா திரும்பிப் பார்க்க... கிடைத்த சமயத்தைச் சரியாகப் பயன்படுத்திப் பாடலை நிறுத்தியவள் எழுந்து உட்கார்ந்தாள்.

"எனக்கு உங்கள மாதிரி எல்லாம் பாட்டெல்லாம் போட்டு ஆளை எல்லாம் அசர வைக்கத் தெரியாது... ஆனாலும் கீர்த்தனா, கொஞ்சம் வளர்ந்துட்டா... அவ பேருக்குப் பின்னால இருக்கிற பாலான்ற பேரைக் காப்பாற்ற வேண்டாம்..." என்றபடி... மொபைலை அவன் காதுக்குக் கொஞ்சம் அருகாமையில் வைத்துப் பாடலை ஒலிக்க விட... அது பாட ஆரம்பிக்க...

*என்னடா என்னடா என்னடா என்னடா*
*என்னடா என்னடா உன்னாலே தொல்லையா போச்சு*
*சொல்லவே இல்லையே தன்னாலே என்னவோ ஆச்சு*
*ஆறாமல் பொலம்பவிடும் பாத்தாலே பதுங்கிவிடும்*
*வால் பையன் நீதானடா*



*என்னடா என்னடா உன்னாலே தொல்லையா போச்சு*
*சொல்லவே இல்லையே தன்னாலே என்னவோ ஆச்சு*
*நான் ஓயாத வாயாடி பேசாம போனேன்*
*பொட்டுச் செடி நான் மூட்டு வெடிச்சேன்*
*ஒழுங்கான மாதிரி நானு வெளங்காம போகுறேனே*
*விழிஞ்சாலும் தூங்குற ஆளு ஒறங்காம ஏங்குறேனே*
*உன்னோட பேசிடவே உள் நூறு ஆச கூடிப்போச்சு*
*கண்ணாடி பாத்திடவும் என்னோட தேகம்*
*மாறியே போச்சு போச்சு*
*என்னடா என்னடா உன்னாலே தொல்லையா போச்சு*
*சொல்லவே இல்லையே...*
*ம் நீ லேசாகப் பார்த்தாலும் லூசாகிப் போறேன்*
*பச்ச நெருப்பா பத்திகிடுறேன்*
*விளையாட்டுப் பொம்மைய போல ஒடஞ்சேனே நானும் கூட*
*அநியாயம் பண்ணுற காதல் அடங்காம ஆட்டம் போட*
*பொல்லாத உன் நெனப்பு எப்போதும்*
*போட்டி போட்டுக் கொல்ல*

பாடல் ஒலித்துக் கொண்டிருக்கும் போதே அதை அணைத்து... கீர்த்தனாவை ஏளனமாகப் பார்த்தபடியே மொபைலைத் தன் புறம் எடுத்து வைக்க...

அவனது பார்வையே சொல்லாமல் சொல்லியது... பாடலுக்கும்... அவள் இன்று செய்த காரியத்துக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல...

"ஹலோ... நீங்க போட்டா மட்டும் நான் முழுசா கேட்கலை..." என்றவள்.

தலையில் கை வைத்தபடி...

"அய்யோ... என் கூட பேசுங்களேன்... அட்லீஸ்ட் நாலு திட்டாவது திட்டுங்களேன்..." என்று அவனைப் பார்த்தவள்... அவனும் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து... முகத்தை அப்பாவி போல் மாற்றி,

"அட்லீஸ்ட்... எக்ஸ்ட்ரா சாப்பிட்ட தோசைக்காவது... செரிமானம் ஆகிறதுக்காகவாவது ப்ளீஸ்..." என்று அவள் சொன்ன விதத்தில் பாலாவால் சிரிப்பை அடக்க முடியவில்லைதான்... இருந்தாலும் அடக்க... அவளின் இதழோரத்தில் அடக்கப்பட்ட சிரிப்பு... அவள் கண்களுக்குத் தப்பாமல் தெரிய...

"ஹைய்ய்ய்ய்ய்... பாலா சிரிச்சுட்டீங்க... சோ ஆட்டத்திலிருந்து அவுட்!" என்று குதிக்காத குறையாகத் துள்ள...

உடனே பாலா தான் அவுட் ஆகவில்லை என்பதை நிரூபிக்கும் பொருட்டு

"நான் ஒண்ணும் சிரிக்கவே இல்லை..." என்று உம்மென்று இன்னும் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு சொல்ல...

"இப்போ... உண்மையாவே அவுட்... பேசிட்டீங்களே... எப்படி... கீர்த்தனாவா... கொக்கா!" என்று கட்டை விரலை ஆட்டிச் சொன்னவளிடம்... இன்னுமா கோபப்பட்டிருப்பான்...

தன் முன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த அவளை... தன்னோடு அணைத்துத் தனது அருகே சாய்த்தவன்... வாய் மொழி மௌனமாக... தன் கண் மொழியில் அவளது கண்களோடு கலந்து சிறிது நேரம் கவி பாடியவன்... "உயிர் மொத்தம் கருகிருச்சு கீர்த்தனா... ஒரு தடவை பைத்தியக்காரனா இருந்து தெளிஞ்சு வந்தவன்தான்... அதுக்கு மருந்தா நீ இருந்த... ஆனா... இந்தத் தடவை..." என்று சொன்னபோதே அவனது அணைப்பு இறுகி இருக்க...

"அதுக்கு வைத்தியமே இருந்திருக்காது..." என்று குழந்தை போல் சொன்னவனைத் தாங்காமல் தன் மார்போடு சேர்த்துக் கீர்த்தனா அணைக்க...

பாலா... என்கின்ற அந்த மீசை முளைத்த குழந்தை... காலையில் பட்ட வேதனைக்கெல்லாம்... வதைக்கெல்லாம்...



வடிகாலாய்... அவளின் அரவணைப்பில் சுகமாய் அடங்கினான்...

எத்தனை நேரம் இருந்தானோ, இல்லை... இருந்தார்களோ தெரியவில்லை... பாலா... தன் நிலைக்கு வந்து... தன்னை அவளிடமிருந்து பிரித்து... அவளைச் சீண்ட ஆரம்பித்தான்.

"கீர்த்தனா... பாட்டெல்லாம் பிச்சு உதறுற... ஆனா என்ன, மரியாதைதான் இல்ல... பரவாயில்ல... என் பொண்டாட்டி காதல் செய்றதுல... கொஞ்சம் தேறிட்டா!" என்ற போதே...

கீர்த்தனா சீரியஸாகப் பேச ஆரம்பித்தாள்.

"சாரி பாலா... நான் காலையில... அவனைப் பார்த்தவுடனே..." என்று கணவனைத் தவிக்க விடட குற்ற உணர்ச்சியில் பேச ஆரம்பிக்க...

அவளை நிறுத்தினான் பாலா.

"ப்ளீஸ்... திரும்பத் திரும்ப அதையே பேச வேண்டாமே... இனிமே... இந்த மாதிரி... பண்ணாத..." என்று முடித்தவன்...

"மது... அவ கிடைச்சுட்டா... கீர்த்தி... நான் எவ்வளவு சந்தோசமா இருக்கேன் தெரியுமா... ஆனா... இந்தப் பைத்தியங்கள்கிட்ட... நினைக்கும் போதே உடம்பெல்லாம் எரியுது எனக்கு... ஆனா மது ரொம்ப மனத் திடமுள்ள பொண்ணு... ஈசியா இப்போ இருக்கிற நிலையைக் கடந்திடுவா..." என்று அவளின் நினைவு தந்த வேதனையில் தன்னைத் தொலைத்தவன்...

மனைவியின் அருகாமையில் உடனே தன்னை மீட்டெடுத்து... அவளைத் தன்னருகே இன்னும் அதிகமாய் இழுத்து... தன் வேதனைக்கெல்லாம் தீர்வு காணத் தன்னை அவளிடம் புதைக்க ஆரம்பிக்கத் தொடங்கி இருக்க...

கீர்த்தனா நெளிய ஆரம்பித்தாள்.

"கீது... செமினார் ஸ்டார்ட் பண்ணலாமா...?" என்று குறும்பாகத் தொடங்கியவன் அவள் பேந்தப் பேந்த விழிப்பதைப் பார்த்து... வாய்விட்டுச் சிரித்தவன் ரசித்தபடியே...

"என்ன திருவிழாவுல தொலைந்து போன குழந்தை மாதிரியே முழிக்கிற... இப்டிலாம் முழிச்சா... விடுவாங்கன்னு நினைப்பா... இப்போ நான் எடுக்கப் போற இந்த செமினார்க்கு மேடத்துக்கு மட்டும் தான் அனுமதி...

"சோ... யாரைப் பற்றியும் கவலைப்படாமல் இருக்கலாம்..." என்றவன், அவன் சொன்ன செமினாரை வாய் மொழி இல்லாமல் தன் கைகளாலும் தன் உதடுகளாலும் அவளுக்குச் சொல்ல ஆரம்பிக்க... என்ன செய்வதென்று தெரியாமல்... முதலில் சாதாரணமாய் விலக எத்தனிக்க... ஆனால் அவன் ஆக்டோபஸ் போல் அவளைச் சுற்றி வளைக்க ஆரம்பித்திருக்க... சாதாரண முயற்சி பலன் கொடுக்கவில்லை...

வேறு வழி இன்றிக் கீர்த்தனா பட்டென்று வலுக்கட்டாயமாக அவனைத் தள்ளி எழுந்து உட்கார... இதை அவளிடமிருந்து எதிர்பார்க்காத பாலா அதிர்ந்து... பின் தன் நிலை மீண்டு... அடுத்துக் கோபமாய் அவளைத் தன்புறம் திருப்ப...

கீர்த்தனாவோ அவனின் நிலை உணராமல்,

"இப்போ... இனிமேல்... இது வேண்டாமே!" என்று வெட்கப்பட்டுக் கொண்டே சொல்ல...

பாலாவோ அதற்கு நேர்மாறாய்,

"என்னடி... வேதாளம் மறுபடியும் ஏறுதோ?" என்று அனலைக் காட்ட...

கீர்த்தனா... அவன் குரலின் மாறுபாடை உணர்ந்து... வேகமாய் அவனிடம் திரும்பி,



"அய்யோ பாலா... நான் என்ன சொல்ல வந்தேனா... இப்போதைக்குனா... இன்னும் கொஞ்ச நாளைக்கு மட்டும் வேண்டாம் என்றேன்," என்க...

கணவனோ, "புரியல... இந்தக் கொஞ்ச நாளைல என்ன வந்துச்சு?" என்று எரிச்சலுடன் கேட்க...

அவனின் வெற்று மார்பில் வெட்கக் கோலம் போட்டபடி... சொல்ல வந்த சரியான விசயத்தை மிகவும் தப்பான நேரத்தில் சொல்ல... அது பாலாவிற்கும் தவறாக தப்பிதம் இல்லாமல் போனது.

"அது... அது... வந்து..."

"வந்துட்ட இல்ல... போய்ட்டா!" என்று கடுப்படிக்க...

"நம்ம இரண்டு பேருக்கும் இடையில்... இப்போ இன்னொரு ஆளு வந்தாச்சுல... சோ அவங்களுக்குத்தான் இனி முதலிடம்!" என்று சொல்லி முடிக்கவில்லை.

கணவன் அக்னிப் பிழம்பாய் மாறி இருக்க... அது கை மூலம் அவள் கன்னத்தில் விழ... கீர்த்தனாவின் கன்னம் எரிய ஆரம்பித்து இருந்தது... அவன் ஏன் அறைந்தான் என ஒரு நிமிடம் யோசிக்க... அடுத்த நிமிடம்... அவன் என்ன புரிந்து கொண்டான் என்பதை மூளை உடனே எடுத்துக் கொடுக்க... அந்த நிமிடமே... அவள் கை அவன் கன்னத்தில் இறங்கியது...

"லூசாடா நீ... நான் என்ன சொல்ல வந்தேன்... நீ என்ன புரிஞ்சு தொலச்ச... அப்டிலாம் உனக்கு ஒரு எண்ணம் இருக்கா... மவனே! தொலச்சுடுவேன்... ஜாக்கிரதை..." என்று சுட்டு விரல் காட்டி எச்சரிக்க...

தன் கன்னத்தில் கை வைத்தபடி 'விழித்தான்' கணவன்...

கண்ணில் நீர்... அவள் விரும்பாவிட்டாலும் அடித்த அறையில்... வலியில்... அவள் சொல் கேட்காமல் வழிந்து கொண்டிருக்க...

மூக்கை உறிஞ்சியபடியே கன்னத்தில் வைத்திருந்த அவனது கையை எடுத்து... தன் வயிற்றில் வைத்தபடி...

"டேய்! உங்க அப்பாக்கு... வர வரப் புத்தி ரொம்ப நல்லா வேலை பண்ணுது போல... சொல்லி வை... இப்போ அவர் நினைக்கிற மாதிரி... முதல்ல போல உங்க அம்மா யாரும் இல்லாத ஆள் இல்லை இப்போ... நீ இருக்கேனு... பயமே இல்லடா... உங்க அப்பாக்கு... எனக்கு கேக்க ஆள் இல்லைனு... இஷ்டத்துக்கு ஆடறாரு... சீக்கிரம் வெளில வந்து... இவர ஒரு வழி பண்ணு..." என்று அவள் தேம்பிய வார்த்தைகளிலே சொல்ல...

கீர்த்தனா சொன்ன... அந்த இன்னொருவர் யார் என்று இப்போது பாலாவுக்கு விளங்க... பாலா ஆனந்த அதிர்ச்சியில் வாயடைத்து நின்றவன்... அடுத்த நொடி... தன் மனைவி இன்று மாட்டிய ஆபத்தை எண்ண... அவன் உடல் நடுங்கியது... அவனது நடுக்கம்... அவன் கைகளிலும் பரவ... அது கீர்த்தனாவும் உணர... அங்கு உணர்ச்சிகளின் போராட்டம் ஆட்சி செய்ய ஆரம்பித்து இருந்தது...

"இன்னைக்கு... ஹாஸ்பிட்டல்ல செக் பண்ணுனியா கீர்த்தி..." என்று மனதில் உணர்ச்சிகளின் போராட்டம் இருந்த போது... வெளியில் சாதாரணமாகக் கேட்டான்.

"ம்ஹூம்... நானே காலையில டெஸ்ட் பண்ணிக் கிட்டேன்... 3 நாளா டவுட்... ஒரு நிமிடம்," என்றபடி... தனது ஹேண்ட்பேக்கில் இருந்த அந்த அட்டையை எடுத்து வந்து அவனிடம் கொடுக்க...

அவன் கண்ணில் தான் இரண்டு முறை பட்டதே அது... அலட்சியமாகத் தூக்கிக் கூட எறிந்தானே...

"காலையிலயே ஏன் என்கிட்ட சொல்லலை..." மறுபடியும் கண்ணில் அனல் வர...

"நாளை மறுநாள்... நம்ம கல்யாண நாளுக்கு... சஸ்பென்ஸா வச்சு சொல்லலாம்னு நினைத்தேன்... ஆனா



இன்னைக்கு நடந்த களேபரத்தில இன்றைக்கே சொல்ல வேண்டும் என்றுதான் நினைத்தேன்..."

"சோ தெரிஞ்சே... இத்தனை காரியமும் பண்ணி இருக்க... யாரு என்ன கேப்பாங்கன்னு தெனாவட்டு... உனக்கு இல்ல நம்ம குழந்தைக்கு ஏதாவது ஆகி இருந்ததுனா..." என்றவனிடம்.

"சாரி பாலா..." என்று தலை குனிந்தாள் அவள்... என்ன இருந்தாலும் குழந்தை அவர்கள் இருவருக்குமான உரிமை... இவளால் ஏதாவது ஆகியிருந்தால்... பாலா மற்றும் அவன் குடும்பத்தின் முன் தலை குனிந்துதான் நிற்க வேண்டும்... சில நிமிடம் கழித்துத் தயங்கியவளாய்,

"நான் இந்த நிலைமையில இல்லேனா... ஒருவேளை நான் உங்கள விட்டுப் போய் இருந்துருப்பேன் தான் பாலா..." என்ற போதே தன்னை நீங்கிய அவனது நிலை உணர முடிந்தவளின் மனம் பாரமாகியது...

"அது மட்டும் இல்லை பாலா... நான் மதுவை அன்னைக்கே காப்பாற்றி இருந்தா... இது... இந்த இடம், இந்த நிமிடம், என் பாலாவோட மனது... எல்லாமே மதுவோடதாகவே இருந்திருக்கும் பாலா... நான் அவங்களுக்குத் துரோகம் பண்ணிட்டேனா பாலா...?

"ஆனா நான் இப்போ அவங்கள காப்பாத்திட்டேன்... அதனால அதுல எனக்கு உயிர் போயிருந்தா கூட..." என்று அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே...

"ஏய்ய்... ஏய்... ஏன்டி... மறுபடியும் லூசு மாதிரியே பேச ஆரம்பிக்கிற... ஆரம்பிச்ச இடத்திலேயே வந்து நிக்காதடி... பக்கு பக்குனு இருக்கு..."

அவன் சொன்ன விதத்தில் சிரித்தவள்...

"அவ்வளவு சீக்கிரமாக விட்ருவீங்களா என்ன... ட்ரம்ப் கார்டு ஒண்ணு கையோடவே ஓபன் பண்ணாம வச்சுருக் கீங்களே பாஸ்!" என்று சீண்ட...

அவள் குழந்தையைத்தான் சொல்கிறாள் என்று விட்டவன்,

"சாரி கீது... இன்னைக்கு... 3 தடவை... ச்சேய்... இந்த நிலையில நீ இருக்கும் போது..." என்று வருந்த ஆரம்பிக்க...

"அப்போ அடிச்சதுக்குக் கோபம் வரலை... ஆனா... இப்போ பயங்கர கோபம்தான்..." என்றவள்.

"பழிக்குப் பழி வாங்கியாச்சு... ரொம்ப நாளா... நான் உங்களுக்குக் கொடுத்த அறை டீல்லேயே நின்னுட்டு இருந்துச்சு... பைசல் பண்ணி... இப்போ எனக்கு ஒரு அறை டீல்ல நிக்குது!" என்று ராகவனின் மகளாகப் பேச...

"சரிங்க. பேங்க் மேனேஜர் பொண்ணு... தேவை யில்லாததுக்கு எல்லாம் கணக்கு எடுத்தே... என்னைக் கொல்றடி... எதுக்கெடுக்கணுமோ அது விட்ரு..."

"வேற எதுக்கெடுக்கணும்...?" என்றாள் கணவன் சொன்ன விபரம் தெரியாமல்...

"இந்த ஒரு வாரம்... அதைக் கூட காந்தி கணக்குல விட்ரலாம்... ஆனா... 10 மாசம்... சுத்தமாவே... கூடாதாடி?" எனக் கணவனாய் ஏங்க ஆரம்பிக்க...

மனைவி அதற்கு விளக்கம் கொடுக்க ஆரம்பிக்க...

வழக்கம் போல... கணவன் மனைவியின் சொல்லுக்கு அடங்கி... தன் கணக்கு வழக்குகளை எழுதி வைத்து, பைசல் பண்ண வேண்டிய காலத்தில் வசூலிக்கலாம் என்று மனைவி எடுத்த விளக்கவுரையின் முடிவில் மூக்கால் அழுதுகொண்டே ஒத்துக் கொள்ள... அவனுக்கு... தன்னால் குடுக்க முடிந்த வற்றை மட்டும் வழங்கி... தன் கணக்கில் அதிகம் வராமல் பார்த்துக் கொண்டாள் மனைவி.

அதன் பிறகு இருவரும் உறங்குகிறோம் என்று ஒருவருக்கொருவர் காட்டிக்கொண்டாலும் பாலா... மதுவை நாளை எப்படி எதிர் நோக்கப் போகிறோம் என்று



யோசனையில் இருக்க... கீர்த்தனாவோ... கணவன் உறங்கவில்லை... உறங்கமாட்டான் என்று அவளுக்குத் தெரியும்... மது பழையபடி வந்தால்தான் பாலா முழுவதும் சந்தோசம் அடைவான்... மதுவுக்குத் தான் என்ன செய்தால் அவளுக்கு நிம்மதி தரும்... என்று யோசிக்க ஆரம்பித்து இருந்தாள்.

வினோத் மற்றும் கீர்த்திகா... அறையின் வெளியே இருக்க... அருந்ததி தன் அண்ணன் மகளின் அருகில் இருந்தாள்... அவளையே பார்த்தபடி... கண்கள் வேறு கலங்கிக் கொண்டே இருந்தன... அவளின் நிலையை நினைத்து...

வினோத் மேல் சாய்ந்து கண் மூடி இருந்தாள் கீர்த்திகா... ஆனால் நினைவுகளின் ஓட்டத்திலே இருந்தாள்... மனம் பிரதாப்பை நினைத்துப் பயத்தில் சுழல... ஆதி... மது இவர்களுக்குத் தன்னால் ஏற்பட்ட வேதனையான நிலையினை எண்ணி மறுகிக் கொண்டிருந்தாள்...

எல்லாம் தன் மேல் காதல் மற்றும் பாசம் வைத்த ஒரே காரணம்தான் எனும்போதே... கண்கள் அருவியை உகுக்க... அடுத்து வினோத்தையும் நினைக்க... அவனுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று தோன்ற நிமிர்ந்து வினோத்தைப் பார்க்க...

அவளின் அசைவில், "என்ன கீர்த்தி..." என்றவன் அவளது கண்களில் நீரை உணர்ந்தவன்...

"ஹேய்... என்ன ஆச்சு... மதுதான் வந்துட்டாள்ளடா... அவளோட நிலையை நினைத்து ஃபீல் பண்றியா... மாறிரும் கீர்த்தி..." என்றவனிடம்...

கண்ணில் முழுவதும் பயம் விரவி இருக்க,

"அந்த பிரதாப்பை நினைத்துப் பயமா இருக்கு வினோ... அவன் இன்னும் அடங்கலைனு நினைக்கிறேன்... என்னால இன்னும்... என்னை நேசிக்கிற யாருக்கும்

பிரச்சனை வருமோன்னு பயமா இருக்கு... எது நடந்தாலும் எனக்கு நடக்க வேண்டியதுதானே வினோ...

"என் அம்மா... ஆதி... இப்போ மது... இப்டி என்னைச் சுத்தி இருக்கிறவர்கள் எல்லோரும் என் ராசியில் அடி வாங்கிட்டாங்க... எனக்கு இந்தக் கல்யாணம்... காதல்... குடும்பம்... இதெல்லாம் ஒட்டாது போல வினோத்... உங்களுக்கு ஏதாவது ஆகிவிடுமோனு பயமா இருக்கு... நீங்க நல்லா இருக்கணும்... என்னை விட்டுட்டு..." அதற்கு மேல் முடியாமல் அழ...

பதிலுக்கு அவன் கோபப்படவில்லை... அவளின் நிலையை உணர்ந்தவன்,

"நீ சொல்வது போல் உன்னை விட்டுட்டு இன்னொருத்திய கல்யாணம் பண்ணினா... என் உயிர் போகாதுன்னு உன்னால நூறு சதவீதம் அடிச்சு சொல்ல முடியுமா கீர்த்தி... உனக்கு நடந்தது எல்லாம் கஷ்டம் தான்... உன்னைச் சுத்தி இருக்கிறவங்க எல்லாம் பாதிக்கப் பட்டிருக்காங்க...

"அது உண்மைதான்... ஆனால், இது உன்னால மட்டும் இல்ல கீர்த்தி... அது அவங்கவங்க விதி... ஆதி இறப்பு... மது நிலைமை என்று எல்லாமே நீ இல்லை யென்றாலும் நடந்திருக்கும்... புரிஞ்சுக்கோ... உன்னால உன்னாலனு சொல்லி உன்னையே வருத்திக்காதம்மா... எனக்கு எதுவும் ஆகாதுன்னு சொல்ல நான் ஒண்ணும் கடவுள் இல்லை... ஆனா பிரதாப்பால் எதுவும் ஆகாது... அது மட்டும் உறுதியா சொல்றேன்... நம்பிக்கைதான் வாழ்க்கை கீர்த்தி... கண்டிப்பா... நாம நல்லா இருப்போம்... புரியுதா...?" என்றவனிடம்,

ஏதோ அப்போதைக்குத் தலை ஆட்ட...

"அதற்காக... கல்யாணம் வேண்டாம்.. நீங்க வேற பொண்ணைப் பாருங்கன்னு சொன்ன... எனக்குக் கோபம்



அடிக்கடி எல்லாம் வராது... வந்துச்சுனா... நீ தாங்கமாட்ட!" என்று மிரட்ட...

அவனிடம் கண்கள் பளிச்சிட...

"என்ன பண்ணுவீங்க...?" என்று தன் கவலையில் இருந்து மீண்டவள் காதலனைச் சீண்ட...

"உன்னை... அப்படியே ஸ்வாஹா பண்ணிடுவேன்... இந்தக் கன்னத்துல கையால அறையிறதுக்குப் பதிலா... உதடால... முத்த அறைதான் உனக்கு..." என்றவனிடம்,

"ஆரம்பிச்சுட்டீங்களா... உங்க பல்லவிய..." என்று அவளும் நார்மல் ஆக...

வினோத்துக்கோ அவளிடம் பேசிக் கொண்டிருந்தாலும், தன்னவளின் கவலையை மனதில் நினைத்துக் கொண்டிருந்தான்... அந்த பிரதாப்புக்கு ஒரு வழி பண்ண வேண்டும்... இவள் மனதில் அவனைப் பற்றிய பயத்தைப் போக்க வேண்டும்... என்று முடிவு செய்திருந்தான்.

மூன்று மணி அளவில் விழித்த மது... ஓரளவு நன்றாக இருக்க... அறையை ஒருமுறை நோட்டமிட்டவள் அருகில் இருந்த அருந்ததியைப் பார்த்தாள்.

"அத்தை!" என்று அழைக்க, அருந்ததி உடனே எழுந்து விட்டாள்.

"என்னம்மா...?"

"தண்ணி வேணும்..." என்றவள் பாத்ரூமையும் கைகாட்ட,

"இதோமா..." என்றபடி

தண்ணீரை எடுத்து அவளுக்குப் புகட்ட, கீர்த்தியும் வினோத்தும் உள்ளே வந்தனர்.

அதன் பிறகு கீர்த்தி... மதுவுக்கு உதவி செய்தாள்.

எழக்கூட முடியாத மதுவின் நிலையைப் பார்த்தவள்... இத்தனை வருடம் அவள் பட்ட வேதனையை நினைத்துக்

கீர்த்தி மனம் துடித்தது... கீர்த்தி மீண்டும் மதுவைப் பார்த்து அழ ஆரம்பித்தபடி... படுக்கையில் படுக்க வைத்தாள்.

இப்போது அருந்ததியும் அழ...

"இப்போ எதுக்கு அழறீங்க... நான் வந்துட்டேன். இன்னும் என்ன... சும்மா... எனக்கு டென்சன ஏத்தாத கீர்த்தி... சந்தோசப்படு... இப்போவாவது வந்துட்டேன்னு..." என்றவள்...

"கீர்த்தி... அம்மாகிட்ட பேசணும்... இப்போதே பேசணும்... என்னைத் தவிர யாருமே இல்ல கீர்த்தி அவங்களுக்கு... வாயில்லாப் பூச்சி... துக்கத்தைக் கூட மனசுலேயே வச்சுப்பாங்க!" என்ற போதே,

"இதோ போன் பண்றேன் மது... அங்கிளும் ஆன்ட்டியும் வந்துட்டுதான் இருக்காங்க... இப்போதான் பேசினாங்க," என்றபடி போனைக் கொடுக்க...

நீண்ட நாட்களுக்குப் பிறகு தன் தாய் தந்தையிடம் பேச, இப்போது மது கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா... எனக்கு உங்கள பார்க்கணும் போல இருக்குமா... சீக்கிரம் வாங்கம்மா..." என்று குழந்தையாய் மாறி இருந்தாள் மது.

அப்பா... அம்மா என இருவரிடமும் பேசிய உணர்ச்சி வெள்ளத்தில் சிறிது நேரம் இருந்தவள்... அறையை மீண்டும் பார்த்து... தன்னைச் சுற்றி நின்றவர்களின் மேல் பார்வையை ஓட்டியவள்...

"பாலா எங்க?" என்று கேட்க...

கொஞ்சம் ஆடித்தான் போயினர் மற்றவர்கள்... பதிலை எதிர்பார்க்காமல் அடுத்து,

"அந்தப் பொண்ணு வீட்டுக்குப் பத்திரமா போய்ட்டாளா...?" என்று கேட்க.



உடனே வினோத்...

"போய்ட்டா... பாலாதான் கூட்டிட்டுப் போனான்," எனச் சொல்ல...

"ஓ..." என்றவள் -

"எதுக்கு அவனோட போகச் சொன்னீங்க... இவன் என்னோட நிலையைப் பார்த்து... அந்தப் பொண்ணுகிட்ட... உம்முனு முறைச்சுக்கிட்டு இருந்தான்... கார்ல கூட அவ டிரைவ் பண்ண முடியாதுன்னு சொல்றா...

"இவன் அவளோட நிலைமைய புரிஞ்சுக்காம... ட்ரைவ் பண்ணச் சொல்றான்... அவளுக்கு கார் ஓட்டத் தெரியுமா... தெரியாதானு கூட கேட்கலை... பாவம், அந்தப் பொண்ணு... இவனப் பார்த்து மிரண்டுட்டா..." என்றவள்.

"அத்தை... அந்தப் பொண்ணு கன்சீவா இருப்பா போல..." என்றவள், அங்கு நடந்த விபரத்தைச் சொல்ல... மூவரும் இன்னும் அதிர்ந்து கீர்த்தியை நினைத்துக் கலங்க... மது பேசிக்கொண்டே இருந்தாள்...

"அவளுக்கே தெரியாது போல... இல்லேன்னா... இப்படி என்னைக் காப்பாற்ற வந்திருப்பாளா... நாளைக்கு வரச் சொல்லணும் கீர்த்தி... நான் அந்தப் பொண்ணுகிட்ட ஒரு தேங்க்ஸ் கூட சொல்லலை..." என்று சொல்ல...

அருந்ததி அதிர்ச்சியும்... ஆனந்தமும்... துக்கமும்... கலந்த கலவையாய் ஆனாள்...

"கீர்த்தி! நீயும் மாட்டிட்டியோன்னுதான் நான் பயந்து போய்ட்டேன்... பாலா கூட உன்னைதான் தேடி வந்திருப்பான் போல... உன் பேரைத்தான் சொன்னான்..." என்று சொல்லியவள்...

"பாலா... ஏன் போய்ட்டான்?" என்றபடி அருந்ததியைப் பார்க்க...

வினோத் அதற்குப் பதில் சொன்னான்.

"அவனுக்குக் கொஞ்சம் அலைச்சல்மா... அதனால நான்தான் போகச் சொன்னேன்," என்று சொல்ல...

சரி என்று தலை ஆட்டியவள்...

அதன் பிறகு... வினோத்தைப் பற்றி... கீர்த்தியிடம் விசாரிக்க... கீர்த்தியுடன் பேசியபடி இருந்தாள்...

கிட்டத்தட்ட 5 மணி அளவில் மதுவின் பெற்றோர் வர... தன் அண்ணனைக் கண்ட அருந்ததி... வேகமாய் அங்கிருந்து கிளம்பினாள்.

மதுவின் தந்தையும் தாயும் துடித்துப் போய் விட்டனர்... தாங்கள் பெற்ற மகளின் நிலையைப் பார்த்து...

கீர்த்தியை அழக்கூடாது என்று சொன்னவள்... தன் தாயின் அணைப்பில் கரைந்து தன் 5 வருட வேதனை எல்லாம் கரைக்க ஆரம்பித்தாள்.

வீட்டிற்கு வந்த அருந்ததி... நேராய் நின்றது... மகனின் அறை வாசல் முன்தான்... வரும் வழியிலேயே பாலாவுக்கு போன் செய்துவிட்டாள்... அவனை உடனே பார்க்க வேண்டும் என்று. கீர்த்தியையும் பார்க்க வேண்டும் என்று. பாலாவும் எழுந்து காத்திருந்தான்... அன்னைக்காக... கீர்த்தியை எழுப்பவில்லை.

உள்ளே வந்தவள்... கீர்த்தியைப் பார்த்துக்கொண்டே சில நிமிடம் கழிக்க...

மது சொன்ன தகவலைப் பாலாவிடம் சொல்ல... அமைதியாய் இருந்தான் பாலா.

"என்னடா... ஒண்ணும் பேச மாட்டேங்குற..."

கீர்த்திக்குத் தெரிந்துதான் போனாள் என்ற உண்மையைச் சொல்லவில்லை பாலா... அருந்ததி எப்படி எடுத்துக் கொள்வாள் என்றே மறைத்தான்... ஒருவேளை கீர்த்தனாவைப் பற்றித் தவறாக எடுத்துக் கொண்டால்... அதனால் சொல்லாமல் விட்டுவிட்டான்...



"எதுவும் ஆகலைல. விடுங்க... நாளைக்கு ஹாஸ்பிட்டல் கூட்டிட்டுப் போறேன்," என்று சிடுசிடுத்தவன்...

பேச்சை மாற்றி, "மது எப்படி இருக்கா... எழுந்தாளா... என்னைக் கேட்டாளா...?" என்றபடி பேச ஆரம்பித்தான்.

"என்னடா... இவ்ளோ பெரிய விசயம் சொல்றேன்... நீ என்னடா ரியாக்சனே காட்ட மாட்டேன்ற... இது அவளுக்குத் தெரியாது போல... இல்லேனா அவ இப்படிப் போய் இருக்க மாட்டா!" என்றவளிடம்...

இவங்க விடமாட்டாங்களா என்று இருந்தது... தான் மறக்க நினைப்பதையே ஞாபகப்படுத்தறாங்களே... என்று கடுப்பாகியவன்,

"அதுக்கு இப்போ என்ன பண்ணச் சொல்றீங்க... குத்தாட்டம் போடச் சொல்றீங்களா. நான் அப்பா ஆகப் போறேனு... அப்பா ஆகப் போறேனு... ஏம்மா... நீங்க வேற!" என்று விட்டேற்றியாய் அவன் சொன்ன பதிலில் கொஞ்சம் அரண்டாள் அருந்ததி.

மது வந்த பின்னால்... கீர்த்தியிடம் இருந்து தள்ளிப் போகிறானோ என்று தேவை இல்லாத கவலை கொண்டாள் அவனது அம்மா...

ஆனாலும் மகன் மேல் பெரிதாய்ப் பயமில்லை... இவனால் கீர்த்தி மனம் வருந்தி விட்டால் என்று மனம் மருமகளைப் பற்றிக் கவலை கொள்ள ஆரம்பித்தது.

கீர்த்தியும் பாலாவும் மதுவைப் பார்க்கக் கிளம்பி இருந்தனர்... கூடவே கீர்த்தனாவுக்கு செக்கப் செய்யவும்...

வரும் வழியில் கீர்த்தனா கொஞ்சம் மன உளைச்சலில் தான் இருந்தாள்... மதுவின் நிலையை நினைத்து... அவள் பாலா இப்போது அவளவன் இல்லை என்ற உண்மை தெரியும் போது அவள் மனம் என்ன பாடுபடும்... அந்தத் துன்பம் அவளுக்குப் பெரிய கொடுமை...!

ஏன் தான் அந்த வேதனையை அனுபவிக்க வில்லையா... பாலாவிடம் திருமணம் ஆனதை இப்போது சொல்ல வேண்டாம் என்று சொல்லிப் பார்க்க... அவனது முறைப்பைத் தான் பதிலாகத் தந்தான்... இவள் இப்படி நினைத்துக் கொண்டு வர...

அவனோ மதுவிடம் எப்படிச் சொல்வது... என்ற குழப்பமே தவிர, சொல்லாமல் இருக்கவெல்லாம் அவன் நினைக்கவில்லை... கண்டிப்பாக மது புரிந்துகொள்வாள்... ஆனால்... தற்போது போதையின் பிடியில் இருக்கும் அவள் அதிலிருந்து மீள வேண்டுமென்றால் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட வேண்டும்...

இவனைப் பற்றிய உண்மை தெரிந்து இன்னும் மோசமானால்... என்ற நினைவு வேறு அவனைக் கொல்ல... எதுவானாலும் கீர்த்தனாவைப் பற்றி அவளுக்குச் சொல்லிவிட வேண்டும் என்று முடிவெடுத்திருந்தான்.

இவ்வாறு அவன் யோசிக்கும் போதே கீர்த்தனா அவனை அழைக்க... திரும்பிப் பார்த்தான்... அவன் முகமே அவன் சரி இல்லை என்பதை உணர்த்த...

"என்ன பாலா... ஏன் டல்லா இருக்கீங்க... மதுவ எப்படி ஃபேஸ் பண்ணப் போறீங்க...? அவங்க உங்கள திட்டுவாங்களா பாலா...?" என்று கேட்க...

"திட்டினா கூட மனம் ஆறிரும் கீர்த்தி... ஆனா அவ திட்டமாட்டா... அது எனக்குத் தெரியும்... அவ நம்ம வாழ்க்கைல பிரச்சனையே இல்ல... ஆனா அவ மனசு... ஆரம்பத்தில் நான் அவள காதலிக்கவே இல்லை கீர்த்தி... அவள எவ்வளவு அவமானப்படுத்தி இருப்பேன் தெரியுமா...! கொஞ்சம் கூடக் கவலைப்படாம... என் காதலுக்காகப் போராடுனா... கிடைத்தும்..." என்று மௌனமாகச் சில நிமிடம் இருந்தும்,



"ஏன் கீர்த்தி அவ காதல் தோத்துப் போச்சு... அவளுக்கு ஏன் இந்த நிலைமை...?" என மனைவியிடமே கேள்வி கேட்டான் அவன்.

இதைக் கேட்கும் போதே அவன் கண்கள் கலங்க...

"பாலா... ப்ளீஸ்... நீங்களே இப்படி ஃபீல் பண்ணினா..."

"அவள இந்த நிலைமையில என்னால பார்க்க முடியல கீர்த்தி... அவளுக்கு என்னால் எந்த ஆறுதலுமே கொடுக்க முடியாது... அவள மறுபடியும் எ..." என்று உணர்ச்சியின் வேகத்தில் பேச இருந்தும் சுதாரித்து, சட்டென்று வார்த்தையை மாற்றிவிட்டான்.

"பழைய மதுவா பார்க்க முடியுமா கீர்த்தி...?" என்றவனின் உணர்வுகள் புரிய...

"பாலா! நான் ஒண்ணு சொல்லவா... நீங்க என்னைத் திட்டக் கூடாது... முறைக்கக் கூடாது... தென் கை நீட்டவே கூடாது!" என்று அவள் சொல்ல...

"அது நீ சொல்றதைப் பொறுத்து... ஆனா உன்னை அடிக்கமாட்டேன்... அதுக்குப் பதிலா எனக்குத் தண்டனை கொடுத்துப்பேன்... சொல்லு... கேட்கிறேன்... நீதான் ஆட்டி வைக்கிறேல்ல... நானும் ஆடுறேன்ல..." என்றவனிடம்,

"உங்களுக்குத் திருமணம் ஆனதைச் சொல்ல வேண்டாம் இப்போ... நான் வினோத்தை ரிலேட்டிவ்னு சொல்லிக்கலாம்... அவங்க வீட்ல போய் இருந்துக்கறேன்... மது ஓரளவு தேறினதுக்குப் பிறகு சொல்லலாம் பாலா," என்றவளிடம்,

"ஹ்ம்ம்ம்... பரவாயில்ல... என் பொண்டாட்டி தானே... ப்ளான்லாம் போடத்தான் செய்வாய்... அப்புறம்... சொல்லுங்க மேடம்... மங்கையின் மணாளன் யார்னு கேட்டா என்ன சொல்வீங்க... மது கண்டிப்பா கேட்பா... சொல்லுங்க. என்ன சொல்வீங்க...?"

"யூஎஸ்ல இருக்காருனு சொல்லிடலாம் பாலா..." என்றவளின் திட்டம் அழகாய் விளங்க...

"ம்ம்ஹூம் யூஎஸ்ல இருக்காரு... நல்லது... அவருக்குப் பேர் இல்லையாம்மா... நான் கேட்கமாட்டேன்... மது கேட்டா... என்ன சொல்வீங்க மேடம்?" என்று நக்கலாகக் கேட்ட விதமே அவன் கோபம் சொல்ல -

"இப்போதைக்கு இவ்வளவு சொல்வோம் பாலா..."

"நான் பேர் என்ன சொல்லப் போறேன்னு கேட்டேன்... அதச் சொல்லு." குரல் அதிகாரத் தொனியில் ஏறி இருக்க, சொல்லாமல்... சொல்ல முடியாமல்... அமைதியாகக் குனிய...

"நான் சொல்லவா... கார்த்திக்... மேடமோட சீனியர்... தென் காதல் கதைலாம் எப்படி சொல்றதுன்னு யோசிச்சு வச்சுட்டீங்களா மிஸஸ் பாலா... இல்லேன்னா... நாலு ரொமான்ஸ் நாவல் வாங்கித் தாரேன்... படிச்சுட்டு அத அவகிட்ட ஓட்டு... நம்பணும்ல... என்ன திமிரு உனக்கு... என்கிட்டயே இன்னொருத்தன உன் புருசன்னு சொல்ல பெர்மிஷன் வாங்குற...

"நாம கதை ஓட்டினதே... தாங்க முடியல... இதுல இன்னொரு புதுக் கதை... ஆள விடும்மா... இந்த நிலைமையில... உன்னை விட்டுட்டு... என்னால முடியாதும்மா... ஏன் கீர்த்தனா... என்னைக் கொல்ற..." என்று வலியும்... கேலியும் கலந்து அவளை நோக்கியவன்...

"ஒரு முறை நாடகம் போட்டதே ஆயுளுக்கும்... இல்லை யில்லை... ஜென்மத்துக்கும் கொல்லும்... இதுல இன்னொரு நாடகம்..."

"பாலா..." என்று இடையில் பேச...

"நீ கொஞ்சம் வாய மூடிட்டு வர்றியா... மதுவை எப்படிச் சமாளிக்கிறதுன்னு நான் பார்த்துப்பேன்... உன் அம்மாவையே சமாளித்தவன் நான்..." என்றபோது,



"இல்ல பாலா... நான் என்ன சொல்ல வருகிறேன்னு..."

"ப்ளீஸ் கீர்த்தனா... ஸ்டாப்... இதுக்கு மேல பேசாத... பேசுவேன்னு பிடிவாதம் பிடித்தாய் என்றால்... என் பதில் வேற மாதிரிதான் இருக்கும்..." என்றவன்,

"பார்த்தில்ல அன்னைக்கு..." என்றவன் தன் கையைக் காட்ட... தானாய் வாய் மூடினாள் கீர்த்தி.

மருத்துவ மனையில் வினோத், கீர்த்திகா, பாலா மூவரும் மதுவின் அருகில் இருக்க... கீர்த்தனா உள்ளே போகவில்லை... பாலாவை மட்டும் அனுப்பிவிட்டு வெளி யிலேயே நின்றுவிட்டாள்... அவன் முதலில் அவளுடன் தன்னைப் பற்றி .எந்த இடையூறும் இல்லாமல் பேச வேண்டும் என்று...

வினோத், பாலா, கீர்த்தி வந்தவுடன்... அவர்களிடம் கீர்த்தியின் நிலைமையைச் சொல்ல... தங்களுக்கும் தெரியும் என்று அவனிடம் மட்டும் கீர்த்தி தெரிந்தே இதைச் செய்திருக்கிறாள் என்று விளக்கி வைத்தனர்.

உள்ளே நுழைந்த பாலாவைப் பார்த்துப் புன்னகைத்த மது... "என்னடா... என்னைப் பார்க்க முடியாம ஓடிப் போய்ட்டியா...?" என்று கூற...

"சாரி மது... கொஞ்சம் அலைச்சல்... அதுதான் வினோத்தை... விட்டுட்டுப் போனேன்..." என்று அமைதியாகச் சொல்ல...

"பாலா... நீயா பேசுற... இவ்ளோ பொறுமையா... உண்மையாவா... நம்பவே முடியலயே..."

"ஏய்..." என்றவன், அவள் அருகில் போய் அமர்ந்து அவள் கைகளைப் பார்க்க... அதில் அடிக்கடி ஊசி குத்திய வடுக்கள்... கை முழுவதும் இருக்க... கண்களில் நீர் கோத்தது பாலாவுக்கு.

"என்ன பார்க்கிறடா... அந்த பிரதாப் கொஞ்சம் நல்லவன்... இல்லேனா என் மானம் கூட என்னை விட்டுப் போயிருக்கும் பாலா... அதைத் தடுக்கக்கூட என்னால் முடிந்திருக்காது பாலா... என்ன அப்படி ஏதாவது ஆகி இருந்திருந்தா... மது உயிரோட வந்துருக்கமாட்டா...!" என்றவளை வேதனையோடு பார்த்தவனின் வேதனை தாங்காமல் அவனுக்கு ஆறுதல் கூறுவது போல் அவன் கைகளோடு தன் கைகளை இணைக்க...

பாலா... அவளறிய முடியாதபடி தன் கைகளை இயல்பாக விலக்குவது போல் விலக்கிக் கொண்டான்...

வினோத்துக்கும் பாலாவின் நிலை புரியாமல் இல்லை...

மது இப்போது... பாலாவிடம்...

"நான் உன்கிட்ட தனியா பேசணும்..." என்றபடி, வினோத், கீர்த்திகாவைப் பார்க்க...

பாலா... மனதுக்குள் பிரளயமே உருவாகத் தொடங்கி இருந்தது... வினோத் பாலாவை மட்டும் ஒரு பார்வை பார்த்துவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

வினோத்தும்... கீர்த்திகாவும் வெளியில் வர... பாலாவைக் காணாமல் கீர்த்தி விழித்தாள்... அவர்களிடம் வந்தவள்...

"வினோத்... மது நல்லா இருக்காங்களா... நான் போய்ப் பார்க்கவா...?" என்றவளிடம்,

"ஹ்ம்ம்... பார்க்கலாம்... அவ பாலாகிட்ட தனியா பேசணும்னு சொன்னா... அதுதான் நாங்க வெளில வந்தோம்..." என்றவனிடம்,

"சரி..." என்று சொல்லியவள், அந்த இடத்தை விட்டுக் கொஞ்சம் தள்ளிப் போய் நின்று வெளியே வெறிக்க ஆரம்பித்தாள்.



என்னதான் மனம் அவனை முழுமையாக நம்பினாலும்... இன்னொரு பெண்ணோடு... அதுவும் காதலித்த பெண்ணோடு தனியே இருக்கும் போது மனம் அடித்துக் கொண்டதுதான்... அது சந்தேகத்தில் இல்லை... அது இயல்பாகவே ஒவ்வொரு மனைவிக்கும் உள்ள பயம் தான்... அவன் வெளியே வரும் வரை... அவள் நெருப்பின் மேல் நிற்கும் நிலையில் இருந்தாள்.

வினோத் - கீர்த்திகா வெளியேறியவுடனே... சில நொடிகள் அப்படியே இருந்தவனுக்கு வெளியே மனைவியின் மனம் தன்னை நினைத்து அடித்துக் கொண்டிருக்குமே என்று தவித்தவன்... அவளைப் பற்றி அவனுக்கு மட்டுமே தெரியும்... இந்நேரம்... தன்னவள் தவித்துக் கொண்டிருப்பாள் என்று...

நினைத்த வுடனே, "மது! ஒரு நிமிசம்... இதோ வருகிறேன்..." என்று எழ...

"என்னடா...?" என்றவளிடம்...

"5 நிமிஷம் மது... நான் வந்துடறேன்," என்றபடி வெளியேறினான்... அவன் நினைத்தபடியே... அவள் வெளியே வெறித்துக் கொண்டிருக்க...

அவளின் அருகில் போய் நிற்க... திரும்பாமலே கீர்த்தி பாலாவை உணர... திரும்பிய வேகத்திலேயே அவனோடு சாய்ந்தாள்...

"சத்தியமாய், பாலா! சந்தேகம்லாம் இல்லை... ஆனாலும் முடியல பாலா..." என்றவளிடம்,

"தெரியும்டி... நீ இப்படி... குழம்பி நிற்பேன்னு தெரியும்... என் மேல உனக்கு இருக்கிற நம்பிக்கை எப்போதும் போக விட மாட்டேன் கீது... அவகிட்ட நான் இன்னும் பேசக்கூட இல்லை... வினோத் கீர்த்தி வெளியே வந்தவுடனே நீ இந்த மாதிரி லூசு மாதிரி பரிதவிப்பாய் என்று தெரியும்," என்றவன்,

"ப்ளீஸ் கீர்த்தி... உனக்குப் பிடிக்கலைனா சொல்லிரு... சேர்ந்து நாம அவளோட பேசுவோம்... ஆனா அவளோட பேசி ஆகணும் கீர்த்தி," என்றவனிடம்...

வேகமாய்க் கண்களைத் துடைத்தவள்...

"ச்சேய்... நான் என்ன இவ்ளோ பெரிய சுயநலக் காரியா ஏன் மாறிட்டேன்... எனக்கு நீங்க இருக்கீங்க... அது போதும் எனக்கு... அவங்க பாவம்... என்னைப் பற்றி நினைக்காம... அவங்கபட்ட வேதனையை எல்லாம் மறக்கிற மாதிரி பேசுங்க பாலா... போங்க," என்றவளிடம்,

"ஷ்யூர்... நீ ஃபீல் பண்ண மாட்டேல்ல?" என்று பலமுறை கேட்டுவிட்டு மீண்டும் உள்ளே செல்ல...

தன்னவனை நினைத்துப் பெருமை கொண்டாள் கீர்த்தி... அதே நேரத்தில் மதுவும் அவனைப் புரிந்து கொள்வாளா... இந்த நிலையில் இருந்து மீள்வாளா... என்ற கவலையிலும் ஆழ்ந்தாள் கீர்த்தி.

மனைவிக்குத் தன்னைப் புரிய வைத்து அவளின் தேவை இல்லாத கவலையை நீக்கிய திருப்தியில்... இப்போது பாலா தெளிவாக... மது என்ன சொன்னாலும் தன்னை... அவளுக்குப் புரிய வைக்கும் நிலையில் உள்ளே சென்றான்...

தன் அருகில் மீண்டும் வந்து அமர்ந்தவனைப் பார்த்தாள்... பார்த்துக் கொண்டே இருந்தாள்... கண்களில் எல்லாம் கலந்திருந்தது... அவள் அவனைப் பார்த்தது முதல்... அவனின் காதலைப் பெற அவள் செய்த சேட்டைகள்... அதன் பின் அவன் தன்னைக் காதலித்தது... திருமணம் வரை சென்றிருந்தனர்... இடையில் இந்த ஆதி மரணம்... என நினைவுகளை ஓட்டியவள்... அவனையே இமைக்காமல் அவன் கண்களையே பார்த்தபடி இருக்க...

பாலாவோ... சிறிது நேரம் அவளைப் பார்க்க... பிறகு அறையைச் சுற்றிப் பார்வையை ஓட்ட... மீண்டும் அவளைப் பார்க்க என்று இருந்தவன்.. முடிவில் மொபைலை எடுத்து...



ஏதோ நோண்டுவது போல் அதில் இருந்த அவனும் கீர்த்தனாவும் இருக்கும் புகைப்படத்தில் பார்வையைப் பதித்து விட்டான்.

மதுதான் அவளைக் கலைத்தாள்.

"என்ன பாஸ்... இந்த 5 வருசத்தில ரொம்ப அமைதி ஆகிட்டீங்க போல... ஆனா இந்த பாலா எனக்குப் பிடிக்கவே இல்லையே..." என்று சிரிக்க...

"மது... தனியா என்ன பேசணும்னு சொன்ன... என்ன... அதச் சொல்லு..." என்று அமைதியாகச் சொன்னபடியே,

"இப்போ என் அமைதி ரொம்ப முக்கியம்!" என்று அவளிடம் முறைக்க...

"அப்பா... இதுதான் பாலா... இப்போதான் பாலாகிட்ட பேசுன மாதிரி இருக்கு!" என்றவளிடம், வழக்கமாக இருக்கும், 'என் பாலா' என்ற முன் விளிப்பு இல்லை... என்பதை உணர்ந்தான் பாலா...

"மது... விளையாடாத மது... என்ன மது... நடந் துச்சு... உன்னைத் தேடி... 4 வருசமா பைத்தியக்காரனா திரிஞ்சுருக்கேன்... நீ காமெடி பண்ணிட்டு இருக்க...

"எப்படி மது இதையெல்லாம் தாங்கிட்டு... இத்தனை வருசம்..." என்றவனிடம்,

"இதுலாம் ஈசி பாலா... மருந்து உள்ள போயிருச்சுனா... உன் நினைவு வராம போயிரும்... சோ 5 வருசத்தில முக்கால்வாசி நாள்... நான் நல்லாத்தான் இருந்தேன்... ஆனா... என் சுயநினைவில் இருக்கும்போது... உன் நினைவு என்னைக் கொல்லும் போது... அப்போதான்டா நான் தாங்க முடியாம தவிப்பேன்...

"நான் கூட பரவாயில்ல... அப்போ அப்போ நினைவு வரும் போது தவிப்பேன்... ஆனா நீ இந்த 5 வருசமும்

என்னை... என் நிலையை... என்ன ஏது என்று தெரியாமல்... மனசுல ஆயிரம் நினைவுகள் என்னைப் பற்றி ஒவ்வொரு நிமிசமும்... உனக்கு இம்சை தானே பாலா..." என்றவளிடம்,

கீர்த்தனாவைத் திருமணம் செய்யும் முன்னர்... செய்யும் முன்னர் என்ன... திருமணம் முடிந்தும் கூட... அவள் தன் மனதில் இடம் பிடிக்கும் வரை... மது சொன்ன நிலையில்தானே இருந்தான்... அவள் சொன்னதும்... அது நினைவில் வர... அவனையுமறியாமல் தலை ஆட்டினான் பாலா... கல்லாய் இறுகிய முகத்தோடு... தலை குனிந்த வாறே...

அவன் பட்ட வேதனையை அவன் முகமே சொல்ல...

"டேய்... இங்க பாரு... அழப் போறியா... நேத்துல இருந்து அழற சீனா பார்த்து... பார்த்து போரடிச்சுப் போச்சுடா... சீனை மாத்துடா," என்றவளிடம்,

அதற்காக அவன் என்ன அவளிடம் ரொமான்ஸ் சீனா போட முடியும்...

"மது! நீ மாறவே மாட்டியா... எல்லோரும் அழறது உனக்கு போரடிக்குதா... உன்னை... ஆனாலும் இந்த லொள்ளு மட்டும் உன்கிட்ட போகாதா?" என்றவன்...

"நான் எங்க அழுதேன்..." என்ற போதே கண்கள் கலங்கிவிட... அதை மறைத்து...

"என்ன விசயம் மது... சீக்கிரம் சொல்லுமா... உனக்கு மறுபடியும் ட்ரிப்ஸ் ஏற்ற வேண்டுமென்று வினோத் சொன்னான்," என்று சொல்ல...

"சரி சரி அழுதுடாத..." என்றவளை முறைக்க...

அவனின் முறைப்பை... ரசித்துப் பார்த்துவிட்டு...

"இதை ரொம்ப நாள் மிஸ் பண்ணிட்டேன்டா..." என்றபடி கண்களை மூடித் திறந்தாள்... ஏதோ பேசும் முடிவோடு...



"பாலா... நான் உன்கிட்ட..." என்று தடுமாற...

அவளின் அருகில் இன்னும் நெருங்கி அமர்ந்த பாலா...

"மது... நம்மைப் பற்றியா...?" என்று கேட்க.

"ஆம்," என்று தலை ஆட்ட...

"மது! நீ முதலில் இந்தக் கொடுமையிலிருந்து வெளியே வா... அதன் பிறகு எல்லாம் பேசலாம்மா!"

"இல்ல பாலா... நான் இப்போ... இந்த நிமிசமே பேசணும்..." என்று தீர்மானமாகப் பேசியவளையே பார்த்தபடி இருக்க...

"எனக்கு ஒரு சத்தியம் உன்கிட்ட இருந்து வேண்டும் பாலா... நான் என்ன சொன்னாலும் கேட்பாய் என்று." சொன்னதோடு கையை அவன் புறம் நீட்ட...

"மது... இது என்ன சத்தியம்... நீ சொல்லு. பண்ண முடிந்தால் கண்டிப்பா பண்ணுகிறேன்..."

"ப்ளீஸ்..." என்று நீட்டிய கையை நீட்டியபடியே இருக்க...

"சோ உனக்கு என் மேல் நம்பிக்கை இல்லை... அப்படித்தானே?" என்ற போதே...

"சரி... உன்னை நம்புறேன்டா... என் வார்த்தையை மீற மாட்டாய்தானே?" என்றபடியே...

"பாலா!" என்று நிறுத்தி விளித்தாள்.

பாலா என்று சொன்னவளின் குரலில் அந்நியத்தை உணர...

அவள் சாதாரணமாய்ப் பாலா என்று சொன்னாலே காதல் வழியும்... இன்று அவள் பேசிய போதுகூட அது இல்லை... ஆனால் இப்போது அவள் சொன்ன பாலா என்ற வார்த்தையில் அதை முற்றிலும் உணர... அவள் பார்வையும் அதையே சொல்ல... பாலா அவளையே பார்த்துக் கொண் டிருந்தான்...

அவளும் பேச ஆரம்பித்து இருந்தாள்.

"உன்னை என்னால மேரேஜ் பண்ணிக்க முடியாது பாலா... ஏனென்றால்..." என்று நிறுத்தியவள்...

"நீ வேற பொண்ணைப் பார்த்துத் திருமணம் செய்துக்கோ பாலா..." பாலா அதிர்ந்து பார்க்க...

"என்னடா... நம்மை உருகி, உருகி... துரத்தித் துரத்தி லவ் பண்ணியவள்... இப்படிச் சொல்றானு பார்க்கிறாயா... ஆமாம் பாலா... உன்னை லவ் பண்ணியதால் தான் இந்த முடிவைச் சொல்கிறேன்..." என்று அவளது காதலைக் கூட இறந்த காலத்தில் சொல்ல...

பாலா வார்த்தைகள் அற்றவனாய் அவளையே பார்த்துக் கொண்டிருக்க...

"இது நான் என் காதலைச் சொன்னது போல அரை மணி நேரத்துல எடுத்த முடிவு இல்லை... பாலா.. நான் தனிமையிலேயே இந்த 5 வருசத்தை ஓட்டி... அதுலயே மூழ்கிட்டேன்டா... என்னால் இனி குடும்ப வாழ்க்கையை நினைக்க முடியாதுடா...

"இது இன்னைக்கு நேற்று எடுத்த முடிவு இல்ல... ஊட்டில உன்கிட்ட பேசியும் என்னால உன்னைச் சேர முடியலயே, அப்போ எடுத்த முடிவுடா... இனி நீயும் நானும் சேரப் போறதே இல்லை என்று... அப்போதிருந்து தனிமைய நான் விரும்ப ஆரம்பிச்சுட்டேன்டா... எனக்குனு ஒரு ஸ்பேஸ் உருவாக்கிட்டேன் பாலா... இப்போ அதை உடைத்து இனி உன்னை உள்ள வர வைக்க முடியாது பாலா..." என்று சாதாரணமாகச் சொல்லி அவனைப் பார்த்தாள்.

கண்டிப்பாக அவன் கோபப்படுவான்... திட்டப் போகிறான் என்று அவள் நினைக்க... அவனோ திகைப்பில் இருந்தான்... மதுவின் வார்த்தைகளில்... அவன் தன்னைப் பற்றி வாய் திறக்கும் முன்னே... அவனது கவலைகள் யாவும்



போக்கிய மதுவைப் பார்த்துத் திகைப்புடன் இருக்க... அவன் திகைப்புடன் இருந்த நிலை கவலை தர வைத்தாலும்... அவனைப் பார்த்துச் சிரித்தபடியே...

"உன்னைப் பிடிச்சிருந்த ஏழரைச் சனி.. உன்னை இன்னையோட விடுது பாலா..." என்று சொல்லி முடிக்கும் முன், அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே, பாலா அதற்கு மேல் அங்கு இருக்கவில்லை.

வெளியில் வந்தவன்... அமர்ந்திருந்த கீர்த்தனாவைத் தேடி மண்டியிட்டு அவள் மடியில் தன்னைப் புதைத்து அழ ஆரம்பிக்க...

அங்கு இருந்த... கீர்த்திகா... வினோத்... மதுவின் பெற்றோர் எல்லோருக்கும் அதிர்ச்சி ஆக... கீர்த்தனாதான் கொஞ்சம் தைரியமாக இருந்தாள்.

"பாலா... என்ன இது சின்னக் குழந்தை மாதிரி... என்ன நடந்தது பாலா...?" என்று நிமிர்த்தி அவனின் கண்களைத் துடைத்தவள்...

வினோத்தும், கீர்த்திகாவும் அருகில் வர... பாலா கீர்த்திகாவிடம் திரும்பிச் சொன்னான்.

"உன் ஃப்ரெண்ட் என்னைப் பழி வாங்கிட்டா கீர்த்தி... நான் என்னைக்கோ சொன்னதை இன்னும் மனசுல வச்சு... என்னைக் கொன்னுட்டா கீர்த்தி!" என்று சொல்ல... அனைவரும் அதிர...

வினோத் அவனிடம், "பாலா... என்னடா தெளிவா சொன்னாத்தானே புரியும்... சொல்லுடா... கீர்த்தனாவைப் பாரு... அவ கலவரம் ஆகிறா!" என்று சொன்னவுடன் அவளைப் பார்த்த பாலா... அவள் முக மாறுதலில் உடனே உள்ளே மது சொல்லியவற்றைச் சொல்ல...

"நீ உன்னைப் பற்றி... கீர்த்தனாவைப் பற்றி... சொல்வதற்கு முன்னாலே மது இப்படிச் சொன்னாளா பாலா?" என்று வினோத் கேட்க...

"ஆமா வினோத்!" என்று பாலா சொல்ல...

அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் ஒரு வகையில் நிம்மதி...

மதுவின் பெற்றோருக்குத் தன் மகள் பாலாவின் நினைவில் இனி தன்னை வதைத்துக் கொள்ள மாட்டாள் என்ற நிம்மதி...

வினோத்துக்கு, இனி மது கீர்த்தி வாழ்வில் இல்லை என்ற நிம்மதி.

கீர்த்திகாவிற்கு... கீர்த்தி - பாலா திருமணம் பற்றிக் கேள்விப்படும் போது தன் தோழி துன்பப்படமாட்டாள் என்ற நிம்மதி...

பாலா... தான் எதுவும் சொல்லாமலே அவள் தனக்குத் தீர்வு கொடுத்துவிட்டாள் என்றாலும்... அவனைக் கொஞ்சம் கூட வருத்தாமல்... வழக்கம் போல இதிலும் அவன் மீதான தன் காதலை நிலைநிறுத்தி விட்டாள் என்ற குற்ற உணர்ச்சி யில் இருக்க...

யாருக்கு மதுவின் பதில் நிம்மதியைத் தர வேண்டுமோ... சந்தோசத்தை அள்ளிக் கொட்ட வேண்டுமோ... அவள் கோபத்தின் உச்சத்தில் இருந்தாள்...

"பாலா... மது... உங்ககிட்ட ஒண்ணு கூட கேட்கவில்லையா...?"

"இல்லை கீது... அவ என்னைப் பேசவே விடவில்லை," என்று கூற... எழுந்தாள் ஆவேசமாக...

கூடவே பாலாவின் கையைப் பிடித்துக் கொண்டு இழுத்தபடி உள்ளே போக...

மதுவும் யோசனையில்தான் இருந்தாள்.

அவள் பாலாவின் கோபத்தை எதிர்பார்த்திருந்தாள்... அவனோ முகம் வெளுத்தவனாய் வெளியேற... ஏதோ



நடந்திருக்கிறது... நாம் அவனுக்குச் சொன்னது சாதகமான பதில் தான் போல... அதனால் தான் கோபப்படாமல் போகிறான்... என்று நினைக்கும் போதே அவன் வாழ்க்கை யில் இன்னொருத்தி வந்து விட்டாளோ என்பதையும் அவள் மனம் உணரத் தொடங்கி இருந்தது... ஆனால் அது வலிக்கவில்லை அவளுக்கு... 5 வருடத் தனிமையில் அவள் பாலாவை விட்டு வெகு தூரம் போயிருந்தாள்.

உள்ளே... பாலாவையும் இழுத்துக் கொண்டு... கீர்த்தனா நுழைய... மது வித்தியாசமாகப் பார்த்தாள் அவர்கள் இருவரையும்...

அதுவும் ஆவேசமும் கோபமுமாய் நுழைந்த கீர்த்தனாவைப் புரியாமல் பார்த்தாள்.

"நீங்க இவரைத் திருமணம் செய்யச் சொன்னீங்களா?" என்று அதிரடியாய் அவளிடம் பேச...

பாலா ஆடிப் போனான்.

பின்னால் வந்த அனைவருமே புரியாமல் விழித்தனர்.

"இவள் ஏன் கோபப்படுகிறாள்... ஒழுங்காகப் போய்க் கொண்டிருப்பதைக் குழப்புகிறாளே!" என்று வினோத் அவளைப் பார்க்க...

அவளோ மதுவையே பார்த்தபடி... அவளின் பதிலுக்காக நிற்க...

மதுவும் அசராமல் அவளின் கேள்விக்குப் பதில் சொல்லாமல்... அவளையே பார்த்தபடி இருக்க...

"நான் உங்ககிட்டதான் கேட்கிறேன். பதில் சொல்லாம இருக்கீங்க..." என்று கேட்க...

"நீங்க யாரு... நான் எதுக்கு உங்ககிட்ட பதில் சொல்லணும்... ஒருவேளை நீங்க என்னைக் காப்பாற்றி இருக்கிறதால வேணும்னா நான் சொல்றேன்... ஆமா,

சொன்னேன்... அதனால உனக்கு என்ன பிரச்சனைமா?" என்றபடி பாலாவின் கையை அவள் பிடித்துக் கொண்டிருப் பதையும் பார்த்துக் கொண்டிருந்தாள்... பாலாவும் அவள் கைப்பிடிக்குள் நிற்பதையும் உணர்ந்தாள்.

"ஓ... உங்களுக்கு... காதல் வந்துச்சுனா... துரத்தித் துரத்தி அவர காதலைச் சொல்றவரை விடாமல் விரட்டிக் காதல் பண்ண வைப்பீங்க... இப்போ உங்களுக்குக் காதல் இல்லைனா... உங்கள விட்டு விட்டு இவர் வேற கல்யாணம் பண்ணிக்கணுமா?" என்று கேட்க...

தான் எடுத்த முடிவில் எதிர்த்துக் கேள்வி கேட்ட கீர்த்தனாவை... எதிர்கொள்ள முடியாமல் மது திணற... பெரும்பாலும் அவள் தான் எடுக்கும் முடிவுகள் யாரையும் பாதிக்காத வண்ணம் தான் முடிவெடுப்பாள்... இப்போது கூட யாரையும் பாதிக்கவில்லை தான் என்று நம்பினாள்.

ஆனால் அவளை நினைத்துக் காத்திருந்த அவனின் காதல் மனதை அலட்சியம் செய்துவிட்டாள் என்று கீர்த்தனா நினைத்தாள்.

ஆனால் தற்போதைய கீர்த்தனாவின் பாலா... அதை நினைக்கவில்லை... அதனால் பாதிக்கப்படவும் இல்லை...

அவன் மனைவிக்கோ... அவன் மது மேல் கொண்டிருந்த காதலுக்கு அர்த்தமே இல்லாமல் போனது போல் ஆக... கொதித்து விட்டாள் அவள்...

பின்னே கூட இருந்து அனுபவித்தவள் அவள் அல்லவா...? அந்த உணர்வுகளுக்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டதே... மதுவுக்காகத் தவித்த அவன் காதலுக்காக மதுவிடமே சண்டைக்கு வந்துவிட்டாள் பாலாவின் மனைவி கீர்த்தனா...

முதலில் தடுமாறிய மதுவுக்கு... பின் தன்னைக் காப்பாற்றியவள்... பாலாவின் மனைவி என்பது திண்ணமாக விளங்க...



மதுவும் அவள் கேள்வியைத் தைரியமாக எதிர் கொண்டாள்...

"உங்க கோபம் எனக்கு ஏன்னு புரியல... நான் சொல்லியது எதுவுமே தவறு என எனக்குப் படவில்லை... மிஸஸ் பாலா..." என்று அவளையும், பாலாவையும் பார்த்துச் சொல்லி... பாலாவை, கீர்த்தனாவை மட்டுமின்றி அங்கிருந்த அனைவரையும் அசர வைத்தவள்,

"அதோடு மட்டுமில்லாமல்.. உங்களுக்கு நான் சொன்ன பதில் சாதகமானது கூட..." என்று சொல்ல...

இப்போது மதுவும் ஆவேசமாகப் பேச ஆரம்பித்து இருந்தாள்... கோபப்படக்கூடாது என்றுதான் நினைத்தாள்... இப்போ என்ன இவளுக்கு வேண்டுமாம்... அதுதான் பாலா வாழ்க்கைல கூட நான் குறுக்கே வரவில்லையே... இவளுக்கு ஏன் இத்தனை கோபம்... என்று தன்னைக் காப்பாற்றியவள் என்ற எண்ணத்தில் முதலில் பேச ஆரம்பித்திருந்தாலும்... இப்போது கோபமாக இருக்க...

பாலா பேசவே இல்லை... மது சொன்னதில் தவறே இல்லை எனும் போது... மது சொன்னது தவறு என்று... கீர்த்தனாவுக்காக சப்போர்ட் பண்ணியா பேச முடியும்... பைத்தியக்காரத்தனமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் கீர்த்தியை இத்தனை பேர் முன் மற்றும் மதுவின் முன் திட்டவும் அவனுக்கு மனம் வரவில்லை...

கீர்த்தனாதான் பிரச்சனை பண்ணிக் கொண்டிருக் கிறாள் என்று தெளிவாக விளங்கியதால்... அனைவரும் மதுவின் பக்கமே நியாயம் என்று நினைத்திருக்க...

வினோத் கீர்த்தனாவிடம் எரிந்து விழுந்தான்...

"ஏய் கீர்த்தனா... இப்போ எதுக்கு பிரச்சனை பண்ற... மது உனக்கு நல்லதுதானே பண்ணி இருக்கா..." என்ற போது...

"நேற்று பாலா... 'கீர்த்தி' என்று வலியோடு கதறி அழைத்த விதம் மதுவுக்குப் புரிய... பாலாவை ஒரு பார்வை பார்த்தாள் மது... ஆனால் பாலாவோ கீர்த்தனாவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்... 'ஏன் இப்படிப் பண்ணுகிறாள்?' என்று மனதில் கோபத்தோடு...

கீர்த்தனா வினோத்துக்கு மறுமொழி சொன்னாள்.

"எனக்கு நல்லதுதான் பண்ணி இருக்காங்க வினோத்... ஆனா இவருக்கு..." என்ற போது பாலா... அவளைப் பற்றி அறிந்திருந்ததால்... இவளை விட்டால் கோபத்தில் இன்னும் கிறுக்குத்தனமா பேசிட்டே போவாள் என்று முடிவு செய்தவன்,

கீர்த்தியிடம், "கீர்த்தி, நாம போகலாம்..." என்று இழுத்தபடி வெளியேற முயல... கையை உதறிய கீர்த்தி... இன்னும் ஆவேசமாகக் கத்த ஆரம்பித்தாள்...

"எதுக்கு பாலா... நாம போகணும்... எனக்குப் பதில் தெரிய வேண்டும்... மதுவிடம் இருந்து. இவளுக்காக 4 வருசம் நீங்க காத்துட்டு இருந்தீங்க பாலா... அந்த நாலு வருசமும் உங்க தவிப்பு... உங்க காதல்... உங்க வலி... அதனால உங்க குடும்பத்தில ஏற்பட்ட பிரச்சனை... இது எல்லாம் எதுக்கு பாலா.. இவ திரும்பி வரும் போது இந்தப் பதில கேட்பதற்கா பாலா... சொல்லுங்க பாலா..." என்று கணவனை உலுக்கியவள்,

"தாங்கி இருக்க மாட்டீங்க பாலா... துடிச்சுப் போயிருப்பீங்க பாலா... இவ சொல்லி முடிக்கும் போது... கோபத்தில இவள அறைஞ்சிருக்க மாட்டீங்க? சொல்லுங்க... இப்போ நான் உங்கள கல்யாணம் பண்ணிட்டேன்... அதனால் இப்போ இவளோட பதில் உங்களுக்குச் சாதகமான பதில்தான்... இந்தத் திருமணம் ஒருவேளை... நாம என்ன நினைத்துப் பண்ணினோமோ அதே போல் நடந்திருந்தால்... சொல்லுங்க பாலா..." என்றவளிடம்,



அதுவரை மதுவுக்கு அவள் கொடுத்த மரியாதை எல்லாம் பறந்திருந்தது... ஆனால் அவளிடம் நேருக்கு நேராகப் பேசும் போது அது திரும்பி வந்தது...

மதுவிடம் திரும்பி, "உங்கள இவர் எத்தனை தூரம் காதலித்து இருக்கிறார் என்று தெரியுமா...? உங்களுக்கு என்ன தெரியும்...? எதுவும் தெரியாது... உங்களுக்காக 4 வருசம் இல்ல ஆயுள் முழுக்கக் காத்திருக்கத் தயாராக இருந்தார்... ஆனா மாமா விடல... ஒரு கட்டத்தில இவர பிளாக் மெயில் பண்ண... வேறு வழி இல்லாம என்னைக் கல்யாணம் செய்தார்...

"நீங்க வர்றவரை மனைவியா நடிக்கும்படி... இதோ என் கழுத்தில இருக்கிற இந்தத் தாலி கூட அவர் உங்க மேல வச்சுருக்கிற காதலைச் சொல்லும் மது...!" என்றபடி அவள் மாங்கல்யத்தை எடுத்து அவளிடம் காட்ட...

அவளின் ஆவேசம் உணர்ந்த பாலா... பயந்தே விட்டான்... அவளுக்கு ஏதோ ஆகி விட்டதோ என்று கூடத் துடிக்க ஆரம்பித்து இருந்தான்.

"ஹேய் கீது... என்னடி ஆச்சு... இப்போ ஏன்டி இப்படிலாம் பேசுற... நீ ஃபர்ஸ்ட் ரிலாக்ஸ் ஆகு... நாம் அப்புறம் இதப் பேசலாம்... உனக்கு... நம்ம குழந்தைக்கு எதையாவது இழுத்து வச்சுக்காத கீர்த்தி... ப்ளீஸ் கீர்த்தனா...!" என்று கணவனின் அக்கறையாக அவளிடம் கெஞ்ச ஆரம்பிக்க...

மதுவுக்குக் கோபம் போய்... பாலாவின் மாற்றம் புரிய... அதை மனமார ஏற்றவள்... கீர்த்தனாவின் கோபத்தில் உள்ள நியாயம் புரிய ஆரம்பித்து இருந்தது... அதே நேரம் பாலாவையும் முறைத்துப் பார்த்தாள்... கீர்த்தி சொன்ன மனைவியாக நடிக்கும்படி என்ற வார்த்தைகள் தந்த வலியில்...

கீர்த்தனாவோ இன்று மட்டும் புதிதாய் அவள் தன் கணவன் பேச்சைக் கேட்பாளா என்ன... அவனை லட்சியம் செய்யாமல் பேசிக்கொண்டே இருந்தாள்...

"உங்க காதல் உயர்ந்ததுதான்... ஆனா... பாலாவோட காதலுக்கு என்ன மதிப்பு மது...? அவர் மனச நீங்க நல்லா புரிஞ்சு வச்சுருக்கீங்களா மது...? நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே...? அவருக்கு மேரேஜ் ஆகிருச்சா இல்லையா... எதுவுமே தெரியல உங்களுக்கு... தெரிஞ்சு சொல்லி இருந்தாகூட பரவாயில்லை மது...

"நீங்க அவர் மனசைப் புரிந்து விலகிட்டீங்கன்னு நினைக்கலாம்... ஆனா அவரைப் பற்றி எதுவுமே தெரியாம... நீங்க எடுத்த முடிவு சரியே இல்ல மது... உங்க மனசு மட்டும் தான் அப்பவும் பார்த்தீங்க... இப்போதும் பார்க்கறீங்க... அன்னைக்கு இவர உங்கள வலுக்கட்டாயமா காதலிக்க வச்சீங்க... அப்போதும் அவர் மனசைப் பார்க்கல... உங்களுக்குப் பாலாவோட காதல் தேவை... ஜெயிச்சீங்க... இப்போ உங்களுக்குப் பாலா காதல் தேவைப்படல...

"மே... பி... நீங்க நல்ல எண்ணத்தோட கூட சொல்லி இருக்கலாம்... ஆனா நீங்க பாலாவோட ஆப்சனே கேக்கவே இல்லயே மது... அப்போ அவரோட காதலுக்கு நீங்க கொடுக்கும் மதிப்பு என்ன மது... சொல்லுங்க...

"சத்தியமா சொல்றேன்... நான் இவரோட வாழ்க்கைல குறுக்கிடலேனா... இவர் உங்கள விட்டிருந்திருக்க மாட்டார் மது... அது எனக்குத் தெரியும்... நான் யாரோ ஒருத்தி... என்னையே அவர் வாழ்க்கைல இருந்து போகக்கூடாதுன்னு அந்தப் பாடு பட்டவர் இவர்... நீங்க அவர் உயிருக்குயிரா காதலிச்ச பொண்ணு... உங்கள விட்டு விடுவாரா என்ன... நீங்க எந்தச் சூழ்நிலையில திரும்பி வந்திருந்தாலும் உங்கள ஏத்துட்டு இருந்துருப்பாரு...



"இல்ல... உங்க முடிவுக்காகக் காத்திட்டு இருந்திருப்பாரு மது... நீங்க இவரை இப்போதும் காதலித்து... ஏன்டா என்னை விட்டு இவள திருமணம் செய்தாய் என்று கேட்டிருந்தால் கூட... நான் விட்டுக் கொடுத்திருக்கமாட்டேன் தான்... ஆனா நான் என் புருசனுக்காகப் போராடியிருப்பேன் உங்ககிட்ட... ஆனா நீங்க... அவர் காதலையே நினைத்துப் பார்க்கவில்லையே. கோபம் தான் வருது மது உங்க மேல... அவருக்கும் ஒரு மனசு இருக்குனு ஏன் நினைக்கவில்லை நீங்க...? அதுல என்ன இருக்குனு ஏன் நீங்க கேட்கவில்லை மது?" என்று முடிக்கும் போதே அவள் தள்ளாட...

பாலா... தனக்காக... தன் காதலுக்காகப் போராடும்... சண்டையிடும்... தன்னவளை... தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான், உணர்ச்சியின் வேகத்தில்... மதுவின் மீதான தன் காதல் எந்த அளவிற்கு அவளுக்குள் வேரோடி இருந்தால்... இன்று இப்படிப் பேசிக் கொண்டிருப்பாள் என்று உணர்ந்தவளின் மனம் அவளை அமைதிப் படுத்த வேண்டுமே என்று முதலில் தன்னைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்றான்.

மது... அவர்களையே பார்த்தபடி இருக்க... அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் அவள் இந்த ஒரு வருடம் அனுபவித்த வேதனை... அவன் மேல் கொண்ட காதல் தவிர... அவனின் முதல் காதலை எந்த அளவு மதித்து இருக்கிறாள் என்பதும் புரிய... அசந்துபோயினர்... கீர்த்தனா... பாலா மேல் கொண்ட காதலின் ஆழத்தை அவள் கணவனே அப்போதுதான் உணர்ந்திருந்தான் போல என்ற நிலையில்தான் இருந்தான்...

மது பாலாவை அருகில் அழைக்க... கீர்த்தனாவோடு அருகில் போக...

மதுவுக்கும் கீர்த்தனாவின் காதல் புரிய... தன்னை நினைத்துச் சிறிதளவு வெட்கம் கூடக் கொண்டாள்...

ஏனென்றால் அவள் சொல்வது போல அவன் மனதை அவள் நினைக்கவில்லையோ என்று கொஞ்சம் சந்தேகம் கூட வந்துவிட்டது அவளுக்கு...

ஆனால் அவள்... அவன் மனதை மட்டுமே... அவன் உணர்வுகளை மட்டுமே நேசித்தவள்... என்று யோசிக்க... கீர்த்தனா மாதிரி ஒரு பெண் அவனுக்குக் கிடைத்ததில் சந்தோசம் கொண்டாள்.

மதுவுக்குத் தெரியாத விசயமும் இருந்தது...

கீர்த்தனாவும் அவன் உணர்வுகளைப் புரியாமல் ஆடினாள் தான்... எதற்காக? மதுவுக்காக... மதுவுக்கான வாழ்க்கையில் தான் பாதகம் செய்கிறோமோ என்ற குற்ற உணர்வில் பாலாவைக் கூறு போடத்தான் செய்தாள் என்று தெரியவில்லை... அது பாலா சொன்னால் மட்டும் தான் தெரியும்...

மதுவைப் பற்றிக் கீர்த்தனாவுக்குத் தெரிந்திருந்தால் தவறில்லை... ஆனால் கீர்த்தனாவைப் பற்றி... அவர்களது அந்தரங்கம் பற்றி பாலா மதுவிடம் சொல்வானா என்ன... ஒருபோதும் அது நடக்க வாய்ப்பில்லை... அதனால் அது மதுவுக்கும் தெரியப் போவது இல்லை...

"பாலா... எங்க இருந்துடா பிடிச்ச உன் தேவதைய...?" என்று மது கேட்க...

பாலா பெருமையாய் மனைவியை நோக்கினான்.

தான் இவ்வளவு பேசியும் தன் மேல் கோபம் இல்லையா இவளுக்கு என்று அவனோடு சாய்ந்தபடியே மதுவைச் சந்தேகமாய்ப் பார்க்க...

மது... தன் குறும்பைக் கீர்த்தனாவிடம் காட்டினாள்.

"சரிடா பாலா... உன் கீதுவே ஓக்கேனு சொல்கிறாள்... அது எனக்குத் தாலி மட்டும் கட்டி மனைவியா ஏத்துக்கோ... அது போதும்... மற்ற எல்லாத்துக்கும் தான் கீர்த்தி இருக்காள்..."



என அவனிடம் சொல்லி... கீர்த்திகா புறம் திரும்பிக் கண் சிமிட்ட...

பாலா விழிக்க...

கீர்த்தி... ஆ... என்று வாய் பிளந்து நின்றாள்...

மது கிண்டலாகச் சொல்கிறாள் என்பதை உணர்ந்த வினோத் கீர்த்தனாவைப் பார்த்து...

"ஏன் கீர்த்தி மூச்சு விடாமல் பேசி... இது உனக்குத் தேவையா?" என்று சிரிக்க...

கீர்த்தனா மெதுவாய்ப் பாலாவிடம் மட்டும் கேட்கும் குரலில், "நான் எப்போ ஓகே சொன்னேன் பாலா... அப்டியா பேசுனேன்...?" என்று அப்பாவியாய்ச் சந்தேகம் கேட்க.

"அடங்குடி... அப்போ அப்போ ஓவர் எமோசனல் ஆகி நீ பண்ற வேலைல எனக்குத் தான் சர்வ நாடியும் ஒடுங்கிடுது... இப்போ என் காதலை நிரூபிக்க யாரும் இல்லைனு உன்கிட்ட வந்து நின்னேனா...? அவ வேற இப்டி சொல்றா... உன்னை..." என்று மற்றவர்களை மறந்து தங்களுக்குள் பேச...

"பாலா... சத்தியமா... நீயாடா இது... இவ்ளோ ஃப்ளாட்டாடா நீ... அவ கூட உன்னை விட்டுக் கொடுத்துருவா போல... நீ... இந்த முழி முழிக்கிற..." என்று மதுவே கலாய்க்க...

பாலா வாழ்க்கையில் முதல் முறை வெட்கமும் பட்டான்.. அதை மறைக்கப் போராடியும் கொண்டிருக்க... மதுவை முறைத்து... முடிவில் கீர்த்தனாவிடம் முடித்தான் பாலா...

"பாரு... உன்னால அவ என்னை ஓட்றா..." என்று அவளை முறைத்தவாறே அவளை விட்டுத் தள்ளி நிற்க...

"நீங்க தைரியமா இன்னும் இவதான் என் மனைவினு சொல்லவே இல்லை... இப்போ கோபம் வேறயா..."

"ஆமாடி... இன்னும் தனியா வேற சொல்லணுமா... அதுதான் கண்டுபிடிச்சிட்டாளே... என்னை மொத்தமா ஆளறேன்னு!" என்றவனிடம் வெட்கத்தில் சரணடைய...

எல்லோரும் இருக்கிறார்கள் என்று அவளை விலக்கவில்லை அவனும்...

பாலா யாருக்காகவும் இன்று அஞ்சவில்லை... ஏன் மதுவின் முன்னால் கூட அது அவனைப் பாதிக்கவில்லை... அவளின் நெருக்கத்தை மனப்பூர்வமாக ஏற்றுத் தன்னோடு சேர்த்துக் கொண்டான் பாலா...

மது... பாலாவிடம், "இவதான்டா உனக்குச் சரியான ஆளு!" என்று சொல்ல...

மதுவைப் பார்த்து நிம்மதியாய்ச் சிரித்தான் பாலா... பாலாவின் நிம்மதியில் கீர்த்தனா மன அமைதி கொள்ள... மற்ற அனைவரும் அவர்கள் மூவரையும் பார்த்துச் சந்தோசம் கொண்டனர்.

அதன் பின் மதுவுக்குச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டி இருக்க வெளியேறினர் அனைவரும். மனம் முழுவதும் நிம்மதியுடன்...

## 53

அன்று பாலா - கீர்த்தியின் திருமண நாள்...

மது இன்னும் மருத்துவ மனையில்தான் இருந்தாள்...

மதுவின் பெற்றோர் கீர்த்திகாவின் வீட்டிலேயே தங்கித் தங்கள் மகளைக் கவனித்துக் கொண்டனர்...

பாலா - கீர்த்தி வீட்டிலே வைத்துச் சிறிய அளவில் அதைக் கொண்டாட... கீர்த்திகா, வினோத் வீட்டிலும் வந்திருக்க... கவி... சிந்து கேலியோடு விளையாட...



ஜெகநாதன் அருந்ததியின் ஆசிர்வாதத்தோடு கீர்த்தனா - பாலா கேக் வெட்டிக் கொண்டாடினர்.

ஒவ்வொருவரும் அங்கு சந்தோசமாய் இருக்க.. கவியும் சிந்துவும்... பாலா - கீர்த்திக்கு ஒரு கிஃப்டை இருவருமாக அளித்து... "இதை இப்போதே நீங்க ரூம்ல பிரிச்சுப் பார்க்கணும்... போங்க!" என்று விரட்ட...

இருவரும் கிளம்ப, கவி மட்டும்,

"அந்த கிஃப்டுக்கான டைம் 10 மினிட்ஸ் தான். உடனே கீழே இறங்கி வந்துருக்கணும்..." என்று சொல்ல

"இதப் பிரிச்சுப் பார்த்துட்டு வருவதற்கு இவ்ளோ டைமா... கவி... 5 மினிட்ஸ்ல வந்துருவோம்... பேப்பர் மட்டும்தான் வச்சுருக்கீங்களா..." என்று முறைக்க...

"சரி... சரி... கவி... போறோம் போறோம்!" என்றவள் வேகமாகப் படி ஏற... அதில் கொஞ்சம் தடுமாற... சட்டென்று பாலா பிடித்துவிட்டான்...

அதேநேரத்தில், "உன்னை... அப்படி என்ன அவசரம்?" என்று திட்டவும் மறக்கவில்லை அவன்.

"கீர்த்தி, பார்த்து..." என்று அனைவரும் பதற...

சிந்துவோ... "கீர்த்திக்கா... பார்த்து..." அவளின் வார்த்தையும் கீர்த்தியின் காதில் விழ... கண் கலங்கியது கீர்த்திக்கு... இத்தனை பேர் அன்பிலும் நெகிழ்ந்தாலும்... கரைந்தாலும்...

"யார் யாரோ பாடினாலும் ஆராரோ ஆகாதம்மா

சொந்தங்கள் தேடினாலும் தந்தை தாய் ஆகாதம்மா!"

என்ற வரிகள் அவளைப் பொறுத்தவரை சத்தியம்... அவளும் இதை உணர்ந்திருந்தாள் தன் பெற்றோரின் பிரிவில்... உண்மைதானே. அவர்களது இடத்தை யாராலும் நிரப்ப முடியவில்லையே...

இருவரும் உள்ளே போய் கவி-சிந்து கொடுத்த கிஃப்டைப் பிரிக்க... அது ஒரு சிடி...

கவி சொன்ன 10 நிமிடம் புரிய...

சிரித்தபடி பாலா அதை ப்ளேயரில் ஓட விட...

"ஹாய் அக்கா...

ஹாய் கீர்த்தி..."

"உங்க ரெண்டு பேருக்கும்... இப்போ ஒரு பாட்டை நாங்க டெடிகேட் பண்றோம்... சாரி சாரி... குட்டிப் பாப்பாக்கும்... இது உங்களுக்கான பாடல் மட்டும் அல்ல. உங்க குழந்தைக்குமான பாடல்... சாரி சாரி... இப்படி சொல்லாம சொல்லிட்டோம்... உங்க பாப்பாவுக்கான பாலகீர்த்தனம்.. இதுதான் கரெக்ட்டா இருக்கும்... கேட்க ரெடியா...?" என்ற போதே பாடல் ஒலிக்க, அதில் மெய்மறந்தனர் இருவரும்...

*சிந்திய வெண்மணி சிப்பியில் முத்தாச்சு*
*என் கண்ணம்மா*
*செந்நிற மேனியில் என் மனம் பித்தாச்சு*
*என் பொன்னம்மா*
*சேலாடும் கண்ணில் பாலூறும் நேரம்*
*செவ்வானம் எங்கும் பொன் தூவும் கோலம்*
*சிந்திய வெண்மணி சிப்பியில் முத்தாச்சு*
*என் கண்ணம்மா*
*செந்நிற மேனியில் என் மனம் பித்தாச்சு*
*பெண்ணென்னும் வீட்டில் நீ செய்த யாகம்*
*கண் மூடிப் பார்த்தேன் எங்கும் இன்பம்*
*அன்பென்னும் ஆற்றில் நீராடும் நேரம்*
*அங்கங்கள் யாவும் இன்னும் எண்ணும்*
*இன்றைக்கும் என்றைக்கும் நீ எந்தன் பக்கத்தில்*
*இன்பத்தை வர்ணிக்கும் என்னுள்ளம் சொர்க்கத்தில்*



*மெல்லிய நூலிடை வாடியதே*
*மன்மத காவியம் மூடியதே*
*அள்ளியும் கிள்ளியும் ஆயிரம் ஆசைகள்*
*அன்பென்னும் கீர்த்தனை பாடியதே*
*சிந்திய வெண்மணி சிப்பியில் முத்தாச்சு*
*என் கண்ணம்மா*
*தாய் தந்த பாசம் தந்தை உன் வீரம்*
*சேய் கொள்ள வேண்டும் அன்பே அன்பே*
*காலங்கள் போற்றும் கைதந்து காக்கும்*
*என் பிள்ளை தன்னை இங்கே இங்கே*
*வீட்டுக்கும் நாட்டுக்கும் நான் பாடும் பாட்டுக்கும்*
*எத்திக்கும் தித்திக்கும் என் இன்பக் கூட்டுக்கும்*
*என் மகன் காவிய நாயகனே*
*என் உயிர் தேசத்துக் காவலனே*
*வாடிய பூமியில் கார்முகிலாய் மழை தூவிடும்*
*மானிடன் என் மகனே*
*சிந்திய வெண்மணி சிப்பியில் முத்தாச்சு என் கண்ணம்மா*

மயங்கி இருந்த நிலை... தொடர்ந்தது... இதை விட சிறந்த பரிசினைக் கணவன் மனைவிக்கு... அதுவும் அவள் தாயாகும் தருணத்தில் - இருக்கும் நிலையில் - வழங்க முடியுமா என்ன...

கணவனுக்குள் அடங்கினாள் கீர்த்தனா... அந்தப் பாடலின் ஒவ்வொரு வரியிலும்... மனைவியைத் தன்னோடு சேர்த்து அதில் லயித்திருந்தான் பாலா...

கவிதான் செய்திருப்பாள் என்று புரிந்தது கீர்த்திக்கு... கவி எதார்த்தமாகத்தான் சிந்துவோடு சேர்ந்து இதைச் செய்தாள்.

பாலாவும் நெகிழ்ந்திருந்தான்... ஆனால் அவனுக்கு இன்னொரு சந்தேகம் வந்தது... மதுவின் பாடல் இருந்த

சிடியைக் கீர்த்தி கேட்டிருப்பாளோ... அதைக் கவியிடம் சொல்லி இருப்பாளோ... என்று வினோத்திடம் கூட மறைத்த தங்கள் விசயத்தைக் கவியிடம் கூறியவள் தானே...

ஒருவேளை மது பாடிய பாடலைக் கேட்டிருந்தால் கவியிடம் சொல்லி இருந்திருப்பாள்... என நினைக்க மட்டும் செய்தவன்... தற்போதுள்ள ரம்மியத்தைப் பேசிக் கெடுக்க நினைக்கவில்லை... அவர்கள் வாழ்க்கையில் என்றாவது ஒருநாள் அவனுக்கு இதற்கு விடை கிடைக்காமலா போகும்...

கீர்த்தியும் யோசித்தாள்... நாம மது சிடியைப் பற்றி இவளிடம் சொல்லவே இல்லையே... எப்படி கரெக்டா போடுறா... அப்படியே மது போலவே... என்று யோசிக்க ஆரம்பித்து... பாலா ஏன் இன்னும் பண விசயத்தை மறைக்கிறான் என்ற நிலையில் நின்று... பின் அவன் எது செய்தாலும் காரணம் இல்லாமல் இருக்காது என்று முடிவுக்கு வந்து சமாதானமானாள்.

பாலாவுக்குத்தான் அவனது சந்தேகங்களின் விடைகள் காலத்தின் கையில் விடப்பட்டிருந்தன...

ஆனால் கீர்த்தனாவின் சந்தேகம்... வெகு விரைவிலேயே தீரும் தறுவாயில் தான் இருந்தது...

இருவரும் பாடலிலும்... அது தந்த நினைவிலும்... பின் தங்கள் நினைவிலும் சுற்றிக் கொண்டிருக்க மணி அரை மணி நேரத்தைக் கடந்திருக்க... மொபைல் ஒலிக்க... கவிதான்.

"10 நிமிடம் தான் கொடுத்தோம்... அரை மணி நேரமா சொன்னோம்... இறங்கி வாங்க..." என்று அழைப்பு விடுக்க...

இறங்கிய போது பெரியவர்கள் யாரும் இல்லை.

பிறகென்ன... போதும் போதும் என்றளவுக்கு அனைவரும் ஓட்டித் தள்ள...



கவியோ... "யாரோ 5 நிமிசம் போதும்னு சொன்னாங்க வினோத்!" என்று விடாமல் ஓட்ட...

அதைக் கேட்ட கீர்த்தனா கணவனின் மார்பில் ஒளிந்தவள் தான், நிமிரவே இல்லை... அவளவனும் நிமிர விடவில்லை... அவர்களின் கேலிக்கெல்லாம் பயந்து தன் அரவணைப்பை விடவும் இல்லை...

இரண்டு மாதங்களுக்குப் பிறகு...

வினோத் – கீர்த்திகா திருமண விழாவில்...

அந்தத் திருமண மண்டபத்தில் ஒவ்வொருவரும் பரபரப்பாய் இருக்க... மணமகள் அறையில் கீர்த்திகாவிற்கு அலங்காரத்திற்கு உதவி செய்து கொண்டிருந்தாள் கீர்த்தி...

மதுவுக்குக் கை நடுக்கம் இருந்த காரணத்தால் எந்த வேலையும் செய்யவில்லை...

மதுவைப் பாலா அடிக்கடி கீர்த்தனாவோடு போய்ப் பார்த்தான்... மது அப்பா ஒன்றும் சொல்லவில்லை... மது.... கீர்த்தனா இருவரும் அதிகம் நெருங்க முடியவில்லை... என்னதான் இருவரும் பேசினாலும்... ஒரு இடைவெளி இருவருக்கும் இருந்தது என்பதே உண்மை... இதில் பாலா - கீர்த்தனா கடந்த காலம் வேறு கீர்த்திகா மூலம் மதுவுக்குத் தெரிய... பாலா நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டான் மதுவிடம்...

கண்டிப்பாக... திரும்பி வரும் போது அவன் மதுவின் பாலாவாக இருந்திருந்தால் கூட... தானே அவனைக் கீர்த்தனா கூடத்தான் வாழச் சொல்லி இருப்பேன்... என்று கூறி அவனுக்குப் பெரிய அர்ச்சனையே வழங்கி இருந்தாள்...

பாலா கீர்த்தனாவோடு சந்தோசமாக வாழ்வதில்... இன்று கீர்த்திகா... வினோத் திருமணத்தில் என்று காலம் தந்த மாற்றத்தை சந்தோசமாக ஏற்றுக் கொண்டாள்.

கீர்த்திகா தனக்குத் தாயின் பாசத்தைக் காட்டிய தன் தோழிக்கு மிகவும் ஆதரவாய் இருந்து அவளை மெல்ல மெல்லப் போதைப் பழக்கத்தில் இருந்து வெளியேற எல்லா உதவியும் செய்து கொண்டிருந்தாள்... மதுவும் பெரிய முன்னேற்றம் அடைந்திருந்தாள்.

கீர்த்தனாவுக்குத்தான் வேலை... ரெண்டு வீட்டுப் பக்கமும் வேலை பார்த்தாள் அவள்.

இதில் அவளுக்கு 4 மாதம் வேறு என்பதால் மார்னிங் சிக்னெஸ் அதிகமாக இருந்தது...

இருந்தாலும் அங்கும் இங்கும் என்று ஓடிக் கொண்டிருந்தாள்.

இதில் அவள் கவனிக்காமல் விட்டது அவள் கணவனைத்தான்... அவள் அவனிடம் தனியாகச் சிக்கவே இல்லை...

மணமகன் அறையில் பாலாவும் வினோத்தும் தீவிரமான டிஸ்கஷனில் இருக்க... கீர்த்தி வந்ததும் நிறுத்தினர்... இருவரையும் பார்த்தபடி...

"என்ன, ரெண்டு பேரும் நான் வந்தவுடனே பேசினதை ஸ்டாப் பண்ணிட்டீங்க... என்னடா திருட்டுத்தனம் பண்றீங்க...?" என்றவள்.

இருவரையும் சேர்த்துச் சொன்னதில்... தான் பாலாவையும் சேர்த்து, 'டா' சொல்லியதை யோசித்தவள்... உடனே நாக்கைக் கடிக்க...

"விடு... விடு... அப்படியே சொல்லாதவ மாதிரி சீன் போடாத..." அவனுக்குக் கிடைத்த அவள் அருகாமையில் அவள் கைகளைப் பிடித்துத் தன் அருகே நிறுத்தியவன் அவளிடம்,

"வந்த வேலையைப் பாரு... கீர்த்தி," என்றவுடன்.



"டேய் லூசு... உன்னாலதான் அவரையும் சேர்த்துச் சொல்லிட்டேன்..." என வழக்கம் போல வினோத்தை முறைக்க...

"அ... ஊனா... என் மேல தப்பு சொல்றதையே குறியா வச்சுக்கோ..." என்றவனிடம்...

"விட்டா பேசிட்டே இருப்ப நீ!" என்றபடி...தன் கையில் இருந்த பெட்டியைத் திறந்தாள். அதில் ஒரு ப்ரேஸ்லெட்.

"ஹேய் என்ன இது?" என்று கேட்க...

"அம்மா வாங்கினது உனக்காக... அவங்களுக்கு மருமகனா ஆகும் போது போடலாம் என்று... அது முடியாம போச்சு..." என்றபடியே அதை அவனுக்கு அணிவிக்க...

வினோத் கண் கலங்கினான் மைதிலி - ராகவன் பாசத்தில்...

அதைப் பார்த்த பாலா,

"என்னதான் இருந்தாலும்... மைதிலி அத்தைக்கு உன் மேல தனிப் பாசம்தான்டா... என்னைக் கொஞ்ச நாள் வில்லனாகவே பார்த்தாங்க... அவங்கள சமாளிக்கத்தான் கொஞ்சம் சிரமப்பட்டேன்..." என்றவனைப் பார்த்து முறைத்த கீர்த்தி,

"ஆமா, இவரு பெரிய சாதனை செஞ்சுட்டாரு... அதுக்கு பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறாரு..." என்று நொடிக்க...

"பின்ன உன்னைக் கல்யாணம் பண்ணியது சாதனைதானே... அது கூட சாதனை இல்லை!" என்றவன்...

வினோத் தானே இருக்கிறான் என்று,

"உன்னை என் கூட வாழ வச்சுருக்கேனே... அதுதான் என் சாதனை..." என்று கண் சிமிட்ட... கீர்த்தி வெட்கப்பட...

வினோத்தோ, "டேய், இன்னைக்கு என்னோட கல்யாணம் டா... இப்போ கூட நீங்க அலப்பறைய

கூட்டணுமா... இன்னைக்கு என்னோட நாள்... சோ... கொஞ்சம் அடங்கி... எனக்குக் கொஞ்சம் சான்ஸ் கொடுங்கடா..." என்று பாவமாய்ச் சொல்ல.

இருவரும் சேர்ந்தே சிரித்து விட்டனர்.

மணக் கோலத்தில் இருந்த கீர்த்திகாவைப் பார்த்து அனைவருக்கும் உள்ளம் நிறைந்தது. மணமகள் அறையில் அனைவரும் இருக்க, மது சாப்பாட்டோடு உள்ளே வந்தாள்... கீர்த்திகா பசியோடு இருப்பாள் என்று. கை நடுக்கம் இருந்தும் அவளுக்கு ஊட்ட ஆரம்பித்தாள்.

கீர்த்தி கண் கலங்க...

"லூசு... அழுது வடியாத... போட்டோல அசிங்கமாகப் போகுது. நீ அழகுதான்! அதுக்காக, அழுத முகத்தோட இருந்தா, யாரா இருந்தாலும் கேவலமாய்த்தான் இருக்கும்," என்று சொல்ல,

கவி, சிந்து சிரிக்க... அங்கு கலகலப்புக்குப் பஞ்சம் இல்லை.

கீர்த்திகாவிற்கு ஊட்டியபடியே இருந்த மது, கீர்த்தனாவைப் பார்க்க... கொஞ்சம் களைப்பாகத் தெரிய,

"கீது... நீ சாப்பிட்டாயா?" என்று கேட்க,

மது, பாலா சொல்வது போல் கீர்த்தனாவைக் கீது என்றுதான் அழைத்தாள். அவன் கூப்பிடுவதாலோ... இல்லை, கீர்த்தி என்று தோழியை அழைத்ததாலோ அவள் கீது என்றே கூப்பிடப் பழகி இருந்தாள்.

மதுவின் கேள்விக்குப் பதிலாய் 'இல்லை' என்று தலையாட்ட,

மது தயங்கி, பின் அவளுக்கு ஊட்டக் கை நீட்ட... கீர்த்தனா சந்தோஷமாக வாங்கிக் கொண்டாள். மதுவின் பாசத்தில் கண் அவளையு மறியாமல் கண்ணீரை வெளியேற்ற,



"அம்மா தாயே! நீ கண்ணைக் கசக்கினாய் என்றால், என் அத்தை மகன் எங்க இருந்தாலும் வந்து என்னைத் திட்டப் போறான். அவனுக்கு என்னைத் திட்டறதுன்னா அல்வா சாப்பிடற மாதிரி கீது... ப்ளீஸ்... அவன் திட்டு எனக்குத் தேவையா?" என்று போலியாய்ப் பாவமாகச் சொல்ல...

சிந்து, கவி, மணப் பெண் என அனைவரும் சிரிக்க... கீர்த்தனா அனைவரையும் முறைத்து,

"இங்க பொண்ணைக் கேலி பண்ணாம என்னை என்ன ஓட்டறீங்க...?" என்று எல்லோரையும் திசை திருப்ப, கீர்த்திகா நிலை பாவமாகியது.

சற்று நேரத்தில் பாலா, கீர்த்திகாவை மணமேடைக்கு அழைத்து வரச் சொல்ல, அங்கு வர,

மது, கீர்த்தனாவுக்கு ஊட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து அப்படியே நின்றான்... உள்ளே செல்லாமல்.

இருந்தும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, அனைவரையும் கீழே கிளம்பச் சொல்ல, அனைவரும் மணமகளை அழைத்துக் கொண்டு வெளியேற...

அனைத்தையும் சரி பார்த்தபடி கீர்த்தனாவும் கடைசியாக வெளியேறப் போக... அவன், அவளைப் போக விடாமல் பிடித்து உள்ளே இழுத்துக் கதவைப் பூட்டினான்.

**சி**றிது தூரம் சென்ற பின் சிந்து, கீர்த்தியைத் தேட...

"கீர்த்தி அக்காவை விட்டுட்டு வந்துட்டோமே... இருங்க, நான் கூட்டிட்டு வருகிறேன்..." என்று மீண்டும் போக எத்தனிக்க,

வேகமாய் அவளைப் பிடித்துத் தடுத்து நிறுத்திய மது, அவளிடம்...

"உங்க பாலா அண்ணா இருக்கார்ல... அவர் கூட்டிட்டு வந்துருவாரு சிந்து... நாம போகலாம்," என்று கூற,

இருந்தும் சிந்து தயக்கமாகவே நிற்க... கவி, சிந்துவிடம்,

"உன் பாசத்துக்கு அளவே இல்லை சிந்து... வா, வா!" என்று சிந்துவை இழுத்துக் கொண்டு சென்றவள், மதுவை நன்றியோடு, பெருமையோடு பார்த்தாள்.

தன் தோழியை... பாலாவோடான அவள் வாழ்க்கையைப் பொறாமையின்றி ஏற்றுக் கொண்ட மது, சாதாரண சராசரிப் பெண்ணாகக் கவி கண்ணுக்குத் தெரியவில்லை.

கவியின் பார்வையை உணர்ந்த மது, 'என்ன...?' என்பது போல் பார்வையால் கேட்க, கவியோ 'ஒன்றுமில்லை...' என்பது போல் தலையை ஆட்டினாள்.

தன்னோடு தனியே மாட்டிய கீர்த்தியைக் கதவோடு சாய்த்தவன்,

"என்னடி... கையிலேயே சிக்காமத் தண்ணி காட்டிட்டு இருக்க..." என்று வம்பிழுக்க,

"பாலா... விடுங்க பாலா... இது என்ன விளையாட்டு? தேடப் போறாங்க... ப்ளீஸ்!"

"சரி, சரி. விடறேன்... ஆனா எனக்குக் கொடுக்கிறதைக் கொடுத்துட்டுப் போ. மத்த எதுவும்தான் இல்லை... இது மட்டும்தான். அதக் கூடத் தராம சுத்திட்டு இருக்க..." என்று அவளின் இதழ் நோக்கிக் குனிய...

"பாலா... மேக்கப், டிரெஸ் எல்லாம் கலைஞ்சிரும். ப்ளீஸ்..." என்று தயங்க...

"இதுதானே உன் பிரச்னை..." என்றவன், அவள் மேல் படாமல்,

ஏற்கெனவே அவளை விட்டுச் சற்று விலகித்தான் இருந்தான், அவள் வயிற்றின் மேல் இடிக்காமல். இப்போது



இன்னும் விலகி, அவளை அணைத்திருந்த கைகளைக் கதவின் மேல் வைத்துத் தன்னை நிலைப்படுத்தித் தன் வேலையை ஆரம்பிக்க...

கீர்த்தியும் அவனுக்குச் சரி சமமாய் இறங்க ஆரம்பிக்க... அவளுக்கு ஆதாரம் எதுவும் இல்லாமல் போக, வேறு வழி இன்றிக் கணவனின் சட்டையைப் பிடித்து இழுத்துத் தன்னை நிலைப்படுத்தி, அவனுக்கு ஒத்துழைத்து... பின் அவனை விட்டு விலகி, வெளியேறி இருந்தாள்.

அவள் பின்னாலேயே வெளியேறிய பாலா, குனிந்து தன் சட்டையைக் கவனிக்க,

"ராட்சசி... அவ டிரெஸ் கசங்கக் கூடாதுன்னு என் சட்டையை ஒரு வழி பண்ணிட்டா..." என்று சொல்லியபடியே, நல்ல வேளையாக இதே போல் இன்னொரு பட்டுச் சட்டையும் தன் பட்டு வேஷ்டிக்காக வைத்திருக்க, அதை அணிந்து கொண்டு வெளியேறினான்.

மணமேடையை நோக்கிப் போகப் போனவன்... மது பார்வையாளர்கள் வரிசையில் அமர்ந்திருக்க, அதிர்ந்து, அவளின் அருகில் போய் அவளை மேடைக்கு அழைக்க,

"இல்ல பாலா... எனக்குக் கீர்த்தி அங்க சரியாத் தெரியல... இங்கதான் வசதியா இருக்கு, அவளோட முகத்தை... அவளோட இந்த மணக் கோலத்தைப் பார்க்க..." என்று தன் தோழியின் திருமணத்தில் நெகிழ்ந்து பேசியவளை, உடனே விட்டுச் செல்லாமல் அவள் அருகேயே அமர்ந்து விட்டான்.

சில நிமிடம் கழித்து...

"பாலா... கீர்த்தி அழகா இருக்கால்ல..." என்று தன் தோழியின் அழகில் மெய் மறந்து சொல்ல...

"ஹ்ம்ம்ம்... கீர்த்தி ரொம்ப அழகா இருக்கா!" என்று அவன் சொன்ன லட்சணமே, அவன் கீர்த்திகாவைச்

சொல்லவில்லை, அது கீர்த்தனாவை என்று புரிய, மது வேகமாகத் திரும்பிப் பார்க்க,

நினைத்தது போல, அவன் மனைவியைப் பார்த்துக் கொண்டிருக்க...

"பொண்டாட்டியையே சைட் அடிக்கிறியாடா..." என்று அவன் கையைக் கிள்ள...

"ஏய்... வலிக்குதுடி..." என்று சாதாரணமாய் அவன் அவளோடு பழகிய விதத்தில் 'டி' போட... அது அவனறியாமல் வந்து விட்டது. சொன்னதைக் கூட உணராமல், அவன் முழுக் கைச் சட்டையின் கைப் பகுதியைச் சற்று மேலே தூக்கிக் கையைத் தேய்க்க... மதுவுக்கு அவனின் 'டி' என்ற சொல் எப்படி மனதில் பட்டதோ, அதே போல் அவன் தீக்காய வடுவும் கண்ணில் பட...

"என்னடா இது...! இவ்ளோ பெரிசா எங்க போய் சுட்டுக்கிட்ட... நீ என்ன, கிச்சன்ல போய் என்ன வேலை பார்த்த...?" என்று கிண்டலாகவும் கேட்க,

சட்டென்று சட்டையின் கைப்பகுதியை இறக்கி விட்டான் பாலா.

அவளிடம் பேசாமல், மேடையில் நின்ற கீர்த்தனாவையே பார்த்தபடி இருக்க...

மதுவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டாள்... பாலா சிறுபிள்ளைத் தனமாய் கீர்த்தனாவுக்காக இந்தக் காரியம் பண்ணியிருப்பான் என்று. அதனால்...

"என்னடா... எப்படிப் பட்டுச்சு...?" என்றவளிடம்,

"ப்ச்... விடு மது... எப்படியோ தெரியாமப் பட்டுடுச்சு..." என்று அவன் சொன்ன விதமே அவனின் நிலையைச் சொல்ல...



அவளும் அதற்கு மேல் கேட்கவில்லை. ஆனால், அது வேண்டுமென்றே தெரிந்தே நிகழ்ந்திருக்கிறது என்று உணர்ந்து கொண்டாள்.

மணமேடையில் இருந்த வினோத், பாலாவையும் மதுவையும் பார்த்து முறைத்தபடி இருக்க, அவனைப் பார்த்த பாலா முதலில் குழம்பியவன், பின் அவனின் கோபம் உணர்ந்து, சிரித்தபடி...

"மது... உன் கீர்த்தி செல்லம் கழுத்துல அவ பக்கத்துல உட்கார்ந்து இருக்கிறவன் சந்தோஷமாக் கட்டணும்னா... அவன் கீர்த்தி செல்லத்துக்கிட்ட நான் போய் நிற்க வேண்டும். இல்ல... பையன் அழுதுருவான்..." என்று சொல்லியபடி, எழுந்தான் பாலா.

போன பாலாவையே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் மது. மனம் அங்கு இங்கு போய்... சரியான தீர்வைச் சொல்ல, அதன் பின் மணமக்களைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அனைவரின் ஆசிர்வாதங்களோடு... வினோத், கீர்த்திகாவின் கழுத்தில் மங்கல நாணை அணிவித்தான்.

வினோத் பெற்றோரும், கீர்த்திகாவின் பெற்றோரும் ஆனந்தக் கண்ணீர் வழிய, தங்கள் பிள்ளைகளை வாழ்த்தினர்.

**எ**ல்லாம் முடிந்து, கிட்டத்தட்ட எல்லோரும் மண்டபத்தை விட்டுக் காலி செய்ய... உறவினர் கூட்டம் மட்டுமே இருக்க... வினோத், கீர்த்திகாவை அழைத்துக் கொண்டு வெளியேறி இருந்தான். கேட்ட பெரியவர்களிடம், கோயிலுக்கு என்று சொல்லி வேகமாய் வெளியேற, வெளியே பாலா காரில் அவர்கள் இருவருக்காகக் காத்துக் கொண்டு இருந்தான்.

"எங்கே?" என்று கேட்ட கீர்த்திகாவிற்கு இருவரும் பதில் சொல்லாமல், மௌனத்தையே தந்தனர். வினோத் - பாலா

இருவர் முகமும் இறுகி இருக்க, கீர்த்திகாவும் விட்டு விட்டாள்.

மூவரும் சென்றது... ப்ரதாப் இருந்த சிறைச்சாலைக்கு. வினோத், பாலாவுக்குக் கூடத் தெரியாமல் இதைச் செய்திருந்தான். காலையில் பாலாவிடம் சொல்ல, முதலில் அனுமதிக்க மறுத்தவன், பின் அவனை உணர்ந்து, தானும் வருவேன் என்று சொல்லி, அவனோடு கிளம்பி இருந்தான். வந்து ப்ரதாப் முன்னிலையில் நின்றனர்.

ப்ரதாப், யாரோ என்று பார்க்க வந்தவன்,

கீர்த்திகாவைப் பார்த்து அதிர்ந்து, அவளையே பார்த்தபடி வர,

கீர்த்திகா அவன் பார்வையில் அரண்டாள்.

அவன் வினோத்தை வன்மமாய்ப் பார்க்க, வினோத் அலட்சியமாகப் பார்த்தபடி,

"என்னடா... இவள எந்தக் கோலத்துல அடுத்தவனோட உன்னால பார்க்க முடியாதோ... அதாவது மணமகள் கோலத்துல இருக்கா... இப்போ இவ என்னோட மனைவி..." என்று அவளை அவன் முன்னாலே தன் அருகே தோளோடு சேர்த்தவன், ப்ரதாப்பின் பார்வை கீர்த்தியின் மேலேயே இருக்க... அதைக் கவனித்த வினோத், பாலாவை அழைத்து,

"பாலா... இவளைக் கூட்டிட்டு நீ போய்க் காரில் இரு. நான் ஐந்து நிமிஷத்துல வருகிறேன்..." என்றவனைப் பார்த்துக் கீர்த்தி தயங்க,

பாலா, ப்ரதாப்பின் அருகே வந்து, "ஆதி கேஸ்ல தண்டனை அனுபவித்தும் திருந்தல நீ... இந்த முறை வெளிக் காற்றே அனுபவிக்க முடியாதுடா... அந்த அளவுக்கு ஸ்ட்ராங்கா ஃபைல் பண்ணியிருக்கோம். வெளியில வரும்போது அநேகமா எங்க பிள்ளைங்களுக்குக் கல்யாணம் பண்ணி இருப்போம்..." என்று நக்கலாகச் சொல்லி, கீர்த்திகாவை அழைத்துக் கொண்டு வெளியேற,



"பாலா... வினோ... அவனோட... பயமா இருக்கு..." என்று தயங்க,

"கீர்த்தி... வினோத்துக்கு ஒண்ணும் ஆகாது. அவன் பேசிட்டு வருவான். அவனுக்கு எதுவும் ஆகாம நம்ம ஆதி பார்த்துப்பான்," என்று சொல்ல, வெடித்து அழுத கீர்த்தியிடம், பதறி விட்டான் பாலா.

"ஐயோ கீர்த்தி... சாரி கீர்த்தி... நான் உன்னை அழ வைக்கிறதுக்காகச் சொல்லலைம்மா... அவனுக்கு, நீ நல்லா வாழணும் என்பது கடைசி ஆசை. அதுதான் வினோத் உனக்குக் கிடைத்திருக்கிறான். அதனால அப்படிச் சொன்னேன் கீர்த்தி..." என்றவனின் வார்த்தையில் சமாதானம் ஆனாள் கீர்த்தி.

உள்ளே ப்ராதாப்பிடம்,

"என்னடா... என்னமோ மயக்கமா இருந்த பொண்ணுகிட்ட காதல் காவியம் சொன்னியாம்... மது சொன்னா... பெரிய தெய்வீகக் காதல் மாதிரிப் பேசுனியாம். உடம்பு மேல ஆசை இல்ல... மனசு மேலன்னு. நீ அவ மனசு மேல காதலையும் வைக்கல... அவ உடம்பு மேலயும் ஆசை வைக்கலடா. நீ அவ மேல வெறி வெச்சிருந்த... அவ்வளவுதான். உன் பக்கத்துல அவ இருக்கணும்... அது மட்டும்தான் உனக்கு வேண்டும்.

"அவ மனசை நேசித்து இருந்தாய் என்றால், அவ சந்தோஷமான வாழ்க்கையை மட்டும் நினைத்து, அவ வாழ்க்கையில இடையூறு செய்ய மாட்ட... தன்னோட மனசுக்குப் பிடிச்சவங்க நல்ல இருக்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள், அவங்கள உண்மையா நேசிச்சவங்க. ஆதி அவளை உண்மையா நேசிச்சான்டா... அதுதான் தான் போனாலும் கீர்த்தியை இன்னொரு வாழ்க்கை வாழ வைக்கணும்னு மது கிட்ட சத்தியம் வாங்கினான். அதுதான்டா உண்மையான காதல்.

"அதோடு மட்டுமில்லை... உனக்கு கீர்த்திகா மேல வேற எந்த ஆசை இல்லேன்னும் தெரியும். ஏன்னு சொல்லவா... இந்த ஐந்து வருஷத்துல நீ நினைச்சிருந்தா... அவளை அடையணும்னு நினைச்சிருந்தால் அடைஞ்சிருக்கலாம். அதையும் செய்யலை. ஆக மொத்தம் மது சொல்வது போல நீ ஒரு சைக்கோடா... உனக்கு பனிஷ்மெண்ட் இந்த ஜெயில் வாழ்க்கை இல்லை... எங்க ரெண்டு பேரோட சந்தோஷமான வாழ்க்கையும்தான். இந்த ஜெயில்ல இருக்கிறவரை கீர்த்தியோட மணக்கோலம்தான்டா உனக்குத் தண்டனை..." என்றவன், அங்கிருந்து கிளம்ப ஆரம்பித்தான்.

கடைசியாக அவனிடம்,

"இன்னொரு தடவை அவ மனசை நேசித்தாய் என்று சொன்ன... தொலைச்சிடுவேன் உன்னை. அவளை விதவைக் கோலத்துல கூடப் பார்த்துச் சந்தோஷப்பட்ட கேவலமானவன்டா நீ... நீ என்ன வேணும்னாலும் என்னைப் பண்ண ட்ரை பண்ணிக்கோ. பட், உனக்கு அது தோல்வியிலதான் முடியும். ஏனென்றால், எனக்கு ஆதியோட ஆசிர்வாதம் இருக்கு. அது என்னை நிச்சயம் காப்பாற்றும்," என்று மனமாரச் சொல்லி, ப்ரதாப்பை விட்டு வெளியேற,

ப்ரதாப்புக்கு அவன் சொன்னதெல்லாம் மனதில் ஏறவே இல்லை. கீர்த்தியின் மணக்கோலம் கண் முன்னே நிற்க... தாங்க முடியாமல் கம்பியிலேயே தன்னை முட்டிக் கொள்ள ஆரம்பிக்க... அவன் என்றும் மாறப் போவதில்லை. ஆனால் வெளியே வரும்போது அவன் முற்றிலும் பைத்தியக்காரனாய்த்தான் வருவான் என்பது திண்ணம். பைத்தியங்களுக்கு எங்கு இடமோ அங்குதான் அடுத்து அவன் போவான். இதுதான் அவனுக்குத் தண்டனையாக விதி நிர்ணயித்து இருந்தது.



வெளியே வந்த வினோத்திடம் ஓடிச் சென்றாள் கீர்த்தி. அவனின் தைரியத்தினால் இப்போது அவளின் விழிகளில் ப்ரதாப்பினால் இருந்த கலவரம் நீங்கி, காதல் மட்டுமே இருக்க, அதை ஆசையோடு தன் கண்களில் நிரப்பினான் வினோத்.

இங்கு ப்ரதாப்பிடம் பேசி... தன் காதலியின் பயத்தை நீக்கி, தன் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை சந்தோஷமாகத் தொடங்கிய சந்தோஷத்தில் வினோத் இருக்க,

மதுவோ திருமண மண்டபத்தில் வேறு ஒரு சாதனையைச் செய்தாள். அது... 30 வருடமாய்த் தன் தந்தையின் பிடிவாதத்தை அசைத்திருந்தாள்.

பாலா சொன்ன... அவனறியாமல் சொன்னான்தான்... 'டி' என்ற வார்த்தையில் மது மனம் சற்று ஆடி, மீண்டும் சமநிலைக்கு வந்திருந்தது. ஆனால், இது அவனருகில் எப்போதாவது மீண்டும் சாய்ந்து விடுமோ என்று அஞ்சியவள், அது நடக்கக் கூடாதென்றால்... அவனை விட்டுத் தள்ளியே இருக்க வேண்டும் என்று முடிவு செய்தவள், தான் சிகிச்சை பெற்று வரும் மறுவாழ்வு மையத்தின் தலைமைக்கு உடனே தொடர்பு கொண்டாள்.

அவர்கள், மதுவின் அதி ஈடுபாட்டுடன் கூடிய ஒத்துழைப்பைப் பார்த்து... அதில் வென்றதையும் பார்த்து ஆச்சர்யத்தில் மூழ்கி, அவளை வெளிநாடுகளுக்கு இவளைப் போல் போதை மருந்துக்கு அடிமையாகி இருக்கும் மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்க முடியுமா என்று கேட்டிருந்தனர். முதலில், யோசிக்க வேண்டும் என்று சொல்லி இருந்தவள், இப்போது உடனே தன் சம்மதத்தைச் சொல்லி விட்டாள்.

தன் தந்தையிடமும் அவள் முடிவைச் சொல்ல... கண் கலங்கி விட்டார் ராஜன்.

"அப்பா... ஐந்து வருஷம் தனிமைல இருந்தப்ப, அவன் நினைவு என்னைப் பாதிக்கலப்பா. ஆனா அவன் பக்கத்தில் இருக்கும்போது பயமா இருக்கு, என்னை அறியாம என் கண்ல காதல் வந்துடுமோன்னு... அது மட்டும் நடந்துச்சுன்னா... பாலா சத்தியமா நிம்மதியா இருக்க மாட்டான்பா... அந்தப் பொண்ணும் நிம்மதியா இருக்க மாட்டாப்பா. நான் இனிமேல் இப்படியே இருக்கப் போறேன்னு சொல்லல... ஒருவேளை நான் உங்க மகளா மட்டும்தான் இருக்கணும் என்பது விதின்னா... அதை சந்தோஷமா ஏற்றுக் கொள்வேன். அதே நேரத்தில, என் மனசு இன்னொருத்தன் கிட்டப் போனாக்கூட அதை மறைத்து வைக்க மாட்டேன். கண்டிப்பா அதை ஏற்றுக் கொள்வேன். இப்போ சொன்ன ரெண்டும் நடந்தா யாருக்கும் பாதிப்பு இல்ல... ஆனா நான் முதலில் சொன்னது நடந்தா... அதனால, நான் போறேன் அப்பா..." என்று சொல்ல,

"அதுக்கு எதுக்கும்மா எங்களை விட்டெல்லாம் போற... எங்க கூட வந்து இரு... என்னால உன்னை விட்டு இருக்க முடியாதும்மா," என்று சொன்னவரைப் பார்த்துச் சிரித்தாள் மது.

"ஏன்பா இருக்க முடியாது? என்னை நீங்க கண்ணே மணியேன்னெல்லாம் கொஞ்சி வளர்க்கலப்பா. ஆனா நீங்க உங்க தங்கையை அப்படி வளர்த்தீங்களாம்... அம்மா சொன்னாங்க. அவங்களை விட்டே பிரிஞ்சு இருக்கல... அதுவே உங்களுக்குக் கஷ்டம் இல்லாதப்ப... என்னைப் பிரிவதற்கும் கஷ்டம் இருக்காதுப்பா!" என்று அவரைக் குறி பார்த்து அடிக்க,

மனதில் அடி வாங்கிய மனதோடு அவளைப் பார்க்க...

அவரின் பார்வையில் கலங்கிய மது,

"அப்பா... நான் குத்திக் காட்டலப்பா... இப்போ கூட அத்தை கூடப் பேசுங்கன்னு சொல்லல... அது உங்க



தன்மானம். அதில் நான் குறுக்கே வரவில்லை. என்னைப் பிரிய முடியாதுன்னு சொன்னீங்கல்ல... அதுக்குப் பதில்தான் அது. அவ்வளவுதான்," என்றவள், சில நிமிடம் யோசித்து,

"ஆனா அப்பா... ஒருவேளை அத்தையைத் தள்ளி வைக்காம இருந்திருந்தா... பாலாவும் நானும் சேர்ந்திருப் போமோ... இத்தனை வருஷம் அவங்க தவிச்சிட்டு இருக்கிற தவிப்புதான் என் மூலமா உங்களுக்குக் கிடைத்து விட்டதோ?" என்று மகள் எங்கோ பார்த்த விழிகளோடு கலங்கிச் சொல்ல, அவளை அணைத்துக் கொண்டு குலுங்கி அழ ஆரம் பித்தவர்,

அடுத்த அரை மணி நேரத்தில் அருந்ததியோடு, தன் வைராக்கியத்தை விட்டு, அவளோடு பேச ஆரம்பிக்க, அங்கு சந்தோஷம் குலுங்க ஆரம்பித்து இருந்தது.

அருந்ததியின் சந்தோஷத்தைப் பார்த்து, ஜெகநாதன் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தார். என்ன... தன் மகன் தன் மருமகளுக்குச் செய்த காரியம் மட்டும் இன்னும் தெரியாத அப்பாவியாகத்தான் இருந்தார் அவர்.

மீண்டும் மண்டபத்துக்கு வந்த பாலாவுக்கு இது இன்ப அதிர்ச்சியாய் அமைய, தன் மாமாவிடம் மனமார நன்றி சொல்ல... அவர், மதுதான் இதற்குக் காரணம் என்று சொல்லித் தன் நன்றியை அவள் புறம் திருப்ப...

"மாமா... மதுவுக்கு நான் சாரி சொன்னாலோ... இல்லை தேங்க்ஸ் சொன்னாலோ பிடிக்காது மாமா..." என்று கிண்டலாகச் சொல்ல...

மது அவனைப் பார்த்துச் சிரித்தபடி,

"அது அப்போ... இப்போ எனக்கு ஒழுங்கு மரியாதையா தேங்க்ஸ் சொல்லுடா!" என்று சொல்ல,

"ஓ... அப்ப சரி, நீ என்னை அத்தான்னு சொல்லு, என் மாமா மகளே! நானும் தேங்க்ஸ் சொல்கிறேன்," என்று பதிலுக்குச் சொல்ல,

கீர்த்தனா... கவி, சிந்துவோடு சற்றுத் தள்ளி அமர்ந்திருக்க... ஆனால் இவர்கள் பேசுவதை எல்லாம் கேட்டுக் கொண்டேதான் இருந்தாள்.

கவி, சிந்துவைப் பார்த்து, "என்ன சிந்து... இன்னைக்குப் பார்த்ததுல இந்தக் கவி அக்காவுக்கு எதுனாச்சும் செட் ஆகிற மாதிரி இருந்ததா?" என்று சிந்துவைக் கூட்டணி சேர்த்துப் பேசிக் கொண்டு இருந்தாள்.

கீர்த்தி, சிந்துவைப் பார்த்து, அனல் பார்வை பார்க்க,

சிந்து அலறினாள்.

"கீர்த்தி அக்கா... சத்தியமா நான் அப்படியெல்லாம் பண்ணலை. கவி அக்கா பொய் சொல்றாங்க..." என்றபோது,

"பொழச்ச... நீ மட்டும் இவளை மாதிரி எதுனாலும் பண்ண ஆரம்பிச்ச... தொலைச்சிடுவேன். இவளை என்னால திருத்த முடியாது. அது அவளுக்கு வரப் போறவன் பாடு..." என்றபடி மீண்டும் பாலாவைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

இப்போது பாலாவும் கீர்த்தியைப் பார்க்க...

தன் கண்களாலே போர் முழக்கத்திற்கான செய்தியை அவனுக்கு அறிவிக்க...

"ஓ.கே. என் மேலிடம் கொஞ்சம் டென்ஷன் ஆகுது. நான் உத்தரவு வாங்கிக் கொள்கிறேன் இந்த அவையிலிருந்து..." என்று நகர்ந்தவனைப் பார்த்து அருந்ததி, மது, வினோத், கீர்த்திகா உள்ளிட்ட அனைவரும் சிரிக்க...

இப்போது பாலா, கீர்த்தனாவின் அவையில் இருந்தான்.

**கா**ரைப் பாலா ஓட்ட, கீர்த்தி அருகில் இருக்க, பின்னால் கீர்த்திகாவும் வினோத்தும் வர, வினோத் இல்லத்திற்குச் சென்று கொண்டிருந்தனர்.

கீர்த்தி பின்னால் திரும்பி, வினோத் மற்றும் கீர்த்திகாவிடம் பேசிக் கொண்டே வந்தாள்.



வினோத்தும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். ஒரு கட்டத்தில் தாங்க முடியாமல் பாலாவுக்கு மெஸேஜ் அனுப்பியே விட்டான்.

'டேய்... உன் பொண்டாட்டியை முன்னால திரும்பச் சொல்லுடா... அவனவன் இருக்கிற நிலைமை தெரியாம... ஏன்டா... உன்னை நான் கூப்பிட்டேனாடா, எங்களுக்கு டிரைவ் பண்ணுன்னு...' என்று அனுப்ப,

'இந்த அவமானம் தேவையாடா பாலா...!' என்று பாலா நொந்து போனான்.

பின்னால் திரும்பி வினோத்திடம் கண்களாலேயே மன்னிப்புக் கேட்டுவிட்டு...

"கீர்த்தி... முன்னால் திரும்பி உட்கார்," என்க,

"பேசிட்டு இருக்கேன்ல பாலா... வினோத் தப்பா நினைச்சுக்கப் போறான்..." என்று சொல்ல,

அவனுக்கு எங்கேயாவது முட்டிக் கொள்ளலாம் போல இருக்க... அதற்கும் வழி இன்றி,

"என் பக்கத்தில வாங்க செல்லம்... ஒண்ணு சொல்லணும் உன்கிட்ட..." என்றவனிடம்,

"என்ன பாலா..." என்று அவனின் அருகே நெருங்கிப் போக...

அவள் மேலும் தவறு சொல்ல முடியாது. பாலா தனிமையில்தான் சீண்டுவானே தவிர, தங்களைத் தவிர வேறு யார் இருந்தாலும் கொஞ்சம் தள்ளியே இருப்பான். கீர்த்தி சற்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருக்கும் போதுதான் அவன் மற்றவர்களைப் பார்க்க மாட்டான். அதனால் பாவம் அவன் மனைவி... வினோத்தையும் தன் கணவன் போல் என்று எண்ணி விட்டாள்.

"உனக்கும் எனக்கும் மேரேஜ் நடந்துச்சுல்ல... அது மாதிரி இல்ல இது... நீயும் நானும்... நீ வடக்கே... நான்

தெற்கேன்னு பார்த்துட்டு இருந்தோம். அவங்களை விடறியா... இங்க பாரு..." என்று வினோத் அனுப்பிய மெசேஜைக் காட்ட...

'ச்சேய்... கீர்த்தி! உனக்கு அறிவுன்னு ஒண்ணு இல்லையாடி...' என்று தன்னைத்தானே கடிந்து கொண்டவள், அதன் பின் பின்னால் திரும்புவாளா என்ன?

அதன் பின் வினோத் பாடு கொண்டாட்டம் ஆகி இருக்க... கீர்த்திகாவின் பாடு திண்டாட்டம் ஆகி இருந்தது.

வினோத் மற்றும் கீர்த்திகாவின் அன்றைய இரவுக்கான ஏற்பாடு பாலா - கீர்த்தியிடம் விடப்பட்டிருக்க... கீர்த்தனா, வினோத் அறையில் எல்லாவற்றையும் சரிபார்த்து விட்டுக் கீர்த்திகாவிடம் சென்று அவளை அனுப்பப் போக, இடையில் பாலா வந்து,

"கீர்த்தி... போகலாமா... வினோத் கீழே இருக்கான், சொல்லிட்டுப் போகலாம் வா!" என்று அழைக்க,

"கீர்த்திகாவைப் பேசி அனுப்பி வெச்சுட்டு அத்தை வரச் சொன்னாங்க பாலா..." என்று அவள் சொல்லி முடிக்கவில்லை...

"அய்யய்யோ... நீ அவளை அனுப்பி வைக்கவா... நீயே இன்னும் ABCD விட்டுத் தாண்டல... வினோத் பாவம்டி... நீ எதுனாலும் சொல்லி, அவ வினோத்தை விட்டுப் பத்தடி தூரம் தள்ளிப் போகப் போறா... வந்துரு தாயே! வினோத்தே அவளைச் சமாளிச்சுக்கட்டும்... வா!" என்று இழுத்தபடி வர,

"என்னது..." என்று விழித்தவள்,

"ABCD தாண்டாமத்தான் அம்மா ஆகி இருக்கேன் பாருங்க..." என்றவளின் பேச்சை எல்லாம் கேட்காமல் மனைவியை அழைத்துக் கொண்டு,

வினோத்திடம் சொல்லி விட்டுக் கிளம்பினான் பாலா.



வினோத், கீர்த்திகா இருந்த அறைக்குச் செல்ல, அங்கு அவள் கீர்த்தியை எதிர்பார்த்துத் திரும்ப, ஆனால் வினோத் நின்றிருக்க...

"கீர்த்தி எங்கே?" என்று கேட்க,

"ரொம்ப முக்கியம்... இப்போ அவள் எங்கே போனா என்ன? அவ புருஷனோட கிளம்பிட்டா..." என்றவன், மோகத்தோடு அவள் அருகில் நெருங்கினான்.

அவனைப் பார்த்தபடியே...

"ஓ..." என்றவளின் உதடுகள் என்ன சொல்ல வந்ததோ, அதற்கு மேல் அனுமதி மறுக்கப்பட்டு, வினோத்தால் சிறை செய்யப்பட...

கீர்த்திகா முதலில் தயங்கி, பின் அதில் அடங்க... அதன் பின் அவன் அவளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றவன்... துணைவனாய் ப்ரதாப்பினால் அவள் கொண்ட அச்சத்தை நீக்கியவன்... கணவனாய் அவர்கள் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தை மனைவியிடம் எழுதத் தொடங்க ஆரம்பித்து இருந்தான்.

**வீ**ட்டுக்கு வந்த பாலாவுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. ராஜன் தன் மனைவி மகளோடு வந்திருந்தார்.

வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தபோதே, மகள் இழந்த வாழ்க்கை அவரை உறுத்த, மதுவோ சாதாரணமாகத்தான் இருந்தாள். ஆனாலும்... தலை கீழாய் மாறிய தன் வாழ்க்கையை இனி நினைத்து யாருக்கு என்ன லாபம்? துக்கம்தான் மிச்சம் ஆகும்.

இந்த வீடு, அவள் அத்தை வீடு... அவ்வளவுதான்! அதற்கு மேல் அவளும் இனி நினைக்க முடியாது. நினைக்கவும் கூடாது. இதில் தெளிவாக இருந்ததால், அவள் குழம்பவில்லை.

பாலாவும் - கீர்த்தியும் வீட்டிற்குள் நுழையும்போது... அனைவரும் ஹாலில் பேசிக் கொண்டிருக்க... பாலாவும் கீர்த்தியும் அதில் ஐக்கியமாகினர். பாலா இடையிலேயே வேலை இருக்கிறது என்று கிளம்பி விட, கடைசியில் மதுவும் கீர்த்தனாவும் மட்டுமே இருந்தனர்.

மது, கீர்த்தனாவிடம்,

"நீ தூங்கப் போ கீது... நான் கொஞ்ச நேரம் டி.வி. பார்த்து விட்டுப் போகிறேன்..." என்றவளிடம்,

"இல்ல... எனக்கும் தூக்கம் வரவில்லை..." என்று அமர்ந்து விட்டாள்.

பாடல்கள் ஓடிக்கொண்டே இருந்தன. இருவரின் கண்கள் மட்டும் அதில் பதிந்து இருக்க... கீர்த்தி மனமும் மதுவின் மனமும் அலை பாய்ந்து கொண்டிருந்தது.

மௌனம் மட்டுமே ஆட்சி செய்து கொண்டிருந்தது அங்கே.

திடீரெனக் கீர்த்தனாவின் மொபைல் அழைக்க... பாலாதான் அழைத்திருந்தான்.

"தூக்கம் வரல பாலா..." என்றவளிடம், என்ன சொன்னானோ தெரியவில்லை...

"மது இருக்காங்க... தூக்கம் வந்தா வர்றேன்..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் கீழே வந்து விட்டான்.

"கீர்த்தி... தூங்க வா. படுத்தா தானா தூக்கம் வரும்," என்று அழைத்தவன்,

"மது... நீயும் தூங்கப் போ. இப்படியே பழக்கப்படுத்திக்காதேம்மா..." என்று சொல்ல,

"இல்ல பாலா... இன்னும் ஒரு அரை மணி நேரம்... ப்ளீஸ்..." என்றவளை விட்டு விட்டான்.



கீர்த்தியைப் பார்க்க...

அவளோ பாலாவைப் பார்க்கவே இல்லை. பார்த்தால்தானே வரச் சொல்வான். அதனால் டி.வி.யைப் பார்த்தபடியே இருக்க...

'உடம்பெல்லாம் திமிரு... மேலேதானே வரணும்...' என்று மனதுக்குள் புலம்பியபடி,

வெளியே...

"என்னமோ பண்ணுங்க..." என்று மேலே ஏறிப் போய்விட்டான். அவனுக்கு மதுவை நினைத்தும் கீர்த்தியை நினைத்தும் எந்தவொரு பயமும் இல்லை. அதனால் அவனுக்குக் குழப்பமும் இல்லை. அறைக்குப் போனவன் தூங்கியே போனான்.

அவன் போன பிறகு கீர்த்தி, மதுவின் அருகில் வந்தாள்.

"மது..." என்று அழைக்க,

"கீது... ப்ளீஸ்... பாலாவைப் பற்றி மட்டும் என்கிட்டப் பேசாதே... வேற எது வேண்டும் என்றாலும் பேசு!" என்றவளின் கண்களில் கண்ணீர் கரை புரண்டது.

"மது... அழாதீங்க மது... உங்க கஷ்டம் எனக்கு மட்டும்தான் தெரியும். நீங்க பாலா கிட்ட அவர் நல்லா இருக்க வேண்டுமென்றுதானே அப்படிச் சொன்னீங்க..." என்றவளின் கண்களும் அருவியைப் பொழிய...

மதுவால் அதற்கு மேல் முடியவில்லை.

கீர்த்தியிடமே கொட்ட ஆரம்பித்தாள் மது.

"உனக்கு மட்டும்தான் தெரியும் கீது... நான் என் வாழ்க்கையில இழந்ததோட அருமை..." என்றவள், கீர்த்தியின் மடியிலேயே விழுந்து அழத் தொடங்க,

சற்று நேரம் கழித்து, அவளாகவே தன் கண்களைத் துடைத்தவள், தன்னை நிலைப்படுத்திப் பேச ஆரம்பித்தாள்.

"சாரி கீது... ஆனாலும் நான் இப்போ சந்தோஷமா இருக்கேன். என் காதல் உன்னை மாதிரி ஒரு பொண்ண அவனுக்குக் கொடுத்திருக்கே! அவன் தப்பு செய்தாலும் அவனை மன்னிச்சு ஏத்துக்கிட்டதுக்கு தேங்க்ஸ் கீது... நீ... இது எனக்கான வாழ்க்கைன்னு அவனோட வாழாம இருந்தேன்னு கீர்த்தி சொன்னா... இன்னைக்குப் பாலா கையில இருந்த காயத்தைப் பார்த்தேன். அவன் சொல்லலை. ஆனா, அது அவன் உன் கிட்ட தன் காதலை நிருபிக்கப் போராடியிருக்கான்னு எனக்குச் சொல்லாமச் சொல்லிடுச்சு. அவன் ரொம்ப நல்லவன் கீது. கோபம் மட்டும் கொஞ்சம் அதிகமா வரும். இப்போ அது இல்லைன்னுதான் நினைக்கிறேன்..." என்றவள்,

"எனக்குப் பாலாகிட்ட அதிகம் பிடித்தது அவன் கோபம்தான். ஆனா... அது கூட இப்போ அவன் கிட்ட இல்லை. மொத்தத்தில் இப்போ இருக்கிற பாலா... நான் காதலித்த பாலா கிடையாது. அவன் கீர்த்தனாவோட கணவன். அததான் இப்போ அவனிடம் அவன் ஒவ்வொரு அசைவிலும் நான் உணர்வது கீர்த்தி. நானே அவன் வேண்டாம் என்று சொன்னேன்தான். ஏன்னா... இப்போ என் உடம்பிலே இருக்கிற ரத்தம் முழுவதும் போதை மருந்துகளின் கலப்படம். கீது... என்னால அவனுக்கு..." என்று தடுமாறியவள்,

"இதனால்தான் கீர்த்தி... அன்று அவனிடம் அவன் பேசுவதற்கும் முன் அவனை நான் நிராகரித்தேன். மது, அவன் மனசைப் புரியாமல் எல்லாம் இல்லை. நீ சொன்ன மாதிரி அவன் என்னை விட்டிருக்க மாட்டான்தான், என் பாலாவா இருந்திருந்தா. ஆனாலும் போராடி இருந்திருப்பேன். அவன் வாழ்க்கைல இன்னொரு தேவதையைக் கொண்டு வர... இப்போ அந்தக் கவலை இல்லை எனக்கு... ஆனால் என் காதலே அவனுக்கு



உன்னைத் தேடித் தந்து விட்டது. அந்தச் சந்தோஷம் போதும் கீர்த்தி. என் காதல் உன்னை மாதிரி ஒரு பெண்ணை அவனுக்குத் தேடித் தந்து அதோட முழுமையை அடைந்து விட்டது. இனி எனக்கான வாழ்க்கை... என்னை மாதிரிப் பாதிக்கப்பட்டவங்களுக்கு என்னால் ஆன உதவிகளைச் செய்து, அவர்களின் வாழ்க்கையைத் திருப்பித் தருவதுதான். தென்...

"என் அப்பா கிட்டச் சொன்னேன்... இன்னொருத்தன என் மனசு விரும்பினா கண்டிப்பாச் சொல்வேன்னு. என்னைப் பொறுத்த வரை என் காதல் தோல்வி அடையவில்லை கீர்த்தி. தோல்வி அடைந்தால்தானே இன்னொரு உறவைத் தேடும். அது நடக்க வாய்ப்பே இல்லை என்றுதான் நினைக்கிறேன். தெரியவில்லை... காலம் எனக்கு என்ன வைத்திருக்கிறது என்று. அதே போல் அவனை நினைத்துக் கொண்டும் நான் இருக்கப் போவதில்லை. கடந்த ஐந்து வருடத்தில் நான்கு வருடமாக என் மனதில் அவன் நினைவைச் சிறு புள்ளியாகக் குறுக்கி விட்டேன். ஆனால் இப்போது அவனருகில் அது வளர ஆரம்பித்து விடுமோ என்று பயமாய் இருக்கிறது கீது. அதனால்தான்..." என்றவள்,

"கண்டிப்பா நீ என் வாழ்க்கையை வாழலை கீர்த்தி. என் மூலம் உனக்கு நல்ல வாழ்க்கை கிடைத்திருக்கிறது... அவ்வளவுதான். இதைப் புரிஞ்சுக்கோ... உன் பாலா உன் மூலமாத்தான் காதலை அனுபவிக்கிறான். இப்போ அவனோட சகலமும் நீதான் கீர்த்தி. நான் அவனை விட்டுப் போனப்ப என் நினைவுகள்தான் அவனைத் துடிக்க வைத்தது. ஆனால் நீ போனால், அவன் உயிரே அவனை விட்டுப் பறந்து விடும்..." என்றவளிடம்,

கீர்த்தனா...

அவள் கையை எடுத்துத் தன் கையோடு வைத்தவள்,

"தேங்க்ஸ் மது... இதைத் தவிர எனக்கு எதுவும் சொல்லத் தெரியவில்லை. நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்கல்ல மது... சப்போஸ்... இந்தப் போதை மருந்து விஷயம் இல்லை என்றால்... பாலா விஷயத்தில் உங்க முடிவு என்னவா இருக்கும் மது...?"

மது சிரித்தாள்.

"எல்லாப் பக்கமும் உன் காதலை ஸ்ட்ராங்கா ஆக்கணுமா கீர்த்தி... ம்ம்ம்... கொஞ்சம் கஷ்டம்தான். பட் மனசைத் தேத்திப்பேன். அது மட்டும் இல்லை... இன்னொருத்தி புருஷன்னு தெரிஞ்ச பின்னால்... அவன் பின்னால் போக நான் என்ன லூசா... இல்லை, அந்த ப்ரதாப் மாதிரி சைக்கோவா?" என்று கண் சிமிட்ட,

"அப்போ... நீங்க ரொம்ப ஃபீல் பண்ண மாட்டீங்களா மது...?" என்று தன் மனப் பாரமெல்லாம் நீங்கி சந்தோஷமாய்க் கேட்க,

அவளைத் தலையில் செல்லமாகத் தட்டியவள்,

"மதுவோட பாலாவைக் கீர்த்தனா மாற்றலாம். ஆனா கீர்த்தனாவோட பாலாவை... மது என்ன... கீர்த்தனாவே நினைத்தாலும் மாற்ற முடியாது. பொண்டாட்டி மேல தலைவருக்கு அவ்ளோ ஸ்ட்ராங் காதல்..." என்றவள், அவளுடைய மாங்கல்யத்தை எடுத்தவள், "இது என்னோட நினைவைச் சொல்லலாம். ஆனா அதனோட உரிமை உனக்கு மட்டும்தான் கீது..." என்று புரிய வைக்க முயல,

"அதை நான் எப்போதோ உணர்ந்து விட்டேன் மது. இப்போது நீங்களும் இதனால வருத்தப்பட்டாலும், அதை ஏத்துக்கிற மனப்பக்குவம் உங்களுக்கு இருக்கு. அது போதும் மது எனக்கு..." என்றவள், தலை சாய்த்து,

"ஆனா... எனக்கு இன்னொரு சந்தேகம் மது..." என்றவளை,



"பாவம் பாலா..." என்றவளைச் செல்லமாக முறைக்க,

"சொல்லு... அதையும் தீர்த்து வைக்கிறேன்!" என்றவளிடம்,

"அன்னைக்கு... அதாவது ஊட்டியில பார்த்த அன்று... நீங்க ஏன் எதுவும் பேசாமல் அவனோடு போனீர்கள்?" என்றவள், அவளாகவே,

"நான் மாட்டிக்கக் கூடாது என்றா?" என்று கேட்க,

தலையை மட்டும் ஆட்டியவளிடம்,

"தேங்க்ஸ் மது..." என்று சொன்னவளிடம்,

"எத்தனை தேங்க்ஸ்மா... தாங்க முடியலை. சரி, தூங்கப் போகலாமா... எனக்கும் உன் கிட்ட எல்லாம் சொன்ன பின்னால் என் மனம் மிகவும் நிம்மதியா இருக்கு..." என்றவளிடம் மனம் பூரிப்புடன் விடை பெற்றாள் கீர்த்தனா. சந்தோஷமாக மாடிப் படியை அடைந்தவள்,

"மது... ஒரு நிமிஷம்..."

மது நிற்க,

"அடுத்த ஜென்மம்னு ஒன்று இருந்தால்... நான் பிறக்காம இருந்துக்கிறேன். இந்த டீல் ஓ.கே.வா?" என்றவளிடம்...

மது அவளிடம் எதுவும் சொல்லவில்லை. ஆனால்...

'நீ பிறக்கவில்லை என்றால் உன் புருஷனும் பிறக்க மாட்டான்...' என்று நினைத்துக் கொண்டாள். மதுவுக்குப் பாலா... கீர்த்தனாவின் கணவனாக மாறி இருந்தான்.

மது, பாலாவைக் கீர்த்தனாவின் கணவனாக ஏற்றுக் கொண்டு விட்டாள். அதுவும் மிகப் பெரிய அளவில் வருத்தம் இல்லாமல் என்பதால் மனம் உற்சாகத்தில் இருக்க,

அவள் அறைக்குள் நுழைந்த வேகத்திலேயே... பாலாவும் விழித்து விட்டான்.

"ஏய்... என்னடி இப்படி ஓடி வர்ற...?" என்றவனிடம்,

"நான் ஹேப்பியா இருக்கேன் பாலா... என் கிட்ட எதுவும் கேட்காதீங்க. எனக்குத் தூக்கம் வருது. குட் நைட்..." என்றபடி, அவனது ரியாக்ஷன் என்ன என்று கூடப் பார்க்காமல் படுத்தவள், தூங்கவும் ஆரம்பித்தாள்.

'என்ன ஆச்சு இவளுக்கு... சந்தோஷம் வந்தாலும் ஓவர் எமோஷனல் ஆகுறா... துக்கம் வந்தாலும் ஓவர் எமோஷனல் ஆகுறா...' என்று குழம்பியபடி... படுப்பதைத் தவிர வேறு வழி அவனுக்குத் தெரியவில்லை.

மதுவைப் பயணம் அனுப்ப அனைவரும் வந்திருந்தனர்.

மது அனைவரிடமும் பேசியபடி இருந்தாள். நன்றாகவே தேறி இருந்தாள் அவள். கீர்த்தி – வினோத்திடம் வந்தவள்,

"வினோத்... என் கீர்த்தியைப் பார்த்துக்கங்க... அவளுக்கு ஒண்ணும் தெரியாது... அப்படி எல்லாம் சொல்ல மாட்டேன். அவ இப்போ நான் நினைத்தது போல எதற்கும் அஞ்சி, மற்றவரின் முடிவை எதிர்பார்க்கும் பழைய கீர்த்தி அல்ல. தன் சிந்தனையோடு எதையும் யோசித்து முடிவெடுக்கும் அளவிற்கு வந்து விட்டாள். சோ... நீங்க என் செல்லப் பொண்ணு கிட்ட பத்திரமா இருந்துக்கங்க..."

என்றபோது, கீர்த்தி கண் கலங்க...

"ப்ச்... கீர்த்தி, எனக்கு அழறதே பிடிக்காதுன்னு தெரியும்ல..." என்று அவளின் கண்களைத் துடைத்து விட,

"மது... அடிக்கடி வருவேல்ல மது... உன்னைப் பார்க்காம இத்தனை நாள் இருந்துட்டேன். இப்போ நீ மறுபடியும்..." என விசும்ப,

"வினோத்... இப்போதான சொன்னேன்... இவ வளர்ந்துட்டான்னு சொன்னேன். வாபஸ் வாங்கிக்கிறேன்... இவளைப் பத்திரமாப் பார்த்துக்கங்க..." என்றபோதே அனைவரும் சிரிக்க,



பாலா, கீர்த்தனாவிடம் வந்தாள் மது.

"கீது... நல்லாச் சாப்பிடு... உடம்பைப் பார்த்துக்கோ... உனக்குக் குழந்தை பிறந்தவுடனே அடுத்த நிமிடம்னு சொல்ல முடியாது... உடனே இங்க வந்து பார்க்க வருவேன். சரியா? தென்... இவனை மட்டும் நம்பிராதே... உன்னைக் கவனிக்கவே மாட்டான். ஆபீஸ் ஆபீஸ்னு அதையே கட்டிட்டு அழுவான். நீ அத்தையைப் பிடிச்சுக்கோ..." என்றவள், அருந்ததியிடம்,

"அத்தை... கீர்த்தியைப் பார்த்துக்குவீங்கல்ல... உங்க பையன் பார்த்துக்குவான்னு விட்ராதீங்க அவளை..." என்ற போது,

"ஏய்... ஏன்டி என் மானத்தை வாங்குற... வாயை மட்டும் குறைச்சிராத..." என்றவனிடம்,

"என் செல்ல அத்தான்... எனக்கு இருக்கிற ஒரே ஒரு அத்தான்... உன் மானத்தை வாங்குவேனாடா!" என்று சொல்ல,

பாலா, கீர்த்தியைப் பார்க்க,

அவளோ, "மது... உன் அத்தான் பாவம்... அவரை விட்ருங்க ப்ளீஸ்... வாயில்லாப் பூச்சி அவர்..." என்க,

"யாரு இவன்... ஆனா கீது... இவன் உன் கிட்ட மட்டும் ஏன் இந்த நடிப்பு நடிக்கிறான்னு தெரியலை... ஆனா, ஏமாந்துடாத..." என்றவள்,

பாலாவிடம் வந்தாள். வரும்போதே அவள் முகம் மாறி இருந்தது. எவ்வளவுதான் மறைத்தாலும் முகம் காட்டியது.

"வரவாடா..." என்று உள்ளே போன குரலில் சொல்ல...

"ஹ்ம்ம்... பார்த்து... பத்திரம்... அடிக்கடி போன் பண்ணு மது... எனக்கும் கீர்த்தனாவுக்கும்..." என்று பாலா தெளிவாய்ச் சொல்ல,

மதுவும் நார்மல் ஆனாள்.

"சரி பாலா... கீர்த்தி அப்பா அம்மா இல்லாத பொண்ணு... நீதான் அவளுக்கு எல்லாம்... மறந்துடாத..." என்றவள், அவள் கிளம்பும் நேரம் வந்திருக்க,

இறுதியில் தன் பெற்றோரிடம் பேசியபடி...

அனைவரிடமும் விடைபெற்று வேகமாய் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

போனவள், வெகு தூரம் போய் நின்று ஒருமுறை பாலாவைத் திரும்பிப் பார்க்க... அவனோ கீர்த்தனாவோடு ஏதோ பேசிக் கொண்டிருக்க, இதழில் புன்னகையோடு திரும்பி மீண்டும் நடக்க... பாலா அவள் வாழ்க்கையில்... தொலைவில் தெரிந்த சிறு புள்ளி போல் ஆனான். அவன் அருகாமைதான் அவளுக்கு விஸ்வரூபமாய் மாற வாய்ப்பானாலும் ஆகும். அதைத் தவிர்த்து, அவனை விலக்கி, அவனைச் சிறு புள்ளியாய்க் கரைத்தாள் மது என்னும் மதுபாலா.

காலம் அவளுக்குத் தந்த வாழ்க்கையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதைப் போல... காலம் ஒருவேளை அவளுக்கு மாறுதல் தந்தால் கூட ஏற்றுக் கொள்வாள் என நம்பி... காலமும் அவளை ஏமாற்றாது என நம்பி அவளிடமிருந்து நாமும் விடை பெறுவோம்.

× × ×

அனைவரும் வீட்டுக்குத் திரும்ப அவரவர் காரில் ஏற, பாலா - கீர்த்தனா இருவரும் அனைவரிடமும் சொல்லிக் கொண்டு முன்னால் கிளம்ப...

"எங்கூடா போறீங்க...?" என்ற வினோத்தின் கேள்விக்குச் சிந்து விடை சொன்னாள்.

"வினோ அண்ணா... டுடே இஸ் வியாழக் கிழமை. சோ... ரெண்டு பேரும் அவங்க வசந்த மாளிகைக்கு எஸ்கேப்..." என்றபோது,



கவி, அவளிடம்,

"சிந்து... சும்மா தேறிட்ட போ!" என்று சிரிக்க,

குமார் இப்போதே பெண்ணை நினைத்துக் கவலைப்பட ஆரம்பித்து இருந்தான்.

**கா**ரில் கீர்த்தனா கேட்டாள்...

"மது ரொம்ப நல்லவங்கல்ல பாலா..."

பதில் சொல்லவில்லை அவன். அமைதியாகவே வந்தான். அவனின் அமைதியைப் பார்த்து அவன் முகத்தைப் பார்க்க... அது சாதாரணமாய் இருக்க... தன் குறும்பை ஆரம்பித்தாள் அவனிடம்.

"ஆக்சுவலா பாலா... பிரம்மன் உங்களைப் படைத்தவுடன் மதுவைத்தான் உங்களுக்கு நேரா படைத்திருப்பார். மதுவைப் படைத்து முடித்த பிறகு... இவ்ளோ நல்ல பொண்ணு இவனுக்கான்னு யோசிச்சிருப்பார். பக்கத்துல நான் இருந்திருப்பேன்... இது போதும் இவனுக்குன்னு சேர்த்து வெச்சிட்டாரு போல..." என்றவள்,

அவன் இன்னும் பேசாமல் இருக்க,

"என்ன பாஸ்... மாமா மக போயிட்டான்னு சோகமா?" என்று விடாமல் வம்பிழுக்க,

இப்போது பேசினான்.

"மாமா மக போனா என்ன? மாமான்னு கூப்பிடறதுக்கு பொண்ணு இருக்கால்ல... அது போதும். என் தகுதி கூடி நீ எனக்குக் கிடைத்திருக்க மாட்டாய் என்றால்... அப்படி ஒரு தகுதி இல்லை என்பது எனக்கு சந்தோஷம்தான் கீது..." என்றவனிடம், அதை ஆமோதிப்பது போல,

"ஆமாம் பாலா... தங்கத்துல கூட சுத்தத் தங்கம் ஆபரணமாகாது... மது அந்தச் சுத்தத் தங்கம் போல... நான் செம்பு கலந்த தங்கம் போல... நான் கொஞ்சம் சுயநலம்

உள்ளவதான்... எனக்கு மட்டும்தான் நீங்க வேணும்னு சுயநலம். நீங்க என்னை மட்டும்தான் காதலிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. உங்க மனசுல நான் மட்டும்தான் இருக்க வேண்டும் என்ற பிடிவாதம். அது கிடைத்த பின்னால் ஓவர் சந்தோஷம்... இதுதான் நான்... கொஞ்சம் இல்ல, நிறைய குறையுள்ளவ... உண்மை அதுதானே பாலா... இந்தக் குறைகள்தான் உங்க வாழ்க்கையோட காதல் என்னும் ஆபரணத்திற்குத் தகுதியாகக் காரணம் ஆகி விட்டேன் போல..."

"ஸ்ஸ்ஸ்ஸ்.... என் பொண்டாட்டி தத்துவமாப் பேசுறாளே... இதுக்கே பரிசு கொடுக்கணுமே... பாலா, வேகமாப் போடா!" என்றவனை,

"நான் எவ்வளவு சீரியஸாப் பேசிட்டு இருக்கேன். நக்கலா உங்களுக்கு..." என்று அடித்தவள்,

அவனையே பார்த்துக் கொண்டிருக்க,

"என்னடி ரொமான்ஸ் லுக்கெல்லாம் விடுற..."

"என் புருஷன்... நான் பார்க்கிறேன். அவனுக்கு என் மேல எவ்வளவு காதல்னு பூரிப்பில இருக்கேன்..."

"அது எப்படி கீது... கோபமும் காதலும் வந்தா மட்டும்... மரியாதை எல்லாம் தூள் பறக்குது..." என்று சீண்ட,

அவன் சீண்டலில் மூழ்காமல்,

"பாலா... உண்மையிலேயே உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா பாலா...?" என்று கேட்க,

"இன்னும் பத்து வருடம் கழித்துக்கூட இந்தக் கேள்வியைக் கேட்பியா கீர்த்தனா... என் மேல நம்பிக்கையே வராதா கீர்த்தனா...?" என்று வருத்தம் சூழச் சொன்னவனிடம்,

"உங்க மேல நம்பிக்கை இல்லையா... எனக்கா... இப்போ என் காதல் மேல கூட எனக்கு நம்பிக்கை இருக்கோ



இல்லையோ, உங்க காதலை முழுவதுமாக நம்புகிறேன் பாலா... அது எனக்குக் கிடைக்க நான் பெருமைப்படுறேன் பாலா..."

சிரித்த பாலா,

"உன் காதல் மேல உனக்கு நம்பிக்கை இல்லையா? குட் ஜோக்... உன்னோட காதலோட வலிமை எந்த அளவுக்கு... என்னை எந்த அளவுக்கு மாற்றி இருக்குன்னு உனக்குப் புரிந்தும் இப்படிப் பேசுற கீர்த்தி..." என்றவனை,

நக்கலாகப் பார்த்தாள் கீர்த்தி.

"என் காதல் வலிமைதான். ஆனா சாருக்குதான் என் மேல இன்னும் நம்பிக்கை வரல... என்ன, அப்படித்தானே பாலா..."

"என்ன சொல்ற கீர்த்தி... எனக்குப் புரியல... என் டயலாக் எல்லாம் நீ பேசுற!"

"என் காதல் மேல் உங்களுக்கு இன்னும் நம்பிக்கை வரல பாலா... நம்ம ரெண்டு பேருக்கும் இடையில்... நாம் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தம் சொல்லும் வகையில்... நம் இருவரின் பேர் சொல்ல நமக்குன்னு குழந்தை வந்த பிறகு கூட... இன்னும் நான் உங்களை விட்டுப் போய் விடுவேனோ என்று நீங்க பயப்படுறீங்க பாலா... ஏன் பாலா இன்னும் இப்படி ஒரு தயக்கம்? இதற்கு மேலும் உங்களை விட்டுப் போய் விடுவேன் என்று எப்படி பாலா நினைக்கிறீங்க?" என்று தன் தந்தையின் பண விஷயத்தை மனதில் வைத்துப் பேச,

"என்ன உளர்ற கீர்த்தனா... நான்... நீ என்னை விட்டுப் போய் விடுவாய் என்று பயப்படுகிறேனா? ஏன்டி பீபியை ஏத்துற... எதை வெச்சு இந்த முடிவுக்கு வந்த...? நான் என்ன சொல்லி இருக்கேன்... எதுவா இருந்தாலும் என் கிட்ட சொல்லுன்னு. உன் மனசுல வெச்சி உன்னை இம்சைப்படுத்தி... என்னையும் இம்சைப் படுத்தாதேன்னு

எத்தனை தடவை சொல்லியிருக்கேன். சொல்லு... எதனால இப்படிச் சொல்லுற?" என்று படபடத்தவனிடம்,

அவனையே சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள். பின் கண்களை மூடி அமைதியாகவே வந்தாள்.

'பெரிசா பார்வை பார்க்கிறா... இப்போ ஏன் இப்படிச் சொல்றா இவ...' என அவன் மண்டையை உடைக்க ஆரம்பிக்க,

சிறிது நேரம் கழித்து... அவளாக்வே,

"ஏன் பாலா... அப்பாவோட பணம் திரும்பக் கிடைத்தது என்று என் கிட்ட சொல்லவே மாட்டேங்கிறீங்க... அப்போ என்னை நீங்க முழுசா நம்பலேன்னுதானே அர்த்தம்?" என்ற அவளின் வருத்தம் தோய்ந்த குரலில், வலிகள் நிரம்பிய வார்த்தைகளில்,

பாலா... அதிர்ந்து உடனே திரும்பிப் பார்க்க,

அவள் இன்னும் கண்களைத் திறக்காமலே இருந்தாள்.

காரை ஓரமாக நிறுத்தினான்.

"கீர்த்தி... என்னைப் பாரு..." என்றபோது, விழி திறக்க,

தடுமாறாமல் பாலா கேட்டான். ஆனால், தெளிவாக, கொஞ்சம் கோபமாகவும்.

"உனக்கு இது எப்படித் தெரியும்? வினோத் சொல்லிட்டானா? எப்போ சொன்னான்? நான் சொன்ன அடுத்த நாளே சொல்லிட்டான்... அப்படித்தானே! அதுக்கப்புறம்தான் என்னை ஓரளவு நம்ப ஆரம்பித்து இருக்கிறாய்... என்ன, நான் சொல்வது சரிதானே?" என்று கேட்க,

இப்போது கீர்த்தி ஆவேசமானாள்.

"என்னது... வினோத்துக்குத் தெரியுமா? அவனுக்குத் தெரிஞ்சும் என் கிட்ட மறைச்சுட்டானா? ஒரு நிமிஷம்... உங்க



கிட்ட அப்புறம் வருகிறேன். அவன..." என்றபடி வினோத்தைத் திட்ட போனை எடுக்க,

அவளிடமிருந்து போனைப் பறித்த பாலா,

"கீர்த்தி... அவன் சொல்லலைன்னா உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேள்வி கேட்டவனிடம்,

சொன்னாள்... மதனைப் பார்த்த விஷயத்தை... அவர் சொன்ன விஷயத்தை!

"ஓ.கே. தெரிஞ்சுடுச்சுல்ல. விடு... இதனாலதான் உன் மேல நம்பிக்கை இல்ல... அது இதுன்னு லூசுத்தனமாப் பேசுனியா...?" என்று கடிந்தவன், காரைக் கிளப்பப் போக,

"என்ன பாலா... இவ்ளோ சாதாரணமாச் சொல் றீங்க..."

"பின்ன... வேற எப்படிச் சொல்லச் சொல்ற...?"

"உங்களுக்கு வேணும்னா இது சாதாரண விஷயமா இருக்கலாம். இது எனக்கு... என் அப்பா, அம்மாவுக்கு எவ்ளோ பெரிய விஷயம் தெரியுமா! நான் மதன் அங்கிள் சொன்னப்போ எவ்ளோ சந்தோஷப்பட்டேன் தெரியுமா! சொல்ல வார்த்தை இல்ல பாலா... அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தெரிஞ்சிருந்தா எவ்ளோ சந்தோஷப் பட்டிருப்பாங்க தெரியுமா? நான் உளறுனேன் எங்க அம்மா கிட்ட... இந்தப் பணம் கிடைத்தால்தான் பாலா கூட நிம்மதியா வாழ்வேன்னு...

"என் அம்மா எவ்ளோ துடிச்சிப் போயிட்டாங்க தெரியுமா? பொண்ணு, நாம கடன் பட்டதாலத்தான் தன் மனசுக்குப் பிடித்தவனோட நிம்மதியில்லாம இருக்காளோன்னு... அதுதான் அவங்களுக்குப் பெரிய கவலை பாலா..."

என்றபோதே கண்கள் கண்ணீரை வடிக்கத் துடைத் தவள், தன் நிலையை மாற்றிச் சந்தோஷமாகவே கேட்டாள்.

"அத விடுங்க பாலா... எப்போ பணம் கிடைத்தது? சொல்லுங்க... என்ன... அவங்க இருந்திருந்தா சந்தோஷப் பட்டிருப்பாங்க... பறந்திருப்பாங்க... கால் தரையில இருந்திருக்காது... உடனே என்னைப் பார்க்க ஓடோடி வந்தி..."

என்று சொன்னபோதே.. கீர்த்தனாவுக்குத் தன்னைப் பார்க்க வருவதாகச் சொல்லி, அவளை விட்டுப் போன அன்றைய தினத்தின்... தன் பெற்றோரின் அவசரம்... சந்தோஷம் எல்லாம் இப்போது விளங்க...

அப்படியே வார்த்தைகளை நிறுத்தி,

பாலாவைப் பார்க்க... வார்த்தைகள் குழறின அவளுக்கு.

"பா... லா... இதச் சொல்ல வந்தப்பதானா... பாலா..." என்றவளுக்கு, அடுத்து வார்த்தைகள் இல்லை.

அவர்களின் மரணம்... அது நடந்த விதம்... அன்று அவள் பட்ட வேதனை... எல்லாம் ஒன்று சேர்ந்து அவளை வாட்ட... தன்னைச் சுத்தமாகக் கட்டுப்படுத்த முடியாமல்... தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். பாலா எவ்வளவு முயன்றும் அவளை நிறுத்தவே முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் அவள் இப்படி அழுதால் என்ன ஆகுமோ என்று பயந்தே விட்டான் பாலா.

அது சாலை ஓரம் என்பது நினைவில் இருந்தும், வேறு வழியின்றித் தன்னோடு இழுத்து அணைத்தவன், அவளை ஆறுதலாக அணைக்க... கீர்த்தியும் கொஞ்சமாய்த் தன் நிலைக்கு வந்து நகர்ந்தாள். ஆனாலும் விசும்பல் நிற்கவில்லை. முகம் உடனே சிவந்து போய், கண்கள் அதைவிடச் சிவப்பேறி, பாலாவுக்குத் தாங்க முடியவில்லை.

"கீர்த்தி... நீ கேட்டல்ல... ஏன் சொல்லலை, ஏன் சொல்லலைன்னு... நீ என்கிட்ட உன்னை ஒப்படைக்கிறதுக்கு முன்னால வேண்டுமென்றால் நீ சொன்னது போல...



என்னை விட்டு நீ போகாமல் இருக்கத்தான் அதை மறைத்தேன். ஆனால் அதன் பிறகும் உன் கிட்ட சொல்லலை. ஏன் தெரியுமா? இதோ நீ வேதனைப்பட்டு, உன்னை வருத்தி அழுகிறாயே... இதைக் காணப் பிடிக்காமல்தான் நான் சொல்லலை. இப்போ அழுது கொண்டிருக்கும் உன் இந்த நிலை... இது நான் சொல்லி லரக் கூடாது என்றுதான்... உனக்கா எப்படியாவது, எப்போதாவது தெரியும் வரை சொல்லக் கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன் கீர்த்தி...

"என் கீது என்னால நிறைய அழுதுட்டா... வேதனைப் பட்டுட்டா... கஷ்டம் அனுபவிச்சுட்டா... மீண்டும் என்னால், என் வார்த்தைகள் மூலம் அவ கண்ல கண்ணீர் வரக் கூடாதுன்னு முடிவு பண்ணித்தான் நான் சொல்லலை. ஆனாலும், உன் கண்ணீரை என்னால போக்க முடியவில்லை. ஆனா ஒரு சந்தோஷம்... நினைத்தது போல என் மூலம் உனக்குத் தெரியல..." என்றவன், அன்று அவர்கள் தன்னைப் பார்த்தது முதல், அனைத்தையும் சொல்லி முடித்துக் காரைக் கிளப்பினான்.

"இதுதான் காரணம் கீர்த்தி... உன் மேல எனக்கு நம்பிக்கை இல்லேன்னு சொல்லிட்டியே... உனக்குள் உருவான... என் காதலையே எதிர்பார்க்காத... உன் காதலோட வலிமை உனக்குக் கூடத் தெரியாது கீர்த்தி. எனக்கு மட்டும்தான் அது தெரியும். அது என்னை... வேறொரு இடத்தில் இருந்த என் மனதை ஆணி வேரோட பிடுங்கி உன் கிட்டச் சேர்த்திருக்கிறது என்பது உனக்குத் தெரியாதா... அவ்வளவு பவர் தெரியுமா கீது..." என்று சொன்னவனின் தோள்களில் அவன் சொன்ன பரவசத்தில் சாய்ந்தாள் கீர்த்தி.

'இவன் கிடைக்க நான் எத்தனை தவம் செய்திருக்க வேண்டும்...' என்று மனம் சந்தோஷத்தில் தள்ளாடியது. அது தாங்காமல் அவனிடம் இன்னும் நெருங்கி அமர,

பாலாவோ,

"ஹேய்... இது ரோடுடி... எல்லாருக்கும் ஓசியில ரொமான்ஸ் சீன் காமிச்சிட்டிருக்கோம் போல... தள்ளி உட்காரு... எதுவா இருந்தாலும் வீட்ல... ஓ.கே..." என்று அவளைச் சீண்டி டீல் பேச,

அவளோ கொஞ்சம் கூட நகராமல்,

"ஐ லவ் யூ பாலா..." என்று உணர்ச்சிகள் ததும்பிய குரலில் சொல்ல, முதலில் திகைத்தவன், பின் சுதாரித்து,

"ஹ்ம்ம்... கேட்கலை கீர்த்தி... இன்னும் சத்தமா..." என்று கொஞ்ச...

"ஐ லவ் யூ டா கேடி..." என்று அவனைப் புரிந்தும் அவள் கொஞ்சம் சத்தமாக உரிமையுடன் சொல்ல,

"சத்தியமாக் கேக்கல. இன்னும் சத்தமா..." என்று விடாமல் பேச...

இப்போது குறும்புடன் அவனிடமிருந்து தள்ளி அமர்ந்தவள்,

"ஐ லவ் யூ டா புருஷா..." எனக் கத்த,

"ஏய் பொண்டாட்டி... இப்போ சுத்தமாக் கேக்கவே இல்லை..." என்று சிரிப்புடன் கண் சிமிட்டிக் கூற, அடுத்து எப்படிச் சொல்லலாம் என்று கீர்த்தி யோசிக்க,

அவள் எப்படிச் சொன்னாலும் அவள் கணவனுக்கு இப்போது விழப் போவதில்லை.

அதே போல் அவன் மனைவியும் தன் காதலை அவன் காதில் விழும் வரை சொல்லாமல் நிறுத்தப் போவதில்லை.

அவளோ தங்கள் திருமணம் என்னும் உறவால்... அவனுள் காதலில் விழுந்து... அவனைத் தன் உயிராக மாற்றி... இருந்தும்... அந்த உறவின் எல்லையிலே நின்றிருந்தாள்.



அவனோ அவள் காதலால்... தங்கள் உறவை உணர்ந்து... தன் உயிராய் அவளை மாற்றி... தன் காதலின் மூலம்... தன்னோடு அவளது எல்லைகளை உடைத்து... தங்கள் உறவினை முழுமை ஆக்கினான்.

இதோ... அவர்கள் இருவரும்... காதல் புறாக்கள் ஜோடியாய் வாழ்ந்திருந்த... தங்கள் காதலுக்காகக் கட்டியிருந்த காதல் மாளிகை நோக்கிய பயணத்தில் இருக்க,

நாம் அவர்களோடான நமது பயணத்தை இத்துடன் முடித்து, அவர்கள் இருவரும் பல்லாண்டு வாழ வேண்டும் என வாழ்த்தி விடைபெறுவோம்.

ஒரு நிமிஷம்... ஒரு நிமிஷம்...

பாலா - கீர்த்திக்கு...

அவங்க வாழ்க்கைக்கு அவங்களே பாடல் போட்டிருக்காங்க. கவி, சிந்து, எஃப்.எம்., ஏன் மது கூட போட்டிருக்கா... நாம போடாம போகலாமா... சோ... இந்தப் பாடலை அவர்கள் இருவருக்கும் வழங்கி, நாம் பயணத்தினை முழுமையாக்குவோம்.

*என்னதான் சுகமோ நெஞ்சிலே*
*இதுதான் வளரும் அன்பிலே*
*ராகங்கள் நீ பாடி வா பண்பாடும்*
*மோகங்கள் நீ காணவா எந்நாளும்*
*காதல் உறவே*
*என்னதான் சுகமோ நெஞ்சிலே*
*இதுதான் வளரும் அன்பிலே*
*பூவோடு வண்டு புது மோகம் கொண்டு*
*சொல்கின்ற வண்ணங்கள் நீ சொல்லத்தான்*
*நான் சொல்லும் போது இரு கண்கள் மூடி*
*எழுதாத எண்ணங்கள் நீ சொல்லத்தான்*
*இன்பம் வாழும் உந்தன் நெஞ்சம்*
*தீபம் ஏற்றும் காதல் ராணி*

சிந்தாத முத்துக்களை நான் சேர்க்கும் நேரம் இது
காதல் உறவே
என்னதான் சுகமோ நெஞ்சிலே
இதுதான் வளரும் அன்பிலே
தீராத மோகம் நான் கொண்ட நேரம்
தேனாக நீ வந்து சீராட்டத்தான்
காணாத வாழ்வு நீ தந்த வேளை
பூ மாலை நான் சூடிப் பாராட்டத்தான்
நீ என் ராணி நான் தான் தேனீ
நீ என் ராஜா ஆஆ நான் உன் ரோஜா
தெய்விக பந்தத்திலே நான் கண்ட சொர்க்கம் இது
காதல் உறவே
என்னதான் சுகமோ நெஞ்சிலே
இதுதான் வளரும் அன்பிலே
ராகங்கள் நீ பாடி வா பண்பாடும்
மோகங்கள் நீ காணவா எந்நாளும்
காதல் உறவே
என்னதான் சுகமோ நெஞ்சிலே
இதுதான் வளரும் அன்பிலே!